பொருளாதார
முன்னேற்றமும் திட்டமும். ப௨.
—சுபாநாயகம் (எஸ்)

த.பா.நி. (க.வெ.) வரிசை எண்—295

பொருளாதார முன்னேற்றமும் திட்டமும்

(இந்தியாவைப்பற்றிய சிறப்புக் கண்ணோட்டம்)

[இரண்டாம் பகுதி]

(பட்டப்படிப்பிற்கும் பட்ட மேற்படிப்பிற்கும் உரியது)

ஆசிரியர்
எஸ். சபாநாயகம், எம்.ஏ.,
பொருளாதார உதவிப் பேராசிரியர்,
மாநிலக் கல்லூரி, சென்னை

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition–February, 1972

T.N.T.B.S. (C.P.) No. 295

Tamil Nadu Text Book Society

ECONOMIC DEVELOPMENT AND PLANNING (Part II)
(With Special Reference To India)

S. SABHANAYAKAM

Net Price Rs. 6–30
(No discount)

'Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of Books and literature in regional languages at the University level, of Government of India in the Ministry of Education and Social Welfare.'

Printed by
Nanbargal Achagam,
Madras-18

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி–உள்ளாட்சித்துறை அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினோராண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப்படிப்பு வகுப்புகளிலும் விஞ்ஞானப் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மனநிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ் வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், கணிதம், பௌதிகம், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டுவருகிறது.

இவற்றுள் ஒன்றுன 'பொருளாதார முன்னேற்றமும் திட்டமும்—இரண்டாம் பகுதி' என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 295ஆவது வெளியீடாகும். இதுவரை 330 நூல்கள் வெளிவந்துள்ளன.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பலவகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

		பக்கம்
29. கலப்புப் பொருளாதாரம்		1—25
கலப்புப் பொருளாதாரம் ஓர் விளக்கம்	...	2
கலப்புப் பொருளாதாரத்தின் இயல்புகள்	...	6
கலப்புப் பொருளாதாரத்தின் குறைபாடுகள்	...	8
கலப்புப் பொருளாதாரத்தின் முக்கியத்துவம்	...	10
கலப்புப் பொருளாதாரத்தில் அரசின் நிலை	...	10
இந்தியாவில் கலப்புப் பொருளாதாரம்	...	12
தனியார்துறை	...	13
பொதுத்துறை	...	14
இந்தியாவில் கலப்புப் பொருளாதாரத்தின் பொருத்தமுடைமை	...	21
நிறைவுரை	...	22
30. நலம் காக்கும் அரசு		26—38
நலம் காக்கும் அரசு என்பதன் விளக்கம்	...	26
கோட்பாட்டின் பரிணாமம்	...	27
நலம் காக்கும் அரசும் பொருளாதார முறைகளும்	...	30
நலம் காக்கும் அரசின் அடிப்படை நோக்கங்கள்	...	31
நலம் காக்கும் அரசைப் பெறுவதில் உள்ள தடைகள்	...	33
பண வீக்கம்	...	36
கட்டுப்பாடுகள்	...	38
31. முதலாளித்துவமும் சமதர்மமும்		39—49
முதலாளித்துவம்	...	39
சமதர்மம்	...	39
கலப்புப் பொருளாதாரம்	...	40
பொதுவுடைமை	...	40
பாஸிசம்	...	41
முக்கிய இயல்புகள்	...	41
சுதந்திரமும், குடியரசும்	...	42
விலை இயக்கம்	...	43
பகிர்வுச் சிக்கல்	...	46
பொருளாதார ஏற்றத் தாழ்வுகள்	...	47
தனியார் சுதந்திரம்	...	48

	பக்கம்
32. வருமான ஏற்றத்தாழ்வு	50—71
வருமான ஏற்றத்தாழ்விற்கான காரணங்கள்	... 51
வருமான ஏற்றத்தாழ்வின் விளைவுகள்	... 55
வருமான ஏற்றத்தாழ்வைக் குறைத்தல்	... 60
பிரச்சினைக்குத் தீவிரத் தீர்வு	... 60
எல்லாருக்கும் சமமான வருமானம்	... 61
தேவைக்கேற்ற வருமானம்	63
மற்றத் தீர்வுகள்	... 64
மிதமான திட்டம்	... 65
சொத்துப்பேற்றைக் கட்டுப்படுத்துதல்	... 67
வருமான வரி	... 69
சமுதாயப் பணிகளை விரிவாக்குதல்	... 71
33. முன்னேற்றத்திற்குத் திட்டமிடுதல்	72—95
பொருளாதார முன்னேற்றத்திற்குத் திட்டமிடுதலின் விளக்கம்	... 72
வளர்ச்சியடையாத நாடுகளில் திட்டமிடுதலின் அவசியம்	... 75
திட்டமிட்ட பொருளாதாரத்திற்கும், திட்டமிடப்படாத பொருளாதாரத்திற்குமுள்ள வேறுபாடுகள்	... 79
வளர்ச்சியடையாத நாடுகளில் திட்டங்கள் வெற்றியடைவதற்கான தேவைகள்	... 82
இயக்கத் திட்டமும், ஊக்கத் திட்டமும்	... 89
நிதித் திட்டமும், வெளிப்படைத் திட்டமும்	... 95
தோற்றத் திட்டம்	... 99
வளர்ச்சியடையாத நாடுகளில் தோற்றத் திட்டத்தின் அவசியம்	... 101
34. திட்ட மதிப்பீடு	106—117
35. முன்னேற்ற முறைகளைத் தெரிந்தெடுத்தலும் பொருளாதார முன்னேற்றமும்	118—149
முறைகளைத் தெரிந்தெடுப்பதில் உள்ள சிக்கல்கள்	... 118
உழைப்புச் செறிந்த உற்பத்தி முறைகளும் மூலதனச் செறிவுள்ள உற்பத்தி முறைகளும்	... 129
சிறுதொழில்களும் பெரிய தொழில்களும்	... 138

பக்கம்

36. திட்டங்கள் வெற்றியடைவதற்கான நிபந்தனைகள் 150—166

இந்தியத் திட்டங்களைப் பற்றிய மதிப்பீடு ... 160

37. இந்தியத் திட்ட முறை 167—184

விளக்கம் ... 167
இந்தியப் பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்களில் பொதுத்துறையின் நிலை ... 176
பொதுத்துறை விரிவடைந்து வருகின்றமைக்கான காரணங்கள் ... 177
இந்தியாவில் பொதுத்துறை செயல்படுகின்ற நிலை ... 181

38. இந்தியாவில் திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி 185—249

திட்டமிட்ட வளர்ச்சியின் தேவை ... 185
திட்டமிட்ட வளர்ச்சியின் பின்புலம் ... 188
முதல் ஐந்தாண்டுத் திட்டம் ... 190
இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் ... 198
மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் ... 208
ஆண்டுத் திட்டங்கள் ... 220
நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் ... 226

39. இந்தியாவில் வேளாண்மைத் திட்டம் 250—282

வேளாண்மைத் திட்டத்தின் நோக்கங்கள் ... 251
வேளாண்மைக்காகத் திட்டமிடுதலின் இன்றியமையாமை ... 252
வேளாண்மைக்காகத் திட்டமிடுதலில் உள்ள சிக்கல்கள் ... 254
ஐந்தாண்டுத் திட்டங்களில் வேளாண்மைக்காகத் திட்டமிடுதல் ... 256
முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண்மை ... 256
இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் வேளாண்மை... 259
மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண்மை ... 262
ஆண்டுத் திட்டங்கள் ... 265
நான்காவது ஐந்தாண்டுத்திட்டத்தில் வேளாண்மை ... 266
வேளாண்மைத் திட்டங்களின் விளைவுகள் ... 267

பக்கம்

வேளாண்மை வளர்ச்சிக்கான புதிய கொள்கை ... 269
சிறிய நீர்ப்பாசனம் ... 270
நிலப் பாதுகாப்பும், பண்படுத்துதலும் .. 270
இயற்கை உரங்களும், செயற்கை உரங்களும் ... 271
பயிர்ப் பாதுகாப்பும், நல் விதைகளும் ... 271
செறிந்த வேளாண்மை மாவட்டத் திட்டம் ... 272
சிக்கல்களும், அதற்கான தீர்வுகளும் ... 278
நிறைவுரை ... 282

40. இந்தியாவின் தொழில் திட்டம் 283—294

தொழில் மயமாக்குதல் ... 283
இந்தியாவின் தொழில் வளர்ச்சியின் அமைப்பு ... 288

41. இந்தியாவின் சமுதாய வளர்ச்சித் திட்டம் 295—331

விளக்கம் ... 296
சமுதாய வளர்ச்சித் திட்டங்களின் தேவையும் நோக்கங்களும் ... 297
வரலாற்றுப் பின்புலம் ... 300
கிராமப் புனரமைப்பிற்கான ஸ்ரீநிகேதன் நிறுவனம் ... 301
காந்திய நிர்மாணத் திட்டம் ... 304
தமிழ்நாட்டில் பிர்க்கா அபிவிருத்தித் திட்டம் ... 306
நிலோகேரித் திட்டம் ... 306
சமுதாயவளர்ச்சித் திட்டங்களும் தேசிய விரிவாக்கப் பணிகளும் ... 308
சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் நோக்கங்கள் ... 309
சமுதாய வளர்ச்சித் திட்டம் ... 311
சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் இயல்புகள் ... 312
சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் நிர்வாக முறை ... 315
வளர்ச்சித் திட்டத்திற்கான நிதி ... 316
ஐந்தாண்டுத்திட்டங்கள் வளர்ச்சிப்பணிகளுக்கான செலவுகள் ... 317
வளர்ச்சித் திட்டத்தின் சாதனைகள் ... 318
சமுதாய வளர்ச்சித் திட்டங்களின் மெதுவான முன்னேற்றத்திற்கான காரணங்கள் ... 320
ஐக்கிய நாடுகளின் மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை ... 321
ஆய்வுக் குழுவின் அறிக்கை ... 323
திட்ட மதிப்பீட்டுநிறுவனத்தின் ஏழாவது மதிப்பீட்டு அறிக்கை ... 324

பக்கம்

சமுதாய வளர்ச்சித் திட்டம்பற்றிய மதிப்பீடு ... 325
குறைகள் ... 327
சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் முன்னேற்றத்திற்கான தீர்வுகள் ... 329
நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சமுதாய வளர்ச்சித் திட்டம் ... 330
நிறைவுரை ... 330

42. இந்தியத் திட்டத்தின் பதினைந்து ஆண்டு காலம் 332—379

திட்டமிடுதலின் நோக்கங்கள் ... 333
முதல் மூன்று திட்டங்களின் முதலீட்டு முறை ... 337
தேசிய வருவாயின் வளர்ச்சி ... 341
மூலதன—உற்பத்தி வீதம் ... 344
பொருளாதாரத்தின் வளர்ச்சி ... 344
வேளாண்மை ... 345
உணவுப் பற்றுக்குறைச் சிக்கல் ... 349
வேளாண்மை வளர்ச்சிக்கான வசதிகள் ... 351
தொழில் முன்னேற்றம் ... 355
போக்குவரத்து, செய்தித் தொடர்பு வசதிகள் ... 360
அயல்நாட்டுச் செலுத்து இருப்பு நிலை ... 360
இந்தியாவில் பொருளாதார முன்னேற்றமும் திட்டமும் ... 361
திட்டங்களின் மூலம் கிடைத்த படிப்பினைகள் ... 363
இந்தியத் திட்டங்களும் சமதர்மமும் ... 373
நிறைவுரை ... 375

BIBLIOGRAPHY 380—388

REPORTS AND JOURNALS 389—390

கலைச்சொற்கள் 391—423

பொருளாதார முன்னேற்றமும் திட்டமும்

(இரண்டாம் பகுதி)

29. கலப்புப் பொருளாதாரம்

(Mixed Economy)

திட்டமிட்டுப் பொருளாதார முன்னேற்றத்தைப் பெற உதவும் முறைகளில் கலப்புப் பொருளாதார முறையும் ஒன்ருகும். கலப்புப் பொருளாதார முறை சமீப காலத்தில் தோன்றிய ஒன்றேயாகும். பழைய காலங்களில் 'தலையிடாமைக் கொள்கையே' (Laissez-faire Policy) பெருமளவில் பின்பற்றப்பட்டது. தனியார் தொழில் களும், பொருளாதார அமைப்புகளும் அரசால் எவ்வகையிலும் கட்டுப் படுத்தப்படவில்லை. பொருளாதார நடவடிக்கைகளில் அரசு தலையிடுவதில்லை. பொருளாதாரம் அதனுடைய போக்கில் விடப் பட்டது. நாட்டின் பாதுகாப்பே அரசின் முக்கியப் பணியாகக் கருதப்பட்டது. தொன்மைப் பொருளியலாளர்களாகிய ஆடம் ஸ்மித் (Adam Smith), டேவிட் ரிக்கார்டோ (David Ricardo), மில் (Mill), சே (Say) போன்றவர்கள் அரசு பொருளாதார நடவடிக்கைகளில் தலையிடக்கூடாது என்று கூறினர். தலையிடாமைக் கொள்கையின் குறைபாடுகள் பிற்காலத்தியப் பொருளாதார நிபுணர்களால் உணரப்பட்டன. இக்கொள்கையைக் கொண்ட முறை சரியாகச் செயல்படாது என்பது அறியப்பட்டது. எனவே தலையிடாமைக் கொள்கை செல்வாக்கை இழந்துவிட்டது. முதலாளித்துவப் பொருளாதாரத்தின் குறைபாடுகள் பலவும் தலையிடாமைக் கொள்கையில் இருந்தவைகளேயாகும். தலையிடாமைக் கொள்கை யைக் கொண்ட பொருளாதாரத்தில் ஒரு சிலருடைய நலன்கள் மட்டுமே காக்கப்படுகின்றன. முதலாளித்துவத்தின் குறைகள் பெருகத் தொடங்கின. மொத்தப் பொருளாதார நலன் இதனுல் குறைவடைந்தது. எனவே பிற்காலத்தில் பல பொருளாதார நிபுணர்கள், குறிப்பாக கீன்ஸ் பிரபு (Lord Keynes), பிகு (Pigou) போன்றவர்கள், சமதர்ம முறையைப் பரிந்துரைத்தார்கள். சமதர்ம முறையில் 'உற்பத்திச் சாதனங்கள்' (Means of Production)

அமைந்திருக்க வேண்டுமென்றும் அவர்கள் கூறினர்கள். பொருளாதார நிலைகளில் தனியார் நிறுவனங்களோடு அரசும் ஈடுபடவேண்டுமென்பது கீன்ஸ் கருத்தாகும். ஆனால் பொருளாதார நிலைகள் யாவுமே அரசுடைமையாக இருக்கக்கூடாது என்றும் அவர் கருதினர்.

கலப்புப் பொருளாதாரம்—ஓர் விளக்கம்

கலப்புப் பொருளாதார முறையை தலையிடாமைக் கொள்கைக்கும், பொதுவுடைமைக் கொள்கைக்கும் இடைப்பட்டக் கொள்கை எனலாம். 1930ஆம் ஆண்டிற்கும் 1939ஆம் ஆண்டிற்கும் இடையே உலகின் பல நாடுகளிலும் உற்பத்திச் சாதனங்களைப் பொதுவுடைமையாக்க வேண்டுமென்ற கருத்து நிலவி வந்தது. ஆடம் ஸ்மித், டேவிட் ரிக்கார்டோ, ஜே. பி. சே போன்ற தொன்மைப் பொருளாதார நிபுணர்கள் கலப்புப் பொருளாதார முறையைப் பற்றிக் குறிப்பிடவேயில்லை. பொருளாதாரத்தில் 'கலப்புப் பொருளாதாரம்' என்பது சமீப காலத்தில் தோன்றியதே யாகும். பொருளாதாரச் சுதந்திரத்தின் மூலமே ஒரு நாடு முன்னேற்றத்தைப் பெறலாம் என ஆடம் ஸ்மித் கருதினர். அரசு எந்நிலையிலும் பொருளாதார நடவடிக்கைகளில் தலையிடக்கூடாது என்று அவர் கூறினர். அரசு திறமையான வகையில் பொருளாதாரப் பணிகளை நிறைவேற்ற முடியாது என்பதும் ஸ்மித்தின் கருத்தேயாகும். நாட்டைப் பாதுகாப்பதே அரசின் முக்கியப் பணி என்று அவர் குறிப்பிட்டார்.

19ஆம் நூற்றாண்டின் இறுதிவரை தொன்மைப் பொருளியலாளர்களின் கருத்துகளுக்குச் செல்வாக்கு இருந்தது. அதன் பிறகு ஜே. பி. சே குறிப்பிட்ட தேவை, அளிப்பு விதியானது குறை கூறப்பட்டது. கீன்ஸின் கருத்துகள் தொன்மைப் பொருளாதார நிபுணர்களின் கருத்துகளினின்றும் வேறுபட்டவைகளாக இருந்தன. கீன்ஸின் கருத்துகளை அவருடைய காலத்தில் இருந்த லயனல் ராபின்ஸ் (Lionel Robbins), பிகு (Pigou) ஆகிய இருவரும் குறை கூறியுள்ளனர். ஆல்பிரட் மார்ஷலின் (Alfred Marshall) மாணக்கராக இருந்த கீன்ஸ் அவரின் 'பொருளாதாரக் கோட்பாடு' களைப் (Principles of Economics) படித்திருக்கிறர்; பிறகு அதையே கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் ஆசிரியராகப் பல ஆண்டுகள் இருந்தபோது போதித்தும் இருக்கின்றர். எனினும் கீன்ஸின் கருத்துகள் மார்ஷலின் கருத்துகளைப் போல அமையவில்லை.

தொன்மைப் பொருளியலாளர்களின் தலையிடாமைக் கொள்கை முதல் உலகப் போர்க்காலத்திலும், அதைத் தொடர்ந்தும்

பல குறைபாடுகளோடு செயல்பட்டது. 1926-ல் தலையிடாமைக் கொள்கையை முடிவிற்குக் கொண்டு வரவேண்டுமென்ற கருத்தை கீன்ஸ் வெளியிட்டார். பொருளாதாரம் சரியாக இயங்கத் தலையிடாமைக் கொள்கை உதவாது என்று அவர் கூறினர். 1929–39-ன் பொருளாதாரப் பெருமந்தம் அவருடைய கூற்றை உண்மையாக்கியது. இம் மந்தக் காலத்தில் உலகின் பல நாடுகளி லிருந்த மக்கள் பல நலன்களையும் இழந்தார்கள். வேலையின்மைச் சிக்கல் பெரிதாக உருவெடுத்தது. தலையிடாமைக் கொள்கையின் குறைபாடுகள் இவ்வாறு பல வகைகளிலும் வெளிப்பட்டன. இதன் காரணமாக அரசு பல உற்பத்தி நிலைகளையும் ஏற்று நடத்த வேண்டுமென்ற கருத்து தோன்றியது. கீன்ஸ் போன்றவர்கள் சமுதாய நலனைக் காக்க தலையிடாமைக் கொள்கைக்கும், பொது வுடைமைக்கும் இடைப்பட்டக் கொள்கையைப் பின்பற்ற வேண்டு மென்று கூறினர்கள். தனியார்த்துறை அரசின் கட்டுப்பாடு களோடு இயங்கவேண்டுமெனவும் அவர்கள் கருதினர்கள். பொதுத்துறையோடு தனியார்துறையும் அமைந்திருக்க வேண்டு மென அவர்கள் கூறினர்கள்.

பழைய காலத்தில் பொருளியலாளர்களின் கருத்து தலையிடாமைக் கொள்கைக்கு ஆதரவாக இருந்தது. சமீப காலத்தில் பொருளாதார நிபுணர்களின் கருத்து உற்பத்திச் சாதனங்கள் அனைத்தையும் பொதுவுடைமையாக்குவதற்கு ஆதரவாக இருக் கின்றது. தலையிடாமைக் கொள்கையின் சில நன்மைகளையும், பொதுவுடைமைக் கொள்கையின் சில நன்மைகளையும் கொண்டதே கலப்புப் பொருளாதாரமாகும். தனியார்துறையும் பல நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவியுள்ளது எனலாம். அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, இந்தியா, இலத்தீன் அமெரிக்க நாடுகள் ஆகியவற்றின் பொருளாதார மேம்பாட்டிற்குத் தனியார்துறை பெரிதும் உதவியிருக்கின்றது. சமீப காலமாக முதலாளித்துவ நாடுகளிலும்கூட அரசு பொருளாதார நடவடிக்கை களில் அதிக அளவிற்குத் தலையிடுகின்றது. விரைவான பொருளாதார முன்னேற்றம் தொடர்ந்து நீடிக்க அரசு பொருளா தாரத்தின் பல துறைகளையும் கட்டுப்படுத்துவது அவசியமா கின்றது. பல துறைகளை அரசே ஏற்று நடத்துவதும் இன்றியமை யாதது. சில துறைகளைத் தனியாரே நடத்த அனுமதிக்கலாம்.

கலப்புப் பொருளாதார முறையில் பொதுத்துறையோடு, தனியார் துறையும் இயங்கி வருகின்றது. எனவே இம்முறையில் சமுதாய நலனோடு, தனியார் நலனும் காக்கப்படுகின்றது. பொருளாதாரத்தில் உற்பத்தி, பகிர்வு ஆகிய பணிகள் தனியார்

துறையின் தொழில் முயல்வோராலும், பொதுத்துறையாலும் செய்யப்படுகின்றன. கலப்புப் பொருளாதாரம் பரிந்துரைக்கப் படுகின்றமைக்குப் பல காரணங்களைக் குறிப்பிடலாம். இம்முறையில் முதலாளித்துவத்தின் நன்மைகள் பெறப்பட்டு, குறைபாடுகள் நீக்கப்படுகின்றன.

(i) கலப்புப் பொருளாதார முறையில் அதிக முதலீடு களுக்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. தனியார்துறை மட்டும் இயங்கும்போது முதலீட்டு வீதத்தை உயர்வாகப் பெற முடியாது. அரசு பொருளாதாரத்தின் எல்லாத்துறைகளிலும் முன்னேற்றத் திற்கான முதலீடுகளைச் செய்கின்றது.

(ii) நாட்டின் தொழில் முன்னேற்றத்தின் ஒரு பகுதி தனியார் துறையால் ஏற்கப்படுகின்றது. இதனுல் அரசின் நிர்வாகச் சுமையானது பெருமளவு குறைகின்றது.

(iii) அரசு தனியார்துறை நிறுவனங்களைக் கட்டுப்படுத்து வதால், தனியார் அதிக இலாபம் பெறுவது தடுக்கப்படுகின்றது. தனியார்துறை கொள்ளை இலாபம் பெறுவதை அரசு அனுமதிப்ப தில்லை. ஆனுல், அதே சமயத்தில் தனியார்துறையின் வளர்ச்சியும் அரசால் காக்கப்படுகின்றது.

தனியார்துறையின் வளர்ச்சி பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவுகின்றது. எனினும் தனியாருடைய இலாப நோக்கு பல நிலைகளில் சமுதாய நலனைப் பாதிக்கக்கூடும். மேலும், பொதுத் துறை நிறுவனங்கள் இலாப நோக்கோடு செயல்படுவதில்லை. சமுதாய நலனைக் காப்பதே அவற்றின் முக்கியக் குறிக்கோள் ஆகும். திறமையான அரசு தனியார் துறையையும் சமுதாய நலனைப் பெருக்கப் பயன்படுத்திக் கொள்கின்றது. வேளாண்மை போன்ற சில துறைகளை அரசு ஏற்று நடத்துவது சில கடின நிலைகளைத் தருவதாக இருக்கின்றது. இத்துறைகள் தனியார் துறையில் அமைந்திருத்தல்* தவருகாது. ஆனுல் தேசிய முக்கியத் துவத்தைக் கொண்ட சில அடிப்படைத் துறைகளை அரசு ஏற்பது இன்றியமையாதது. பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளையும் அரசு ஏற்று நடத்த இயலாது; இதைப் போன்றே இவை யாவற்றையும் தனியார் துறையிடமும் ஒப்புவிக்க முடியாது. சில துறைகளை அரசே முற்றிலுமாக ஏற்று நடத்தலாம்; வேறு சில துறைகளை முற்றிலுமாகத் தனியார் துறையில் அமைந்திருக்க அனுமதிக்கலாம். மற்ற துறைகளை அரசும், தனியாரும் ஒன்ருக இணைந்து நடத்தலாம்.

கலப்புப் பொருளாதாரம் கீழ்க்கண்ட இரண்டு அல்லது மூன்று துறைகளைக் கொண்டதாக இருக்கின்றது :

(1) பொதுத்துறை அரசின் முதலீட்டோடு, அரசுடைமை யையும் அரசின் நிர்வாகத்தையும் கொண்டதாகும். அரசே இத்துறையைக் கட்டுப்படுத்துகிறது. உற்பத்தி, பகிர்வு ஆகிய வற்றின் நிர்வாகமும் கட்டுப்பாடும் அரசின் வசமே இருக்கின்றன. இதில் தனியார் நிறுவனங்கள் முற்றிலுமாகத் தவிர்க்கப்படுகின்றன.

(2) தனியார்துறைக்கும் அரசின் துறைக்கும் பொதுவான துறையும் அமைந்துள்ளது. இத்துறைத் தொழில்களில் அரசு ஈடுபடலாம்; அல்லது தனியார் துறையினரும் இத்தொழில்களில் ஈடுபட வாய்ப்பு உண்டு. எனினும் தனியார்துறை நிறுவனங்கள் அரசால் கட்டுப்படுத்தப்படுகின்றன. உற்பத்தி, பகிர்வு ஆகியவை இரு துறைகளாலும் செய்யப்படுகின்றன.

(3) இறுதியாக, தனித்தொழில் முயல்வோரால் முதலீடு செய்யப்பட்டு நிர்வகிக்கப்படுகின்ற தனியார்துறை அமைந்திருக் கின்றது. அரசு இத்துறையின்மீது சில பொதுவான கட்டுப் பாடுகளை விதிக்கிறது. தனியார்துறையை ஒழுங்குபடுத்தவே அரசு இந் நடவடிக்கைகளை எடுக்கின்றது.

தனியார்துறையும், பொதுத்துறையும் அமைந்துள்ள பொருளா தாரத்தை ஹான்சென் (Hansen) 'இரட்டைப் பொருளாதாரம்' (Dual Economy) என்று கூறுகின்றார். லேனர் (Lerner) கலப்புப் பொருளாதாரத்தைக் 'கட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரம்' (Controlled Economy) என்கின்றார்.

18, 19ஆம் நூற்றாண்டுகளில் கலப்புப் பொருளாதாரத்தைப் பற்றிப் பொருளியலாளர்கள் எதையும் குறிப்பிடவில்லை. அக்காலத் தில், தனியார்க்கு இலாபத்தை அளிக்கக்கூடிய நிலையானது, சமுதாய நலனையும் பெருக்கக் கூடியதாக அமையுமெனக் கருதப் பட்டது. இம் முதலாளித்துவக் கருத்துக்களை மார்க்ஸ் (Marx) ஏற்றுக்கொள்ளவில்லை. பொருளாதார முன்னேற்றத்திற்கானப் பொதுவுடைமை, சமதர்மக் கோட்பாடுகளை அவர் உருவாக்கினார். உற்பத்திச் சாதனங்கள் அனைத்தையும் பொதுவுடைமையாக்க வேண்டுமென அவர் கூறினார். அரசு பொருளாதாரத்தை வழிப் படுத்தி நெறிப்படுத்த வேண்டுமென்பது அவரது கருத்து. தனியார் சொத்துக்களையும் அரசு ஒழிக்கவேண்டும்; தனியார் அதிக இலாபம் பெறுவதும் கட்டுப்படுத்தப்படவேண்டும் என்பது மார்க்ஸின் கொள்கையாகும். மார்க்ஸின் கருத்துகள் முதலாளித்துவ

முறையைப் பெரிதும் பாதிக்கவில்லை. அரசின் நடவடிக்கைகளும், கட்டுப்பாடுகளும் இன்றியமையாதவை எனப் பொருளியலாளர்கள் உணர்ந்தது உலகப் பொருளாதாரப் பெரு மந்தக் காலத்திலேயே ஆகும். முதலாளித்துவ முறை செல்வாக்கிழந்தமைக்கு இப்பெரு மந்தமும் காரணமாக இருந்தது. இதற்குப் பிறகு, முதலாளித்துவ முறையைவிடச் சமதர்ம முறையையே பலரும் ஆதரித்தனர். பல பின்தங்கிய நாடுகளும் சமதர்ம முறையையே பின்பற்றத் தொடங்கின. பெருமந்தக் காலத்திற்குப் பிறகு, தொன்மைப் பொருளாதார நிபுணர்களின் கருத்துகளும் செல்வாக்கிழந்தன.

முதலாளித்துவப் பொருளாதாரத்தைவிட, சமதர்ம முறை மேன்மையானது என்று பேராசிரியர் பிகு (Prof. Pigou) குறிப்பிடுகின்றார். சமதர்ம முறையில் திட்டங்களை வகுத்தல், முதலாளித்துவ முறையைக் காட்டிலும் அதிக நன்மையை அளிக்கும் என அவர் கூறுகின்றார். முதலாளித்துவத்திற்கும் பொதுவுடைமைக்கும் இடைப்பட்ட கலப்புப் பொருளாதார முறை தோன்றக் காரணமாக இருந்தவர் கீன்ஸ் ஆவார். முதலாளித்துவத்தில் சிலகுறைப்பாடுகள் அமைந்துள்ளன. பொதுவுடைமையில் தனியார் சுதந்திரமானது பறிக்கப்படுகின்றது. பொதுவுடமையில் அரசியல், பொருளாதார சுதந்திரங்கள் அமைந்திருப்பதில்லை. முதலாளித்துவத்தில் சமுதாய நலன் பாதிக்கப்படுகின்றது. எனவே முதலாளித்துவத்திற்கும், பொதுவுடைமைக்கும் இடைப்பட்ட சமதர்ம முறை பல நாடுகளிலும் தோற்றுவிக்கப்பட்டது. சமதர்மச் சமுதாயங்களில் கலப்புப் பொருளாதார முறையே பின்பற்றப்படுகின்றது. கீன்ஸ், ஹான்சென் போன்றவர்களின் கருத்துகளிலிருந்தே கலப்புப் பொருளாதாரக் கொள்கை உருவாகியது.

கலப்புப் பொருளாதாரத்தின் இயல்புகள்

(1) கலப்புப் பொருளாதாரத்தின் முதல் முக்கியமான இயல்பு தனியார்துறை, பொதுத்துறை ஆகிய இரண்டும் அமைந்திருத்தல் ஆகும். இவ்வகையில், முதலாளித்துவப் பொருளாதாரங்களையும் சமதர்மப் பொருளாதாரங்களையும் கூட கலப்புப் பொருளாதாரங்களாகக் கொள்ளலாம். ஏனெனில், முதலாளித்துவப் பொருளாதாரங்களில் பொதுத்துறையும் தனியார் துறையோடு இயங்கி வருகின்றது. சமதர்மப் பொருளாதாரங்களில் குறைந்த அளவில் தனியார் துறையும் பொதுத்துறையோடு செயல்படுகின்றது. அரசு சட்டத்தின் மூலம் பொதுத்துறை, தனியார்துறை ஆகிய இரண்டும் இயங்குவதை அனுமதிக்கின்றது.

(2) இரண்டாவதாக, கலப்புப் பொருளாதாரம் திட்டமிட்டப் பொருளாதாரமாகவும் இருக்க வேண்டும். கலப்புப் பொருளாதாரம் என்பது கட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தை மட்டும் குறிக்காது. பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த அரசு பணக் கொள்கையையும், நிதிக் கொள்கையையும் மட்டும் பின்பற்றினால் போதுமானதாகாது. சரியாக வரையறுக்கப்பட்டப் பொருளாதாரத் திட்டத்தை அரசு கொண்டிருக்கவேண்டும். பொதுத்துறையை இயக்கப் பொருளாதாரத் திட்டமானது தேவைப் படுகின்றது. பொருளாதார, சமுதாய நோக்கங்களை நிறைவேற்ற வும் திட்டம் உதவுகின்றது. ஆனால் அரசு தனியார்துறையை அதனுடைய போக்கிற்கு விட்டு விடுவதில்லை. எனவே இணைக்கப் பட்ட திட்டமொன்றை அரசு உருவாக்க வேண்டும். தனியார் துறை எந்த அளவிற்கு இயங்க வேண்டுமென்பது அத் திட்டத்தில் வரையறுக்கப்பட வேண்டும்.

(3) மூன்றாவதாக, கலப்புப் பொருளாதாரத்தில் முதலாளித் துவத்தின் இயல்புகளும், சமதர்மத்தின் இயல்புகளும் இணைந்து அமைந்துள்ளன. தனியார்துறைத் தொழில்கள் தன்னலம்கொண்டு இலாப நோக்கிற்காகச் செயல்படுகின்றன. முதலாளித்துவத்தில் தனியார் சொத்துரிமையும், நலனும் பெருமளவிற்குக் காக்கப்படு கின்றன. தனியார் சுதந்திரம் அமைந்திருக்கின்றது. பலரிடையே போட்டியானது அனுமதிக்கப்படுகின்றது. அதே சமயத்தில், இம் முறையைத் தலையிடாமைக் கொள்கையைப் பின்பற்றுகின்ற முதலாளித்துவம் என்று கூற முடியாது. இதைக் கட்டுப்படுத்தப் பட்ட முதலாளித்துவம் என்று கூறலாம். கட்டுப்படுத்தப்பட்ட முதலாளித்துவ முறையில் சொத்துரிமை, இலாப அளவு ஆகிய வற்றில் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. சமுதாய நலனைக் காக்க அரசு இவ்வித நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. சமுதாய நன்மைக்காகப் பொதுத்துறைத் தொழில்களும் நிர்வகிக்கப் படுகின்றன. பொதுத்துறை இலாப நோக்கிற்காக இயங்குவ தில்லை. பொதுத்துறையில் தனியார் சொத்துரிமையும் அமைந்திருப்ப தில்லை. பொதுத்துறை நிறுவனங்களில் போட்டி நிலையும் தவிர்க்கப் படுகின்றது. திட்டத்தின் மூலம் நன்மைகள் பெறப்படுகின்றன. வருவாயில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் குறைக்கப்படுகின்றன. தனியார் முன்னேற்றத்திலும் பெரிய தடைகள் ஏற்படுவதில்லை. கலப்புப் பொருளாதார முறையில் ஓரளவு கணிசமான இலாபத் தைத் தனியார் பெறவும் அனுமதிக்கப்படுகின்றது.

கலப்புப் பொருளாதாரத்தில் மக்கள் எப்பணிகளிலும் ஈடு படலாம். இம்முறையில் முதலாளித்துவத்தின் நன்மைகளும்,

பொதுவுடைமையின் நன்மைகளும் அடங்கியுள்ளன. நாட்டின் வளங்கள் சிறப்பாக உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகின்றன. உற்பத்தித் திறன் இதனால் கூடி உற்பத்தியின் அளவும் அதிகரிக்கின்றது. நுகர்வோர் பல உரிமைகளைப் பெற்றவர்களாக இருக்கின்றனர். கலப்புப் பொருளாதாரத்தின் மூலம் தனியார்துறை கட்டுப்படுத்தப்பட்டு, சமுதாய நலன் காக்கப்படுகின்றது. பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும் முதலீடுகள் செய்யப்படுகின்றன. நாட்டின் முக்கியமான தொழில்கள் அரசுடைமையாக இருக்கின்றன. சில தொழில்கள் தனியார்துறையில் அமைந்துள்ளன. ஓரளவு போட்டியும் அனுமதிக்கப்படுகின்றது. இதனால் உற்பத்தித் திறன் உயர்வடைகின்றது. முதலாளித்துவப் பொருளாதாரத்தில் அமைந்துள்ள குறைபாடுகள் நீக்கப்படுகின்றன. கலப்புப் பொருளாதார முறையில் வாணிபச் சுழல்கள் பெருமளவிற்கு எளிதாகக் கட்டுப்படுத்தப்படுகின்றன. தொழில்களில் முற்றுரிமை நிலை ஏற்படுவது தவிர்க்கப்படுகின்றது.

முதலாளித்துவத்தில் உள்ள குறைபாடுகளும், பொதுவுடைமையில் உள்ள குறைபாடுகளும் கலப்புப் பொருளாதார முறையில் நீக்கப்படுகின்றன.

கலப்புப் பொருளாதாரத்தின் குறைபாடுகள்

பலவிதமான நன்மைகளையும் கொண்ட கலப்புப் பொருளாதாரம், சிலவிதமான தீமைகளையும் கொண்டிருக்கின்றது:

1. கலப்புப் பொருளாதாரம் நீண்டகாலத்திற்குத் தொடர்ந்து நீடிக்காது என்று சொல்லப்படுகின்றது. ஏனெனில், பொதுத்துறை படிப்படியாக வளர்ந்து தனியார்துறையின் செல்வாக்குக் குறையத் தலைப்படும், தனியார்துறை நிறுவனங்களைப் பொதுத்துறை அதிக அளவில் ஏற்கத் தொடங்குகின்றது. போக்குவரத்து, வங்கி, நிதி நிறுவனங்கள், காப்புறுதி நிறுவனங்கள், அடிப்படைத் தொழில்கள் ஆகியவை பொதுத்துறையில் அமைகின்றன. மேலும் இவற்றைச் சார்ந்தே தனியார்துறை செயல்பட வேண்டியுள்ளது. கலப்புப் பொருளாதார முறையைக் கொண்ட ஒரு நாடு சமதர்மத்தைப் பின்பற்றும் நாடாகவும் மாறுகின்றது. இதைச் சோவியத் ரஷ்யாவின் பொருளாதார வரலாற்றினின்றும் அறிய முடிகிறது.

2. கலப்புப் பொருளாதாரம் சிறப்பாகச் செயல்படாது என்றும் குறிப்பிடப்படுகின்றது. முதலாளித்துவம், பொதுவுடைமை ஆகிய இரு முறைகளுக்கும் இடைப்பட்ட கலப்புப் பொருளாதாரம்

முதலாளித்துவத்தின் நன்மைகளையும் பெறமுடியாது; பொதுவுடைமையின் நன்மைகளையும் பெற இயலாது. உதாரணமாக, தனியார் துறைக்குப் போதுமான சுதந்திரம் வழங்கப்படுவதில்லை. வரி விதிப்பின் மூலம் தனியார்துறை இலாபத்தின் அளவும் குறைக்கப் படுகின்றது. தனியார்துறையின் முன்னேற்றத்திற்கு இது தடையாக உள்ளது. பொதுத்துறை நிறுவனங்களும் சிறப்பாகச் செயல்படுவதில்லை. இந்நிறுவனங்கள் சிறப்பாக நிர்வகிக்கப்படுவதில்லை. பின்தங்கிய நாடுகளில் உள்ள இக்குறைபாடு மேம்பாட்டைடந்த நாடுகளிலும் இருப்பது குறிப்பிடத்தக்கது. வளர்ச்சியடைந்துவரும் ஒரு நாட்டில் பொதுத்துறை தனியார்துறை ஆகியவற்றைப் பரந்த அளவில் வளர்ப்பதற்கான திட்டம் தேவைப்படுகின்றது. ஆனால் பல காரணங்களால் பெரிய அளவுத் திட்டத்தை வளர்ச்சியடைந்துவரும் ஒரு நாடு கைக்கொள்ள முடியாது. கலப்புப் பொருளாதார முறை இதனால் சிறப்பான வெற்றியை அளிப்பதில்லை.

3. கலப்புப் பொருளாதாரத்தில், பொதுத்துறை அரசால் வழிப்படுத்தி, நெறிப்படுத்தப்படுகின்றது. ஆனால் தனியார்துறை உள்நாட்டு, வெளிநாட்டுப் பொருளாதாரச் சூழ்நிலைகளால் பாதிக்கப்படுகின்றது. அரசு தனியார்துறையை சிறப்பாகக் கட்டுப் படுத்தாவிட்டால், திட்டமிட்டபடி தனியார்துறை வளர்ச்சி அமைந்திருக்காது. பொதுவாக, அரசோ அல்லது திட்டக் குழுவோ விலைக்கட்டுப்பாட்டிற்கானத் திட்டங்களை நிறைவேற்றுவதில்லை. தனியார்துறைத் தொழில்களும் சிறப்பாக ஒருங்குபடுத்தப் படுவதில்லை. தனியார்துறையின் வளர்ச்சி காக்கப்படுவதில்லையாதலால், பொதுத்துறையின் முன்னேற்றம் தடைப்படுகின்றது. பொருளாதார ஏற்ற இறக்கங்கள் ஏற்படக் கலப்புப் பொருளாதாரத்தில் வாய்ப்பு உண்டு. அரசின் சிறப்பான கட்டுப்பாட்டு முறையால் பொருளாதார ஏற்ற இறக்கங்களைக் கட்டுப்படுத்தலாம்.

கலப்புப் பொருளாதார முறையில் உள்ள சில குறைபாடுகளை அனுபவத்தின் மூலமாகச் சரிசெய்து விடலாம். அரசு பொதுத்துறை, தனியார்துறை வளர்ச்சிகளில் சரிசம நிலை ஏற்படுமாறு செய்யவேண்டும். பொருளாதார முன்னேற்றத்திற்கு இவ்விரு துறைகளின் வளர்ச்சியும் தேவைப்படுகின்றது. ஒரு துறையின் வளர்ச்சி மற்றொரு துறையின் வளர்ச்சிக்கு நன்மையை அளிப்பதாக இருக்க வேண்டும். பொதுவுடைமைக்கும், முதலாளித்துவத்திற்கும் இடைப்பட்டக் கலப்புப் பொருளாதார முறை சரியாகப் பின்பற்றப் பட்டால் பல நன்மைகள் விளையும் எனப் பொருளியலாளர்கள் கருதுகின்றனர்.

கலப்புப் பொருளாதாரத்தின் முக்கியத்துவம்

கலப்புப் பொருளாதார முறை பின்பற்றப்படுகின்ற நாட்டில் பொருளாதாரம் மூன்று வெவ்வேறு துறைகளாகப் பிரிக்கப்படுகின்றது. இத் துறைகளைப் பிரிக்கும் பணியை மத்திய அரசு செய்கின்றது. மக்களில் பெரும்பாலானவர்களின் நலனைப் பெருக்கும் வகையில் இம் மூன்று துறைகளும் வளர்க்கப்படுகின்றன. சமுதாய நலனுக்காகத் தனியார் நலன் கட்டுப்படுத்தப்படுகின்றது. அரசின் தொழிற் கொள்கை நாட்டின் தொழில்வளத்தைப் பெருக்குவதாக இருக்கின்றது. இதனால் தேசிய வருவாய் அதிகரிக்கின்றது. நாட்டின் செல்வமானது மறுபகிர்வு செய்யப்பட்டு, வருவாயில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் குறைக்கப்படுகின்றன. உற்பத்தியைப் பெருக்கும் வகையில் தேசியக் கொள்கை இயக்கநிலையைக் கொண்டிருக்கின்றது. செல்வப்பங்கீட்டில் உள்ள வேறுபாடுகளை நீக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இந் நடவடிக்கைகளால் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வடைகின்றது. வேளாண்மை, தொழில், வங்கி, வாணிபம் போன்றவற்றில் அரசு முன்னேற்றத்திற்கான பணிகளைச் செய்கின்றது.

பல நன்மைகளையும் கொண்டிருக்கின்ற இம் முறை உலகின் பல நாடுகளாலும் பின்பற்றப்படுகின்றது. அரசின் கவனமான கண்காணிப்போடு தனியார்துறை இயங்குகின்றது. சமூக விரோதச் செயல்கள் தண்டிக்கப்படுகின்றன. ஒரு வகையில் அரசே முழுமையான பொருளாதாரத்தையும் நிர்வகிக்கின்றது என்று கூறலாம். நாட்டின் இடைப்பருமை கொண்ட வசதிகள் திறம்படப் பயன்படுத்தப்படவேண்டும் என்ற நோக்கோடு அரசு செயல்படுகிறது. தனியார்துறையும், பொதுத்துறையும் சிறப்பாகச் செயல்பட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இந் நடவடிக்கைகளால் மக்களின் பொருளாதார நிலைகளில் முன்னேற்றம் ஏற்படுகின்றது.

கலப்புப் பொருளாதாரத்தில் அரசின் நிலை

முதலாளித்துவ அரசின் பணிகளைவிட, கலப்புப் பொருளாதாரத்தைப் பின்பற்றுகின்ற அரசின் பணிகள் அதிகமாக இருக்கின்றன. தனியார் முதலீடு செய்யத் தயங்குகின்ற துறைகளில் அரசு முதலீடு செய்கின்றது. தனியார்துறையில் போட்டி நிலவ அனுமதிக்கப்படுகின்றது. முற்றுரிமை நிலைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. நாட்டின் நன்மைக்காக பொருட்களும், பணிகளும் அரசால் உற்பத்தி செய்யப்படுகின்றன. விலைகளின்மீது பொதுவான கட்டுப்பாடு அமைந்துள்ளது. வேலையின்மையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் கைக்கொள்ளப்படுகின்றன. பொருட்களின் உற்பத்தியும், பகிர்வும் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

இவ்விதமான பொருளாதாரப் பணிகளை அரசு நிறைவேற்று கிறது. நாட்டைத் தொழில் மயமாக்குவதற்கான வழிமுறைகளும் அரசால் பின்பற்றப்படுகின்றன. நாட்டின் விரைவான தொழில் முன்னேற்றத்திற்கு அரசே சில தொழில்களைத் தொடங்குகின்றது. சில வகைப்பட்ட தொழில்களைத் தொடங்குவதற்கு அதிக மூல தனம் தேவைப்படுகின்றது. தனியார்துறையினர் முதலீடு செய்ய முடியாத இத் தொழில்களை அரசு தொடங்குகிறது. உதாரணமாக, மின்சார உற்பத்தி, போக்குவரத்து, செய்தித் தொடர்பு, அடிப் படைத் தொழில்கள் ஆகியவை பொதுத்துறையிலேயே அமைந் துள்ளன. இவ்வகை வசதிகளைப் பெருக்கும்போது, பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுவது எளிதாகின்றது. ஒரு நாட்டில் சில தனியார்துறைத் தொழில்கள் அமைந்திருக்கும்போது, அவ்வகைத் தொழில்களையே அரசும் தொடங்கலாம். இதனால் தனியார் துறைக்கும், பொதுத்துறைக்கும் இடையே போட்டியானது ஏற்படுத்தப்படவேண்டுமென்பது அவசியமில்லை. இம்முறையின் மூலம் நாட்டில் விரைவான தொழில் முன்னேற்றத்தை ஏற்படுத்தலாம்.

அரசு முக்கியமான தொழில்களை மேற்கொள்வதோடு, தனியார்துறையின் வளர்ச்சிக்கும் பல வழிகளில் உதவுகின்றது. தனியார்துறைக்கு நிதி வசதியளிக்க அரசின் நிதி நிறுவனங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. தனியார்துறை உற்பத்திப் பொருட்களின் விற்பனையைப் பெருக்குவதற்கான வழிமுறைகள் அரசால் பின்பற்றப்படுகின்றன. சரியான வரிக்கொள்கையின் மூலம் முதலீட்டின் அளவு பெருக்கப்படுகின்றது.

கலப்புப் பொருளாதாரத்தில், அதிக அதிகாரங்களைக்கொண்ட திட்டக் குழுவானது அமைக்கப்பட்டிருக்கின்றது. பொதுத்துறைக் கான திட்டங்கள் இக் குழுவால் தீட்டப் பெறுகின்றன. திட்டத் திற்கான குறியிலக்குகளையும் இக் குழு நிர்ணயிக்கின்றது. சமுதாய, பொருளாதார நோக்கங்களும் வரையறுக்கப்படுகின்றன. அரசின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு இந்நோக்கங்கள் அமைகின்றன. திட்டக் குறியிலக்குகளை அடைவதற்கான வழி முறைகளும் ஆராயப்படுகின்றன. தனியார்துறையை எவ்வகைகளில் கட்டுப் படுத்துவது, வழிப்படுத்துவது என்பவை பற்றித் தீர்மானிக்கப்படு கின்றது. கலப்புப் பொருளாதாரத்தில் திட்ட அமைப்பே சிறப்பான நிலையைக் கொண்டிருக்கின்றது.

கலப்புப் பொருளாதார முறையில் அரசு சர்வாதிகார நிலையில் நடவடிக்கைகளை எடுப்பதில்லை. அரசியல் அமைப்பிற்கும், சட்ட

திட்டங்களுக்கும் உட்பட்டே அரசு நடவடிக்கைகளை எடுக்கிறது. சமுதாய நலனிற்காக அரசியற் சட்டங்களும் திருத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, இந்தியாவில் மன்னர்களுக்கான மானியத்தை ஒழிக்க மத்திய அரசு நிறைவேற்றும் சட்டத்தைக் குறிப்பிடலாம். சமதர்மச் சமுதாயத்தை அமைக்க முயலும் அரசு இவ்வித நடவடிக்கைகளை எடுப்பது இன்றியமையாததேயாகும். மானிய ஒழிப்பினுல் மன்னர்களின் நலன் பெரிதும் பாதிக்கப்பட மாட்டாது. ஆனுல் இது சமுதாய நலனைப் பெருக்க உதவும். இவ்வகைகளில் கலப்புப் பொருளாதார முறையில் அரசு அதிகச் செல்வாக்கைக் கொண்டதாக இருக்கின்றது.

இந்தியாவில் கலப்புப் பொருளாதாரம்

இந்தியாவில் சிறப்பான கலப்புப் பொருளாதார முறை அமைந்துள்ளது. இந்திய அரசியல் அமைப்பு, கலப்புப் பொருளாதார முறையை ஏற்றுக் கொண்டுள்ளது. இந்திய ஜனநாயகக் குடியரசு விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப் பெற விரும்புகின்றது. தேசிய வருவாயை உயர்த்தவும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. பொதுநல முன்னேற்றத்திற்கான வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. சமுதாய, பொருளாதார, அரசியல் நீதிகள் காக்கப்படுகின்றன. பொருளாதார நிலையில், உடைமைகள் வேறுபாடு அதிகமில்லாத வகையில் பங்கிடப் பெறுகின்றன. ஒரு சிலரிடம் செல்வம் குவிந்திருப்பது தடுக்கப் படுகிறது. உழைப்பாளர்களைச் சுரண்டுவது தவிர்க்கப்படுகின்றது. நாட்டின் வளங்கள் சிறப்பாக உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகின்றன. உற்பத்தியிலும், பகிர்விலும் அரசு பெரும்பங்கேற்பதின் மூலமே, வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் விரைவான முன்னேற்றத்தைப் பெற முடியும். இந்திய அரசு நாட்டை விரைவாகத் தொழில் மயமாக்க விரும்புகின்றது. இதன் மூலமே தேசிய வருவாயை உயர்ந்த அளவில் பெறலாம்; மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த இயலும்.

எனவே, இந்தியாவில் கலப்புப் பொருளாதார முறையைக் கொண்ட சமதர்மம் பின்பற்றப்படுகின்றது. சமதர்மத்தின் மூலம் வருவாயிலும், செல்வப்பங்கீட்டிலும் உள்ள ஏற்றத்தாழ்வுகள் குறைக்கப்படும். எனினும் அரசு தனியார்துறையை முற்றிலுமாக நீக்கக் கருதக்கூடாது. குறைபாடுகளைக் கொண்டிருந்தாலும், தனியார்துறை உற்பத்தியிலும், பகிர்விலும் நல்ல பல பணிகளை ஆற்றுகின்றது. தனியார்துறையைக் காட்டிலும் பொதுத்துறை இன்று விரைவாக வளர்ந்து வருகின்றது. சமதர்மம் பின்பற்றப்படு

கின்ற ஜனநாயகக் குடியரசில் கலப்புப் பொருளாதார முறை கைக் கொள்ளப்பட்டிருக்கிறது. உயர்ந்த பொருளாதார வளர்ச்சியை இம் முறையின் மூலமே பெறலாம் என அரசு கருதுகின்றது.

பொருளாதார முன்னேற்றத்தைப் பெற இந்திய அரசு கலப்புப் பொருளாதார முறையை ஏற்றுக்கொண்டுள்ளது. முன்னேற்றத் தைப் பெறுவதில் தனியார்துறையும், பொதுத்துறையும் கூட்டாகச் செயல்படுகின்றன. இதை ஒரு கூட்டு முன்னேற்ற முயற்சி எனலாம். ஏப்ரல் 30, 1956-ல் பாராளுமன்றத்தில் கலப்புப் பொருளாதார முறையைப் பின்பற்றத் தீர்மானிக்கப்பட்டது. இந்தியா ஜனநாயக நாடாக இருப்பதால், தனி மனிதனுடைய சுதந்திரம் காக்கப்படுகின்றது. இந்தியப் பொருளாதாரத்தில் முதலாளித்துவத்தின் குறைகள் போக்கப்பட்டு, சமதர்மத்தின் சிறப்பியல்புகள் காக்கப்படுகின்றன.

தனியார்துறை

பல திட்டங்களை நிறைவேற்றிய பிறகும் இந்தியா வளர்ச்சிக் குன்றிய நிலையிலேயே இருக்கின்றது. இதற்குக் காரணம் பொருளாதார நடவடிக்கைகளில் 90 சதவீதம் தனியார் பங்காக உள்ளது. வேளாண்மை, தொழில், வாணிபம் ஆகிய பலவும் தனியாராலேயே அதிக அளவில் செய்யப்படுகின்றன. இந்தியாவில் கூட்டுறவுத் துறை குறிப்பிடத்தக்க அளவில் வளர்ந்திருக்கவில்லை. தனியாரின் முயற்சியால் கூட்டுறவு நிறுவனங்கள் தொடங்கப்படு கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. முன்னேற்றமடைந்த நாடு களின் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தனியார்துறை பெரிதும் உதவியிருக்கின்றது. தனியார் முயற்சியே 18, 19ஆம் நூற்றாண்டுகளில் இங்கிலாந்தில் வேளாண்மை, தொழிற்புரட்சி களுக்கு அடிப்படையாக இருந்தது. வளர்ச்சியடைந்த நாடுகள் பலவற்றில் இன்றும் தனியார்துறையே செல்வாக்குக் கொண்ட தாக இருக்கின்றது. தனியார்துறையில் இலாப நோக்கு அமைந் திருப்பதே எல்லா வெற்றிகளுக்கும் காரணமாகும். இந்தியப் பொருளாதாரத்திலும் பொதுத்துறை குறைந்த அளவிற்கே வளர்ந் திருக்கின்றது.

1948, 1956ஆம் ஆண்டுகளின் தொழிற் கொள்கைகள் தனியார்துறையைக் கட்டுப்படுத்தின. எனினும் தனியார்துறை வளர்ச்சிக்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. பெரிய அடிப் படைத் தொழில்கள் பொதுத்துறையிலும், நுகர் பொருட்களின் உற்பத்தித் தொழில்கள் தனியார்துறையிலும் இருக்கவேண்டு மென்பது அரசின் கொள்கையாக இருக்கின்றது. அரசு தனியார்

துறையைப் பல வழிகளிலும் கட்டுப்படுத்துகின்றது. தொழில்களைத் தொடங்கத் தனியார் அனுமதி பெறுதல் வேண்டும். ஏற்றுமதி, இறக்குமதிக் கட்டுப்பாடுகளும் அமைந்துள்ளன. பாதக அயல் நாட்டுச் செலுத்து இருப்பு நிலையைத் தவிர்க்க அயல்நாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடும் பின்பற்றப்படுகின்றது. பொருளாதாரத்தில் பணவீக்க நிலை தோன்றாமல் இருக்கவும் தனியார்துறை கட்டுப்படுத்தப்படுதல் அவசியமாகின்றது. 'தொழில்களின் வளர்ச்சி, ஒழுங்குபடுத்தப்படுதல் சட்டம்' [Industries (Development and Regulation) Act], 'இன்றியமையாதப் பொருட்களின் சட்டம்' (Essential Commodities Act), 'பொருட்களின் அளிப்பு, விலைகள் சட்டம்' (Supply and Prices of Goods Act) ஆகியவற்றின் மூலம் அரசு தனியார்துறையை எவ்வாறு கட்டுப்படுத்துகின்றது என்பதை அறியலாம். அரசு தனியார்துறையைக் கட்டுப்படுத்துவது சேமிப்பு, முதலீட்டு வீதங்களைப் பாதிக்கின்றது என்றும் சொல்லப்படுகிறது. தேசியவுடைமையாக்கப்படலாம் என்ற அச்சத்தினாலும், அரசின் அதிக வரிவிதிக்கும் கொள்கையாலும் தனியார் முதலீடுகள் பெருகுவதில்லை. நம் நாட்டில் வெளி நாட்டினரின் தனியார் முதலீடு குறைந்து வருவது குறிப்பிடத் தக்கது.

பொதுத்துறை

இந்தியாவில் பொதுத்துறை படிப்படியாக வளர்ந்து வருகின்றது. சுதந்திரமடைவதற்கு முன்பு போக்குவரத்து, செய்தித் தொடர்பு போன்ற ஒரு சில துறைகள் மட்டுமே பொதுத் துறையில் அமைந்திருந்தன. அரசின் தொழிற் கொள்கை பொதுத் துறையின் வளர்ச்சிக்குச் சாதகமாக உள்ளது. பொதுவுடைமை நாடுகளில் அரசே எல்லாப் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் காரணமாக இருக்கின்றது. சமதர்ம நாடுகளில் பொருளாதார நடவடிக்கைகளில் அரசின் பங்கு அதிகரித்து வருகின்றது. முதலாளித்துவ நாடுகளில் தனியார் துறையே மிகவும் வளர்ச்சி யடைந்ததாக உள்ளது. எனினும், சமீபகாலமாக இந்நாடுகளிலும் அரசின் நடவடிக்கைகள் பெருகி வருகின்றன.

ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் பொதுத்துறை, பின்வரும் காரணங்களால் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது:

(1) முக்கியமான அடிப்படைத் தொழில்களும், பொது நலத்தைப் பெருக்கக் கூடிய தொழில்களும் பொதுத்துறையில் அமையவேண்டும். இவ்வகைத் தொழில்களைத் தனியார்துறை யினர் நடத்த அனுமதிக்கக் கூடாது. இத் தொழில்களை ஏற்று

நடத்துவது அரசின் கடமையாகின்றது. பொது மக்களுக்கு நன்மை பயக்கின்ற இத் தொழில்கள் தனியார்துறையில் அமைந்திருந்தால் பொது நலம் புறக்கணிக்கப்படும்.

(2) முதலீட்டிற்கான வசதிகள் பின்தங்கிய நாடுகளில் குறைவாகவே உள்ளன. முற்றிலும் தனியார்துறை மட்டும் அனுமதிக்கப்பட்டால், எல்லாத் துறைகளும் வளர்ச்சியடைய வாய்ப்பு ஏற்படாது. இந்நிலையில், அரசு பொதுத்துறையில் அதிக முதலீட்டைச் செய்வது அவசியமாகின்றது. தனியார் முதலீடு செய்யத் தயங்குகின்ற துறைகளில் அரசு முதலீட்டைச் செய்ய வேண்டும். இவ்வகையில் அரசு சேமிப்பாளராகவும், முதலீட்டாளராகவும், தொழில் அமைப்பாளராகவும் பணியாற்றுகின்றது.

(3) பொருளாதார முன்னேற்றத்தைப்பெற கல்வி வசதிகள், மருத்துவ வசதிகள், பயிற்சி வசதிகள், போக்குவரத்து செய்தித் தொடர்பு வசதிகள் ஆகியவையும் தேவைப்படுகின்றன. இவற்றில் முதலீடு செய்வது இலாபகரமாக அமைவதில்லை. எனவே இத் துறைகளில் தனியார் முதலீடு செய்யவிரும்புவதில்லை. முன்னேற்றத்திற்கு இவ்வசதிகள் இன்றியமையாதவைகளாக இருப்பதால், அரசு இவற்றிற்கான முதலீடுகளைச் செய்யவேண்டும். இவைகளின் வளர்ச்சி பிற தொழில்களில் தனியார் முதலீட்டையும் ஊக்குவிக்கும். விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப் பெற அரசு இவற்றின் வளர்ச்சியில் நேரடியாக ஈடுபடவேண்டும்.

(4) சமதர்மத்தை அடைய பொதுத்துறையை விரிவடையச் செய்வது இன்றியமையாதது. வருவாயிலும், செல்வப் பங்கீட்டிலும் உள்ள ஏற்றத்தாழ்வுகளை இதன் மூலமே குறைக்க முடியும். தனியார்துறையில் இலாபமானது ஒரு சிலரைச் சென்று சேர்கின்றது. அது திரும்பவும் இலாப நோக்குடனேயே முதலீடாக்கப்படுகின்றது. பொதுத்துறை முதலீடு இலாப நோக்குக் கருதி செய்யப்படுவதில்லை. பெறப்பட்ட இலாபமும் சமுதாய நலனிற்காகத் திரும்பவும் இலாப நோக்கின்றி முதலீடாக்கப் பெறுகின்றது. எனவே, தனியார்துறையை வளரவிட்டால் வருவாயிலும், செல்வப் பங்கீட்டிலும் உள்ள ஏற்றத்தாழ்வுகள் மிகுதியடையும். உயர்வான பொருளாதார வளர்ச்சி வீதத்தைப் பெற பொதுத்துறை முன்னேற்றம் அவசியமானது.

இவற்றைத் தவிர, நாட்டின் பாதுகாப்பிற்கான தொழில்களை அரசு நடத்துகின்றது. தனியார்துறையின் மூலம் முற்றுரிமை தோன்றாமல் இருக்கவும் பொதுத்துறை நிறுவனங்கள் தொடங்கப்

படுகின்றன. இன்றைய அரசுகள் அதிக நிதித் தேவையைக் கொண்டுள்ளன. வருவாயைப் பெருக்க அரசே பல தொழில்களைத் தொடங்கி நடத்தவேண்டும். தனியார்துறை நிறுவனங்களும் ஓரளவு இயங்க அனுமதிக்கப்படலாம். அதிக இலாபத்தைப் பெறுகின்ற தனியார் நிறுவனங்களை அரசு ஏற்று நடத்த வேண்டும்.

வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் பொதுத்துறையின் முன்னேற்றம் இன்றியமையாதது. இந்நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்தில் பொதுத்துறை முக்கியப் பங்கைக் கொண்டுள்ளது என்பது எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்தியாவில் இரண்டாவது திட்டத்தின் தொடக்கத்திலிருந்தே பொதுத்துறையில் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகின்றது. பொதுத்துறையில் அரசின் முதலீட்டு வீதம் ஒவ்வொரு திட்டத்திலும் அதிகரித்து வருகின்றது. தனியார் துறையில் அரசின் முதலீட்டு வீதம் குறைந்து வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

	பொதுத்துறை	தனியார்துறை
முதல் திட்டம்	46·4	53·6
இரண்டாவது திட்டம்	54·6	45·4
மூன்ருவது திட்டம்	63·1	36·9
நான்காவது திட்டம்	63·7	36·3

பொதுத்துறையின் வளர்ச்சிக்காக அரசு அதிக மூலதனத்தை ஒதுக்கினாலும், தனியார்துறையைவிட பொதுத்துறை சிறியதாகவே உள்ளது. 1950–51-ல் பொதுத்துறையின் மூலம் தேசிய வருவாயில் 7·4 சதவீதம் மட்டுமே பெறப்பட்டது. 1965–66-ல் தேசிய வருவாயில் பொதுத்துறையின் பங்கு 13·3 சதவீதமாக உயர்ந்திருக்கின்றது. நம் நாட்டில் பொதுத்துறையின் வளர்ச்சி பல வகைகளிலும் ஏற்பட்டிருக்கின்றது. சுதந்திரமடைவதற்கு முன்பு இருந்ததைவிட தற்பொழுது இருப்புப்பாதைப் போக்குவரத்து செய்தித் தொடர்பு போன்றவை வளர்ந்துள்ளன. சில தனியார் தொழில்களும் நாட்டுடைமையாக்கப்பட்டன. திட்டக் காலத்தில் அரசு பல புதிய தொழில்களைத் தொடங்கியது.

திட்டமிடப்பட்டபடி வளர்ச்சியைப் பெற பொதுத்துறையில் வாய்ப்பு உண்டு. தனியார்துறையின் வளர்ச்சி அரசு திட்டமிடு கின்றபடி அமையுமென்று கூற முடியாது. சமதர்மச் சமுதாயத்தை அமைக்கப் பொதுத்துறையை வளர்ப்பது அவசியமானது. எனவே, இந்திய அரசு பொதுத்துறைக்கான முதலீட்டின் அளவைப் பெருக்கிக் கொண்டே செல்கின்றது. முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பொதுத்துறையில் ரு. 1,800 கோடியும், இரண்டாவது திட்டத்தில் ரூ. 4,800 கோடியும், மூன்றாவது திட்டத்தில் ரூ. 6,300 கோடியும் முதலீடு செய்யப்பட்டது. நான்காவது திட்டத்தில் பொதுத்துறையில் ரூ. 15,902 கோடி முதலீடாக்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் தொழில் முன் னேற்றத்திற்கான பொதுத்துறை முதலீடு படிப்படியாக அதிகரித் துள்ளதை அறியலாம். தொழில் முன்னேற்றத்திற்கான தனியார் துறை முதலீடும் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

	கோடி ரூபாயில்		
	முதல் திட்டம்	இரண்டாவது திட்டம்	மூன்றாவது திட்டம்
பொதுத்துறை	59	770	1,330
தனியார்துறை	339	850	1,275
மொத்தம்	398	1,620	2,605

தனியார்துறையில் தொழில் முயல்வோரால் விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. பொதுத்துறையில் விலைகள் சமுதாயத் திற்கு நன்மை தரும் வகையில் நிர்ணயிக்கப்படுகின்றன. அரசின் கொள்கைக்கு ஏற்பவும் இவ்விலைகள் அமைகின்றன. இவ்விலைகள் அரசிற்கு வருவாய் தருவதாகவும், நுகர்வோருடைய நலனைக் காப்பதாகவும் இருக்கவேண்டும். தனியார்துறை நிறுவனங் களோடு போட்டியிடத் தக்கவைகளாகவும் இவ்விலைகள் அமைய வேண்டும்.

சில துறைகளில் தனியார் முதலீடு செய்வதும், நிர்வகிப்பதும் இயலாததாக இருக்கின்றது. உதாரணமாக, இந்தியாவின் இருப்புப்பாதைப் போக்குவரத்தைக் குறிப்பிடலாம். இந்திய இரயில் வேக்களின் இன்றைய மதிப்பு சுமார் 3,600 கோடி ரூபாயாகும். இதன் வருமானம் நாளொன்றிற்குச் சுமார் 2·5 கோடி ரூபாயாகும்.

இதில் 13·5 இலட்சம் ஆண்களும், பெண்களும் பணியாற்று கின்றனர். நாளொன்றிற்குச் சுமார் 61 இலட்சம் பயணிகள் பிரயாணம் செய்கின்றனர். ஒரு டீசல் என்ஜின் விலை சுமார் 23 இலட்சம் ரூபாயாகவும், மின்சார என்ஜின் விலை 10 இலட்ச ரூபாயாகவும், நீராவி என்ஜின் விலை 5 இலட்ச ரூபாயாகவும், பயணி வண்டியின் விலை 2 இலட்ச ரூபாயாகவும் இருக்கின்றன. இவ்வாறு மிக அதிக முதலீட்டைக் கொண்ட இருப்புப் பாதைப் போக்குவரத்தைத் தனியார்துறையினர் நடத்துவது மிகவும் கடினமானது.

பொதுத்துறை நிறுவனங்கள் இலாப நோக்கோடு செயல்படுவ தில்லை. எனினும் இந்நிறுவனங்கள் இலாபத்தைப் பெறும் வகையில் விலைகளை நிர்ணயம் செய்வது எளிதானது. விலைகளைக் குறைப்பதோ அல்லது அதிகரிப்பதோ பொதுத்துறையில் எளிதானதாக இருக்கின்றது. இந்தியாவில் 'ஹிந்துஸ்தான் தந்தி அச்சு நிறுவனம்' (Hindustan Teleprinters Ltd), 'இந்தியத் தொலை பேசித் தொழில்கள் நிறுவனம்' (Indian Telephone Industries Ltd) போன்ற தொழில் நிறுவனங்களை அரசு ஏற்று நடத்தி வருகின்றது. பொதுத்துறை நிறுவனங்களில் பல இலாபத்திலும், சில நட்டத் திலும் இயங்கி வருகின்றன.

1956ஆம் ஆண்டின் தொழிற் கொள்கைப்படி, தொழில்கள் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டன. முதல் வகைத் தொழில் களில் வளர்ச்சி ஏற்படச் செய்வது அரசின் கடமையாகும். இவ்வகைத் தொழில்கள் பாதுகாப்புக் கருவிகள், வெடி மருந்து, அணுச்சக்தி, இரும்பு-எஃகு, மின்சார உற்பத்தி, நிலக்கரி, ஆகாய விமானப் போக்குவரத்து, இருப்புப் பாதைப் போக்குவரத்து, கப்பல் கட்டுதல், தொலை பேசி, மின்சாரப் பங்கீடு போன்றவைகளாகும். இத்தொழில்களின் புதிய நிறுவனங்கள் அரசினால் தோற்றுவிக்கப் படும். இத்தொழில்களில் தற்பொழுதுள்ள தனியார் நிறுவனங்கள் தொடர்ந்து நீடிக்க அனுமதிக்கப்படும். இவற்றின் வளர்ச்சிக்கான வசதிகளும் அரசால் அளிக்கப்படும்.

இரண்டாவது பிரிவுத் தொழில்களில் அரசு முக்கியப் பங்கைக் கொண்டிருக்கும். இவ்வகைத் தொழில்களில் பொதுத்துறை நிறுவனங்களோடு தனியார்துறை நிறுவனங்களும் செயல் படலாம். இப்பிரிவுத் தொழில்களாவன: தாதுப்பொருட்கள், அலுமினியம், இயந்திரக் கருவிகள், இரசாயனத் தொழில்களுக்குத் தேவையான அடிப்படை, நடுத்தரப் பொருட்கள், மருந்துப் பொருட்கள், உரங்கள், ரப்பர், சாலைப் போக்குவரத்து, கடல் போக்குவரத்து. இவ்வகைத் தொழில்களில் பொதுத்துறை, தனியார் துறை ஆகிய இரண்டும் ஈடுபடலாம். இவ்விரண்டில், பொதுத்

துறைக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும். இத்தொழில்களை அரசு படிப்படியாக உடைமையாக்கிக் கொள்ள வேண்டும்.

இறுதியாக, மூன்றாவது பிரிவுத் தொழில்கள் தனியார்துறைக்காக ஒதுக்கப்பட்டன. தனியார்துறையின் மூலமே இத்தொழில்களின் முன்னேற்றம் பெறப்படும். பொதுவாக, இத்தொழில்களை அரசு ஏற்று நடத்தாது. சமுதாய நலனைக் கருதி ஒரு சிலத் தொழில்களை நடத்தவும் அரசிற்கு உரிமை உண்டு. 1951ஆம் ஆண்டு இயற்றப்பட்ட 'தொழில்களின் வளர்ச்சி, ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின்' மூலம் எல்லாத் தனியார்துறை நிறுவனங்களின்மீதும் அரசு ஆதிக்கத்தைக் கொண்டுள்ளது. ஆனால் தனியார்துறை வளர்ச்சிக்கான நிதி வசதிகளும் அரசால் அளிக்கப்படுகின்றன.

இவ்வாறு பொருளாதாரம் மூன்று வெவ்வேறு வகைப்பட்ட துறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஆனால் இப்பிரிவுகள் முழுமையாக எல்லாத் தொழில்களையும் உள்ளடக்கியவைகளாக இல்லை. இந்தியப் பொருளாதாரத்தில் பொதுத்துறையும், தனியார்துறையும் இணைந்து இயங்க வேண்டியதின் அவசியத்தைத் திட்டக்குழுவும் உணர்த்தியுள்ளது. தனியார்துறையில் கூட்டுறவு முறையும் அடங்கியிருக்கின்றது. இந்தியப் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பொதுத்துறை, தனியார்துறை, கூட்டுறவுத்துறை ஆகிய மூன்றும் உதவுகின்றன. சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள் ஆகியவை பெரும்பாலும் தனியார்துறையிலேயே அமைகின்றன. இவற்றிற்கு மத்திய அரசின் உதவியும், மாநில அரசுகளின் உதவிகளும் அளிக்கப்படுகின்றன.

திட்டக்காலத்தில் திட்டக்குழு எல்லாத் தொழில்களின் முன்னேற்றத்திற்குமான திட்டங்களை வகுத்தது. எனினும் பொதுத் துறைக்கான தொழில்களும்; தனியார்துறைக்கான தொழில்களும் முழுமையாகவும், தெளிவாகவும் குறிப்பிடப்படவில்லை. இந்தியாவில் பொதுத்துறையின் வளர்ச்சி பலவிதமான நன்மைகளைத் தருகின்றது. எனினும் கீழ்க்கண்ட சில குறைபாடுகளும் பொதுத் துறையில் அமைந்துள்ளன:

(1) பொதுத்துறை நிறுவனங்கள் அதிக முதலீட்டைக் கொண்டு, நீண்ட காலத்திலேயே உற்பத்தியைத் தொடங்குகின்றன. முதலீடு உடனடியாக உற்பத்தியைப் பெருக்குவதாக அமைவதில்லை.

(2) பொதுத்துறையில் சரியான விலைக் கொள்கைகள் பின்பற்றப்படுவதில்லை. இலாபத்தின் அளவு குறைகின்றமைக்கு, கொள்கைகள் சரியாகக் கைக்கொள்ளப்படாமையே காரணமாகும்.

(3) பொதுத்துறை நிறுவனங்களில் முதலீடுகள் சிக்கனமின்றி தேவைக்கு அதிகமான அளவில் செய்யப்படுகின்றன. கடினமான முறைகளைப் பின்பற்றித் திரட்டப்பட்ட நிதியானது சிறப்பாக உற்பத்தியை உயர்த்தும் வகையில் முதலீடாக்கப்டுவதில்லை.

(4) உற்பத்திக் குறியிலக்குகள் பொதுத்துறையில் சரியாக நிர்ணயிக்கப்படுவதில்லை. பல உற்பத்தி நிறுவனங்கள் திறமையாகச் செயல்படாமைக்கு இதுவும் காரணமாகும்.

(5) அவசியம் குறைந்த செலவுகள் பொதுத்துறையில் மிகுதியாக இருக்கின்றன. தனியார் துறையைவிட பொதுத்துறையில் நிர்வாகச் செலவும் அதிகமாகவே இருக்கின்றது. இதன் காரணமாக உற்பத்திச் செலவு கூடி, விலையும் உயர்கின்றது. இதனால் தேவை குறைவடைகின்றது. தேவைக் குறைவால் உற்பத்தியும் பாதிக்கப்படுகின்றது.

(6) பொதுத்துறை நிறுவனங்கள், தேவைக்கும் அதிகமான ஊழியர்களையும், உழைப்பாளர்களையும் கொண்டிருக்கின்றன. உழைப்பு உற்பத்தியை உயர்த்துவதற்குச் சிறப்பாகப் பயன் படுத்தப்படுவதில்லை. உற்பத்தியின் பல நிலைகளிலும் சிக்கன நடவடிக்கைகள் அமைந்திருப்பதில்லை.

(7) ஊதியத்திற்காக மட்டுமே பொதுத்துறை நிர்வாகிகள் பணியாற்றுகின்றார்கள். நிறுவனம் முன்னேறினாலும், முன்னேறு விட்டாலும் உழைப்பாளர்களுக்கும், பணியாளர்களுக்கும் ஊதியம் வழங்கப்படுகின்றது. இலாப நோக்கு இல்லாமையே பொதுத்துறை வளராமைக்கு முக்கியக் காரணமாகும். நிறுவனம் கவனமாகக் கண்காணிக்கப்படுவதில்லை.

(8) பொதுத்துறை ஊழியர்களும், உழைப்பாளர்களும் பயிற்சியின்மையால் திறமை குறைந்தவர்களாகவே இருக்கின்றனர். பொதுத் துறை நிறுவனங்களில் உழைப்பாளர்களின் உற்பத்தித்திறனைப் பெருக்குவதற்கான பயிற்சிகள் அளிக்கப்படுவதில்லை. இதனாலேயே இந்நிறுவனங்களில் உற்பத்தியின் அளவு குறைவாகவும், உற்பத்திச் செலவு உயர்வாகவும் அமைகின்றன.

பொதுத்துறையில் இவ்விதமான குறைபாடுகள் சில அமைந் திருந்தாலுங்கூட, அவற்றைத் தீர்ப்பது எளிதானதேயாகும். பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுவதற்கான அடிப்படையை அமைத்துத் தருவது பொதுத்துறையேயாகும். இந்தியா சமதர்ம முறையைப் பின்பற்றுவதால், பொதுத்துறையை விரைவாக

வளர்ப்பது இன்றியமையாததாகின்றது. பொதுத்துறையின் குறைகளைக் காலப்போக்கில் நீக்கிவிடலாம்.

இந்தியாவில் கலப்புப் பொருளாதாரத்தின் பொருத்தமுடைமை

இந்தியத் தொழில்கள் திட்டமிட்டு வளர்க்கப்படுகின்றன. திட்டமிடுதலில் கலப்புப் பொருளாதார முறையானது பின்பற்றப்படுகின்றது. கலப்புப் பொருளாதாரம் நம் நாட்டில் எந்த அளவிற்குப் பொருத்தமுடையதாக இருக்கின்றது என்பதைப் பின்வரும் மூன்று காரணிகளின் மூலம் உணரலாம்:

(i) பொருளாதார முன்னேற்ற வேகம்.

(ii) முன்னேற்றத்தினால் விளைந்த நன்மைகளின் பகிர்வு.

(iii) தேசிய உற்பத்தித் திறனைப் பெருக்குவதற்கு மக்கள் கொண்டுள்ள ஊக்கம்.

இந்தியப் பொருளாதார முன்னேற்ற வேகம் குறைவாக இருக்கின்றமைக்கு, தனியார்துறையில் அரசு குறுக்கிடுவதே காரணம் என்பது சிலருடைய கருத்தாக இருக்கின்றது. ஆனால் உண்மையில் அரசு முன்னேற்றத்திற்குத் திட்டமிடாவிட்டால், பொருளாதாரத்தில் எவ்வித வளர்ச்சியையும் எதிர்பார்க்க இயலாது. பொதுவாக இக்கருத்து பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். பத்தாண்டுக் காலத்திற்குள் அரசு மூன்று இரும்பு—எஃகு உருக்குத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தியது. இரயில்வே என்ஜின்கள் தயாரிக்கும் தொழிற்சாலையும், இரயில்வேப் பெட்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலையும், எண்ணெய் சுத்திகரிப்புச் சாலைகளும், இயந்திரங்கள், கருவிகள் ஆகியவற்றை உற்பத்திச் செய்யும் தொழிற்சாலைகளும், பெரிய மின்சார உற்பத்தி நிலையங்களும், அணுச்சக்தி நிலையங்களும் குறுகிய காலத்தில் பொதுத்துறையில் தொடங்கப்பட்டன. பொதுத்துறை எந்த அளவிற்கு நன்மையைத் தந்துள்ளது என்பதை இதன் மூலம் அறியலாம். போக்குவரத்து, செய்தித் தொடர்பு வசதிகளால் நாட்டின் பின்தங்கிய பகுதிகள் முன்னேற்றத்தைப் பெற்றுள்ளன. நாட்டைத் தொழில் மயமாக்கவும் இது உதவியுள்ளது. பொதுத்துறைத் தொழில்களின் முன்னேற்றத்தால் தனியார்துறைத் தொழில்களும் வளர்ந்துள்ளன. இக்கருத்தைப் பலரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

கலப்புப் பொருளாதாரத்தின் வெற்றி, முன்னேற்றத்தினால் பெறப்பட்ட நன்மைகளைச் சிறப்பாகப் பங்கீடு செய்வதிலும் அடங்கியுள்ளது. தனியார்துறையின் விரைவான வளர்ச்சி ஒரு சிலரிடம் அதிக வருவாயையும், செல்வத்தையும் குவிக்கின்றது. உற்பத்திச்

சாதனங்களை அரசுடைமையாக்கிவிட்டால், ஒரு சிலர் அதிக வருவாயையும் செல்வத்தையும் பெறமுடியாது. வருவாயில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. ஆயினும் இந்தியாவின் சமதர்ம முறை இதுவரை குறைந்த வருவாய் பெறுபவர்களின் நிலையை உயர்த்தவில்லை. இதைக் கலப்புப் பொருளாதார முறையின் குறையென்று கூற முடியாது. இந்தியாவில் நிதிக் கொள்கையின் தோல்வியே வருவாயில் உள்ள அதிக ஏற்றத்தாழ்வுகளுக்கு முக்கியக் காரணமாகும்.

இறுதியாக, இந்தியாவில் கலப்புப் பொருளாதாரம் பொருத்த முடையதாக இருந்தால், நாட்டின் உற்பத்தித்திறன் பெருகும் வகையில் மக்கள் ஊக்கத்தோடு உழைப்பவர்களாக இருக்க வேண்டும். கடந்த 15 ஆண்டுகளில் அரசின் செலவினங்கள் அதிகரித்தமையால் மக்களின் பணவருவாய் கூடியது. இதனுல் பல பொருட்களின் தேவையும் அதிகரித்தது. தனியார்துறை விரிவடைந்தமைக்கு இத் தேவைப்பெருக்கம் முக்கியக்காரணமாக அமைந்தது. வேளாண்மைப் பொருட்களின் விலையுயர்வால் விவசாயிகள் ஊக்கம் பெற்ருர்கள்; கூலியுயர்வால் உழைப்பாளர்கள் அதிக ஊக்கம் அடைந்தார்கள். பொதுக் கல்வியும் தொழில் நுட்பக் கல்வியும் பரவலாயின. மக்களும் விருப்பத்தோடு கல்வியறிவு பெற்றனர். இவற்றின்மூலம் இந்தியாவின் கலப்புப் பொருளாதாரம் உற்பத்தித்திறனை உயர்த்த உதவியுள்ளது என்பதை உணரலாம்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிலைகளினின்றும் கலப்புப் பொருளாதாரம் இந்தியாவிற்குப் பொருத்தமுடையது என்பதை இனிதுணரலாம். கலப்புப் பொருளாதாரத்தில் தனியார்துறையும் இயங்க அனுமதிக்கப்படுகின்றது. ஆனுல் தனியார்துறையின் சமூக விரோதச் செயல்கள் அரசால் கட்டுப்படுத்தப்படுகின்றன. தனியார் துறையை அரசு மேற்பார்வையிடுகின்றது; ஒழுங்குபடுத்தப் பல கட்டுப்பாடுகளையும் விதிக்கின்றது. இதன் மூலம் விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப் பெற இயலும். ஆனுல் அதிக அளவு முதலீட்டைத் தனியார்துறை மட்டும் செய்துவிட முடியாது. எனவே நாட்டைத் தொழில் மயமாக்குவதில் அரசும் முக்கியப் பங்கேற்க வேண்டும்.

நிறைவுரை

இந்தியாவில் கலப்புப் பொருளாதாரம் பின்பற்றப்படுவதால் பலவித நன்மைகளும் பெறப்படுகின்றன. இவை முதலாளித்துவ, பொதுவுடைமை முறைகளில் அமைந்துள்ள நன்மைகளாகும்.

இன்றும் நம் நாட்டில் தனியார்துறை செல்வாக்குக் கொண்ட தாகவே இருக்கின்றது. அரசு முழுமையான கட்டுப்பாடுகளை தனியார் துறையின்மீது விதிக்கவில்லை என்றே கூறவேண்டும். ஆனால் தனியார்துறை முன்னேற்றம் அரசின் நடவடிக்கைகளுக்கு ஏற்பவே அமைகின்றது. தனியார் தொழில்கள் அரசால் நேர்முக மாகவும், மறைமுகமாகவும் கட்டுப்படுத்தப்படுகின்றன. அதே சமயத்தில், தொடர்ச்சியாகப் பொதுத்துறைத் தொழில்களும் விரைவாக வளர்க்கப்பெறுகின்றன. இவ்வாறு இரு துறைகளின் வளர்ச்சியும் தொடர்ந்து நீடித்தல், பொருளாதார முன்னேற்றத் திற்குப் பல வகைகளிலும் உதவுமெனலாம்.

இந்தியா போன்ற வளர்ச்சிக் குன்றிய நாடுகளில், உற்பத்திச் சாதனங்களை நாட்டுடைமையாக்குவதில் தீவிரப் போக்குக் காணப் படுகின்றது. தனியார் துறையைவிட பொதுத் துறையை விரிவடையச் செய்வதால், பெரும்பகுதி மக்கட் தொகையின் நலனைக் காக்க முடியும். தனியார்துறையை ஒரு குறிப்பிட்ட நிலை வரைதான் வளர அனுமதிக்கலாம். சமதர்மச் சமுதாயம் அமைய வேண்டுமென்றால், பொருளாதார முன்னேற்றத்தில் அரசின் பங்கு அதிகரிக்க வேண்டும். பொதுத்துறை சிறப்பாக வளர்க்கப்படுதல் இன்றியமையாதது. தனியார் துறையை முற்றிலும் நீக்குவது விரும்பத்தக்கதல்ல. பொதுத்துறையோடு தனியார் துறையும் இயங்க ஓரளவு அனுமதிக்கப்பட வேண்டும்.

கலப்புப் பொருளாதாரத்தின் மூலம் நாட்டு மக்களின் நலன்கள் பெருக்கப்பட வேண்டும். தற்பொழுதுள்ள பொருளாதாரச் சூழ் நிலைகளில், முன்னேற்றத்தைப் பெற கலப்புப் பொருளாதார முறையே ஏற்றதாகும். தனியார் துறை அனுபவம் பெற்று முதிர்ச்சி யடைந்த துறையாக இருக்கின்றது. எனவே, தனியார்துறையின் பணிகளை அரசு நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தனியார்துறையை முற்றிலுமாக நீக்குவது முன்னேற்றத்திற்குத் தடையாக அமையும். நம் நாட்டில் கூட்டுறவுத் துறையை வளர்ப்ப தாலும் பல நன்மைகளைப் பெற முடியும். கூட்டுறவுத் துறையின் வளர்ச்சி குறைந்த வேகத்திலேயே ஏற்படுகின்றமைக்கு நிதிப்பற்றுக் குறையும் ஒரு காரணமாகும். பொதுத்துறை முன்னேற்றத்தைப் பெறுவதற்கான மூலதனத்தையும் அரசு பல கடின நிலைகளுக் கிடையே திரட்டுகின்றது. இந்தியா விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப் பெற முடியாமைக்கான அடிப்படைக் காரணம் மூலதனப் பற்றுக்குறையேயாகும்.

தனியார்துறையை அதிக அளவில் அனுமதிப்பது சமுதாய நலனைப் பாதிக்கும். புதுமையான வழியில் பொருளாதார

முன்னேற்றத்தைப்பெற கலப்புப்பொருளாதார முறை உதவுகின்றது. இந்தியாவில் திட்டக்குழு அரசின் சமதர்மக் கொள்கைக்கேற்ப, கலப்புப் பொருளாதார முறையில் திட்டங்களைத் தீட்டுகின்றது. 1951ஆம் ஆண்டின் 'தொழில்களின் வளர்ச்சி, ஒழுங்கு படுத்துதல் சட்டம்' தனியார்துறை தொழிற் பொருளாதாரத்தைப் பெரிதும் கட்டுப்படுத்தியது. இச் சட்டத்தில் தேவையான மாற்றங்கள் 1953, 1956ஆம் ஆண்டுகளில் கொண்டுவரப்பட்டன.

உலகின் வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் பல உற்பத்திச் சாதனங்கள் அனைத்தையும் பொதுவுடைமையாக்க விரும்பவில்லை. ஆகவே இந்நாடுகளில் கலப்புப் பொருளாதார முறையே கைக் கொள்ளப்பட்டுள்ளது. சமதர்ம நாடுகளில் தனியார்துறை முழுமை யாக நீக்கப்படுவதில்லை. இந்நாடுகளில் அரசு தனியார்துறையைக் கட்டுப்படுத்தி, நெறிப்படுத்துகின்றது. கலப்புப் பொருளாதாரத்தில் திட்டமிடுவது எளிதாக இருக்கின்றது. இம்முறையில் முன்னேற் றத்தைப் பெறும்போது, முதலாளித்துவ, பொதுவுடைமை முறைகளில் அமைந்துள்ள நன்மைகள் பெறப்படுகின்றன. தனியார்துறையில் தொழில் முயல்வோர் ஊக்கத்தோடு முதலீடு செய்கின்றனர்கள். அவர்கள் அதிக அளவில் தொழிலாளர்களைச் சுரண்ட முடியாது; கொள்ளை இலாபத்தைப் பெறுவதும் இயலாது. தனியார்துறையைக் கட்டுப்படுத்துவதின் மூலம், முதலீட்டாளர் களின் பணிகளை அரசு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். திட்டங்களை நிறைவேற்றுவதில் உள்ள கடின நிலைகளும் தவிர்க்கப்படுகின்றன.

வளர்ச்சியடைந்துவரும் இந்தியா போன்ற நாடுகளில், திட்ட மிட்டுப் பொருளாதார முன்னேற்றத்தைப்பெற கலப்புப் பொருளா தாரக் கொள்கையைப் பின்பற்றுவது மிகவும் இன்றியமையாதது. இந் நாடுகளில் மூலதனப் பற்றுக்குறை இருக்கின்றது. தொழில் அமைப்புக்கள் சிறப்பு நிலையைக் கொண்டிருப்பதில்லை. தொழில் நுட்ப உற்பத்தி முறைகள் சிறப்பாக வளர்ந்திருப்பதில்லை. இந்நிலையில் உற்பத்திச் சாதனங்கள் அனைத்தையும் நாட்டுடைமை யாக்குதல் நன்மை தராது. பொதுத்துறை நிறுவனங்களின் நிர்வாகம் சிறப்பாக அமைவதில்லை. எனவே பொதுத்துறையோடு தனியார் துறையும் இயங்க அனுமதிக்கப்பட வேண்டும். இந்தியா இயற்கை வளங்களை மிகுதியாகக்கொண்ட நாடாக இருக்கின்றது. உற்பத்தி யைப் பெருக்குவதற்கான உழைப்பின் அளிப்பும் மிகுதியாக உள்ளது. இவ்வளங்களை உற்பத்தியை உயர்த்தும் வகையில் பயன்படுத்த கலப்புப் பொருளாதாரம் உதவுகின்றது.

இந்தியாவின் கலப்புப் பொருளாதாரக் கொள்கை, அமெரிக்க முதலாளித்துவப் பொருளாதாரத்தின் நன்மைகளையும், ரஷ்யப் பொதுவுடைமைப் பொருளாதாரத்தின் நன்மைகளையும் கொண்டுள்ளது. பொதுவுடைமையின் நன்மைகளும், முதலாளித்துவத்தின் நன்மைகளும் கலப்புப் பொருளாதார முறையில் ஒருங்கே பெறப் படுகின்றன. தனி மனிதனுடைய அடிப்படை உரிமைகள் காக்கப் படுகின்றன. பல நிலைகளில் பொருளாதார நடவடிக்கைகள் அரசால் கட்டுப்படுத்தப் பெறுகின்றன. தனியார்துறையில் மேலும் சில கட்டுப்பாடுகளை விதித்து, பொதுத்துறை சிறப்பாக இயக்கப் பட்டால் கலப்புப் பொருளாதார முறையின் எல்லா நன்மைகளையும் பெற முடியும். சமதர்ம முறை பின்பற்றப்படுகின்ற நம் நாட்டில் இன்றும் தனியார்துறையே முக்கிய நிலையைக் கொண்டிருக்கின்றது. இதனால் வருவாயிலும், செல்வப்பங்கீட்டிலும் மிகுதியான வேறுபாடுகள் காணப்படுகின்றன. இந்நிலையை நீக்க அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு பொதுத்துறையை விரிவாக்குவது அவசியமானது. இந்தியாவின் கலப்புப் பொருளாதாரக் கொள்கை விரைவான முன்னேற்றத்தைப் பெறுவதற்கான அடிப்படையை ஏற்படுத்தித் தந்துள்ளது.

30. நலம் காக்கும் அரசு

(Welfare State)

இன்றைய அரசுகள் நலங்காக்கும் அரசுகளாக இருக்கின்றன. மக்கள் நலனைப் பெருக்குகின்ற அரசை உண்டாக்குவதே உலக நாடுகளின் முக்கியமான அரசியல் குறிக்கோள் ஆகும். இதற்கு இந்தியாவும் விதிவிலக்கல்ல. நலம் காக்கும் அரசின் தன்மைகள், நோக்கங்கள், முக்கியத்துவம் ஆகியவைபற்றி அறிவது அவசியமாகும்.

நலம் காக்கும் அரசு என்பதின் விளக்கம்

நலம் காக்கும் அரசின் இரு கோட்பாடுகளையும் தெளிவாக வேறுபடுத்திக் கூறலாம். கல்வி, ஆரோக்கியம், வேலையின்மைக் கால நன்மைகள், வயோதி கால உதவித் தொகை ஆகிய பல்வேறுபட்ட சமுதாய நலன்களை மேலை நாடுகளின் அரசுகள் அளித்து வருகின்றன. மக்களுக்கு, அதிலும் குறிப்பாக வேலை செய்யும் பிரிவுக்கும், கடைநிலை ஊதியம் பெறும் பிரிவுக்கும் நலம் காக்கும் அரசு பொருளாதாரப் பாதுகாப்பைத் தேடித் தருவதில் ஈடுபடுகிறது எனக் கூறலாம். இக் கோட்பாட்டின்படி ஒவ்வொரு தொழிலாளியும் பின்வரும் மூன்று நிலையில்லாத் தன்மைகளால் பாதிக்கப்படுகின்றான். அவையாவன:

1. உடல் நலக்குறைவு ஏற்படும் காலத்தில் ஊதிய இழப்பு.
2. வேலையின்மை.
3. வேலை செய்யமுடியாத வயோதிக நிலை.

மேற்சொன்ன காரணங்களில் ஏதாவது ஒன்றினால் தமக்கும், தங்களது குடும்பத்திற்கும் போதிய வருமானம் பெற முடியாத

மக்களுக்கு நலம் காக்கும் அரசு நிலையான வார வருமானத்தையோ அல்லது மாத வருமானத்தையோ உறுதி அளிக்கிறது. விபத்துக்கு எதிரான காப்புறுதி, உடல்நலக் குறைவுக்கான உதவித் தொகை, வேலையின்மை உதவித் தொகை, வயோதிகக்கால உதவித் தொகை ஆகியவை சமுதாயக் காப்புறுதிகளாக அளிக்கப்படுகின்றன.

மிக்க வறுமையால் வாடுபவர்களுக்கும், மேற்குறிப்பிட்ட மூன்றுவித உதவிகளையும் பெற முடியாதவர்களுக்கும் நலம் காக்கும் அரசு இத்தகைய சாதாரண சமுதாயப் பணிகளைத் தவிர, தேசிய உதவியையும் அளிக்கலாம். மேலும் நலம் காக்கும் அரசு இலவச மருத்துவ வசதியும் அளிக்கிறது. ஊழியர்கள் உடல்நலக் குறைவு ஏற்படும் காலத்தில் ஊதியத்தை இழக்கின்றனர்கள். இந்நிலையில் ஊழியர்களுக்கு அரசு உதவுகின்றது. இறுதியாக குழந்தைகள் மீதும் நலம் காக்கும் அரசு தனிக் கவனம் செலுத்துகிறது. கல்வி கட்டாயமாகப் போதிக்கப்படுகிறது. குறிப்பிட்ட நிலை வரை இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. சில காலங்களில் பெற்றோர்களுக்கு அவர்களது குழந்தைகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு உதவித் தொகை கொடுக்கிறது.

மேற்கு ஐரோப்பா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, கனடா ஆகிய நாடுகளிலும் இத்தகைய நலம் காக்கும் அரசு அமைந்துள்ளது. இந்தியாவிலும், மற்ற முன்னேற்றமடைந்து வரும் நாடுகளில் உள்ள நலம் காக்கும் அரசின் கொள்கை மேலை நாடுகளிலுள்ள கொள்கையினின்றும் வேறுபட்டது. இந்தியாவில் இக்கொள்கை பரவிய கருத்து உடையது. மேலும் குறிப்பிட்ட பொதுநலப் பணிகளைத் தவிர வேறு சில நடவடிக்கைகளிலும் அரசு ஈடுபடுகிறது. கிராம முன்னேற்றம், தொழிலாளர் நல முன்னேற்றம், வருவாயிலுள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்தல், பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் ஆகியவை அரசின் கடமைகளாகும். இந்தியாவும், பிற பின்தங்கிய நாடுகளும் பொருளாதார மேம்பாட்டை அடைவதில் முழு முயற்சியுடன் ஈடுபட்டுள்ளன. ஆனால் விரைவான பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான சூழ்நிலைகள் இந்நாடுகளில் உருவாகவில்லை. பொருளாதார முன்னேற்றத்திற்காகச் செயல்படும் அரசை மக்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். இந்தியாவில் பெரும்பாலான மக்கள் வறுமை நிலையில் இருப்பதால் அவர்களுக்கு அரசு உதவி செய்கின்றது.

கோட்பாட்டின் பரிணாமம் (Evolution of oncept)

பத்தொன்பது, இருபதாம் நூற்றாண்டுகளில் உலகின் பல நாடுகள் தொழில் முன்னேற்றத்தைப் பெற்ற போது அசாதாரண

சூழ்நிலைகள் உருவாயின. அவற்றின் விளைவால் நலம் காக்கும் அரசு ஏற்பட்டது. அரசு எப்போதுமே மக்களின் நலம் காப்பதில் அதிக ஊக்கம் கொண்டிருக்கிறது.

பதினெட்டாம் நூற்றுண்டின் இறுதிவரை ஐரோப்பிய நாடுகள் மக்கள் நலம் காப்பதில் தங்களுக்குப் பொறுப்பு உண்டு என உணர்ந்திருந்தன. பத்தொன்பதாம் நூற்றுண்டில்தான் நலம் காப்பதில் மக்களுக்கே அதிக பொறுப்பு உண்டு என அரசு அறிந்து கொண்டது. போதுமான சுதந்திரம் அளிக்கப்பட்டால் முதலாளித்துவ பொருளாதாரம் உற்பத்தியை அதிகமாக்குகிறது என்பது வலியுறுத்தப்படுகிறது. இதனுல் சமுதாய, பொருளாதார நிலையும் உயர்த்தப்படுகிறது. இங்கிலாந்தில் 19ஆம் நூற்றுண்டில் முதலாளித்துவம் நிலையாக்கப்பட்டபின் உற்பத்தி அதிகமாகியது என்ற உண்மையை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். இரு பிரிவுகளுக்கு இடையேயான வேறுபாடான வருமானம், தொழில் துறையின் ஏற்றத்தாழ்வுகள் ஆகியவை நீக்கப்பட வேண்டிய நிலையைக் கொண்டுள்ளன. மேலை நாடுகளில் தொழில் வளர்ச்சி ஏற்படும் காலத்திலேயே இவ்வளர்ச்சிக்கு இணையாக சமூக நீதியை உருவாக்க முயற்சி செய்யப்படுகிறது. ஆனுல் இந்த நோக்கத்திற்குத் தேவையான சிறப்பான நடவடிக்கைகள் எடுக்கப் படுவதில்லை.

19ஆம் நூற்றுண்டில் சமூகநீதி என்னும் இலக்கை நோக்கிக் குறைந்த வேகத்திலேயே முன்னேறினர். எனினும் ஏழைகளின் வாழ்க்கைத் தரம் உயர்த்தும் பணி குறைவின்றி நிறைவேற்றப் பட்டது. 19ஆம் நூற்றுண்டின் இறுதியில் பிஸ்மார்க் (Bismark) தலைமையின் கீழ் சமூக நீதி என்ற திட்டம் ஜெர்மனியில் புகுத்தப் பட்டது. இப்போது உலகிலுள்ள எல்லாத் திட்டங்களுக்கும் இத் திட்டமே அடிப்படையாக அமைந்துள்ளது. மேலை நாடுகளும் உடல் நலிவுக்காலக் காப்புறுதி, வயோதிக கால உதவித் தொகை, வேலையின்மைக் காலக் காப்புறுதி போன்ற பல திட்டங்களை பின் பற்றத் தொடங்கின. மக்கள் கவனத்தைப் பெயரளவில் ஈர்க்கக் கூடிய இரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் 19ஆம் நூற்றுண்டில் தோன்றின. அவை 1917ஆம் ஆண்டின் ரஷ்யப் புரட்சியும், 1929 ஆம் ஆண்டு முதல் 1933ஆம் ஆண்டு வரையானப் பொருளாதாரப் பெருமந்தமும் ஆகும். ரஷ்யப்புரட்சி தொழிலாளர்களாலும், விவசாயி களாலும் மேற்கொள்ளப்பட்டது. இதன் வெற்றியால் விளைந்ததே தொழிலாளர்களின் அரசு ஆகும். சமூக நீதியை நிலைப்படுத்துவதின் மூலமும், வருமான ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதின் மூலமும் தொழிலாளித்துவம் பரவுவதைக் கட்டுப்படுத்த முடியும் என்று

முன்னேற்றமடைந்த நாடுகள் கருதுகின்றன. ஆனால் இதற்கு மாறாக முன்னேற்றமடைந்துவரும் நாடுகள் ரஷ்யாவைப் பின்பற்றி பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்த நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

வேறொரு வகையான புரட்சிக்கு வழிகாட்டியாகப் பொருளாதாரப் பெருமந்தம் அமைந்தது. அது முதலாளித்துவம் என்ற தவறான தத்துவத்தின் மீதான நம்பிக்கையை இழக்கச் செய்தது. முதலாளித்துவப் பொருளாதாரம் தொழில் நுட்ப முன்னேற்றத்தைப் பயன்படுத்துவதின் மூலம் நிறைவான உற்பத்தியையும், மக்களின் பொதுவாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதையும் சிறப்பாகச் செய்ய இயலாது. இந்த உண்மையைப் பொருளாதாரப் பெருமந்தம் உணர்த்தியது. முதலாளித்துவம் சரியானது என்று மிகுந்த அளவில் சொல்லப்பட்டது. எனினும் இந்த முறை தவறானது என்று பொருளாதார மந்தநிலை அறிவுறுத்தியது. தொழிற்சாலைகள் பல மூடப்பட்டன. இலட்சக்கணக்கானவர்கள் வேலையின்மையால் பாதிக்கப்பட்டனர். முதலாளிகள் உற்பத்தி செய்வதை நிறுத்தி விட்டார்கள்; அதிக அளவு உற்பத்தியே இதற்குக் காரணம் என்று அவர்கள் கூறினர். உற்பத்தியைக் குறைக்க வேண்டும் என்று ஒப்பந்தங்கள் செய்து கொண்டார்கள்; சில காலங்களில் உற்பத்தியில் அதிக அளவான பொருட்களை அழிக்கவும் செய்தனர்.

பொருளாதாரத்தில் உள்ள சிக்கல்களை முதலாளித்துவ முறை தீர்க்க முடியாது என அதற்குப் பிறகுதான் உணரப்பட்டது. உண்மையான சிக்கல் உற்பத்தியில் இல்லை, பகிர்வில்தான் உள்ளது எனவும் அறியப்பட்டது. உற்பத்தித்திறன் குறைந்துவிடும் என்ற அச்சமும், சமுதாய நலன் பாதிக்கப்படும் என்ற அச்சமும் இல்லாமல் சீரமைப்புச் செய்யலாம் எனவும் உணரப்பட்டது. எல்லோருக்கும் வேலை அளிக்கவும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், சமதர்மக் குடியரசுத் தேவையானது எனத் தெரிந்து கொள்ளப்பட்டது. பெருமந்தம் எண்ணங்களில் மாற்றத்தை உண்டாக்கியது. பல்வேறு நாடுகளில் இந்த மாற்றங்கள் படிப் படியாகச் செயலாக்கப்பட்டன. ஆனால் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகுதான் சமூகநலப் பணிகள் துரிதமாகப் பரப்பப் பட்டன.

நவீனகால நலம் காக்கும் அரசு தனித்தன்மை வாய்ந்தது. பல நாடுகளில் நலம் காக்கும் வசதிகள் பேரளவில் அதிகமாக்கப் பட்டுள்ளன. நவீனகால அரசு தனித்தன்மை வாய்ந்த நலம் காக்கும் அரசு எனக் கூறலாம். நலம் காக்கும் அரசு தோன்று வதற்கு நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ பொருளா

தார நிபுணர்களும், அரசியல்வாதிகளும் காரணமாக அமைந்தார்கள். கார்ல்மார்க்ஸ் ஓர் பொருளாதார நிபுணர். அவர் முதலாளித்துவப் பொருளாதாரத்திலுள்ள குறைபாடுகளைச் சிறப்பாக விளக்கினார். இத்தகையப் பொருளாதாரத்தை வேறொரு முறையின் மூலம் மாற்ற வேண்டும் எனவும் கூறினார். பின்பு மார்ஷல், பிகோ, கீன்ஸ், பெர்க்ஸன் போன்றவர்களின் அறிவியல் தத்துவ விளக்கத்தின் அடிப்படையில் நலம் காக்கும் அரசு வளர்ச்சியுற்றது.

நலம் காக்கும் அரசும், பொருளாதார முறைகளும் (The Welfare State and Economic Systems)

சமத்துவம், நீதி ஆகிய இவ்விரண்டும் சமதர்மத்தின் கருத்துகள். இந்த கருத்துகளை ஆதாரமாகக் கொண்டு நலம் காக்கும் அரசின் கோட்பாடு வளர்ந்தது. எனினும் பெருவாரியான முதலாளித்துவப் பொருளாதாரங்களுக்கும் இது பொருந்தும். தற்சமயம் ஐக்கிய அமெரிக்க நாட்டில் சமுதாயக் காப்பீடு என்னும், விரிவானத் திட்டம் உள்ளது. அதனை நலம் காக்கும் அரசின் பணிகளில் ஒன்றாகக் கூறலாம். அமெரிக்க ஐக்கிய நாட்டை நலம் காக்கும் அரசு எனக் கருதலாம். ஏனெனில் அமெரிக்க அரசு தனது நாட்டு மக்களுக்கு அதிக அளவில் சமூகப் பணிகளை அளித்து வருகிறது. அப்பணிகளாவன—கல்வி, வயோதிக்கால காப்புறுதி, வேலையின்மைக்கால ஊதியம், பொது உதவி முதலியனவாகும். ஐக்கிய நாடுகளில் முதலாளித்துவப் பொருளாதாரம் கடைபிடிக்கப்படுகிறது. எனவே அங்கு ஊதிய வேறுபாடு அதிக அளவில் காணப்படுகிறது. ஆனால் பிரிட்டனில் ஊதிய வேறுபாடு அதிக அளவில் கிடையாது. இந்நாட்டை நலம் காக்கும் அரசின் நல்ல உதாரணமாகக் கொள்ளலாம். அதே சமயத்தில் ஒரு சமதர்ம அரசு தானாகவே நலம் காக்கும் அரசாக மாறமுடியாது. உதாரணமாக ரஷ்ய அரசு பல முக்கிய சமூகப் பணிகளை அளிக்கிறது என்றாலும், அதை நலம் காக்கும் அரசு எனச் சொல்ல முடியாது. இங்கிலாந்திலுள்ளது போலன்றி எந்த ஒரு தனி மனிதனும் சமூக வசதிகளை உரிமையுடன் ரஷ்யாவில் அனுபவிக்க முடியாது. எனவே ரஷ்யாவை நலம் காக்கும் அரசு எனக் கூற இயலாது. மேலும் அங்கு வேலையின்மைக் கால வசதிகள் அளிக்கப்படுவது இல்லை. அரசு எண்ணினால் எந்த ரஷ்யத் தொழிலாளியையும் எவ்விடத்திற்கும் வேலைக்கு அனுப்ப முடியும். தவிர அத் தொழிலாளியை விருப்பமில்லாத நிலைகளிலும் வேலை செய்யக் கட்டாயப்படுத்த இயலும்.

முதலாளித்துவப் பொருளாதாரமும், சமதர்மப் பொருளாதாரமும் வெவ்வேறு வகைப்பட்ட அரசியல் அமைப்புகள். ஆனால்

நலம் காக்கும் அரசு என்பது இதிலிருந்து வேறுபட்டது. மக்களுக்கு அரசு செய்யும் பணிகளின் வகைபற்றி நலம் காக்கும் அரசு குறிப்பிடுகிறது. ஒரு அரசு இத்தகைய பணிகள் முதலாளித்துவ, சமதர்ம அல்லது கலப்புப் பொருளாதார முறைகளில் அளிக்க முடியும். எல்லா நாடுகளும் நலம்காக்கும் அரசுகளாகவே உள்ளன. ஆனால் நலம் காக்கும் தரத்தில் இந்நாடுகளுக்கிடையே வேறுபாடுகள் இருக்கின்றன.

நலம் காக்கும் அரசின் அடிப்படை நோக்கங்கள்:

தற்கால நலம் காக்கும் அரசு சில குறிப்பிட்ட அடைப்படை விருப்பங்களை நிறைவேற்றுகின்றது.

(1) முதல் நோக்கமாக, நலம் காக்கும் அரசு தனது மக்களுக்கு அவசியமான வசதிகளையாவது அளிப்பதில் நாட்டம் கொண்டுள்ளது. தொழில் மயமாக்கப்படுவதில் விளைவாக வறுமை, உறுதியின்மை, பாதுகாப்பின்மை ஆகியவை ஏற்படுகின்றன. சில சமயங்களில் தொழிலாளர்களும், அவர்களது குடும்பங்களும் துன்பத்திற்கு ஆளாகுகின்றனர். சமூகக் காப்புறுதித் திட்டங்கள் மக்களின் வறுமையை நீக்க உதவுகின்றன.

(2) இரண்டாவதாக, மக்களிடையே வருவாயைச் சம அளவில் பகிர்ந்தளிப்பதைத் தனது லட்சியமாக நலம் காக்கும் அரசு கொண்டுள்ளது. செல்வந்தர்களிடமிருந்து ஏழைகளுக்கு வருமானத்தை மாற்றியளித்தல் நன்மைதரும். இதனை நிறைவேற்ற செல்வந்தர்கள்மீது அதிக வரி விதிக்கும் கொள்கையை அரசு மேற்கொள்ள வேண்டும். இந்த வரி விதிப்பினால் கிடைக்கும் வரி வருமானம் ஏழைகளின் நன்மைக்காகச் செலவிடப்பட வேண்டும். குறைந்த வாடகை வீட்டு வசதி, இலவசக் கல்வி போன்ற சமூக நலன்கள் அளிக்கப்பட வேண்டும். இவற்றின் விளைவாக ஏழைகளின் வாங்கும் திறன் அதிகரிக்கின்றது. உடல்நலக் குறைவுக் காலப் பண உதவிகள், விபத்துகளுக்கான உதவித் தொகைகள், வயோதிகக் காலக் காப்புறுதி, வேலையின்மைக் கால ஊதியம் ஆகியவை நேரடியாக ஏழைகளின் வருமானத்தை உயர்த்துகின்றன.

சமூகப் பணிகளை அளிப்பதின் மூலம் பணக்காரர்களிடமுள்ள அதிகப்படியான செல்வத்தை ஏழைகளுக்கு மாற்றிப் பகிர்ந்து கொடுக்க இயலாது என்பதை மனதில் கொள்ள வேண்டும். பல்தரப்பட்ட சமூகக் காப்புறுதித் திட்டங்கள் செயல்படுகின்றன. இந்தத் திட்டங்களை உருவாக்கத் தேவையான செலவினங்களை

பெரும்பாலும் வருவாய்க் குறைந்தவர்களே சுமக்க வேண்டி உள்ளது. ஆனால் முதலாளிகளும் தங்கள் பங்கை செலுத்து கின்றனர். இலவசக் கல்வி, வீட்டு வசதிகள், இலவச மருத்துவச் சலுகைகள் போன்ற பலதரப்பட்ட சமூகப் பணிகள் அதிகமாக்கப் படும்போது,வரிச்சுமையும் கூடுகிறது. வரிச்சுமையை சமுதாயத்தின் உயர்ந்த நிலையிலுள்ள மேட்டுக்குடியினர் அதிகப்படியாக ஏற்கும் படி செய்ய வேண்டும். சமூகப் பணிகளுக்குத் தேவையான நிதியை வரி கொடுப்போர் அளிக்க வேண்டிய நிலை ஏற்படும்போது, வாங்கும் திறனானது சமுதாயத்தில் ஒரு பிரிவிடமிருந்து மற்றொரு பிரிவிற்கு மாற்றப்படுகின்றது. கென்ட் (Kent) கூறுவதுபடி, 'வருவாய்ப் பெயர்ச்சி செல்வந்தர்களிடமிருந்து ஏழைகளுக்கும் வியாபாரிகளிடமிருந்து உழவர்களுக்கும் இடையே ஏற்படுகின்றது.'

(3) மூன்றாவதாக, நலம் காக்கும் அரசு உற்பத்தித்திறனை அதிகமாக்குவதைத் தனது கொள்கையாகக் கொள்கிறது. அரசிற்கும், உற்பத்திக்கும் தொடர்பில்லை என்பது மேலைநாடுகளில் நிலவும் கருத்தாகும். இதற்குத் தனிக் காரணம் ஒன்று உண்டு. உற்பத்தியை அதிகமாக்க முதலாளித்துவ முறையைத் திறமையுடன் செயல்படுத்த வேண்டும் என்று இங்கிலாந்திலும், மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் உள்ள மக்கள் நம்புகிறார்கள். பகிர்வைச் சீர்படுத்துவது, பொருளாதாரத்தின் பின் தங்கியுள்ள மக்கள் பிரிவுக்கு உதவி செய்தல், தங்களது நிலையை உதிர்த்திக் கொள்ள முடியாதவர்களுக்கு உதவுதல் போன்றவை முதலாளித் துவத்தில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட வேண்டும். அதிக உற்பத்தி இல்லாமல் வறுமையை ஒழிக்க முடியாது. உண்மையாக, பகிர்வைவிட உற்பத்தியே மிக முக்கியமானதாகும். பொருளாதார நலத்தை அதிகமாக்க, உற்பத்தியையும் சமூகப் பணிகளையும் துரிதமாகப் பெருக்கவேண்டும். பொருள்களை நல்ல முறையில் பகிர்வதின் மூலம் மட்டும் மக்கள் நலத்தைக் காக்க முடியாது. நீர்ப்பாசனம். நல்விதைகள், இரசாயன உரங்கள், கடன் வசதிகள், விற்பனை வசதிகள் ஆகியவற்றை அளிப்பதின் மூலம் வேளாண்மை உற்பத்தி உயர்வடைகின்றது. ஆகவே இத்தகைய வசதிகளைப் பெருக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை நலம் காக்கும் அரசு மேற்கொள்கிறது. குறைந்த வட்டிக்குக்கடன் வசதியளித்தல், உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் விற்பதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்துதல், தொழில் நுட்ப உற்பத்தி முறைகளைப் புகுத்துதல் போன்ற பல நன்மைகளை அரசு செய்யலாம். இந் நடவடிக்கைகளால் சிறு தொழில்களும், குடிசைத் தொழில்களும் வளம் பெறுகின்றன. அரசு பேரளவுத் தொழில்களின் வளர்ச்சிக்கும் உதவி செய்ய முடியும். இதற்காக அரசு நிதி உதவி அளிக்கும்

நிறுவனங்களை ஏற்படுத்தவேண்டும். பொதுவாகத் தொழில்கள் துரிதமாக வளர்ச்சியுறத் தேவையானச் சாதகமான நிலைகளை உண்டாக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக அரசு பொருளாதார, சமுதாய முன்னேற்றத்திற்கான அவசியச் செலவு களைச் செய்யவேண்டும். இந்தச் செலவினங்கள் இல்லாமல் பொருளாதார வளர்ச்சி தடைப்பட்டுவிடும். மின்சார உற்பத்தி, போக்குவரத்து, செய்தித் தொடர்பு, கல்வி, பொதுச் சுகாதாரம் போன்ற வசதிகளை அரசு பெருக்க வேண்டியது அவசியமான தாகும். இந்தியா போன்ற வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளில் அரசு மேற்கண்ட நடவடிக்கைகளுடன் தொழில் நிறுவனங் களையும் தொடங்குகின்றது. தனியார்துறை தொழில்களுடன் போட்டியிடுவதற்காக இந் நிறுவனங்கள் தொடங்கப்படுவதில்லை.

நலம் காக்கும் அரசின் தேவை நன்கு உணரப்பட்டுள்ளது. வளர்ச்சியடையாத நாடுகளிலும், வளர்ச்சியடைந்துவரும் நாடு களிலும் இத் தேவை மிகுந்து காணப்படுகிறது. ஏனெனில் இந் நாடு களின் மக்கள் கல்வியறிவற்றவர்களாகவும், வறுமையில் வாடுபவர் களாகவும், துன்பத்தில் திளைப்பவர்களாகவும் உள்ளனர்.

நலம் காக்கும் அரசின் குறிக்கோள்களைப் பின்வருமாறு குறிப்பிடலாம்:

1. உற்பத்தியை உயர்த்துதல்; தொழில் நுட்ப உற்பத்தி முறைகளை குறிப்பிட்ட அளவு வரை பெருக்குதல்,
2. சமத்துவமற்ற நிலையை நீக்குதல்; வருமானத்திலும், செல்வப் பங்கீட்டிலும் உள்ள வேறுபாடுகளைக் குறைத்தல்,
3. மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்; சில இன்றியமையாதத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் அளவிற்காவது மக்களுடைய வருவாயை உயர்த்துதல்.

நலம் காக்கும் அரசைப் பெறுவதில் உள்ள தடைகள்

இங்கிலாந்திலும், பிற நாடுகளிலும் நலம் காக்கும் அரசை ஏற்படுத்தும்போது பல சிக்கல்கள் எழுந்தன. அவற்றைப் பின் வருமாறு விளக்கலாம்:

(i) **அதிக வரி விதிப்பு:** நலம் காக்கும் அரசின் வரி விதிப்பு முறை உயர்வாகவும், பேரளவிலும் இருக்கின்றது. சமூகப் பணிகளுக்குத் தேவையான செலவினங்களுக்கு நிதியைப் பெற வேண்டியது அவசியமாகின்றது. நிதியைத் திரட்டுவதில் வரி

விதிப்பே முக்கியமானதாக உள்ளது. எனவே வரி அதிகரிப்பு தவிர்க்க முடியாதது. உதாரணமாக, இங்கிலாந்தில் போருக்குமுன் நேரடியான சமூகநலச் செலவினங்கள் 300 மில்லியன் பவுன் களாகும். ஆனால் இப்போது இது 2000 மில்லியன் பவுன்களாக உயர்ந்துள்ளது. தற்காலச் செலவினங்களைச் சமமாக இங்கிலாந்திலுள்ள வேலை செய்யும் உறுப்பினர்களின் எண்ணிக்கை யால் வகுத்தால், ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு வருடமும் நலம் காக்கும் பணிகள் சம்பந்தமான வரிகள் மட்டும் 80 பவுன்கள் செலுத்த வேண்டி வருகிறது. ஆனால், கடைநிலை ஊழியர்களின் வருவாய் மிகவும் குறைவானதாகும். ஆகவே அவர்கள்மீது அதிக வரிகளை விதிக்கக்கூடாது. அதன் விளைவாக மற்றவர்கள்மீதான வரிச்சுமை ஓரளவிற்கு அதிகமாக்கப்படுகிறது. இங்கிலாந்தில் சாதாரண திறன் வாய்ந்த தொழிலாளி ஒவ்வொரு பவுனுக்கும் 7 ஷில்லிங்கும் 6 பென்னியும் வரியாகக் கொடுக்க வேண்டி வருகிறது. சம்பாதிக்கும் வருமானத்தில் இது 38 சதவீதமாக உள்ளது. நடுத்தர வகுப்பினருக்கு வரிகள் மேலும் அதிகமானவை. உதாரண மாக வருமானம் ஓராண்டிற்கு 2000 பவுன்களாக இருந்தால் அதில் 50 சதவீதம் வரியாகக் கொடுக்கப்படுகின்றது. மேலும் வருமானம் அதிகரிக்கும்போது, ஒரு பவுனுக்கு 19 ஷில்லிங் 6 பென்னி என்ற வீதத்தில் வரியும் உயர்கிறது. அதிகப்படியாகச் சம்பாதிக்கும் ஒவ்வொரு பவுனும் உண்மையாக 6 பென்னிதான் உண்மை வருமானத்தைத் தருகின்றது. இவ்வாருக நலம் காக்கும் அரசு புதிய வரிகளை விதிப்பதாலும், பழைய வரிகளை உயர்த்துவதாலும் பலவகைப்பட்ட மக்களும் வெவ்வேறு நிலைகளில் பாதிக்கப்படு கின்றனர்கள். வளர்ச்சி அடைந்துவரும் நாடுகளில் இது ஒரு பெரிய சிக்கலாகும். ஏனெனில் இந்நாடுகளில் மக்கள் வரி செலுத்தும் திறனைக் குறைவாகவே கொண்டுள்ளனர். மேலும் வரி விதிப்புக்கு அதிக அளவில் எதிர்ப்பும் இருக்கிறது.

(ii) **உற்பத்தியின் சிக்கல்:** இரண்டாவது சிக்கல் உற்பத்தி சம்பந்தமானது. முதலாவது சிக்கலிலிருந்து உண்டானது இரண்டாவது சிக்கல். நிகழ்கால உற்பத்தியைத் தீர்மானிக்கும் உடனடி விளைவுகளும், பல்லாண்டுகளுக்கானப் பொருளாதார முன்னேற்றத்தைத் தீர்மானிக்கும் நிரந்தர விளைவுகளும் வேறு பட்டவை என்று கென்ட் (Kent) கூறுகிறார்.

முதலாவதாக, அரசு அளிக்கும் சமூகநலப் பணிகள் ஓர் குறைந்த நிலை வாழ்க்கைத் தரத்திற்காவது உறுதியை அளிக் கின்றன. அதனால் மக்களில் சிலர் மிகக் கடினமானச் சூழ்நிலை களில் வேலை செய்வது தவிர்க்கப்படுகிறது. உதாரணமாக,

வேலையிலிருந்து நீக்கப்பட்ட கடைநிலைத் தொழிலாளர்கள் வேலை செய்யவேண்டும் என்று அக்கறை எடுத்துக்கொள்ளமாட்டார்கள். ஏனெனில் அவர்களுக்கு அரசிடமிருந்து சில மாற்று உதவிகள் கிடைக்கின்றன. இதைப்போல் வயோதிகக் காலச் சலுகை சில வயோதிக மக்களை, அவர்கள் வேலை செய்வதற்குத் தகுந்த ஆரோக்கியம் இருந்தாலும், வேலையிலிருந்து ஓய்வு பெறச் செய்யும். இந்தச் சலுகை இல்லாவிடில் வேலை செய்யும் தகுதி இருந்தால் வயோதிகர்கள் ஓய்வு பெருமல் தொடர்ந்து வேலை செய்வார்கள். உடல்நலக் குறைவுக்கால சலுகைகள் மக்களை வேலைக்குச் செல்லவிடாமல் தடுக்கும். அவர்கள் அரசு அளிக்கும் எல்லாவித சமூகநலத் திட்டங்களின் நன்மைகளையும் பெறுவார்கள். ஆனால் உற்பத்தியை உயர்த்துவதற்கான உண்மை உழைப்பை அவர்கள் தரமாட்டார்கள். அதன் விளைவாக, உற்பத்தி அதிக அளவிற்குப் பாதிக்கப்படும்.

இரண்டாவதாக, உயர்ந்த அளவு வரிகள் உற்பத்தியை மிகவும் பாதிக்கின்றன. வருமான வரி அதிகரிக்கும்போது, முதலீடு செய்வதற்கான ஊக்கம் குறைகிறது. அதிக வேலை செய்வதனாலோ, மிக்கப் பொறுப்பு வாய்ந்த பதவிகளை வகிப்பதனாலோ கிடைக்கும் வருமானம் வரி விதிப்பால் குறைக்கப்படுகிறது. வருமானம் உயரும் போது வரி செலுத்த வேண்டியதின் அளவும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. எனவே பலரும் கடினமான உழைப்பைத் தரவும், பொறுப்பான பணிகளை ஆற்றவும் முன்வர மாட்டார்கள். இவ்விரு நிலைகளால் உற்பத்தி அதிக அளவில் உயர் வடைவதில்லை. இதன் விளைவாக, மக்களின் வாழ்க்கைத்தரம் தாழ்வாகவே உள்ளது. ஆனால் உற்பத்தி இழப்பு எந்த அளவிற்கு ஏற்படுகின்றது என்பதை அளவிடுவது கடினமானது. இந்த இழப்பை நலம் காக்கும் பணிகளால் ஏற்படும் நன்மைகளுடன் ஒப்பிடுவதும் எளிதானதல்ல. எனினும் சமுதாய நலப் பணிகளை விரிவுப்படுத்தும்போது, நடைமுறையில் உற்பத்தியின் அதிகரிப்பு தொடர்ந்து நீடித்தது என்பதை பிரிட்டனின் பொருளாதார வரலாறு தெளிவுபடுத்துகிறது. பிரிட்டனில் சராசரித் தலா உற்பத்தித் திறன் உயர்ந்து கொண்டிருக்கிறது. இதற்கு அதிக அளவு முதலீடும், தொழில் நுட்ப வளர்ச்சியும் காரணங்களாக அமைகின்றன. சமூக நல வசதிகள் அளிக்கப்படுவதால் மக்களின் உடல், உள்ளம் ஆகிய இரண்டும் வளர்ச்சியடைகின்றன. இதன் காரணமாகவும் தலா உற்பத்தி உயர்வடைகின்றது என்பதை எவராலும் மறுக்க முடியாது.

சமூக நலப் பணிகளை விரிவுபடுத்துவதால் உற்பத்தி பெரும் அளவு பாதிக்கப்படும் என்று எண்ணினாலும், நீண்டகாலத்

தொழில் முன்னேற்றத்திற்கு நலம் காக்கும் அரசே பெரிதும் உதவுகின்றது. சமூகநலப் பணிகளால் உழைப்பாளர்கள் ஆரோக்கியம் காக்கப்படுகின்றது. இதற்காக அரசு மருத்துவ, சுகாதார வசதிகளைப் பெருக்குகின்றது. உழைப்பாளர்களின் உற்பத்தித் திறன் இதனுல் அதிகரிக்கின்றது. திறமை மிக்க உழைப்பாளர்களாக அவர்கள் மாறுகின்றுர்கள். உற்பத்தித் தொழில் நுணுக்கங்களை எளிதில் கற்றுணர்கிருர்கள். விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், கணக்கு வழக்கு நிபுணர்கள், மேலாளர்கள் முதலிய பல பயிற்சி பெற்ற பணியாளர்களும் தோன்றுகிருர்கள். சிறப்பான உழைப்பைத் தரவேண்டுமென்ற பொறுப்புணர்ச்சியும் அவர்களுக்கு ஏற்படுகின்றது. சமூகக் காப்புறுதித் திட்டங்கள் மக்கள் மனதில் பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்துகின்றன. அதன் விளைவாக தொழில் திறனும் வளர்ச்சி அடையும். சமூகநலப் பணிகள் நேரடியாகத் தொழில் உற்பத்தியை உயர்வுபடுத்தும் என்பதை இக் காரணிகள் தெளிவுபடுத்துகின்றன.

இம் முடிவை ஓர் உண்மையின் மூலம் மேலும் விளக்கலாம். வரி விதிப்பால் ஏற்படும் வேண்டத்தகாத விளைவுகளான உழைக்க விரும்பாமை, உழைக்கும் திறன் இருந்தும் வேலை செய்யாமை போன்றவை குறுகிய காலத்திற்கே நீடிக்கின்றன. சமூக நலப் பணிகளால் மக்களின் வருவாய் அதிகமாகிறது; அதனுல் அவர்களது பொருளாதார நிலையும் மேம்படுகிறது. இவற்றின் விளைவால் அவர்களது தேவைகளும் பெருகுகின்றன. இக் காரணங்களால் உற்பத்தியைப் பெருக்குவதற்கானச் சூழ்நிலையும் தோன்றுகிறது. இவ்வாறு வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் பொருளாதார முன்னேற்றத்தில் அரசு பெரும் பங்கேற்கின்றது. மின்சார உற்பத்தி, போக்குவரத்து, செய்தித் தொடர்பு மற்றும் பல வசதிகளை அரசு ஏற்படுத்தித் தருகின்றது. அரசின் முதலீடு விரைவான பொருளாதார வளர்ச்சிக்கும் உதவுகின்றது. சமூக நலப் பணிகளுக்காக வரி விதிப்பதால் ஏற்படும் பயனற்ற விளைவுகளுக்கு ஈடாக உற்பத்தியை அதிகமாக்கும் சாதகமான விளைவுகள் இவ்வாறு பெறப்படுகின்றன.

பண வீக்கம்

நலம் காக்கும் அரசைப் பெறுவதால் நாட்டில் பண வீக்க நிலை தோன்றுகிறது. தொழிலாளர்களுக்கும், குறைவான வருவாய் பெறும் பிரிவினருக்கும் கொடுக்கப்படும் பண உதவிகளும், மற்ற சமூக நலப் பணிகளும் வாங்கும் திறனை அதிகமாக்குகின்றன. இது பண்டங்கள், பணிகள் ஆகியவற்றின் தேவையை அதிகமாக்குகிறது. ஆனுல் இத்தகைய தேவையில் அதிகரிப்பு பண

வீக்க நிலையைத் தோற்றுவிக்காமலும் இருக்க வாய்ப்பு உண்டு. அந் நிலையைப் பெற பண வீக்கத்திற்கு ஈடாகப் பொருட்களின் அளிப்பும் உயர வேண்டும். ஆனால் பண அளிப்பு உண்மையாகக் குறையும் என்றும் எண்ணப்படுகிறது. ஏனெனில் அதிக வருவாய் பெறுபவர்களின் சேமிப்பு வரி விதிப்பால் குறைகிறது. அதன் விளைவாக முதலீடு குறைவதால் உற்பத்தியும் பாதிக்கப்படுகின்றது. அதே சமயத்தில் குறைந்த வருமானம் பெறும் பிரிவினரிடையே ஏற்படும் சேமிப்பு இந்தப் பற்றுக்குறையை நிறைவு செய்யப் போது மானதாக இருப்பதில்லை. இந்தப் பாகுபாடு தொழில்துறை பொருளாதாரத்திற்குப் பொருந்தும் அளவிற்கு வளர்ச்சியடைந்து வரும் நாடுகளுக்கும் பொருந்தும் என்பதை விளக்கலாம். வேளாண்மையை அடிப்படைத் தொழிலாகக் கொண்டுள்ள இந்தியா போன்ற நாடுகளில் பொருட்களின் அளிப்பை உயர்த்துவது கடினமானது. உயர்வான பணத்தின் அளிப்பிற்கும், அதன் விளைவான விலை அதிகரிப்பிற்கும் நிகராக வேளாண்மை உற்பத்தி யைப் பெருக்குவது மிகவும் கடினமானது. இவ்வாறு பணவீக்க நிலை அதிகத் தேவையையும் குறைந்த அளிப்பையும் ஏற்படுத்துகின்றது. பணவீக்கம் பொருளாதார நடவடிக்கைகளைச் சீர்குலையச் செய்து விடும்; அது பணத்தின் வாங்கும் திறனைக் குறைக்கும். அதன் விளைவாக அரசு அளிக்கும் பண உதவிகளும், பணிகளும் அதிக நன்மையைத் தருவதில்லை. நலம் காக்கும் அரசின் குறிக்கோள்கள் இதனால் நிறைவேறுவதில்லை. நலம்காக்கும் அரசிற்குத் தேவையான திட்டமிட்டப் பொருளாதார அமைப்புகள், கட்டுப்பாடுகள் ஆகிய வற்றிற்கு இடையூறாக பணவீக்கம் அமைகிறது. பணவீக்கத்தினால் ஏற்படும் தீமைகளைக் கட்டுப்படுத்த அரசு தீவிர நடவடிக்கைகளை கவனத்துடன் மேற்கொள்ள வேண்டும்.

பொருள் அளிப்பைவிட தேவை அதிகமாகும்போதுதான் பண வீக்கம் ஏற்படுகின்றது. குறுகிய காலத்தில் தேவைப் பெருக்கம் மிகவும் அதிகமாக ஏற்படாது. ஏனெனில் தேவைக்கு ஏற்ப வருவாய் உயர்வு திடீரென்று அதிகரிக்காது. அதே சமயம் குறைவான சேமிப்பாலோ அல்லது முதலீட்டாலோ பொருட்களின் அளிப்பு குறைந்துவிடும் என எண்ணுவதும் தவறானது. தனி மனிதனின் சேமிப்பும், முதலீடும் குறைந்தால், அதற்கு ஈடு செய்யும் வகையில் அரசு முதலீட்டைச் செய்யலாம். தவிர பொருளாதார வளர்ச்சிக்கு, படிப்படியான விலையுயர்வு இன்றியமையாததாகும். ஆகையால் ஒரு நலம் காக்கும் அரசால் பணவீக்க நிலைத் தோன்று மெனக் கூற முடியாது. எனினும் சமூகநலப் பணிகளை விரிவு படுத்தும் செயல் மெதுவாக நடைபெற வேண்டும். அப்போதுதான் தேவையற்ற, விரும்பத்தகாத விளைவுகளைத் தவிர்க்க முடியும்.

கட்டுப்பாடுகள்

நலம் காக்கும் அரசு திட்டமிட்டுப் பொருளாதார முன்னேற்றத்தைப் பெற நடவடிக்கைகளை எடுக்கின்றது. பொருளாதார முன்னேற்றத்திற்காகத் திட்டமிடப்படும்போது வெவ்வேறு வகைப்பட்ட கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. விலைகள், உற்பத்தி, பகிர்வு ஆகியவற்றை அரசு கட்டுப்படுத்துகின்றது. உள்நாட்டு, வெளிநாட்டு வாணிபங்களும் கட்டுப்படுத்தப்படுகின்றன. தொழிலாளர்களும், ஊழியர்களும், அதிகாரிகளும், மற்றவர்களும் அரசால் கட்டுப்படுத்தப்படுகிறார்கள். அரசு சில கட்டுப்பாடுகளை நேரடியாக விதிக்கின்றது; வேறு சில கட்டுப்பாடுகள் மறைமுகமாக விதிக்கப்படுகின்றன. திட்டமிட்டக் குடியரசில் கட்டுப்பாடுகளில் பல மறைமுகமானவை. எவ்வாறு இருந்தாலும், நலம் காக்கும் பணிகளால் அரசின் தலையீடு ஏற்படுகிறது. அதனால் பொருளாதார சுதந்திரம் ஓரளவு குறைக்கப்படுகிறது. நலம்காக்கும் அரசு சமுதாய மக்கள் யாவருக்கும் பல சமூக நலப் பணிகள் மூலம் நன்மைகளை அளிக்கிறது. இதனால் தனி மனிதனின் சுதந்திரமும் சிறிது பாதிக்கப்படுகிறது. என்றாலும் நலன்களைக் கருதும்போது இந்த பாதிப்பு பெரிதல்ல என்றே கூறவேண்டும். நலம் காக்கும் அரசு ஒவ்வொரு தனி மனிதனுக்கும் நல்ல வாழ்க்கைத் தரத்தை அளிக்க முயற்சிக்கிறது. பெரும்பாலான மக்களின் மனதில் வேலையின்மை, வறுமை, நோய், விபத்து, வயோதிகக்காலம் இவைபற்றிய அச்சத்திலிருந்து அவர்களை விடுவிக்க அரசு முயற்சி செய்கிறது. இலவசக் கல்வி, இலவச மருத்துவம், வீட்டுவசதி போன்ற முக்கிய பல நலன்களை அரசு அளிக்கிறது. அவ்வாறு செய்யும்போது நலம் காக்கும் அரசு ஓர் குறிப்பிட்ட அளவு சுதந்திரத்தையும், தனி மனிதனின் ஊக்கத்தையும் கட்டுப்படுத்துகிறது. ஆனால் ஓர் நலம் காக்கும் அரசை நிலைநாட்டுவதற்கு ஈடான நன்மை எதுவுமில்லை என்று பலரும் ஒப்புக்கொண்டுள்ளனர்.

31. முதலாளித்துவமும் சமதர்மமும்

(Capitalism and Socialism)

முதலாளித்துவம் (Capitalism)

முதலாளித்துவப் பொருளாதார அமைப்பில் தனி உடைமைக்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகின்றது. தொழிலில் ஈடுபடுவதற்கு இலாப நோக்கம் ஒரு முக்கிய ஊக்கமாக அமைகின்றது. தவிர உற்பத்தியின் கருவிகளான நிலம், மூலதனம், உழைப்பு ஆகியவை யும் தனியார்க்கு உரிமையாக இருக்கின்றன. இலாப ஊக்கத்தை ஆதாரமாகக் கொண்டே உற்பத்திச் செய்யப்படுகிறது. இந்த ஊக்கத்தின் விளைவாக உற்பத்தி உயர்வதோடு அதிக இலாபமும் கிடைக்கிறது. திறமை குறைந்தவர்கள் குறைந்த வருமானத்தைப் பெறுகின்றார்கள்.

சமதர்மம் (Socialism)

தனியுடைமைக்கு சமதர்மப் பொருளாதாரத் துறையில் அதிக இடமில்லை. உண்மையான உழைப்பிற்கு உயர்வான ஊதியம் அளிக்கப்படுகிறது. சமதர்மத்திலேயே பல முறைகள் உள்ளன; மிகவும் தீவிரமான முறையில் அரசால் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. சமதர்மச் சமுதாயத்தை அமைப்பதே முக்கிய நோக்காக இருக்கின்றது. இம் முறையில் அரசு உற்பத்திச் சாதனங்களைத் தானே சொந்தமாக்கிக்கொண்டு ஆக்கப் பணி களுக்கு அவற்றைப் பயன்படுத்துகிறது. இதைத் தவிர கூட்டுறவுச் சமதர்மமும் உண்டு. இந்த எல்லா முறைகளிலும் இலாப நோக்கம் அமைந்திருப்பதில்லை. அரசு அதிக அதிகாரத்தைக் கொண்டதாக இருக்கின்றது. மற்றொரு வகை சமதர்மக் கொள்கை முதலாளித் துவத்திற்கும் பொதுவுடைமைக்கும் இடைப்பட்டது. இம் முறையில்

இலாப ஊக்கம் அதிக அளவில் அமைந்திருப்பதில்லை. ஆனால் தனி மனிதனின் உரிமைகள் காக்கப்படுகின்றன.

கலப்புப் பொருளாதாரம் (Mixed Economy)

முதலாளித்துவத்தின் இயல்புகள் சிலவற்றையும், சமதர்மத்தின் இயல்புகள் சிலவற்றையும் கலப்புப் பொருளாதாரம் கொண்டுள்ளது. இந்தியாவில் சமதர்மப் பாணிச் சமுதாயம் அமைக்கப்பட்டு வருகின்றது. இந்த அமைப்பில் சில தொழில்களும், நிறுவனங்களும் அரசால் ஏற்று நடத்தப்படுகின்றன. பிற தொழில்கள் தனியாரால் மேற்கொள்ளப்படுகின்றன. கலப்புப் பொருளாதாரம், சமதர்மப் பாணி சமுதாயம் ஆகிய இரண்டும் நலம் காக்கும் அரசிலிருந்து வேறுபட்டவை. ஆனால் நலம் காக்கும் அரசு இவ்விரு முறைகளையும் பின்பற்றுதல் அவசியமாகும்.

நலம் காக்கும் அரசு என்பது தத்துவ ரீதியானது; அதை ஒரு முறையாகக் கொள்ள முடியாது. நலம் காக்கும் அரசு சமதர்மக் கொள்கையைப்போல் எல்லோருக்கும் உற்பத்தியில் சமபங்கு கிடைக்கவேண்டும் என்று கூறுகின்றது. ஆனால் அதற்காக அது உற்பத்தியை மேற்கொள்ளத் தனியார் தொழில்களைப் பொதுத் துறைக்கு மாற்றவேண்டும் என்று சமதர்மக்கொள்கையைப் போல வலியுறுத்தவில்லை. நலம் காக்கும் அரசு பல்வேறு சமூகநலப் பணிகளையும், சமூகக் காப்புறுதித் திட்டங்களையும் நிறைவேற்றுகின்றது. இத்தகையப் பணிகள் யாவும் வரி விதிப்பினால் அரசுக்குக் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு செய்யப்படுகின்றன. வரிவிதிப்பு அதிக வருமானம் உடையவர்கள்மீது வளர்வீதத்தில் சுமத்தப்படுகின்றது.

பொதுவுடைமை (Communism)

பொதுவுடைமையைத் தீவிரமான சமதர்மக் கொள்கை எனலாம். 1848ஆம் ஆண்டு கார்ல் மார்க்ஸ், பிரிடிரிச் எங்கெல் (Friedrich Engel) என்பவர்களால் இக் கொள்கை வெளியிடப்பட்டது. பொதுவுடைமை அறிக்கை (Communist Manifesto) கார்ல் மார்க்ஸின் நூல்கள் ஆகியவை இம்முறை வளர அடிப்படைகளாக அமைந்தன. பொதுவுடைமைவாதிகள் தனிவுடைமையை எதிர்ப்பவர்களாவர். அரசே எல்லா உற்பத்திச் சாதனங்களையும் உடைமையாகக் கொள்ளவேண்டும் என்பது பொதுவுடைமைத் தத்துவமாகும். ஒரு நாட்டில் முதலாளி வர்க்கம், தொழிலாளி வர்க்கம் ஆகிய இரு வர்க்கங்கள் உள்ளன. தொழிலாளர்கள் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள். முதலாளிகள்

தொழிலாளர்களிடமிருந்து உழைப்பைப் பெறுகிருர்கள்; உற்பத்திச் சாதனங்களுக்கு உடைமையாளர்களாக விளங்குகிருர்கள். உழைப்பாளர்களுக்குக் குறைந்த ஊதியம் அளித்த பிறகு அதிக இலாபத்தை முதலாளிகளே கவர்ந்துகொள்கிருர்கள். எனவே தொழிலாளி வர்க்கம் கிளர்ந்து எழுகின்றது; புரட்சிகள் தோன்றுகின்றன. பொதுவுடைமைவாதிகள் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின் தொழிலாளர்களின் சர்வாதிகாரம் ஏற்படுத்தப் படுகின்றது. சமுதாயத்தின் பொருளாதார நடவடிக்கைகள் பொதுவுடைமைக் கழகத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றன. பொதுவுடைமையைப் பின்பற்றும் குடியரசு நாட்டில் மக்கள் சுதந்திரத்தைப் பெற்றிருக்கின்ருர்கள். பொதுவுடைமையைச் சமுதாயத்திலுள்ள எல்லோரும் உணர்ந்து ஒரே கருத்துள்ளவர்களாகச் செயல்படும்போதுதான் வெற்றி கிட்டுகின்றது.

பாஸிஸம் (Fascism)

இப் பொருளாதார அமைப்பு முதலாளித்துவத்தின் தீவிரத் தன்மையைக் கொண்டது. இம் முறையில் தனிவுடைமையும், இலாப நோக்கமும் அனுமதிக்கப்படுகின்றன. ஒரு அரசியல் கட்சி மட்டுமே ஆட்சியை நடத்துகின்றது. பிற அரசியல் கட்சிகள் அறவே நீக்கப்படுகின்றன. தனி மனிதன் யதேச்சையதிகாரம் ஏற்படுத்தப்படுகின்றது. இத்தகைய அமைப்பு முதலாளித்துவத்தைச் சார்ந்த ஒன்றேயாகும். இதற்கு எடுத்துக்காட்டாக, ஜெர்மனியில் நடந்த ஹிட்லர் ஆட்சியையும், இத்தாலியில் நடைபெற்ற முசோலினி ஆட்சியையும் கூறலாம். ஏகாதிபத்தியரால் அரசு நடைபெறுவதோடு மட்டுமல்லாமல் நாட்டிலுள்ள எல்லா நடவடிக்கைகளும் ஒருவராலோ அல்லது ஒரு சிலராலோ கட்டுப்படுத்தப்படுகின்றன.

முக்கிய இயல்புகள் (Chief Characteristics)

வருமான வேறுபாடுகள்: முதலாளித்துவத்தின் முக்கிய இயல்புகள்: (1) தனியார் உடைமைக்கான உரிமை; (2) பாரம்பரியச் சொத்துப் பேறு உரிமை; (3) வேலைத்திறமை ஆகியவை அமைந்திருத்தலாகும். இவற்றைச் சார்ந்து மக்களின் வருமானம் அமைகிறது. அதனுல் வருமானத்தில் ஏற்றத்தாழ்வுகளும் இருக்கின்றன. அதிகத்திறமை உடையவன் முதலாளித்துவத்தில் மற்றவர்களைவிட அதிகமாக வருமானம் பெறுகின்ருன். அதன் மூலமாக தனது செல்வத்தையும் பெருக்குகின்ருன். சொத்துப் பேறு உரிமையால் ஒருவருடைய சொத்து அடுத்தத் தலைமுறையினருக்குச் சென்று சேர்கின்றது. முதலாளித்துவத்தில் சம்பாதிக்கும்

உரிமையும், ஒப்பந்தச் சுதந்திரமும், சொத்துப் பேறு உரிமையும் நிறைந்து காணப்படுகின்றன. எனினும் சமீப காலமாக செல்வத்தைக் குவிப்பதிலும் அதிக வருமானத்தைப் பெருக்குவதிலும் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. வருமான வரி, செல்வ வரி, சொத்துப் பேறு வரி போன்றவை அதிகச் செல்வக் குவிப்பைத் தடுக்க விதிக்கப்படுகின்றன. வரிக்கொள்கை மூலம் நாட்டின் பொருளாதாரமும், தொழில் துறையும் அரசால் கட்டுப் படுத்தப்படுகின்றன. இதுவே ஒழுங்கு படுத்தப்பட்ட முதலாளித் துவம் ஆகும். சமதர்மத்தை முதலாளித்துவத்துடன் ஒப்பிடும் போது ஒழுங்கு படுத்தப்பட்ட முதலாளித்துவத்தையே கருத்தில் கொள்ளவேண்டும். ஏனெனில் இம் முதலாளித்துவ முறையில்தான் தனியார் உடைமை மீதும், இலாபத்தின் மீதும் அரசின் கட்டுப்பாடு அமைந்திருக்கின்றது.

Adv. Social.

சமதர்மத்திலும் வருமான வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஊதிய வேறுபாடுகளும் அமைந்துள்ளன. வேலை செய்யத் தூண்டவும், திறமையான உழைப்பைப் பெறவும் வேறுபாடான ஊதியங்கள் அளிக்கப்படுகின்றன. சமதர்மத்திலுள்ள வருமான வேறுபாடுகள் முதலாளித்துவத்திலுள்ள வேறுபாடுகளை விடக் குறைவாகக் காணப்படுகின்றன. செல்வந்தர்களின் வருமானத் திற்கும், ஏழைகளின் வருமானத்திற்கும் இடையே அதிக வேறு பாடு இருக்காது. இவ் வேறுபாடு அதிகரித்துக் கொண்டும் இருப்பதில்லை. ஏனெனில் வருமானத்தில் ஏற்படும் சிறிய வேறு பாட்டிற்குத் திறமைதான் காரணமாக இருக்குமே தவிர செல்வம் காரணமாக அமையாது. சமதர்மத்தில் தனி மனிதன் ஒரு குறிப்பிட்ட அளவு வரைதான் சொத்துரிமையைப் பெற்றிருக் கின்றான். வருமானத்தில் ஏற்றத்தாழ்வு ஓரளவு இருக்கின்றது; செல்வத்தால் வருமானத்தில் ஏற்படும் வேறுபாடு அதிகம் இருப்பதில்லை.

சுதந்திரமும், குடியரசும் (Freedom & Democracy)

முதலாளித்துவத்தில்தான் சுதந்திரமும் உண்மையானக் குடியரசு ஆட்சியும் அமைந்துள்ளன என்று சொல்லப்படுகிறது. சமதர்மத்தில் இவ்வித நிலைகள் அமைந்திருப்பதில்லை. பின்வரும் காரணங்களுக்காகப் பேச்சுரிமை, சிந்திக்க உரிமை, செயல்பட் உரிமை ஆகியவைத் தேவைப்படுகின்றன: (1) தனி மனிதனின் முழுமையான வளர்ச்சிக்காக; (2) கலை, இலக்கியம், விஞ்ஞானம் ஆகியவற்றில் பலனளிக்கும் பணிகளை மேற்கொள்வதற்காக; (3) உண்மையான குடியரசு நிலைத்திருப்பதற்காக. மக்கள் சுதந்திரத்தையும், உரிமையையும் தங்கள் நலனுக்காக

விரும்புகிறார்கள். ஆனால் அவை சமதர்மத்தில் இருப்பதில்லை. எனினும் அளவுக்கு அதிகமான சுதந்திரம், உரிமை ஆகியவற்றால் நாட்டில் ஒருமைப்பாட்டை நிலைநாட்ட முடியாது. மக்கள் எல்லோருடைய நலனையும் காக்க முடியாது.

மனிதன் முழு வளர்ச்சி அடைவதற்கு முதலாளித்துவத்தில் காணப்படும் சுதந்திரம் தேவையில்லை என்று சமதர்மவாதிகள் கருதுகிறார்கள். மேலும் சமதர்ம நாட்டில் சுதந்திரமும், குடியரசும் இல்லை என்று கூறிவிட முடியாது. (i) அரசு நிர்ணயிக்கும் எல்லைக்குள் மக்கள் தாங்கள் நினைத்ததைச் செய்யலாம்; (ii) அரசியற் கூட்டங்களில் மக்கள் தங்களது சொந்தக் கருத்துகளை எடுத்து இயம்பலாம். உற்பத்திச் சிக்கல்களைத் தீர்க்கும் தொழில் நுட்ப வல்லுனர்கள், இரசாயன நிபுணர்கள், பொறியியலாளர்கள் நிறைந்த கூட்டங்களிலும் அவர்கள் கருத்துகளைக் கூறலாம். இத்தகையக் கூட்டங்களில் உற்பத்தியிலுள்ள சிக்கல்கள் விவாதிக்கப்படும். மேலும் சமதர்மத்திலுள்ள சர்வாதிகார நிலை தற்காலிகமானது. முதலாளித்துவ சமுதாயத்திலுள்ள இயற்கையான வகுப்புச் சிக்கல்களை நீக்குவதற்கு இந்த அதிகாரம் கைக்கொள்ளப்படுகிறது. சமதர்மம் முழுமையடையும்போது, சர்வாதிகார நிலை அழிந்து விடுகிறது. அதன்பின் முழு சுதந்திரமும், குடியரசும் சமுதாயத்தில் நிலவும்.

எதிர்காலத்தைப் பற்றி உறுதியாக எதையும் கூறமுடியாது. ஆனால் நாடுகளின் படிப்பினைகளை ஆராய்ந்து பார்த்தால் சுதந்திரமும், குடியரசும் அந்நாடுகளில் இல்லை என்றே கருதவேண்டியுள்ளது. சமதர்ம நாடுகளிலுள்ள மக்கள் மகிழ்ச்சி இல்லாமல் வாழ்கிறார்கள் என்றும் குறை கூறப்படுகின்றது. கலை, இலக்கியம் ஆகியவை வளர்ச்சியடைவதற்கு பெருந்தடைகள் ஏற்படுகின்றன. சுதந்திரமும், குடியரசும் இல்லாததால்தான் இத் துறைகளில் வளர்ச்சிக் குன்றி விடுகிறது. எனினும், சமதர்ம முறை இயங்கி வரும் சோவியத் ரஷ்யாவில் இக் குறைபாடுகள் அமைந்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

விலை இயக்கம் (Price Mechanism)

முதலாளித்துவ அமைப்பின் விலை இயக்கம் நாட்டின் எல்லா வளங்களையும் மிகச் சிறப்பாகப் பயன்படுத்த உதவுகின்றது. மாறுபடுகின்ற நிலைகளுக்கு ஏற்ப விலையானது தேவை, அளிப்பு நிலைகளில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. இதையே விலை இயக்கம் எனலாம். உதாரணமாக உற்பத்தியாளர் ஒரு குறிப்பிட்ட பொருளை ரூபாய் 150 செலவில் உற்பத்தி செய்கிறார் என்று கொள்ளலாம்.

நுகர்வோர் அந்த விலைக்கு அப் பொருளை வாங்க விரும்பவில்லை என்று வைத்துக்கொண்டால் விலைக் குறையத் தொடங்கும். தேவைக் குறைவு ஏற்படும்போது விலைக்குறைவும் ஏற்படுகின்றது. உற்பத்தியாளர் அப் பொருளை உற்பத்தி செய்வதையே நிறுத்தி விடுகிறார். ஆகவே எப் பொருட்களை உற்பத்தி செய்யவேண்டும், எந்த அளவிற்கு உற்பத்தி செய்ய வேண்டும், எந்த விலைக்கு அவைகளை விற்க வேண்டும் என்பன யாவும் நுகர்வோரின் தேவையைப் பொருத்தே அமைகின்றன. உற்பத்தியாளருக்கு நுகர்வோரின் விருப்பங்கள் வழிகாட்டியாக அமைகின்றன. முதலாளித்துவத்தில் இவ்விதத் 'துய்ப்போர் இறைமை' (Sovereignty of Consumers) அமைந்துள்ளது. குடியரசில் மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப எல்லாம் நடைபெற வேண்டும். விலை இயக்கம் நுகர்வோருக்கு இத்தகைய வலிமையை உறுதியளிக்கிறது. உற்பத்தி, பகிர்வு, பொருட்களின் மாற்றம் (Exchange) ஆகிய யாவும் நுகர்வோரின் இறைமையை அதிக அளவில் கொண்டுள்ளன.

விலை இயக்கம் நாட்டின் வளங்கள் சிறப்பாகப் பயன்படுத்துவதற்கு உதவுகின்றது. ஆனால் நடைமுறையில் கட்டுப்படுத்தாத விலை இயக்கம் நன்மையளிப்பதில்லை என்பதை உணர்வது அவசியமாகும். இதற்குக் காரணமாக அமைவது தொழில் அமைப்பாளர்கள் கீழ்க்கண்ட பல தவறான வழிகளில் தங்கள் இலாபத்தைப் பெருக்குவதேயாகும். (1) உற்பத்தியாளர்கள் பல தரக்குறைவான பொருட்களை உற்பத்தி செய்து நுகர்வோரிடம் விற்பனை செய்கின்றார்கள். பொருட்களை விற்பனை செய்ய உற்பத்தியாளர்கள் விளம்பரம், புதிய விற்பனை முறைகள் போன்றவற்றை மேற்கொள்கிறார்கள். (2) தேசிய நலனைப் பாதிக்கும் வகையில் உற்பத்தியாளர்கள் பல வளங்களைப் பயன்படுத்துகிறார்கள். இந்த நிலை இந்தியாவில் சுதந்திரமடைவதற்கு முன்பு அமைந்திருந்தது. அப்போது நிலக்கரி வெட்டியெடுக்கப்பட்டு இலாப நோக்கோடு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. நாட்டு நலனிற்காக இந்த ஏற்றுமதி செய்யப்படவில்லை. (3) தொழில் அமைப்பில் இலாப நோக்கு இருப்பதால் சில தொழில்களில் மட்டுமே தொழில் முயல்வோர் அதிக அளவில் ஈடுபடுகின்றார்கள். இந்நிலையும் இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன் நிலவியது. பொறியியல் தொழில்கள், மின் சாதனத் தொழில்கள், பெரிய இரசாயனத் தொழில்கள் போன்றவை வளர்ச்சியடைந்திருக்கவில்லை. அதே சமயத்தில் பருத்தி நெசவுத் தொழில், சர்க்கரை உற்பத்தித் தொழில் ஆகியவற்றில் தேவைக்கும் அதிகமான முதலீட்டாளர்கள் அமைந்திருந்தார்கள்.

ய சமதர்மத்தில் பொருளின் விலையும், செலவும் உற்பத்தியாளர்களுக்குத் தெரியாது என்றாலும் அவற்றை வேறு பல மாற்றுச் சோதனைகள் மூலம் அறியலாம். அவை விலை இயக்கத்தைப் போலவே சக்தி வாய்ந்தவை. மத்திய அமைப்பு நாட்டின் வளங்களைத் தீர்மானிக்கிறது; மக்களின் தேவையைக் கணக்கிடுகின்றது; தேவையின் அளவையும் அறிகிறது. இவ்வாறாகத் தீர்மானிக்கப்பட்ட நிலைகளுக்குத் தகுந்தவாறு உற்பத்தி மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் இந்த கணக்கெடுப்புக்கள் முழுமையானவையல்ல என்றாலும், உற்பத்தியைக் கணிப்பதற்கு இவையே போதுமானவைகளாக இருக்கின்றன.

சமதர்மத்தில் இவ்வாறு செய்யப்படும் மதிப்பீடு சரியானது என்று கூறமுடியாது. முதலாளித்துவத்திலும் உற்பத்தி செய்வதற்காகத் தெரிந்தெடுக்கப்படும் திட்டங்கள் தவறாக இருப்பதுண்டு. சமதர்மத்தில் ஒரு துறையில் வளங்களைப் பயன்படுத்தும்போது அவை மக்களின் தேவைக்கு அதிகமாக இருந்தால், வேறு துறைகளுக்கு அவ்வளங்கள் மாற்றப்படும். அதே போல மக்களின் தேவையைவிட குறைவாக ஒரு துறையில் உற்பத்தி செய்யப்பட்டால், பிற துறைகளில் பயன்படுத்தப்படும் வளங்கள் அத் துறையில் அதிகமாக ஈடுபடுத்தப்படும். சில காலங்களில் ஒரு துறையில் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய முடிவதில்லை. அதற்குக் காரணமாக இருப்பது அத்துறையில் உள்ள வளம் முழுவதும் பயன்படுத்தபட்ட பிறகும், தேவை உற்பத்தியைவிட அதிகமாக இருப்பதேயாகும். ஒரு பொருளின் தேசியத் தேவை அப்பொருளை உற்பத்தி செய்வதற்கான வளங்களைக் காட்டிலும் அதிகமாக இருந்தால் மக்களின் வாழ்க்கைத்தரம் பாதிக்கப்படுகின்றது.

சமதர்ம முறையில், முன்னமேயே தீர்மானிக்கப்பட்ட வாழ்க்கைத்தரத்திற்குத் தகுந்தவாறு தேசீய வருமானம் பல வகுப்பினரிடையேயும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. ஆனால் இவ்வாறு செய்வதில் சில குறைபாடுகள் தோன்றுகின்றன. பல தன்னிச்சையான தீர்மானங்கள் எடுக்கப்பட வாய்ப்பு உண்டு. ஆனால் சமதர்மத்தைவிட சிறந்த, நியாயமான மக்கள் நலனைக் காக்கும் முறை எதுவும் குறிப்பிடப்படவில்லை.

நன்மைகளும், தீமைகளும் (Merits and Demerits) உற்பத்தியின் அளவு (Level of Production): முதலாளித்துவ அமைப்பில், இலாப ஊக்கம் மிக அதிக அளவு உற்பத்தித் திறனைத் தோற்றுவிக்கின்றது. இலாபம் உற்பத்தித் திறனைப் பொருத்து

அமைவதால், உற்பத்தியாளர்கள் தங்களது முழுத் திறமையையும் பயன்படுத்துகின்றார்கள். இவ்வாறு பல உற்பத்தியாளர்களும் முழுத் திறனைப் பயன்படுத்துவதின் மூலம் மொத்த உற்பத்தி உச்ச நிலையை அடைகிறது. சமதர்மத்தில் திறமைக்கும், வருவாய்க்கும் அதிகத் தொடர்பு இருப்பதில்லை. மக்களுக்குக் கிடைக்கும் வருமானம் அவர்களது தேவையைச் சார்ந்து அமைகிறது. எனவே மக்கள் தங்களது முழுத் திறமையையும் உற்பத்தியில் பயன்படுத்துவதில்லை. உழைப்பாளர்களின் உற்பத்தித்திறனும் குறைவாகவே இருக்கின்றது. முதலாளித்துவத்தில் இந்த நோக்கே எல்லாவற்றிற்கும் அடிப்படையாக உள்ளது. உண்மையான உழைப்புக்கு உயர்வான ஊதியம் அளிக்கப்படுகிறது; திறமையான தொழில் முயல்வோர் அதிக இலாபம் பெறுகின்றனர். இலாப ஊக்கம் சமதர்மத்தில் அமைந்திருக்கவில்லை. பொது நலமே சமதர்மத்தில் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது; வருமானம் திறமைக்கேற்ப அமைவதில்லை.

சமதர்மத்தில் உழைப்பாளர்கள் கடமையுணர்வு மிக்கவர்களாக இருப்பதில்லை. அரசியற் காரணங்கள் சிலவற்றாலும் சமதர்மம் சிறப்பாகச் செயல்படுவதில்லை. சமதர்ம சமுதாய அமைப்பை ஏற்படுத்தும்போது பல இடர்ப்பாடுகளும் தோன்றுகின்றன. சமதர்மத்தில் இலாப ஊக்கம் அமைந்திருப்பதில்லை. முதலாளித்துவ முறையில் உற்பத்திப் பெருக்க வீதமானது, சமதர்ம முறையின் உற்பத்திப் பெருக்க வீதத்தைவிட அதிகமாக இருக்கின்றது என்று சொல்லப்படுகிறது. அமெரிக்காவில் உற்பத்தியின் அளவு உயர்வாக இருப்பது முதலாளித்துவத்தின் வெற்றியை உணர்த்து கின்றது. ஆனால் சமதர்மம் பின்பற்றப்படுகின்ற சோவியத் ரஷ்யாவிலும் உற்பத்தியின் அளவு மிக விரைவாக உயர்ந்துள்ளது. தொழில் நுணுக்க உற்பத்தி முறைகள் சிறப்பான வகையில் ரஷ்யா விலும் பின்பற்றப்படுகின்றன. இந்நிலை சமதர்மத்தின் வெற்றியை உணர்த்துவதாக உள்ளது. முதலாளித்துவ முறையில் உற்பத்தியின் அளவு விரைவாகப் பெருகுவது போன்றே, சமதர்ம முறையிலும் உற்பத்தியை விரைவாகப் பெருக்க முடியும்.

பகிர்வுச் சிக்கல் (Problem of Distribution)

முதலாளித்துவத்தைவிட சமதர்மத்தில் செல்வப்பங்கீடுகள் சிறப்பாகச் செய்யப்படுகின்றன. சமதர்ம அமைப்பில் தேவைக் கேற்ப மக்கள் பொருட்களைப் பெற முடிகின்றது. எல்லோருக்கும் வேலை வாய்ப்புகளும் அளிக்கப்படுகின்றன. வேலையின்மைச் சிக்கல் சமதர்மச் சமுதாயங்களில் அமைந்திருப்பதில்லை. முதலாளித்

துவத்தில் செல்வந்தர்கள் பெரிய செல்வந்தர்களாகவும், வறிய வர்கள் மிகவும் வறியவர்களாகவும் மாறுகின்றனர். வருவாயிலும், செல்வப் பங்கீட்டிலும் அதிக அளவு ஏற்றத்தாழ்வுகள் அமைந் துள்ளன. ஆனால் இன்றைய முதலாளித்துவ அரசுகள் மக்களின் நலம் காக்கும் அரசுகளாக உள்ளன. எனவே ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் இந் நாடுளிலும் எடுக்கப்டு படுகின்றன. அதிக வருவாய் பெறுபவர்கள் மீது வளர்வீத வரிகள் விதிக்கப்பட்டு, அவ் வருவாய் சமுதாய நலனிற்காகச் செலவிடப் படுகின்றது. குறைந்த வருவாய் பெறுபவர்களின் நிலை திருந்து வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தற்கால முதலாளித்துவ முறையில் செல்வந்தர்கள் பல வகைகளிலும் அரசால் கட்டுப்படுத்தப்படுகின்றார்கள். இதனால் பொருளாதாரச் சக்தி ஒரு சிலரிடம் குவிகின்ற நிலை தடுக்கப்படுகிறது எளியவர்களை வலியவர்கள் சுரண்டும் நிலையும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சமதர்ம முறையில் வருவாயிலும், செல்வப் பங்கீட்டிலும் உள்ள வேறுபாடுகள் எளிதில் நீக்கப்படுகின்றன. ஆனால் இம் முறையில் உற்பத்தித் திறனும், வருவாயைப் பெருக்கும் திறனும் குறைவாக உள்ளன என்று குறை கூறப்படுகிறது.

பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் (Economic Fluctuations)

முதலாளித்துவத்தில் 'நிறை வேலையுடைமை' (Full Employ ment) ஏற்படுவதில்லை என்று சொல்லப்படுகிறது. 'நுகர்வோர் இறைமையும்' (Consumers' Sovereignty) அதன் விளைவாக ஏற்படுகின்ற 'ஆய்த்த நிலைத் தேவையும்' (Effective Demand) நிறை வேலையுடைமையைப் பெறப் போதுமான அளவில் அமைந்திருப்பதில்லை. நிறை வேலையுடைமையை அடைவதற்கு முன் உற்பத்திச் செலவுகள் அதிகரிக்கின்றன. மூலதனத் திற்கான வட்டி வீதமும் உயர்வடைகின்றது. பொருளா தாரத்திலும் முன்னேற்ற நிலைகள் தோன்றுகின்றன. உழைப் பாளர்களிடையே வேலையின்மையும், உற்பத்தி வசதிகள் சிறப்பாகப் பயன்படுத்தப்படாமையும் முதலாளித்துவத்தின் இயல்புகளாக உள்ளன. இந்நிலைகள் சமதர்மத்தில் அமைந் திருப்பதில்லை. சமதர்மச் சமுதாயத்தில் தேவை, அளிப்பு நிலைகள் அரசால் கட்டுப்படுத்தப்படுகின்றன. நிறை வேலை யுடைமையைப் பெறுவதற்கு ஏற்ற வகையில் தேவை, அளிப்பு நிலைகளில் மாற்றங்கள் செய்யப் பெறுகின்றன. சமதர்மத்தில் வேலையின்மை நிலையே அமைந்திருப்பதில்லை. ஏனெனில் மக்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவது அரசின் கடமையாகும்.

முதலாளித்துவத்தில், சில காலங்களில் நிறை வேலையுடைமையைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுவதுண்டு. ஆனால் அந்நிலையானது உறுதியாகத் தொடர்ந்து நீடிக்கும் என்று கருத முடியாது. பொருளாதாரத்தில் மந்த நிலை தோன்றும்போது வேலையின்மை ஏற்படுகின்றது. முதலாளித்துவத்தில் சுழலும் ஏற்றத்தாழ்வுகள் தோன்றியவண்ணம் இருக்கின்றன. வாணிபச் சுழலால் பொருளாதாரத்தில் செழுமை நிலை, பூரிப்பு நிலை பின்னிறக்க நிலை, மந்த நிலை, வீழ்ச்சி நிலை, மீட்சி நிலை போன்றவை தொடர்ச்சியாகத் தோன்றி மறைகின்றன. பொருளாதார நடவடிக்கைகள் இதனால் பாதிக்கப்படுகின்றன. மக்கள் பல இன்னல்களையும் ஏற்கின்றார்கள். சமதர்மத்தில் இவ்விதக் குறைபாடுகள் அமைந்திருக்கவில்லை. சமதர்ம அரசு பொருளாதார நடவடிக்கைகளை மிகச் சிறப்பாகக் கட்டுப்படுத்துகின்றது.

முதலாளித்துவ முறையில் நிறை வேலையுடைமை அமைந்திருப்பதில்லை என்பதோடு, விலைநிலைப் பெருக்கமும் ஏற்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. நிறை வேலையுடைமையை அடைந்த முதலாளித்துவப் பொருளாதாரத்தில் பொருட்களின் விலைகள் உயர்ந்து பணவீக்கநிலை தோன்றுகின்றது. இதனால் பொருளாதாரப் பூரிப்பு நிலை மாறி மந்தநிலை ஏற்படுகின்றது. ஆனால் கட்டுப்படுத்தப்படாத முதலாளித்துவ முறையில்தான் விலைகளில் ஏற்ற இறக்கங்கள் காணப்படுகின்றன. வேலையின்மைச் சிக்கலும் தோன்றுகின்றது. எனவே சமதர்மத்தை, கட்டுப்படுத்தப்படாத முதலாளித்துவ முறையோடு ஒப்பிடுவது தவறானதாகும். முதலாளித்துவ அரசு சிறப்பாகச் செயல்பட்டால் நிறைவேலையுடைமையைப் பெறலாம். கீன்ஸின் கோட்பாடும் இதையே வலியுறுத்துகின்றது. அரசின் முதலீட்டுத் திட்டங்களால் தேவையின் அளவைப் பெருக்கி, நிறை வேலையுடைமையை அடையலாம். வேலை வாய்ப்புக்களைப் பெருக்கவும், விலைநிலைப் பெருக்கத்தைப் பெறவும் அரசு சரியான நிதிக் கொள்கையையும், பணக் கொள்கையையும் பின்பற்றவேண்டும்.

தனியார் சுதந்திரம் (Personal Freedom)

முதலாளித்துவத்தில் விரும்பத்தக்க தனியார் சுதந்திரம் அமைந்திருக்கின்றது. மக்கள் பல உரிமைகளையும் பெற்றிருக்கின்றார்கள். இந்நிலையால் தனியார் தங்கள் நலனை உயர்த்திக் கொள்ள முற்படுகின்றனர். சமதர்மத்தில் இவ்விதமான சுதந்திர நிலை அமைந்திருப்பதில்லை. ஆனால் உழைப்பாளர்கள் உற்பத்தியைப்பற்றிய சில கருத்துகளைக் கூறலாம். கட்டுப்படுத்தப்பட்ட முதலாளித்துவத்தில் அமைந்துள்ள சுதந்திரநிலைகூட சமதர்மத்தில்

பெறப்படுவதில்லை. சமதர்ம முறையில் தனியார் சுதந்திரமும், உரிமையும் கட்டுப்படுத்தப்படுவதால்தான் வருவாயிலும், செல்வப் பங்கீட்டிலும் உள்ள ஏற்றத்தாழ்வுகள் நீக்கப்படுகின்றன. முதலாளித்துவ முறையில் தனியார் சுதந்திரமும், உரிமையும் காக்கப்படுவதால்தான் வருவாயிலும், செல்வப்பங்கீட்டிலும் அதிக ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. முதலாளித்துவம், சமதர்மம் ஆகிய இரு முறைகளிலும் நன்மை தீமைகள் அமைந்துள்ளன. மேம்பாடடைந்த மேலை நாடுகளுக்குப் பொருந்துகின்ற முதலாளித்துவ முறை, வளர்ச்சியடைந்துவரும் நாடுகளுக்குப் பொருந்துமெனக் கூறமுடியாது. இன்றைய மேம்பாடடைந்து வரும் நாடுகளின் பொருளாதார முன்னேற்றம் சமதர்ம முறையையே சார்ந்து அமைந்துள்ளது. இன்றுள்ள பின்தங்கிய நாடுகளின் பொருளாதாரச் சூழ்நிலைகளுக்கு முதலாளித்துவமுறை ஏற்றதாக இல்லை. இதன் காரணமாகவே பல வளர்ச்சியடைந்துவரும் நாடுகளும், விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப் பெற சமதர்ம முறையைப் பின்பற்றுகின்றன.

32. வருமான ஏற்றத்தாழ்வு

(Inequality of Income)

சமுதாயத்திலுள்ள செல்வ, வருமானப் பகிர்வை இருவித வேறு பட்டக் கோட்பாடுகள் மூலம் விளக்கலாம். அவை தனியார் பகிர்வுக் கோட்பாடு (Theory of Personal Distribution), பணிப் பகிர்வுக் கோட்பாடு (Theory of Functional Distribution) ஆகியவை யாகும்.

தனியாருக்கிடையே வருமானத்தைப் பிரித்தளித்தல் சம்பந்த மானது தனியார் பகிர்வு. எந்த வழியில் மக்களிடையே செல்வமும், வருமானமும் பிரித்தளிக்கப்படுகிறது, சிலர் ஏழைகளாகவும் சிலர் செல்வந்தர்களாகவும் இருக்கக் காரணம் என்ன என்ற வினக்கள் எழுகின்றன. தனியார்ப் பகிர்வின் கோட்பாட்டிற்கு இவ் வினக்கள் பொருள் அடக்கமாக அமைகின்றன.

உற்பத்தியைப் பெற நிலம், உழைப்பு, மூலதனம், தொழி லமைப்பு ஆகிய உற்பத்திக் காரணிகள் பயன்படுத்தப்படுகின்றன. பணிப்பகிர்வு (functional distribution) என்பது வருமானத்தை இந்த நான்கு காரணிகளுக்கும் உரிமையானவர்களிடையே பகிர்ந்தளிப் பதைக் குறிக்கிறது. உற்பத்திக்குக் காரணி ஒவ்வொன்றும் உற்பத்தி வருமானத்தில் ஒரு பங்கு வகிக்கிறது. ஒரு காரணி உற்பத்தியைப் பெற எந்த அளவு பயன்படுத்தப்பட்டதோ, அதைப் பொருத்து அக் காரணியின் பங்கு அமையும். இதை, பணிப்பகிர்வு இவ்வாறு விளக்குகின்றது. நில உரிமையாளனுக்கு நிலத்திற்கான வாரம் கிடைக்கிறது. உழைப்பிற்கு ஊதியம் அளிக்கப்படுகிறது. மூல தனத்திற்கு வட்டி தரப்படுகிறது. இவை யாவும் உற்பத்திக் காரணி களின் உரிமையாளர்களுக்குத் தரப்படும் வெகுமதிகளாகும். உற்பத்திக் காரணியின் உரிமையாளர் உற்பத்திப் பெருக்கத்தில்

பங்கு வகிப்பதால், அதற்கு ஈடாக வெகுமதிகள் தரப்படுகின்றன. உற்பத்தியில் காரணிகள் வகிக்கும் பங்கு மாறுவதால், காரணிகளின் உரிமையாளர்களுக்குக் கிடைக்கும் வருமானமும் வேறுபடுகின்றது. இவ்வாறு தனியார் வருமானங்களிடையே சமத்துவமற்ற நிலை ஏற்படுவதற்கு தனியார்ப் பகிர்வு முன்னோடியாக அமைகிறது.

முதலாளித்துவத்தின் முக்கிய குறைபாடு வருமான ஏற்றத் தாழ்வாகும். முதலாளித்துவத்திற்குப் பதிலாக சமதர்மமும், தொழிலாளித்துவமும் ஏற்படுவதற்கு வருமான ஏற்றத்தாழ்வே காரணமாகும். சமுதாயத்தில் வருமான ஏற்றத்தாழ்வு ஏற்படக் காரணங்கள் யாவை? ஏற்றத்தாழ்வு தொடர்ந்து நீடிப்பதற்குக் காரணங்கள் யாவை? இவற்றை எவ்வாறு களைவது? ஆகியவைப் பற்றி விளக்குவது அவசியமாகின்றது.

வருமான ஏற்றத்தாழ்வுக்கானக் காரணங்கள்

வருமான ஏற்றத்தாழ்விற்கு மூன்றுவித வெவ்வேறான காரணங்கள் கூறப்படுகின்றன. முதலாவதாக, அதிக அளவிலோ அல்லது குறைந்த அளவிலோ வாய்ப்புகள் ஏற்பட சில காரணங்கள் உள்ளன. இரண்டாவதாக செல்வந்தர்களுக்கும், வறியவர்களுக்கும் இடையேயுள்ள வேற்றுமைகளை அதிகரிக்கும் தன்மை வாய்ந்த காரணங்கள் காணப்படுகின்றன. இறுதியாக, வருமான ஏற்றத்தாழ்வை தலைமுறை தலைமுறையாக நிரந்தர மாக்கும் காரணிகள் இருக்கின்றன.

(i) பொருளாதாரப் பணிகளில் உள்ள வேற்றுமைகள்

வேலை வாய்ப்பில் வேற்றுமை இருப்பதால் வருமானத்திலும் வேற்றுமை ஏற்படுகிறது. சில வேலைகளுக்கு நல்ல நிர்வாகத் தன்மை, அதிகப் பொறுப்பு, சிறந்த கல்வி அறிவு, அனுபவம், தனித் திறமை முதலியன தேவைப்படுகின்றன. மிகச் சிலருக்கே கிடைக்கக்கூடிய இந்த வேலைகள் ஊதியம் மிக்கவை; பெரும் பாலான தொழில்களுக்குத் தனித் திறமை, தகுதி ஆகியவை தேவையில்லை. இந்த வேலைகள் எல்லா தரப்பட்ட மக்களுக்கும் கிடைக்கும். எனவே இத் தொழில்களில் ஊதியம் குறைவாக இருக்கிறது.

இளைஞர்களில் பலர் நல்ல வேலைகளுக்குத் தேவையானத் தகுதியை பெற்றிருப்பதில்லை. அவர்கள் தனித் திறமை கொண்டிருப்பதில்லை. திறமை கொண்டிருந்தாலும் வாய்ப்புகள் அளிக்கப்படுவதில்லை. எனவே இவ் விளைஞர்களுக்கு அதிக வருமானம் தரும் வேலைகள் கிடைப்பதில்லை.

இரண்டு முக்கிய காரணிகள் தனியாரிடையே உள்ள வருமான வேறுபாட்டைத் தீர்மானிப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன. பாரம் பரியமும், சூழ்நிலைகளுமே இவ்விரண்டு காரணிகளாகும். பிறக்கும் போதே எல்லோருமே சமநிலையில் இருப்பதில்லை. மக்கள் உடல் உழைப்பிலும், அறிவுக் கூர்மையிலும் மாறுபட்ட திறமைகளை பெற்றுள்ளார்கள். சிலர் மிக்க திறமையுடையவர்களாக உள்ளார்கள்; சிலர் கலையுணர்வு மிகுந்தவர்கள். வேறு சிலர் விஞ்ஞானத் துறையிலோ அல்லது தொழிற் கலையிலோ சிறந்து விளங்குகிறார்கள். இத்தகைய வேறுபாடுகள் பொதுவாக பாரம் பரியமானவை. வருமான ஏற்றத்தாழ்வுக்கு இந்த வேறுபாடுகள் காரணங்களாக அமைகின்றன. குறைந்த வசதிகள் உடைய வனைவிட வசதி மிக்கவன் தரமான வாழ்வைப் பெற்றிருப்பான்.

பிறக்கும் போதே வேற்றுமை இருப்பது தவிர, சூழ்நிலைகளைப் பொருத்து கிடைக்கும் அநுகூலங்களும் மக்களுக்கு வேறுபட்டே உள்ளன. வசதி மிக்கக் குடும்பத்தில் பிறந்தவர்களுக்கு வாழ்க்கை சாதகமாகத் தொடங்குகிறது. அவர்களுக்கு நல்ல கல்வி, சிறந்த பயிற்சி, சமூகத் தொடர்பு முதலியன எளிதாகக் கிடைக்கின்றன. மேலும் அவ் விளைஞர்களுக்கு மூதாதையர்கள் சொத்தும் இருக்கும். சொத்து சொந்தமான வியாபாரத்தைத் தொடங்குவதற்குச் சிறந்த மூலதனமாக அமைகிறது. வறிய குடும்பத்தில் பிறந்தவர்களுக்கு இத்தகைய நன்மைகள் கிடைப்பதில்லை.

இவ்வாறு வாய்ப்பில் ஏற்றத்தாழ்வுகள் இருப்பதால் வருமான வேறுபாடும் ஏற்படுகிறது. பொருளாதார வேறுபாடு வாய்ப்பின் ஏற்றத்தாழ்வுக்குக் காரணமாகின்றது. ஏற்றத்தாழ்வு வாய்ப்பில் ஏற்படுவதால் மேலும் மேலும் பொருளாதார வேறுபாடு உண்டா கிறது. எனவே வாய்ப்பு ஏற்றத்தாழ்வும், பொருளாதார ஏற்றத் தாழ்வும் ஒன்றையொன்று தொடர்ந்து சுழலும் வட்டமாக அமைகின்றன. பேராசிரியர் டானி (Tawney) கூறுவது போல, "ஏழை மகன் தனது திறமைகளால் வாய்ப்புகளை உண்டாக்கு கிறான்; ஆனால் செல்வ மகன் வாய்ப்புகள் தன்னைத் தேடி வரும் நம்பிக்கையில் இருக்கிறான்."

இப்படியாக வேறுபட்ட ஊதியங்களை உடைய பலதரப்பட்ட வேலைகள் இருப்பதால் வருமான ஏற்றத்தாழ்வு ஏற்படுகிறது. வேலைகளை தெரிந்தெடுப்பதில் மக்களது பாரம்பரியமும், சூழ்நிலையும் மிகுந்த அளவு பங்கு வகிக்கின்றன.

(ii) தனியார் சொத்தமைப்பு (Institution of private property)

வருமானத்திற்கு வாய்ப்புகள் தேவை என்பது விளக்கப்பட்டது. இனி இவ் வாய்ப்புக்களை எவ்வாறு உண்டாக்குவது என்பதை அறிவது அவசியமாகிறது. ஊதியம் மூலமாகவோ, வட்டியின் மூலமாகவோ வாய்ப்புகளை ஏற்படுத்துவது மிக்கக் கடினம். திரைப்பட நட்சத்திரங்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியம் அதிகமானது. ஆனால் அவர்களைப் போன்று மிகச் சிலரே வாய்ப்புகளைப் பெற இயலும். பொதுவாக, பெரும் வாய்ப்புகளை ஏற்படுத்துமளவுக்கு வருமானம் அதிகமாயிருப்பதில்லை. நிலவாரம், இலாபம் இவற்றின் மூலம்தான் நிறைந்த வாய்ப்புகளைப் பெற முடியும். இந்தியாவில் புதிய நகரங்கள் தோன்றுகின்றன; நிலத்தின் மதிப்பு அதிகமாகின்றது. நில உரிமையாளர்கள் நல்ல விலைகள் வரும்வரை காத்திருந்து விற்பதன் மூலம் வாய்ப்புகளைப் பெறுகின்றார்கள். எண்ணெய், நிலக்கரி போன்ற இயற்கை வளங்களுக்கு உடைமையானவர்களும் நிறைந்த வாய்ப்புகளைப் பெறுகிறார்கள்.

கடந்த சுமார் 200 ஆண்டுகளாக (தொழிற் புரட்சிக்குப் பின்) பேரளவு வாய்ப்புகள் உற்பத்தி, வியாபார இலாபங்களுடன் நெருங்கியத் தொடர்பு கொண்டுள்ளன. முற்றுரிமை நிலையை அடைவதன் மூலம் வியாபார இலாபங்கள் பெறப்படுகின்றன. எண்ணெய் போன்ற வளங்களின் முற்றுரிமைத் தன்மையைச் சாதமாகக் கொண்டு ஊக வணிகத்தின் மூலம் இலாபங்கள் அடையப்படுகின்றன. குறிப்பிட்ட அளவு இலாபம் நீதியோடும், நேர்மையோடும் கூட பெறப்படுகின்றது. வேறு பலர் மனச் சாட்சிக்கு விரோதமாக கொள்ளை இலாபத்தைப் பெறும் வாய்ப்பைப் பெறுகின்றார்கள்.

இவ்விதத்தில் எல்லா முதலாளித்துவ சமுதாயத்திலும் தனியார் சொத்தமைப்பால் வருமான ஏற்றத்தாழ்வு தீவிரமடைகிறது. சொத்தின் உரிமையாளர் தனிப் பயன்களையும், உரிமைகளையும் பெறுகிறார். இந்த சொத்து நிலமாகவோ, தொழிற்சாலையாகவோ, அல்லது கனிச்சுரங்கமாகவோ இருக்கலாம். நிலத்திற்கான வாரம், மூலதனத்திற்கான வட்டி, தொழிலமைப்பிற்கான இலாபம் ஆகிய வழிகளில் நாட்டின் வருமானத்தின் பெரும்பகுதியை சொத்துரிமையாளர்கள் பெறுகின்றார்கள். விஞ்ஞானமும், தொழில் நுட்பமும் வளரும்போது ஊதியம் மாறுமலோ, அல்லது மிகச் சிறிய அளவு உயர்ந்தோ இருக்கிறது. ஆனால் இதற்கு எதிரிடையாக இலாபங்களும், வாடகையும் மிக வேகமாகப் பெருக்கமடையும் நிலை ஏற்படுகிறது. சொத்தின் மூலம் கிடைக்கும் வருமானம் உழைத்து உண்டாக்கும் வருமானம் இல்லை.

(iii) சொத்துப் பேறு அமைப்பின் முறை (The System of Inheritance)

ஏற்றத்தாழ்வு இருப்பதற்குச் சொத்துப் பேரமைப்புக் காரண மெனினும், உண்மையாக சொத்துப் பேரமைப்பால் ஏற்றத்தாழ்வு ஏற்படுவதில்லை. ஏற்றத்தாழ்வு தொடர்ந்து கொண்டே இருப்ப தற்கு அது துணையாக உள்ளது. சொத்தைப் பாரம்பரியமாகப் பல தலைமுறைகளுக்கு மாற்றிக்கொண்டே செல்லுவதுதான் தனியார் சொத்தமைப்பின் அடிப்படைத் தன்மையாகும். எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் சொத்துப்பேறு அமைப்பால் தந்தை யிடமிருந்து மகனுக்கு எந்தவிதத் தடையுமின்றி சொத்து சென்று விடுகிறது. இதுபோல் இன்றைய ஏற்றத்தாழ்வு நாளையும் தொடரும். செல்வம் முன்பே ஓரிடத்தில் மிகுதியாகி விடுகிறது. அந்த மிகுதியான செல்வத்தை அவ்விடத்திலேயே சொத்துப் பேறு அமைப்பு நிலைப்படுத்துகிறது. எனவே சொத்துப்பேறினால் ஏற்றத்தாழ்வு உண்டாவதில்லை என்பது.புலனாகிறது.

சொத்துப்பேறு அமைப்பில் விரும்பத்தகாத நிலை என்ன வென்றால், வாரிசுகள் எவ்வித முயற்சியும் செய்யாமலேயே சொத் துரிமையைப் பெறுகிறார்கள். மதிப்பு மிக்கச் செல்வத்தை உண்டாக்கியவர் கடின உழைப்பைத் தந்திருப்பார். நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைத்திருப்பார். ஆனால் அவரது வாரிசுகள் வாய்ப்பினால் சொத்து சேர்ப்பதில் எவ்வித பங்கும் வகித்திருக்க மாட்டார்கள். செல்வந்த குடும்பத்தில் பிறந்தவர்கள் என்ற ஒரே சந்தர்ப்ப வசத்தால் வாரிசுகளுக்கு சொத்தை அனுப விக்கும் வாய்ப்பு கிட்டுகிறது. உழைக்காமல் காலத்தை வீணடிக் கின்றவர்கள் தோன்றுவதற்கு சொத்துரிமையே முக்கியக் காரண மாக உள்ளது. இவர்கள் ஆடம்பரமாக எவ்வித அக்கறையுமின்றி சோம்பேறிகளாக வாழ்கின்றனர். அவர்கள் சமுதாயத்திற்கு பலனளிக்கும் உற்பத்திப் பணியில் ஈடுபடுவதில்லை.

சொத்துப்பேறு அமைப்பால் ஏற்றத்தாழ்வு தொடரப்படுவ தோடு, நிலைநாட்டவும் படுகின்றது. மேலும் ஏற்றத்தாழ்வுகள் அதிகரிக்க இது வழி வகுக்கின்றது. ஏனெனில் பெரும் வாய்ப்புகள் எப்போதும் பெருகுகின்றன. உதாரணமாக ராக் பெல்லர்கள் (Rocke feller), போர்ட்ஸ் (Fords), டு பாண்ட்ஸ் (Du Ponts) டாட்டாக்கள் (Tatas), பிர்லாக்கள் (Birlas) போன்றோர் பல தலை முறைகளாக அதிக வாய்ப்புகளை அனுபவித்து வருகிறார்கள். இந்த வாய்ப்புகள் ஒவ்வொரு தலைமுறைக்கும் பெருகிக்கொண்டே செல் கின்றன. செல்வக் குவிப்பு வேகமாக வளர்ச்சியடைகிறது. செல்வத்தில் ஏற்றத்தாழ்வு காலம் செல்லச் செல்ல அதிகரித்துக்

கொண்டே இருக்கிறது. எனவே சொத்துப்பேறு அமைப்பு ஏற்றத் தாழ்வை நிலைப்படுத்தி அதை அதிகரிக்கவும் செய்கிறது.

தனி மனிதனின் திறமையும், சூழ்நிலையும் மாறுபட்டிருப்பதால் வருவாய் ஏற்றத்தாழ்வு உள்ளது. தனிச்சொத்து என்ற அமைப்பால் ஏற்றத்தாழ்வு நிலைநாட்டப் படுகிறது. இந்தநிலை சொத்துரிமையை வாரிசுகளுக்கு அளிக்கின்ற தன்மையால் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இக்காரணிகள் ஒரே சமயத்தில் செயல்படுகின்றன. ஏற்றத் தாழ்வுகளை நீக்குவதற்கு இக்காரணிகள் நன்கு ஆராயப்பட வேண்டும்.

வருமான ஏற்றத்தாழ்வின் விளைவுகள்

மக்களிடையே வாழ்க்கைத்தரம் வேறுபட்டிருப்பதற்குப் பொருளாதார ஏற்றத்தாழ்வே காரணமாகும். ஒருபுறம் சிலர் ஆடம்பர வாழ்க்கை நடத்துகிறார்கள்; மறுபுறம் வேறு பலர் வறிய நிலையில் உள்ளனர். செல்வந்தன் அதிகம் உண்டதால் வயிற்று வலியால் அவதிப்படுகிறான்; ஏழையோ உணவு உண்ண வழியில் லாமையால் அவதிப்படுகிறான். இந்தியாவில் பலர் தங்களையோ, தங்களது சுற்றத்தையோ மிகவும் தாழ்வான நிலையில்தான் காப்பாற்றி வருகிறார்கள். அவர்கள் தங்களது தொழிலை சரியாகச் செய்வதற்குத் தேவையான உணவும் கிடைப்பதில்லை. அதனால் உண்மையான உழைப்பைத் தரவேண்டுமென்ற ஊக்கமும் அவர் களுக்கு ஏற்படுவதில்லை. இந்திய உழைப்பாளர்களின் உற்பத்தித் திறன் குறைவாக உள்ளமைக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

(1) வீணான நுகர்வு

நுகர்வில் விரயங்கள் இருப்பதற்குப் பொருளாதார ஏற்றத் தாழ்வே காரணமாகிறது. செல்வந்தன் எப்போதுமே சாதாரண மாகத் தேவையற்ற செலவுகள் செய்கிறான். பிறரின் புகழ்ச்சிக்காக வும் செல்வந்தன் வீண் செலவு செய்கிறான். "தனிச் சிறப்பிற்கு விருப்பம்" (Desire for Distinction) என்பது எடுப்பான நுகர்விற்குக் காரணமாகின்றது. இந்த விருப்பம் எல்லாதர மக்களிடமும் எப்போதுமே இருந்து வருகிறது. இது மக்களின் கொள்கையிலும், ஆர்வத்திலும் சக்தி வாய்ந்ததாகக் காணப்படுகிறது. தனிச் சிறப்பிற் கான விருப்பம் பொதுவாக செலவினங்களில் போட்டியை ஊக்கு விக்கிறது. பல்லாயிரக்கணக்கானோர் திறந்தவெளியை வீடாகக் கொண்டு வாழ்கின்றனர்; ஆனால் மகாராஜாக்களும், வியாபாரச் செல்வந்தர்களும் அரண்மனையிலும், மாளிகையிலும் குடியிருக் கின்றனர். இந்தியாவில் இலட்சக்கணக்கான மக்கள் அடுத்த

வேலைக்கு ஒரு கவள சோறுவது கிடைக்குமா, அதுவும் எப்போது எப்படி கிடைக்கும் என்று கவலையுற்றிருக்கிருர்கள்; ஆர்வத்துடன் எதிர்பார்க்கிருர்கள். அதே நேரத்தில் செல்வந்தர்களின் நாய்களுக்கு வெளிநாட்டு பிஸ்கட்டும், மாமிச உணவும் கொடுக்கப்படுகின்றன. செல்வந்தன் தனது மிகுதியான வருமானத்தை வீணுகச் செலவழிக்கிருன். பெரும் செல்வத்திற்கு உரிமையான மகளிர் தமது நேரத்தையும், பொருளேயும் விழா, நகை, உடை போன்றவற்றில் வீணே செலவழிக்கிருர்கள். தேவையற்ற ஆடம்பர வாழ்க்கையைச் செல்வந்தர்களுக்கு அளிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் மனித உழைப்பும், வளங்களும் உற்பத்தி உயர்விற்கு எவ்வகையிலும் உதவுவதில்லை. ஏழைக்கு ஊட்டச்சத்துள்ள உணவு கிடைப்பதில்லை; அவன் போதுமான உடைகளை உடுத்துவதில்லை; வசதியான வீட்டில் குடியிருப்பதில்லை. அவனுக்குக் கல்வி வசதி அளிக்கப்படுவதில்லை. வறுமையால் நோய் தோன்றுகிறது; குற்றங்கள் வளர்கின்றன. இவைகளால் ஆக்கத்திறனும், திறமையும் இழக்கப்படுகின்றன.

(2) தவருன உற்பத்தி முறை

நுகர்வோரின் விருப்பத்தைப் பூர்த்திசெய்யும் வகையில் உற்பத்திச் செய்யப்படுகின்றது. வருமான ஏற்றத்தாழ்வால் அவசியம் குறைந்த பொருட்கள் அதிக அளவில் உற்பத்திச் செய்யப்படுபடுகின்றன. ஒரு பொருளின் தேவைக்கு அப்பொருளை வாங்குவதற்குத் தேவையான விருப்பமும், வாங்கும் திறனும் அவசியமாகின்றன. செல்வந்தர்களுக்கு ஏழையை விட வாங்கும் திறன் அதிகம் என்பது வெளிப்படை. இதன் காரணமாக, செல்வந்தர்களுக்குத் தேவையான பொருட்கள் அதிக அளவில் உற்பத்திச் செய்யுப்படுகின்றன. ஏனெனில் அத்தகைய பொருள்களை அதிக விலை கொடுத்தும் செல்வந்தர்களால் வாங்க முடியும். எனவே வறியவர்களுக்குத் தேவையான பொருள்களை உற்பத்திச் செய்வதைக் காட்டிலும், செல்வந்தர்களுக்கு வேண்டிய பொருட்களை உற்பத்திச் செய்வதில் அதிக ஊக்கம் பெறப்படுகின்றது. இவ்வாறு ஏழைகளுக்கு அவசியமான பொருட்களை உற்பத்திச் செய்வதை விட செல்வந்தர்களுக்குத் தேவையான ஆடம்பரப் பொருட்களை உற்பத்திச் செய்வதால் இன்றியமையாத பொருட்களின் விலை கூடுகிறது. விலை அதிகமாவதால் குறைவான வருமானம் உடையவர்கள், தாங்கள் கொடுக்கும் பணத்திற்குக் குறைவான பொருட்களையே பெறுகிருர்கள். இதற்கு எதிரிடையாக எல்லோருக்கும் ஓரளவு சமமான வருமானம் கிடைத்தால் விலை மிகுந்த ஆடம்பரப் பொருட்கள் அதிக அளவிற்கு உற்பத்திச் செய்யப்படமாட்டா.

சாதாரண மக்களுக்குத் தேவையான பொருட்களுக்கும், பணிகளுக்கும் மட்டுமே உற்பத்தியின் காரணிகள் பயன்படுத்தப்படும். அப்போது இன்றியமையாத பொருட்களின் உற்பத்தி அதிகரிப்பதால் அவற்றின் விலையும் குறைவடையும்.

(3) தொழிலாளர்களுக்கு வருமான உறுதியின்மை

செல்வத்திலும், வருமானத்திலும் ஏற்றத்தாழ்வு இருப்பதன் விளைவாக பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வில் உறுதியின்மை உண்டாகிறது. சமுதாயத்தில் பெரும்பகுதியினர் உழைப்பாளர்களே ஆவர். இக்காலத் தொழில்களில் வியாபார ஏற்ற இறக்கங்கள் ஏற்படுகின்றன. தொழில் மந்தத்தின்போது தொழில் அதிபர் தனது தொழிற்சாலையை, தற்காலிகமாக மூட வேண்டி வருகிறது; வியாபாரி தனது கடையை மூடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. ஆனால் அதனால் அவர்கள் நடத்தும் வாழ்க்கை பாதிக்கப்படுவதில்லை. அவர்கள் தங்களது நுகர்வில் இன்றியமையாத பொருட்களையும், வசதிப் பொருட்களையும் குறைப்பதில்லை. இதற்கு மாருக மந்த காலத்தில் வேலையிழந்த தொழிலாளர்கள் மிகவும் அவசியமான உணவைக்கூட பெற முடியாதவர்களாகின்றனர். வேலையின்மையால் மக்களில் பலர் வேலையைத் தேடி அலைகிருர்கள். ஆனல் அவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை. ஆர்வம் மிக்க அரசு இந்தப் பிரச்சனையைத் தீர்க்க அத்தகைய தொழிலாளர்களுக்கு ஓரளவு புனர்வாழ்வளிக்க முன் வருகிறது. கருணைமிக்க சமுதாய அமைப்புகள் அவர்களுக்குத் தற்காலிக வேலை அளிக்கின்றன. ஆனல் வேலையில்லாத பல இலட்ச மக்கள் தாங்கள் செய்யாதத் தவற்றிற்கு சொல்லொணுத் துன்பங்களுக்கு ஆளாகுகிருர்கள்.

தவிர வேலையின்மையால் ஏற்படும் பாதுகாப்பின்மையைத் தவிர வேறு பல பிரச்சினைகளும் உள்ளன. அவை தொழில் தொடர்பான நோய்கள், விபத்துக்கள், வயோதிகக் கால வருவாய் இன்மை போன்றவைகளாகும். இப்பிரச்சினைகள் உழைத்துப் பிழைக்கும் மக்களுக்கே உரித்தானவை. பல நாடுகள் இவற்றைத் தீர்க்க சமுதாயக் காப்பீட்டுத் திட்டங்களைச் செயலாற்றுகின்றன. அத்திட்டங்கள் வேலை செய்யும் உழைப்பாளர்களுக்கு வேலையின்மையின்போதும், நோயால் பீடிக்கப்படும்போதும், ஓய்வு பெற்ற பிறகும் உதவி அளிக்கின்றன. ஆனல் காப்புறுதித் திட்டங்கள் வறியோரின் துன்பங்களை முழுவதும் களையவில்லை. அவர்களது துன்பங்கள் முன்போலவே எப்போதும் இருந்து கொண்டே உள்ளன.

அதே சமயம் செல்வந்தரின் வருமான முறையிலும் ஏழையின் வருமான முறையிலும் அடிப்படை வேறுபாடுகள் அமைந்திருக்கின்றன. நிலத்திற்கான வாரத்தையும், மூலதனத்திற்கான வட்டியையும், தொழிலமைப்பிற்கான இலாபத்தையும் செல்வந்தன் பெறுகின்றான். அவன் வேலை செய்தாலும் அல்லது செய்யா விட்டாலும், உடல் நலக் குறைவோடு இருந்தாலும் அல்லது உடல் நலத்தோடு இருந்தாலும் கிடைக்கும் வருமானம் பாதிக்கப்படுவதில்லை. இதற்கு மாறாக தொழிலாளியின் வருமானம் அவனது உடல் நிலையைப் பொருத்து அமைகிறது. அவனுக்குத் திறமையிருந்தும், உடல்நலக் குறைவால் சில காலங்களில் வேலைக்கு செல்ல முடிவதில்லை. இக் காலங்களில் வருமானத்தைப் பெற முடியாதவனாக அவன் இருக்கின்றான். இவ்வாறாக வருமான ஏற்றத் தாழ்வின் முக்கியக் காரணமாக பொருளாதாரப் பாதுகாப்பின்மை அமைகிறது. தங்களது ஊதியத்தை நம்பி காலம் கடத்தும் நடுத்தர, உழைப்பாளர் வர்க்கங்களுக்குத்தான் இந்தப் பாதுகாப்பின்மை உள்ளது.

முதலாளித்துவப் பொருளாதாரத்தில் வருமான, செல்வ ஏற்றத்தாழ்வினால் சில சமூக, அரசியல் விளைவுகள் உண்டாகின்றன. முதலில், வருமான ஏற்றத்தாழ்வு எவ்வாறு கல்வி வாய்ப்புகளைத் தீர்மானிக்கிறது என்பதை விளக்குவது அவசியமானது. கல்வி வாய்ப்பைப் பொருத்தும் வருமான ஏற்றத்தாழ்வு அமைகின்றது.

(4) சமநிலையற்ற கல்வி வாய்ப்புகள்

கல்வி கற்க அதிகச் செலவு பிடிக்கின்றது; ஏழைகளுக்கு இலவசக் கல்வியும் செலவு கொண்டதாக இருக்கின்றது. நல்ல எண்ணங்களும், மிகுந்த ஆர்வங்களுமுள்ள பல சிறுவரும், சிறுமியரும் வறுமையின் போக்கிலேயே கட்டாயமாகச் செல்லவேண்டி வருகின்றது. இந்தியா போன்ற நாடுகளில் பெருவாரியான மக்கள் தங்களது குழந்தைகளை தொடக்கநிலை கல்விக்குப் பிறகு பள்ளிக்கு அனுப்புவதே இல்லை. உயர்நிலைக் கல்வி கற்க ஒரு குறிப்பிட்டச் சில குடும்பங்களே குழந்தைகளில் ஓரிருவரை அனுப்ப முடிகின்றது. ஏனெனில் அது அவர்களது தேவைக்கும் அதிகமான கல்வி எனக் கருதப்படுகிறது. மிகக் குறைந்த சிலருக்கே கல்லூரிக் கல்வி வாய்ப்புக் கிட்டுகின்றது. நாட்டில் அதிக அளவிற்கு இளம் பிராயத்தினரின் உழைப்பு காணப்படுவதிலிருந்து, பெரும்பாலோருக்குத் தொடக்கக் கல்வியே அவர்களது சக்திக்கு அப்பாற்பட்டது என்பது புலனாகிறது.

ஏழைக்குத் தொடக்கக் கல்வியே கடினமாகத் தோன்றும் அதே சமயத்தில், ஒரு வியாபாரி அல்லது நிர்வாகியின் மகன் சிறந்த பள்ளியில் கல்வி கற்கிறுன். நாளடைவில் கல்லூரிக்குச் செல்கிறுன். அவன் கல்லூரிப் படிப்பிற்காகச் செலவழிக்கும் தொகை, திறமையான தொழிலாளி ஒருவனின் மொத்த குடும்ப வருமானத்தையும் மிஞ்சி விடுகிறது.

கல்வி கற்பதற்கு வேண்டிய வாய்ப்புகள் எல்லோருக்குமே சமமாக இருப்பதில்லே குறைந்த வருவாய் உள்ளவர்களும், கல்வி யறிவுத் தகுதி குறைவாக உடையவர்களும் குறிப்பிட்ட சில தொழில் களையே தெரிந்தெடுக்க வேண்டி வருகிறது. ஒரு கடைநிலே ஊழியரின் மகன் ஒரு கடைநிலே ஊழியனுகவே வாழமுடிகிறது. அவன் அதற்கு மேலான நிலேக்கு வரமுடிவதில்லே. செல்வந்தரின் மகனுக்குச் சிறந்த கல்வி வசதி கிடைக்கின்றது. அதிக வருமானம் பெறக்கூடிய வேலேயை அவனுல் பெற முடிகின்றது. இவ்வாறு செல்வ, வருமான ஏற்றத்தாழ்வால் கல்வியிலும், வேலேயிலும் வாய்ப்பின் ஏற்ற இறக்கம் ஏற்படுகின்றது. இந்த ஏற்ற இறக்கம் திரும்பவும் செல்வ, வருமான ஏற்றத்தாழ்விற்கு அடிப்படையாக அமைகின்றது.

(5) செல்வந்தர்களின் கையில் சக்திக் குவிப்பு

முதலாளித்துவ நாட்டில் செல்வ, வருமான ஏற்றத்தாழ்வு குறிப்பிட்டச் சிலரிடையே பொருளாதார, அரசியல் சக்தியை குவிக் கின்றது. அந்நிலே சில சமயம் குடியரசு அமைப்பையே அவமதிக் கின்றது. செல்வந்தர்கள் மக்கள் கருத்தை உருவாக்கும் சக்தி வாய்ந்த சாதனங்களேயும், அச்சகத்தையும், ஒலிபரப்பு, தொலே நோக்கித் துறையையும் தம் வசப்படுத்துவதின் மூலம் அரசியல் சக்தியைப் பெறுகிறுர்கள். நாட்டில் பதவிக்கு வரும் கட்சிக்குக் கையூட்டுகள் அளிப்பதனுல் அரசியல் கட்சிகளேயும் ஆட்கொண்டு விடுகிறுர்கள். இந்த நிலேயில் அரசு மேற்கொள்ளும் கருத்துகள் எல்லாமே செல்வந்தர்கள் வாயிலாக வந்ததாக இருக்கும்.

வருமான ஏற்றத்தாழ்வால் உழைப்பாளர்களுக்கு வருமானத்தில் உறுதியின்மை ஏற்படுகின்றது. கல்வி கற்கும் வாய்ப்புகள் சமமாக இல்லேயென்பதால் வருமான ஏற்றத்தாழ்வு மேலும் தொடர் கின்றது. பொருளாதார ஏற்றத்தாழ்வால் செல்வந்தர் சிலரிடையே அரசியல், பொருளாதாரச் சக்திகள் குவிந்து விடுகின்றன. நாட்டில் பெரும் புள்ளியாக விளங்கும் சில செல்வந்தர்கள், தங்களது சொந்த நலனுக்காகவே திட்டம் தீட்டி ஏழைகளே ஏமாற்றுவார்கள். எனவேதான் வருமான ஏற்றத்தாழ்வு முதலாளித்துவத்தில்

வேண்டத்தகாத அம்சமாக உள்ளது. எவ்வாருயினும் இந்த ஏற்றத்தாழ்வு நீக்கப்படவேண்டும்; அல்லது குறைக்கப்பட வேண்டும். கடந்த நூறு ஆண்டுகளாக பல தீர்வுகள் குறிப்பிடப் பட்டன. சில தீர்வுகள் இந்த அமைப்பை அறவே களையச் சொல் கின்றன. மற்றும் சில தீர்வுகள் செல்வ, வருமான ஏற்றத்தாழ்வைக் குறைப்பதற்கான வழிவகைகளை இயம்புகின்றன.

வருமான ஏற்றத்தாழ்வைக் குறைத்தல்

வருமானத்தின் ஏற்றத்தாழ்வை நீக்க இரண்டு வழிமுறைகள் குறிப்பிடப்படுகின்றன. அதில் மார்க்ஸியத் தீர்வு தீவிரமான தீர்வாகும். இத் தீர்வின்படி தற்போதுள்ள பணிப் பகிர்வின் அமைப்புமுறை மாற்றப்படவேண்டும். தனியார் சொத்தும், பாரம் பரிய அமைப்பும் நீக்கப்படவேண்டும்; பதிலாக சமநிலை வருமானத்தை அளிக்கக்கூடிய பகிர்வின் புதிய அமைப்பைக் கொண்டுவரவேண்டும். மார்க்ஸியத் தீர்வுக்குப் பதிலான மற்ருெரு தீர்வு மிக மிதமான முறையாக உள்ளது. இத்தீர்வு இப்போதுள்ள பகிர்வு அமைப்பு முறை தொடரவேண்டும் என வலியுறுத்துகிறது. ஆனுல் இது பலதரப்பட்ட மக்களிடையே உள்ள ஏற்றத்தாழ்வு களைக் குறைப்பதற்குத் தேவையான சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றது. இந்தத் தீர்வுகள் ஒவ்வொன் றையும் தனித்தனியே ஆராய்வது அவசியமாகின்றது.

பிரச்சினைக்குத் தீவிரத் தீர்வு

தற்போதுள்ள பணிப்பகிர்விஞல்தான் ஏற்றத்தாழ்வுப் பிரச்சினை எழுகின்றது எனத் தீவிரக் கொள்கையைப் பின்பற்றுபவர்கள் நம்பு கிருர்கள். இப் பகிர்வு முறை ஒழிக்கப்படவேண்டும் என அவர்கள் விரும்புகிருர்கள். பொதுவுடைமை முறையில் உற்பத்திக் காரணிகள் எந்த அளவிற்கு உற்பத்திக்கு உதவுகின்றனவோ அந்த அளவிற்கு வருமானத்தைப் பெறுகின்றன. ஆனுல் முதலாளித்துவமுறையில் தொழில் முயல்வோரும், நிலப்பிரபுக்களும் எப்போதுமே நாட்டின் இலாபப் பங்கீட்டில் அவர்களுக்குக் கிடைக்க வேண்டியதைவிட அதிகமாகப் பெறுகிருர்கள். நில உடைமையானவர்களுக்கும் மூலதனத்தை வைத்திருப்பவர் களுக்கும் நாட்டு வருமானத்தில் பெரும் பங்கு கிடைக்கிறது. மேலும் உற்பத்திக் காரணிகள் ஒரு தலைமுறையிலிருந்து அடுத்தத் தலைமுறைக்கு பாரம்பரியமாக மாறிக்கொண்டே வருகின்றது. இவ்வாறு ஒருமுறை ஏற்படுத்தப்பட்ட ஏற்றத்தாழ்வு தொடர்ந்து நிலைபெற்றுக்கொண்டே இருக்கின்றது. எனவே பணிப் பகிர்வு, தனியார் சொத்து, பாரம்பரிய முறை முதலியன நீக்கப்பட

வேண்டும் என்று இடதுசாரி கருத்துகளைக் கொண்டவர்கள் கூறுகின்றனர். தற்போதுள்ள முதலாளித்துவ பகிர்வு அமைப்பு முறையை நீக்கவேண்டும் என்பது அவர்கள் கருத்தாகும்.

இப்போதுள்ள அமைப்பை மாற்றி விடுவதால் மட்டும் பிரச்சினைக்கு முழுத் தீர்வும் கண்டுவிட முடியாது. பிறகு பல பிரச்சினைகள் தோன்றக்கூடும். மக்களிடையே எவ்வாறு நாட்டு வருமானத்தை பகிர்ந்தளித்தல் அல்லது சிறப்பான பகிர்வு முறை என்ன என்பதை ஆராய்வது இன்றியமையாதது. தற்போதைய பகிர்வு முறைக்கு எதிராக இரண்டு வேறுவித பகிர்வு முறைகளைப் பின்பற்றலாம். அவையாவன:

(1) தொழில் எதுவாக இருந்தாலும் எல்லோருக்கும் சமமான வருமான முறை.

(2) தேவைக்கு ஏற்ப பிரித்தளிக்கும் வருமான முறை.

எல்லோருக்கும் சமமான வருமானம்

நாட்டில் வயது வந்த எல்லோருக்கும் சமமான வருமானம் என்ற நிலை சாதாரண மனிதனுக்கு காதில் தேன் வந்து பாய்வது போலிருக்கும். குடியரசு நாட்டில் அரசியல் துறையில் ஒவ்வொரு வருக்கும் ஒரு ஓட்டு அளிக்க உரிமையுண்டு. அதேபோல், பொருளாதரத்துறையிலும் சமுதாயத்தின் வருமானத்தில் சமபங்கு எல்லோருக்கும் கிடைக்கவேண்டும். இத்தகைய வருமானப் பகிர்வு முறை மிக எளிது. ஆனால் சொல்லுவதற்குத்தான் இனிமையானது; நடைமுறைக்குச் சிறிதும் ஒவ்வாதது.

வருமானப் பங்கீட்டுமுறை இவ்வாறு இருந்தால் பல தீமைகள் உண்டாகும். இம் முறையால் மொத்த வருமானம் பேரளவு பாதிக்கப்படுகிறது. எனவே மக்களிடையே பிரித்தளிக்க சொற்ப வருமானமே காணப்படும். தாங்கள் உழைக்கும் உழைப்பிற்குத் தக்க பயன்கள் கிடைத்தால்தான் மக்கள் திறமையுடனும், ஆர்வத் துடனும் வேலை செய்வார்கள். எல்லோருக்கும் சம வருமானம் என்றால் திறமையுடன் வேலை செய்யும் தொழிலாளிக்கு அளிக்கப் படும் ஊதியம், கவனமின்றி வேலை செய்யும் திறமை குறைந்த தொழிலாளிக்குத் தரும் ஊதியத்தைவிட அதிகமாக இருக்காது. அதனால் திறமையான தொழிலாளியும் உண்மையான உழைப்பைத் தருவதில்லை. வேலை செய்வதற்கு தூண்டுதல் சக்தி அளிப்பது அதிக வருமானம் ஆகும். சம வருமான முறை கொண்டு வரப் பட்டால் இவ்விதக் குறைபாடுகள் தோன்றும். அதன் விளைவாக

தேசீய வருமானம் குறையும்; பொருளாதார நலங்களும் பாதிக்கப்படும்.

சிலவகையான வேலைகளுக்குப் பங்கீட்டால் கிடைக்கும் சன்மானத்தைவிட அதிகமான ஊதியத்தை அளிக்கவேண்டியுள்ளது. அதாவது இவ் வேலைகளுக்கு அதிகத் திறமையும், பொறுப்புணர்ச்சியும், கவனமும் தேவைப்படுகின்றன. ஒரு அரசின் அமைச்சர், காரியதரிசி, பெரிய நிறுவன நிர்வாக அதிகாரி போன்றவர்களின் பணிகளை இதற்கு உதாரணமாகக் கூறலாம். அவர்களுக்கு அளிக்கப்படும் வசதிகள் சாதாரண ஊழியர்களுக்குத் தரப்படும் வசதிகளைவிட மிகுதியாக இருத்தல் அவசியமாகின்றது.

மேலும் வருமானத்தைப் பிரித்தளிப்பதால் வேறொரு தீமையும் ஏற்படுகிறது. பல வகையான தொழில்களுக்கிடையே கிடைத்தற்கரிய சாதனங்களைப் பகிர்ந்தளிக்கும் முறை மிகவும் பாதிக்கப்படுகிறது. எந்த உற்பத்திக் காரணி விலை அதிகமாக உள்ளதோ உற்பத்தியாளர்கள் அதை மிகக் குறைவாக உற்பத்திக்குப் பயன்படுத்துகிறார்கள். வேறுபாடு இல்லாத நிலையில், உற்பத்தியின் காரணிகளை முழு அளவு பயன்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

வருமான சமநிலை எப்போதுமே தொடர்ந்திருக்க வேண்டுமானால், அவ்வப்போது மறு பங்கீடுகள் செய்துகொண்டே இருக்க வேண்டும். ஏனெனில் சிறிது காலத்திற்குப்பின் களையப்பட்ட ஏற்றத்தாழ்வுகள் மறுபடியும் தோன்றும். இந்த நிலைமையை மாற்ற குறுகிய காலங்களில் அடிக்கடி மறு பங்கீடுகள் செய்யவேண்டும்.

ஆனால் சம வருமானத்தில் கூறப்படுகின்ற தீமைகளைப் பொருளாதார நிபுணர்கள் ஏற்றுக் கொள்வதில்லை. அவர்களது வாதங்களைப் பின்வருமாறு விளக்கலாம்:

சிலர் சில தொழில்களை வருமானம் கருதி மட்டும் மேற்கொள்வதில்லை. அயல் நாட்டுத் தூதர் பணி, இராணுவப்பணி, சமூக நலப்பணி ஆகியவற்றை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். இத்தகைய பணிகளைச் செய்வதால் தேசிய உணர்வும், மதிப்பும், மனநிறைவும் ஏற்படுகின்றன. இத் தூண்டுதல்களால் இவ்வகைப் பணிகளைச் செய்யச் சிலர் ஆர்வத்தோடு முன் வருகிறார்கள். சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு நீக்கப்பட்டால் பொருளாதார நலம் பெருகுகின்றது. இந்த ஊக்கத்தால் மற்ற நன்மைகளும் உண்டாகின்றன; பல பொருள்களும் சம அளவில் உயர்வாக உற்பத்திச் செய்யப்படுகின்றன.

சில பொருளாதார நிபுணர்கள் உற்பத்திக் குறைந்தாலும் எல்லோருக்கும் சம ஊதியம் என்பதால் சமுதாயமே பயனடைகிறது எனக் கூறுகிறார்கள். ஏனெனில் உற்பத்தியின் குறிக்கோள் மனிதனின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதாகும். ஒரு சிலரிடையே எல்லா வருமானமும் குவிந்திருப்பதைவிட, எல்லோருக்கும் சிறிதளவு வருமானம் கிடைக்கும்படி செய்வது நல்லது. "சிலர் மட்டும் எல்லாம் பெறுவதைவிட, எல்லோரும் சிறிதாவது பெறுவது நலமல்லவா!" அதனுல் ஏற்படும் மன மகிழ்வும், நிறைவும் அளவிட முடியாதது.

ஆனுல் இந்த எதிர்வாதங்கள் எந்த அளவிற்குச் சரியானவை எனச் சொல்ல இயலாது. எப்பொழுதுமே வருமானச் சமநிலையை பெற்றிருக்க முடியாது என்பதிலும் உண்மை அடங்கியுள்ளது. ஏனெனில் மக்களிடையே குடும்பத்தின் அளவு மாறுபடக் கூடியது; அவர்களின் பழக்க வழக்கங்கள் வேறுபாடானவை. மேலும் உற்பத்திக் காரணி எந்த அளவிற்கு உற்பத்தியில் பங்கு வகிக்கிறதோ, அந்த அளவிற்கு அக்காரணி சன்மானத்தைப் பெருவிட்டால் மொத்த உற்பத்தி குறைந்துவிடும் நிலை ஏற்படும்.

தேவைக்கேற்ற வருமானம்

ஏற்றத்தாழ்வுப் பிரச்சினையைத் தீர்க்க உதவும் மற்ருெரு தீர்வு தேவைக்கேற்ப வருமானத்தைப் பிரித்தளிக்கும் முறையாகும். இந்த முறையின்படி, சமுதாயத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் உரிமையோடு சேரவேண்டிய உணவு, உடை, வீடு ஆகியவற்றைப் பல துறைகளின் நிபுணர்கள் தீர்மானிப்பார்கள். அவ்வாறு தீர்மானிக்கப்பட்டு தேவைக்குத் தகுந்தவாறு வருமானம் பகிர்ந்து அளிக்கப்படும். எனவே தேவைக்கேற்ற வருமான முறையினுல் எல்லோரும் வேலை செய்து தேசீய வருமானத்திற்கு தங்களால் இயன்ற பங்கைச் செலுத்துவார்கள். இந்த முறை மிகச் சீரான பங்கீட்டு அமைப்பு உடையது. ஏனெனில் இம் முறை ஒரு பக்கம், தனி மனிதன் செலுத்தவேண்டிய அதிக அளவு பங்கை வலியுறுத்துகிறது; மறுபக்கம், ஒவ்வொரு மனிதனுக்கும் தேவைக்கேற்ப அதிக அளவு கொடுக்கப்படவேண்டும் என்று குறிப்பிடுகின்றது. சமுதாயத்திலுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும், தேவை பூர்த்தி செய்வதற்கு வேண்டிய வருமானம் வழங்கப்படவேண்டும். இது எல்லோராலும் வரவேற்கப்படும் ஒரு முகமானக் கருத்தாகும். ஆனுல் இதில் இரண்டுவிதமான சிக்கல்கள் உள்ளன. எனவே இம் முறையைச் செயல்படுத்த இயலாது.

முதலாவதாக, தனி மனிதனின் தேவையை அனுமானிப்பதில் உள்ள பிரச்சினை கடினமானது. தனியாரின் தேவைகளைத்

தீர்மானிக்க முடியாது எனக் கூற முடியாது; அவற்றைத் தீர்மானிப்பது கடினம் என்றே சொல்லலாம். மிக அதிக அளவு காணப்படும் பொருள்களைப் பற்றி முடிவெடுப்பது கடினமில்லை. ஆனால் அந்த முடிவுகள் நியாயமற்றவையாக இருக்கக்கூடும். குறைந்த அளிப்பைக் கொண்டுள்ள பொருட்களைப் பகிர்ந்தளிப்பது கடினமான ஒன்றாகும்.

இரண்டாவதாக, உற்பத்தியை அதிகமாக்குவதற்காக மக்களைத் தொழில் முறையில் பணியாற்றும்படித் தூண்டுவது முடியாததாகும். தேவைக்கேற்ற பங்கீட்டு முறையில், அதிக அளவுக்கு உற்பத்தி செய்யப்படவேண்டும். ஆனால் இது நடைமுறைக்குப் பொருந்தாது. உற்பத்தியைப் பெருக்க மக்கள் தங்களது முழுத்திறனையும் காட்டுவார்கள் என எதிர்பார்ப்பது சரியல்ல. அவர்களது முழுத்திறனையும் வெளிப்படுத்துவதற்குப் பல ஊக்கங்கள் அளிக்கப்படவேண்டும். மேலும் ஒவ்வொருவரின் தேவையும் பூர்த்தி செய்யப்படும் என்ற நிலைமையில், சிலர் உற்பத்தியில் தங்கள் சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய பணிகளைப் பற்றி சிறிதும் அக்கறை கொள்ள மாட்டார்கள்.

இவ்வாறாக தேவைக்கேற்ற பங்கீட்டுமுறை மிகச்சீரிய கருத்து உடையது என்றாலும் நடைமுறைக்குச் சிறிதும் ஏற்றதன்று.

மற்ற தீர்வுகள்

மேற்குறிப்பிடப்பட்ட இரண்டு கோட்பாடுகள் தவிர வேறு இரு பகிர்வு முறைகளும் உள்ளன. அவையாவன: (1) உழைப்பிற்குத் தகுந்த வருமானம்; (2) சமூகத்திற்குப் பயன் விளைவிப்பதற்கு ஏற்ப வருமானம் ஆகியவைகளாகும். மற்ற இரண்டு முறைகளிலும் உள்ள நன்மைகளும், சிறப்புகளும் இந்த முறைகளில் இல்லை. இந்த முறைகள் ஏற்றத்தாழ்வை நீக்குவதற்குப் பதில், ஏற்றத் தாழ்வை உண்டாக்கி அதனை நிலைப்படுத்தும் தன்மை உடையவை.

தற்போதுள்ள பணிகளுக்கேற்ப பகிர்ந்தளிக்கும் முறையில் பல குறைபாடுகள் உள்ளன என்று மார்க்ஸிய சமதர்மவாதிகள் கூறுகின்றார்கள். இப்பகிர்வு முறையால்தான் வருமான ஏற்றத் தாழ்வு ஏற்படுகிறது என்று அவர்கள் வாதாடுகிறார்கள். இது ஓரளவு உண்மையானதேயாகும். ஆனால் நாட்டு மக்களைச் சமமான வருமானம் பெறச்செய்யும் ஒரு சிறந்த பங்கீட்டு முறையை அவர்கள் குறிப்பிடவில்லை. எனவே, இப்போதுள்ள முறையை மிதவாதிகள் முற்றிலும் மாற்றியமைப்பதில்லை. இம் முறைக்குப்

பதிலாக வேறொரு முறையையும் ஆராயப்படுவதில்லை. ஆனால் ஏற்றத்தாழ்வுக்குக் காரணமான குறைகள் களையப்படவேண்டும் என்று அவர்கள் கூறுகிறார்கள்; மிகச் சரியான சமத்துவத்தை ஏற்படுத்த முடியாது என்றும், அவ்விலக்கை நோக்கி முன்னேறத் தான் இயலும் என்றும் அவர்கள் எண்ணுகின்றார்கள்.

மிதமான திட்டம்

பொதுவுடைமைவாதிகள் தற்போதையப் பொருளாதாரப் பகிர்வு முறையைப் பயனற்றது என்று ஒதுக்குகிறார்கள். மித வாதிகள் இம்முறையையும், அதிலுள்ள நன்மைகளையும் போற்றிக் காக்கின்றார்கள். தற்போதைய முறைப்படி உற்பத்திக் காரணி களின் இறுதி உற்பத்தித் திறனுக்கு தகுந்தவாறு வருமானம் பகிரப் படவேண்டும். இதனால் மூன்று முக்கியப் பயன்கள் ஏற்படும். (1) குறைவாக அளிப்பைக் கொண்டுள்ள பொருள்களின் விலை அதிகமாகிறது; மிகுதியான அளிப்பைக் கொண்டுள்ள பொருள் களின் விலை குறைகிறது. எனவே விலை அதிகரிப்பால் பொருட்கள் அதிக அளவில் உற்பத்திச் செய்யப்படுகின்றன; விலை குறைவால் பொருட்கள் குறைந்த அளவிலேயே உற்பத்திச் செய்யப்படு கின்றன. (2) விலைநிலைப் பேருக்கம் ஏற்படுகின்றது; தேவையான பொருட்களின் உற்பத்தியைப் பெருக்கும் வகையில் ஆக்கக் காரணிகள் சிறப்பாகப் பயன்படுத்தப் படுகின்றன. (3) தொழிலின் மாற்றங்களுக்கு ஏற்ப இலாப அளவு மாறிக்கொண்டிருந்தாலும் உற்பத்தியாளர் பலவாறு கட்டுப் படுத்தப் படுகின்றார். தொழிலை ஒழுங்காக நடத்தினால் இலாபம் ஏற்படுகின்றது. திறமை குறைந்த நிர்வாகத்தால் நஷ்டம் தோன்றுகின்றது. எனவே தொழிலைக் கவனத்தோடும், குறைவான உற்பத்தி செலவோடும், உற்பத்தியை அதிகரிக்கும் கருத்தோடும், நுகர்வோரின் தேவைக்கேற்பவும் உற்பத்திச் செய்யவேண்டும் என்று உற்பத்தியாளர் உணர் கின்றார்.

இம் முறையில் மேற்கூறிய நன்மைகளோடு வருமான ஏற்றத் தாழ்வும் ஏற்படுகின்றது. அரசு கூடியவரை சமமான வருவாய் நிலையை ஏற்படுத்த முயற்சி செய்யவேண்டும். மிதமான அமைப்பு, அரசின் கொள்கைகளையும், குறுக்கீடுகளையும் பொருத்துச் செயல் படும். அதிக வருவாயைக் குறைப்பதற்கும், குறைந்த வருவாயை அதிகரிக்கவும் அரசு நடவடிக்கைகளைப் பெருக்குகின்றது.

(i) சம வாய்ப்புகள்

சமவருமானத்தை நிலைநாட்டுவது இயலாததாகும். ஓரளவு சமவருமானத்தைப் பெற சமவாய்ப்புகள் தேவைப்படுகின்றன.

அதாவது நாட்டிலுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் உடை, உணவு ஆகியவை தரப்படுதல் வேண்டும்; பெற்ரோர் எந்த நிலையிலிருந்தாலும் குழந்தைகளுக்குச் சிறந்த கல்வி வசதி அளிக்கப்பட வேண்டும். பிறப்பால் எவ்வாறு இருந்தாலும், எந்தத் தொழில் செய்தாலும், சமூகத்தில் எந்நிலையிலிருந்தாலும் எல்லோருக்கும் சமவாய்ப்பு அளிக்கப்படவேண்டும். உடல் வலிமை, திறமை, அறிவு வளர்ச்சி ஆகியவற்றைச் சிறப்பாகப் பயன்படுத்தும் அளவிற்கு வாய்ப்புகள் கொடுக்கப்படவேண்டும். இவ் வாய்ப்புகள் ஏற்படுவதில் பல தடைகள் உள்ளன. அவைகளை நீக்க அரசு முன்வரவேண்டும். முதலாவதாக, தனியார் சொத்து இதற்குத் தடையாக அமைகிறது. ஏனெனில் தனியார் சொத்து பாரம்பரிய முறையில் ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலை முறைக்கு மாறிக்கொண்டே செல்கிறது. சில வேலைகளுக்கு அதிக ஊதியம் அளிக்கப்படுவது இரண்டாவது தடையாகும். எல்லோருக்கும் சமவாய்ப்பு அளிக்க அரசு இக்குறைகளைக் களைய வேண்டும்.

கட்டுப்பாடற்ற பொருளாதாரத்தில் நில வாரம் உற்பத்தியில் முக்கிய நிலையைக் கொண்டுள்ளது. எங்கெல்லாம் உற்பத்தியை அதிகமாக்குவதற்கு நிலம் தேவைப்படுகிறதோ, அங்கெல்லாம் நிலம் பிரித்தளிக்கப்படுகிறது. உலகின் பல நாடுகளிலும் செல்வந்தர்களுக்கு பெரும் வாய்ப்புகள் உள்ளன. வருமானம் குறைந்தவர்களுக்கு வாய்ப்புகள் குறைவாக உள்ளன. நில உடைமையாளர்கள் உழைப்பைத் தராமலேயே வாரத்தைப் பெறுகின்ரூர்கள். ஹென்றி ஜார்ஜ் (Henry George) தனது 'வளர்ச்சியும் வறுமையும்' (Progress and Poverty) என்ற நூலில் புதிதான ஒரு முறையை விளக்கியுள்ளார். அதன்படி, எல்லா வரிகளும் நீக்கப்படவேண்டும்; அதற்குப் பதிலாக ஒரே ஒரு வரிதான் விதிக்கப்படவேண்டும். இந்த ஒரே வரியினுல் நிலவுடைமையாளர்களுக்குக் கிடைக்கும் நில வாடகை அரசிற்குச் சென்று சேரும்படியாக அமையவேண்டும். அரசு அவ்வரி வருவாயை சமூக வளர்ச்சிப் பணிகளுக்காக செலவு செய்ய வேண்டும். இந்த கோட்பாட்டில் நன்மைகள் உள்ளன; ஆனுல் பல தீமைகளும் இருக்கின்றன. இம்முறை எந்த நாட்டிலும் இதுவரை அரசு செயல்படுத்தவில்லை. பொருளாதார நிபுணர்கள், உழைக்காமலேயே ஈட்டப்படும் வருமானத்திற்கு அதிக வரி விதிக்க வேண்டும் என்று கூறுகின்ரூர்கள். இதன் விலைவால் நிலத்தின் மதிப்பு உயர்ந்து கொண்டே செல்வது தவிர்க்கப்படும். உழைக்காமல் பெறப்படும் நிலவாரம் போன்ற வருமானங்களின் மீது அரசு மிகுதியான வரியை விதிக்க வேண்டும். இவ் வரி

நிலத்தின் மதிப்பை மாற்றுது; எனவே கிடைக்கும் வருமானமும் இதனுல் பாதிக்கப்பட மாட்டாது.

வாய்ப்புகளால் ஏற்படும் மற்ரெரு முக்கிய நன்மை தொழில் இலாபமாகும். கொள்ளை இலாபங்களைத் தவிர்க்க வழி முறைகள் பின்பற்றப்படுகின்றன. ஆனுல் இலாப நோக்குடனேயே தொழில்கள் தொடங்கப்படுகின்றன. இலாபம் திறமைக்கும், தொழில் முன்னேற்றத்திற்கும் தூண்டுகோலாக அமைகிறது. இலாபத்தின் அளவு அரசால் கட்டுப் படுத்தப்படும்போது, தொழில் முன்னேற்றம் பாதிக்கப்படுகின்றது. நேர்மையற்ற பணி களுக்கும், அதிக அளவு இலாபத்திற்கும் நெருங்கியத் தொடர்பு உண்டு. முற்றுரிமை நிலை உற்பத்தியைக் கட்டுப் படுத்துதல், ஊகவாணிபம், தரமற்ற பொருள்களையும் கலப்பட பொருள்களையும் விற்பனை செய்தல் ஆகிய பல முறைகளிலும் கொள்ளை இலாபங்கள் பெறப்படுகின்றன. இவ்வாறு பெறப்படும் இலாபங்கள் திறமையை உயர்த்துவதற்குத் தூண்டுதலாக அமைவதில்லை. இதனுல் இந்த இலாபங்களுக்கும், மக்கள் ஆற்றும் பணிகளுக்கும் தொடர்பே இல்லாமல் போய்விடும். இத்தகைய வழிகளில் பெறப்படும் இலாபங்கள் உண்மையாகப் பணியாற்றுமல் கிடைக்கும் வருமான மாகும். வருமான ஏற்றத்தாழ்வு மாற வேண்டுமானுல், இவ்வாறு பெறப்படுகின்ற வருமானம் குறைக்கப்பட வேண்டும். இவ் வருமானத்தைக் குறைக்க நல்லதொரு வழிமுறை அமைந்துள்ளது. அதன்படி அதிக இலாபங்களைப் பெறும் தொழில்களின்மீது வளர் வீத வரிகள் விதிக்கப்படவேண்டும். கள்ளச்சந்தை, தரமற்ற கலப்படப் பொருள்களை விற்பனை செய்தல் போன்ற மக்கள் நலனைப் பாதிக்கும் நிலைகளை அரசு பல சட்டங்களின் வாயிலாகக் கட்டுப் படுத்த வேண்டும்.

இவ்வாருக இம்முறை, நிலவாரம், தொழில் இலாபம் ஆகிய வற்றின் மூலம் உண்மையான உழைப்பைத் தராமலேயே நில வுடைமையாளர்களும், தொழில் முதலாளிகளும் பெறுகின்ற வருமானத்தைக் குறைக்கவும், நீக்கவும் பாடுபடுகிறது. நிலத்திற் கான வாரமும், தொழில் முதலீட்டிற்கான இலாபமும் அதிக வருமானத்தைத் தருகின்றன. இந்த வருமானத்தைக் குறைப்பதால் வாய்ப்புகள் பெருகுவதும் குறைந்துவிடும்.

சொத்துப்பேறைக் கட்டுப்படுத்துதல் (Restriction of Inheritance)

அதிக வாய்ப்புகள் ஏற்படுத்துவதைத் தடுத்தால் மட்டும் போதாது; தற்போதுள்ள அதிக வாய்ப்புகளும் நீக்கப்படவேண்டும். அப்போதுதான் எல்லோருக்கும் சமவாய்ப்பு கிடைக்கும்,

சொத்துப்பேறு முறையில் சொத்து தந்தையிடமிருந்து மகனுக்கு மாறிக்கொண்டே செல்வதால் ஏற்றத்தாழ்வு தொடர்ந்து நீடிக்கின்றது. அதனைத் தடுக்க வேண்டுமானுல் சொத்துப் பேறின் மீது அதிக வரி விதிக்கவேண்டும். சொத்தின் உரிமையாளர் இறந்தவுடன் சொத்தின் மீது இரு வகையான வரிகள் விதிக்கப் படலாம். முதல் முறையில், சொத்து அடுத்தச் சந்ததி உரிமையாளருக்கு மாறுவதற்கு முன் பண்ணை வரி விதிக்கப்படுகின்றது. இரண்டாவது முறையில், சொத்துக்களைப் பின்வரும் தலைமுறையினருக்கு சாசனமாக எழுதுவதற்குமுன் வரி விதிக்கப்படுகின்றது. இதற்கு சொத்துப் பேறு வரி என்று பெயர். இதைவிடத் தீவிரமான முறையையும் பின்பற்றலாம். இம் முறையில் சொத்துரிமையாளர் இறந்தவுடன் அரசு சொத்தின்மீது மிக அதிக அளவு வரியை விதிக்கும். இவ்வாறு தனியார் சொத்துக்கள் ஒரு சிலரிடம் குவிதலைத் தடுக்கலாம். எல்லாப் பொருளாதார நிபுணர்களும் மரண வரிக்குச் சாதகமாகப் பரிந்துரைக்கின்றுர்கள். ஏனெனில் இவ்வரி சொத்தின் ஏற்றத்தாழ்வு அதிகரிப்பதைத் தடுக்கின்றது; வழிவழியாக பெரும் பண்ணைகள் தொடர்ந்துகொண்டே இருப்பதை நீக்குகின்றது. செல்வந்தர்களின் சந்ததியினர் உண்மையான உழைப்பைத் தரவும், பணிகளை ஆற்றவும் இது உதவுமெனலாம். அரசின் தீவிரக் கொள்கைகளாலும், நடவடிக்கைகளாலும் மட்டுமே மக்கள் அனைவருக்கும் சம வாய்ப்பை அளிக்கமுடியும். சொத்துப் பேறு வரிக்கு எதிரான கருத்துகளும் உள்ளன. இவ்வகை வரிகள் தனியார் சொத்துரிமையைப் பறிக்கின்றன; பணியாற்றவேண்டும் என்ற விருப்பத்தைப் பாதிக்கின்றன; சேமிக்கவேண்டும் என்ற மனப்பான்மையை இழக்கச் செய்கின்றன. சேமிப்புக் குறைந்தால் மூலதனத் திரட்சியும் தேசீய வருமானமும் பாதிக்கப்படும். ஆனல் இக் கருத்து சரியானதல்ல. தான் இறந்த பிறகு சொத்தின்மீது வரி விதிக்கப்படும் என்ற நினைப்பால் உடைமையாளர் உற்பத்தியில் ஆர்வம் காட்ட மாட்டார், சேமிக்கமாட்டார் என்று கருதுவது தவருனது. சொத்துப் பேறு மீதான வரியால் மூலதனத்திரட்சி பாதிக்கப் பட்டாலும், அந்தப் பாதிப்பை அரசின் நடவடிக்கைகளால் நீக்க முடியும்.

சொத்துப் பேறின் மீதான வரிகள் வளர்வீதத்தில் விதிக்கப் படவேண்டும். அப்போதுதான் செல்வத்தில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகள் குறையும். வரி வீதம் உயர்வாகவும், வளர் வீதத்திலும் இருக்கவேண்டும். இம் முறையினுல் சிறிய பண்ணைகளுக்கு வரிச் சலுகை அளிக்கப்படவேண்டும். பெரிய பண்ணைகளின்மீது அதிக வரிகள் விதிக்கப்படவேண்டும். மேலும் சொத்துப் பேறு அடுத்த

வாரிசுதாருக்கு மாறும்போது வரியின் வீதம் அதிகமாக்கப்பட வேண்டும். மூன்று வழிகளில் சொத்துப்பேறு வரி வருமான ஏற்றத் தாழ்வைக் குறைக்கும்படி செய்கிறது. முதலாவதாக, வாய்ப்புகள் குறைவதால் அதிக வருமானங்களும் குறைகின்றன. இரண்டாவதாக, வரிச்சுமை செல்வந்தர்கள்மீது அதிகமாகவும், வறியோர்மீது குறைவாகவும் இருக்கிறது. இறுதியாக, இவ்வரியின் மூலம் அரசுக்கு வருமானமும் பெருகுகிறது. இந்த வருமானத்தை மூலதனமாகக் கொண்டு அரசு அவசியமான பொருட்களை உற்பத்திச் செய்யலாம். குறைவாக உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் உற்பத்தியை அதிகரிக்கலாம். இவ்வாறு உற்பத்திச் செய்யப்படும் பொருள்களை கடைநிலை மக்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் கிடைக்கும்படி செய்யலாம். இவ்வாறு காலப்போக்கில் நிலங்கள் எல்லாம் செல்வந்தர்களிடமிருந்து அரசின் உடைமைக்கு மாறும். அரசு நிலங்களை ஏலத்திற்கு விட்டு அதனால் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு இன்னும் பல பயன்களைச் செய்யும். இவ்வாறு அரசிற்கு நிலம் கிடைக்கச் செய்வதற்கு பல ஆண்டுகள் ஆகும்; அல்லது ஒரு நூற்றாண்டுக் காலமும் ஆகலாம்.

வருமான வரி

ஏற்றத்தாழ்வை நீக்கச் சொத்துப்பேறு வரி விதிக்கப்படலாம். இது சொத்து வேறுபாட்டைக் குறைக்குமே தவிர, வருமானத்தைப் பாதிக்காது. சில தொழில்கள் மிக அதிக வருமானத்தைப் பெறுகின்றன. இவ் வருமானத்தைக் குறைக்க வருமான வரி விதிக்கப்படுகிறது. வளர்வீத வருமான வரி மிகக் குறுகிய காலத்தில் வருமான ஏற்றத்தாழ்வை நீக்கிவிடும். இந் நிலையைப்பெற வருமானவரி விதிப்புமுறை சிறப்பாகச் செயல்படுத்தப்பட வேண்டும். வருவாய் அதிகரிக்கும்போது வருமான வரி வீதமும் உயர்த்தப்படுகின்றது. குறைவான வருமானம் பெறுபவர்கள் வருமான வரி செலுத்த வேண்டியதில்லை. கோடிக்கணக்கிலும், இலட்சக்கணக்கிலும் சம்பாதிக்கப்படும் வருமானத்தின்மீது வரியின் கைகள் மிக அழுத்தமாகப் பதியும். சிலர் சொத்துக்கு உரிமையாளராக இருப்பதால் வருமானம் கிடைக்கிறது. இவ்வாறு பணியாற்றாமல் பெறப்படும் வருமானத்தின்மீது அதிக வரி விதிக்கவேண்டும்; ஊதியத்தின்மீது குறைவான வரி விதிக்க வேண்டும். வருமான வரி அரசின் வருமான நோக்கத்திற்காக மட்டும் விதிக்கப்படுவதில்லை; வருமான ஏற்றத்தாழ்வைக் குறைக்கவும் அது விதிக்கப்படுகிறது. ஆனால் வரிகள் ஏற்றத் தாழ்விற்குக் காரணமானவற்றை நீக்குவதில்லை; ஏற்றத் தாழ்வின் நிலைகளைத்தான் கட்டுப்படுத்துகின்றன. இவ்வகையில்

பிரச்சினைக்குத் தீர்வு காண்பதைவிட பிரச்சினையே இல்லாமல் செய்வது நல்லது.

வருமான வரி பணியாற்றும் திறமையைப் பெரிதும் பாதிக்கும் என்பது சிலருடைய கருத்தாக உள்ளது வேலை செய்யும் திறன் குறைவதால் வருமானம் குறைந்து சேமிப்பும் குறையும். சேமிப்புக் குறைவால் குறைவான முதலீடு மட்டுமே செய்யப்படும். இதனால் உற்பத்தியின் அளவும் பாதிக்கப்படுகின்றது. ஒருவன் தன் வருமானத்தின் பெரும்பகுதியை வரியாகப் பெற்று விட்டால் மக்களின் வாழ்க்கைத் தரம் பாதிக்கப்படுகின்றது. தவிர, சேமிப்பு வருமானத்தைப் பொருத்தும் அமைகின்றது வருமானம் அதிகமாக இருந்தால், சேமிப்பின் அளவும் அதிகமாக அமையும். பல நாடுகளில் அதிக வருமானம் பெறும் மிகக் குறைந்த மக்கட் தொகையாலேயே மூலதனத் திரட்சி ஏற்படுகின்றது. வரி விதிப்பால் வேலைத்திறன், சேமிப்பு, முதலீடு ஆகியவை பாதிக்கப் படுவதால் தேசீய வருமானமும் குறைவடைகின்றது. அதனால் பொருளாதாரச் சீர்கேடுகளும் ஏற்படுகின்றன. ஆயினும், இக் கூற்றை முற்றிலும் சரியானது எனக் கொள்ள முடியாது. முதலாவதாக வேலைத்திறமை குறைந்து விடுவதை, பின்தங்கிய, நடுத்தர குடும்பத்தினரின் வருமானத்தை உயர்த்த அரசு எடுக்கும் நடவடிக்கைகள் சரிசெய்து விடுகின்றன. இரண்டாவதாக, செல்வந்தர்களிடையே ஏற்படும் மூலதனத் திரட்சி குறைவதற்கு எதிராகக் கடைநிலை, மத்தியதர வகுப்பினரிடையே சேமிப்பு அதிக மாவதால் அவர்கள் மூலம் மூலதனத் திரட்சி பெருகும். மேலும் அரசு வரியின் ஒரு பகுதியை மூலதன உருவாக்கத்திற்குப் பயன் படுத்துகின்றது. அதற்காக அரசு தொழில்துறை, போக்குவரத்துத் துறை, செய்தித் தொடர்புத்துறை முதலியனவற்றில் முதலீடு செய்கிறது. சொத்துப் பேறு வரியையும், வருமான வரியையும் எதிர்ப்பவர்கள் பொதுச் செலவினங்களால் ஏற்படும் பயன்களை நன்கு உணர்வதில்லை. வரிவிதிப்பால் உண்டாகும் விருப்பமற்ற விளைவுகளை ஆராயும்போது, பயன்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். வரி விதிப்பால் வரி கொடுப்போரின் மீதான சுமை அதிகமாகிறது. அதன் விளைவாக உற்பத்திக் குறைந்து விடுகிறது என்பதை எவரும் மறுக்க இயலாது. ஆனால் வரி வருவாயைக் கொண்டு நாட்டை வளர்ச்சியடையச் செய்யும் பணிகளை அரசு மேற்கொள்கின்றது; நாட்டைத் தொழில் மயமாக்குகின்றது. இதனால் தேசீய வருமானமும் அதிகரிக்கின்றது. ஆனால் இத்தகைய வருவாயை நாட்டின் பாதுகாப்பிற்கும், உள்நாட்டில் அமைதியை நிலை நாட்டவும் செலவு செய்யும்போதுதான் உற்பத்திப் பெருக்கம் தடைபடுகின்றது.

ஊதியத்தின் நிலையை உயர்த்தத் தேவையான நடவடிக்கை

நில வாரத்தாலும், தொழில் இலாபங்களாலும் பெரும் வாய்ப்புகள் விளையும்போது, குறைந்த ஊதியத்தால் அதிக வாய்ப்புகள் ஏற்படுவதில்லை. ஏழ்மைக்குக் குறைந்த ஊதியம் மட்டும் காரணமல்ல. வேலையில்லாத் திண்டாட்டம், உடல்நலக் குறைவு, முதியநிலை, விபத்துக்கள், வீணான செலவு ஆகியவையும் வறுமை நிலைக்கு வழி கோலுகின்றன. சட்டம் இயற்றி தொழிலாளிக்குக் கொடுக்க வேண்டிய குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிக்கவேண்டும். தொழிலாளர் சங்கங்களை அரசு ஊக்குவிக்க வேண்டும். உழைப்பின் அளிப்பு கட்டுப்படுத்தப்பட வேண்டும். எல்லா நலம் காக்கும் அரசுகளும் வேலையின்மை, வயோதிக நிலை, உடல் நலமின்மை, விபத்து முதலியனவற்றிற்கு எதிராகக் காப்பீட்டு வசதிகளை அளிக்கின்றன. வேலையின்மையைக் குறைக்க மேலும் பல நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். தொழில் மந்தகாலத்தில் பொதுப்பணிகளைத் தீவிரமாக்க வேண்டும். அரசின் அதிக முதலீட்டால் வேலையின்மையைத் தீர்க்கலாம். பொதுக்கல்வியும், தொழில் நுட்பக் கல்வியும் வளர்க்கப்படவேண்டும். அப்போதுதான் பொறுப்பின்மையும், மூட நம்பிக்கையும் அகலும். கல்வியறிவு பெற்றவர்கள் உழைத்து வருமானத்தைப் பெருக்க விரும்புவார்கள். இந் நடவடிக்கைகளால் வறுமை நீக்கப்படும்; வருமான ஏற்றத்தாழ்வும் குறைக்கப்படும்.

சமுதாயப் பணிகளை விரிவாக்குதல்

ஒவ்வொரு அரசும் வருமானத்தின் பெரும்பகுதியை சமூகப் பணிகளுக்காகச் செலவிடுகின்றது. இலவச மருத்துவ வசதி, குடியிருப்பு வசதி, இலவசக் கல்வி போன்றவற்றை அரசு அளிக்க வேண்டும். அரசின் காப்புறுதி வசதிகளும் அவசியமாகின்றன. எப்போதும் அரசு இவ்வகைப் பணிகளைச் செய்து சமுதாய வசதிகளைப் பெருக்கவேண்டும். அரசு வறியவர்களுக்கு வசதிகளை அளிக்க வேண்டுமே தவிர, பண உதவி செய்யக்கூடாது. பணமாகக் கொடுக்கப்பட்டால், அது வீணே செலவழிக்கப்படும். இவ்வாறு பயன்களை உருவாக்குவதால் இரு வழிகளில் ஏற்றத்தாழ்வு குறைகிறது. ஒருபக்கம், வரிமூலமாக செல்வந்தர்களின் அதிகப்படியான வருமானம் குறைக்கப்படுகிறது; மறுபக்கம், இந்த வரிப் பணத்தைக் கொண்டு ஏழைகளுக்குப் பயனளிக்கும் பொதுப் பணிகள் அரசால் செய்யப்படுகின்றன.

எனவே அதிக வருமான வரிவிதிப்பால் குறைக்கப்பட்டு, குறைவான வருமானம் பெறுபவர்களின் ஊதியம் அதிகரிக்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி முழுமையாக வருமானச் சமநிலையைப் பெறமுடியாது. எனினும் ஓரளவு வருமானச் சமநிலையை வரிவிதிப்பு முறையின் மூலமும், பொதுச் செலவினங்கள் மூலமும் ஏற்படுத்தலாம்.

33. முன்னேற்றத்திற்குத் திட்டமிடுதல்

(Planning for Development)

I. பொருளாதார முன்னேற்றத்திற்குத் திட்டமிடுதலின் விளக்கம்

முன்னேற்றத்திற்குத் திட்டமிடுதல் என்பது பல பொருளாதார நிபுணர்களாலும் பல வகைகளில் விளக்கப்பட்டுள்ளது. இது முதலாளித்துவம் (Capitalism), சமதர்மம் (Socialism), பொதுவுடைமை (Communism) ஆகியவற்றினின்றும் வேறுபட்டது. இவை யாவும் பொருளாதார முன்னேற்றத்தை அடைய பல நாடுகளும் பின்பற்றுகின்ற வெவ்வேறு வகைப்பட்ட கொள்கைகளாகும். பொருளாதார முன்னேற்றத்திற்கும் திட்டமிடுதலுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. இன்றைய வளர்ச்சியடையாத நாடுகள் பலவும் திட்ட மிட்ட வளர்ச்சி முறைகளையே பின்பற்றுகின்றன. பொருளாதார நடவடிக்கைகளில் அரசு எவ்வகையில் தலையிட்டாலும் அதைத் திட்டம் எனக் கருதலாம். ஆனால் அரசு திட்டமிடாமலேயே பொருளாதார நடவடிக்கைகளில் தலையிட முடியும். திட்டமென்பது ஒரு குறிக்கோளை அடைய உதவும் முறையாகும். திட்டத்தை நிறைவேற்றுவதற்குமுன் திட்டத்தின் நோக்கங்கள் வரையறுக்கப்படுகின்றன. பலவிதத் துறைகளில் பெறவேண்டிய முன்னேற்றத்தின் அளவுகள் நிர்ணயிக்கப்படுகின்றன. முக்கியத்துவ நிலைகளுக்கு ஏற்ப அரசு திட்டச் செலவுகளைச் செய்கின்றது பெற வேண்டிய உற்பத்தி அளவுகளின் குறியிலக்குகள் கணிக்கப்படுகின்றன. பொருளாதார, சமுதாய, அரசியல் நோக்கங்களுக்காகவும் திட்டமிடப்படுகின்றன. திட்டத்தினுள்ளே பலவகைத் திட்டங்களும் அமைந்துள்ளன.

பேராசிரியர் லூயிஸ் (Prof. Lewis) பொருளாதாரத்தில் 'திட்டமிடுதல்' என்னும் சொல் பல்வேறு வகைகளில், பல பொருள்களில் பயன்படுத்தப்படுகின்றது என்று குறிப்பிடுகின்றார். திட்டமிடுதல்

என்பது கீழ்க்கண்ட பல நிலைகளையும் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது என அவர் கூறுகின்றார்:

1. முதலாவதாக, திட்டமிடுதல் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பிற்கான முன்னேற்றத்தைப் பெற எடுக்கப்படும் நடவடிக்கைகளைக் குறிக்கும். உதாரணமாக நகரத்திட்டம், கிராமத்திட்டம், நாட்டின் திட்டம் போன்ற பலவகைத் திட்டங்கள் உள்ளன. வளர்ச்சியைப் பெற குறிப்பிட்ட இடத்திலுள்ளவர்கள் சில நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார்கள். அதைத் திட்டமிடுதல் எனக் கூறலாம்.

2. இரண்டாவதாக, எதிர்காலத்தில் எந்த அளவிற்குப் பணத்தைச் செலவிடுவது என்பதை அரசு தீர்மானிப்பதும் திட்டமேயாகும். ஒரு அரசு பல வழிகளில் வருவாயைப் பெறுகின்றது. பெற்ற அவ்வருவாயை எவ்வழிகளில் எதிர்காலத்தில் செலவிடுவது என்பதைத் தீர்மானிப்பது, செலவிடுவது ஆகிய யாவும் திட்டமிடுதலில் அடங்குபவைகளாகும்.

3. மூன்றாவதாக, திட்டமிட்ட பொருளாதாரத்தில் ஒவ்வொரு உற்பத்தி நிறுவனமும் அதற்கு அளிக்கப்பட்ட உழைப்பு வசதிகள், கருவிகள், சாதனங்கள் ஆகியவற்றைக்கொண்டு உற்பத்தியை மேற்கொள்கின்றன. உற்பத்திச் செய்யப்பட்ட பொருட்களை எந்த நிறுவனத்திடம் அளிக்க வேண்டும் அல்லது எவரிடம் தரலாம் என்பதும் உத்தரவிடப்படுகின்றது. திட்டத்தின் மூலம் உற்பத்தி நிலைகளில் நிறுவனங்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன; விற்பனை முறைகளிலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

4. நான்காவதாக, பொதுத்துறைக்கு அல்லது தனியார் துறைக்கு அரசு உற்பத்திக் குறியிலக்குகளை நிர்ணயிப்பதும் திட்டமிடுதல் என்றே சொல்லப்படுகின்றது. பொதுத்துறை, தனியார்துறை இரண்டிலும் அரசு உற்பத்திக் குறியிலக்குகளை நிர்ணயிப்பதும் உண்டு. ஆனால் இவ்விதத் திட்டத்தைப் பல அரசுகளும் பின்பற்றுவதில்லை. மிகப் பெரிய தொழில்களின் உற்பத்திக் குறியிலக்குகள் மட்டும் அரசால் நிர்ணயிக்கப்படுகின்றன.

5. ஐந்தாவதாக, பொருளாதாரம் முழுமைக்குமான குறியிலக்குகள் நிர்ணயிக்கப்படுகின்றன. பொருளாதாரத்தின் பல துறைகளுக்கிடையே உழைப்பு, அந்நியச் செலாவணி, கச்சாப் பொருட்கள் ஆகிய பலவும் பகிர்ந்தளிக்கப்படுகின்றன.

6. இறுதியாக, முன்னமேயே நிர்ணயிக்கப்பட்ட குறியிலக்குகளைப் பெறும் வகையில் அரசு தனியார் துறைகளைத் தூண்டு

கின்ற நிலையும் திட்டமேயாகும். தனியார் நிறுவனங்களின் உற்பத்தி யளவுகள் நிர்ணயிக்கப்பட்டு, அவற்றைப் பெறச் செய்ய அரசு பல முறைகளையும் பின்பற்றுகின்றது.

ஆனால் திட்டமென்பது பொருளாதாரத்தைப் பற்றியது. திட்ட மிடுதல் என்பது நகரத்திட்டங்கள், சமுதாய நலத்திட்டங்கள், பொதுப்பணித் திட்டங்கள், கிராமத் திட்டங்கள் ஆகியவற்றைக் குறிப்பதாகாது. பொருளாதாரத்தின் பலவிதத் துறைகளையும் பற்றிய தல்ல திட்டமிடுதல் என்பது; அது தனித்தனியான பல துறைகளை யும் கொண்ட பொருளாதாரத்தைப் பற்றியதாகும்.

திட்டமிடுதல் பற்றிய பலவித இலக்கணங்கள் பல பொருளிய லாளர்களாலும் தரப்படுகின்றன. பேராசிரியர் இராபின்ஸ் (Prof. Robbins) வரையறை செய்வதுபடி, "திட்டமிடுதல் என்பது தனியாருடைய உற்பத்தி, மாற்று நடவடிக்கைகளை மொத்தமாகக் கட்டுப்படுத்துவதாகும்."

உற்பத்தி நடவடிக்கையை இயக்குவதாக திட்டமிடுதல் அமைகிறது என ஹேயெக் (Hayek) குறிப்பிடுகின்றார்.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இயற்கை வளங்களை நன்கு பயன்படுத்த வேண்டும். ஒரு நாட்டின் வளங்களை நன்கு பயன்படுத்த திட்டமிடுதல் தேவைப்படுகின்றது. திட்டமிடுதலில் பலவித நோக்கங்கள் வரையறுக்கப்படுகின்றன. எக்காலத்திற்குள் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற காலவரம்பு நிர்ணயிக்கப் படுகின்றது. செயல் திட்டங்கள் முக்கியத்துவத்தின் அடிப்படை யில் அமைகின்றன. திட்டமிடுதலுக்காகப் பலவிதப் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. இவ்வாறு பல நிலைகளையும் கொண்ட திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டால்தான் பொருளாதார வளர்ச்சி வீதம் உயர்வடையும்.

"பலவிதமான சிக்கல்களுக்கும் தீர்வு காண உதவுவது பொருளாதாரத் திட்டமே" என ராபின்சன் கூறுகிறார். வளர்ச்சிக் குன்றிய நாடுகளில் திட்டமிடுதல் இன்றியமையாதது. வளர்ச்சிக் கான திட்டங்கள் வகுக்கப்படாவிட்டால் விரைவான முன்னேற்றத் தைப் பெற இயலாது. ரஷ்யா திட்டமிட்ட வளர்ச்சியின் மூலமே வியத்தகு முன்னேற்றத்தைப் பெற்றது. திட்டமிடுதலால் ஒரு நாட்டின் பல வளங்களும் சிறப்பாக உற்பத்திக்குப் பயன்படுத்தப் படுகின்றன. சேமிப்பு, முதலீட்டு வீதங்கள் உயரவும் திட்டங்கள் உதவுகின்றன. நாட்டின் தேவைகளுக்கு ஏற்ப உற்பத்தியானது செய்யப்படுகின்றது. திட்டங்கள் பல பொருளாதாரப் பிரச்சினை

களுக்குத் தீர்வு காண்கின்றன. பொருளாதார வளர்ச்சி தொடர்ச்சியாக, நிரந்தரமாக அமையவும் அவை உதவுகின்றன.

பொருளாதார முன்னேற்றத்தின் நிலைகளில் பல தடைகளும் தோன்றுகின்றன. அத்தடைகளைக் களைய உதவுபவை திட்டங்களேயாகும். ஆக்கப்பணிகளை விரிவாக்கி விரைவாக்கவும் திட்டமிட்ட வளர்ச்சி தேவை. சுதந்திரமடைவதற்கு முன்பு பொருளாதாரம் இருந்த நிலைக்கும், தற்போது உள்ள நிலைக்கும், அதிகவேறுபாடு உள்ளது. தற்போது வேளாண்மை வளர்ந்துள்ளது; பசுமைப் புரட்சி தோன்றி விட்டதா இல்லையா என எண்ணத் தூண்டும் அளவிற்காவது உயர்ந்துள்ளது. போக்குவரத்து வசதிகள், மின்சார உற்பத்தி, மருத்துவ வசதிகள், செய்தித் தொடர்பு வசதிகள், நீர்ப்பாசன வசதிகள், குடியிருப்பு வசதிகள் ஆகிய பலவும் பெருகியுள்ளன. இவற்றின் பெருக்கத்திற்குக் காரணம் திட்டமிட்டப் பொருளாதார வளர்ச்சியேயாகும். விடுதலை அடைவதற்கு முன்பிருந்த வாழ்க்கைத்தரத்தைவிட தற்பொழுது தரமான வாழ்வை மக்கள் பெற்றிருக்கின்றனர்.

பேராசிரியர் ராபின்ஸ் தரும் விளக்கமாவது, "ஒரு நோக்கத்தோடு செயல்படுத்தப்படுவதும், தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தப்படுவதும் திட்டம்" என்பதாகும். திட்டமிட்ட பொருளாதாரத்தில் பொருளாதார நடவடிக்கைகள் நெறிப்படுத்தப்படுகின்றன. சோவியத் ரஷ்யாவில் பொதுவுடைமைக் கொள்கைகளை நிறைவேற்ற அரசு திட்டமிட்டுச் செயல்படுத்தியது. பொதுவுடைமை நாடுகளில் அரசு எவ்விதத் தீவிர நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியும். ரஷ்யத் திட்டங்கள் வெற்றி பெற்றமைக்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்தது. திட்டங்கள் பொருளாதார, சமுதாய அமைப்புகளில் மாறுதல்களை ஏற்படுத்துகின்றன. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உதவும் திட்டங்கள் வேலையின்மைச் சிக்கலையும் தீர்க்க உதவுகின்றன. வலுவான பொருளாதாரம் ஏற்படவும் திட்டங்கள் உதவ முடியும். வேளாண்மையில் புரட்சிகரமான வளர்ச்சியை ஏற்படுத்தவும், தொழில் முன்னேற்றத்தை விரைவு படுத்தவும் அவை உதவுகின்றன. பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளிலும் சமமான வளர்ச்சியை நீண்ட காலத்தில் பெறவும் திட்டங்கள் உதவுகின்றன.

II. வளர்ச்சியடையாத நாடுகளில் திட்டமிடுதலின் அவசியம்

வளர்ச்சியடையாத நாடுகளின் திட்ட நோக்கங்களில் முக்கியமானது பொருளாதார வளர்ச்சி வீதத்தை அதிகப்படுத்துவதாகும். பேராசிரியர் கட்கில் (Prof. Gadgil) குறிப்பிடுவதாவது, "பொருா

தார முன்னேற்றத்திற்கான திட்டங்கள் நிறைவேற்றப்படும்போது பொருளாதார நடவடிக்கைகள் அரசால் கட்டுப்படுத்தப்படுகின்றன."[1]

திட்டங்கள் மூலதனத்திரட்சி வீதத்தை அதிகரிக்கின்றன. வருவாய்ப் பெருக்கம் ஏற்பட்டு சேமிப்பும், முதலீடும் உயர்வடைகின்றன. வளர்ச்சியடையாத நாடுகளில் பெரும்பகுதி மக்கள் வறியநிலையில் இருப்பதால் மூலதனத்திரட்சியைப் பெறுவது கடினமாகிறது. அவர்களுடைய நுகரும் விருப்பம் அதிகம் உள்ளமையாலும், குறைவான வருவாயின் அளவினாலும் சேமிக்கும் திறனும் குறைந்த நிலையிலேயே உள்ளது. அதன் விளைவாக குறைந்த முதலீட்டு வீதம் அமைவதால், மூலதனப் பற்றுக்குறை ஏற்பட்டு உற்பத்திக் குறைவாகவே உள்ளது. குறைந்த உற்பத்தி குறைவான வருவாயை மட்டுமே தருகிறது. இவ்வித 'வறுமை வட்டம்' (Vicious Circle of Poverty) பின்தங்கிய நாடுகளில் அமைந்திருக்கின்றது. இவ்வறுமை வட்டத்தை முன்னேற்றத் திட்டங்களின் மூலமே உடைக்கலாம். இதற்கு இருவித முறைகளை வளர்ச்சி குன்றிய நாடுகள் பின்பற்றலாம்:

முதலாவதாக, வெளிநாடுகளினின்றும் மூலதனத்தை இறக்குமதி செய்து முன்னேற்றத் திட்டதைக் கைக்கொள்ளலாம். இரண்டாவதாக, திட்டத்தை நிறைவேற்றத் தேவையான நிதியைப் பெற கட்டாயச் சேமிப்பை மக்களிடம் ஏற்படுத்தவேண்டும்.

வளர்ச்சியடையாத நாடுகளில் திட்டமிட்ட முன்னேற்றம் வலியுறுத்தப்படுகின்றமைக்குக் காரணம், அந் நாடுகளில் அமைந்துள்ள 'வேலையின்மை', 'மறைந்துள்ள வேலையின்மை' ஆகிய இரண்டுமேயாகும். இவற்றைத் தீர்க்க உதவுவது திட்டமேயாகும். இந்நாடுகளில் ஏராளமான உழைப்பின் அளிப்பு அமைந்திருக்கின்ற நிலையில், மூலதனப் பற்றுக்குறையும் அமைந்திருக்கின்றது. வேலையின்மையில் உள்ள உழைப்பாளர்களுக்கு இலாபகரமான வேலைவாய்ப்புகள் அளிக்கபட வேண்டும். மத்திய அரசின் திட்டத்தின் வாயிலாக இச்சிக்கலுக்கு வழி காணமுடியும்.

Agriculture Vs Industry.

தொழில்கள் தாமாகவே தோன்றி வளராதபோது திட்டமிட்டு அவற்றை வளர்க்க வேண்டியது அவசியமாகின்றது. பொருளாதாரத்தின் பல துறைகளிலும் சமநிலை வளர்ச்சியைப் பெற உதவுவது திட்டமே ஆகும். விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப் பெற வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் வேளாண்மையை வளர்த்து

1. D. R. Gadgil, Planning and Economic Policy in India, p. 88.

தொழில் துறையை மேம்பாடு செய்ய வேண்டும். சமுதாய, பொருளாதார அவசிய வசதிகளைப் பெருக்க வேண்டும். உள் நாட்டு வாணிபமும், வெளிநாட்டு வாணிபமும் ஒருங்கே பெருக வேண்டும். இவ்விதமாக அமைந்துள்ள பலதுறைகளும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. இவை எல்லாவற்றிலும் சமநிலை வளர்ச்சியை ஏற்படுத்துதல் நல்லது. அதற்கு ஒரே சமயத்தில் எல்லாத்துறைகளிலும் முதலீடு செய்வது அவசியமாகிறது. பல துறைகளையும் ஒரே சமயத்தில் வளர்ப்பது முன்னேற்றத் திட்டங்களின் மூலமாகவே முடியும்.

தொழில்துறையோடு வேளாண்மைத்துறையும் வளர்க்கப்பட வேண்டுமெனக் கூறப்படுகின்றது. ஏனெனில் இவ்விரு துறைகளும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு கொண்டவைகளாகும். வேளாண்மையை மாற்றியமைத்தலின் மூலம் உபரி உற்பத்தி கிடைக்கும். தவிர உபரி உழைப்பாளர்களும் வேளாண்மையினின்றும் பெயர்ந்து தொழிற் துறையில் அமைவார்கள். வேளாண்மை வளர்ச்சி தொழில் துறைக்குத் தேவையான கச்சாப்பொருட்களை அளிக்கின்றது. உணவு பற்றுக்குறை நிலை நீங்குகின்றது. இதனால் உழைப்பாளர்களின் உற்பத்தித்திறன் உயர்வடையும். உணவுப் பொருட்களின் இறக்குமதியையும் குறைக்கலாம்.

பொருளாதார, சமுதாய அவசிய வசதிகளை மேம்படுத்தாமல் வேளாண்மை, தொழில் துறை ஆகிய இரண்டிலும் வளர்ச்சியைப் பெற முடியாது. சாலைகள் அமைத்தல், கால்வாய்கள் வெட்டுதல், இருப்புப் பாதைகள் அமைத்தல், மின்சார நிலையங்கள் ஏற்படுத்துதல் போன்ற யாவும் வேளான்மை, தொழில் முன்னேற்றங்களுக்கு உதவுவன எனலாம். இவற்றைப் போன்றே கல்வி நிறுவனங்கள், பயிற்சி வசதிகள், பொது ஆரோக்கியம், குடியிருப்பு வசதிகள் ஆகியவற்றை ஏற்படுத்துதலும் திறமைமிக்க உழைப்பை உழைப்பாளர்கள் தர உதவும். மேலும், பயிற்சி பெற்ற தொழிலாளர்களால்தான் திறமையான உழைப்பைத் தரமுடியும். அவர்களுடைய உற்பத்தித்திறன் உயர்வாகவே அமையும்.

சமுதாய, பொருளாதார அவசிய வசதிகளைப் பெருக்க தனியார் துறை முன்வருவதில்லை. ஏனெனில் அவற்றில் முதலீடு செய்து அதிக இலாபத்தைத் திரும்பப் பெற முடியாது. தவிர, நீண்ட காலத்தில் மட்டுமே குறைந்த அளவு இலாபத்தைப் பெற முடிகின்றது. தனி முதலீட்டாளர்கள் சமுதாய நலனைவிட தங்கள் நலனிலேயே அதிக அக்கறை கொண்டுள்ளனர். இலாப

நோக்குடனேயே அவர்களுடைய நடவடிக்கைகள் எப்பொழுதும் அமைகின்றன. இந்நிலைகளால் அரசே இவ்வித வசதிகளுக்கான அதிக முதலீடுகளைச் செய்து தரவேண்டும், அவற்றைத்திட்ட மிட்ட முறையிலேயே வளர்க்க வேண்டியது அவசியமாகின்றது.

உள்நாட்டு, வெளிநாட்டு வாணிபங்கள் விரிவடைய வேளாண்மை, தொழில் துறைகள் வளர்ந்திருப்பதோடு சமுதாய, பொருளாதார அவசிய வசதிகளும் முன்னேற்றமடைந்திருக்க வேண்டும். முக்கியமாக, நிதிநிறுவனங்கள் அமைந்திருப்பது வாணிபத்தை வளர்க்கப் பெரிதும் உதவுவதாகும். வளர்ச்சி யடையாத நாடுகளின் வளர்ச்சியடையாத பணச்சந்தைகளும், மூலதனச் சந்தைகளுமே உள்ளன. இக்காரணி தொழில் வளர்ச் சிக்கும் வாணிப வளர்ச்சிக்கும் தடையாக அமைகின்றது. பன்னாட்டுப் பொளாதாரச் சூழ்நிலைகளின் மாற்றம் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் உறுதியற்ற நிலையைத் தோற்றுவித்துவிடும். அவ்விதச் சிக்கல்களை அரசினால் மட்டுமே நீக்க முடியும். நாட்டின் மத்திய வங்கியை அரசு நிறுவி வணிக வங்கிகளையும், மூலதனச் சந்தையையும், நிதி நிறுவனங்களையும் கட்டுப்பாடு செய்ய இயலும். நாடுமுழுதும் ஒரே மாதிரியான கொள்கைகளைப் பின்பற்றுவது அரசால் மட்டுமே முடியக்கூடிய ஒன்று. திட்ட மிடுகின்ற அரசே உள்நாட்டு, வெளிநாட்டு வாணிபங்களைக் கட்டுப் படுத்தி ஒழுங்குபடுத்த முடியும். இதன் மூலம் பொருளாதாரத்தின் பல நலன்களும் காக்கப்படும். தேவை, அளிப்பு இரண்டையும் ஒழுங்குபடுத்தி பொருளாதாரத்தின் உறுதித்தன்மையை ஏற்படுத் துவது, திட்டமிட்ட வளர்ச்சியைப் பின்பற்றுகின்ற அரசினால் முடிகின்ற ஒன்றாகும்.

நாடுகளின் வறிய நிலையைப் போக்க முன்னேற்றத்திற்கான திட்டங்களை மேற்கொள்வது மிக அவசியமானது. வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் சுதந்திரத்தைக் காக்கவும், தேசீய வருவாய் தலா வருவாய் இரண்டையும் அதிகரிக்கவும், வேலைவாய்ப்புகளைப் பெறவும், பொருளாதாரத்தின் எல்லாத்துறைகளிலும் முன்னேற் றத்தை அடையவும், வருவாய் செல்வப் பங்கீடுகளில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்கவும் திட்டமிட்ட வளர்ச்சியே ஒரே சிறந்த வழியாக அமைகின்றது. திட்டங்களின் மூலமாக மட்டுமே பின் தங்கிய நாடுகள் வளர்ச்சியைப் பெற முடியும். அக்டோபர் புரட்சியின்போது ஏழை நாடுகளில் ஒன்றாக இருந்த சோவியத் ரஷ்யா, திட்டங்களின் மூலம் குறுகிய காலத்தில் உலகின் இரு பெரும் வல்லரசுகளில் ஒன்றாக மாறிவிட்டது. திட்டமிட்ட வளர்ச் சியின் வெற்றிக்கு இதையே சிறந்த எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

பேராசிரியர் கட்கில் (Prof. Gadgil) வார்த்தைகளில் இவற்றைப் பின் வருமாறு தொகுத்துக் கூறலாம்: "பொருளாதார முன்னேற்றத்திற்குத் திட்டமிடுதல் விரைவான பொருளாதார வளர்ச்சி வீதத்தைத் தரும். திட்டங்களை மேற்கொள்வதின் மூலம் அரசின் குறுக்கீடு இல்லாவிட்டால் வளர்ச்சி வீதம் உயர்ந்த அளவில் அமைந்திருக்காது. முன்னேற்றத்தைச் சரியான பாதையில் செலுத்துவதும் திட்டங்களேயாகும். திட்டத்தைத் தீட்டுபவர்கள் ஆக்கக் காரணிகளை மிகச் சிறப்பாக பயன்படுத்தும் வகையில் திட்டத்தை வரைகிருர்கள். அதிக அவசியமற்ற நுகர்வைக் கட்டுப்படுத்தவும் வழிமுறைகள் செய்யப்படுகின்றன. மூலதன வசதிகளைக் கொண்டு நீண்டகாலத் திட்டங்களுக்குச் சரியான அளவு முதலீடுகளைச் செய்ய உதவப்படுகின்றது. முன்னேற்றமடைந்த தொழில் நுணுக்க உற்பத்தி முறைகள் கைக்கொள்ளப்படுகின்றன. உழைப்பின் திறமை கல்வியாலும், பயிற்சியாலும் வளர்க்கப்படுகின்றது. இவை யாவற்றையும் மேற்கொள்ள மூலதன வசதிகள் பெறப்படுகின்றன. அமைதியைக் காக்கவும், சமுதாய நன்மைக்காகவும் நாட்டின் உற்பத்தி சிறப்பான வகையில் பங்கிடப்படுகின்றது. எனவே திட்டமென்பது இவ்வித நன்மைகளைத் தரத்தக்க சிறப்பான அமைப்பு முறையாகும். உறுதியான நிலையைப் பொருளாதாரத்தில் ஏற்படுத்தவும், எல்லாத்துறைகளிலும் சிறப்பான வளர்ச்சியைப் பெறவும் திட்டங்கள் உதவுகின்றன. பொருளாதாரத்தின் எல்லாப் பிரிவுகளையும் உள்ளடக்கியதாகத் திட்டம் அமைந்துள்ளது. தனியாருடைய நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தி, நெறிப்படுத்தி ஒழுங்குபடுத்துகின்றது. எல்லாவகை அமைப்பு முயற்சிகளிலும் பொது நடவடிக்கைகளை அதிகரிக்கின்றது."[1]

திட்டமிட்டப் பொருளாதாரத்திற்கும் திட்டமிடப்படாத பொருளாதாரத்திற்கும் உள்ள வேறுபாடுகள்

1. திட்டமிடப்படாத பொருளாதாரத்தை முதலாளித்துவக் கொள்கையைக் கொண்டுள்ள சமுதாயத்தோடு தொடர்பு படுத்திக் கூறுவதுண்டு. முதலாளித்துவத்தின் தனியியல்பு, உற்பத்திச் சாதனங்களைத் தனியார் உடைமையாகக் கொண்டிருக்கின்ற நிலையாகும். தனியார் பலரும் 'வாங்கும் விலை'யைக் குறைத்து 'விற்பனை விலையை' உயர்த்தி நன்மைகளை அடைய விழைகின்ருர்கள். உற்பத்திக் காரணிகளை வாங்குகின்ற விலை குறைவாகவும், உற்பத்திச் செய்யப்பட்டு பொருட்கள் சந்தைக்கு வரும்போது அப் பொருட்களின் விற்பனை விலை மிக உயர்வாகவும் அமையும்.

1. D. R. Gadgil, Planning and Economic Policy in India.

2. முதலாளித்துவப் பொருளாதாரத்தில் எல்லோருக்கும் எல்லாவிதத் தொழில்களையும் மேற்கொள்ள உரிமையுண்டு. அதன் மூலம் பெறப்பட்ட வருவாயை எவ்வழிகளிலும் செலவு செய்ய அவர்களுக்குச் சுதந்திரம் உண்டு. இவை 'உழைப்புச் சுதந்திரம்', 'நுகர்வுச் சுதந்திரம்' என அழைக்கப்படுகின்றன.

3. முதலாளித்துவத்தில் பணத்தைக் கொண்டுள்ள மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது. பணத்தைக் கொண்டுள்ள மக்கள் முதலாளித்துவத்தில் எல்லாவித உரிமைகளையும் பெற்றவர்களாகின்றனர்.

4. முதலாளித்துவ முறையில் வருவாயில் அதிக ஏற்றத் தாழ்வுகள் அமைந்துள்ளன. உற்பத்திச் சாதனங்களை உடைமை யாகக் கொண்டுள்ளவர்கள் உழைப்பாளர்களைச் சுரண்டுகின்றனர். வாணிபத்திலும் அதிக ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுகின்றன. சில காலங்களில் அதிக அளவு உள்நாட்டு வெளிநாட்டு வாணிபங் களும், வேறு சில காலங்களில் குறைந்த அளவு உள்நாட்டு வெளி நாட்டு வாணிபங்களும் அமைந்திருக்கின்றன.

5. திட்டமிட்டப் பொருளாதாரத்தில் 'திட்டக்குழு' உற்பத்தி பற்றிய முடிவுகளை எடுக்கின்றது. தனியார் உற்பத்தி நடவடிக் கைகளில் அதிகச் செல்வாக்கைக் கொண்டிருக்க இயலாது. இலாப நோக்கோடு செயல்படும் தனியார் நடவடிக்கைகள் கட்டுப் படுத்தப்படுகின்றன. உற்பத்தியின் அளவு, விகிதம் ஆகிய யாவும் திட்டக்குழுவினால் நிர்ணயிக்கப்படுகின்றது. இவற்றால் தனியாருடைய செல்வாக்கு திட்டமிட்டப் பொருளாதாரத்தில் குறைவாகவே உள்ளது.

6. முதலாளித்துவ முறைகளில், விலைகளின் அளவுகள் முக்கிய நிலையைக் கொண்டு உள்ளன. உற்பத்தி முடிவுகளை எடுக்கத் தூண்டுபவைகளாக இருப்பவை விலைகளேயாகும். திட்டமிட்டப் பொருளாதாரத்தில் விலைகள் அரசால் கட்டுப்படுத்தப்படுகின்றன. விலைகளின் அளவுகள் மிக அதிக முக்கியத்துவத்தைக் கொண்டு பொருளாதாரத்தில் அமைந்திருப்பதில்லை. நிர்வாக முடிவுகளால் விலைகளின் அளவுகளில் மாற்றங்கள் செய்யப்படுகின்றன.

7. முதலாளித்துவத்தில் சில நன்மைகள் இருந்தாலும் அவை இன்றைய பின்தங்கியப் பொருளாதாரங்களுக்குப் பொருந்தமாட்டா. முன்னேற்றமடைந்துள்ள பொருளாதாரங்களுக்கு பல நன்மை களையும் அளிக்கக்கூடிய முதலாளித்துவக் கொள்கை, பின் தங்கியப் பொருளாதாரங்களுக்குச் சில நன்மைகளை மட்டுமே

அளிக்கக்கூடியது. சமதர்மக் கொள்கையைப் பின்பற்றுகின்ற இந்தியா போன்ற நாடுகளில் தனியார்துறை கட்டுப்படுத்தப்படுகின்ற நிலையிலும் வருவாயிலும், செல்வப் பங்கீட்டிலும் உள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்க முடியவில்லை. தனியார் துறைக்கு அதிக ஊக்கத்தை அளிக்கும் முதலாளித்துவக் கொள்கை இந்நிலையை மேலும் மோசமாக்கிவிடும் எனலாம்.

திட்ட முறையின் அடிப்படைகள் இந்தியத் திட்டங்களில் எவ்வகைகளில் பின்பற்றப்படுகின்றன என்பதைக் கீழ்க்கண்டவாறு விளக்கலாம் :

1. திட்டத்தில் சமுதாய நலனை உயர்வடையச் செய்ய உற்பத்திக் குறியிலக்குகள் நிர்ணயிக்கப்பட்டு, அதற்கேற்ப வசதிகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்நிலை நம் நாட்டின் திட்டங்களிலும் அமைந்துள்ளது.

2. திட்டமானது தொடங்கப்படுவதற்குமுன் நாட்டின் வளங்களும், திட்டத்தின் நோக்கங்களும் கருதப்படுகின்றன. திட்டத்தின் மூலமாக முழுப் பொருளாதாரமும் கட்டுப்படுத்தப்பட்டு சரியான வழிகளில் திருப்பப்படுகின்றது. திட்ட நோக்குகள் இதன் மூலம் நிறைவேற்றப்படுகின்றன.

3. பொருளாதாரச் சக்திகளைக் கட்டுப்படுத்தத் திட்டம் தேவையாகின்றது. உற்பத்தியிலும், பகிர்விலும் பலவித முடிவுகளை அரசு எடுக்கின்றது. பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துகின்ற அதிகாரங்கள் அரசிடம் அமைந்துள்ளன.

4. திட்டத்தின் மூலம் தனியார் அதிக இலாபத்தில் உற்பத்தியைச் செய்வது தடுக்கப்படுகின்றது. முதலாளி வர்க்கத்தின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன.

5. நம் நாட்டில் பொதுத்துறையோடு தனியார் துறையும் அமைந்துள்ளது. விலைகளின் நிலைகள் அவற்றின் உற்பத்தியை நிர்ணயிப்பதில் முக்கிய நிலையைக் கொண்டுள்ளன. இலாபநோக்கு தனியார் துறையில் மிகுதியாக அமைந்துள்ளது.

6. இந்தியாவில் விலைகள் முற்றிலுமாகக் கட்டுப்படுத்தப்படவில்லை. சோவியத் ரஷ்யா திட்டத்தினுல் வெற்றி பெற்றமைக்கு ரஷ்ய அரசின் தீவிர நடவடிக்கைகளே காரணமாகும். தனியார் துறையானது நீக்கப்பட்டதே ரஷ்யத் திட்டங்களின் வெற்றிக்கு உதவின.

7. ரஷ்யாவைப் போன்ற திட்டமுறையை இந்தியா கொண்டிருக்கவில்லை. நம் நாடு இன்றும் சுதந்திரப் பொருளாதாரத்தையே கொண்டுள்ளது எனலாம். திட்டமிடும் நிலை குறைந்த அளவிற்கே வளர்ந்துள்ளது. இந்தியப் பொருளாதாரத்தில் விலைகளின் செல்வாக்கு மிகுதியாகவே உள்ளது. தனியார் துறை அதிக இலாபத்தைப் பெறும் வாய்ப்பும் அமைந்திருக்கின்றது.

III. வளர்ச்சியடையாத நாடுகளில் திட்டங்கள் வெற்றியடைவதற்கான தேவைகள்

வளர்ச்சிக் குன்றிய நாடுகளில் திட்டங்கள் சிறப்பாகச் செயல்பட சில நிபந்தனைகள் அல்லது முக்கியத் தேவைகள் பூர்த்தி செய்யப்படவேண்டும்.

(1) புள்ளி விவரங்கள்

திட்டமானது தொடங்கப்படுவதற்கு முன் நாட்டின் வளங்களைப் பற்றிய கணக்கெடுப்பு தேவைப்படுகின்றது. எவ்வகை வளங்கள் குறைவாக உள்ளன என்பதும் ஆராயப்படுகின்றது. பாய்காவ் (Boykov) குறிப்பிடுவது போல, "திட்டத்தின் நடவடிக்கைகள் பிரம்மாண்டமான அரண்மனை அமைப்பதைப் போன்றதல்ல; அவை அமைந்திருக்கக்கூடிய வசதிகளை ஆய்வு செய்கின்றவைகளாகும்."[1] புள்ளி விவரங்களைச் சேகரிக்கக் கணக்கெடுப்புகள் தேவைப்படுகின்றன. எந்த அளவிற்கு மூலதனம், உழைப்பு போன்ற வளங்களும், உற்பத்திச் சாதனங்களும் அமைந்துள்ளன என்பதை அறிவது அவசியமாகின்றது. இயற்கை வளங்கள் எந்த அளவில் அமைந்துள்ளன, அவற்றை எந்த அளவிற்குப் பயன்படுத்தலாம் என்பவை தீர்மானிக்கப்படுகின்றன. போக்குவரத்து, தொழில் நுட்ப வளர்ச்சி, வேளாண்மை வளர்ச்சி, தொழில் முன்னேற்றம் ஆகியவற்றிற்காகவும் திட்டத்தில் மூலதனம் ஒதுக்கப்படுகின்றது. எத்துறைக்கு எந்த அளவு முதலீடு தேவை என்பதையும் ஆராய வேண்டியுள்ளது. இப்பணிகளைச் செய்யக்கூடிய 'மத்திய புள்ளிவிவர நிறுவனம்' (Central Statistical organization) ஏற்படுத்தப்படுவது தேவையாகின்றது. அது திட்டத்தை மேற்கொள்வதற்குத் தேவையான எல்லா புள்ளி விவரங்களையும் சேகரித்து அளிக்கவேண்டும். திட்டத்தை நிறைவேற்ற இவ் விவரங்கள் தேவைப்படுகின்றன.

திட்டமானது நிறைவேற்றப்பட்ட பிறகு திட்டத்தினால் விளைந்த தேசிய வருவாய், சேமிப்பு, முதலீடு, நுகர்வு மாற்றங்கள் யாவும்

1. Boykov, The Development of the Soviet Economic System Page 427.

கணக்கிடப்படவேண்டும். பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளும் எவ்வித முன்னேற்றங்களைப் பெற்றுள்ளன என்பது ஆராயப்படவேண்டும். திட்டத்தைப்பற்றிய மதிப்பீடுகள் திட்டம் நிறைவேற்றப்படும்போதே செய்யப்படலாம். ஆண்டுதோறும் திட்டத்தின் மூலம் ஏற்பட்ட மாற்றங்களைப் பற்றிய புள்ளி விவரங்கள் வெளியிடப்படுதல் அவசியமாகும். மற்றொரு திட்டத்தைத் தொடங்க இவை பெருமளவில் உதவுகின்றன. புள்ளி விவரங்கள் பொருளாதாரத்தின் வளர்ச்சியை அறிய உதவுகின்றன. தொடர்ந்து பல திட்டங்களையும் வெற்றிகரமாக நிறைவேற்ற அவை உதவி புரிகின்றன.

(2) முக்கியத்துவங்களை அளித்தலும், குறியிலக்குகளை நிர்ணயித்தலும்

திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்ற குறியீடுகள் நிர்ணயிக்கப்படுகின்றன. பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கும் தேவைக்கேற்ப முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. பொருளாதாரத்தின் எல்லாப் பிரிவுகளையும் பற்றிய குறியிலக்குகள் துணிகரமானமுறையில் நிர்ணயிக்கப்படவேண்டும். எந்த அளவிற்குத் தேசிய வருவாயை உயர்த்த வேண்டும், எந்த அளவிற்குப் புதிய பயிற்சி நிறுவனங்கள் தொடங்கப்பட வேண்டும். எந்த அளவிற்குச் சாலைகளையும் இருப்புப் பாதைகளையும் வளர்க்க வேண்டும் என்பவை கருதப்படுகின்றன. உணவுப் பொருட்கள், பிற வேளாண்மைப் பொருட்கள், உரங்கள், இரும்பு, நிலக்கரி, மின்சாரம் ஆகியவற்றின் உற்பத்திக் குறியிலக்குகளும் நிர்ணயம் செய்யப்படுகின்றன. குறியீடுகள் அரசாங்க நிறுவனங்களில் மட்டும் செய்யப்படுதல் போதுமானதாகாது. சிறிய நிறுவனங்களில் இல்லாவிட்டாலும், பெரிய நிறுவனங்களிலாவது உற்பத்திக்கான குறியிலக்குகள் தீர்மானிக்கப்படவேண்டும். இவற்றின் மூலமாக குறைந்த அளவு அளிப்பைக் கொண்டுள்ள பொருட்களைச் சிக்கனமாகப் பயன்படுத்த முடிகின்றது.

குறியிலக்குகளை நிர்ணயிப்பதின் மூலம் குறிப்பிட்ட அளவு வளர்ச்சியைப் பெறமுடியும் என்று கணக்கிடப்படுகின்றது. பல பொருளாதாரத் துறைகளுக்கும் முதலீடு செய்யப்படும்போது பலவகை முக்கியத்துவங்கள் அளிக்கப்படுகின்றன. குறுகிய காலத் தேவைகளுக்கும், நீண்டகாலத் தேவைகளுக்கும் ஏற்பவும், கிடைக்கக்கூடிய சாதனங்கள், மூலதனம், உழைப்பு ஆகியவைகளுக்கு ஏற்பவும், முதலீடுகள் செய்யப்படுகின்றன. மிக அவசியத் திட்டங்களுக்கும், உடனடியாகத் தொடங்கத் தேவையான திட்டங்களுக்கும் முதல் முக்கியத்துவம் அளிக்கப்

படவேண்டும். குறைந்த அளவே முக்கியத்துவத்தைக் கொண்ட திட்டங்களுக்கு உடனடி முதலீடுகள் செய்யப் படுவதில்லை. இணக்கமான வகையில் முக்கியத்துவங்கள் அமைந்திருக்கவேண்டும். மாறுகின்ற பொருளாதாரச் சூழ்நிலை களுக்கு ஏற்ப அவற்றை மாற்ற இயல வேண்டும். எடுத்துக் காட்டாக, இந்தியாவின் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண்மை, நீர்ப்பாசனம், மின்சாரம் ஆகியவற்றிற்கு முதல் முக்கியத்துவம் தரப்பட்டிருந்தது. அரசின் மொத்தத் திட்டச் செலவில் இவற்றிற்கான செலவு 44 சதவீதமாக இருந்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உயர்ந்த அளவு முக்கியத் துவம் தொழில் முன்னேற்றத்திற்கு அளிக்கப்பட்டது. அரசின் மொத்தத் திட்டச் செலவில் இதற்காக 20 சதவீதம் ஒதுக்கப்பட் டிருந்தது. முதல் திட்டத்தில் 4 சதவீதம் மட்டுமே தொழில் முன்னேற்றத்திற்காகச் செலவிடப்பட்டது. மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திரும்பவும் வேளாண்மைக்கே முதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. எனினும் தொழில் முன்னேற்றத்திற்காக மூன்றுவது திட்டத்தின் மொத்தச் செலவில் 20 சதவீதம் ஒதுக்கப் பட்டது; வேளாண்மை வளர்ச்சிக்கு 36 சதவீதம் செலவிடப் பட்டது. 1962ஆம் ஆண்டில் சீனத் தாக்குதலினுல் முக்கியத்து வங்கள் மாற்றப்பட்டு பாதுகாப்பிற்கு முதல் முக்கியத்துவம் தரப் பட்டது. பாதுகாப்புப் பொருட்களின் உற்பத்தி, சாலைகளின் வளர்ச்சி ஆகியவற்றிற்காக அதிக முதலீடு செய்யப்பட்டது. திரும்பவும் இந்தியப் பாகிஸ்தான் போரினுல் செப்டம்பர் 1965இல் பாதுகாப்புத் தேவையைச் சமாளிக்க வேளாண்மை, தொழில் உற்பத்திகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. சிறப்பான அரசின் திட்டம் முக்கியத்துவங்களை உகந்த வகையில் அளிப்பதைப் பொறுத்தே அமையும். பொது முதலீட்டுத் திட்டங்கள் தனியார்துறையை ஊக்குவிப்பதாகவும் இருக்க வேண்டும். தனியார்துறையின் வளர்ச்சி வீதமும் பொதுத் துறையின் வளர்ச்சி வீதமும் உயர்வாக இருக்கும்படி அரசின் முதலீடுகள் அமையவேண்டும்.

Balanced development

(3) சமநிலைகளைப் பாதுகாப்பது

நல்ல திட்ட முறையால் முன்னேற்ற நிலைகளில் ஏற்படக்கூடிய தடைகள் நீக்கப்படவேண்டும். திட்டங்களில் வெற்றிபெற பொருளாதாரத்தில் சமநிலை வளர்ச்சி ஏற்படுதல் இன்றியமை யாதது. பல பொருளாதாரத் துறைகளின் வளர்ச்சி நிலைகளில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படக்கூடாது. நுகர்விற்கும் உற்பத்திக்கும் சமநிலை தேவை. தனியார்துறை, பொதுத்துறை, சமுதாய பொருளாதார அவசிய வசதிகள், உள்நாட்டு வாணிபம், வெளி

நாட்டு வாணிபம், உள்நாட்டு நிதி, அந்நியச் செலாவணி போன்ற பொருளாதாரத்தின் பல துறைகளின் வளர்ச்சியில் சமநிலை அமைதல் வேண்டும். மூலதனப் பற்றுக்குறையும் மக்கட்தொகைப் பெருக்கத்தால் வேலையின்மையும் இருக்கும்போது உழைப்புச் செறிந்த உற்பத்தி முறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

சமநிலை வளர்ச்சியைப் பொருளாதாரத்தில் பெற அரசு பல நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகின்றது. வேளாண்மை மாற்றி அமைக்கப்பட வேண்டும். நிலச் சீர்திருத்தங்கள் வேளாண்மை உற்பத்தி முறைகளை மாற்றத் தேவைப்படுகின்றது. உள்நாட்டுத் தொழில்களை ஊக்குவிக்க கூட்டுறவு முறை வளர வேண்டும். பொருளாதார, சமுதாய முன்னேற்றத்திற்கான போக்குவரத்து, ஆரோக்கியம், செய்தித் தொடர்பு, கல்வி போன்ற வசதிகள் மேம்படுத்தப்படுதல் தேவையானதாகும். அடிப்படைத் தொழில்களைத் தோற்றுவித்தலும் அவசியமானதாகிறது. அந்நியச் செலாவணிச் சிக்கலைத் தவிர்க்க உள்நாட்டு, வெளிநாட்டு வாணிபங்களின் மீது அரசின் கட்டுப்பாடு அமைந்திருத்தல் அவசியமானது.

ஓ. கே. கோஷ் (O. K. Ghosh) கீழ்க்கண்டவைகளில் சமநிலை இருத்தல் மிக அவசியமானது எனக் கூறுகின்றார். உள்நாட்டு நிதி, அந்நியச் செலாவணி, மனிதச் சக்தி, கச்சாப் பொருட்கள் வெளி நாட்டு வாணிபம், தொழில்துறை பொது முதலீடுகள், தொழில் துறை தனியார் முதலீடுகள், அரசின் வரவு-செலவுத் திட்டங்கள் பொருளாதார வளர்ச்சியில் சமநிலையை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும். பொருளாதாரத்தின் ஒரு சில துறைகளில் வளர்ச்சியும், பிற துறைகளில் வளர்ச்சி குன்றிய நிலையும் இருந்தால் ஆக்கத்தின் அளவை அதிகமாகப் பெறமுடியாது. திட்டத்தின் பயனை எல்லா மக்களும் பெற முடியாது. எனவே திட்டம் பொருளாதாரத்தின் பல பிரிவுகளிலும் சமநிலை வளர்ச்சியை ஏற்படுத்த முயலுகின்றது.

(4) நேர்மையான திறமைமிக்க நிர்வாகம்

திட்டங்களை வெற்றியைப் பெறும் வகையில் நிறைவேற்ற வலுவான, நேர்மையான, திறமை மிக்க நிர்வாகம் அமைவது மிக அவசியமாகின்றது. ஆனால் வளர்ச்சியடையாத நாடுகளில் இந்நிலை அமைந்திருப்பதில்லை. பேராசிரியர் லூயிஸ் (Prof. Lewis) பொருத்தமான, நேர்மையுள்ள, வலிமைமிக்க நிர்வாகத்தின் மூலமே திட்டத்தின் வெற்றியைப் பெற முடியும் எனக் கூறுகின்றார். வளர்ச்சியடையாத நாடுகளின் மத்திய மந்திரிசபை முக்கியமான பொருளாதார முடிவுகளை விரைவாக எடுத்தல் நன்மை பயக்காது. அதற்கு முன் முடிவுகளை வல்லுநர்கள் நன்கு ஆராய வேண்டும்.

பலவகைப்பட்ட மந்திரி சபைகளிலும் திறமைமிக்க நிர்வாகிகள் வேலைக்கு அமர்த்தப்படுதல் வேண்டும். திட்டங்களைப்பற்றிய அறிக்கைகளை அவர்கள் சமர்ப்பிக்க வேண்டும். வெவ்வேறு வகையான பொருளாதாரத் துறைகளிலும் திட்டங்கள் நிறைவேற்றப் படுவதற்குமுன் இது போன்ற பல நடவடிக்கைகளை அரசு மேற் கொள்ள வேண்டியது அவசியமானதாகும்.

வளர்ச்சியடைந்துவரும் பொருளாதாரத்தில் நிர்வாக அமைப்புமுறை சிறப்பாக அமைந்திருந்தால்தான் திட்டங்களினுல் நன்மைகளைப் பெற முடியும். "சிறப்பான நிர்வாக அமைப்பு முறை இல்லாவிட்டால் திட்டமிடுதலைத் தவிர்த்துவிடுதலே நன்மை பயக்கும்", என கோஷ் குறிப்பிடுகின்ருர். திறமையான, நேர்மையான அரசியல் நிர்வாகம் அமையாவிட்டால் தலை யிடாமைக் கொள்கையே சிறப்புடையதாகும். சோவியத் ரஷ்யாவில் முன்னேற்றத் திட்டங்கள் வெற்றி பெற்றமைக்கு திறமை மிக்க, பயிற்சி பெற்ற பொதுவுடைமைவாதிகளின் நிர்வாகமே காரணமாகும். பேராசிரியர் நேர்மையான நிர்வாகத்தின் அவசியத்தைப் பின்வரும் வார்த்தைகளில் தருகிருர்: "பொருளா தார முன்னேற்றத்தைப் பெறுவது கடினமனாதல்ல; திட்டத்தின் வெற்றி இரகசியம் சிறப்பான அரசியல் அமைப்பிலும், நல்ல பொது நிர்வாகத்திலும் அடங்கியுள்ளது." [1]

(5) சரியான முன்னேற்றக் கொள்கை

முன்னேற்றத்திற்கான திட்டம் வெற்றியடைய அரசு சரியான முன்னேற்றக் கொள்கையைப் பின்பற்ற வேண்டும். முன்னேற்ற நிலைகளில் ஏற்படக்கூடிய தடைகளையும் விலக்குவதாக அக் கொள்கை அமைய வேண்டும். பேராசிரியர் லூயிஸ் முன்னேற்றக் கொள்கையில் உள்ள பல முக்கிய நிலைகளைக் கீழ் வருமாறு தருகிருர்:

1. முன்னேற்றத்தைப் பெறத்தக்க நிலையைப்பற்றி ஆராய்தல்; நாட்டின் வளங்களைக் கணக்கெடுத்தல்; விஞ்ஞான ஆராய்ச்சி; சந்தைகளின் ஆராய்ச்சி.

2. நீர்ப்பாசன வசதிகள், மின்சாரம், போக்குவரத்து, செய்தித் தொடர்பு போன்றவற்றைப் பொதுத்துறையில் அல்லது தனியார் துறையில் வளர்த்தல்.

3. பொதுக் கல்வியின் மூலம் பயிற்சி வசதிகளைப் பெருக்கி திறமைகளை வளர்த்தல்.

---

1. W. A. Lewis, Principles of Economic Planning and Development Planning.

4. நிலச் சீர்திருத்தங்கள், தொழில் நிறுவனங்கள், வாணிப நடவடிக்கைகள் போன்றவைகளுக்காகச் சட்டங்களை இயற்றுதல்; பொருளாதார நடவடிக்கைகளை அரசு சட்ட ரீதியாகவே கட்டுப் படுத்த முடியும்.

5. வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள், கடன் வசதிகள், பாதுகாப்பு மாற்று முறைகள், பொருட்களின் சந்தைகள் ஆகிய வற்றை ஏற்படுத்தி சிறப்பான சந்தைகள் உருவாக்கப் பெற உதவுதல்.

6. உள்நாட்டு, வெளிநாட்டுத் தொழில் முயல்வோரைக் கண்டுபிடித்து அவர்களுக்கு ஊக்கமளித்தல்.

7. வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்த ஊக்கமளிக்கவும், வளங்களைத் தவருன வழிகளில் பயன்படுத்துவதைத் தடுக்கவும் நடவடிக்கைகளை எடுத்தல்.

8. பொது, தனியார் சேமிப்பை உயர்த்த அரசு நடவடிக்கை களை மேற்கொள்ளுதல்.

முன்னேற்றத்திற்கான திட்டத்தின் வெற்றி இவற்றைப் பொருத்தே அமையும். நல்ல கொள்கைகள் பொருளாதார வளர்ச்சிக்குத் திட்டங்களின் மூலம் உதவுகின்றன; ஆனல் நல்ல கொள்கைகள் திட்டங்களை வெற்றியடையச் செய்வது வேறு பல காரணிகளையும் பொருத்ததாகும். பொருளாதார முன்னேற்றத் திற்கான திட்டம் நோயுற்றவர்களுக்குக் கொடுக்கத்தக்க மருந்து போன்றது என பேராசிரியர் லூயிஸ் கருதுகின்ருர். நோயைக் குணப்படுத்த ஒரு திறமையான மருத்துவர் பல முறைகளிலும் முயற்சி செய்கின்ருர். "ஆனல் பிழைத்து விடுவார்கள் என நினைக்கப்படுபவர்கள் இறப்பதும், இறந்து விடுவார்கள் என நினைக்கப்படுபவர்கள் பிழைப்பதும் உண்டு." இதைப் போன்று நல்ல முன்னேற்றக் கொள்கை திட்டத்தின் மூலம் பொருளாதார வளர்ச்சிக்காகப் பயன்படுத்தப்பட்டாலும் அது வெற்றியையே அளிக்குமெனக் கூற இயலாது. பொருளாதார வளர்ச்சி என்பது முன்னேற்றக் கொள்கை தவிர பிற காரணிகளைப் பொருத்தும் அமையும்.

(6) நிர்வாகத்தில் சிக்கனம்

நிர்வாகச் சிக்கனத்திற்கான எல்லாவித முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளுதல் அவசியமானது. குறிப்பாக மந்திரிசபைகளை விஸ்தரிப்பதிலும், அரசின் பல துறைகளை வளர்ப்பதிலும் சிக்கன

நிலையைப் பின்பற்ற வேண்டும். பேராசிரியர் ஸ்ரீமன் நாராயண் (Prof. Shriman Narayan) கூறுவதாவது, "வரிவிதிப்பின் மூலமும், கடன் பெறுவதின் மூலமும் அரசு பெறுகின்ற ஒவ்வொரு பைசாவும் தங்களுடைய நலனிற்காகவும், முன்னேற்றத்திற்காகவும் சிறப்பாகச் செலவிடப்படுகின்றது என மக்கள் உறுதியாக நம்ப வேண்டும்."[1] மக்களிடமிருந்து பெறப்படுகின்ற மூலதனமானது வீணடிக்கப்படக் கூடாது. அது சிறப்பாக சமூதாயப் பணிகளுக்காகவும், பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் செலவிடப்பட வேண்டும். வளர்ச்சியடையாத நாடுகள் நிர்வாகச் சிக்கனங்கள் அமைந்திருப்பதில்லை. குறைந்த வருவாயைப் பெறக் கூடியவர்களையும் பாதிக்கும் மறைமுக வரியின் மூலமே வளர்ச்சியடையாத நாட்டின் அரசு அதிக வரி வருவாயைப் பெறுகின்றது. இவ்வாறு வறியர்களிடமிருந்து மிகுதியாகப் பெறப்பட்ட அரசின் வருவாய் சிறப்பாக உற்பத்திப் பணிகளுக்காகச் செலவிடப்படுவதில்லை. முன்னேற்றமடைந்த நாடுகளில் அதிக வருவாய் பெறுபவர்களே மிகுதியாக உள்ளனர். அந்நாடுகளில் நிதியைத் திரட்டுவதும் எளிதாக உள்ளது வரிவிதிப்பின் மூலம் அரசு தேவையான மூலதனத்தை எளிதில் பெற முடிகின்றது. இவ்வாறு பெறப்பட்ட மூலதனமும் சிறப்பாகப் பயன்படுத்தப் படுகின்றது. உற்பத்தியை மேலும் பெருக்கிக் கொண்டே செல்ல அந்நாடுகளில் உள்ள நிர்வாகச் சிக்கனமும் ஒரு காரணமாகும்.

(7) கல்வி அடிப்படை

திறமையான, நேர்மையான நிர்வாகத்திற்கு வலுவான கல்வி அடிப்படையும் உதவுகின்றது. மக்களின் நல்ல பண்பாடு, ஒழுக்க நிலை ஆகியவை நேர்மையான நிர்வாகத்தைத் தந்து திட்டங்களை வெற்றியடையச் செய்யும். இதன் மூலமே நிர்வாகத்தில் நேர்மையையும், சிக்கனத்தையும் பெற முடியும். உறுதியான கல்வி அடிப்படையின்றி இவற்றைப் பெற முடியாது. தொழிற் கல்வி சிறந்த உழைப்பிற்கான பயிற்சி அளிப்பது போன்று, பொதுக் கல்வி சிறந்த ஒழுக்கத்திற்கான பயிற்சியை அளிக்கின்றது. பேராசிரியர் ஸ்ரீமன் நாராயண் கருதுவதாவது, "நாட்டில் நேர்மையான, திறமையான மக்களைத் தோற்றுவிக்காமல் பெரிய அளவில் பொருளாதாரத் திட்டங்களைக் கைக்கொள்வது சாத்தியமாகாது."

கல்வி வளர்ச்சிக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. முன்னேற்றமடைந்த பல நாடு

1. Shriman Narayan, Development Planning, p. 22-23.

களிலும் கல்வியறிவு பெற்றவர்களின் விகிதம் உயர்வாக உள்ளது. வளர்ச்சி வீதம் அதிகமாக உள்ளமைக்கு அவர்களின் நேர்மையும் ஒரு காரணமாகிறது. அதிக வருவாய் பெறுபவர்களும், கல்வியறிவு பெற்றவர்களும் திறமையுள்ளவர்களாகவும் நேர்மையானவர் களாகவும் இருக்கின்றனர். பின்தங்கிய நாடுகளில் குறைவான வருவாய் பெறுபவர்களே மிகுதியாக உள்ளனர்; எழுத்தறிவு பெற்றவர்கள் எண்ணிக்கையில் குறைவாக உள்ளனர். நேர்மை குறைவிற்கும், திறமை குறைவிற்கும் இது காரணமாகிறது. இந்த மாற்ற கல்வி வசதிகள் பெருக்கப்படவேண்டும்; மக்களின் வருவாய் உயர்த்தப்பட வேண்டும்.

(8) பொதுமக்களின் ஒத்துழைப்பு

திட்டத்தை மேற்கொண்டுள்ள குடியரசு நாட்டில் பொது மக்களின் ஒத்துழைப்பு அவசியமானது. திட்டம் வெற்றியடைய மக்களின் ஒத்துழைப்பு இன்றியமையாதது. திட்டத்தைத் தீட்டவும், செயல்படுத்தவும் மக்களின் ஒத்துழைப்பு தேவைப்படுகின்றது. பொருளாதாரத் திட்டம் அரசியற் கொள்கைகளுக்கு அப்பாற்பட்டது. இருப்பினும் எல்லா அரசியற் கட்சிகளின் சம்மதமும் திட்டத்தை மேற்கொள்ளவும், நிறைவேற்றவும் தேவைப்படுகின்றது. திட்ட மென்பது தேசீயத் திட்டமாகக் கருதப்படவேண்டும். திட்டத்தை மக்களின் பிரதிநிதிகள் அங்கீகரிக்க வேண்டும். மக்களின் ஆதரவில்லாமல் எத்திட்டமும் வெற்றியை அடைய முடியாது. பேராசிரியர் லூயிஸ் (Prof. Lewis) குறிப்பிடுவதாவது, "பொது மக்களின் ஆர்வமே திட்டத்திற்கான எண்ணெய்யாகவும், பொருளாதார முன்னேற்றத்திற்கான பெட்ரோலாகவும் இருக் கின்றது; மாறுகின்ற மக்களின் ஆர்வத்தின் மூலம் எல்லா வற்றையும் சாதித்துவிட முடியும்." [1]

அரசு திட்ட நடவடிக்கைகளைச் செய்யும்போது மக்களின் ஆதரவு தேவைப்படுகின்றது. அரசு சிறப்பான கொள்கைகளை நேர்மையாக நிறைவேற்றினால்தான் மக்களின் ஆதரவைப் பெற முடியும்.

IV. இயக்கத் திட்டமும் ஊக்கத் திட்டமும் (Planning by Direction and Planning by Inducement)

பேராசிரியர் லூயிஸ் திட்டத்திற்கான வசதிகளைத் திரட்டுவதில் இயக்கத் திட்டத்திற்கும், ஊக்கத் திட்டத்திற்கும் உள்ள வேறு

1. W. A. Lewis, The Principles of Economic Planning, p. 128.

பாட்டை விளக்குகின்றூர். இயக்கத் திட்டமென்பது சமதர்மச் சமுதாயத்தோடு இணைந்த ஒன்ருகும். இதற்குச் சான்ருகச் சோவியத் ரஷ்யாவைக் கூறலாம். இவ்வித நாடுகளில் 'தலையிடாமைக் கொள்கை' (Laissez faire Policy) என்பது முற்றிலும் இல்லாத ஒன்ருகும். அதிகாரங்களைக் கொண்ட மத்திய அமைப்பு திட்டங்களைத் தீட்டுகின்றது, இயக்குகின்றது, நிறைவேற்றுகின்றது. திட்ட நடவடிக்கைகள் முக்கியத்துவங்களுக்கு ஏற்பவும் குறியிலக்குகளுக்கு ஏற்பவும் மேற்கொள்ளப்படுகின்றன. இயக்கத் திட்டத்தில் அரசு முக்கிய நிலையைக் கொண்டு அமைந்துள்ளது. இதில் பல நன்மைகள் அமைந்திருந்தாலும் சில குறைபாடுகளும் உள்ளன. அக் குறைபாடுகளை பின் வருமாறு விளக்கலாம்.

(1) இயக்கத் திட்டமென்பது அரசின் சர்வாதிகாரத் தன்மையைக் கொண்டது என குறை கூறப்படுகின்றது. நுகர்வோர் சுதந்திரமானது முற்றிலும் அங்கு அமைந்திருப்பதில்லை. மக்கள் தங்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப தெரிந்தெடுத்து நுகரும் உரிமையை இழக்கின்றனர். விருப்பத்திற்கு ஏற்ற பணிகளில் ஈடுபடுவதும் முடியாத ஒன்ருகிறது. நுகர்வோர் சந்தையும், உழைப்புச் சந்தையும் அரசால் ஏற்படுத்தப்படுகின்றன. பங்களவு முறைகளும், விலைக்கட்டுப்பாடுகளும் இயக்கத் திட்டத்தில் பின்பற்றப்படுவதால் நேர்மையற்ற நிலை நிலவுகின்றது. வெற்றியை அளிக்கக் கூடிய திட்டமுறையாக இது இருந்தாலும் மக்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. எல்லாம் அரசே என்ற நிலை ஏற்பட்டு விடுகின்றது; மக்களால் கொள்ளப்பட்டதே அரசு என்பது மறக்கப்படுகின்றது.

(2) இயக்கத்திட்டம் இணக்கமற்றதாக இருக்கின்றது. தேவை மாற்றங்களுக்கு ஏற்பத் திட்டத்தை மாற்றுவது முடியாததாகிறது. ஒரு திட்டமானது வரையப்பட்ட பிறகு, அதில் எந்த ஒரு பகுதியையும் மாறுகின்ற சூழ்நிலைத் தேவைகளுக்கு ஏற்ப மாற்ற முடியாது. திட்டத்தில் சிறு மாற்றத்தைப் பெறவேண்டுமென்ருலும் திட்டம் முழுவதுமே மாற்றப்படுகின்றது. திட்டம் முழுவதும் இணைக்கப்பட்ட நிலையில் உள்ளது. குறைபாடுகளைக் கொண்டிருந்தாலும் திட்டமானது முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும்.

(3) இயக்கத் திட்டம் அதிகச் செலவு பிடிப்பதாகும். இவ்வகைத் திட்டத்தை நிறைவேற்ற எண்ணிறைந்த பொருளியலறிஞர்கள், புள்ளி விவர நிபுணர்கள், எழுத்தர்கள், பயிற்சி பெற்றவர்கள் ஆகிய பலரும் தேவைப்படுகின்றனர். பலவகைப்பட்ட கணக்கெடுப்புகளுக்கும், புள்ளி விவரச் சேமிப்புகளுக்கும் அதிக நிதியானது செலவிடப்படுகின்றது. பின்தங்கிய நாடுகளின் அரசுகள்

செலவு மிக்கத் திட்டங்களை மேற்கொள்வது கடினமானது. அந்நாடுகளில் அரசின் மூலதன வசதிகள் குறைவாகவே உள்ளன. பெறப்படுகின்ற குறைந்த அளவு நிதி வசதியைச் சிக்கனமாகச் செலவிட இயக்கத் திட்டம் உதவாது.

(4) பொருளாதார முறையானது பல நாடுகளிலும் சிக்கல்களைக் கொண்டதாக உள்ளது. எனவே இயக்கத்திட்டம் வெற்றியைப் பெறும் வகையில் அமைவதில்லை. குறிப்பிட்டதொரு பொருளின் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்றால் அதைச் சார்ந்த பல பொருட்களின் உற்பத்தியையும் பெருக்க வேண்டியது அவசியமாகின்றது. இதனால் வேறு சில பொருட்களின் உற்பத்தி பாதிக்கப்படுகின்றது. இவ்வாறு பல பொருட்களின் உற்பத்தியில் முடிவுகள் மாற்றப்பட்டால், உற்பத்திக் குறியிலக்குகளை அடைவது முடியாத ஒன்றாகிவிடும். பேராசிரியர் லூயிஸ் குறிப்பிடுவது போல, "இயக்கத் திட்டம் சிலவற்றில் பற்றாக்குறையையும், வேறு சிலவற்றில் தேவைக்கு மேலான உபரியையும் தந்துவிடும்."

(5) தீவிரக் கட்டுப்பாடுகளைக் கொண்டு இயக்கத் திட்டம் அமைந்திருப்பதாக பேராசிரியர் லூயிஸ் கூறுகின்றார். மக்களை எல்லா வகையிலும் கட்டாயப்படுத்தும் நிலையை அது உருவாக்கி விடுகின்றது. அதிக அளவு ஒரே வகைப் பொருட்கள் உற்பத்திச் செய்யப்படுகின்றன. எளிதாக அமைவதால் அம்முறையே பின்பற்றப்படுகின்றது. பலவகைப்பட்ட பொருட்களும் உற்பத்திச் செய்யப்படுவதில்லை. பேராசிரியர் லூயிஸ் இது பற்றிக் குறிப்பிடுவதாவது, "இவ்வித 'ஒரே மாதிரியான அமைப்பு' (Standardization) முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவும் என்றாலும் அது மகிழ்ச்சிக்கு எதிரியாக உள்ளது. பல நிலைகளிலும் வெளி நாட்டு வாணிபத்தில் வெற்றியைப்பெற முடிவதில்லை." மேலும் ஒரே வகையான பொருள் உற்பத்திச் செய்யப்படுவதால் புதிய நிறுவனங்களைத் தொடங்க வேண்டுமென்ற ஊக்கம் இழக்கப்படுகின்றது. புதிய கண்டுபிடிப்புக்களுக்கும், புதிய முன்னேற்றமடைந்த உற்பத்தி முறைகளுக்கும் வாய்ப்பு ஏற்படுவதில்லை.

இவ்விதக் குறைபாடுகள் இயக்கத் திட்டமுறையில் இருந்தாலும், சோவியத் ரஷ்யா திட்டத்தின் மூலம் பெற்றுள்ள வெற்றி, இதுவே பொருளாதாரத்தின் வளர்ச்சி வீதத்தை விரைவுபடுத்த உதவும் நல்ல முறை என உணர்த்துகின்றது. ரஷ்யா பெற்ற வியத்தகு திட்டமிட்ட வளர்ச்சியே இன்றைய மேம்பாடடைந்து வரும் நாடுகளை திட்டங்களை மேற்கொள்ளத் தூண்டுகின்றது. ரஷ்யா இயக்கத்திட்ட முறையின் மூலம் மிகக் குறுகிய காலத்தில் விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப் பெற்று, உலக

வல்லரசுகளுள் ஒன்றாக மாறியது என்பது எவரும் மறுக்க இயலாத உண்மை.

ஊக்கத்திட்டம் (Planning by inducement) என்பது சந்தையை மாற்றியமைத்துத் திறமையாகக் கையாளுவதைக் குறிக்கின்றது. அங்கு அறிவுறுத்தப்படும் நிலை இருந்தாலும் கட்டாயப்படுத்தும் நிலை அமைந்திருக்கவில்லை. எவ்விதத் தொழில் நிறுவனத்தையும் தொடங்க சுதந்திரம் உண்டு. உற்பத்திச் சுதந்திரமும், நுகர்வுச் சுதந்திரமும் அமைந்துள்ளன. ஆனால் இவ்விதச் 'சுதந்திரங்களைக்' கட்டுப்படுத்தவும், ஒழுங்குபடுத்தவும் அரசு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. மக்களுடைய செயல்கள் அரசின் நிதிக் கொள்கையாலும், பணக்கொள்கையாலும் கட்டுப்படுத்தப்படு கின்றன. அரசு நேரடிக் கட்டுப்பாடுகளை மக்களின்மீது விதிக்கா விட்டாலும், அவர்களுடைய நடவடிக்கைகள் மறைமுகமாகக் கட்டுப்படுத்தப்படுகின்றன.

அரசு ஒரு குறிப்பிட்ட பொருளின் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென விரும்பினால், அதன் உற்பத்திக்காக உதவித் தொகைகள் வழங்குகின்றது. சந்தையில் பொருட்களின் பற்றாக் குறை தோன்றினால் அரசு பங்கீட்டு முறைகளையும், விலைக் கட்டுப் பாடுகளையும் கொண்டு வருகின்றது. மூலதனத் திரட்சியை ஏற்படுத்த பொது முதலீடுகள் செய்யப்படுகின்றன; தனியார் முதலீடுகள் ஊக்குவிக்கப்படுகின்றன. அரசு பணக் கொள்கையை வகுப்பதோடு, நிதிக்கொள்கையையும் மேற்கொள்கின்றது. இவ்விரு கொள்கைகளும் நுகர்வைக் கட்டுப்படுத்தவும் முதலீட்டை ஊக்கு விக்கவும் உதவுகின்றன.

இந்நிலைகளால் ஊக்கத்திட்டம் இயக்கத்திட்டம் அடைகின்ற எல்லா முடிவுகளையும் அடைகின்றது. தனியார் சுதந்திரம் பாதிக்கப் படாமல் ஊக்கத்திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. இம்முறையின் மூலம் மக்களின் நலன் குறைந்த அளவே பாதிக்கப்படுகின்றது.

ஆனால் ஊக்கத்திட்டத்தில் பல இடர்ப்பாடுகளும் அமைந் துள்ளன. இக்காரணத்தால்தான், இயக்கத் திட்டத்தைக் காட்டிலும் ஊக்கத்திட்டம் குறைந்த அளவு வெற்றியையே பெற முடிகின்றது என்று கூறலாம். ஊக்கத்திட்டத்தில் உள்ள குறைபாடுகளை பின்வருமாறு குறிப்பிடலாம்:

(1) திட்டமானது செயல்படுத்தப் படும்போது சந்தைச் சக்திகள் செல்வாக்குக் கொண்டுள்ளன. இதனால் உற்பத்தியில் பற்றாக்குறை ஏற்படலாம்; உபரி உற்பத்திக்கும் வாய்ப்பு உண்டு.

தேவைக்கும் அளிப்பிற்கும் இடையே சரிநிலையை ஏற்படுத்துவது கடினமாகிறது. அடிக்கடி பற்றுக்குறை நிலைகள் தோன்றுவதால் பங்கீட்டு முறைகளும், விலைக்கட்டுப்பாட்டு முறைகளும் கைக் கொள்ளப்படுகின்றன. இவ்விரு முறைகளும், 'இயக்கத் திட்டத் தைச்' சார்ந்தவை எனக் குறிப்பிடுவது முக்கியமானது. இவ்வித நிலைகளில் 'ஊக்கத் திட்டமானது' இயக்கத் திட்டமாக மாறுபாடு கொள்கின்றது.

(2) மூலதனத்திரட்சியைப் பெருக்க, பணத்தீர்வுகளும், நிதித் தீர்வுகளும் மட்டும் போதுமானவைகளாக இருப்பதில்லை. திட்ட மிட்ட முன்னேற்றத்தைத் தூண்ட பணக்கொள்கையும், நிதிக் கொள்கையும், மட்டும் உதவ முடியாது. வளர்ச்சியடையாத நாடு களில் வருவாய்க் குறைவாலும், நுகரும் விருப்பம் அதிகமாக உள்ளமையாலும் குறைவான சேமிப்பு விகிதமே அமைந்துள்ளது. இதனால் அதிக அளவு மூலதனத் திரட்சியைப் பெருவது இந்நாடு களில் முடிவதில்லை. மக்கள் உற்பத்தியல்லாத துறைகளில் தங்கள் சேமிப்பைச் செலவிடும் நிலையும் ஏற்படுகின்றது. இவ்வித இடர்ப் பாடுகள் இயக்கத் திட்டத்தில் அமைந்திருப்பதில்லை. இவ்வகையில் இயக்கத் திட்ட முறை பல நன்மைகளையும் கொண்டுள்ளது.

(3) இறுதியாக, ஊக்கத் திட்ட முறையில் அரசு உற்பத்தி யாளர்களுக்கும், நுகர்வோருக்கும் அளிக்கப்படும் ஊக்கங்கள் போதுமான அளவில் அமைவதில்லை. இதனால் அரசு உற்பத்தி யாளர்களை எந்த அளவிற்கு உற்பத்தியைப் பெருக்கவேண்டு மென்று கருதுகின்றதோ, அந்த அளவிற்கு உற்பத்தி பெருகுவ தில்லை. நுகர்வோருடைய நுகர்வைக் கட்டுப்படுத்துவதிலும் குறைந்த அளவு வெற்றியை மட்டுமே அரசால் பெற முடிகின்றது. இந்நிலைகளால் திட்டங்களின் குறியிலக்குகளை எட்ட முடிவதில்லை. ஊக்கத்திட்டத்தினால் எதிர்நோக்கும் அளவிற்கு முன்னேற்றத்தைப் பெறுவது அரிதாகும்.

மதிப்பீடு

இயக்கத் திட்ட முறையை மேற்கொள்ள வேண்டுமா, ஊக்கத் திட்ட முறையைப் பின்பற்ற வேண்டுமா என்பது முற்றிலும் ஒரு நாட்டின் அரசியல் அமைப்பைக்கொண்டு அமைகின்றது. முழுமை யான அளவில் சமதர்மத்தைப் பின்பற்றுகின்ற நாடு இயக்கத் திட்ட முறையைக் கைக்கொள்ளுகின்றது. பிறிதொரு புறத்தில், முதலாளித்துவப் பொருளாதாரத்தைக் கொண்ட நாடு ஊக்கத் திட்ட முறையைப் பின்பற்றுகின்றது.

இவ்விருவகைத் திட்ட முறைகளும் போற்றுதற்குரியவையே யாகும். இரு முறைகளும் நன்மை பயப்பதால் அவசியமானவை. பின்தங்கிய நாடுகளில் செயல்படுத்தத் தக்கவைகளாகவே இரு முறைகளும் அமைந்துள்ளன. இவ்வித நாடுகளில் அரசு மட்டுமே பொருளாதாரத்தை வளர்ச்சியடையச் செய்துவிட முடியாது. அரசு நிதிப்பற்றுக்குறையை மட்டும் கொண்டிருக்காமல், நிர்வாக வசதிகளையும் பெற்றிருப்பதில்லை. எனவே தனியார்துறையின் வளர்ச்சியும் அங்கு அவசியமாகிறது. தனியார்துறையை முன்னேற அனுமதித்து அரசு அதைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்துகின்றது. தனியார் துறையை வளர்க்க வரிவிலக்குகளும், உதவித் தொகைகளும் அளிக்கப்படுகின்றன.

உற்பத்தியை உயர்த்தவும், நுகர்வைக் கட்டுப்படுத்தவும், சேமிப்பு முதலீடுகளை அதிகரிக்கவும் அரசு பல நடவடிக்கைகளை எடுக்கின்றது. அரசு திட்டத்திற்குத் தேவையான நிதியை பற்றுக்குறை நிதியாக்கத்தின் மூலமாகவும், வரி விதிப்பின் மூலமாகவும், கடன் பெறுவதின் மூலமாகவும் பெறலாம். வெளிநாட்டு உதவியைப் பெற்றும் தேவையான நிதி வசதியைப் பெற முடியும். அரசு அடிப்படைத் தொழில்களையும், பெரிய தொழில்களையும் தொடங்க வேண்டும். பொருளாதார முன்னேற்றத்திற்கும், சமுதாய வளர்ச்சிக்கும் தேவையான அவசிய வசதிகளைப் பெருக்குதல் அவசியமானதாகும். இக் காரணங்களால் வளர்ச்சியடையாத நாடுகளில் இருவகைத் திட்ட முறைகளையும் இணைத்துத் தேவை நிலைகளுக்கு ஏற்பப் பயன்படுத்தல் இன்றியமையாதது.

இந்தியாவின் திட்டங்களிலும் இவ்வித நிலையையே நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம். நம்முடைய திட்டங்களில் இயக்க முறையையும், ஊக்க முறையையும் இணைத்து அரசு பின்பற்றுகின்றது. திட்டங்களின் மூலமாக சோவியத் ரஷ்யா போன்று நாம் வெற்றியைப் பெறவில்லை என்பது உண்மையானாலும், திட்டங்களின் மூலமாக நாம் தோல்வியை அடையவில்லை என்பதும் பொய்யல்ல. ரஷ்யாவின் போற்றத்தகு திட்ட வெற்றிக்கு அது பின்பற்றிய 'இயக்கத் திட்ட முறையே' காரணமாகும். இந்தியாவில் இம்முறையே முற்றிலும் பின்பற்றப்படவில்லை. இயக்கத் திட்ட முறையோடு ஊக்கத்திட்ட முறையும் கைக் கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலை பல நன்மைகளை மக்களுக்கு அளிக்கிறது எனலாம். ஏனெனில் முதலாளித்துவ முறையில் பெறப்படுகின்ற சுதந்திர நிலையையும் நாம் கொண்டுள்ளோம். பொதுவுடைமை முறையில் உள்ளது போன்று படிப்படியாக வருவாய், செல்வங்களில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் நீக்கப்பட்டு வருகின்றன. நம் நாட்டில்

முதலாளித்துவ முறையில் உள்ள சில நன்மைகள் பெறப்பட்டு பல தீமைகள் களையப்படுகின்றன. அது போன்றே, இந்தியத் திட்ட முறையில் பொதுவுடைமையில் அமைந்துள்ள சில குறைகள் களையப் பட்டு, பல நன்மைகள் பெறப்படுகின்றன. எனவே இந்தியாவில் நாம் பின்பற்றுகின்ற 'சமதர்ம முறையே' மிகச் சிறப்புடைய ஒன்றாகும். நம்முடைய திட்டங்களிலும் சமதர்மக் கொள்கை களையே காணமுடிகின்றது.

V. நிதித் திட்டமும் வெளிப்படைத் திட்டமும் (Financial and Physical Planning)

நிதித்திட்டம் என்பது திட்ட முறையில் வசதிகள் பணத்தைக் கொண்டு பங்கிடப்படுதலைக் குறிப்பதாகும். வெளிப்படைத் திட்டம் என்பது திட்ட முறையில் வசதிகள், மனிதர்கள், பொருட்கள், இயந்திரங்கள் ஆகியவற்றைக் கொண்டு பங்கிடப் படுதலைக் குறிப்பதாகும்.

நிதித் திட்டம் (Financial Planning)

பொருளாதாரத் திட்டத்திற்கு முக்கியத் திறவுகோலாக இருப்பது நிதியே ஆகும். தேவையான நிதிவசதி கிடைக்கப் பெரு விட்டால், வெளிப்படைக் குறியீடுகளை அடைவது கடினமாகும். குறிப்பிட்ட அளவு நிதி வசதி இல்லாவிட்டால் வெற்றியைப் பெறத் தக்க வகையில் திட்டத்தை நிறைவேற்ற முடியாது. போதுமான நிதி வசதி கிடைத்தால், திட்டத்தின் குறியிலக்குகளை பெறுவது கடினமானதல்ல. நிதித்திட்டங்கள் தேவைக்கும் அளிப்பிற்கும் இடையே உள்ள சரியில்லாத நிலையைத் தவிர்க்க உதவுகின்றன; பல திட்டங்களின் செலவுகளையும், நன்மைகளையும் கணக்கிடவும் உதவுகின்றன. இந்தியத் திட்டக்குழு இதுபற்றிக் குறிப்பிட்டதாவது, "நிதித் திட்டத்தின் நிலை தேவைகளையும் அளிப்புகளையும் இணைக் கின்றது. வெளிப்படைத் திறன்கள் பயன்படுத்தப்பட உதவுகின்றது. திட்டமிடாத மாற்றங்களை விலை அமைப்பில் கொண்டு வருவதைத் தடுக்கின்றது."

நிதித் திட்டத்தில், திட்டத்தின் செலவினங்கள் பண அளவில் நிர்ணயிக்கப்படுகின்றன. தேசிய வருவாயின் உயர்வு, நுகர்வு, இறக்குமதி, சேமிப்பு, வரிவிதிப்பு போன்றவை பற்றித் திட்டமிடப் படுகின்றது. நிதித்திட்டம் தேவைகளுக்கும், அளிப்புகளுக்கும் இடையே சமநிலையை ஏற்படுத்துகின்றது. பொருளாதாரத்தில் உறுதி நிலையை ஏற்படுத்துகின்றது. பண வீக்கம் கட்டுப்படுத்தப் படுகின்றது. இவை போன்ற பல நன்மைகள் அமைந்திருந்தாலும், நிதித் திட்டத்தில் சில வரையறைகளும் உள்ளன. மேம்பாடடைந்து

வரும் நாடுகளில் நிதித் திட்டம் கீழ்க்கண்ட குறைபாடுகளைக் கொண்டுள்ளது:

(1) வளர்ச்சியடையாத நாட்டில் பணத்தின் பயனில்லாத பராமரிப்புத் துறையே பெரிய அளவில் உள்ளது. அமையப் பட்டுள்ள பணத்துறை சிறிய அளவிலேயே இருக்கின்றது. எனவே இவ்விரு துறைகளுக்கிடையேயும் சமநிலை இருப்பதில்லை. இதன் விளைவாக அளிப்பில் பற்றுக்குறை ஏற்படுகின்றது. பணவீக்க நிலை ஏற்பட்டு விலைகள் உயர்வடைகின்றன. திட்டத்தின் குறியிலக்குகளை அடைவது இதனால் முடியாத நிலையைப் பெறுகின்றது.

(2) வளர்ச்சியடையாத நாடுகளுக்கு நிதித் திட்டம் ஏற்ற தல்ல. இதன்மூலம் உண்மை வருவாய் உழைப்பாளர்களுக்குக் கிடைப்பதில்லை. சமுதாய வளர்ச்சியிலும் சமநிலையானது அமைந் திருக்காது. குறைந்த அளவு வேலை வாய்ப்புகளை மட்டுமே நிதித் திட்டம் அளிக்கின்றது. மக்கட்தொகைப் பெருக்கம் அதிகமாக இருப்பதால் சராசரி ஊதியமும் குறைவாகவே அமைகின்றது. உழைப்பாளர்களின் ஊதியங்களும், தேவைகளும் சந்திக்க முடியாதவைகளாகவே இருக்கின்றன.

(3) வரி விதிப்பின் மூலமாக நிதி வசதிகளைத் திரட்ட எடுக்கப் படும் நடவடிக்கைகள் மக்களின் 'சேமிக்கும் விருப்பத்தைப்' பாதிக்கின்றன.

(4) இறக்குமதியை அதிகரிப்பதின் மூலம் பொருட்களின் அளிப்பின் அளவை உயர்த்த முடியும். ஆனால் அயல் நாட்டுச் செலுத்து நிலையில் பாதக நிலையைக் கொண்டிருக்கின்ற பின்தங்கிய நாடுகளின் நிலை இதனால் மேலும் பாதிக்கப்படும்.

(5) இறுதியாக, நிதித்திட்டம் வெற்றியைப் பெறவேண்டு மென்றால் பணவீக்க நிலை ஏற்பட்டு விலைகள் உயர்வடையக் கூடாது. முழுமையான திட்டத்திற்கும் இதைப் பின்பற்றாமல் திட்டத்தின் சில பிரிவுகளில் பின்பற்றுதல் நன்மை தருவதாகும். பின்தங்கிய நாடுகள் பெரிதும் பாதிக்கப்படுவது பணவீக்க நிலையால் என்று கூறலாம். விலையுயர்வுகள் ஏற்படுவதால் உற்பத்திக் காரணிகளின் விலைகளும் உயர்வடைகின்றன. இதனால் திட்டச் செலவுகளும் அதிகரித்து விடுகின்றன.

வெளிப்படைத் திட்டம் (Physical Planning)

வெளிப்படைத் திட்டமாவது முன்னேற்றத்திற்கான முயற்சி காரணிகளைப் பங்கிட்டு, உற்பத்திப் பொருட்களையும் பங்கிட்டு

வருவாய், வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் வகையில் செய்யப் படுவதைக் குறிக்கும். நிதித் திட்டமும் இவற்றை அடைவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது. பின்தங்கிய நாட்டில் நிதி வசதிக் குறைவால் முன்னேற்றத் திட்டங்களுக்கு முதலீடு செய்வது கடினமாகின்றது. இதனால் அந்நாட்டில் வெளிப்படை வசதிகள் அமைந்திருக்கவில்லை எனக் கருதத் தேவையில்லை. இவ்வசதிகள் சரியான வகைகளில் பயன்படுத்தப்படாத நிலை மூலதனப் பற்றாக் குறையால் பின்தங்கிய நாட்டில் அமைந்துள்ளது.

வெளிப்படைத் திட்டத்தில் கிடைக்கக் கூடிய வசதிகள் பற்றி மதிப்பிடப்படுகின்றது. அவ்வசதிகளை எவ்வாறு பெறுவது, திட்டமானது செயல் படுத்தப்படும்போது ஏற்படக் கூடிய இடையூறுகளை எவ்வாறு களைவது ஆகிய யாவும் ஆராயப்படு கின்றன. வெளிப்படைத் திட்டத்தில் வெளிப்படைக் குறியிலக்குகள் நிர்ணயிக்கப்படுகின்றன. வேளாண்மை உற்பத்தி, தொழில் உற்பத்தி, சமுதாய - பண்பாட்டுப் பணிகள், போக்குவரத்து முன்னேற்றம், நுகர்வின் அளவுகள், வேலை வாய்ப்புகள், வருவாய் அளவு, முதலீட்டு அளவு போன்ற பொருளாதாரத்தின் பல நிலைகளிலும் குறியிலக்குகளுக்கும் இடையே சரியான சமநிலை அமையப் பெறவேண்டும்.

குறுகியகாலத் திட்டமாக இல்லாமல் வெளிப்படைத் திட்டம் நீண்டகாலத் திட்டமாக அமைவது நல்லது. வெளிப்படைத் திட்டத்தை ஒரு நீண்டகாலத் திட்டமாகவே கருதவேண்டும். பேராசிரியர் பலாக் (Prof. Balogh) வெளிப்படைத் திட்டத்தின் முக்கியத்துவத்தைப் பின்வருமாறு விளக்குகின்றார்: "வெளிப் படை வசதிகளை நிர்ணயித்து அவற்றைச் சிறப்பாகப் பயன் படுத்துவதே அரசின் கொள்கையாக அமையவேண்டும். அவ்வாறு பயன்படுத்தும்போது எல்லாத்துறைகளிலும் சமநிலை வளர்ச்சி ஏற்பட வேண்டும். உற்பத்தியின் அளிப்பைப் பெருக்கும்போது தோன்றக் கூடிய தடைகள் நீக்கப்படவேண்டும். தேசிய நோக்கில் திட்டத்தின் உறுதி நிலையை எந்த அளவிற்குப் பொருளா தாரம் கடின நிலைக்குப் பிறகு பெற்றது என்பதை அறிவது அவசியமானது. நாட்டின் வெளிப்படைத் திறனுக்கு ஏற்பவே திட்டம் மேற்கொள்ளப்பட வேண்டும். வெளிப்படை வசதி களுக்குத் தக்கவாறு திட்டம் செயல் படுத்தப் படுவது நல்லது."

வளர்ச்சியடையாத நாடுகளில் வெளிப்படைத் திட்டம் சில வரையறைகளைக் கொண்டுள்ளது. அவற்றைப் பின்வருமாறு விளக்கலாம்:

(1) வளர்ச்சியடையாத நாடுகளில் பொருளாதாரத்தின் பல பகுதிகளிலும் சமநிலை வளர்ச்சியைப் பெறுவது சிக்கலாக உள்ளது. அமைப்பு முறைகளில் அமைந்துள்ள பலவிதக் குறைபாடுகளால் வளர்ச்சியடையாத நாடுகளில் அதிக அளவு உள் நாட்டு உறுதி நிலையைப்பெற முடிவதில்லை. நிர்ணயிக்கபட்டுள்ள குறியிலக்குகளை அடைவதற்குத் தேவையான அளவு தொழில் நுணுக்க வளர்ச்சியை அந் நாடுகள் அடைந்திருப்பதில்லை. வேளாண்மை உற்பத்தியில் எதிர்பாராத அளவு குறைவு ஏற்படலாம். இதனால் வேளாண்மை உற்பத்தியின் குறியிலக்கை அடைய முடியாததோடு, தொழில் உற்பத்தியின் குறியிலக்கையும் பெற முடிவதில்லை. வேளாண்மைப் பொருட்களின் குறைவான அளிப்பு தொழில் துறை உற்பத்தியையும் பாதித்து விடுகின்றது. அல்லது தொழில் உற்பத்தியானது இயக்கச் சக்தியின் பற்ருக்குறையால் பாதிக்கப்படலாம். இந்நிலைகளால் உற்பத்திக்கேற்ப நுகர்வும், நுகர்வுக்கேற்ப உற்பத்தியும் செய்யப் படுவதுண்டு.

(2) வெளிப்படையான வசதிகள் பற்றிய புள்ளிவிவரங்கள் பின்தங்கிய நாடுகளில் கிடைக்காத நிலையே கடினமான சிக்கலைத் தருவதாகக் கூறலாம். வளங்கள் பற்றிய சரியான புள்ளி விவரங்கள் தரப்படாவிட்டால், வெளிப்படை குறியிலக்குகள் தவருக நிர்ண யிக்கப்படும். இதன் காரணமாக திட்டம் தோல்வியையே பெற நேரிடும்.

(3) வளர்ச்சியடையாத நாட்டில் நிதித்திட்டமின்றி வெளிப் படைத் திட்டம் மட்டும் ஏற்றுக் கொள்ளப்பட்டால், அதைத் திட்டமென்றே கருத முடியாது. வளங்களின் அடிப்படையில் திட்டம் மேற்கொள்ளப்படுதல் குறியிலக்குகளை அடைய உதவாது. நிதி வசதிகளுக்கு ஏற்பவும் திட்டங்கள் வரையப்படுதல் வேண்டும். இந்தியாவின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவடையும் தருவாயில் நிதிவசதிப் பற்ருக்குறையால், திட்டமிடப்பட்ட செலவின் அளவில் ரூ. 200 கோடி குறைக்கப்பட்டது. வளங்களின் வளர்ச்சிக்கான குறியிலக்குகளை நிர்ணயிப்பது அவசியமென்ருலும், நிதி வசதிகளைப் பற்றி ஆராய்ந்து அதற்கேற்பத் திட்டத்தை மேற்கொள்வது அதைவிட அவசியமானதாகும்.

(4) இறுதியாக, பொருட்களின் உற்பத்தியில் குறியிலக்குகளை அடைய முடியாமல் இருப்பின் அளிப்பு பற்ருக்குறை நிலையில் அமைந்திருக்கும். இதனால் பணவீக்கநிலை தோன்றி விலையுயர்வுகள் ஏற்படும். வளர்ச்சியடையாத நாடுகளில் வருவாயும், சேமிப்பும் குறைந்த அளவில் அமைகின்றன. இவற்றை மேலும் குறை

வடையச் செய்வதாகப் பணவீக்கநிலை அமையும். இவ்வித நிலையில், கட்டுப்பாடுகளையும், பங்கீடுகளையும் அரசு மேற்கொள்ளலாம் என இந்தியத் திட்டக்குழு பரிந்துரைத்துள்ளது. ஆனால் இவ்விதக் கட்டுப்பாடுகள் உடனடித் தீர்வைப் பெற உதவினாலும், நிரந்தரத் தீர்வைப்பெற பொருட்களின் அளிப்பை அதிகரிக்க வேண்டியது இன்றியமையாதது.

மதிப்பீடு

வளர்ச்சியடையாத நாடுகள் நிதித்திட்டத்தை மேற்கொள்வதா, வெளிப்படைத் திட்டத்தைப் பின்பற்றுவதா என்பதைத் தெரிந்தெடுக்க வேண்டும். இவ்வாறு தெரிந்தெடுப்பது ஒரு நாட்டின் அரசியல் அமைப்பைச் சார்ந்திருக்கும் எனலாம். சோவியத் ரஷ்யா போன்ற பொதுவுடைமை நாடுகளில் வெளிப்படைத் திட்டங்கள் கைக்கொள்ளப்படுகின்றன. தனியார் சொத்துரிமை ரஷ்யாவில் இல்லாமையாலும், எல்லா உற்பத்திச் சாதனங்களையும் அரசே உடைமையாகக் கொண்டுள்ளமையாலும் நிதிப் பற்றாக்குறை சிக்கலானது ஏற்படுவதில்லை.

முதலாளித்துவக் கொள்கையைப் பின்பற்றுகின்ற நாட்டில், வெளிப்படைத் திட்டத்தைப் போன்றே நிதித்திட்டமும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. இருவகைத் திட்டங்களும் நெருங்கிய தொடர்புடையவைகளாக இருக்கின்றன. வெற்றிகரமாகத் திட்டத்தை நிறைவேற்ற இருவகைத் திட்டங்களும் மேற்கொள்ளப்பட வேண்டும். இருவகை முறைகளும் இணைக்கப்பட்டு திட்டத்தை நிறைவேற்றும்போது பயன்படுத்தப்படவேண்டியது அவசியமாகும். கிடைக்கக்கூடிய நிதி வசதிகளுக்கு ஏற்ப குறியிலக்குகள் நிர்ணயிக்கப்படவேண்டும். அதிக நிதிவசதிகளைத் திரட்டுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுதல் இன்றியமையாதது. அதன்மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறியிலக்குகளை எளிதில் பெற்றுவிடலாம். பொருளாதார முன்னேற்ற வேகத்தை விரைவுபடுத்த இது உதவுமெனலாம்.

VI. தோற்றத் திட்டம் (Perspective Planning)

தோற்றத்திட்டமென்பது நீண்ட காலத் திட்டத்தைக் குறிப்பதாகும். 15 முதல் 25 ஆண்டுகள் வரைக்கான நீண்டகாலக் குறியிலக்குகள் தீர்மானிக்கப்படுகின்றன. இந்தியத் திட்டக்குழுவின் கருத்துப்படி தோற்றத் திட்டமென்பது நீண்டகாலத்திற்கான முன்னேற்றங்களைப் பெற எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்பதாகும். தோற்றத் திட்டம் என்பது 15 ஆண்டுகள் அல்லது 20ஆண்டு

களுக்கான திட்டம் எனக் கொள்ளக்கூடாது. தோற்றத் திட்டம் பல குறுகிய காலத் திட்டங்களாகப் பிரிக்கப்படுகின்றது. திட்டத்தின் பரந்த நோக்கங்கள், குறியிலக்குகள் யாவும் குறிப்பிட்ட திட்டகாலத் திற்குள் நிறைவேற்றப்படவேண்டும். குறுகியகாலத் திட்டங் களாகப் பிரிப்பதின் மூலம் திட்டத்தின் வளர்ச்சி எவ்வாறு உள்ளது என்பதை எளிதாக உணர முடிகின்றது. குறிகியகாலத் திட்டங்களை மேலும் சிறிய திட்டங்களாகப் பிரித்து நிறைவேற்றலாம். உதாரண மாக ஐந்தாண்டுத் திட்டத்தை ஆண்டுத்திட்டங்களாகப் பிரித்துச் செயல்படுத்தப்பட்டால் பல நன்மைகளையும் பெற முடியும். இவ்வித ஆண்டுத்திட்டங்களைக் குறிப்பிட்ட சில பகுதிகளின் திட்டங் களாகவும் பிரிக்கலாம். இவ்வகைப் பிரதேசத் திட்டங்களை மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் பிரித்து நிறைவேற்றலாம். இம் முறைத் திட்டத்தின் மூலம் வேளாண்மை, தொழில், போக்கு வரத்து, வெளிநாட்டு வாணிபம் ஆகிய எல்லாவற்றிலும் முன்னேற்றத்தைப் பெற முடியும்.

தோற்றத் திட்டமென்பது இவ்வாறு பெரிய திட்டங்களையும் சிறிய திட்டங்களையும் உள்ளடக்கியதாக இருக்கின்றது. இவ்விதமான பகுதித் திட்டங்கள் வேறு பல உபதிட்டங்களாகவும் பகுக்கப்படு கின்றன. வேளாண்மை உற்பத்திக்கும், இரும்பு - எஃகு உற்பத் திக்கும், ஏற்றுமதி உற்பத்திக்கும் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. இவ்வகைத்திட்டங்கள் யாவும் உபதிட்டங்களாக உள்ளன. இவை யாவும் தோற்றத் திட்டத்தோடு இணைந்தவைகளாகும். தோற்றத் திட்டம் நீண்டகாலக்குறியிலக்குகளைப் பிரதிபலிக்கின்றது. தோற்றத் திட்டத்தின் பகுதிகளாக உள்ள பல திட்டங்களும் தோற்றத் திட்டம் குறியிலக்குகளை அடைய உதவுகின்றன. இது பற்றி இந்தியத் திட்டக்குழு பின்வருமாறு குறிப்பிடுகின்றது : "திட்ட மென்பது தொடர்ச்சியான நிலையைக் கொண்டது. அதைக் குறுகிய காலத் திட்டங்களாகப் பிரிக்க முடியாது. எனவே இப்போதைய ஐந்தாண்டுத் திட்டம் பழைய திட்டங்களின் தொடர்ச்சியேயாகும். இப்போதைய ஐந்தாண்டுத் திட்டத்தைத் தொடர்ந்து வேறு பல திட்டங்களும் மேற்கொள்ளப்படும். திட்டத்தைத் தொடர்ச்சியான இயக்கமெனலாம். குறிப்பிட்ட நோக்கங்களை அடைவதற்காகத் திட்டம் கைக்கொள்ளப்படுகின்றது. ஐந்தாண்டுத்திட்டத்தை உரு வாக்கும்போது நீண்டகால முன்னேற்றமும் கருத்திற் கொள்ளப் படுகின்றது. திட்டங்களினால் பெறப்பட்ட நன்மைகளைத் தோற்றத் திட்டத்தில் உணரலாம்."

டின்பெர்ஜன் (Tinbergen) குறிப்பிடுவதாவது, "குறுகிய காலத் திட்டங்களுக்கு அடிப்படையைத் தருவதே தோற்றத் திட்டத்தின்

முக்கிய நோக்கமாக உள்ளது. இதன் காரணமாக, நீண்டகாலத்தில் தீர்க்கப்படவேண்டிய சிக்கல்கள் குறுகிய காலத்திலேயே பல வகைப்பட்ட திட்டங்களின் மூலம் தீர்க்கப்படுகின்றன.'' [1]

இவ்விதமான தோற்றத் திட்டத்தின் அடிப்படை சோவியத் ரஷ்யாவில் தோன்றியது. ரஷ்யாவில் 'கோயெல்ரோ' (Goelro) திட்டம் 1920ஆம் ஆண்டு நாட்டை மின்சார மயமாக்கத் தொடங்கப் பட்டது. அது நீண்டகாலத் திட்டமாகவும் அமைந்தது. 1958ஆம் ஆண்டுவரை ரஷ்யா பொருளாதார முன்னேற்றத்திற்கு ஐந்தாண்டுத் திட்டங்களையே மேற்கொண்டிருந்தது. 1959ஆம் ஆண்டில் 1960 முதல் 1980 வரை நிறைவேற்றத்தக்க இருபது ஆண்டுத்திட்டமானது வரையப்பட்டது. இந்திய ஐந்தாண்டுத் திட்டங்களும் நீண்டகாலத்தோற்றத்தைக் கருதியே நிறைவேற்றப்பட்டு வருகின்றன. குறுகிய காலத்தில் பயனளிக்கக்கூடிய பல முதலீடுகள் செய்யப்பட்டாலும், நீண்டகாலத்திலேயே உற்பத்தியைத் தொடங்கக்கூடிய பல பெரிய தொழில்களிலும் மிகுதியான முதலீடுகள் அரசால் செய்யப்படுகின்றன. வேளாண்மை முன்னேற்றத்திற்காக அரசு செலவிடுகின்ற அதிக மூலதனம் நீண்ட காலத்தில் மட்டுமே பலனைத் தரத்தக்கது. மின்சார உற்பத்தி, நீர்ப்பாசனத் திட்டங்கள், போக்குவரத்து செய்தித் தொடர்பு வசதிகள், மருத்துவ வசதிகள், கல்வி வசதிகள் போன்றவற்றிற்கான முதலீட்டின் மூலம் உடனடி நன்மையைப்பெற இயலாது. அவை நீண்டகாலத்தில் மட்டுமே நன்மையைத் தரத் தொடங்குபவைகளாகும். இது போன்றே இரும்பு உருக்குத்தொழில் போன்ற பெரிய அடிப்படைத் தொழில்களை அரசு ஏற்படுத்துவதும், நீண்ட காலத்தில் உறுதியான பொருளாதார முன்னேற்றத்தைப் பெற வேண்டுமென்ற எண்ணத்தினுல் ஆகும்.

வளர்ச்சியடையாத நாடுகளில் தோற்றத் திட்டத்தின் அவசியம்

வளர்ச்சி குன்றிய நாடுகளில் நாட்டை விரைவாகத் தொழில் மயமாக்குதலின் மூலமாக வாழ்க்கைத்தரம், தலா வருவாய், வேலை வாய்ப்பு ஆகியவற்றை உயர்த்தத் திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றை உயர்த்துவதே திட்டங்களின் நோக்கமாகவும் அமைந்துள்ளது. திட்டமானது தொடர்ச்சியான நிலையைக் கொண்டிருப்பதால், மக்கட் தொகைப் பெருக்கத்திற்கு ஏற்ப வருவாய், நுகர் பொருட்களின் உற்பத்தி உயர்வு ஆகியவற்றிற்கான நீண்டகாலக் குறியிலக்குகள் நிர்ணயிக்கப்படுவது தேவையாகின்றது. தலா வருவாய் உயர்வடைகின்ற அளவிற்கேற்ப

1. J. Tinbergen, Devolopment Planning, p. 6.

நுகர் பொருட்களின் உற்பத்தியின் அளவும் பெருக்கப்பட வேண்டும். அதற்கு நுகர் பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய தொழில்களின் வளர்ச்சி விரைவாக்கப்படுதல் இன்றியமையாததாகும். இவை இரண்டுமே விரைவான தொழில் முன்னேற்றத்தைச் சார்ந்து அமைந்துள்ளன. விரைவான தொழில் முன்னேற்றத்தையும் நீண்ட காலத்தில் மட்டுமே பெற முடியுமாதலால் தோற்றத்திட்டம் அவசியமாகின்றது.

(திட்டத்தின் மூலம் பெறப்படுகின்ற பொருளாதார வளர்ச்சி சமநிலையில் அமையாமற் போகலாம். 'தோற்றத் திட்டத்தின்' அவசியம் அப்போது உணரப்படுகின்றது. வேளாண்மை, தொழில் துறைகளுக்கிடையே சமநிலை வளர்ச்சி தேவைப்படுகின்றது. உள்நாட்டு வாணிபம் வெளிநாட்டு வாணிபம், பொருளாதார அவசிய வசதிகள் சமுதாய அவசிய வசதிகள், நாட்டின் பல பிரதேசங்கள் ஆகியவைகளுக்கு இடையேயும் வளர்ச்சி சமநிலையில் பாதுகாக்கப்படவேண்டும். இவ்விதமாகப் பொருளாதாரத்தின் பல துறைகளின் வளர்ச்சி சமநிலையாக இருக்க உதவுவது 'தோற்றத் திட்டமேயாகும்.')

வேளாண்மைத் துறையில் வளர்ச்சியை நீண்டகாலத்தில் மட்டுமே பெறமுடிகின்றது. எதிர்காலத்தில் உணவின் தேவைக்கு ஏற்பவும், தொழில்களுக்கான கச்சாப் பொருட்களின் தேவைக்கு ஏற்பவும் வேளாண்மை உற்பத்தித் திட்டமானது அமையவேண்டும். குறுகிய காலத்தில் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க வேளாண்மையை மாற்றியமைக்கும் நிலச் சீர்திருத்தங்களைக் கொண்டு வரலாம். நீர்ப்பாசனவசதிகள், நல்ல விதைகள், உரங்கள், முன்னேற்றமடைந்த கருவிகள் ஆகியவற்றை அளித்தலின் மூலம் குறுகிய காலத்திலேயே வேளாண்மைப் பொருட்களின் அளிப்பை அதிகரித்து விடலாம்.

நீண்ட காலத்தில், உணவுத் தானியங்கள், மீன், முட்டைகள், பால் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருகுகின்ற மக்கட் தொகையின் தேவைகளுக்கேற்ப உயர்த்தவேண்டும். ஏற்றுமதிக்காகவும், தொழில்துறைகளுக்காகவும் வேளாண்மைத் துறையில் வாணிபப் பொருட்கள் உற்பத்திச் செய்யப்பட வேண்டும். வேளாண்மை முன்னேற்றத்திற்கான திட்டம் தொடர்ச்சியான நிலையைக் கொண்டுள்ளது. விஞ்ஞான முறைச் சாகுபடியையும் முன்னேற்றமடைந்த உற்பத்திச் சாதனங்களையும், கருவிகளையும் பயன்படுத்துவது வேளாண்மை வளர்ச்சிக்கு அவசியமாகின்றது. இவை யாவும் வேளாண்மையில் தோற்றத்திட்டத்தை மேற்கொள்ளத் தூண்டுகின்றன.

நுகர் பொருட்களின் உற்பத்தியைப் பொறுத்த அளவில், நீண்டகாலத் தேவைப் பெருக்கத்திற்கு ஏற்ப அது அமைய வேண்டும். நீண்டகாலத்தில் நுகர் பொருட்களின் உற்பத்திக் குறியிலக்குகள், பெருகுகின்ற நுகர் பொருட்களின் தேவைக்கு ஏற்ப நிர்ணயிக்கப்படுதல் அவசியம். இதற்காக, நுகர் பொருட்களை உற்பத்திச் செய்யக்கூடிய தொழில்களின் முன்னேற்றத்திற்கான திட்டம் தீட்டப்படவேண்டும். நுகர் பொருட்களின் தேவை, அளிப்பு நிலைகளுக்கு ஏற்ப அரசு கட்டுப்பாடுகளை விதிக்கின்றது. பணக் கொள்கையும், நிதிக்கொள்கையும் அரசு பின்பற்றுகின்றது. நுகர் பொருட்களின் தேவைக்கு ஏற்ப அவற்றின் உற்பத்தி அமைந் திருந்தால்தான் பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய பண வீக்க நிலையைத் தவிர்க்க இயலும்.

நுகர் பொருட்களை உற்பத்திச் செய்யக்கூடிய தொழில் துறைகளை வளர்க்க விரைவான தொழில் முன்னேற்றம் தேவைப்படுகின்றது. விரைவான தொழில் முன்னேற்றத்தைப்பெற இயந்திரங்கள், கருவிகள் இயக்கச் சக்தி ஆகியவற்றின் அளிப்பு அதிக அளவில் தேவைப்படுகின்றது. இதன் காரணமாக, மூலதனப் பொருட்களின் உற்பத்தியைச் செய்யக்கூடிய தொழில்களின் வளர்ச்சி அவசிய மாகின்றது. போக்குவரத்து செய்தித் தொடர்பு வசதிகள், மின்சார வசதிகள் ஆகியவையும் அதிக அளவிற்குத் தேவைப் படுகின்றன. இவற்றின் முன்னேற்றத்திற்கு அதிக முதலீட்டு வசதிகள் தேவையாகின்றன. வளர்ச்சி குன்றிய நாடுகளில் இவ்வித முதலீடுகளை நீண்ட காலத்தில் மட்டுமே செய்ய முடிகின்றது. இதற்குப் பலவிதத் தொழில் துறைகளிலும் தோற்றத் திட்டத்தைப் பின்பற்றுவது அவசியமாகிறது. இரும்பு-எஃகு, பிற உலோகங்கள், நிலக்கரி, எண்ணெய், மின்சாரம், மின்சாரப் பொருட்கள். இரசா யனப் பொருட்கள், உரங்கள், இயந்திர உற்பத்தி ஆகிய விரைந்த தொழில் முன்னேற்றத்திற்குத் தேவையான, நுகர் பொருட்களின் உற்பத்திக்கு உதவுகின்ற பல பொருட்களின் உற்பத்தியையும் உயர்த்த வேண்டியது இன்றியமையாததாகும்.

பொருளாதாரத்தின் உற்பத்தித்திறனை உயர்த்தவும் தோற்றத் திட்டம் உதவுமெனலாம். சமுதாய அவசிய வசதிகளைப் பெருக்குவ தின் மூலமும் உற்பத்தியின் அளவைக் கூட்ட முடியும். மக்களின் உற்பத்தித்திறனை உயர்த்த கல்வி முன்னேற்றமும், மருத்துவ வசதிகளும் உதவுகின்றன. தொழில் நுட்ப, விஞ்ஞான பயிற்சி நிலையங்களை ஏற்படுத்துவதின் மூலமும் உழைப்பைத் திறமை பெறச் செய்யலாம். ஆனால் இவற்றை ஏற்படுத்துவதற்கு நீண்ட காலம் தேவைப்படுகின்றது. அடிப்படைத் தொழில்களையும், பெரிய

தொழில்களையும் தொடங்குவதைவிட இவ் வசதிகளைப் பெருக்க அதிக காலம் பிடிக்கின்றது. விரைவான தொழில் முன்னேற்றத்திற்குத் தேவையான பொறியியலாளர்களையும், பயிற்சிபெற்ற உழைப்பாளர்களையும், ஆராய்ச்சிப் பணியாளர்களையும் பெற 20 ஆண்டுக் காலத்திற்கு மேல் தேவைப்படும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதற்காக தொழில் நுணுக்க, விஞ்ஞான, ஆராய்ச்சி நிலையங்களைத் திட்டங்களின் மூலம் ஏற்படுத்த வேண்டியுள்ளது. இவற்றின் வாயிலாகவே நுகர் பொருட்களை உற்பத்திச் செய்யக்கூடிய தொழில்களையும்,மூலதனப் பொருட்களை உற்பத்திச் செய்யக்கூடிய தொழில்களையும் வளர்க்க முடியும்.

வளர்ச்சியடையாத நாடுகளில் உள்ள பல சிக்கல்களில் முக்கியமானதாக இருப்பது விரைவான மக்கட் தொகைப் பெருக்கமாகும். இதனால் உயர்வடைகின்ற உற்பத்தியின் பெரும் பகுதி நுகர்விற்கே பயன்படுத்தப்படுகின்றது. தவிர, விரைவான மக்கட் தொகைப் பெருக்கம் உயர்ந்த அளவு சேமிப்பு வீதத்தைப் பெறுவதையும் தடை செய்கின்றது. குறைந்த சேமிப்பு வீதத்தால் முதலீடுகளின் அளவும் குறைந்துவிடுவதால், நாட்டின் ஆக்கத்தையும், வருவாயையும் அதிகரிக்க முடிவதில்லை. இதனால் மக்கட் தொகைப் பெருக்கத்தை நிலைப்படுத்துவது அவசியமாகின்றது. குறிப்பிட்ட காலத்திற்குள் மக்கட் தொகைவீதம் குறைக்கப்படாவிட்டால், முன்னேற்றத்திற்கான திட்டங்களில் வெற்றியைப் பெற முடியாது. இந்தியாவில் பெருகிவருகின்ற குடும்பநலத் திட்டங்கள் தொடர்ச்சியாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவை வெற்றி பெற வேண்டுமென்றால், குடும்பநலத் திட்டங்கள் பற்றிய அறிவை மக்களுக்கு அளிக்க வேண்டும். கல்வி முன்னேற்றத்தின் மூலமாகவும், மக்களிடம் குடும்பத்தைக் கட்டுப்படுத்துதல் அவசியம் என்பதை உணரச் செய்யலாம்.

வளர்ச்சியடையாத நாடுகளில் தொடர்ச்சியாக அந்நியச் செலாவணி பற்றாக்குறைச் சிக்கல் அமைந்துள்ளது. அந்நாடுகள் பிறநாடுகளை பலவகைப்பட்ட இறக்குமதிகளுக்கும் சார்ந்திருக்கின்ற காரணத்தால் இச்சிக்கல் ஏற்படுகின்றது. குறிப்பாக தொழில் முன்னேற்றத்தைப் பெற பின்தங்கிய நாடுகள் மூலதனப் பொருட்களை இறக்குமதி செய்கின்றன இந்தியா போன்ற சில நாடுகள் மூலதனப் பொருட்கள், கச்சாப் பொருட்கள் ஆகியவற்றோடு உணவுப் பொருட்களையும் இறக்குமதி செய்வதுண்டு. முன்னேற்றத்திற்கான திட்டங்களுக்கும் அந்நியச் செலாவணிச் சிக்கலுக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. இச்சிக்கல் தீர்க்கப்படவேண்டிய ஒன்றாகிறது. இதனால் ஏற்றுமதித்

துறையை வளர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. நீண்ட காலத்தில் ஏற்றுமதியின் அளவை அதிகரிக்கும் வகையில், ஏற்றுமதித் தொழில்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுகின்றது. ஏற்றுமதியின் அளவை அதிகரிக்க நீண்ட காலத் திட்டம் தேவைப் படுகின்றது. ஏற்றுமதியைப் பெருக்க ஏற்றுமதித்துறை வளர்க்கப் படவேண்டும்; உற்பத்தியைப் பெருக்கி உற்பத்திச் செலவைக் குறைக்க வேண்டும். ஏற்றுமதி உபரியை அதிக அளவில் பெறுவதின் மூலமும் ஏற்றுமதியின் அளவை உயர்த்த முடியும்.

பல நிலைகளைக் கொண்ட பெரியதொரு நாட்டில், சமநிலை வளர்ச்சியானது எல்லாப் பகுதிகளிலும் ஏற்பட வேண்டும். இது நீண்ட காலத்தில் மட்டுமே பெறத்தக்க ஒன்றாகும். எனவே நாட்டின் முன்னேற்றத்திற்கான நீண்ட காலத் திட்டத்தோடு, பிரதேசங்களின் முன்னேற்றத்திற்கான திட்டங்களும் பின்பற்றப் படுதல் அவசியமாகின்றது. இவ்வகையிலும் 'தோற்றத் திட்டத்தின்' முக்கியத்துவம் இவ்வாறு அமைந்துள்ளது எனலாம்.

மேற் குறிப்பட்டவைகளின் மூலம் வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் 'தோற்றத் திட்டத்தின்' முக்கியத்துவத்தை உணரலாம். அத்திட்டம் பல நடவடிக்கைகளுக்கான நோக்கங்களை வரையறுக் கின்றது. பொருளாதார நடவடிக்கைகளை குறுகிய காலத்திலும், நீண்ட காலத்திலும் நெறிப்படுத்தி, ஒழுங்கு படுத்துகின்றது. பொருளாதார வளர்ச்சி என்பதே நீண்டகாலத்தில் ஏற்படக்கூடிய ஒன்று. சேமிப்பு, முதலீடு, வருவாய், வேலை வாய்ப்பு ஆகியவற்றை அதிகரிக்க நீண்டகாலத் திட்டம் உதவும். குறுகிய காலத்தில் குறியிலக்குகளை அடைவதில் பெற்ற வெற்றியும் நீண்ட கால வளர்ச்சிக்கு உதவுவதாகும். 'தோற்றத் திட்டத்தின்' மூலமாக பொருளாதார வளர்ச்சி வீதமானது அறியப்படுகின்றது. திட்டங்கள் தொடர்ச்சியான நிலையைப் பெற்றிருக்கின்றமைக்கும் அதுவே காரணமாகும். உறுதியான, நிரந்தர முன்னேற்றத்தைப் பொருளா தாரம் பெற உதவுகின்றது.

இவ்வாறு முன்னேற்றத் திட்டங்களை நிறைவேற்றுவதில் பல விதச் சிக்கல்களும் அமைந்துள்ளன. வளர்ச்சியடையாத பொருளா தாரங்களில் திட்டங்களை மேற்கொள்ளும்போது அவை நன்கு ஆராயப்பட்டு, தீர்வுகள் பெறப்பட்டுவிட்டால் பொருளாதார வளர்ச்சியை அவை குறுகிய காலத்தில் அடைய முடியும். திட்ட மின்றிப் பின்தங்கிய நாடுகளில் வளர்ச்சியைப் பெறமுடியாது.

34. திட்ட மதிப்பீடு

(Project Evaluation)

வளர்ச்சியடையாத பொருளாதாரங்களில் அதிமுக்கியத்துவம் வாய்ந்த தொழில்களை அரசு ஏற்று நடத்தவேண்டும். சில திட்டங்களைத் தனியார் துறையினர் ஏற்று நடத்த முன்வர மாட்டார்கள்; அல்லது அத்திட்டங்களை ஏற்று நடத்துவதற்குப் பொருத்தமானவர்களாக அவர்கள் இருக்க மாட்டார்கள். மேலும் சில வகைத் திட்டங்கள் அதிக முதலீட்டுத் தேவையைக் கொண்டவைகளாகவும் இருக்கலாம். தனியார்துறையில் அதிக அளவு முதலீட்டிற்கான மூலதனம் கிடைப்பதில்லை. அதிக மூலதன வசதி இருந்தாலும் தனியார்துறையினர் பெரிய அளவு முதலீடுகளைச் சில திட்டங்களில் செய்வதை விரும்புவதில்லை. குறைந்த அளவு மூலதனத்தைப் பல துறைகளிலும் அல்லது பல திட்டங்களிலும் முதலீடு செய்யவே அவர்கள் விரும்புகின்றனர். சில முதலீட்டுத் திட்டங்கள் நட்டத்தைத் தந்தாலும், வேறு சில திட்டங்களின் மூலம் இலாபத்தைப் பெற வாய்ப்பு உண்டு என அவர்கள் எண்ணுகின்றனர்.

தனியார்துறை நிறுவனம் உயர்ந்த அளவு இலாபத்தைப் பெறும் நோக்கத்தோடு செயல்படுகின்றது. மக்களுக்கு நன்மையளிக்கும் வகையில் அது முதலீடுகளைச் செய்வதில்லை. ஆனால் அரசு சமுதாய நன்மையை உயர்ந்த அளவு பெற நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. குறைந்த செலவில் சமுதாய நலன்களைப் பெருக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. பொருளாதார முன்னேற்றத்திற்கான அடிப்படையைத் தருகின்ற திட்டங்களையும், சில அவசியப் பொருட்களின் உற்பத்தியையும் அரசு மேற்கொள்கிறது. இவ்வித அடிப்படைத் திட்டங்களை அரசு மேற்கொள்ளாவிடில், விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப் பெற இயலாது.

மக்களின் நன்மையைக் கருதியும் சில பொருட்களின் உற்பத்தியை அரசு செய்கின்றது.

பொருளாதார முன்னேற்ற முறையைப் பல பகுதிகளாகவும், இணைப்புகளாகவும் பிரிக்கலாம். திட்டமிடுதலின் முழு நிலையை ஆராய்வதும் அவசியமாகின்றது. திட்ட ஆய்வு செய்வது, முன்னேற்றத்தை எளிதாக்க உதவும். திட்ட ஆய்வில் முன்னேற்றத் திட்டங்கள் அடங்கியுள்ளன. குறிப்பிட்ட சில பொருட்களின் உற்பத்தியும் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கு இந்தியாவில் அரசு மேற்கொள்கின்ற பல திட்டங்களை உதாரணமாகக் கூறலாம். பல நதிப்பள்ளத்தாக்குத் திட்டங்கள் அரசால் நிறைவேற்றப் பட்டன; சில நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இவை வேளாண்மை வளர்ச்சிக்கான நீர்ப்பாசன வசதிகளை அளிப்பதோடு, தொழில் முன்னேற்றத்திற்குத் தேவையான மின்சக்தியின் உற்பத்தியையும் மேற்கொள்கின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக இந்தியாவில் பக்ரா நங்கல் (Bhakra Nangal), ஹிராகுட் (Hirakud) தாமோதர் (Damodar), கொய்னா (Koyna), கிருஷ்ணா (Krishna) ஆகிய நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்களைக் கூறலாம். இத் திட்டங்களின் மூலம் வேளாண்மை பயனடைந்துள்ளது. பருவ மழையை மட்டும் நம்பி சாகுபடியில் ஈடுபடும் நிலை குறைந்துள்ளது; பல பெரிய தொழில் திட்டங்களின் முன்னேற்றத்திற்கும் உற்பத்திச் செய்யப்படுகின்ற மின்சாரம் உதவுகின்றது. பல கோடிக்கணக்கான ரூபாய் முதலீட்டைக் கொண்டு இத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. தனியார் துறை எந்நாட்டிலும் இவ்விதத் திட்டங்களை மேற் கொள்வதில்லை. முதலாளித்துவக் கொள்கையைப் பின்பற்றி தனியார் துறைக்கே எல்லா நிலைகளிலும் முக்கியத்தும் அளிக் கின்ற அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி போன்ற நாடுகளிலும் இவ்வகை முன்னேற்றத்திட்டங்கள் அரசால் மேற்கொள்ளப்படுகின்றன.

தொழில் துறைகளை மதிப்பீடு செய்வது போலவே, திட்ட மதிப் பீட்டிலும் கொள்கைகள் பின்பற்றப்படுகின்றன. ஆனால் திட்ட மதிப்பீடு என்பது பல தனி நிலைகளைப் பற்றிய பரந்த ஆய்வாகும். துறை ஆய்வு (Sector Analysis) என்பது குறிப்பிட்ட தொழிலின் செலவு, தேவை நிலைகளைப் பற்றி ஆராய்கின்ற ஒன்றாகும். திட்ட ஆய்வில் குறிப்பிட்டப் பொருட்களின் தேவை, அளிப்புக் காரணிகள் ஆராயப்படுகின்றன. தொழில் நுணுக்க உற்பத்தி முறைகளும் கருதப்படுகின்றன.

ஒரு குறிப்பிட்டப் பொருளின் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க அரசு பல நிலைகளைப் பயன்படுத்தலாம். வெவ்வேறு

வகைப்பட்ட முறைகளை அரசு பின்பற்றலாம். அரசு சரியான முறைகளைத் தெரிந்தெடுத்து உற்பத்தியை உயர்த்த வேண்டும்.

(i) முதலாவதாக, அமைந்திருக்கக் கூடிய உற்பத்தி நிறுவனங்களை உற்பத்தித் திறன் மிக்கவைகளாக மாற்றலாம். திறமையான முறையில் உற்பத்திக் காரணிகளைப் பயன்படுத்துவதின் மூலம் உற்பத்தியை உயர்த்த முடியும்.

(ii) இரண்டாவதாக, அமைந்திருக்கக்கூடிய உற்பத்தி நிறுவனங்களை விரிவு படுத்தலாம். முதலீட்டின் அளவை அதிகரித்து இதைப் பெறமுடியும்.

(iii) மூன்றுவதாக, புதிய உற்பத்தி நிறுவனங்களை ஏற்படுத்தி அதன் மூலம் உற்பத்தியின் அளவை உயர்த்த முடியும்.

ஒரு புதிய திட்டத்தை உருவாக்க வேறு சிலவற்றைத் தெரிந்தெடுப்பதும் அவசியமாகின்றது. எவ்வகைப் பொருட்களை உற்பத்திச் செய்வது, எம்முறைகளைப் பின்பற்றி உற்பத்தியைச் செய்வது என்பனவற்றை ஆராய வேண்டும். அப்பொருட்களின் தேவை எந்த அளவிற்கு அமைந்துள்ளது, எதிர்காலத்தில் எந்த அளவிற்குத் தேவை அதிகரிக்கக் கூடும் ஆகியவற்றையும் ஆராய்தல் அவசியமானது. திட்டத்தைத் தீட்டுவதில் பல 'கொள்கைகளைப்' (Criteria) பின்பற்றலாம். திட்ட மதிப்பீட்டைச் செய்யவும் இக் கொள்கைகள் உதவுகின்றன. திட்டத்தைத் தீட்டுபவர்கள் இவை யாவற்றையும் கருதி திட்டத்தை வரைய வேண்டும். மூன்று விதமான திட்டக் கொள்கைகளைப் பின்வருமாறு விளக்கலாம். அவையாவன:

(1) இலாபவீதக் கொள்கை (The Rate of Return Criterion)

(2) செலவைவிட நன்மையை அதிகரிக்கும் கொள்கை (The Maximization of Benefit over cost Criterion)

(3) செலவு - நன்மைக் கொள்கை (The Cost Benefit Criterion) ஆகியவைகளாகும்.

முதலாவதாக, இலாபவீதக் கொள்கை மிக உயர்ந்த அளவு இலாபத்தைத் தரத்தக்கத் திட்டத்திற்கு முதன்மை முக்கியத்துவம் அளிக்கின்றது. பல திட்டங்களின் மூலம் கிடைக்கக்கூடிய இலாபங்களும் கணக்கிடப்படுகின்றன. எத்திட்டங்களின் மூலம் மிக அதிக அளவு இலாபத்தைப் பெறமுடியுமோ அவற்றில்

முதலீடு செய்யப்படுகின்றது. முதலீடாக்கப்பட்ட மூலதனத்திற்கு அதிக இலாப வீதங்களைத் தருபவைகளாகத் திட்டங்கள் அமைய வேண்டும். முதலீட்டிற்கான இலாப வீதங்களுக்கு ஏற்பத் திட்டங்கள் தெரிந்தெடுக்கப்படுகின்றன. ஆனால் இலாபவீதக் கொள்கை விரைவாக நிறைவேற்றப் பெறுகின்ற குறுகிய காலத் திட்டங்களுக்கே பொருந்துவதாகும். எனவே இக்கொள்கை மூலதனம் குறைவாகப் பயன்படுத்தப்படுகின்ற திட்டங்களிலும், உழைப்பு அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்ற திட்டங்களிலும் பயனைத் தருவதாக உள்ளது. "குறிப்பிட்டத் துறையில் பல திட்டங்களுக்கிடையே சிலவற்றைத் தெரிந்தெடுக்க" இக் கொள்கை உதவுவதாக ஹோல்லிஸ் பி. செனரி(Hollis B. Chenery) குறிப்பிடுகின்றார். மூலதனச் - செறிவுள்ள (Capital-intensive) திட்டங்களில் இலாபவீதக் கொள்கை அதிக நன்மையைத் தர இயலாது. குறுகிய காலத்தில் முதலீடு செய்யப்பட்டு விரைவாக உற்பத்தியைத் தொடங்குகின்ற திட்டங்களுக்கு இது பொருந்துவதாகும். அதிக அளவு மூலதனத்தேவையைக் கொண்ட பெரிய தொழில்களை நிறுவ நீண்டகாலம் தேவைப்படுகின்றது. உற்பத்தியையும் அவை உடனடியாகத் தொடங்குவதில்லை. அவ்வகைத் திட்டங்களில் இலாபவீதக் கொள்கையைச் சிறப்பாகப் பயன்படுத்த முடியாது.

இரண்டாவதாக, செலவை விட நன்மையை அதிகரிக்கும் கொள்கை, பெரிய திட்டத்தின் மூலம் அதிக அளவு நன்மைகளைப் பெறலாம் என்ற கருத்தைக் கொண்டதாக உள்ளது. செலவுகளைப் பற்றி அதிகம் கருதாமல் நன்மையை அதிக அளவிற்குப் பெருக்கத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். திட்டங்களை மதிப்பீடு செய்ய உண்மையாக உதவும் கொள்கையாக இதைக் கருத முடியாது. அதிக மூலதனத்தைத் தேவையாகக் கொண்ட திட்டமாக இருந்தாலும், நன்மையை உயர்வாக அளித்தால் அதைச் செயல்படுத்த வேண்டும். செலவைப் பற்றிக் கருதாமல், நன்மைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுதல் இன்றியமையாதது என இக் கொள்கை நோக்கத்தைக் கொண்டதாக உள்ளது.

மூன்றாவதாக, திட்டங்களை மதிப்பீடு செய்வதில் உள்ள பல கொள்கைகளிலும் செலவு-நன்மைக்கொள்கை மிகவும் நன்மையை அளிக்கத்தக்கதாக அமைந்துள்ளது. திட்டங்களின் செலவுகளால் எந்த அளவு நன்மை கிடைக்கின்றது என்பதை இது ஆராய்கிறது. ஒரு திட்டத்திற்கான செலவின் மூலம் பெறப்படுகின்ற இலாபம் கருதப்படுகின்றது. இக் கொள்கையில் 'செலவு-நன்மை வீதம்' (Cost-Benefit Ratio) திட்ட மதிப்பீட்டைச் செய்யப் பயன்படுத்தப்

படுகின்றது. 'செலவு - நன்மை வீதத்தை' C எனக் குறிப்பிடலாம். செலவு-நன்மை வீதம் $C = 1$ என்ற நிலையில் இருந்தால் குறிப்பிட்டதொரு திட்டத்தை இறுதிநிலையில் உள்ளது எனக் கூறலாம். அதாவது அத்திட்டத்திற்கான செலவும், அதன் மூலம் பெறக்கூடிய நன்மையும் சமமாக இருக்கின்றன. அல்லது அத்திட்டத்தினுல் கிடைக்கக்கூடிய வருவாயும், அத் திட்டத்திற்கான செலவும் சமமாக உள்ளன எனக் கூறலாம். $C < 1$ என்ற நிலையில் செலவு-நன்மை வீதம் இருந்தால் செலவைவிட நன்மை குறைவாகவே இருக்கும். இவ்வாறு செலவு-நன்மை வீதத்தைக் கொண்டுள்ள திட்டங்களை மேற்கொள்ளக்கூடாது. செலவு-நன்மை வீதம் $C > 1$ என்ற நிலையில் இருக்கும்போது செலவைக் காட்டிலும் நன்மை அதிகமாகக் கிடைக்கப் பெறும். எனவே இவ்விதத் திட்டங்களைத் தொடங்குவது நன்மை பயப்பதாகும். செலவு-நன்மை வீதங்களை அதிக அளவில் கொண்டுள்ள திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கவேண்டும். செலவிற்கான நன்மை எந்த அளவிற்குப் பெறப்படுகின்றது எனக் கணக்கிடப்படுகிறது. முதலீட்டிற்கான இலாபம் எந்த அளவிற்குக் கிடைக்கின்றது என்பது ஆராயப்படுகிறது. அறிவியல் அடிப்படையில் அமைந்துள்ள இக்கொள்கை திட்ட மதிப்பீட்டிற்கு பெருமளவில் சிறப்பாக உதவுகின்றது.

ஒரு திட்டமானது அதனுல் கிடைக்கக் கூடிய நன்மைகளுக்கு ஏற்ப மதிப்பிடப்படுகின்றது. அத் திட்டமானது மக்களுடைய வருவாயை உயர்த்த வேண்டும்; உற்பத்தி உயர்ந்து, நுகர்வும் உயர்வடைய அதிகரித்த வருவாய் உதவ வேண்டும். அதிகரித்த வருவாயை உற்பத்தி, நுகர்வின் அளவுகளிலேயே கணக்கிட வேண்டும். செலவு-நன்மை ஆய்வு திட்டத்தினுல் கிடைக்கக்கூடிய உண்மையான நன்மையோடு தொடர்புடையது. பெயரளவு நன்மையைத் தருகின்ற திட்டத்தில் முதலீடு செய்யக்கூடாது. ஒரு நதிப் பள்ளத்தாக்குத் திட்டம் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கி விவசாயிகளுக்கு நன்மையைத் தரும். ஆனுல் நீர்ப்பாசன வசதிகளைப் பெறுபவர்களிடமிருந்து தீர்வையானது வசூலிக்கப்பட்டால் பெறப்படும் நன்மையின் அளவு குறைந்து விடுகின்றது. திட்டத்தின் மூலம் கிடைக்கக் கூடிய நன்மைகள் அரசின் கருவூலத்திற்கே சென்று சேர்கின்றது. இத்திட்டத்தின் மூலம் நீர்ப்பாசன வசதிகள் பெறப்படுவதோடு, அது ஒரு ஏக்கருக்கான உற்பத்தியின் அளவையும் உயர்த்த உதவுகின்றது. பல 'புறச் சிக்கனங்களும் (External Economics) தோன்றுகின்றன. இந்நிலைகளால் விவசாயிகளின் வருவாய் அதிகரிக்கின்றது. இவையாவுமே உண்மை நன்மைகளைத் தருபவை எனக் கருதலாம்.

சில திட்டங்களினுல் நேரடியான நன்மையை உடனடியாகப் பெற முடியும். 'பல நோக்கு நதிப் பள்ளத்தாக்குத் திட்டம்' (Multi-purpose River Valley Project) நீர்ப்பாசன வசதி, வெள்ளத் தடுப்பு, மின்சார உற்பத்தி, மீன் பிடிப்பு, போக்குவரத்து வசதி போன்ற உடனடி நன்மைகளை நேரடியாகத் தருகின்றது. இவ்வித அடிப்படை நன்மைகளை நேரடி நன்மைகள் எனவும் அழைக்கலாம். பல நோக்குத் திட்டம் மறைமுக நன்மைகளைத் தருவதாகவும் அமைந்துள்ளது. உதாரணமாக, பக்ரா-நங்கல் திட்டம் ஆயிரக் கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கின்றது. இத்திட்டத் தின் மூலம் நங்கல் நகர்ப்பகுதியில் இருந்து பக்ரா அணைக்கு இருப்புப் பாதைகள் அமைக்கப்பெற்றன. நாட்டின் பிற பகுதி களோடும் தொடர்பு கொள்ளும் வகையில் இருப்புப் பாதைகள் இப் பகுதிகளில் அமைக்கப்பட்டன. புதிய சாலை வசதிகளும் பெருகின. நங்கல் நகரமே புதிதாக உருவாக்கப்பட்டது. அங்கு உர உற்பத்தித் தொழிற்சாலை ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. பக்ரா நங்கல் உல்லாசப் பயணிகள் செல்லத்தக்க இடங்களாக மாற்றப்பட்டு அதன் மூலம் வருவாய் பெறப்படுகின்றது. இவ்வாறு 'பல நோக்கு நதிப்பள்ளத்தாக்குத் திட்டம்' மறைமுகமான பல நன்மைகளையும் அளிக்கின்றது. இவை எல்லாவற்றையும் நேரடி நன்மைகளாகவும் கொள்ளலாம்.

ஒரு திட்டத்தின் மூலம் 'தெளிவாகத் தெரிகின்ற' (Tangible) நன்மைகளும், 'தெளிவாகத் தெரியாத' (Intangible) நன்மைகளும் ஏற்படுகின்றன. 'தெளிவாகத் தெரிகின்ற' நன்மைகளை பணத்தின் உதவியைக் கொண்டு கணக்கிட முடியும். 'தெளிவாகத் தெரியாத' நன்மைகளை பணத்தின் உதவியைக் கொண்டு கணக்கிடமுடியாது. எடுத்துக்காட்டாக, பக்ரா-நங்கல் திட்டத்தின் மூலம் கிடைக்கக் கூடிய நன்மைகளை பணவீதத்தில் அளவிட முடியும். எனவே இத்திட்டம் 'தெளிவாகத் தெரிகின்ற' நன்மைகள் பலவற்றைக் கொண்டதாக உள்ளது எனக் கூறலாம்.

நன்மைகளில் பலவகைகள் இருப்பது போலவே, செலவுகளி லும் பல வகைகள் உள்ளன. செலவு 'உண்மையானதாக' இருக்க லாம்; அல்லது 'பெயரளவுச் செலவாகவும்' (Nominal Cost) இருக்க வாய்ப்பு உண்டு. 'ஒரு 'வட்டாரச் சமிதி' மக்களிடமிருந்து பணத் தைப் பெற்று கால்வாய் ஒன்றை வெட்டினுல் அது மக்களுக்குப் 'பெயரளவுச் செலவாகவே' அமைகிறது. கால்வாய் வெட்டுவதில் அவர்கள் உடல் உழைப்பை அளிக்கவில்லை. வட்டாரச் சமிதி மக்களிடமிருந்து பணத்தைப் பெறுகின்றது. ஆனல் கால்வாய்

வெட்ட அவ்வட்டார மக்களின் உடலுழைப்பு பெறப்பட்டால், அது அவர்களுக்கு ‘உண்மைச் செலவாக’ (Real Cost) இருக்கும்.

செலவு - நன்மை ஆய்வு ‘முதன்மைச் செலவுகளோடு’ (Primary Costs) நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. திட்டத்தை நிர்மாணிக்கவும், நிறைவேற்றவும் செலவழிக்கப்படுபவைகளே முதன்மைச் செலவுகளாகும். இவற்றைத் தவிர சில ‘துணைச் செலவுகளும்’ (Secondary Costs) திட்டத்தை மேற்கொள்ளத் தேவைப்படுகின்றன. இவை மறைமுக நன்மைகள் பலவற்றை அப் பகுதி மக்களுக்குத் தருகின்றன. தொழில் தொடங்கப்படும் இடம் ஒரு நகரமாகவே மாற்றப்படுகின்றது. குடியிருப்பு வசதிகள், கல்வி வசதிகள், மருத்துவ வசதிகள் ஆகிய யாவும் அத்தொழில் திட்டத்தில் பணியாற்றுபவர்களுக்காகச் செய்து தரப்படுகின்றன.

திட்ட மதிப்பீடுகளைச் செய்வதற்கான புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படவேண்டும். ஒரு திட்டத்தின் உழைப்பாளர்களின் தேவை, கச்சாப் பொருட்களின் தேவை ஆகியவை கணக்கிடப்படுகின்றன. உற்பத்தியின் அளவும் திட்டமிடப்படுகின்றது. இவ்வாறு திட்டமிடும்போது அத் திட்டத்தை அதைப் போன்ற வேறொரு நிறுவனத்தின் நிலையோடு ஒப்பிட்டு நோக்க வேண்டும். ஒரு திட்டத்தினுல் செலவுகளைக் காட்டிலும் நன்மைகள் அதிகமாக இருந்தால், அத் திட்டத்தை மேற்கொள்வது நல்லது. திட்டத்தின் மூலம் கிடைக்கக்கூடிய வருவாயைவிட செலவு அதிகமிருந்தால், அத் திட்டத்தை மேற்கொள்ளாமல் நீக்குவதே நல்லது. நன்மைகள் கணக்கிடப்படும்போது, முதலில் உற்பத்தியின் அளவு தீர்மானிக்கப்படுகின்றது; பயன்படுத்தப்படுகின்ற உழைப்பின் அளவும் அளவிடப்படுகின்றது. பிறகு இவை பணத்தின் அளவில் மதிப்பிடப்படுகின்றன. மூலதனச் சொத்துக்கள் எவ்வளவு காலம் பயனளிக்கத்தக்கவை. இயந்திரங்களின் தேய்மானங்கள் ஆகியவை பற்றியும் திட்டமிடப்படுகின்றன. ஓராண்டிற்கான செலவுகள் கணக்கிடப்படுகின்றன. திட்டத்தை மதிப்பீடு செய்யும்போது நேரடி செலவுகளும், நேரடி நன்மைகளும் ஒப்பிடப்படுகின்றன. மொத்தச் செலவுகளையும், நன்மைகளையும் கணக்கிட மேற்கண்ட புள்ளி விவரங்கள் கணிக்கப்படுகின்றன. உற்பத்திச் செய்யப்பட்ட பண்டங்களும், பணிகளும் கணக்கிடப்படுவதைப் போலவே, நுகரப்பட்டப் பண்டங்களும், பணிகளும் கணக்கிடப்பட வேண்டும். பல சந்தைகளிலும் நிலவுகின்ற விலைகளின் அளவுகளுக்கேற்ப பண்டங்களின் மதிப்பும் பணிகளின் மதிப்பும் தீர்மானிக்கப்படுகின்றன. பணவீக்க நிலையோ, பண வாட்ட நிலையோ பொருளாதாரத்தில் அமைந்திருந்தால் அந் நிலையும் ஆராயப்படுகின்றது.

செலவு - நன்மை ஆய்வில் சில சிக்கல்களும் அமைந்துள்ளன. நன்மைகளைப் பெறுவதற்கான செலவை கணக்கிட்டு விடலாம். ஆனால் குறிப்பிட்ட செலவின் மூலம் எந்த அளவிற்கு நன்மைகள் கிடைத்துள்ளன என்பதை நிர்ணயிப்பது கடினமாகின்றது. ஒரு திட்டத்தின் நன்மையைத் தீர்மானிப்பதைவிட, செலவைத் தீர்மானிப்பது எளிதானதாகும். உற்பத்திக் காரணிகளுக்கான செலவைக் கணக்கிடுவதன் மூலமும், உற்பத்தி முறைகளைத் தெரிந்தெடுப்பதன் மூலமும் ஒரு நிறுவனத்தின் மொத்த உற்பத்திச் செலவைத் திட்டமிட்டு விடலாம். ஆனால் மொத்தச் செலவைச் சரியான அளவில் கணக்கிடுவதும் சில நிலைகளால் தடைபடுகின்றது. வளர்ச்சியடையாத பொருளாதாரங்களில் உற்பத்திக் காரணிகளின் சந்தை விலைகள் உண்மையான விலைகளாக அமைந்திருப்பதில்லை. நிறைகுறைப் போட்டியே இச் சந்தையில் நிலவுவதாகக் கூறலாம். ஏனெனில் குறிப்பிட்ட ஊதியங்களின் அளவில் 'மறைந்துள்ள வேலையின்மையும்' அமைந்துள்ளது. குறிப்பிட்ட வட்டி வீதங்களில் நிதிப் பற்றுக்குறை அமைந்துள்ளது. குறிப்பிட்ட மாற்று வீதத்தில் அந்நியச் செலாவணி பற்றுக் குறையும் அமைந்திருக்கின்றது. எனவே சமநிலை ஊதியவீதம் சந்தை ஊதியத்தை விடக் குறைவாக உள்ளது; சமநிலை வட்டிவீதம் சந்தை வீதத்தைவிட அதிகமாக உள்ளது.

இவ்விதக் குறைகளை நீக்க ஜே. டின்பெர்ஜன் (J. Tinbergen), கெனரி (Chenery), கிரெட்கெமர் (Kretchemer) போன்றவர்கள் 'சாயல் விலைகளைப்' (Shadow Prices) பயன்படுத்தலாம் என கருத்து தெரிவிக்கின்றனர். இச் சாயல் விலைகள் உற்பத்திக் காரணிகளின் உண்மை மதிப்பை உணர்த்துபவைகளாகும். 'சாயல் விலைகளைப்' போன்றே உண்மையான செலவுகளைக் கணக்கிடவும் 'சாயல் செலவுகள்' (Shadow costs) பயன்படுத்தப் படுகின்றன. ஒரு திட்டத்தின் உண்மைச் செலவுகளையும், உற்பத்திக் காரணிகளின் உண்மை விலைகளையும் அறிய இவை உதவுகின்றன. சமீப காலமாகப் பொருளியலறிஞர்கள் சாயல் செலவுகளையும், சாயல் விலைகளையும் கணக்கிட்டுத் திட்டங்களை மதிப்பீடு செய்கின்றனர். இம் முறையைப் பின்பற்றுவது நன்மையைத் தருமென்றாலும், இது அதிக அளவிற்குப் பயன்படுத்தப்படுவதில்லை. செலவுகளைத் தீர்மானிப்பதில் இவ்வித இடர்ப்பாடுகள் அமைந்துள்ளன. ஆனால் நன்மைகளைத் தீர்மானிப்பதைவிட, செலவுகளைத் தீர்மானிப்பது எளிதானதாகும்.

ஒரு திட்டத்தின் மூலம் கிடைக்கக் கூடிய நன்மைகளை அளவிடுவது கடின நிலைகளைக் கொண்டுள்ளது. புதிய திட்டத்தில்

உறுதியற்ற நிலையானது அமைந்திருக்கின்றது. அதனால் அது உற்பத்தி செய்யும் பொருளின் அளிப்பு எதிர்காலத்தில் எவ்வாறு இருக்குமெனக் கூறயியலாது. எதிர்காலத்தில் அப் பொருளின் தேவையும், விலையும் எந்த அளவுகளில் அமைந்திருக்கும் என்றும் உறுதியாகத் திட்டமிடமுடியாது. நன்மைகளை அளவிடுவதில் உள்ள மற்றொரு சிக்கல் 'புறச் சிக்கனங்களை' தீர்மானிக்க இயலாத நிலையாகும்.

இந்தியாவில் செலவு - நன்மை ஆய்வு நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்களில் செய்யப்படுகின்றது. பேராசிரியர் டி. ஆர். காட்கில் மஹாராஷ்டிர மாநிலத்தில் உள்ள கோதாவரி, பிரவாரா (Pravara) கால்வாய்த் திட்டங்களின் பொருளாதார விளைவுகளை ஆராய்ந்தார். சார்தா கால்வாய்த் திட்டத்தின் விளைவுகளை டாக்டர் பால்ஜித் சிங் (Baljit singh) ஆராய்கின்றார். இது உத்திரப்பிரதேசத்தில் அமைந்துள்ள திட்டமாகும். பேராசிரியர் கே. என். ராஜ் பக்ரா - நங்கல் திட்டத்தின் செலவு-நன்மை மதிப்பீட்டை கணக்கிட்டு வருகின்றார். பஞ்சாப் மாநிலத்தில் அமைந்துள்ள அத் திட்டம் மிக அதிக முதலீட்டைக் கொண்ட பெரிய திட்டமாகும். இந்தியாவில் பல திட்டங்களிலும் செலவுகளையும், நன்மைகளையும் மதிப்பீடு செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டாலும், பல தடைகளால் அவை வெற்றி பெறவில்லை. செலவுகளையும், நன்மைகளையும் மதிப்பீடு செய்வதில் அமைந்திருந்த சிக்கல்களால் பல திட்டங்களையும் ஆய்வு செய்ய முடியவில்லை.

நம் நாட்டில் புள்ளி விவரங்களைச் சேமிப்பதே கடின நிலையைக் கொண்டதாக உள்ளது. ஒரு திட்டம் நிறைவேற்றப் படுவதால் கிடைக்கக்கூடிய நன்மைகளை இதனால் தீர்மானிக்க முடிவதில்லை. உறுதியின்மையும், புறச் சிக்கனங்களைக் கணக்கிட முடியாத நிலையும் ஒரு திட்டத்தின் மூலம் பெறக்கூடிய நன்மைகளைச் சரியான அளவிற்கு நிர்ணயிக்க இயலாதபடி செய்து விடுகின்றன. சில திட்டங்களில் 'தெளிவான நன்மைகளையும்'(Tangible benefits), 'தெளிவற்ற நன்மைகளையும்' (Intangible benefits) கணக்கிடுவது கடினமாகின்றது. ஒரு குடிநீர்த் திட்டத்தின் மூலம் எவ்வளவு மக்கள் பயனடைகின்றனர்; அணையைக் கட்டுவதிலும், கரைகளை அமைப்பதின் மூலமாகவும் எந்த அளவிற்கு வெள்ளத்தைக் கட்டுப் படுத்தலாம் என்பதைக் கூட இன்று இந்தியாவில் சரியாக மதிப்பீடு செய்ய முடியவில்லை.

ஒரு திட்டத்தின் செலவை நிர்ணயிப்பதும் இதைப் போன்ற கடின நிலையையே கொண்டுள்ளது. திட்டத்தைத் தொடங்கு

வதற்கு முன் செலவுகள் கணக்கிடப்பட்டாலும் அவை உண்மைச் செலவுகளைவிடக் குறைவாக உள்ளன; வேறு சில நிலைகளில் உண்மைச் செலவுகளை விட அதிகமாகவும் இருக்கின்றன. விலைகளின் உயர்வாலும், கச்சாப் பொருட்களின் பற்றுக்குறை யாலும், அந்நியச் செலவாணிச் சிக்கலாலும் சரியான அளவு செலவைக் கணக்கிட முடிவதில்லை. சில திட்டங்களில் உழைப்பு இலவசமாக அளிக்கப்படும்போது, உழைப்பிற்கான செலவைக் கணக்கிடுவது மேலும் கடினமாகின்றது. இந்தியாவின் பலவகைத் திட்டங்களையும் மதிப்பீடு செய்ய வசதிகள் பெருக்கப்படுதல் வேண்டும். மதிப்பீடு செய்வதில் தேர்ச்சிபெற்றவர்களை இதற்காகப் பயன்படுத்துவது இன்றியமையாதது.

உற்பத்தி நிறுவனத்தை மதிப்பீடு செய்ய கீழ்க்கண்ட காரணிகள் சிறப்பாக ஆராயப்படுதல் அவசியமானதாகும்:

(1) குறிப்பிட்ட காலத்திற்குள் உற்பத்தி எந்த அளவிற்குப் பெறப்படுகின்றது என்பதை அறியவேண்டும். சில திட்டங்கள் குறுகிய காலத்திலேயே பயனளிப்பவைகளாகும்; பலநோக்கு நதிப்பள்ளத்தாக்குத் திட்டங்கள் போன்ற வேறு சில திட்டங்கள் நீண்ட காலத்திலேயே நன்மையளிக்கத் தொடங்குகின்றன. நீண்ட காலத்தில் நிறைவேற்றத்தக்க திட்டங்களின் செலவுகள் அதிகரிக்கலாம். அவை உற்பத்திச் செய்கின்ற பொருட்களின் விலைகள் உயர்வடையலாம். இவையாவும் திட்டங்களை மதிப்பீடு செய்யும்போது கருதப்பட வேண்டும்.

(2) உற்பத்திப் பொருட்களிலும் பல வேறுபாடுகள் உள்ளன. வெவ்வேறு வகைத் தொழில் நுணுக்க உற்பத்தி முறைகளால், பல்வேறு தரத்தைக் கொண்டுள்ள பொருட்கள் உற்பத்திச் செய்யப் படுகின்றன. சிறிய அளவு உற்பத்தி முறைகளில் மாறுதல்களை எளிதில் செய்ய முடியும். பேரளவு உற்பத்தித் தொழில் நுணுக்க முறைகளில் எளிதில் மாற்றங்களைச் செய்ய இயலாது. இக்காரணி திட்ட மதிப்பீட்டைச் செய்வதில் கடின நிலையைத் தோற்று விக்கின்றது.

(3) ஒரு குறிப்பிட்ட உற்பத்தி நிறுவனத்தின் உற்பத்தி அளவை நிர்ணயிக்க, எதிர்காலத் தேவை மாற்றங்களை அறிவது அவசியமாகின்றது. ஒரே திட்டமானது ஒரு சில இடங்களில் மட்டும் செறிந்திருக்கும்போது, போக்குவரத்துச் செலவுகள் அதிகரிக்கின்றன. வேறு சில பொருளாதாரச் சிக்கனங்களையும் பெற முடிவதில்லை. பேரளவுத் தொழில் நிறுவனங்களை நடத்து வதிலும் இவ்வித இடர்ப்பாடுகள் ஏற்படுவதுண்டு. உத்தம அளவு

உற்பத்தியை இவை மேற்கொள்ளத் தேவையின் அளவு சரியான அளவில் மதிப்பிடவேண்டும். ஆனால் இவற்றைப் பற்றிய திட்ட மதிப்பீடுகளைச் சரியான அளவில் செய்வது இயலாததாகின்றது.

(4) தொழில் நுட்பம் மிக்க முன்னேற்றமான உற்பத்தி முறைகளைப் பின்பற்றினால் உற்பத்திப் பல மடங்கு அதிகரிக்கும். பயிற்சி பெற்ற தொழிலாளர்களாலும், திறமையான நிர்வாகத்தாலும் உற்பத்தியின் அளவைக் கூடுதலாக்க முடியும். நீண்ட காலத்தில் இவ்வாறு அதிகரிக்கின்ற உற்பத்தியின் அளவு விலைகளின் மாற்றங்களை ஏற்படுத்தும். பிற சமுதாய நன்மைகளும், செலவுகளும் திட்டங்களை மதிப்பீடு செய்யும்போது கருதப்படுதல் அவசியமானதாகும்.

திட்ட மதிப்பீட்டு முறை பின்வரும் நிலைகளில் அமைய வேண்டியது இன்றியமையாததாகும்:

(i) உள்நாட்டு உற்பத்திக்குச் சரியான பொருட்களைத் தெரிந்தெடுத்தல்.

(ii) பொருளாதாரத்தின் ஒவ்வொரு துறையிலும் மிக நல்ல திட்டங்களைத் தெரிந்தெடுத்தல்.

(iii) சில திட்டங்களுக்கிடையே தொழில் நுணுக்க இணைப்பு முறைகளை அல்லது தொடர்பு முறைகளை ஏற்படுத்துதல். சில நிலைகளில் ஒரு தொழிலின் உற்பத்தி மற்றொரு தொழிலின் உற்பத்தியைச் சார்ந்து அமைந்திருக்கும். உதாரணமாக உலோக உற்பத்திக்கும், இரசாயனப் பொருட்களை உற்பத்திச் செய்கின்ற தொழில் நிறுவனங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இவையிரண்டும் ஒன்றையொன்று சார்ந்துள்ளன. ஒன்று முன்னேற்றமடைய மற்றதின் வளர்ச்சியும் தேவையாகின்றது. பெறப்படுகின்ற இலாபங்களின் அளவும் ஒன்று மற்றதைச் சார்ந்துள்ள நிலைக்கு ஏற்பவே அமையும்.

(iv) ஒவ்வொரு துறை திட்டத்திலும் உள்ள பல நிறுவனங்களில் முதலீட்டின் உற்பத்தி அளவு ஒப்பிடப்பட வேண்டும்.

இவ்வாறு திட்ட மதிப்பீடுகள் பல உற்பத்தி நிறுவனங்களிலும் செய்யப்படுவது அவசியமாகும். குறிப்பாக இந்தியா போன்ற திட்டமிட்டுப் பொருளாதார வளர்ச்சியைப் பெறுகின்ற நாடுகளில் பலவகை முதலீட்டிற்கான மதிப்பீடுகள் செய்யப்படவேண்டும். எவ்விதத் தொழில்கள் நாட்டிற்குத் தேவை, எவ்வகைப்பட்ட

பொருட்களை உற்பத்திச் செய்யவேண்டும், பொருட்களின் தேவையின் அளவு எந்நிலையில் இருக்கும் ஆகியவை பற்றிய மதிப்பீடு வளரும் பொருளாதாரத்தை நன்மையடையச் செய்யும். எவ்வகை முதலீடுகள் அதிதி இலாபத்தைத் தந்து, நன்மையை அடைய உதவும் என்பதையும் கணக்கிடவேண்டும். நிதி வசதிகளைக் குறைவாகக் கொண்ட வளர்ச்சி குன்றிய நாடுகளில் முதலீடுகள் அதிகப் பயன்களைத் தருமாறு செய்யப்படுதல் இன்றியமையாதது. மிக அவசியத் தேவைகளைக் கொண்ட தொழில்களும் வளர்க்கப்பட வேண்டியது அவசியமானது. செலவுகளையும், நன்மைகளையும் கணக்கிட்டு அதற்கேற்ப முதலீடுகள் செய்தல் விரைவான வளர்ச்சியைப் பெற உதவுமெனலாம்.

சில திட்டங்களை மேற்கொண்டால் மட்டும் போதாது. அவற்றில் ஈடுபடுத்தப்பட்ட முதலீட்டின் மூலம் அதிக நன்மைகளைப்பெற முயலவேண்டும். சில புதிய நிறுவனங்களைத் தொடங்கும்போது, அவற்றைப் போன்று அமைந்துள்ள நிறுவனங்களைப்பற்றி ஆராய்ந்து அதற்கேற்ப மதிப்பீடுகளை செய்தல் நன்மை தரும். இந்தியாவில் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுவிட்டன. இத் திட்டங்களின் மூலம் சிறப்பான முன்னேற்றத்தை நாம் பெறவில்லை. இதற்குக் காரணம் திட்டக்காலங்களில் முதலீடு செய்யப்பட்ட பல துறை நிறுவனங்களைப் பற்றியும் சரியான மதிப்பீடு செய்யாமையேயாகும். பல பெரிய தொழில்களும், சிறு தொழில்களும், நீர்ப்பாசனத் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டன. இவை எல்லாவற்றிலும் முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தை விட, நமக்குக் கிடைத்த நன்மைகள் அதிகமாக அமையவேண்டும். ஆனால் குறைந்த அளவு நன்மைகளை மட்டுமே நாம் பெற்றுள்ளோம். திட்ட மதிப்பீடுகள் சரியான அளவில் செய்யப்படாமையே நம் திட்டங்கள் குறைந்த அளவே வெற்றியை அடைந்தமைக்குக் காரணமாகும். பல வகைப்பட்ட முதலீடுகளும் மதிப்பீடு செய்யப்படவேண்டும். இம் மதிப்பீடுகள் சரியான அளவுகளில் செய்யப்பட்டால் விரைவான பொருளாதார முன்னேற்றத்தை எளிதில் பெற இயலும்.

35. முன்னேற்ற முறைகளைத் தெரிந்தெடுத்தலும் பொருளாதார முன்னேற்றமும்

(The Choice of Techniques and Economic Development)

I. முறைகளைத் தெரிந்தெடுப்பதில் உள்ள சிக்கல்கள்

விரைவான வளர்ச்சி விகிதத்தைப்பெற பொருளாதாரத்தில் அமைந்துள்ள எல்லா வசதிகளும் சிறப்பாகப் பயன்படுத்தப்பட வேண்டும். வளர்ச்சியடையாத நாடுகளின் தலையாய சிக்கல்களில் இதுவும் ஒன்ருகும். உலகின் பல வளர்ச்சி குன்றிய நாடுகள் மூலதனப் பற்ருக்குறையையும், எச்ச மக்கட் தொகையையும் கொண்டுள்ளன. இவ்விரு காரணிகளும் திறமைகளைத் தெரிந் தெடுக்கத் தூண்டுகின்றன. பழைய உற்பத்தி முறைகளை புதிய உற்பத்தி முறைகளாக மாற்றும்படி செய்கின்றன. குறிப்பிட்டத் திட்டத்தையோ, சிலவகை உற்பத்தி நிறுவன முறைகளையோ திறமையாகத் தெரிந்தெடுப்பது சிக்கலானதாகும். எவ்வகைத் திட்டங்களைத் தீட்டவேண்டும், எவ்வகைத் தொழில்களை வளர்க்க வேண்டும் என்பதை அரசு தெரிந்தெடுத்து அவற்றிற்கு முதல் முக்கியத்துவம் அளித்தல் அவசியமானதாகிறது.

வளர்ச்சியடையாத ஒரு நாட்டில் பலவகைத் துறைகளையும் வளர்க்க வாய்ப்பு உண்டு. உழைப்புச் செறிந்த (Labour-intensive) அல்லது மூலதனச் செறிவுள்ள (Capital-intensive) உற்பத்தி முறை களைப் பின்பற்றலாம். எளிய தொழில்களை அல்லது பெரிய தொழில்களை மேம்படுத்தலாம். வேளாண்மையை வளர்ச்சி யடையச் செய்யலாம்; அல்லது தொழில் துறையை முன்னேற்ற மடையச் செய்யலாம். எனினும் இறுதியான தீர்வு உழைப்புச்

செறிந்த உற்பத்தி முறைகளைப் பின்பற்றுவதா, அல்லது மூலதனச் செறிவுள்ள உற்பத்தி முறையைப் பின்பற்றுவதா என்பதே தெரிந்தெடுக்கப்பட வேண்டியதாகின்றது. எளிய தொழில்களாக (Light Industries)இருந்தாலும், பெரிய தொழில்களாக இருந்தாலும், வேளாண்மை என்ருலும், தொழில்துறை என்ருலும் அவற்றில் எவ்வகை உற்பத்தி முறையைப் பின்பற்றுவது என்பதே அறிய வேண்டிய ஒன்ருகின்றது.

"பொருளாதார முன்னேற்றத்திற்கான கொள்கையில் பல வகை முறைகளைப் பின்பற்றும்போது பலவகைப்பட்ட முயற்சிகள் அக் கொள்கையை நிறைவேற்றத் தேவைப்படுகின்றன." [1] திறமைகளைத் தெரிந்தெடுத்தல் அல்லது சிறப்பான 'முறைகளைத் தெரிந்தெடுத்தல்' விரைவான வளர்ச்சி வீதத்தைப் பொருளாதாரம் பெறப் பெரிதும் உதவும்.

உற்பத்தி முறைகளைத் தெரிந்தெடுப்பதின் இறுதி நோக்கம் அமைந்திருக்கின்ற 'காரணி விகிதங்களைக்' (Factor Proportions) கருத்திற்கொண்டு சிறந்த முறையை அறியக்கூடியதாக அமைதல் வேண்டும். சிறந்த உற்பத்தி முறை முதலீட்டிற்கான உற்பத்தியை மிக உயர்ந்த அளவில் தரும்; அல்லது உற்பத்திச் செலவுகளை மிகக் குறைந்த அளவிற்குத் தாழ்த்திவிடும். ஒரு சமுதாயத்தில் தொழில் நுணுக்க முன்னேற்றம் படிப்படியாக நீண்ட காலத்தில் ஏற்படுகின்றது. முதலில் சாதாரண உற்பத்தி முறைகளும், பின்பு சற்று கடின நிலைகளைக் கொண்ட சிறப்பான உற்பத்தி முறைகளும் ஏற்படுகின்றன. தன்னிறைவிற்கான உற்பத்தி, சந்தைக்கான உற்பத்தியாக மாறுகின்றது. தொடக்கத்தில் உள்நாட்டு மூலதனம் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகின்றது. பிறகு வெளிநாட்டு மூலதனமும் உற்பத்தியைப் பெருக்க அவசியமாகின்றது.

எனினும், பேராசிரியர் குஸ்நெட்ஸ் (Prof. Kuznets)[2] தொழில் நுணுக்க முறைகளின் வளர்ச்சிபற்றி வேறு முறைகளில் விவரிக்கின்ருர். சில தனிப்பட்ட முறைகளைப் பற்றியும் அவர் விளக்குகின்ருர்:

(i) விஞ்ஞானக் கண்டுபிடிப்பு அல்லது தொழில் நுட்ப அறிவில் முன்னேற்றம் (Discovery);

(ii) முன்னமேயே இருந்த தொழில் நுட்ப அறிவை மேலும் பயனுள்ளதாக்கும் கண்டுபிடிப்பு (Invention);

---

1. A. K. Sen, Choice of Techniques, p. 11

2. Simon Kuznets, Six Lectures on Economic Growth, pp. 30-32

(iii) பொருளாதாரச் சிக்கன உற்பத்திக்கு கண்டு பிடிப்புக் களில் பல முன்னேற்றங்களை ஏற்படுத்துதல் (Innovation);

(iv) கண்டுபிடிப்புக்களில் செய்ய முன்னேற்றங்களைப் பரப்புதல்.

தொழில் நுட்ப வளர்ச்சியின் இவ்விதத் தொடர்ச்சியான முகங்கள் (Phases) முடிவடைவது முக்கியமாக நான்கு காரணி களைச் சார்ந்துள்ளது :

(1) முதலாவதாக, தேவையான விஞ்ஞான அறிவு வளர்ச்சி இருத்தல் இன்றியமையாதது.

(2) இரண்டாவதாக, ஒவ்வொரு தொழில் நுட்ப வளர்ச்சி நிலையிலும் அதிக முதலீடுகளும், திறமையான உழைப் பாளர்களும் தேவையாகின்றது.

(3) மூன்றாவதாக, கண்டுபிடிப்புக்களைப் பயனுள்ளவை களாக்க தொழில் முயல்வோரின் திறமை அவசிய மாகின்றது.

(4) இறுதியாக, கண்டுபிடிப்புக்களின் முன்னேற்றங்களைப் பரப்ப மக்களும் அவற்றை விரும்பும் நிலை அமைய வேண்டும். அதிக உற்பத்தியைச் செய்ய மக்கள் புதிய பொருட்களையும், புதிய உற்பத்தி முறைகளையும் ஏற்கின்ற நிலை ஏற்படவேண்டும்.

பொருளாதார வளர்ச்சிக்கு தொழில் நுட்ப முன்னேற்றம் மிக அவசியமானதாகும்.

பேராசிரியர் குஸ்நெட்ஸ் குறிப்பிடுகின்ற இந்நிலைகள் வளர்ச்சி யடையாத நாடுகளில் மறைந்தே உள்ளன. வளர்ச்சி குன்றிய நாடுகளில் கல்வி வசதிகள், ஆராய்ச்சி வசதிகள் இருப்பதில்லை. அந்நாடுகளில் தொழில் முயல்வோரின் திறமை குறைவாக உள்ளது. திறமையான உழைப்பும் கிடைப்பதில்லை. மக்களுடைய வருவாய், நுகர்வு, சேமிப்பு ஆகிய யாவும் குறைந்த அளவிலேயே உள்ளன. இக்காரணங்களால் பரந்த சந்தைகளும் உற்பத்திப் பொருட்களுக்கு இருப்பதில்லை. கண்டுபிடிப்புகளைச் செய்வதற்கான திறமை பின் தங்கிய நாடுகளில் அமைவதில்லை. திறமையான தொழில் முயல் வோர் இல்லாமைக்கு பின்தங்கிய சமுதாய, பொருளாதார, அரசியல் அமைப்புக்களே காரணமாகும். எனவே, வளர்ச்சி யடைந்த நாடுகளில் கண்டுபிடிப்புகள் பொருளாதார முன்னேற்றத்

திற்கு உதவிய நிலை, இன்றைய பின்தங்கிய நாடுகளில் அமைந்திருக்கவில்லை. தற்பொழுதுள்ள வளர்ச்சியடையாத நாடுகளின் இயல்புகள் அவ்வாறு அமைந்துள்ளன.

இந்நிலைகளைக் கருத்திற்கொண்டு பின் தங்கிய நாடுகளில் உற்பத்தி முறைகளைத் தெரிந்தெடுக்க வேண்டும். கண்டுபிடிப்புக்களைப் பயன்படுத்தி, உழைப்பின் உற்பத்தித் திறனைப் பெருக்கி ஒரு அலகு மூலதனத்திற்கான உற்பத்தியை அதிக அளவில் பெறுவது ஒரு முறையாகும். அல்லது குறைந்த அளவு மூலதனத் தேவை கொண்ட, உழைப்புச் செறிவு (Labour-intensive) உள்ள தொழில்களைத் தொடங்கலாம். இவற்றைப் பின்பற்றுவதின் மூலமாக மூலதனத் திரட்சியையும், 'திறமைத் திரட்சியையும்' (Skill Formation) பெற வாய்ப்பு ஏற்படவேண்டும். சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள், முன்னேற்றமடைந்த உற்பத்திச் சாதனங்கள், கருவிகள், அதிக விளைச்சலைத்தரும் விதைகள், உரங்கள் ஆகியவற்றின் மூலமாக வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கலாம். குறுகிய காலத்தில் பலனளிக்கக்கூடிய பயிர்களைச் சாகுபடி செய்தும் உற்பத்தியை உயர்த்தலாம். குறிப்பிட்ட அளவுள்ள நிலத்தில் இவ்வித மாற்றங்களைச் செய்தல் மூலம் உற்பத்தியின் அளவைப் பலமடங்கு பெருக்க முடியும்.

பல வளர்ச்சியடையாத நாடுகளும் உற்பத்தியைப் பெருக்கும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபடுவதில்லை. உழைப்புச் செறிந்த தொழில் நுணுக்கங்களைப் புகுத்துவதிலும் அவை தவறிவிடுகின்றன. இதற்கு மூலகாரணமாக அமைவது மூலதனப் பற்றுக்குறையும், உழைப்பாளர்களின் திறமைக் குறைவுமாகும். ஆக்கத்தை அதிகரிக்கும் உற்பத்தி முறைகளைப் பின்பற்றுமல், வழக்கிழந்த பழைய உற்பத்தி முறைகளை பின்தங்கிய நாடுகளின் மக்கள் பின்பற்றுகின்றமைக்கு பொருளாதார, சமுதாய, அரசியல் அமைப்பு முறைகளே காரணமென பெர்ட் ஹோஸ்லிட்ஷ் (Bert Hoselitz)[1] தன்னுடைய ஆய்வின் மூலம் வெளிப்படுத்துகின்றார்.

மூலதனச் - செறிவுள்ள உற்பத்தி முறைகளும் பின்தங்கிய நாடுகளில் பயன்படுத்தப்படலாம். இன்றைய வளர்ச்சியடையாத நாடுகள் தொழில் நுட்ப வளர்ச்சியில் முன்னேற்றமடைந்த நாடுகளைப் போன்று அமைந்திருக்கவில்லை. ஆகவே முன்னேற்றமடைந்த நாடுகளின் தொழில் நுணுக்க உற்பத்தி முறைகளையே

1. Bert F. Hoselitz-"Problems of Adopting and Communicating Modern Techniques to Less Developed Areas", Economic Development and Cultural Change, pp. 249-69.

பரந்த அளவில் வளர்ச்சி குன்றிய நாடுகள் பின்பற்ற வேண்டும். கேலன்சன் (Galenson), லெபன்ஸ்டீன் (Leibenstein) இருவரும் அறிவுறுத்துவதாவது, "முற்றிலும் பின்தங்கிய பொருளாதாரம் வெற்றியோடு முன்னேற வேண்டுமென்றால், முடியும் அளவிற்கு பரந்த அளவில் புதிய தொழில் நுணுக்க உற்பத்தி முறைகள் புகுத்தப்படவேண்டும்." தொடர்ச்சியான முன்னேற்றம் விளைய, வருவாயில் உயர்வு ஏற்பட முன்னேற்றமடைந்த உற்பத்தி முறைகள் மிக அவசியமானவை. உற்பத்தி முறைகளின் மாற்றங்கள் பழக்க மான உற்பத்தி முறைகளையும், வாழ்வின் நிலைகளையும், சமுதாய அமைப்புக்களையும், மக்கள் நோக்குகளையும் மாறச் செய்துவிடும்.

வளர்ச்சியடையாத நாடுகளில் புதிய தொழில் நுணுக்கங்களைப் புகுத்துவதில் பல சிக்கல்களும் அமைந்துள்ளன. இதுபற்றி பேராசிரியர் நர்க்ஸ் குறிப்பிடுவதை அறிவது அவசியமானதாகும். "பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைந்த நாடுகளில் உள்ள மூலதனத்தின் செறிவுநிலை வளர்ச்சியடையாத நாடுகளுக்கு நன்மையளிக்காது; அதை அந்நாடுகள் அனுமதிக்கவும் கூடாது."[1] அதிக மூலதனப் பொருட்களைக்கொண்டு உற்பத்தியைச் செய்தல் பலரையும் வேலையிழக்கச் செய்துவிடும். பின்தங்கிய நாடுகளின் வேலையின்மையும், மூலதனப் பற்றுக்குறையும் மூலதனச் செறிவுள்ள உற்பத்தி முறைகளைப் பின்பற்றுவதற்குத் தடையாக உள்ளன. புதிய தொழில் நுணுக்க உற்பத்தி முறைகள் உழைப்பைச் சிக்கனப்படுத்துபவைகளாகவும், அதிக மூலதனச் செறிவு உள்ளவைகளாகவும் இருக்கின்றன. அவற்றைப் பெற அதிகச் செலவுகள் பிடிக்கின்றன. மிக அதிக அளவு மூலதனத் தேவைகளைக் கொண்டு இருப்பதால் பின்தங்கிய நாடுகளுக்கு அவை ஏற்றதல்ல. இயந்திரங்களையும், கருவிகளையும் இறக்குமதி செய்கின்ற செலவோடு பராமரிப்புச் செலவுகளும், பழுதுபார்க்கும் செலவுகளும் தோன்றுகின்றன. அவற்றிற்கான பாகங்களைப் பெறுவதிலும் பல இடையூறுகள் உள்ளன.

ஐக்கிய நாடுகளின் அறிக்கை (U. N. Report) ஆராய்வதாவது: "முன்னேற்றமடைந்த தொழில் நாடுகளில் உள்ள தானே இயங்கும் கருவிகள் வளர்ச்சியடையா நாடுகளில் பயனளிப்பதில்லை. பின்தங்கிய நாடுகளில் அக் கருவிகள் பயன்படுத்தப்படாமல் விடப்படுவதும் உண்டு. அவற்றிற்கான பராமரிப்பு, பழுதுபார்க்கும் செலவுகள் மிக அதிகமாக இருக்கின்ற காரணத்தால் இந்நிலை ஏற்படுகின்றது. தொழில் நுணுக்க உற்பத்தி முறைகள் வளர்ச்சி

1. Ragner Nurkse, Problems of Capital Formation in Under-developed Countries, p. 45.

யடைந்த நாடுகளின் உழைப்பாளர்களுக்கு ஏற்றவைகளாக உள்ளன. பின்தங்கிய நாடுகள் உற்பத்தியை மேற்கொள்ளப் பெருமளவு திறமை குறைந்த உழைப்பாளர்களையே பயன்படுத்து கின்றன." ஒரே மாதிரி இயந்திரங்கள் வளர்ச்சியடைந்த நாடுகளில் அதிக உற்பத்தியையும், வளர்ச்சியடையாத நாடுகளில் குறைந்த உற்பத்தியையும் தருகின்றன. வளர்ச்சியடைந்த நாடுகளில் உழைப்பாளர்கள் திறமையாக இருக்கின்றமையே அதிக உற்பத்திக்குக் காரணமாகின்றது.

வளர்ச்சியடையாத நாடுகள் அதிக மூலதனப் பொருட்களை இறக்குமதி செய்தால் பாதக அயல் நாட்டுச் செலுத்துநிலை தோன்று கின்றது. மேலும் இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரப் பொருட்கள் தேசிய வருவாயை குறைந்த அளவிற்கு மட்டுமே உயர்த்துகின்றன. ஏனெனில் இவ்வியந்திரப் பொருட்களை அளித்த நாட்டிற்கு வருவாய்ப் பெருக்கத்தின் ஒரு பகுதி சென்று விடுகின்றது. குறைந்த அளவே வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் தொழில் நுணுக்க வல்லுநர்களும், திறமைமிக்க நிர்வாகிகளும் இருப்ப தில்லை. திறமை குறைந்த தொழிலாளர்கள் உள்ளமையாலும் புதுமையான உற்பத்தித் தொழில் நுணுக்கங்களைப் பின்பற்ற முடிவதில்லை. பெரிய இயந்திரச் சாதனங்களும், கருவிகளும், முன்னேற்றமடைந்த தொழில் நுட்ப உற்பத்தி முறைகளும் உள்நாட்டுச் சந்தையையும், வெளிநாட்டுச் சந்தையையும் விரிவான தாகக் கொண்ட நாடுகளுக்குத் தேவைப்படுகின்றன. உற்பத்திப் பண்டங்களுக்குக் குறைந்த தேவையைக் கொண்ட சிறிய அளவு சந்தையே வளர்ச்சியடையாத நாட்டில் அமைந்துள்ளது. எனவே சிறிய நிறுவனங்களைப் பல பொருட்களின் உற்பத்திக்கும் பயன் படுத்துவதே அந்நாடுகளுக்கு நன்மை பயப்பதாகும். சிறிய தொழில் நிறுவனங்களான சிறு கருவிகளை உள்நாட்டிலேயே உற்பத்திச்செய்து கொள்ளலாம். பெரிய மூலதனப் பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வது தேவையில்லாத தாகும்.

தொழில் நுட்பத் திறனுக்கும், பொருளாதாரத் திறனுக்கும் உள்ள வேறுபாட்டை அறிவது அவசியமென பாயர் (Bauer), யாமி (Yamey) இருவரும் கூறுகின்றனர். "வளர்ச்சியடையாத நாடு களுக்குப் பயனளிக்கத்தக்க வகையில் எந்த தொழில் நுட்ப உற்பத்தி முறையையும் பரிந்துரைக்க முடியாது. அந்நாடுகளின் வளங் களைக் கருதுமிடத்து அவை பயனளிக்கமாட்டா. தொழில் நுணுக்க முறைகள் திறனைக் கொண்டவைகளாக இருக்கலாம். ஆனால் அவை பின்தங்கிய நாடுகளுக்கு நன்மையளிப்பதில்லை. அந்நாடு

களின் மக்கள் தொழில் நுணுக்க அறிவு கொண்டவர்களாகவும் இருப்பதில்லை." [1]

சமுதாய, பொருளாதார, பூகோள அமைப்புக்களின் பலவகை நிலைகளால் புதுமையான தொழில் நுட்ப உற்பத்தி முறைகள் தோன்றின. முன்னேற்றமடைந்த நாடுகளின் உழைப்பின் பற்றுக் குறையைத் தவிர்க்கவும், பிற தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவும் தொழில் நுட்ப முன்னேற்றம் உதவுகின்றது. அது அதிக உண்மை ஊதியத்தைக் கொடுத்து, நல்ல வாழ்க்கைத் தரத்தையும் மக்களுக்கு அளிக்கின்றது. தொழில் நுட்பமானது பரவினால்தான் தொழில் நுட்பத்தை மக்கள் விரும்பும் நிலையை ஏற்படுத்தலாம். இதற்குப் பழைய உற்பத்தி முறைகளில் படிப் படியான மாற்றங்களை ஏற்படுத்துவது இன்றியமையாததாகும். உள்நாட்டுத் தொழில் உற்பத்தி முறைகளுக்கும், வெளிநாடுகளி லிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற தொழில் நுணுக்க உற்பத்தி முறைகளுக்கும் அதிக வேறுபாடு இருத்தல் கூடாது. இரண்டிற்கும் உள்ள இடைவெளி அதிகமாக இருந்தால், முன்னேற்றமடைந்த தொழில் நுணுக்க முறையில் தொழில் மயமாக்கிய பிறகு சமுதாயத்தின் எதிர்ப்புத் தோன்றும்.

புதிய தொழில் நுணுக்க உற்பத்தி முறைகளைப் பின்பற்ற ஒரு நாட்டில் போக்குவரத்து, செய்தித் தொடர்பு வசதிகள் சிறப்பாக அமைந்திருக்க வேண்டும். தொழில் நுணுக்க வல்லுநர்களின் பணி அந்நாட்டில் தேவைப்படுகின்ற ஒன்றாகும். இயக்கச் சக்தி அதிக அளவிற்கு உற்பத்திச் செய்யப்பட வேண்டும். உற்பத்திக்குத் தொடர்புள்ள பல பணிகளும் சிறப்பாகச் செய்யப்படுதல் அவசிய மானதாகும். இவ்வித வசதிகள் வளர்ச்சியடையாத நாடுகளில் அமைந்திருப்பதில்லை. இந்நிலையில் முன்னேற்றமான தொழில் நுட்ப முறைகளைப் பயன்படுத்தினால் இயந்திரங்கள் பழுதுபடும், உற்பத்தி குறைவடையும், உற்பத்திச் செலவு அதிகரிக்கும். இக் காரணங்களால் மூலதனத்தின் உற்பத்தித் திறனும் குறைவடையும். யேல் புரோசென் (Yale Brozen) இதுபற்றிக் குறிப்பிடுவதாவது, "ஒரு குறிப்பிட்ட பகுதியில் சரியான தொழில் நுட்பத்தைப் பின் பற்றுவது அங்குள்ள வளங்கள், சந்தைகள் ஆகியவற்றைச் சார்ந்து அமையும். திறமையற்ற மக்களை திறமை பெற்றவர்களாக மாற்ற நீண்டகாலம் தேவைப்படுகின்றது. மக்களின் உற்பத்தித் திறனை உயர்த்தப் பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும். வளர்ச்சியடைந்த

---

1. P. T. Bauer and B. S. Yamey, The Economics of Under developed countries p. 213

பொருளாதாரத்திற்கு ஏற்ற தொழில் நுட்ப உற்பத்தி முறை வளர்ச்சியடையாத பொருளாதாரத்திற்கும் ஏற்றதாக இருக்காது.

பொருளாதார முன்னேற்றத்தில் உள்ள சிக்கல் காரணி விகிதங்களின் மாற்றத்தைப் பொறுத்தும், எந்த அளவிற்கு அவை விரைவாக மாறுகின்றன என்பதைப் பொறுத்தும் அமையும். குறுகிய காலத்தில் குறைந்த மூலதனத் தேவையைக் கொண்ட உழைப்புச் செறிந்த உற்பத்தி முறை உற்பத்தி, வருவாய், வேலை வாய்ப்பு ஆகியவற்றைப் பெருக்க உதவும். இவை யாவற்றையும் தொடர்ச்சியாக நீண்ட காலத்தில் அதிகமாகப் பெறுவதே முன்னேற்றத்தின் நோக்கமாக உள்ளது. வளர்ச்சியடையாத நாடு விரைவான வளர்ச்சியைப் பெறுவதா, அல்லது மெதுவான வளர்ச்சியைப் பெறுவதா என்பது ஆராயப்படத் தக்கதாகும். அந்நாடு புதிய தொழில் நுட்பத்தைப் புகுத்த வேண்டுமா அல்லது பழைய உற்பத்தி முறைகளையே தொடர்ந்து பின்பற்ற வேண்டுமா என்பது விளக்கத் தகுந்ததாகும். மிகப் பழைய காலத்தில் முன்னேற்றமடைந்த நாடுகள் பயன்படுத்திய உற்பத்திக் கருவிகளை இன்றைய வளர்ச்சி குன்றிய நாடுகள் பயன்படுத்தி வருகின்றன.

பின்தங்கிய பொருளாதார நாடுகள், முன்னேற்றமடைந்த நாடுகளின் பழைய இயந்திரங்களையும், கருவிகளையும் பயன்படுத்தியுள்ளன. உதாரணமாக, ஜப்பானின் நெசவாலைத் தொழில் அதனுடைய முன்னேற்றத்தின் தொடக்கக் காலத்தில், இங்கிலாந்து நாட்டினால் தள்ளுபடி செய்யப்பட்ட இயந்திரங்களைப் பயன்படுத்தியது. அர்ஜென்டினா, இஸ்ரேல் ஆகிய இரு நாடுகளும் வளர்ச்சியடைந்த நாடுகள் பயன்படுத்திய இயந்திரங்களையும், உற்பத்திச் சாதனங்களையும் இறக்குமதி செய்து கொள்கின்றன. தள்ளுபடி செய்யப்பட்ட இயந்திரங்கள் குறைந்த செலவில் கிடைத்தாலும், அவற்றைப் பராமரிக்கும் செலவு அதிகமாகிறது. அவை அடிக்கடி பழுதுபடுகின்ற காரணத்தால், பழுதுபார்க்கும் செலவு ஏற்படுவதோடு உற்பத்தியும் பாதிக்கப்படுகிறது. வளர்ச்சியடையாத நாடுகள் வளர்ச்சியடைந்த நாடுகளின் தொழில் நுணுக்க உற்பத்தி முறைகளை தேவைகளுக்கு ஏற்பப் பயன்படுத்தவேண்டும். சமுதாய, பொருளாதார அமைப்புகளின் மாற்றங்களுக்கு ஏற்பவும், தொழில் நுணுக்கத்தைப் பொருளாதாரம் ஏற்கும் திறனுக்கு ஏற்பவும் உற்பத்தி முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். முன்னேற்றமடைந்த நாடுகளில் உள்ள தொழில் நுணுக்கம், வளர்ச்சியடையாத நாடுகளின் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றத்தோடு பயன்படுத்தப்படுதல் அவசியமாகிறது.

பொருளாதார முன்னேற்றத்தின் முதற்சில நிலைகளில் மூலதனச் சிக்கனம் உள்ள, உழைப்புச் செறிவு கொண்ட உற்பத்தி முறைகளைப் பின்பற்றுவது நல்லது. ஏனெனில் குறைந்த அளவே கிடைக்கின்ற மூலதனம் அதிக அளவு உழைப்பாளர்களுக்கும், மற்றும் பல காரணிகளுக்கும் நன்மையளிக்கும் வகையில் அப்பொழுதுதான் செலவிடப்படும். முன்னேற்றமான புதிய தொழில் நுணுக்க உற்பத்தி முறைகள் பெரிய தொழில்களில் மட்டும் பயன்படுத்தப்படுவதில்லை. எல்லா முன்னேற்றமடைந்த நாடுகளிலும், சிறிய தொழில்களில் குறைந்த மூலதனச் செறிவுத் தன்மை கொண்ட கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. சான்றாக, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய அதிக வளர்ச்சி வீதத்தைக் கொண்ட இரு நாடுகளிலும் சிறு தொழில்கள், வேளாண்மைத் தொழில் ஆகியவற்றின் பல நிலைகளில் சிறிய கருவிகளே உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

வளர்ச்சி குன்றிய நாடுகள் சிறிய கருவிகளை உற்பத்திக்கு உபயோகிக்க வேண்டும். அதிக உற்பத்தித்திறன் கொண்ட, தொழில் நுட்பம் மிக்க சிறு கருவிகளைப் பயன்படுத்தலாம். அத் தொழில் நுட்பம் அதிகமாக இருக்கக்கூடிய உற்பத்திக் காரணிகளைச் சிறப்பாகப் பயன்படுத்தத்தக்க வகையில் அமைய வேண்டும். சில நிலைகளில் குறைந்த மூலதனத்தையே தேவையாகக் கொண்ட புதிய உற்பத்தி முறைகள் ஆக்கத்தில் மிக அதிக அளவு உயர்வைத் தந்துவிடும். சிறு தொழில்களுக்குத் தேவையான உற்பத்திக் கருவிகள் குறைந்த செலவில் வளர்ச்சியடைந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து, அதே போன்று உள்நாட்டில் உள்ள தொழில் நுட்ப அறிவைக் கொண்டு அவ்வித உற்பத்திக் கருவிகளை உற்பத்தி செய்யலாம். உள்நாட்டின் திறமையைப் பயன்படுத்தியும், கச்சாப் பொருட்களைப் பயன்படுத்தியும் சிறு தொழில்களை இவ்வாறு வளர்க்கலாம். இதன்மூலம் மூலதனத் திரட்சியும், திறமைத் திரட்சியும் ஏற்படுகின்றது.

வேளாண்மைத் துறையில் தனியொருவருக்கான உற்பத்தியின் அளவை அதிகரிக்க விசை இழுப்புக் குழாய்கள், ஜப்பானிய அரிசிச் சாகுபடி முறை, நல்ல விலைச்சலைத் தரக்கூடிய சோள வகைகளைப் பயிரிடுதல், உரங்கள் இடுதல் ஆகியவற்றின் மூலம் உயர்த்த முடியும். முன்னேற்றமடைந்துவரும் பொருளாதாரங்கள் வளர்ச்சியடைந்துவரும் நிலைகளில் மூலதனத்தைச் சிக்கனப்படுத்தும், உழைப்புச் செறிந்த உற்பத்தித் தொழில் நுணுக்கங்களைப் பின்பற்றவேண்டும். முன்னேற்றமடைந்த நாடுகளில் அமைந்துள்ள இவற்றைப் பின்பற்றி, பின்தங்கிய நாடுகள்

தங்களின் உற்பத்தி முறைகளை மாற்றியமைத்தல் இன்றியமையாததாகும். எடுத்துக்காட்டாக, இந்தியாவில் இயந்திரக் கலப்பைகள், கால்நடைகளின் உழைப்பைத் தேவையாகக் கொண்டக் கலப்பைகள், கைக்கருவிகள், நீர்ப்பாசனக் கருவிகள், பால்பண்ணை, கோழிப்பண்ணை போன்றவற்றிற்கான சாதனங்கள் ஆகியவை எளிதான முறையில் உற்பத்திச் செய்யப்படுகின்றன. இவ்வாறு, வளர்ச்சி குன்றிய நாடுகள் 'காரணி விகிதங்களுக்கு' ஏற்ப இவ்விதக் கருவிகளை நாட்டிற்கு உகந்த நிலையில் உள்நாட்டிலேயே உற்பத்திச் செய்யவேண்டும். இதனால் பாதகமான அயல்நாட்டுச் செலுத்து நிலையைத் தவிர்க்கலாம். வெளி நாடுகளினின்றும் இக் கருவிகளை இறக்குமதி செய்கின்ற செலவைவிட, உள்நாட்டில் இவற்றின் உற்பத்திச் செலவு குறைவாக இருக்கும். மேலும் இக் கருவிகளைப் பராமரிப்பதும், பழுது பார்ப்பதும் எளிதாகி விடுகின்றது. பழுது பார்க்கும் செலவுகள் குறைக்கப்படுகின்றன.

"எவ்வித உற்பத்தி முறைகள் சாதகமானவை என்பதை ஒவ்வொரு நாடும் உணர்ந்து அதற்கேற்ப தீர்வுகளைக் காண வேண்டும்,"[1] என வக்கீல், பிரம்மானந்த் ஆகிய இருவரும் கருத்து தெரிவிக்கின்றனர். அவர்கள் பின்வரும் உற்பத்தி முறைகளை வளர்ச்சியடையாத நாடுகள் பின்பற்றலாமெனக் கூறுகின்றனர் :

(i) குறுகிய காலத்தில் தெரிந்துகொள்ளத்தக்க உற்பத்தி முறைகளாக அவை இருத்தல் அவசியமாகும்.

(ii) தொடக்க மூலதனத்தைக் குறைந்த தேவை கொண்டதாக அவை அமைய வேண்டும்.

(iii) உற்பத்தியைத் தொடங்கும் நிலையை குறுகிய காலத்தில் பெறுவதாக முதலீடு செய்யப்படுவது அவசியமானது.

(iv) குறைந்த அளவு முதலீட்டைக் கொண்டு தனித் தேர்ச்சி பெற்ற, திறமையான உழைப்பைப் பயன்படுத்துவதாக உற்பத்தி முறை அமைதல் வேண்டும்.

(v) உழைப்பை அதிகம் சிக்கனப்படுத்தாமல், கிடைப்பருமை (Scarcity) உள்ள வசதிகளைச் சிக்கனப்படுத்துவதாக இருக்க வேண்டும்.

(vi) இறுதியாக, உற்பத்தியின் அளவை உயர்த்துவதாகவும், மூலப்பொருட்களின் அளிப்பையும், மின்சாரத்தின் அளிப்பையும் பெருக்குவதாகவும் உற்பத்தி முறைகள் அமையவேண்டும்.

1. Vakil, C. N. and Brahmanand, P. R. Planning For and Expanding Economy, p. 171.

அடிப்படைத் தொழில்களிலும், பெரிய தொழில்களிலும் மூலதனச் சிக்கனத்தை ஏற்படுத்தி உழைப்புச் செறிந்த முதலீடுகளைச் செய்ய இயலாது. மேற்குறிப்பிடப்பட்டுள்ள உற்பத்தி முறைகளை வேளாண்மை, நுகர் பொருட்களை உற்பத்திச் செய்யக் கூடிய சிறு தொழில்கள் ஆகியவற்றில் பின்பற்றலாம்.

"தொழில் நுணுக்கத்தைப் படிப்படியாக பல இடங்களில் ஒரே சமயத்தில் ஏற்படுத்துவது நல்ல முறையாகும்; குறைந்த அளவே கிடைக்கக்கூடிய மூலதனத்தை சில பெரிய முயற்சிகளில் முதலீடு செய்து முடக்குதல் கூடாது," என ஹென்ரி ஆப்ரே (Henry Aubrey) வலியுறுத்துகின்றார். இக்கொள்கையானது பல வழிகளிலும் நன்மை பயப்பதாகும். பலவகைப்பட்டத் தொழில் நுட்பங்கள் விளையக் கூடிய நன்மைகளைப் பரவலாக எல்லோருக்கும் அளிக்கும். மக்கள் இவற்றின் நன்மைகளைச் சமமாகப் பெற வாய்ப்பு உண்டு. எல்லா நிலைகளிலும் திறமைத் திரட்சி ஏற்பட முடியும். சராசரி உற்பத்தியின் அளவானது அதிகரிக்கும். மக்களின் வருவாய் பெருகுவதோடு சந்தைகளும் விரிவடையும்.

பேராசிரியர் மகலாநோபிஸ் (Prof. Mahalanobis) இதைத் தெளிவாக விளக்குகின்றார்: "மிக முன்னேற்றமடைந்த தொழில் நுணுக்க இயந்திரங்களைப் பெறுவது நீண்டகால நோக்கமாக இருக்கவேண்டும். மூலதனப் பொருட்கள், நுகர் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தி முறைகளில் தொழில் நுணுக்கம் அமைந்திருத்தல் அவசியமாகும். பெரிய தொழில்கள் பரவலாக வளர்ந்தில்லாத காரணத்தால் இவற்றைப் பெறுவது உடனடியாக முடிவதில்லை. பெரிய தொழில்கள் வளர்ச்சியடையும் வரை சிறிய தொழில்களையும், இல்லத் தொழில்களையும் தொடங்கலாம். இவை மூலதனத்தைச் சிக்கனம் பிடிப்பதாகவும், உழைப்புச் செறிவுள்ளதாகவும் இருப்பதால் வேலை வாய்ப்புக்களைப் பெருக்க முடியும். இம்முறையின் மூலம் உடனடி வேலை வாய்ப்புக்களைத்தர முடிவதோடு, மூலதனத்தைச் சேமித்து பெரிய தொழில்களின் முதலீட்டிற்கும் பயன்படுத்தலாம். ஆனால் பொருளாதாரம் வளருகின்ற நிலையில், உழைப்புச் செறிந்த உற்பத்தி முறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதால் உற்பத்தித் திறன் பாதிக்கப்படுகின்ற நிலை ஏற்படும். இயந்திரங்கள், இயக்கச் சக்தி, பிற மூலதனப் பொருட்கள் ஆகியவற்றைப் படிப்படியாக, ஆனால் நிலையான வகையில் புகுத்துவது வளர்ச்சியடைந்துவரும் பொருளாதாரத்திற்கு நன்மை தருவதாகும்." [1]

1. P. C. Mahalanobis, The Approach of Operational Research to Planning in India, p. 17.

வளர்ச்சியடையாத நாடுகள் தொழில் முன்னேற்றத்தைப் பெறும்போது குறைவான முதலீட்டைக் கொண்ட, உழைப்புச் செறிந்த உற்பத்தி முறைகளை முதல் நிலைகளில் பின்பற்றவேண்டும். படிப்படியாக நீண்ட காலத்தில் தொழில் நுட்பம் நிறைந்த மூல தனச் செறிவுள்ள மூதலீடுகளைச் செய்யலாம். அம் முறைகள் வளர்ச்சியடையாத நாடுகளின் பொருளாதாரச் சூழ்நிலைக்குப் பொருத்தமுடையவைகளாக இருத்தல் வேண்டும். இவ்விதக் கொள்கை குறைந்த அளவில் கிடைக்கக்கூடிய மூலதனத்தை மிகச் சிறப்பாகப் பயன்படுத்த உதவுவதோடு, வேலை வாய்ப்பு களையும் பெருக்குகின்றது. வேளாண்மை நுகர் பொருட்களும், தொழில்களின் நுகர் பொருட்களும் உற்பத்தி அதிகரித்து அளிப்பு பெருகுவதால், உணவுப் பொருட்களையும் கச்சாப் பொருட்களையும் இறக்குமதி செய்வது அவசியமாகின்றது. இந்நிலையில் மூலதனப் பொருட்களாகிய இயந்திரங்கள், கருவிகள், தளவாடங்கள் ஆகிய வற்றை மட்டும் இறக்குமதி செய்வது போதுமானதாகாது. இம் முறையைப் பின்பற்றுவதின்மூலம் பணவீக்க நிலையைத் தடுக்கலாம். முன்னேற்றத்தின் தொடக்க நிலைகளில் ஏற்படக்கூடிய அயல் நாட்டு வாணிபப் பாதகச் செலுத்து நிலையையும் தவிர்க்கலாம்.

வளர்ச்சியடையாத நாடுகளில் உற்பத்தி முறைகளைத் தெரிந் தெடுப்பதில் இவ்விதச் சிக்கல்கள் அமைந்துள்ளன. உற்பத்தி முறைகளைத் திறமையாகத் தெரிந்தெடுப்பதின் மூலம் பொருளா தாரத்தின் எல்லாத்துறைகளிலும் விரைவான வளர்ச்சி வீதத்தைப் பெற முடியும்.

II. உழைப்புச் செறிந்த உற்பத்தி முறைகளும், மூலதனச் செறிவுள்ள உற்பத்தி முறைகளும் (Labour - intensive Techniques and Capital-intensive Techniques)

'உழைப்புச் செறிந்த' (Labour - intensive) உற்பத்தி முறை களும் 'மூலதனத்தில் சிக்கனத்தை ஏற்படுத்துகின்ற' (Capital - saving) உற்பத்தி முறைகளும் வேறுபாடு கொண்டவைகளாகும். இவ்விரண்டிற்கும் உள்ள வேறுபாட்டைப் பேராசிரியர் ரெட்டவே (Prof. Reddaway) 'இந்தியப் பொருளாதார முன்னேற்றம்' (The Development of the Indian Economy) என்ற நூலில் விளக்கு கின்றார். உழைப்புச் செறிந்த உற்பத்தி முறை என்பது, அதிக அளவு உழைப்பு குறைந்த அளவு மூலதனத்தைக்கொண்ட நிலையோடு இணைந்திருப்பதைக் குறிப்பதாகும். 'மூலதனத் தைச் சிக்கனம் பிடிக்கும்' உற்பத்திமுறை என்பது ஒரு அலகு உற்பத்திக்குக் குறைந்த அளவு மூலதனம் போதுமான நிலையை உணர்த்துவதாகும். உழைப்பின் அளவானது மூலதனத்தோடு

தொடர்பு படுத்தப்படுவது சரியானதல்ல. இதைப் போன்றே 'மூலதனச் செறிவிற்கும்' (Capital - intensive), 'உழைப்பின் சேமிப்பிற்கும்' (Labour-saving) வேறுபாட்டினைக் கூறலாம்.

வளர்ச்சியடையாத நாடுகளுக்கிடையே உள்ள பொதுவான இயல்புகள் மூலதனப் பற்றாக்குறையும், அதிக அளவு உழைப்பின் அளிப்பும் ஆகும். வேறு வார்த்தைகளில் கூறினால், இந்நாடுகளில் 'மூலதன - உழைப்பு விகிதமானது' (Capital - Labour Ratio) மிகக் குறைவாக உள்ளது. அதிக உற்பத்திக்கு உழைப்புச் செறிந்த உற்பத்தி முறைகளை இந்நாடுகளில் பின்பற்ற வேண்டும். பேராசிரியர் நர்க்ஸ் வளர்ச்சியடையாத நாடுகள் தொழில் முன்னேற்றத்தைப் பெறுகின்ற நிலையில் உற்பத்தியில் உழைப்புச் செறிந்த முறைகளையே பின்பற்ற வேண்டுமென்று கருத்துத் தெரிவிக்கின்றார். ஆனால் பல பொருளியலறிஞர்களும் வளர்ச்சி குன்றிய நாடுகளில் மூலதனச் செறிவுள்ள உற்பத்தி முறைகளையே பயன்படுத்த வேண்டுமென்று அறிவுறுத்துகின்றனர். இதற்கு ஆதரவாகவும், எதிர்ப்பாகவும் பல வாதங்கள் அமைந்துள்ளன.

உழைப்புச் செறிந்த உற்பத்தி முறைகளைப் பின்பற்றுவதால் ஏற்படக்கூடிய நன்மைகளைப் பின்வரும் கருத்துகள் உணர்த்தும்:

1. முதலாவதாக அமைவது 'வேலைவாய்ப்பு வாதமாகும்'. வளர்ச்சியடையாத நாடுகளின் ஒரு முக்கிய இயல்பாக இருப்பது அதிக மனித உழைப்பு பயன்படுத்தப்படாமல் இருக்கின்ற நிலையாகும். மனித உழைப்பு முற்றிலும் பயன்படுத்தபட வேண்டுமென்றால் உழைப்புச் செறிந்த உற்பத்தி முறைகளைப் பின்பற்றுவதே நன்மை பயக்கும். அதன் மூலம்தான் வேலைவாய்ப்புகள் பெருகும். ஆக்கத்தின் முக்கியக் காரணியாகிய உழைப்பு சிறப்பாகப் பயன்படுத்தப்படுவது இன்றியமையாததாகும். வளர்ச்சியடைந்த நாடுகளில் உழைப்புப் பற்றாக்குறை இருந்து வருகிறது. பின்தங்கிய நாடுகளின் அதிக மக்கட்தொகைப் பெருக்கத்தால் வேலையின்மைச் சிக்கல் அமைந்துள்ளது. இதைத் தீர்க்க உழைப்புச் செறிந்த உற்பத்தி முறைகளைப் பின்பற்றுவது தேவை ஆகின்றது.

2. உழைப்புச் செறிந்த உற்பத்தி முறைகள் பின்பற்றப்படும் போது வேலை வாய்ப்புகள் தோன்றி வருவாய்ப் பெருக்கம் ஏற்படும். இவ் வருவாய் பரவலாக எல்லா மக்களுக்கும் கிடைக்க வாய்ப்பு உண்டு. சமதர்மச் சமுதாயத்தை அமைக்க இது உதவும். மூலதனச் செறிவுள்ள உற்பத்தி முறைகளால் குறைந்த அளவு மக்களுக்கே வேலை வாய்ப்புகள் கிடைக்கும். அதன் மூலம் சமுதாய மக்களின் வருவாயில் ஏற்றத்தாழ்வுகள் மிகுதியாக

அமைந்திருக்கும். அதிக வருவாயைக் கொண்டு சிலர் வாழ்வதை விட, குறைந்த வருவாயைப் பெற்று பலர் வாழ்வது விரும்பத் தக்கதாகும்.

3. வளர்ச்சியடையாத நாடுகளில் சில வளங்கள் பயன் படுத்தப்படாமல் மறைந்துள்ளன. இந் நாடுகளில் மிக அதிக அளவிற்கு மூலதனப் பற்றுக்குறையும், சிறப்பான தொழில் முயல் வோரின் பற்றுக்குறையும் அமைந்துள்ளன. இவற்றைத் தவிர்க்க உழைப்புச் செறிந்த உற்பத்தி முறைகளே உதவுகின்றன. கிடைப் பருமை கொண்ட வசதிகளை முக்கியமான பயன்களுக்குப் பெற இவை உதவுகின்றன. ஒரு நாட்டின் வளங்கள் சிறப்பாகப் பயன் படுத்தப்பட்டால்தான் அதிக அளவு தேசிய ஆக்கத்தைப் பெற முடியும். மக்களுடைய வருவாயும் உயர்ந்து மூலதனத் திரட்சி ஏற்பட வழி பிறக்கும்.

4. உழைப்புச் செறிந்த உற்பத்தி முறைகளைப் பயன்படுத்த இறக்குமதிகளுக்காக வெளிநாடுகளை நம்பியிருக்கத் தேவையில்லை. உள்நாட்டிலேயே அவ்வித முறைகளுக்கான கருவிகளை உற்பத்தி செய்து விடலாம். வளர்ச்சி குன்றிய நாடுகளில் உள்ள அந்நியச் செலாவணி பற்றுக்குறையை இதன்மூலம் தவிர்க்கலாம். மூல தனச் செறிவுள்ள உற்பத்தி முறைகளைப் பின்பற்றும்போது அதற்கான இயந்திரங்களையும், கருவிகளையும் வெளிநாடுகளி லிருந்து இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. அதன்மூலம் அந்நியச் செலாவணிச் சிக்கல் தோன்றுகின்றது. எனவே, அந்நியச் செலாவணியை மிச்சம் பிடிக்க உழைப்புச் செறிந்த உற்பத்தி முறைகள் உதவுகின்றன. பொருளாதாரம் ஓரளவு வளர்ந்து ஏற்றுமதி பெருகும் நிலையில் பெரிய தொழில்களுக்கான மூலதனப் பொருட்களை இறக்குமதி செய்து கொள்ளலாம்.

5. வளர்ச்சியடையாத பொருளாதாரத்தில் ஏற்படுகின்ற பண வீக்க நிலையைக் குறைக்க உழைப்புச் செறிந்த உற்பத்தி முறைகள் உதவுகின்றன. இவற்றில் செய்யப்படுகின்ற முதலீடுகள் உடனடி யாக நுகர் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்குகின்றன! விலை உயர்வுகளைத் தடுக்க இம் முறைகள் உதவுமெனலாம். மேம்பா டடைந்து வரும் நாடுகளின் விலையுயர்வு நிலைக்குக் காரணமாக அமைவது குறைந்த நுகர் பொருட்களின் உற்பத்தியாகும். குறுகிய காலத்தில் வருவாய் பெருகும் வேகத்தில் நுகர் பொருட்களின் உற் பத்தி பெருகாமையால் விலைகள் உயர்ந்து விடுகின்றன. ஆனால் உழைப்புச் செறிந்த உற்பத்தி முறைகள், உடனடியாக குறுகிய காலத்திலேயே நுகர் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்கி விடுவதால் விலை உயர்வுகள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

6. உழைப்புச் செறிந்த உற்பத்தி முறைகள் கிராமங்களிலும், சிறிய நகரங்களிலும் காணப்படுகின்றன. பின்தங்கிய நாடுகளில் கிராமப்புறங்களிலேயே அதிக மக்கட்தொகை அமைந்துள்ளதால், அப் பகுதிகளில்தான் உழைப்புச் செறிந்த உற்பத்தி முறைகள் அமைகின்றன. இதனால் உழைப்பாளர்களுக்குத் தேவையான வீட்டு வசதிகளும், பிற வசதிகளும் பெருகி விடுகின்றன. இக்காரணத்தால் அரசு சமுதாயத்தின் அவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான செலவு குறைவடைகின்றது. வளர்ச்சியடைந்து வரும் பொருளாதாரத்தில் இச்சிக்கனத்தின் மூலம் பெறப்பட்ட மூலதனச் சேமிப்பை மிக முக்கிய முன்னேற்றத் திட்டங்களுக்குப் பயன் படுத்தலாம்.

7. தொழிற்சாலை உற்பத்தி முறைகளால் விளையக்கூடிய தீமைகள் உழைப்புச் செறிந்த உற்பத்தி முறைகளால் களையப்படுகின்றன. தொழில் நகரங்கள் தோன்றுவதால் ஏற்படக்கூடிய மக்கட் தொகை நெருக்கம், ஆரோக்கியமற்ற நிலை, குடியிருப்பு வசதிகள் அற்ற நிலை ஆகியவை ஏற்படுவதில்லை. இவை கிராமங்களிலும், சிறிய நகரங்களிலும் மட்டுமே அமைவதால் இவ்விதச் சிக்கல்கள் தோன்ற வாய்ப்பில்லை. நாடு முழுதும் பரவியுள்ள இம் முறைகளால் எல்லா மக்களும் நன்மையடைகின்றனர்.

8. முற்றுரிமை நிலைகள் தோன்றுவதையும், பொருளாதாரச் சக்திகள் ஒரு சிலரின் கைகளில் குவிந்து கிடத்தலையும் இவை தடுக்கின்றன. வருவாயிலும், செல்வப் பங்கீட்டிலும் சமநிலையை ஏற்படுத்தவும் இவை உதவுகின்றன. வளர்ச்சியடையாத பொருளாதாரங்களில் முற்றுரிமை தோன்றும்போது வருவாயில் அதிக அளவு ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட வகையுண்டு. அதைத் தடுப்பதாக அமைவது உழைப்புச் செறிந்த உற்பத்தி முறைகளாகும்.

இவ்வாறு பலவகைப்பட்ட வாதங்களும் உழைப்புச் செறிந்த உற்பத்தி முறைகளுக்குச் சாதகமாகச் சொல்லப்படுகின்றன. வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களுக்கு அதிக அளவு பொருந்தாத இவ்வாதங்கள், பின்தங்கிய பொருளாதாரங்களுக்குப் பெரிதும் பொருந்துகின்றன. முன்னேற்றத்தின் தொடக்க நிலைகளில் உழைப்புச் செறிந்த முறைகளைப் பின்பற்றுவதே சாலச் சிறந்ததாகும்.

மூலதனச் செறிவுள்ள உற்பத்தி முறைகளை ஆதரித்து சில வாதங்கள் தரப்படுகின்றன. அவற்றைப் பின்வருமாறு விளக்கலாம்:

முதலீட்டுத் திட்டங்கள் உழைப்புச் செறிவு இல்லாமல், மூலதனச் செறிவு கொண்டதாக இருத்தல் வேண்டுமெனச்

சொல்லப்படுகின்றது. கேலன்சன் (Galenson), லெபன்ஸ்டீன் (Leibenstein) இருவரும் கருதுவதுபோல, "முற்றிலும் பின்தங்கிய நிலையில் உள்ள பொருளாதாரம் வெற்றிகரமாக வளர்ச்சியைப்பெற, முடிந்த அளவிற்கு விரிந்த முறையில் தொழில் நுணுக்க உற்பத்தி முறைகளைப் பரந்த வகையில் புகுத்தவேண்டும்." இக்கருத்திற்குச் சாதகமான விளக்கங்கள் கீழ்க்கண்டவாறு தரப்படுகின்றன:

1. மூலதனச் செறிவுள்ள உற்பத்தி முறைகளைக் கொண்டுள்ள தொழில் நிறுவனங்களில் வருவாயின் பெரும்பகுதி தொழில் முயல்வோருக்குக் கிடைக்கின்றது. வருவாயின் குறைந்த பகுதியே உழைப்பாளர்களுக்குக் கூலியாகத் தரப்படுகின்றது. 'சேமிக்கும் விருப்பம்' (Propensity to Save) தொழில் முயல்வோரிடத்து உயர்வாக உள்ளது. அவர்கள் அதிகரித்த வருவாயைச் சேமித்து மேலும் முதலீட்டிற்கே பயன்படுத்துகிறார்கள். ஆகவே பொருளாதார வளர்ச்சி விகிதமானது விரைவடைகின்றது. குறைந்த வருவாயைப் பெறுகின்ற உழைப்பாளர்களின் 'சேமிக்கும் விருப்பம்' மிகக் குறைவானதாகும். வருவாய் பெருகும்போதும், பெருகுகின்ற வருவாயை நுகர்விற்கே பயன்படுத்துகிறார்கள். சேமிப்பு, முதலீட்டு விகிதங்கள் இதனால் குறைவாகவே உள்ளன.

2. பொருளாதார, சமுதாய அவசிய வசதிகளைப் பெருக்க அதிக மூலதனம் தேவைப்படுகின்றது. சாலைகள், இருப்புப் பாதைகள், மருத்துவ வசதி, மின்சார வசதி, ஆரோக்கிய வசதி ஆகியவற்றை ஏற்படுத்த மிகுதி மூலதனம் முதலீடு செய்யத் தேவைப்படுகின்றது. இவற்றின் வளர்ச்சிக்குச் செய்யப்படுகின்ற முதலீடுகள் மறைமுகமாக உற்பத்தி உயர உதவுமெனலாம். வளர்ச்சியடையாத நாடுகளில் இவ்வசதிகளை மேம்படுத்துவது விரைவான முன்னேற்றத்திற்கு வகை செய்யும்.

3. மூலதனச் செறிவுள்ள உற்பத்தி முறைகளின்மூலம் பொருளாதாரத்தில் விரைவான வளர்ச்சி வீதத்தைப் பெறமுடியும். உழைப்புச் செறிந்த உற்பத்தி முறைகளின் மூலம் இந்த அளவிற்கு விரைவான வளர்ச்சியைப் பெறுவது இயலாததாகும். மூலதனச் செறிவு முறைகள் பொருளாதாரத்தை குறுகிய காலத்தில் வளர்த்து விடுவதால், நீண்ட காலத்தில் வேலைவாய்ப்புகளைப் பெருக்கவும் அவைகளால் முடியும் எனலாம். உழைப்புச் செறிந்த முதலீடுகளைக் கொண்டு ஒரு நாடு வளர்ச்சியடைய நீண்டகாலம் பிடிக்கும். நீண்ட காலத்தில் நிரந்தரமான வளர்ந்த பொருளாதார அடிப்படையை ஏற்படுத்தித் தருவதாக மூலதனச் செறிவுள்ள முதலீடுகள் இருக்கின்றன.

4. ஹிர்ச்மேன் (Hirschman) வாதிடுவதுபடி மூலதனச் செறிவுள்ள உற்பத்தி முறைகள் உழைப்பாளர்களின்திறனையும் உயர்த்துகின்றன. உழைப்பாளர்களின் உற்பத்தித் திறனைப் பெருக்க பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. நிர்வாகம் இந்நிறுவனங்களில் திறமையாகச் செய்யப்படுகின்றது. புதுமையான திறமைகள் வெளிப்படுகின்றன. எனவே மூலதனச் செறிவுள்ள உற்பத்தி முறைகள் திறமையை உயர்த்த உதவுவதோடு, ஆக்கத்தை அதிகரிக்கவும் உதவுகின்றன. வளர்ச்சியடையாத நாடுகளின் திறமை குறைந்த உழைப்பை திறமைமிக்க உழைப்பாக மாற்ற இவை உதவுகின்றன.

5. பல வளர்ச்சியடையாத நாடுகளிலும் வளர்ச்சிவீதம் மக்கட் தொகைப் பெருக்க வீதத்தைக் காட்டிலும் குறைவாகவே அமையும். மூலதனச் செறிவுள்ள உற்பத்தியை மேற்கொண்டால்தான் தனியொருவருக்கான உற்பத்தியின் அளவானது உயர்வடையும். மூலதனத் திரட்சியைப்பெற இது பெரிதும் உதவுவதாகும். முன்னேற்றத்தில் விரைவைப்பெற அதிக மூலதனங்களின் முதலீடுகள் தேவைப்படுகின்றன. உழைப்புச் செறிந்த முதலீடுகளின் மூலம் உயர்ந்த வளர்ச்சி வீதத்தைப்பெற முடியாது. மக்கட்தொகைப் பெருக்கவீதமும் அதிகமாகவே இருக்கும். வளர்ச்சியடைந்த பொருளாதாரத்தைப் பெற்ற பிறகுதான் மக்கட்தொகைப் பெருக்க வீதமானது குறைவடையும். அவ்விதப் பொருளாதாரத்தைப் பெற உதவுவதாக அமைந்திருப்பது பெரிய அளவு முதலீடுகளாகும்.

6. அதிக எண்ணிக்கையில் உள்ள பல உழைப்புச் செறிவுள்ள திட்டங்களைவிட, குறைந்த எண்ணிக்கையில் உள்ள சில மூலதனச் செறிவுள்ள திட்டங்கள் விரைந்த பொருளாதார வளர்ச்சிக்கு உதவுமெனலாம். அதிக அளவு மூலதனத்தைக் கொண்ட முதலீடுகள் பொருளாதாரத்தில் பல நல்ல விளைவுகளை ஏற்படுத்துகின்றன.உதாரணமாக ஒருஅரசு பெரிய மின்சாரத்திட்டத்தையோ, இரும்பு - எஃகு உற்பத்தித் தொழில் போன்றவற்றையோ தொடங்கினால் அதிக மூலதனம் தேவைப்படுகின்றது. அதிக முதலீடு கொண்ட திட்டங்களாக இவை இருக்கின்றமையால், இவற்றின் வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டதாக அரசு அமையும். அதே அளவு மூலதனமானது பிரிக்கப்பட்டு பல சிறிய திட்டங்களில் முதலீடு செய்யப்படும்போது,அரசு அத்திட்டங்களின் வளர்ச்சியில் அதிக கவனத்தைக் கொண்டிருக்கும் எனக் கூற இயலாது. பெரிய முதலீட்டுத் திட்டங்களில் சிறிய தவறுகள் ஏற்பட்டாலும் உடனடியாக அரசால் திருத்தப்படுகின்றன; குறைந்த அளவு முதலீட்டைக் கொண்ட திட்டங்களில் பெரிய தவறுகள்

ஏற்பட்டாலும் அவை நீண்ட காலத்திற்குப் பின்னரே அரசால் உணரப்படுகின்றன.

7. அதிக மூலதனச் செறிவுள்ள உற்பத்திச் சாதனங்கள் நீண்ட காலத்திற்குப் பயனளிப்பவை. அவற்றில் அதிகத் தேய்மானங்களும், பழுதுகளும் குறைந்த காலத்தில் ஏற்படுவதில்லை. வளர்ச்சியடையாத நாடுகள் மூலதனப் பொருட்களின் தேய்மானங்களால் ஏற்படும் இழப்பைத் தாங்கும் திறனைக் கொண்டிருப்பதில்லை. எனவே அவை நீண்டகாலம் வரை பழுதுபடாமல் உற்பத்திக்கு உதவுகின்ற பெரிய இயந்திரங்களைப் பயன்படுத்துவதே நல்லது. குறைந்த அளவு உற்பத்தியைத் தரத்தக்க உழைப்புச் செறிந்த முதலீடுகள் தவிர்க்கப்பட வேண்டும். இவற்றில் பயன்படுத்தப் படுகின்ற சிறிய இயந்திரங்களும், கருவிகளும் உள்நாட்டிலேயே உற்பத்திச் செய்யப்படுபவவை. மேலும் இவை குறைந்த காலத்தில் தேய்வடைகின்றன அல்லது பழுதுபடுகின்றன.

8. மூலதனச்செறிவு முறைகள் உழைப்புச் செறிவு முறைகளை விட உற்பத்தியின் மூலம் அதிக இலாபத்தைத் தரத்தக்கவைகளாகும். மூலதனச் செறிவுள்ள உற்பத்தி முறைகளில் உற்பத்திச் செலவோடு ஒப்பிடும்போது உற்பத்தி மிகப் பல மடங்கு உயர்ந்துவிடுகின்றது. இதற்கு அடிப்படைக் காரணம் இந்நிறுவனங்கள் பேரளவு உற்பத்தி முறையின் சிக்கனங்களைப் பெறுகின்ற நிலையாகும். குறைந்த முதலீடு செய்யப்பட்ட சிறிய நிறுவனங்கள் இவ்விதச் சிக்கனங்களைப்பெற முடியாமையால் உற்பத்திச் செலவு அதிகரிக்கின்றது. விலையுயர்வின் காரணமாக அதிக இலாபத்தைப் பெறவும் அவற்றால் முடிவதில்லை. அதிக அளவு முதலீட்டைக் கொண்ட பெரிய நிறுவனங்கள் குறைந்த செலவில் பொருட்களை உற்பத்திச் செய்கின்றன. எனவே குறைந்த விலையில் பொருட்களை விற்று அதிக இலாபத்தைப் பெறுகின்றன. தரமான பொருட்களைக் குறைந்த விலையில் விற்பனைசெய்ய இவற்றால் முடிகின்றது. இவற்றின் பொருட்களுக்கான தேவையும் பெருகிக் கொண்டே இருக்கின்றது.

9. மூலதனச் செறிவு கொண்ட உற்பத்தி முறைகளால் குறைந்த விலையில் பொருட்களை விற்பனை செய்ய முடிவதால், மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர்வடைவதாகக் கூறலாம். குறைந்த அளவு வருவாயைக் கொண்டு மிகுதியான பொருட்களை வாங்க பெரிய முதலீடுகள் உதவுகின்றன. குறைந்த மூலதனத்தைக் கொண்டு தொடங்கப்பெற்ற நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்கள் தரமாக இருப்பதில்லை. தரம் குறைந்த அப்பொருட்கள் உயர்வான விலையிலும் விற்கப்படுகின்றன. பெரிய தொழில்களின்

போட்டி அந்நிலையில் அமையாவிடில், முற்றுரிமை நிலையை அவை ஏற்படுத்திக்கொள்ள வாய்ப்பு ஏற்படும். இவ்வித முற்றுரிமை நிலைகள் மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பாதித்துவிடும்.

இவ்வாறு பல நன்மைகள் மூலதனச் செறிவுள்ள பெரிய முதலீடுகளில் அமைந்துள்ளன. வளர்ச்சியடைந்து வரும் ஒரு பொருளாதாரம் இந்த நன்மைகளையும் பெறுவது அதிக ஆக்கத்தைக் குறுகிய காலத்தில் பெற வழியை ஏற்படுத்தும். மூலதனச் செறிவுள்ள உற்பத்தி முறைகளோடு, சில துறைகளில் உழைப்புச் செறிந்த உற்பத்தி முறைகளையும் பின்பற்றுவது மக்களின் நலனைக் காக்க உதவுவதோடு, விரைந்த பொருளாதார வளர்ச்சி வீதத்தையும் தருமெனலாம்.

மதிப்பீடு

மேற்கண்ட இருவித உற்பத்தி முறைகளில் எதைத் தெரிந்தெடுப்பது என்பது எளிதானதல்ல. மேம்பாடடைந்து வரும் நாடுகளில் முன்னேற்றத்திற்கு எம் முறையைப் பின்பற்றுவது என்பதை உணர்வது கடினமானதே. உண்மையில் இவ்விரு முறைகளும் அதிக வேறுபாடுகளைக் கொண்டு அமைந்திருக்கவில்லை. உழைப்புச் செறிந்த உற்பத்தி முறைகளைப் பின்பற்றுவது பொருளாதாரத்தில் அதிக உற்பத்தியையும், வேலை வாய்ப்பையும் ஏற்படுத்தித் தருகின்றது. மூலதனச் செறிவுள்ள உற்பத்தி முறைகளைப் பின்பற்றுவது மூலதனத் திரட்சி வீதத்தை விரைவாக்குகின்றது. நீண்டகாலத்தில் உற்பத்தித் திறனைப் பெருக்கவும், வேலை வாய்ப்புகளை அதிகரிக்கவும் உதவுகின்றது. ஆனால் உழைப்பு அல்லது மூலதனம் செறிந்த உற்பத்தி முறைகளைத் தெரிந்தெடுக்கும்போது, வளர்ச்சியடையாத நாடுகள் பின்வருவனவற்றைக் கருத்திற்கொள்ள வேண்டும்:

(i) அவற்றின் 'ஒப்பீட்டு உற்பத்திச் செலவு' (Comparative cost of Production);

(ii) பல காலங்களிலும் அவற்றால் வேலைவாய்ப்பு, வருவாய், சேமிப்பு, முதலீடு ஆகியவற்றின் மீதான விளைவு;

(iii) உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்துகின்ற நிலை;

(iv) உள்நாட்டு, வெளிநாட்டுத் தேவைகளின் மீதான விளைவு;

(v) அவற்றின் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் நிலை;

(vi) அயல்நாட்டுச் செலுத்து நிலையில் அவற்றால் ஏற்படக்கூடிய விளைவு.

உழைப்புச் செறிந்த முறைகளில் உற்பத்திச் செலவு அதிகமாக அமையும். இவற்றில் பொருளாதாரச் சிக்கனங்கள் ஏற்படாத காரணத்தால், தரம் குறைந்த பொருட்களை அதிக விலைக்கு மட்டுமே விற்பனை செய்ய முடிகின்றது. மூலதனம் செறிந்த முறைகளில் பலவிதச் சிக்கனங்களும் பெறப்பட்டு உற்பத்திச் செலவு குறைவடைகின்றது. உற்பத்திப் பொருட்களும் தரமானவைகளாக இருக்கின்றன. ஆயினும், முன்னேற்றத் திட்டங்களைத் தீட்டுபவர்கள் இதை மட்டும் கருத்திற்கொண்டு உற்பத்தி முறையைத் தெரிந்தெடுத்தல் கூடாது. கிடைப்பருமை கொண்ட மூலதன வசதிகளை சிக்கனம் செய்ய உதவுபவைகளாக உழைப்புச் செறிந்த உற்பத்தி முறைகள் அமைகின்றன. அவை அதிக வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதோடு, நுகர் பொருட்களின் உற்பத்தியையும் பெருக்குகின்றன. உணவுப் பொருட்கள், மூலதனப் பொருட்கள், கச்சாப் பொருட்கள் ஆகியவற்றின் இறக்குமதியைக் குறைக்கவும் அவை உதவுகின்றன. இக்காரணங்களால் பணவீக்க நிலை கட்டுப்படுத்தப்படுகின்றது. முன்னேற்றத்தின் முதற் சில நிலைகளில் உள்ள ஏற்படக் கூடிய அயல்நாட்டு வாணிபத்தில் பாதகச் செலுத்து நிலை ஏற்படுவதும் தவிர்க்கப்படுகின்றது.

ஆனல் உழைப்புச் செறிந்த உற்பத்தி முறைகளைப் பின்பற்றுவதில் சில இடர்ப்பாடுகளும் ஏற்படுகின்றன; (மூலதனச் செறிவுள்ள முறைகளில் விளைகின்ற மூலதனத் திரட்சியை உழைப்புச் செறிந்த முறைகளில் பெற முடிவதில்லை) விரைவான முதலீடுகள் செய்யப்பட சிறு நிறுவனங்களே ஏற்றவை என்ருலும், அவற்றின் மூலம் அதிக சேமிப்பு, முதலீட்டு வீதங்களைப்பெற முடியாது. (மூலதனத் திரட்சி வீதம் அதிகமாக உள்ள நிலை மூலதனச் செறிவுள்ள முதலீடுகளில்தான் உள்ளது. உழைப்புச் செறிந்த முதலீடுகள் வேலை வாய்ப்புகளைப் பெருக்குகின்றன, வருவாயை உயர்த்துகின்றன என்பதை மறுக்க இயலாது) ஆனல் இதன்மூலம் குறைந்த வருவாயைப் பெறுகின்ற மக்களின் 'நுகரும் விருப்பம்' (Propensity to Consume) மிக உயர்வாக உள்ளது. குறைந்த அளவே வருவாய் உயர்வடைகின்ற காரணத்தால் அவர்களால் சேமிக்கவும், முதலீடு செய்யவும் முடிவதில்லை.

இவ்விதச் சிக்கல்கள் உழைப்புச் செறிவுள்ள உற்பத்தி முறைகளில் இருந்தாலும், மக்களின் நன்மை கருதி அவற்றை நுகர் பொருட்களை உற்பத்திச் செய்யக்கூடிய துறைகளில் பயன்படுத்த வேண்டும். இம் முறையைப் பின்பற்றுவதின் மூலமாக பலரும் வேலை வாய்ப்புகளைப் பெறுகின்றனர்; பொருட்களின் அளிப்பு

பெருகுகின்றது. இது விலையுயர்வுகளைத் தடுக்கின்றது; அயல் நாட்டு வாணிபத்தில் அதிகப் பாதக நிலையை ஏற்படுத்துவதில்லை. வருவாயின் வளர்ச்சிவீதம் தொடர்ச்சியாக வளர, மூலதனச் செறிவுள்ள உற்பத்தி முறைகளை இயந்திரங்கள், கருவிகள், தளவாடங்கள், பலவகைப்பட்ட பொறியியற் பொருட்கள் போன்ற வற்றை உற்பத்தி செய்யக் கூடிய தொழில்களில் பயன்படுத்த வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்டவைகளினின்றும், வளர்ச்சிக் குன்றிய நாடுகளில் இருவகை உற்பத்தி முறைகளும் முன்னேற்றத்திற்கு உதவுகின்றன என்பதை உணரலாம். மூலதனச் செறிவுள்ள முதலீடுகளால் நாட்டில் உள்ள எல்லா மக்களும் நன்மை பெற முடியாது. அதிக உற்பத்தி, வருவாய், சேமிப்பு, முதலீடு ஆகியவை ஏற்பட்டாலும், அவையாவும் ஏற்படுவது மக்களின் வசதிக் குறைவிலேயே ஆகும். பொருளாதார வளர்ச்சிவீதம் விரைவாக இல்லாவிட்டாலும், நாட்டின் பெரும் பகுதி மக்கட் தொகை உழைப்புச் செறிந்த முதலீடுகளின் மூலம் நன்மையடை கின்றது. எனவே விரைந்த பொருளாதார வளர்ச்சியின் பல நன்மைகளையும் ஒரு சிலர் பெறுவதைவிட, குறைந்த பொருளாதார வளர்ச்சியின் சில நன்மைகளைப் பலரும் பெறுவதே விரும்பத்தக்க தாகும். ஒரு பொருளாதாரத்தில் முற்றிலும் உழைப்புச் செறிந்த முதலீடுகளை மட்டுமோ மூலதனச் செறிவுள்ள முதலீடுகளை மட்டுமோ செய்ய முடியாது. பொருளாதாரத்தின் பல துறை களிலும் இவ்விரு வகை முதலீடுகளும் முக்கியத்துவங்களுக்கு ஏற்ப செய்யப்படுதல் வேண்டும்.

III. சிறு தொழில்களும், பெரிய தொழில்களும்

உழைப்புச் செறிந்த முதலீடுகள், மூலதனத்தின் செறிவுள்ள முதலீடுகள் இரண்டையும் தெரிந்தெடுப்பது போன்று சிறு தொழில்களை வளர்த்தல் நன்மை தருமா, பெரிய தொழில்களின் முன்னேற்றம் அவசியமானதா என்பது பற்றி ஆராய்வது அவசிய மாகின்றது. முன்னேற்றத்திற்கான முறைகளைப் பின்பற்றுவதில் அரசு சரியான முடிவை எடுக்க வேண்டும்.

சோவியத் ரஷ்யா பொருளாதார முன்னேற்றத்தை மிகக் குறைவான காலத்தில் பெற்றமைக்கு அது மேற்கொண்ட திட்ட மிட்ட தொழில் முன்னேற்றமே காரணமாகும். பல பெரிய மூலதனப் பொருட்களின் தொழில்களை வளர்த்து, அதன்மூலம் ரஷ்யா நாட்டைத் தொழில்மயமாக்கி விட்டது. விரைவான தொழில் முன்னேற்றமே ரஷ்யாவின் பொருளாதார முன்னேற்றம் குறுகிய

காலத்தில் ஏற்பட்டமைக்குக் காரணமாகும். இன்றைய வளர்ச்சியடையாத நாடுகளும் ரஷ்யாவைப் பின்பற்றி விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப்பெற விழைகின்றன. உதாரணமாக, இந்திய ஐந்தாண்டுத் திட்டங்களில் பெரிய தொழில்களின் முன்னேற்றத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. குறிப்பாக, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் ஒரு தொழில் திட்டமாகவே அமைந்தது. அத்திட்டத்தில் தொழில் முன்னேற்றத்திற்கே முதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. பெரிய தொழில்களைத் தொடங்குவதற்கு ஆதரவாக பல வாதங்கள் அமைந்துள்ளன. அவற்றைப் பின்வருமாறு விளக்கலாம்:

(1) விரைவான தொழில் வளர்ச்சியைப் பொருளாதாரத்தில் பெற பெரிய தொழில்கள் அடிப்படையாகத் திகழ்கின்றன. உதாரணமாக, அடிப்படைத் தொழிலாகிய இரும்பு - எஃகு உற்பத்தித் தொழிலின் முன்னேற்றம் ஒரு பொருளாதாரத்தின் பிற தொழில்களை வளர்க்கவும் உதவும். வேளாண்மை வளர்ச்சிக்கான கருவிகள், பிற தொழில்களைத் தொடங்குவதற்கான இயந்திரச் சாதனங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்ய இரும்பு - எஃகு உற்பத்தித் தொழில் பெரிதும் உதவுகின்றது.

(2) பெரிய மூலதனப் பொருட்களை உற்பத்திச் செய்யும் தொழில்கள் பொருளாதார வளர்ச்சி வீதத்தை விரைவுபடுத்துகின்றன. பேராசிரியர் பேரான் (Prof. Baran) கருதுவது போல, "விரைவான, தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சியைப் பெற 'உற்பத்திப் பொருட்களின் தொழில்களில்' (Producers, Goods Industries) அதிக முதலீடுகள் செய்யப்பட வேண்டும். பெரிய தொழில்களில் முதலீடு செய்வது தவருன தீவிரக் கொள்கையாகத் தோன்றினாலும், அது மொத்த உற்பத்தியில் விரைவான முன்னேற்றத்தைக் குறைந்த காலத்தில் பெற உதவும்."[1] பொருளாதார முன்னேற்றத்தில் உள்ள தடையாக மூலதனப் பற்றாக்குறையாகும். பெரிய தொழில்களில் முதலீடு செய்ய அதிக மூலதனம் தேவைப்படுகின்றது. வளர்ச்சியடைந்து வரும் நாடுகளிடம் பெரிய அளவு முதலீடுகளைச் செய்வதற்கான மூலதன வசதிகள் இருப்பதில்லை. உள்நாட்டுக்கடன், வரிவிதிப்பு முறை, வெளிநாட்டுக் கடன், பற்றாக்குறை நிதியாக்கம் ஆகிய பல முறைகளையும் பயன்படுத்தி இம் முதலீடுகளைப் பெரிய அளவில் செய்தல் நீண்ட காலத்தில் பல நன்மைகளையும் அளிக்கும். பல கடின நிலைகளுக்கிடையே பெரிய தொழில்களை வளர்த்தல் நீண்ட காலத்தில் வேலை வாய்ப்புகளைப் பெருக்கும்; மூலதனத் திரட்சியைப்

1. P. A. Baran, The Political Economic Growth, p. 315–316.

பெற உதவும்; நாட்டின் மொத்த ஆதிக்கத்தின் அளவை பெறவும் உதவும். அதிக மூலதன வசதிகளைப்பெற பெரிய தொழில்கள் உதவுகின்றன; ஆனால் அப்பெரிய தொழில்களை வளர்க்க அதிக மூலதனம் தேவைப்படுகின்றது.

(3) பெரிய தொழில்களின் முன்னேற்றம் இறுதியாக பிற நாடுகளை இயந்திரங்கள், கருவிகள், இயந்திர பாகங்கள், வேறு பல பொறியியற் பொருட்கள் ஆகியவற்றின் இறக்குமதிக்காகச் சார்ந்திருக்க வேண்டிய நிலையை நீக்கிவிடுகின்றது. உள்நாட்டிலேயே இப் பொருட்கள் பெரிய தொழில்களால் உற்பத்திச் செய்யப் படுகின்றன. இதனால் மூலதனப் பொருட்களை வெளிநாடுகளினின்றும் இறக்குமதி செய்யத் தேவையான அந்நியச் செலாவணிச் சிக்கல் தோன்றுவதில்லை. ஆயினும், வளர்ச்சியடையாத நாடுகளில் பெரிய தொழில்களைத் தொடங்க பிறநாடுகளிலிருந்தே மூலதனப் பொருட்கள் இறக்குமதியாகின்றன. அதன் காரண மாகவே அந்நாடுகளில் அந்நியச் செலாவணிச் சிக்கல்கள் தோன்றுகின்றன.

(4) பெரிய தொழில்கள் தொடக்கநிலைகளில் குறைந்த அளவு வேலைவாய்ப்புக்களைத் தந்தாலும், நீண்டகாலத்தில் பலவகை வேலை வாய்ப்புகளை அதிக அளவில் ஏற்படுத்துகின்றன. எடுத்துகாட்டாக, இங்கிலாந்தின் தொழில் வளர்ச்சி நிலையைக் கூறலாம். அந்நாட்டில் 'தொழிற் புரட்சி' ஏற்பட்டதன் விளைவாக வேலையின்மையானது தோன்றியது. ஆனால் இரும்பு - எஃகு உருக்குத் தொழில், பருத்தி நெசவுத் தொழில் போன்றவற்றின் வளர்ச்சியைத் தொடர்ந்து வேறு பல தொழில்களும் முன்னேற்ற மடைந்த நிலையால் நீண்டகாலத்தில் வேலை வாய்ப்புகள் பெருகி விட்டன. அதிக ஊதியத்தைப் பெற்ற காரணத்தினால், பல உழைப் பாளர்களும் தொழில்துறைகளில் தங்கள் உழைப்பைத்தர விரும்பி னார்கள். வேளாண்மைத் துறையை விட்டு விலகி தொழில்கள் அமைந்திருந்த நகர்ப்புறங்களுக்கு வந்த உழைப்பாளர்கள் அனைவருக்கும் நீண்டகாலத்தில் வேலை வாய்ப்புகள் கிடைத்து விட்டன.

(5) நாட்டின் பாதுகாப்பைக் கருதியும் பெரிய தொழில்கள் வளர்க்கப்படவேண்டும். வளர்ச்சியடையாத நாடுகள் தங்களின் சுதந்திரத்தைக் காக்க பெரிய மூலதனத் தொழில்களைக் கொண் டிருக்கவேண்டும். 'செல்வத்தைவிட பாதுகாப்பே முக்கியமானது' என ஆடம்ஸ்மித் கூறியுள்ளார். மேலும் ஒரு நாட்டின் பாதுகாப்புத் தொழில்களும், அடிப்படைத் தொழில்களும் சுதந்திரத்தைக்

காக்கவும், பிற தொழில்களில் முன்னேற்றத்தை ஏற்படுத்தவும் உதவுகின்றன.

(6) பெரிய தொழிற்சாலைகளின் மூலம் நுகர் பொருட்களை ஏற்றுமதி செய்து, ஏற்றுமதி வருவாயைப் பெருக்கிக் கொள்ளவும் வழி ஏற்படுகின்றது. தொழில்களில் வளர்ச்சியடைந்த பிறகு, அமெரிக்கா, இங்கிலாந்து, மற்றும் பல ஐரோப்பிய நாடுகள் மூலதனப் பொருட்களை ஏற்றுமதி செய்வது போல, வளர்ச்சியடையாத நாடுகளும் அவ்வகைப்பொருட்களை ஏற்றுமதி செய்ய முடியும்.

(7) பெரிய தொழில்களின் வளர்ச்சியால் புதிய இயந்திரங்களையும், கருவிகளையும் சிறு தொழில்களுக்கு அளிக்கலாம். அதன் மூலம் அவற்றின் உற்பத்தி பல மடங்கு பெருகும். சிறு தொழில்களின் வளர்ச்சி பெரிய தொழில்களையும் சார்ந்துள்ளது. பெரிய தொழில்களின் உற்பத்தி உயர்வதோடு, அவை சிறு தொழில்களின் உற்பத்திப் பெருக்கத்திற்கும் உதவுகின்றன.

இவ்விதமான பல நன்மைகளும் அதிக முதலீட்டைக் கொண்ட பெரிய தொழில்களால் விளைகின்றன. இந் நன்மைகளால்தான் நம்முடைய திட்டங்களில் வேளாண்மைக்கு அடுத்தபடியாக தொழில் முன்னேற்றத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது.

வளர்ச்சியடையாத நாட்டில் முதலில் பெரிய தொழில்களை வளர்ப்பதில் நன்மைகள் மட்டுமே உள்ளன எனக் கருத முடியாது. பெரிய தொழில்களை வளர்ப்பதில் பல சிக்கல்களும் உள்ளன.

எந்தவிதமான அமைப்பு முறையில் பெரிய தொழில்களை வளர்த்தாலும் அவை சில அடிப்படைக் காரணிகளால் கட்டுப் படுத்தப்படுகின்றன. ஒரு நாட்டில் உள்ள இயற்கை வளங்களுக்கு ஏற்பவே பெரிய தொழில்களைப் பெருக்கலாம். உழைப்பாளர்கள் திறமையுள்ளவர்களாகவும், உழைப்பை உண்மையாகத் தர வேண்டுமென்ற விருப்புடையவர்களாகவும் இருத்தல் வேண்டும். பேரளவு உற்பத்திக்குச் சாதகமான சூழ்நிலைகள் அமைந்திருக்க வேண்டும். அயல்நாட்டு வாணிப நிலையைக் கருதியும் பெரிய தொழில்களைத் தொடங்குவது நல்லது.

இயற்கை வளங்களை ஏராளமாகக் கொண்ட நாட்டில், மூலதனப் பொருட்களின் தொழில்களைத் தொடங்க பெரிய மூலதனக் கருவிகளையும், சாதனங்களையும், இயந்திரங்களையும் இறக்குமதி செய்வது சிக்கலை ஏற்படுத்துகிறது. இதற்கு அதிகச் செலவு பிடிப்பதால் பாதக அயல்நாட்டுச் செலுத்து நிலையானது

தோன்றிவிடும். இந்தியாவிலும் இந்நிலை அமைந்துள்ளது. தொழில் வளர்ச்சிக்காக பலவகைப்பட்ட மூலதனப் பொருட்களை இறக்குமதி செய்த காரணத்தால், இன்று இந்தியாவின் அயல்நாட்டுச் செலுத்து நிலை பாதக நிலையைக் கொண்டுள்ளது. நம்முடைய திட்டங்களில் பெரிய தொழில்களின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்ட தால் இந்நிலை ஏற்பட்டுள்ளது எனலாம்.

தொழில் நுணுக்கம் மிகுந்த இறக்குமதி செய்யப்படுகின்ற இயந்திரச் சாதனங்களை இயக்க உள்நாட்டில் திறமையான தொழிலாளர்களைப் பெறுவதும் கடினமாகின்றது. அவற்றைக் கையாளத் தனித் திறமை தேவைப்படுகின்றது. அத் தனித்திறமையைப் பயிற்சியின் மூலமே பெறமுடியும். பயிற்சியை அளிப்பதற்கு வெளிநாட்டினரின் உதவி தேவை. இதனால் இயந்திரங்களை இறக்குமதி செய்தாலும் உடனடியாக உற்பத்தியைத் தொடங்குவது முடியாத ஒன்றாகின்றது.

வக்கீல், பிரம்மானந்த் இருவரும் கூறுவதுபடி, பெரிய தொழில்களில் உற்பத்திச் செலவு குறையுமென்பதை ஏற்க இயலாது. பெரிய தொழில்களைத் தோற்றுவிக்கும்போது, பல சமுதாயத்தின் அவசிய வசதிகளும் வளர்க்கப்படுகின்றன. போக்குவரத்து, செய்தித்தொடர்பு, பொது ஆரோக்கியம் ஆகியவற்றிற்கும் அதிக முதலீடு செய்யப்படுகின்றது. இச் செலவுகளையும் கணக்கிடும் போது, பெரிய தொழில்களில் உற்பத்திச் செலவு குறைவாக இருக்கு மெனக் கூறமுடியாது.

தொழிற்சாலை முறையில் பல சீர்கேடுகளும் அமைந்துள்ளன. தொழில் நகரங்களில் நெருக்கடி, சுகாதாரக் குறைவு, அதிக வாழ்க்கைச் செலவு, மருத்துவ வசதி, கல்வி வசதி, பொழுது போக்கு வசதி போன்றவை இல்லாமை, தொழிற்சாலைகளில் அதிக நேர வேலை ஆகிய யாவும் பெரிய தொழில்களின் வளர்ச்சியால் ஏற்படுபவைகளேயாகும். தொழிற்சாலை முறையால் வறிய நிலை நீடித்து இருப்பதை இன்றும் பல நாடுகளில் உள்ள நிலைகளைக் கொண்டு உணரலாம்.

அவசியமான நுகர் பொருட்களின் உற்பத்திக்கு முக்கியத்துவம் அளிக்காமல் மூலதனப் பொருட்களின் உற்பத்திக்கு முக்கியத்துவம் அளித்தால் பொருளாதாரத்தில் 'சுழலும் பண வீக்கத்தைத்' (Inflationary Spiral) தோற்றுவித்துவிடும். பணவீக்க நிலை முன்னேற்றத்திற்கான திட்டச் செலவுகளை அதிகரித்துவிடும். திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றி முன்னேற்றத்தைப் பெறுவது கடினமாகிவிடும். திட்டங்கள் தோல்வியை அடையவே

நேரிடும். விலையுயர்வுகளினால் மக்கள் தங்கள் நலன்களை இழப்பது கட்டாயமாகிவிடுகின்றது. மக்களுடைய வாழ்க்கைத்தரமே இதனால் பாதிக்கப்படுகிறதெனலாம்.

நுகர் பொருட்களை உற்பத்திச் செய்யும் சிறு தொழில்களுக்கு ஆதரவான வாதங்கள், உழைப்புச் செறிந்த உற்பத்தி முறைகளுக்கும், மூலதனத்தைச் சிக்கனம் பிடிக்கும் உற்பத்தி முறைகளுக்கும் ஆதரவான வாதங்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன.

டார் (Dhar), லிடால் (Lydall) [1] இருவரும் சிறு தொழில் நிறுவனங்களை மூன்று வகைகளாக கூறுகின்றனர் :

(i) உள்ளூர் சந்தைகளுக்காக உற்பத்திச் செய்யும் குடிசைத் தொழில்கள்.

(ii) நகர்ப்புறங்களில் புதிய பொருட்களை உற்பத்திச் செய்யும் சிறு நிறுவனங்கள். இவை உற்பத்தியை உள்நாட்டுச் சந்தைக்காகவும், உலகச் சந்தைக்காகவும் செய்கின்றன.

(iii) நடுத்தர நிறுவனங்கள் ஓரளவு புதிய பொருட்களை பழைய உற்பத்தி முறைகளைக் கொண்டு செய்கின்றன.

இந்தியத் தொழில்களையும் அவர்கள் பாகுபாடு செய்து, அவற்றின் பொருட்களையும் மூன்று வகைகளாகப் பிரிக்கின்றனர் :

(i) உணவுப் பொருட்கள், மரப் பொருட்கள், தோல், புகையிலை போன்ற 'பாரம்பரியப் பொருட்கள்' (Traditional Products).

(ii) காபி, தேநீர், கோக்கோ, ஹார்லிக்ஸ் போன்ற பானப் பொருட்கள், சணல் பொருட்கள், அச்சுப் பொருட்கள் ஆகியவற்றை புதுமைப் பொருட்கள் (Modern Products) எனலாம்.

(iii) பருத்தி நெசவுப் பொருட்கள், மண் பாண்டங்கள், செங்கற்கள் போன்ற நடுத்தரப் பொருட்கள் (Intermediate Products).

சிறு தொழில்களுக்கு ஆதரவான பல வாதங்களைக் கீழ்வருமாறு விளக்கலாம் :

---

1. P. N. Dhar and H. F. Lydall, the Role of Small Enterprises in Indian Economic Development.

1. முக்கியமாகச் சிறு தொழில்கள் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருகின்றன. உழைப்புச் செறிந்த தொழில்களாகவே சிறு தொழில்கள் அமைகின்றன. அதனால் பலருக்கும் வேலை வாய்ப்புகள் கிடைக்கின்றன. உதாரணமாக, பருத்தி நெசவுத் தொழில் பயன்படுத்துகின்ற உழைப்பைவிட 4 மடங்கு அதிக உழைப்பு சிறு தொழிலுக்குத் தேவைப்படுகின்றது; குடிசைத் தொழிலுக்கு 13 முதல் 34 மடங்கு அதிக உழைப்பு அவசிய மாகின்றது. வளர்ச்சியடையாத நாடுகளில் 'மறைந்துள்ள வேலை யின்மை' (Uuder - employment) பெரிய அளவில் அமைந்துள்ளது. இந்தியா போன்ற நாடுகள் வேளாண்மைத் தொழிலையே பெரிதும் சார்ந்து உள்ளமையால், 'பருவகால வேலையின்மையும்' (Seasonal unemployment) ஏற்படுகின்றது. விவசாயிகள் ஒரு ஆண்டின் சில மாதங்களில் மட்டுமே சாகுபடி நடவடிக்கைகளில் ஈடுபடு கின்றனர். மற்ற மாதங்களில் அவர்களின் உழைப்பு வீணடிக்கப்படு கின்றது. இவ்விரு நிலைகளையும் நீக்க அதிக வேலைவாய்ப்புகளைத் தரக்கூடிய சிறு தொழில்கள் வளர்க்கப்படுதல் வேண்டும்.

2. ஹிக்ஸ் (Hicks) கூறுவதுபோல சிறு தொழில்களில் 'விரைவான முதலீட்டைச்' (Quick Investment) செய்து விடலாம். அவை உடனடி உற்பத்தியைத் தொடங்கிவிடுகின்றன, முதலீடு செய்யப்படுகின்ற காலத்திற்கும், உற்பத்திப் பொருட்கள் சந்தைக்கு வருகின்ற காலத்திற்கும் குறைந்த இடைவெளியே உள்ளது. பெரிய தொழில்களோடு ஒப்பிட்டு நோக்கும்போது சிறு தொழில்கள் மிகக் குறுகிய காலத்திலேயே உற்பத்தியைச் செய்து விற்பனைக்குக் கொண்டு வந்துவிடுகின்றன. நுகர்வின் அளவும் அதிகரிப்பதால் பணவீக்க நிலை ஏற்படுவது இதனால் தவிர்க்கப்படுகின்றது. பெரிய தொழில்களைத் தொடங்கி உற்பத்தியை மேற்கொள்ள நீண்டகாலம் பிடிக்கும். வருவாய் பெருகும் அளவிற்கு நுகர்பொருட்களின் உற்பத்தி அக்காலத்தில் பெருகாமையால் விலையுயர்வுகள் ஏற்படு கின்றன. உடனடியாக நன்மையை முதலீட்டாளர்களும், நுகர் வோருக்கும் அளிப்பவை சிறு தொழில்களேயாகும்.

3. மூலதனப் பற்றுக்குறையுள்ள பின்தங்கிய நாடுகளில், முதலீட்டிற்கு மூலதனத்தைக் குறைந்த அளவு தேவையாகக் கொண்ட சிறு தொழில்களைத் தொடங்குவதே சிறப்புடையதாகும். பேராசிரியர் மகலாநோபிஸ் (Prof. Mahalanobis)[1] ஆய்வின்படி இரும்பு - எஃகு அல்லது இயந்திரக் கருவிகளை உற்பத்தி செய்யும்

1. P. C. Mahalanobis, The Approach of Operational Research to Planning in India, pp. 45 - 47.

பெரிய தொழில்களில் பணியாற்றுகின்ற தனியொரு உழைப்பாளருக்கான முதலீட்டின் அளவு ரூ. 35,000 முதல் ரூ. 60,000 வரை அமைகின்றது; நிலக்கரி, மின்சாரம், சிமெண்ட், அலுமினியம் போன்ற தொழில்களில் ரூ. 20,000 தேவைப்படுகின்றது. நுகர் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில்களில் ரூ. 8,750, வேளாண்மை உட்பட குடிசைத் தொழில்களில் ரூ. 2,500 தனி ஒருவருக்கான முதலீடாகத் தேவைப்படுகின்றது. இந்நிலையால் பின்தங்கிய நாடுகளில் சிறு தொழில்களைத் தொடங்குவதே எளிதானதாகும். குறைந்த அளவு கிடைக்கக்கூடிய மூலதனத்தை, உடனடி உற்பத்தியைத் தரத்தக்க சிறு தொழில்களில் முதலீடாக்குவதே நன்மை தருவதாகும்.

4. சிறு தொழில்களில் ஈடுபடத் தொழிலாளர்களுக்கு அதிகத் திறமையும் தேவை இல்லை. தனித்திறமையானது இத் தொழில்களுக்குத் தேவையில்லை. மேலும் பாரம்பரியமாக உழைப்பிறகு இருக்கக்கூடிய சாதாரணத் திறமையே இத் தொழில்களில் பயன்படுத்தப் போதுமானதாகும். திறமை குறைந்த உழைப்பாளர்களை திறமை மிக்கவர்களாக மாற்றப் பயிற்சிகளை எளிதில் மேற்கொள்ளலாம். பயிற்சி அளித்தலையும் குறுகிய காலத்தில் முடித்துவிடலாம். டாக்டர் கே.என். பிரசாத் (Dr. K. N. Prasad) கூறுவதுபோல சிறு தொழில்கள் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற நோக்கை மக்களுக்கு அளிக்கின்றன. இந்த நோக்கமானது எழுகின்றபோது புதிய உற்பத்தி முறைகளும் வளர்கின்றன. தொழில் நுணுக்க அறிவு பரவுகின்றது. மக்களில் பெரும்பாலோரிடையே புதிய தொழில் நுணுக்க உற்பத்தி முறைகளைப் பின்பற்ற வேண்டுமென்ற எண்ணம் தோன்றுகின்றது. மேம்பாடடைந்து வரும் நாடுகளில் உழைப்பாளர்கள் திறமை குறைந்தவர்களாக இருப்பதால், சிறு தொழில்களைத் தொடங்குவதன் மூலமே உடனடி உற்பத்தியைப் பெருக்க இயலும்.

5. சிறு தொழில்களை நிர்வகிப்பதும் எளிதானது. நிர்வாகச் செலவுகளும் குறைந்த அளவிற்கே தேவைப்படுகின்றது. வளர்ச்சியடையாத நாடுகளில் மூலதன வசதிகள் குறைவாக இருப்பதால், குறைந்த நிர்வாகச் செலவுகளைக் கொண்ட சிறு தொழில்களைத் தொடங்குவது எளிதாகின்றது.

6. வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் மறைந்துள்ள சில வசதிகள் உள்ளன. திறமையாகத் தொழில் முயல்வோருடைய பணிகளை ஆற்றுபவர்களும், மூலதன வசதிகளும் உள்ளன. அவற்றை முழுமையாகப் பன்படுத்த சிறு தொழில்கள் உதவும். எல்லா வளங்களையும் முழுமையாகப் பயன்படுத்தும்போதுதான்

நாட்டின் மொத்த ஆக்கத்தின் அளவை அதிகமாகப் பெறமுடியும். வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்தச் சிறு தொழில்கள் உதவுகின்றன.

7. சமுதாய நோக்கில் ஆராயும்போது சிறு தொழில்கள் உழைப்பாளர்களின் வாழ்க்கை முறையில் பெரிய மாறுதல்களை ஏற்படுத்துவதில்லை. சமுதாய மாற்றங்கள் படிப்படியாகத் தோன்று கின்றமையால் மக்களின் எதிர்ப்பும் ஏற்படுவதில்லை. தொழிற் சச்சரவுகள், அமைதியின்மை போன்றவை பெரிய தொழில்களைத் தொடங்குவதால்தான் ஏற்படுகின்றன. சமுதாய அமைப்புக் களில் அடிப்படை மாற்றங்களைச் செய்துவிடுகின்ற பெரிய தொழில்கள் மக்களுக்கு உடனடியாக நன்மை பயப்பதில்லை.

8. சிறு தொழில்கள் உள்நாட்டு வசதிகளைக் கொண்டே தொடங்கப்படுகின்றன. இயந்திரங்கள், கருவிகள், மூலப் பொருட்கள் போன்றவற்றைப் பிறநாடுகளின்றும் இறக்குமதி செய்யத் தேவையில்லை. அவை அந்நியச் செலாவணியை மிச்சம் பிடிக்க உதவுகின்றன. சிறு தொழில்கள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட சிறு கருவிகளையும், உள்நாட்டில் கிடைக்கக் கூடிய கச்சாப் பொருட்களையும் மட்டுமே உற்பத்திக்குப் பயன் படுத்துகின்றன.

9. சிறு தொழில்களை நாட்டில் பரவலாக அமைக்கலாம். மிகச் சிறப்பாக வளரக்கூடிய சில சிறு தொழில்கள் பொருளாதாரத்தின் பல துறைகளிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தும். அதிக மூலதனத் தேவையைக் கொண்ட பெரிய தொழில்களை நாட்டின் ஒருசில இடங்களில் மட்டுமே நிறுவ முடியும். இதனால் இவ்விடங்களில் மட்டுமே முன்னேற்றம் ஏற்படும். நாட்டின் பிற இடங்களில் உள்ள மக்கள் அதிக நன்மையைப் பெற முடியாது. சிறு தொழில்கள் நாடு முழுதும் அதிக எண்ணிக்கையில் பரவலாக அமைகின்றன. வேலை வாய்ப்புகள் எல்லா இடங்களிலும் கிடைக்கின்றன. வருவாய்ப் பெருக்கத்தின் உயர்வை எல்லா மக்களும் ஓரளவு சமமாகப் பெற வாய்ப்பு உண்டு. நாட்டில் சமநிலை வளர்ச்சி ஏற்படச் சிறு தொழில்கள் உதவுகின்றன.

10. முற்றுரிமை நிலைகள் ஏற்படுவதைத்தடுக்கவும், பொருளா தாரச் சக்திகள் ஒரு சிலரிடத்து குவிந்து கிடத்தலைத் தடை செய்யவும் சிறு தொழில்களால் முடியும். முற்றுரிமை நிலைகள் உற்பத்தியாளர்களுக்கு அதிக இலாபத்தைத் தந்து மக்களின் நலன்களைச் சுரண்டுகின்றன. உற்பத்தியாளர்கள் கொள்ளை இலாபத்தைப் பெறவும் வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன. இதற்குக் காரணம் ஒரு சில பெரிய தொழில்கள் உற்பத்தியை மேற்கொள்

கின்ற நிலையாகும். பல சிறிய தொழில்கள் நாடெங்கும் அமைந்திருந்தால் அவற்றிற்கிடையே போட்டி நிலையானது அமைந்திருக்கும். உற்பத்தியாளர்களுக்கிடையே போட்டி நிலவினால், தரமான பொருட்களைக் குறைந்த செலவில் உற்பத்தி செய்ய அவர்கள் முயலுவார்கள். குறைந்த விலையில் பொருட்களைப் பெறமுடிகின்றமையால் நுகர்வோர் நன்மையடைகின்றனர்.

11. பெரிய தொழில்களைத் தொடங்கும்போது பல தொழில் நகரங்கள் தோன்றுகின்றன. அவற்றிற்கான அவசிய வசதிகளைச் செய்துதர மிக அதிக மூலதனம் தேவைப்படுகிறது. போக்குவரத்து, மருத்துவ வசதி, தண்ணீர் வசதி, செய்தித் தொடர்பு, கல்வி வசதி, மின்சார வசதி ஆகியவற்றை உடனடியாக ஏற்படுத்துவது கடினமானதாகும். சிறு தொழில்கள் கிராமங்களிலும், சிறு நகர்ப்புறங்களிலும் ஏற்படுவதால் பல வசதிகளையும் பெருக்குவதற்கு அதிக மூலதனம் தேவைப்படுவதில்லை. பெரிய தொழில்கள் ஏற்பட்ட பிறகு சமுதாயக் காப்பிற்கான செலவும் அதிகம் பிடிக்கின்றது.

12. 'வாணிபச் சுழல்கள்' பெரிய தொழில்களைப் பெருமளவு பாதித்துவிடும். சிறு தொழில்கள் அந்த அளவிற்குப் பாதிக்கப்படுவதில்லை. உதாரணமாக, இந்தியாவில் 1966-67, 1967-68ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட 'தொழில் பின்னிறக்க நிலையைக்' (Industrial Recession) குறிப்பிடலாம். அந்த ஆண்டுகளில் பெரிய தொழில்கள் பின்னிறக்க நிலையால் பாதிக்கப்பட்டு அவற்றின் உற்பத்தி குறைந்துவிட்டது. சிறு தொழில்கள் உற்பத்தியில் பாதிக்கப்படவே இல்லை.

13. இறுதியாக, மக்களிடம் தேசிய வருவாயைச் சமமாகப் பகிரவும் சிறு தொழில்கள் உதவுகின்றன. செல்வப் பங்கீட்டிலும் சமநிலை ஏற்பட நீண்டகாலத்தில் இவை உதவும் எனலாம். சமதர்மச் சமுதாயத்தை அமைக்க முயன்றுவரும் நம் நாட்டிற்குச் சிறு தொழில்களின் வளர்ச்சி இன்றியமையாததாகும். சமதர்ம அமைப்பு முறை அதிக வருவாய் பெறுபவர்களின் நிலையைத் தாழ்த்துகின்றது என்பது தவறானது. வறியவர்களின் நிலையை உயர்த்தவே அது பெரிதும் முயலுகின்றது. பலருடைய நிலையை உயர்த்த சிலருடைய அதிக வருவாயையும், செல்வத்தையும் குறைத்தே ஆகவேண்டும். உயர்ந்த மேடுகளை இடித்துத்தான் பள்ளங்களை நிரப்பவேண்டும். இந்திய அரசு சமதர்மக் கொள்கைகளைத் தீவிரமாகச் சிறப்பான வகையில் பின்பற்றுகின்றது. அரசு கைக்கொள்ளும் கொள்கைகளின் மூலம் வருவாயில் சமநிலையை ஏற்படுத்தலாம். அதுபோன்றே, சிறு தொழில்களும் சமதர்மச் சமுதாயம் அமைய உதவுகின்றன எனலாம்.

மேற்கண்ட பல நன்மைகள் சிறு தொழில்களில் அமைந்திருந் தாலும் அவை பின்தங்கிய நாடுகளில் பாதிக்கப்பட்ட நிலையிலேயே உள்ளன. அவற்றின் பயன்களை அந்நாடுகள் குறைந்த அளவி லேயே பெறுகின்றன. வளர்ச்சியடையாத நாடுகள் தொழில் நுணுக்கத்தில் முன்னேறியிருப்பதில்லை. அந்நாடுகளில் உள்ள சிறு தொழில்கள் பழைய உற்பத்தி முறைகளையே பின்பற்றுகின்றன. போதிய நிதிவசதியின்மையால் அவற்றின் முன்னேற்றம் தடைப் படுகின்றது. தரமான பொருட்களையும் அவற்றால் உற்பத்தி செய்ய முடிவதில்லை. சிறு தொழில்களின் விற்பனை முறைகளும் சிறப்பாக அமைவதில்லை. இவற்றின் விளைவாக தொழில் உடைமையாளர் களும் அதிக வருவாய் பெறமுடிவதில்லை. உழைப்பாளர்களுக்கான ஊதியத்தையும் அவர்கள் குறைவாகவே கொடுக்கின்றனர்.

டார் (Dhar), லிடால் (Lydall) ஆகிய இருவரின் கருத்துப்படி சிறு தொழில்களின் முன்னேற்றத்திற்கு சலுகைகளையும், உதவித் தொகைகளையும் வழங்குவதைவிட அவற்றின் முன்னேற்றத்திற்கு இடையூறாக உள்ள தடைகளை நீக்குவது இன்றியமையாததாகும். புதிய சிறு தொழில்களைத் தொடங்குவதைக் காட்டிலும் அமைந் திருக்கின்ற சிறு தொழில்களின் உற்பத்தித் திறனையும், வளர்ச்சியை யும் முன்னேற்றமடையச் செய்வது நல்லது. பெரிய தொழிற்சாலை களைவிட புதிதாகத் தொடங்கப்பட்ட சிறு தொழில்கள் உற்பத்திப் பொருட்களின் ஒரு அலகிற்கு அதிக மூலதனத்தையும்,உழைப்பை யும் செலவிடுகின்றன என அவர்கள் இருவரும் கூறுகின்றனர். எனவே அவ்வித நிறுவனங்களை தொழில் மயமாக்குதலின் முதற் சில நிலைகளில் தொடங்குவது நன்மை தராது. ஆனால் அதிக உழைப்புச் செறிந்த, மூலதனத்தைக் குறைந்த அளவில் தேவை யாகக்கொண்ட சிறுதொழில்களைத் தொடங்கலாம். அவற்றின் வளர்ச்சிக்கு ஊக்கமளித்தல் நல்லது. டார், லிடால் இருவரும் கூறுவதுபடி, “மனிதனுக்குத் தந்தையாகக் குழந்தை இருப்பது போல, பல பெரிய தொழில்கள், நடுத்தரத் தொழில்களின் வளர்ச்சிக்கு சிறு தொழில்களால் உதவ முடியும். சிறு தொழில் களின் அளவை மாற்றாமலேயே சமுதாயத்திற்கு நன்மை அளிப் பவைகளாக அவை இருக்கலாம்.”

பெரிய தொழில்கள், சிறு தொழில்கள் இவற்றில் எவற்றைத் தெரிந்தெடுப்பது எனபதை ஆராயும்போது, அவற்றின் தேசிய வருவாயின் மீதான நேரடி, மறைமுக விளைவுகளை அறிவது அவசிய மாகின்றது. ஒரு தொழிலின் நிதி இலாபத்தைவிட பொருளாதார இலாபமே முக்கியமானதாகக் கருதப்படவேண்டும். மாரிஸ் டாப் (Maurice Dobb) குறிப்பிடுவதாவது, உணவுப்பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிலும், துணித்தொழிலும் குறைவான மூலதனத்தில்

தொடங்கப்பட்டால், உடனடியாக நுகர உதவும் வருவாய் உயர் வடையும்; ஆனல் நீண்டகாலத்தில் பொருளாதார வளர்ச்சி வீதம் குறைந்துவிடும். மற்ருெரு புறத்தில், இரும்பு - எஃகு, இயந்திரங்கள் கருவிகளை உற்பத்திச் செய்யும் தொழிற்சாலைகள் போன்ற அதிக முதலீட்டைக்கொண்ட பெரிய தொழில்கள் குறுகிய காலத்தில் பயனளிக்காவிட்டாலும் நீண்டகாலத்தில் வளர்ச்சி வீதத்தை விரைவுபடுத்துவன ஆகும். சிறு தொழில்களின் மூலம் உடனடி நன்மைகள் கிடைத்தாலும் அவை தொடர்ந்து நீடிப்ப தில்லை. மூலதனப் பொருட்களின் தொழில்கள் நீண்டகாலத்தில் தொடர்ச்சியாக வருவாய், நுகர்வு இரண்டையும் உயர்த்த உதவுகின்றன.

ஒரு நாடு எல்லா வகையிலும் தன்னிறைவு பெற பலவகைப் பட்ட தொழில்களும் வளர்க்கப்படவேண்டும். நாட்டின் பொருளாதார தொழில் நுணுக்க நிலைகளுக்கு ஏற்ப ஒரே காலத்தில் பல தொழில் களும் தொடங்குதல் நன்மை பயப்பதாகும். இந்தியாவில் இம்முறை பின்பற்றப்பட்டு வருகின்றது. 'கலப்புப் பொருளாதார முறையில், இன்று நாம் முன்னேற்றத்தைப் பெற்று வருகின்ருேம். பொதுத் துறையிலும், தனியார் துறையிலும் வெவ்வேறு வகைத் தொழில் கள் வளர்க்கப்படுகின்றன. அதிக மூலதனத்தைத் தேவையாகக் கொண்ட தொழில் அரசால் தொடங்கப்படுகின்றது. சில பெரிய தொழில்கள் அயல்நாட்டு மூலதனத்தின் ஒத்துழைப்போடும் ஏற்படுத்தப்படுகின்றன. நுகர் பொருட்களை உற்பத்திச் செய்யக் கூடிய சிறுதொழில்கள் அதிக அளவில் தனியார் துறைகளில் அமைந் துள்ளன. நமது திட்டங்களின் பெரிய தொழில்களின் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தாலும், சிறு தொழில் களின் வளர்ச்சிக்கும் அரசு பல வகைகளிலும் உதவி வருகின்றது. நாட்டில் நிலவக்கூடிய வேலையின்மையைக் குறைக்க சிறு தொழில் களின் வளர்ச்சி உதவும். பெரிய தொழில்களின்முன்னேற்றம் நீண்ட கால சாதக விளைவுகளை ஏற்படுத்துகின்ற தன்மையைக் கொண்ட தாகும். இருவகைத் தொழில்களையும் வளர்க்கவே அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இவ்வாறு இந்தியாவில் முன்னேற்ற முறைகளைத் தெரிந்தெடுப் பதில் நாம் வெற்றி கண்டுள்ளோம். நாம் பின்பற்றுகின்ற முறைகள் சிறப்பானவை; ஆனல் அவற்றை நிறைவேற்றுவதில் உள்ள சில தடைகளால் நம் பொருளாதார வளர்ச்சி வீதம் குறைவாக உள்ளது. முன்னேற்றத்தின் நிலைகளில் உள்ள இத் தடைகளைத் தெரிந்து நீக்கிவிட்டால் குறுகிய காலத்திலேயே பொருளாதார மேம்பாட்டைப் பெற்றுவிடலாம்.

36. திட்டங்கள் வெற்றியடைவதற்கான நிபந்தனைகள்

இன்றைய வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் பல பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுவதற்காகத் திட்டமிடுகின்றன. பொதுவுடைமை நாடுகளிலும், சமதர்ம நாடுகளிலும் திட்டங்கள் அதிக அளவிற்கு முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளன. சில நாடுகளில் திட்டங்கள் வெற்றி பெறும்போது, வேறு சில நாடுகளில் திட்டங்கள் சிறப்பான வெற்றியைப் பெறுவதில்லை. ஒரு நாட்டிலேயே சில திட்டங்கள் வெற்றியடையும்போது மற்றவை தோல்வியடைகின்றன. முன்னேற்றத் திட்டங்களை அரசு கவனமாகத் தெரிந்தெடுக்க வேண்டும். திட்டங்களைச் சிறப்பாக நிறைவேற்றுவதிலும் வெற்றி அடங்கியுள்ளது. பின்தங்கியப் பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகள் திட்டங்களை நிறைவேற்றாமல் முன்னேற்றமடைந்த பொருளாதாரத்தைப் பெற முடியாது. திட்டங்கள் வெற்றியடைவதற்கான நிபந்தனைகளும் இருக்கின்றன.

பின்வரும் காரணிகள் ஒரு நாட்டின் திட்டங்கள் வெற்றியடைய பல வழிகளிலும் உதவுகின்றன:

1. திட்டங்களின் நோக்கங்கள் நிறைவேற்றத் தக்கவைகளாக இருத்தல்

திட்டமிட்டப் பொருளாதாரத்தில் எண்ணிறைந்த நோக்கங்களை நிறைவேற்றுவது இயலாததாகும். திட்டங்களின் குறியிலக்குகளும் அடையத்தக்கவைகளாக இருக்கவேண்டும். இந்தியாவின் இரண்டாவது திட்டத்தில் நிறைவேற்ற முடியாத சில நோக்கங்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. அதிக நம்பிக்கையோடு தொடங்கப்பட்ட தொழில்திட்டமாக அது அமைந்தது. முதல்

திட்டத்தின் கணிசமான வெற்றி, இரண்டாவது திட்டத்தை அதிகத் தீவிரத்தோடும், நம்பிக்கையோடும் தொடங்கத் தூண்டியது. இரண்டாவது திட்டக்காலத்தில் வேளாண்மைக்கு முதல் முக்கியத்துவம் அளிக்கப்படாமல், தொழில்துறைக்கு அளிக்கப் பட்டது. இரண்டாவது திட்டம் தோல்வியடைந்தமைக்கு இதுவும் ஒரு காரணமாகும். இந்தியத் திட்டங்களின் பல நோக்கங்கள் நிறைவேற்றப்படாதவைகளாகவே இருக்கின்றன.

2. சமதர்மமும், வருவாயில் சமநிலையும்

இந்தியத் திட்டங்கள் இதுவரை சமதர்மத்தை நிலைநாட்டத் தவறிவிட்டன. சமதர்மத்தின் முக்கிய நோக்கம் வருவாயிலும், செல்வப் பங்கீட்டிலும் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் களைவதாகும். திட்டங்களின்மூலம் வருவாயில் உள்ள வேறுபாடுகள் நீக்கப்பட வில்லை. இன்றும் பொருளாதாரச் சக்தி மக்களில் சிலரிடம் குவிந் திருக்கின்றது. செல்வப்பங்கீட்டில் உள்ள மிகுதியான வேறு பாடுகள் இன்னும் குறைக்கப்படவில்லை. இந்தியத் திட்டமுறை கீழ்க்கண்டவாறு விளக்கப்படுகின்றது:

"சமதர்ம நோக்கங்களைக் கொண்டவர்களாக நாம் இருக் கின்றோம்; ஆனால் நம்முடைய நடவடிக்கைகள் முதலாளித்துவ முறையைச் சார்ந்தவைகளாக இருக்கின்றன. உற்பத்தியில் சமதர்ம முறை அமைந்திருந்தால், பகிர்வின் நிலை முதலாளித்துவ முறையைச் சார்ந்து அமைந்திருக்கின்றது; இதற்கு மாறாக, பகிர்வில் சமதர்ம முறை அமைந்திருந்தால், உற்பத்தி முறைகள் முதலாளித்துவ முறையைச் சார்ந்து அமைந்திருக்கின்றன."

பேராசிரியர் பெட்டல்ஹீம் (Prof. Bettelheim) கூறுவதுபடி, "இந்தியப் பொருளாதாரத்தின் முதலாளித்துவ இயல்பே முன்னேற் றத்திற்குத் தடையாக உள்ளது." இந்தியாவில் சமதர்மச் சமுதாயத்தைப் பெறவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பல தனியார் உற்பத்தித் துறைகளும் தேசிய மயமாக்கப்பட்டு வருகின்றன. இதனால் தனியார்துறை முதலீடும் பாதிக்கப்படு கின்றது. பெரிய தொழில்களில் தனியார் அதிக அளவு முதலீடு செய்யத் தயங்குவதற்கு அரசின் சமதர்மக் கொள்கையும் ஒரு காரணமாகும். இந்தியா போன்ற மேம்பாடடைந்து வரும் நாடுகள் விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப்பெற சிறப்பான சமுதாய மாற்றங்கள் தோன்றவேண்டும். நாட்டிலுள்ள இயற்கை வளங்களும், உழைப்பாளர்களின் சக்தியும் சமுதாயத்திற்கு நன்மையளிக்கும் வகையில் பயன்படுத்தப்பட வேண்டும். சமுதாயத்தின் ஒரு பிரிவினருக்கு மட்டும் நன்மையளிக்கும்

வகையில் வளங்கள் பயன்படுத்தப்படத் தேவையில்லை. இதன் காரணமாகவே பொதுத்துறை விரிவாக்கப்பட வேண்டுமெனவும், தனியார் துறை கட்டுப்படுத்தப்பட வேண்டுமெனவும் சொல்லப் படுகின்றது. பொதுத்துறையால் நன்மையடைபவர்கள் நாட்டு மக்கள் அனைவரும் ஆவர்; தனியார் துறையால் பயனடைபவர்கள் மக்களில் ஒரு சிலரேயாவர். பொதுத்துறையால் தனியார் துறை முன்னேற்றமும் ஏற்படுகின்றது.

இரண்டாவது திட்டம் சமதர்ம பாணிச் சமுதாயத்தை அமைக்கக் கருதியது. இத் திட்டத்திலேயே சமதர்மத்தை அடைவது நோக்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆகவே பொதுத் துறையை வளர்க்கவும், விரிவாக்கவும் இத் திட்டக் காலம் முதற்கொண்டு அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. உலகின் பல நாடுகளின் அரசுகளும் மக்களின் நலங்காக்கும் அரசுகளாகவே உள்ளன. சமதர்ம அரசுகளுக்கும், நலங்காக்கும் அரசுகளுக்கும் பல வேறுபாடுகள் இருக்கின்றன. வளர்ச்சியடைந்துவரும் நாடுகளில் பல சமதர்மத்தையோ அல்லது பொதுவுடைமையையோ பின்பற்றவே விரும்புகின்றன. முதலாளித்துவக் கொள்கை படிப்படியாகச் செல்வாக்கிழந்து வருகின்றது. பின்தங்கியப் பொருளாதாரத்தைக் கொண்ட நாடு களில் முதலாளித்துவ முறையால் அதிக அளவு நன்மையைப்பெற முடியாது என்பது பலராலும் உணரப்பட்டுள்ளது.

முன்னேற்றத்திற்கான திட்டங்கள் வெற்றியடைய கொள்கை யளவில் சமதர்மம் அமைந்திருத்தல் மட்டும் போதுமானதாகாது. திட்டங்களை முதலாளித்துவ முறையில் நிறைவேற்றாமல், சமதர்ம முறையில் நிறைவேற்ற வேண்டும். இந்திய அரசு 'கலப்புப் பொருளாதார' முறையிலும் விரைவான வளர்ச்சியைப் பெற முயற்சிகளை மேற்கொள்கின்றது. கலப்புப் பொருளாதார முறையில் பொதுவுடைமையில் அமைந்துள்ள நன்மைகளும், முதலாளித்து வத்தில் அமைந்துள்ள நன்மைகளும் பெறப்படுகின்றன என்று கூறப்படுகின்றது. ஆனால் இந்தியாவின் கலப்புப் பொருளாதர முறையில் பொதுவுடைமையில் உள்ள சில குறைபாடுகளும், முதலாளித்துவத்தில் உள்ள பல குறைபாடுகளும் தோன்றுகின்றன என்று குறைகூறுவோரும் உள்ளனர். இக்குறைபாடுகளை நீக்குவது அரசின் தீவிர நடவடிக்கைகளில் அடங்கியுள்ளது.

இந்தியாவில் சமதர்மத்தைப் பெறுவதற்கான வழி முறைகள் குறைவான வேகத்திலேயே பின்பற்றப்பட்டு வருகின்றன. சமதர்மத்தை அடைவதற்கான நடவடிக்கைகளை அரசு உடனடியாக

எடுத்தல் அவசியமாகும். சமதர்மச் சமுதாயத்தை எவ்வழிகளில் பெறலாம் என்பதையும் அரசு அறிந்து, அதற்கேற்பச் செயல்பட வேண்டும். சமதர்மத்தை நிலைநாட்ட இந்திய அரசு தீவிர நடவடிக்கைகளை எடுக்காமையே திட்டங்களின் குறைவான வெற்றிக்கு முக்கியக் காரணமாகும்.

3. சமுதாய விழிப்புணர்ச்சி

இன்றைய வளர்ச்சியடைந்த நாடுகள் பொருளாதார முன்னேற்றத்தைப் பெற்றபோது சமுதாய மாற்றங்கள் பெருமளவிற்கு அந்நாடுகளில் தோன்றியிருந்தன. திட்டங்கள் வெற்றியடைய மக்களின் ஒத்துழைப்புத் தேவையாகின்றது. சமுதாய மாற்றங்கள் ஏற்படும்போதுதான் மக்கள் விழிப்புணர்ச்சியைப் பெறுகின்றார்கள். கல்வியறிவைப் பரப்புதல், நாகரிக முன்னேற்றம், வருவாய் உயர்வு போன்றவைகளின் மூலம் மக்களின் பழக்க வழக்கங்களில் மாற்றங்களை ஏற்படுத்தலாம். முன்னேற்றமடைந்த நாடுகளின் நாகரிகத்தைப் பரப்புவதின் மூலமும் மக்கள் பரந்த அறிவைப் பெறுவார்கள். இந்தியா போன்ற மக்கட்தொகை மிக்க பாரம் பரியச் சமுதாயத்தைக் கொண்ட நாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்துவது கடினமானதாகும். மக்களிடையே முன்னேற வேண்டுமென்ற போட்டி மனப்பான்மை அமைந்திருத்தல் அவசியமாகும். இந்திய கிராம மக்கட்தொகை இன்றும் 'போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பதாக இருக்கின்றது. உற்பத்தியை உயர்த்தி, அதிக வருவாயைப் பெற்று நல்ல வாழ்க்கைத் தரத்தைப் பெறவேண்டுமென்ற எண்ணம் மக்களிடையே தோன்றவேண்டும். திட்டங்களின் வெற்றி மக்களின் விழிப்புணர்ச்சியைச் சார்ந்தே அமையும்.

4. வலுவான அரசமைப்பு

திறமை குறைந்த அரசு மக்களுக்குப் பல நன்மைகளையும் அளிக்க முடியாது. குடியரசு ஆட்சி முறையில் பொருளாதார முன்னேற்றம் குறைந்த வேகத்திலேயே ஏற்படும் எனக் கூறப்படுகின்றது. குடியரசு நாட்டில் பலவகையான நோக்கங்களைக் கொண்ட அரசியற் கட்சிகள் உள்ளன. விரைவான முன்னேற்றத்தைப்பெற எல்லா அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பும் தேவைப்படுகின்றது. திட்டங்களின் அடிப்படை நோக்கங்களை எல்லா கட்சிகளும் ஏற்கவேண்டும். இதன் மூலமே தொடர்ச்சியான, உறுதியான, விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெற முடியும். திட்டங்களின் வெற்றி ஆளும் அரசியல் கட்சியினரின் திறமையான நடவடிக்கைகளையும் சார்ந்துள்ளது. திட்டமிடு

தலில் உறுதியற்ற நிலையானது அமைந்திருக்கக்கூடாது. குடியரசு நாட்டில் ஆளும் கட்சி மாற வாய்ப்பு உண்டு. ஆளும் கட்சியானது மாறிக்கொண்டே இருக்கலாம்; ஆனால் முன்னேற்றத்திற்காகத் திட்டமிடுதல் தொடர்ந்து நீடிக்கின்றது. மேலும், குடியரசு ஆட்சி முறையில் முடிவுகள் எடுப்பதற்கு நீண்டகாலம் பிடிக்கின்றது. திட்ட முடிவுகளை எடுப்பதற்கோ, புதிய கொள்கைகளைப் பின்பற்று வதற்கோ, அரசியல் சட்டங்கள் திருத்தப்படுவதற்கோ அதிகக் காலதாமதம் ஏற்படக் கூடாது. ஆளும் கட்சியினருக்குத் திறமையான நிர்வாகத்தை நேர்மையாகச் செய்யவேண்டுமென்ற எண்ணம் அமைந்திருக்க வேண்டும். இந்திய அரசைப் பற்றிக் குறிப்பிடும்போது வலுவான அமைப்பைக் கொண்டதாக அது இருக்கின்றது. பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினரின் ஆதர வின்றியே சட்டங்களை இயற்றவும், திருத்தவும் இன்றைய ஆளும் கட்சியால் முடியும். எனினும் பாராளுமன்றத்தில் பல சிக்கல் களும் வெளிப்படையாக ஆராயப்படுகின்றன. ஆளும் கட்சியிடம் மக்கள் கொண்ட நம்பிக்கையே, இன்று இந்தியாவில் வலுவான அரசமைப்பு அமைந்துள்ளமைக்கான காரணமாகும். ஆளும் கட்சியானது வலுவற்றதாக இருந்தால் திட்டங்களை நிறைவேற்று வதில் பல இடையூறுகளும் ஏற்படக்கூடும். எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பின்றி சட்டங்களை இயற்றவோ அல்லது திருத்தவோ முடியாது. அரசு தன்னுடைய விருப்பப்படி கொள்கைகளை நிறை வேற்ற இயலாது. நல்ல கொள்கைகளை அரசு பின்பற்றினாலும் கூட, எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு எப்போதுமே அமைந்திருக்கும். எனவே ஆளும் கட்சி பலம் மிக்கதாக இருக்க வேண்டும். ஆளும் கட்சி வலுவானதாக இருந்தால் அது தன் விருப்பப்படி செயல்பட வேண்டுமென்பது கூடாது. தீவிரமான கொள்கைகளை விரை வாகப் பின்பற்றி சமதர்மச் சமுதாயத்தை அமைக்க நல்ல அரசியல் அமைப்பு தேவைப்படுகின்றது. உறுதியற்ற அரசால் மக்களுக்குப் பல நன்மைகளையும் அளிக்க முடியாது. வலுவான அரசமைப்பு தீவிரமாகவும், திறமையாகவும், நேர்மையாகவும் செயல்படு வதிலேயே திட்டங்களின் வெற்றி அடங்கியுள்ளது.

(Planning Commission)

5. திறமையான திட்டக்குழு

பொருளாதார முன்னேற்றத்திற்குத் திட்டமிடத் திறமையான திட்டக்குழு அமைக்கப்படவேண்டும். தேசிய அளவில் இக்குழு அமைந்திருத்தல் அவசியமானது. மாநிலங்களின் ஒத்துழைப்பும் திட்டக்குழுவிற்கு இருக்கவேண்டும். திட்டக்குழு என்பது நிரந்தர மான அமைப்பாகும். திட்டக்குழு உறுப்பினர்கள் பொதுவாக நீண்டகாலத்திற்கு நியமிக்கப்படுகிறார்கள். பொருளாதார முன்னேற்

றத்தின் போக்கு திட்டக்குழுவின் பரிந்துரைகளுக்கு ஏற்பவே அமையும். திட்டங்களின் வெற்றி தோல்விகளுக்கு ஓரளவு காரணமாக இருப்பதும் திட்டக்குழுவே ஆகும். அரசு திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கான ஆலோசனைகளை திட்டக்குழு அளிக்கின்றது. பெரும்பாலும் திட்டக்குழுவின் ஆலோசனைகளின் படியே திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. நம் நாட்டின் வருங் கால வளர்ச்சி திட்டக்குழுவின் பரிந்துரைகளைச் சார்ந்தே அமையும். இந்தியாவின் திட்டக்குழு திறமையாகவே செயல்பட்டு வருகின்றது. திட்டக்குழு சிறப்பான திட்டங்களை மாறுபடுகின்ற பொருளாதாரச் சூழ்நிலைகளுக்கு ஏற்பத் தீட்டி வருகின்றது. ஆனால் திட்டக்குழு நிர்ணயிக்கின்ற குறியிலக்குகளை அடைவது கடினமானதாக இருக் கின்றது. இந்தியாவில் திட்டங்களை வரைவதில் சில குறைபாடு களும், திட்டங்களை நிறைவேற்றுவதில் சில குறைபாடுகளும் அமைந்துள்ளன. இக்குறைபாடுகளை நீக்க இந்திய அரசும், திட்டக்குழுவும் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

6. சிறப்பாக இணைக்கப்பெற்ற திட்டத்தை உருவாக்குதல்

திட்டமிட்டப் பொருளாதார வளர்ச்சியில் பலவிதமான பணிகள் சிறப்பாக நிறைவேற்றப்படுதல் அவசியமானதாகும். திட்டமானது சிறப்பாகத் தீட்டப்படவேண்டும்; அதை அரசு அங்கீகரிக்கவேண்டும். அத்திட்டம் சிறப்பாக நிறைவேற்றப் படுவதோடு, மேற்பார்வையிடப்படுவதும் இன்றியமையாதது. வெவ்வேறு அமைப்புகள் இப்பணிகளை நிறைவேற்றுகின்றன. திட்டத்தைத் தீட்டுவது திட்டக்குழுவால் செய்யப்படுகின்றது. திட்டக்குழுவின் உறுப்பினர்களும், திறமையான பிற ஆய்வாளர் களும் திட்டத்தை வரைகின்றார்கள். அத்திட்டத்தை அங்கீகரிப்பது பாராளுமன்றத்தின் பணியாகின்றது. திட்டத்தை நிறைவேற்றுவது அமைச்சகங்களும், நிர்வாக அமைப்புக்களும் ஆகும். திட்டத்தை மேற்பார்வையிடுவதும், மதிப்பீடு செய்வதும் திட்டக்குழுவின் ஒரு பிரிவினரால் செய்யப்படுகின்றது. திட்டக்குழு, அரசமைப்பு, நிர்வாக அமைப்பு ஆகியவற்றினிடையே நெருங்கிய இணைப்பு அமைந்திருக்கவேண்டும். இவற்றினிடையே உள்ள தொடர்பான திட்டமுறையே வெற்றிக்கு வகைசெய்யும். திட்டக்குழு திறமை யான வகையில் திட்டங்களைத் தீட்டும்போது அரசு அத்திட்டங்களை விரைவாக அங்கீகரிக்கவேண்டும். அத்திட்டங்களை நிறைவேற்று வதற்கான நிதி வசதிகளையும் திரட்டவேண்டும். அரசின் நிர்வாக அமைப்புக்களும், அமைச்சகங்களும் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்ற உதவ வேண்டும். சிறப்பாக இணைக்கப்பெற்ற திட்டத்தை உருவாக்குவதின்மூலமே விரைவான வளர்ச்சியைப் பெறலாம்.

7. சரியான விலைக்கொள்கை

வளர்ச்சியடைந்துவரும் நாடுகள் நிதிப் பற்றுக்குறை நிலையால் பல இன்னல்களையும் ஏற்கின்றன. இந்நாடுகளில் மக்களில் பெரும்பாலோர் மிகவும் குறைவான வருவாயைப் பெறுபவர்களாகவே இருக்கின்றனர். எனவே அரசு புதிய வரிகளை விதிக்க முடிவதில்லை; பழைய வரிகளின் அளவை உயர்த்துவதும் கடினமானதாகவே அமைகின்றது. உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன்களும் தேவையான அளவிற்குக் கிடைப்பதில்லை. எனவே பற்றுக்குறை நிதியாக்கமானது பின்பற்றப்படுகின்றது. உருவாக்கப் பட்ட பணப்புழக்கம் அதிகரிக்கும்போது, உற்பத்தியானது அதிகமாகப் பெருகுவதில்லை. பணத்தின் அளிப்பு அதிகரிப்பதோடு, பணப்புழக்க வேகமும் அதிகரிக்கின்றது. உற்பத்தியின் அளவு குறுகிய காலத்தில் பெருகாத காரணத்தால் பணவீக்க நிலை தோன்றுகின்றது. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதும் அரசிற்குக் கடினமானதாக இருக்கின்றது. அரசின் நிதிக் கொள்கையால் மக்களிடம் உள்ள பணத்தின் அளவு கூடுகின்றது. மொத்த தேசிய உற்பத்தி பெருகாத காரணத்தால் விலைகள் பல மடங்கு உயர்கின்றன. பணவீக்கம் தவழும் நிலையில் தொடங்கி தரவும் பணவீக்கமாக மாறுகின்றது. அரசின் சரியான விலைக் கொள்கையின் மூலம் பொருளாதாரத்தின் எல்லாத்துறைகளிலும் விரைவான வளர்ச்சியைப் பெறலாம். பணக்கொள்கை, நிதிக் கொள்கை ஆகியவற்றின் மூலமும் அரசு பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தலாம். அரசு சில அவசியப் பண்டங்களின் விலைகளின்மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கவேண்டும். முற்றுரிமை நிலைகளை நீக்க அரசு தீவிர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். உணவுப் பொருட்களை நியாயமான விலையில் அரசு கொள்முதல் செய்து சேமித்து இருப்பாக வைத்திருக்கலாம். விலை உயர்வு ஏற்படும்போது அரசு இவ்விருப்பை வெளிப்படுத்தி விற்பனை செய்து விலையைக் குறைக்கலாம். அரசின் விலைக்கொள்கை நுகர்வோருடைய நன்மையைக் காப்பது போலவே, உற்பத்தியாளருடைய ஊக்கத்தையும் காப்பது அவசியம். முதலீட்டின் அளவை உயர்த்துவதாக அரசின் விலைக்கொள்கை அமையவேண்டும். விலைகளின் நிலைகளோ ஒரு நாட்டில் உற்பத்தி, நுகர்வு, பங்கீடு ஆகியவற்றின் அளவுகளை நிர்ணயிக்கின்றன. அவசியம் குறைந்த ஆடம்பரப் பொருட்களின்மீது அரசு அதிக வரிகளை விதிக்கவேண்டும். இதனால் அவற்றின் விலைகள் அதிகரித்து நுகர்வு கட்டுப்படுத்தப்படுகின்றது. ஆனால் இத்தொழில்களின் வளர்ச்சி பெரிதும் பாதிக்கப் படாத வகையிலும் அரசின் விலைக்கொள்கை அமையவேண்டும். வேளாண்மைப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்துவது நுகர்வோரின் நலனைக் காக்கின்றது. இதனால் தொழிற் பொருட்களின்

உற்பத்திச் செலவுகளும் குறைவடைகின்றன. அரசின் விலைக் கொள்கை வேளாண்மை, தொழில் ஆகிய இரு துறைகளிலும் சிறப்பான வளர்ச்சியை ஏற்படுத்தவேண்டும். வளர்ச்சியடைந்து வரும் சமதர்மப் பொருளாதாரங்களில் அரசின் சரியான விலைக் கொள்கை திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்ற உதவுகின்றது.

8. நாட்டின் வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்துதல்

ஒரு நாட்டின் வளங்கள் முற்றிலுமாகப் பயன்படுத்தப்படும் போது பல நன்மைகளும் தோன்றுகின்றன. இந்தியாவில் பல வகைப்பட்ட முன்னேற்றத்தைப் பெறுவதற்கான வளங்களும் உள்ளன. மலைவளம், நிலவளம், நீர்வளம், வனவளம், கனிவளம், மக்கள் வளம் போன்றவை அதிக அளவில் அமைந்திருக்கின்றன. ஆனால் இவ்வளங்கள் சிறப்பாகப் பயன்படுத்தப்படாமையே இந்தியப் பொருளாதாரம் குறைந்த வேகத்தில் வளர்ச்சியடைந்து வருகின்றமைக்கான காரணமாகும். மூலதனப் பற்றுக்குறையே இவ்வளங்கள் சிறப்பாக உற்பத்திக்குப் பயன்படுத்தப் படாமைக்கான காரணமாகின்றது. இக்குறையைத் தீர்க்க அரசு பல வழிகளிலும் முன்னேற்றத்திற்கான மூலதனத்தைத் திரட்ட முயலவேண்டும். அரசின் வரி வருவாய் பெருக்கப்படவேண்டும். அதிக வருவாய் பெறுபவர்கள்மீது வளர்வீதத்தில் வரிகள் விதிக்கப்படவேண்டும். அரசின் வரிவிதிப்பு முறை வருவாய் குறைந்தவர்களைப் பெரிதும் பாதிக்காத வகையில் அமைய வேண்டும். அதிக வருவாயின்மீதும், அதிகளவு அளவுச் செல்வங் களின் மீதும் உயர்ந்த அளவு வரிகள் விதிக்கப்படலாம். வருவாயிலும், செல்வப்பங்கீட்டிலும் உள்ள ஏற்றத்தாழ்வுகளை இதன் மூலம் குறைக்கலாம். மக்கள் அதிக அளவு வரிகளையும் செலுத்த முன்வரவேண்டும். அரசின் இவ்வரி வருவாய் திரும்பவும் மக்களின் நலனிற்காகவே செலவிடப்படும் என்பது உணரத்தக்கது. இந்தியாவில் பயன்படுத்தப்பெறாத இயற்கை வளங்கள் இருப்பது போலவே, உற்பத்திக் காரணிகளில் முக்கியமானதாகிய உழைப்பும் சிறப்பாகப் பயன்படுத்தப்படுவதில்லை. இதைத் தவிர்க்க வேலை யின்மையும், மறைந்துள்ள வேலையின்மையும் நீக்கப்படுதல் இன்றியமையாதது. வேலையின்மையைத் தவிர்க்க அதிக முதலீடுகள் செய்யப்படுதல் வேண்டும். பின்தங்கிய இந்தியா போன்ற நாடுகளில் தனியார்துறை முதலீடுகள் குறைவாக இருப்பதால், அரசே திட்டங்களின் மூலம் அதிக அளவு முதலீடு களைச் செய்வது அவசியமாகின்றது. அதிக முதலீடுகளைச் செய்ய அரசிற்கு அதிக நிதி வசதிகள் தேவைப்படுகின்றன. அரசு வரி வருவாயை உயர்த்த நடவடிக்கைகளை எடுப்பதோடு, மக்க

ளிடையே சேமிக்கும் திறன் பெருகுவதற்கான வழிமுறைகளையும் பின்பற்றவேண்டும். சேமிக்கும் விருப்பத்தையும் அவர்கள் பெறுமாறு செய்யவேண்டும். சிறு சேமிப்புத் திட்டங்கள் பல தோற்றுவிக்கப்படவேண்டும். 'சிறுதுளி பெருவெள்ளம்' என்பது போல சிறு சேமிப்புக்களின் மூலம் அதிக அளவு மூலதனத்தைத் திரட்டமுடியும். ஏனெனில் இந்தியா குறைந்த வருவாயைப் பெறுபவர்களை மிகுதியாகக் கொண்ட நாடு. உள்நாட்டுக் கடன், வெளிநாட்டுக்கடன் போன்றவையும் நாட்டின் வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்த உதவுகின்றன. காகிதப் பணத்தை அச்சிட்டு வெளியிடுவதின் மூலமும் முதலீட்டின் அளவை உயர்த்தலாம். இதனால் வேலை வாய்ப்புகள் பெருகும்; பயன்படுத்தப்படாத வளங்கள் பயன்படுத்தப்படும். திட்டங்களின் வெற்றி நாட்டின் வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்துவதிலும் அடங்கியுள்ளது.

9. இணக்கமான திட்டமுறை

திட்டங்கள் இணக்க முடையவைகளாக இருத்தல்வேண்டும். மாறுபடுகின்ற பொருளாதாரச் சூழ்நிலைகளுக்கேற்ப திட்டங்கள் மாற்றியமைக்கத் தக்கவைகளாக இருக்கவேண்டும். நெகிழ்வுத் தன்மை கொண்ட திட்டங்களே நாட்டுக்கு நன்மை பயப்பவைகளாகும். இந்தியாவின் இரண்டாவது திட்டத்தில் தொழில் முன்னேற்றத்திற்கு முதல் முக்கியத்துவம் தரப்பட்டது. இதனால் வேளாண்மை வளர்ச்சி பாதிக்கப்பட்டு, பொருளாதார முன்னேற்றமும் தடைப்பட்டது. சிறந்த வேளாண்மை வளர்ச்சியின் அடிப்படையிலேயே பொருளாதார முன்னேற்றத்தைப் பெறலாம் என்பது இத் திட்டக் காலத்தில் அறியப்பட்டது. எனவே மூன்றாவது திட்டத்தில் திரும்பவும் வேளாண்மை வளர்ச்சிக்கே முதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. கிடைக்கக்கூடிய நிதி வசதிகளுக்கேற்ப முதலீடுகள் செய்யப்படவேண்டும். முதலீடுகளின் அளவுகள் எளிதில் மாற்றத்தக்கவைகளாக இருத்தல் இன்றியமையாதது. இணக்கமான திட்டமுறை வெற்றிக்கு வழிவகுக்கும்.

10. திட்டத்தை முறையாக நிறைவேற்றுதல்

திட்டத்தை நிறைவேற்ற பலவித அமைப்பு முறைகள் செயல்படுகின்றன. திட்டத்தைத் தீட்டி, அதற்கான மூலதனத்தைத் திரட்டுவதைவிட அதைச் சிறப்பாக நிறைவேற்றுவதே கடினமானதாக உள்ளது. திட்டத்தைத் திறமையாகவும், நேர்மையாகவும் நிறைவேற்றுவது அவசியமாகும். திட்டத்தின் நிலைகள் அடிக்கடி மேற்பார்வையிடப்பட வேண்டும்; கணக்குகள் சரிபார்க்கப்பட வேண்டும். திட்டத்தின் முன்னேற்றம் எந்த

அளவிற்கு இருக்கின்றது என்பதை ஆண்டுதோறும் ஆராய வேண்டியது அவசியமாகும். திட்ட முயற்சிகளின் வெற்றி தோல்விகளை இதன் மூலம் அறியலாம். திட்ட மாற்றங்களைச் செய்வதும் அப்பொழுதுதான் எளிதானதாக அமையும். இந்தியாவின் பல திட்டங்களும் நிறைவேற்றப்பட்டபோது திட்டங்களின் உண்மைச் செலவுகள் திட்டமிடப்பட்ட செலவுகளைக் காட்டிலும் அதிக அளவிலேயே அமைந்திருந்தன. இதற்குக் காரணம் திட்டங்கள் முறையாக நிறைவேற்றப்படாமையேயாகும். திட்டங்களின்மூலம் முதலீடு செய்யப்பட்ட பல தொழில்கள் குறிப்பிட்டக் காலத்திற்குள் நிறைவேற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

திட்டங்களின் உண்மையான வெற்றி நேர்மையாகத் திட்டங்களை நிறைவேற்றுவதிலேயே அடங்கியிருக்கின்றது. திட்டங்களை நிறைவேற்றுபவர்களின் திறமையான பணியும் இன்றியமையாததாகின்றது. இந்தியாவில் திட்டங்கள் திறமையாகவும், நேர்மையாகவும் நிறைவேற்றப்படவில்லை என்றே கூறவேண்டியுள்ளது. திறமையானதும், நேர்மையானதுமாகிய நிர்வாக அமைப்பின் மூலம் எத்திட்டத்தையும் எளிதில் வெற்றி கொள்ளலாம். இந்தியாவில் திட்டங்களை எவ்வாறு நிறைவேற்றுவது என்பதை முடிவு செய்வதிலேயே நீண்டகாலம் செலவிடப்படுகின்றது. குறித்தகாலத்தில் நிறைவேற்றப்படாமையே திட்டங்களின் தோல்விக்கு ஒரு காரணமாகின்றது. திட்டகாலத் தொழில்கள் பலவற்றையும் இதற்கு உதாரணமாகக் கூறலாம். இந்தியாவில் சிறிய திட்டங்கள்கூட முறையாகக் குறிப்பிட்டக் காலத்திற்குள் நிறைவேற்றப்படுவதில்லை.

11. பொதுமக்களின் ஒத்துழைப்பு

மக்களின் ஒத்துழைப்பும், தியாக மனப்பான்மையும் திட்டங்கள் வெற்றியடைய உதவுகின்றன. பொருளாதார முன்னேற்ற நிலைகளில் பொதுமக்கள் பல இன்னல்களை ஏற்கவேண்டி வரும். வருவாய் அதிகரிக்கும்போது, அதிகரிக்கின்ற வருவாய் நுகர்விற்குப் பயன்படுத்தப்படாமல் உற்பத்திப் பணிகளுக்காக முதலீடு செய்யப்படுதல் வேண்டும். நாளை பெறப்போகும் அதிக அளவு நன்மைகளுக்காக, இன்று பெறப்படும் நன்மைகளை ஓரளவு குறைத்துக் கொள்ள வேண்டும். இன்றைய சேமிப்பு நாளைய உற்பத்திக்கு உதவும். திட்டக் காலங்களில் அரசு புதிய வரிகளை விதிக்கும் போதும், பழைய வரிகளின் வீதங்களை உயர்த்தும்போதும் அவற்றை மனக்குறையின்றி அளிக்க மக்கள் முன்வரவேண்டும். சிறு சேமிப்புகளில் அவர்கள் ஈடுபடுவதும் அவசியமாகும். உழைப்

பாளர்கள் உண்மையான உழைப்பைத் தருதல்வேண்டும். பண வீக்கநிலை தோன்றும்போது அதைக் கட்டுப்படுத்தவும் மக்கள் பல வகைகளில் உதவலாம். கள்ளச்சந்தை விற்பனை, ஊக வாணிபம் போன்றவைகளை மக்களும் ஓரளவு தடை செய்யலாம். ஆனால் திட்ட உணர்வைப் பெற்ற மக்கட்தொகை இந்தியாவில் குறைவானதேயாகும். இந்தியாவில் பல கிராமங்களில் திட்டங்கள் நிறைவேற்றப் படுகின்றன என்பதை அறியாதவர்களும் இருக்கின்றார்கள். பொதுவாக, மக்களின் ஒத்துழைப்பு திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்ற உதவும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள காரணிகள் திட்டங்கள் சரிவரச் செயல்பட உதவுகின்றன எனலாம். திட்டங்கள் வெற்றியடைய இக்காரணிகள் நன்கு ஆராயப்பட வேண்டும்.

இந்தியத் திட்டங்களைப் பற்றிய மதிப்பீடு

முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டக்காலத்திலும் பொருளாதார முன்னேற்றம் திட்டமிட்டப்படி அமையவில்லை. சேமிப்பு, முதலீட்டு வீதங்கள் எதிர்பார்த்த அளவிற்கு உயரவில்லை. முன்னேற்றத்திற்குத் தேவையான சமுதாய மாற்றங்களும் தோன்றவில்லை. விரைவான வளர்ச்சி வீதத்தைப் பெறுவதற்குச் சாதகமான பொருளாதாரச் சூழ்நிலைகளும் அப்போது அமைந்திருக்கவில்லை. உணவுச் சிக்கல், வேலையின்மைச் சிக்கல் போன்றவை தீர்க்கப்படவில்லை. வருவாயிலும், செல்வப் பங்கீட்டிலும் உள்ள ஏற்றத் தாழ்வுகள் குறைக்கப்படவில்லை. திட்டங்களின் குறைந்த அளவு வெற்றி மக்களைத் திட்டங்களின்பால் அக்கறை கொண்டவர்களாக செய்யவில்லை.

திட்டங்கள் வெற்றியைப் பெற்றுள்ளன என்பது ஒரு சாராருடைய கருத்தாக இருக்கின்றது. திட்டக்காலத்தில் நாடு தொழில் மயமாக்கப்பட்டது. அடிப்படைத் தொழில்களும், பெரிய தொழில்களும் அரசால் நிறுவப்பெற்றன. விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுவதற்கான தொழில் அடிப்படைத் திட்டக்காலத்தில் அமைக்கப்பட்டு விட்டது. வேளாண்மையிலும் குறிப்பிடத்தக்க அளவிற்கு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. மக்கள் அதிக வருவாய் பெறுகின்றனர். வேலை வாய்ப்புகள் பெருகியுள்ளன. மக்களின் வாழ்க்கைத் தரத்திலும் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

திட்டங்களின் மூலம் எவ்வித நன்மைகளும் ஏற்படவில்லை என்று கூறுவது தவறானதாகும். திட்டங்களினால் பொருளாதாரத்தில் பல குறைபாடுகளே ஏற்பட்டுள்ளன என்று கருதுவதும்

தவறுடையதேயாகும். திட்டங்கள் நிறைவேற்றப்படாவிட்டால், தற்பொழுது அடைந்துள்ள முன்னேற்ற நிலையைப் பெற்றிருக்க முடியுமா என்பதை ஆராய்வது அவசியமானது. திட்டங்களைத் தொடங்குவதற்கு முன் இந்தியாவில் வளர்ச்சிக்குன்றியத் தேக்கப் பொருளாதாரம் அமைந்திருந்தது என்பதையும் நாம் உணர வேண்டும். திட்டங்களால் எவ்வித நன்மைகளும் தோன்றவில்லை என்பதைவிட, திட்டங்கள் ஓரளவு நன்மைகளை அளித்துள்ளன என்று கூறலாம்.

எனினும், இந்தியாவில் திட்டமிட்டப் பொருளாதார வளர்ச்சி தோல்வியையே அடைந்துள்ளது என்று கூற வேண்டியுள்ளது. முன்னேற்றத்திற்கான திட்ட முறைகளை திட்டக்குழு சரியாகத் தெரிந்தெடுத்தது. திட்ட நிர்வாகமும், நிறைவேற்றிய முறையும் தவறுடையவைகளாக இருந்தமையே திட்டங்களின் தோல்விக்குக் காரணமாகும். திறமை குறைந்த நிர்வாகமும், திட்டங்களை நிறை வேற்றியதில் அமைந்திருந்த குறைபாடுகளும் விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுவதற்குத் தடையாக இருந்தன. இதனால் வளர்ச்சியைப் பெறுவதற்குத் திட்டங்களே தேவையில்லை என்றும் கூற இயலாது. இந்தியாவில் திட்டங்கள் நிறைவேற்றப்படாவிட்டால், பொருளாதார முன்னேற்றத்தைப் பெற முடியாது. திட்டங்களைச் சீரமைத்துச் சிறப்பாகவும், கவனமாகவும் நிறைவேற்றுவது இன்றியமையாதது. திட்டங்களை நிறைவேற்றும் முறைகளில் மாற்றங்களைச் செய்யவேண்டும்.

இந்தியத் திட்டங்களின் தோல்விகள் பலவிதமான படிப் பினைகளை உணர்த்தியுள்ளன. இனி வரும் திட்டக் காலங்களில் வெற்றியைப்பெற கீழ்க்கண்டக் காரணிகள் பெரிதும் உதவுபவை களாகும். இக்காரணிகளை அரசு நன்கு ஆராய்ந்து திட்டங்களை நிறைவேற்றுவது நன்மை தருவதாகும்.

(1) திட்டங்களில் வேளாண்மை, தொழில் ஆகிய இரு துறை களின் வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் அளிக்கவேண்டும். குறிப் பிட்ட அளவிற்குச் 'சரிசம வளர்ச்சிக் கொள்கையை' (Balanced Growth Principle) இவ்விரு துறைகளின் முன்னேற்றத்திலும் பின் பற்றலாம். பொருளாதாரத்தின் முக்கியத் துறைகளாக இருப்பவை வேளாண்மைத் துறையும், தொழில் துறையுமேயாகும். இவ்விரு துறைகளும் சமமாக வளர்ந்தால்தான், ஒன்றின் வளர்ச்சி மற்றொன்றின் முன்னேற்றத்திற்கு உதவும். இவ்விரண்டு துறை களிலும் ஏதாவது ஒரு துறை பின்தங்கிய நிலையில் இருந்தாலும், பொருளாதார முன்னேற்றம் பாதிக்கப்படுகின்றது. விரைவான

பொருளாதார முன்னேற்றத்திற்கு நாட்டைத் தொழில் மயமாக்குவது இன்றியமையாதது. தொழில் முன்னேற்றத்தோடு, வேளாண்மை வளர்ச்சியையும் காப்பது அவசியமானது. ஏனெனில் தொழில் முன்னேற்றம் வேளாண்மையைச் சார்ந்து அமைந்திருக் கின்றது. இவ்விரு துறைகளும் ஒருங்கே வளர்க்கப்பட்டால், வேலை வாய்ப்புகள் பெருகும்; தேசிய உற்பத்தியின் அளவு அதிகரிக்கும்; தலா வருவாய் உயர்வால் சேமிப்பு, முதலீடு ஆகிய வற்றின் அளவுகளும் கூடும். பொருளாதாரத்தின் எல்லா துறை களும் வளர வேளாண்மை, தொழில் துறை ஆகிய இரண்டும் உதவு கின்றன. இத் துறைகளின் வளர்ச்சியால் பொருளாதார நடவடிக்கைகள் விரைவு படுத்தப்படுகின்றன.

(2) பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்கள் சிறப் பாகத் தெரிந்தெடுக்கப்பட வேண்டும். திட்டங்களின் நோக்கங் களும், அந்நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான வசதிகளும் நன்கு விளக்கப்பட வேண்டும். திட்டங்களின் குறியிலக்குகளும் நோக்கங்களும் நிறைவேற்றத் தக்கவைகளாக இருக்கவேண்டும். குறியிலக்குகள், வசதிகள் ஆகியவற்றின் தேவை, அளிப்புப் பகுதிகள் நன்கு ஆராயப்பட வேண்டும். வசதிகளுக்கேற்ப திட்டங்களைக் கைக்கொள்ள வேண்டும்! அல்லது நோக்கங்களுக் கேற்ப வசதிகளைப் பெருக்கிக்கொள்ள வேண்டும். திட்ட முறை தெரிந்தெடுக்கப்படும்போது இவையாவும் நன்கு அறியப்படுதல் அவசியமானதாகும்.

(3) மிகவும் தீவிரத் தன்மை கொண்டுள்ள சிக்கல்களைத் தீர்க்கும் திட்டங்கள் விரைவாக நிறைவேற்றப்பட வேண்டும். இந்தியாவில் உணவுப் பற்றுக்குறை அமைந்துள்ளது. எனவே ஒரு ஏக்கருக்கான உற்பத்தியின் அளவையும், தனி ஒருவருக்கான உற்பத்தியின் அளவையும் கூட்ட அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதற்கு நீர்ப்பாசன வசதிகள், மின்சார வசதிகள், கடன் வசதிகள், விற்பனை வசதிகள் போன்றவை ஏற்படுத்தப்பட வேண்டும். அதிக விளைச்சலைத் தரக்கூடிய விதைகளை விவசாயிகள் பயன்படுத்துமாறு செய்யவேண்டும். பசுமை உரங்கள், இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், முன்னேற்றமடைந்த வேளாண்மைச் சாகுபடிக் கருவிகள் ஆகியவைற்றையும் விவசாயிகள் பெறுமாறு செய்யவேண்டும். பிற நாடுகளோடு ஒப்பிடும்போடு, இந்தியாவில் ஒரு ஏக்கருக்கான உற்பத்தி குறை வாக இருப்பதை உணரலாம். உற்பத்தியைப் பெருக்குவதற்கான வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன. அரசு இவற்றிற்காகத் திட்ட மிடுவது இன்றியமையாததாகும். இதைப்போன்றே, வேலை

யின்மைச் சிக்கலுக்குத் தீர்வு காணவும் அரசு திட்டங்களை வகுக்க வேண்டும். வேளாண்மையில் அமைந்துள்ள வேலையின்மையும், மறைந்துள்ள வேலையின்மையும் நீக்கப்பட வேண்டும். தொழில் துறையில் வேலையின்மையும், படித்தவர்களிடையே வேலை யின்மையும் அமைந்துள்ளன. இதற்குத் தீர்வுகான பல பொதுப் பணித் துறைகள் வளர்க்கப்பட வேண்டும்; பல பெரிய தொழில் களும், சிறிய தொழில்களும் தோற்றுவிக்கப்பட வேண்டும். முதலீட்டின் அளவைக் கூட்டுவதின் மூலமே வேலையின்மையைக் குறைக்கலாம். உடனடியாகத் தீர்க்க வேண்டிய, அவசரத் தன்மை கொண்ட சிக்கல்களைக் களைய அரசு திட்டங்களை நிறை வேற்ற வேண்டும்.

(4) பொருளாதாரத்தில் பணவீக்க நிலை தோன்றுதவாறு திட்டங்களை அரசு மேற்கொள்ளவேண்டும். திட்டங்களுக்கான நிதியை அரசு பல வழிகளிலும் திரட்டுகின்றது. திட்டங்களை நிறைவேற்ற பற்றுக்குறை நிதியாக்கமும் பின்பற்றப்படுகின்றது. குறிப்பிட்ட அளவிற்கு மேல் பற்றுக்குறை நிதியாக்கத்தைப் பின்பற்றுவது பணவீக்க நிலையைத் தோற்றுவித்துவிடும். இந்தியாவின் முதல் திட்டத்தில் பற்றுக்குறை நிதியாக்கம் குறைந்த அளவே கைக்கொள்ளப்பட்டது; உற்பத்தியும் கணிசமான அளவிற்கு உயர்வடைந்திருந்தது. எனவே முதல் திட்டக் காலத்தில் பணவீக்க நிலை தோன்றவில்லை. இரண்டாவது திட்டக் காலத்தில் அதிக அளவு பற்றுக்குறை நிதியாக்கம் பின்பற்றப் பட்டது; ஆனால் உற்பத்தியின் அளவானது சிறப்பாக உயரவில்லை. உற்பத்தி குறைந்த அளவிலும், பணப்புழக்கம் அதிக அளவிலும் இருந்த காரணத்தால் பணவீக்க நிலை தோன்றியது. மூன்றாவது திட்டக்காலத்திலும் இந்நிலையானது தொடர்ந்து நீடித்தது. எனவே பற்றுக்குறை நிதியின் அளவைக் குறைப்பது அவசியமென உணரப்பட்டுள்ளது. இனிவரும் திட்டக் காலங்களில் அரசு பண வீக்கநிலை ஏற்படாத வகையில் நிதியைத் திரட்டவேண்டும்.

(5) உற்பத்தியை நேரடியாகத் தரக்கூடிய துறைகளில் அரசு அதிக முதலீட்டைச் செய்யவேண்டும். உற்பத்திக்கு உதவாத செலவினங்களை அரசு குறைக்கவேண்டும். பொருளாதார முன்னேற்றத்தின் முதற் சில நிலைகளில் முதலீடுகள் உற்பத்திப் பணிகளுக்காகவே செய்யப்படவேண்டும். உற்பத்திப் பெருகி பொருளாதாரம் முன்னேற்றமடைந்த பிறகு, உற்பத்திக்கு உதவாத செலவுகளை அரசு செய்யலாம். வருவாய், சேமிப்பு, முதலீடு, வேலைவாய்ப்பு ஆகியவை பெருக அரசு உற்பத்தித்துறைகளுக்கே அதிக மூலதனத்தை ஒதுக்கவேண்டும்.

(6) திட்டக்காலத்தில் சிறப்பானதொரு விலைக் கொள்கையை அரசு பின்பற்றுவது இன்றியமையாததாகும். விலை மாற்றங்களே பொருளாதார நடவடிக்கைகளில் மாற்றங்களைத் தோற்றுவிக்கின்றன. விலைகளில் அதிக ஏற்றத்தாழ்வுகள் ஏற்படாதவாறு அரசு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். சில அவசியப் பொருட்களின் விலைகளை அரசே நிர்ணயிக்கலாம். பொதுத்துறையில் உற்பத்திச் செய்யப்படுகின்ற பொருட்களின் விலைகளும் சிறப்பாக நிர்ணயம் செய்யப்படவேண்டும். அரசின் விலைக் கொள்கையின் மூலம் நுகர்வோருடைய நலன் காக்கப்படவேண்டும்; உற்பத்தியாளர்களுக்கு உற்பத்தியைப் பெருக்க ஊக்கமளிப்பதாகவும், அரசின் விலைக் கொள்கை அமையவேண்டும்.

(7) திட்டக்குழுவும், அரசும் திட்டங்களைத் தீட்டுவதைவிட, திட்டங்களைச் சிறப்பாக நிறைவேற்றுவதே இன்றியமையாதது என்பதை உணரவேண்டும். இந்தியாவில் திட்டங்கள் சரியாக நிறைவேற்றப்படாமையே தோல்விக்கான முக்கியக் காரணமாகும். திட்டக்குழுவால் திட்டங்கள் சிறப்பாகவே வரையப்படுகின்றன. திட்டங்களைச் சிறப்பாக நிறைவேற்றுவதின் மூலமே வெற்றியைக் காணமுடியும். திட்டங்களைச் செயல்படுத்தும் அரசின் அமைப்புகள் திறமையாகவும், நேர்மையாகவும், விரைவாகவும் செயல்படவேண்டும். சிறப்பான வகையில் திட்டங்களைத் தீட்டி, சரியான வழியில் அவற்றை நிறைவேற்றுவதின் மூலமே விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெறலாம்.

(8) திட்டங்கள் வெற்றியடைய, பொது நிர்வாகம் திறமையானதாகவும், நேர்மையானதாகவும் இருக்கவேண்டும். பொதுத்துறை நிறுவனங்களில் அமைந்திருக்கக்கூடிய நேர்மை குறைந்த நிலை நீக்கப்படவேண்டும். பொது நிர்வாக ஊழியர்கள் ஊக்கத்தோடு பணிகளில் ஈடுபடுவதில்லை. சிறப்பான பணிகளைச் செய்பவர்களுக்கு அரசு ஊக்கங்களை அளிக்கலாம். உழைப்பிற்கேற்ற ஊதியம் வழங்குவது நேர்மையான, திறமையான பொது நிர்வாகத்தைத் தரும். தனியார்துறை சிறப்பாக முன்னேற்றமடைகின்றமைக்கு திறமையான நிர்வாகமே காரணமாகின்றது. ஓரளவு நேர்மையான நிர்வாகமும் தனியார்துறையில் அமைந்துள்ளது. பொதுத்துறையிலும் இலாபத்தில் ஒரு பகுதி 'வெகுமதியாக' (Bonus) உழைப்பாளர்களுக்கும், ஊழியர்களுக்கும் அளிக்கப்படலாம். பொதுத்துறை நிறுவனங்கள் முன்னேற இது சிறப்பானதொரு வழியாகும்.

(9) ஒவ்வொரு ஆண்டும் திட்ட மதிப்பீடுகள் செய்யப்படவேண்டும். திட்டங்கள் எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றன

என்பதைக் கண்காணிப்பதும் அவசியமானது. இதன் மூலமே திட்டங்களில் உள்ள நிறை குறைகளைத் தெரிந்துகொள்ளலாம். இம்முறை ஒரு திட்டத்தில் ஏற்படுகின்ற தவறுகளைப் பின்வரும் திட்டங்களில் தவிர்க்க உதவுகின்றது. நிறைவேற்றப்படுகின்ற, நிறைவேற்றப்பட்ட திட்டங்களை மதிப்பீடு செய்வது இதனால் அவசியமாகின்றது.

(10) முன்னேற்றத்தைப் பெறும் வகையில் பொதுத்துறை நிறுவனங்கள் மாற்றியமைக்கப்படவேண்டும். பொதுத்துறையில் அமைந்திருக்கக்கூடிய பல குறைபாடுகளும் நீக்கப்படவேண்டும். அரசியல்வாதிகள் குறுக்கீடு பொதுத்துறை நிறுவனங்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளது. பொது நிர்வாக ஊழியர்கள் திறமை குறைந்தவர்களாக, நேர்மையற்றவர்களாக இருக்கின்றனர். இக் குறைகளை நீக்க அரசு தீவிர நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். திட்டங்கள் வெற்றியடைய பொதுத்துறை நிறுவனங்கள் சிறப்பான முன்னேற்றத்தைப் பெறவேண்டும்.

(11) திட்டங்களை நிறைவேற்றுவதில் பொதுமக்களையும் ஈடுபடுத்த வேண்டும். திட்டங்கள் வெற்றிபெற பொதுமக்களின் ஒத்துழைப்பு இன்றியமையாதது. சமுதாய விழிப்புணர்ச்சியைத் தோற்றுவிப்பதின் மூலமே திட்டங்களை நிறைவேற்றுவதில் மக்களையும் ஈடுபடுத்த முடியும். அரசு தீட்டுகின்ற, நிறைவேற்றுகின்ற திட்டமானது மக்கள் திட்டமாகவும், மக்களுக்கான திட்டமாகவும், மக்களால் நிறைவேற்றப்படுகின்ற திட்டமாகவும் இருக்க வேண்டும். இந்தியா போன்ற குடியரசு நாட்டில், பொருளாதார முன்னேற்றத்திற்காக அரசு மேற்கொள்கின்ற திட்டமானது மக்களின் திட்டமாகவே இருத்தல் வேண்டும்.

(12) இரண்டாவது திட்டக்காலத்திலும், மூன்றாவது திட்டக் காலத்திலும், 'உயர் வகுப்புத் துறையே' (Upper Class Sector—i.e., the U-Sector) பல நன்மைகளையும் பெற்றது. திட்டங்களின் மூலம் தாழ்ந்த நிலையில் உள்ள மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவில்லை. இந்தியாவில் திட்டமிட்டப் பொருளாதார வளர்ச்சியினால் வருவாயிலும், செல்வப் பங்கீட்டிலும் உள்ள ஏற்றத்தாழ்வுகள் குறைக்கப்படவில்லை. சமுதாயத்தில் ஒரு சிலர் வருவாயில் அதிக உயர்வைத் தொடர்ந்து அடைந்துகொண்டே இருக்கின்றார்கள். சில தனியார்துறை நிறுவனங்கள் இன்னும்கூட கொள்ளை இலாபத்தைப் பெறுகின்றன. அதிக இலாபத்தைப் பெறுகின்ற தனியார் துறை தொழில்களை அரசுடைமையாக்கவேண்டும். தனியார்துறை நிறுவனங்கள் குறிப்பிட்ட குறைந்த அளவு இலாபத்தைப்பெற அனுமதிக்கப்படலாம். சமதர்மத்தைப் பின்பற்று

கின்ற அரசு பல திட்டங்களை நிறைவேற்றியுள்ளது. எனினும் பொருளாதாரச் சக்தி ஒரு சிலருடைய கைகளிலேயே அமைந்திருக்கின்றது. இந்நிலையைத் தவிர்க்க அரசு திட்டங்களின் மூலம் தீவிர நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

(13) மக்கட்தொகைப் பெருக்கத்தைக் குறைப்பதற்கான திட்டத்தையும் அரசு தீவிரமாக, அதிக முதலீட்டோடு நிறைவேற்ற வேண்டும். இந்தியாவில் அமைந்திருக்கக்கூடிய பலவகைச் சிக்கல்களுக்கும் அடிப்படைக் காரணமாக அமைந்திருப்பது விரைவான மக்கட்தொகைப் பெருக்கமாகும். மக்கட் பெருக்கத்தைக் குறைப்பதின் மூலம் பல சிக்கல்களுக்கும் எளிதில் தீர்வு காணலாம். கல்வியறிவைப் பரப்புவதின் மூலமும், விளம்பரங்களின் மூலமும், குடும்பநலத் திட்டங்களின் மூலமும் பிறப்பு வீதத்தைக் குறைக்கலாம். குடும்பநலத் திட்டங்களுக்கு அரசு மேலும் அதிக மூலதனத்தை ஒதுக்குவது அவசியமானது.

(14) வேலைவாய்ப்புகளைப் பெருக்கும் திட்டங்களையும் அரசு நிறைவேற்றவேண்டும். பொதுப்பணித் துறைகளிலும், சிறு தொழில்களிலும் அரசு அதிக முதலீட்டைச் செய்வது வேலைவாய்ப்புகளைப் பெருக்க உதவும். சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு அரசு ஆதரவளித்தல் அவசியமாகும். அதிக அளவில் பயன்படுத்தப்படாத இயற்கை வளங்களும், மனித உழைப்பும் உற்பத்தியை உயர்த்தப் பயன்படுத்தப்பட வேண்டுமென்றால் அரசு உயர்ந்த அளவில் பல துறைகளிலும் முதலீட்டைச் செய்யவேண்டும்.

இந்தியத் திட்டங்கள் வெற்றியடைய, "நிறைவேற்றத்தக்க குறைந்த நோக்கங்களைக் கொண்டவைகளாகத் திட்டங்கள் இருக்க வேண்டும்; சமதர்மக்கொள்கை அரசால் சிறப்பாக நிறைவேற்றப்பட வேண்டும்; சமுதாய மறுமலர்ச்சி தோன்றவேண்டும்; வலுவான மத்திய அரசு தீவிர நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்; திட்டங்கள் சிறப்பாகத் தீட்டப்படுவதோடு சரியாகவும் நிறைவேற்றப்பெறுதல் வேண்டும்; அரசு பல துறைகளின் வளர்ச்சியையும், நுகர்வோருடைய நலனையும் காக்கும் வகையில் விலைக் கொள்கையைக் கைக்கொள்ளவேண்டும்; பொது நிர்வாகம் திறமையானதாகவும், நேர்மையானதாகவும் இருக்கவேண்டும்; திட்டங்களை நிறைவேற்றுவதில் பொதுமக்களின் ஒத்துழைப்பும் பெறப்படுதல் வேண்டும்; பொதுத்துறை நிறுவனங்கள் முன்னேற்றத்தைப் பெறும் வகையில் மாற்றியமைக்கப்படவேண்டும்; பொதுத்துறையோடு தனியார்துறையும் ஓரளவு இயங்க அனுமதிக்கப்படவேண்டும்."

37. இந்தியத் திட்ட முறை

விளக்கம்

இந்தியத் திட்டங்களில் வேளாண்மை வளர்ச்சிக்கு முக்கியத்துவம் தருவதா அல்லது தொழில் முன்னேற்றத்திற்கு முக்கியத்துவம் அளிப்பதா என்பது பற்றி வெவ்வேருன கருத்துகள் நிலவி வருகின்றன. ஆனல் இக் கருத்துக்களில் வேறுபாடு அமைந்திருத்தல் தேவையில்லாத ஒன்ருகும். ஏனெனில் வேளாண்மை, தொழில் ஆகிய இரு துறைகளும் ஒன்ருேடொன்று தொடர்புடையவைகளாகும். ஒன்றின் வளர்ச்சி மற்ருென்றைச் சார்ந்து அமையும். வேளாண்மை வளர்ச்சியின்றித் தொழில் முன்னேற்றத்தைப் பெறமுடியாது; தொழில் முன்னேற்றம் வேளாண்மை வளர்ச்சிக்கு உதவும். வேளாண்மைத் துறையை வளர்ச்சியடையச் செய்வதின் மூலமே விரைவான தொழில் முன்னேற்றத்தைப் பெற முடியும். இரு துறைகளின் முன்னேற்றமும் பொருளாதார முன்னேற்றத்தை விரைவடையச் செய்கின்றது. தொழில் துறைக்குத் தேவையான கச்சாப் பொருட்கள் பலவும் வேளாண்மைத் துறையிலிருந்தே உற்பத்திச் செய்யப்படுகின்றன. தொழில்கள் முன்னேற்றமடையும்போது கச்சாப் பொருட்களின் தேவை கூடுகின்றது; தேவைப் பெருக்கத்தால் விலையுயர்வு ஏற்படுகின்றது. விலையுயர்வால் விவசாயிகள் உற்பத்திப் பணிகளில் ஊக்கத்தோடு ஈடுபடுவார்கள். உற்பத்தி உயரும்போது விவசாயிகளின் வருவாய் அதிகரிக்கின்றது. இதனல் அவர்களின் சேமிப்புத் திறனும் உயர்வடைகின்றது. மேலும் உற்பத்தியைப் பெருக்க அவர்கள் அதிக முதலீட்டைச் செய்யமுடிகின்றது.

ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றம் வேளாண்மை வளர்ச்சி, தொழில் முன்னேற்றம் ஆகிய இரண்டையும் பொருத்து அமையும். இவ்விரு துறைகளின் வளர்ச்சி சிறப்பாக இருந்தால்

விரைவான பொருளாதார முன்னேற்றத்தைத் தொடர்ச்சியாக, எளிதாக, உறுதியாகப் பெறமுடியும். இரு துறைகளின் வளர்ச்சி வீதமும் உயர்வாக இருத்தல் பொருளாதார வளர்ச்சி வீதத்தை உயர்வடையச் செய்யும். பொருளாதார முன்னேற்றத்தை விரைவாகப்பெற உதவும் ஒரு கருவியாக இருப்பது தொழில்களின் வளர்ச்சியே என்பது சிலருடைய கருத்தாக இருக்கின்றது. பல நாடுகளின் பொருளாதார வரலாற்றையும் இதற்குச் சான்றாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்கள். இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் தொழில் முன்னேற்றம் ஏற்பட்ட பிறகே விரைவான பொருளாதார வளர்ச்சி தோன்றியது. சோவியத் ரஷ்யா வல்லரசுகளில் ஒன்றாக மாறியமைக்கு விரைவான தொழில் முன்னேற்றமே காரணமாயிற்று.

ஆனால் வேளாண்மை வளர்ச்சியும் தொழில் முன்னேற்றத்திற்குப் பல வழிகளில் உதவுகின்றது. அவற்றைப் பின்வருமாறு விளக்கலாம்:

(1) கச்சாப்பொருட்களை அளித்தல்

தொழில் துறையின் அடிப்படைத் தேவைகளாக இருப்பவை கச்சாப் பொருட்களாகும். இக்கச்சாப் பொருட்கள் வேளாண்மைத் துறையிலேயே பெருமளவு உற்பத்தி செய்யப்படுகின்றன. தொழில் முன்னேற்றத்திற்கு நியாயமான விலைகளில் கச்சாப்பொருட்கள் போதுமான அளவில் அளிக்கப்படவேண்டும். தொடர்ச்சியாக உரிய காலங்களிலும் இக்கச்சாப் பொருட்களின் அளிப்பு அமைந்திருப்பது அவசியமானது. வேளாண்மைத்துறையின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்தால்தான் கச்சாப்பொருட்களின் அளிப்பை அதிகரிக்க இயலும்.

(2) வேளாண்மையைச் சார்ந்த தொழில்களை வளர்த்தல்

வேளாண்மை நேரடியாக வேளாண்மையைச் சார்ந்த தொழில்களை வளர்ச்சியடையச் செய்கின்றது. உதாரணமாக சர்க்கரைத் தொழில், பருத்தி நெசவுத் தொழில், சணல் தொழில் போன்றவற்றின் உற்பத்தி வேளாண்மைத் துறையைச் சார்ந்தே அமைகின்றது. இத்தொழில்களின் வளர்ச்சி, கச்சாப்பொருட்களின் பற்றாக்குறை ஏற்படும்போது பெரிதும் பாதிக்கப்படுகின்றது. இந்திய—பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு கச்சாச் சணல் பற்றாக்குறையால் இந்தியச் சணல் தொழில் பாதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். தற்பொழுது கச்சாச் சணலை உள்நாட்டிலேயே அதிக அளவிற்கு உற்பத்திச் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கரும்பு உற்பத்திக் குறையும்போது சர்க்கரைத் தொழில் பாதிக்கப் படுவதையும் சான்ருகக் கூறலாம். வேளாண்மை வளர்ச்சிக் குன்றும்போது வேளாண்மையைச் சார்ந்த தொழில்களின் வளர்ச்சி யும் பாதிக்கப்படுகின்றது.

(3) உணவளித்தல்

வேளாண்மை ஓர் அடிப்படையான முக்கியத் தொழிலாக இருக்கின்றது. ஏனெனில் வாழ்விற்கு இன்றியமையாத உணவுப் பொருட்களை உற்பத்திச் செய்வது வேளாண்மைத் துறையே யாகும். உணவு மனித வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவையாக உள்ளது. ஒரு நாட்டில் உணவுப் பற்ருக்குறை அமைந் திருத்தல் பொருளாதார முன்னேற்றத்தைப் பல வழிகளிலும் பாதிக்கின்றது. இந்தியாவில் உணவுப் பற்ருக்குறை உள்ள காரணத்தால் வெளிநாடுகளினின்றும் உணவுத் தானியங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன. மதிப்பு மிக்க அந்நியச் செலாவணி உணவுப் பொருட்களின் இறக்குமதியில் வீணடிக்கப்படுகின்றது. இந்தியா வேளாண்மை நாடாக இருந்தும் உணவுப் பொருட்களின் இறக்குமதிக்குப் பிறநாடுகளை நம்பியிருக்க வேண்டியுள்ளது. வளர்ச்சியடைந்துவரும் இந்தியா போன்ற நாடுகள் பெருமளவிற்கு மூலதனப் பொருட்களை இறக்குமதி செய்து தொழில் முன்னேற்றத் தைப் பெறவேண்டும். வேளாண்மைத் துறையை வளர்த்து உணவுப் பொருட்களின் இறக்குமதியைக் குறைப்பது இன்றியமை யாததாகும். தொழில்துறையில் அமைந்துள்ள தொழிலாளர் களுக்கும், நகர்ப்புறங்களில் வசிக்கும் மக்களுக்கும் உணவளிக்க வேளாண்மையின் வளர்ச்சித் தேவையாகின்றது.

(4) வேளாண்மைத்துறையின் மூலதனத்திரட்சி தொழில்துறைக்கு உதவுதல்

வேளாண்மையின் சிறப்பான வளர்ச்சித் தொழில் முன்னேற்றத் திற்குத் தேவையான மூலதனத் திரட்சியை ஏற்படுத்தும். வேளாண்மைத் துறையின் சேமிப்பு தொழில்துறையில் பயனுள்ள வகையில் உபயோகிக்கப்படலாம். வேளாண்மை வளர்ச்சி விவசாயிகளின் வருவாயை அதிகரிக்க உதவும். அதிகரித்த வருவாய் விவசாயிகளின் சேமிக்கும் திறனை உயர்த்துகின்றது. சேமிப்பின் ஒரு பகுதி வேளாண்மை உற்பத் திக்கு முதலீட்டாக்கப்படுகின்றது. மற்ருெரு பகுதி தொழிற் பொருட்களை வாங்குவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. தொழிற் பொருட்களின் தேவை பெருகும்போது தொழில் முன்னேற்றமும் பெறப்படுகின்றது. தொழில் அமைப்பாளர்கள் தேவை பெருகும்

போதுதான் உற்பத்தியை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளைத் தீவிரமாக எடுக்கின்றார்கள்.

(5) தொழில்பொருட்களுக்கான சந்தையாக வேளாண்மைத்துறை

வேளாண்மைத் துறையில் வருவாய் உயரும்போது, தொழில் துறையின் தயாரிப்புப் பண்டங்களுக்கான தேவை பெருகும். பொறி செய்ப்பொருட்களை உற்பத்திச் செய்யும் நிறுவனங் களின் வளர்ச்சி இதனால் காக்கப்படும். எனவே வேளாண்மைத் துறையின் வளர்ச்சி தொழிற் பொருட்களுக்கான சந்தையின் அளவை விரிவடையச் செய்கின்றது. சந்தையின் அளவு விரிவடை யும்போது, தொழில்துறையில் முதலீடு செய்வதற்கான ஊக்கம் அதிகரிக்கின்றது. பேரளவு உற்பத்தி முறைகள் தொழில் துறையில் அதிக அளவில் பின்பற்றப்படுகின்றமைக்கான சூழ்நிலைகள் உருவாகும். இதனால் பேரளவு உற்பத்திச் சிக்கனங்களும் பெறப் படும். பல தொழில் உற்பத்தி நிறுவனங்கள் அகச் சிக்கனங்களையும் புறச் சிக்கனங்களையும் பெற முடிவதால் உற்பத்திச் செலவு குறை கின்றது. இதன் காரணமாக தொழிற்பொருட்களின் விலையும் குறைந்து, தேவைப் பெருக்கம் ஏற்படுகின்றது. தொழில் முன்னேற் றத்திற்கு இத் தேவைப் பெருக்கம் இன்றியமையாததாகின்றது. பேரளவு உற்பத்தி முறைகள் கைக்கொள்ளப்படும்போது வேலைப் பகுப்பு முறையும் புகுத்தப்படுகின்றது. இதனால் தொழில் துறையின் உற்பத்தித் திறன் கூடுகின்றது. இவ்வாறு வேளாண்மைத்துறை வளர்ச்சியடையும்போது தொழில் துறையும் முன்னேற்ற மடைகின்றது.

(6) ஏற்றுமதி உபரியைப் பெருக்கி அந்நியச் செலாவணியை ஈட்டுதல்

இந்தியா போன்ற மேம்பாடு அடைந்துவரும் நாடுகளில் சில அடிப்படைப் பொருட்கள் மட்டுமே அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. தேயிலை, சர்க்கரை, சணல், கச்சாப் பொருட்கள், வாசனைத் திரவியங்கள், பருத்தி நெசவுப் பொருட்கள் போன்றவை நம் நாட்டினின்றும் அதிக அளவில் ஏற்றுமதி யாகின்றன. ஏற்றுமதிப் பொருட்களில் முக்கியமானவைகளாக இவை இருக்கின்றன. வேளாண்மையின் வளர்ச்சி இப்பொருட் களின் உற்பத்தியை உயர்த்த உதவும். உற்பத்தி உயர்வதால் 'ஏற்றுமதி உபரியின்' (Exportable Surplus) அளவும் அதிகரிக்கும். ஏற்றுமதியின் அளவைப் பெருக்குவதின் மூலம் அந்நியச் செலாவணியை அதிக அளவிற்கு ஈட்டமுடியும். இந்த அந்நியச் செலாவணியைத் தொழில் முன்னேற்றத்திற்குத் தேவையான

மூலதனப் பொருட்களை இறக்குமதி செய்யப் பயன்படுத்தலாம். ஏனெனில், வளர்ச்சியடைந்துவரும் தொடக்க நிலைகளில் எந்த ஒரு நாட்டிலும் மூலதனப் பொருட்கள் உற்பத்திச் செய்யப்படுவதில்லை. ஏற்றுமதிப் பெருக்கத்தினால் ஈட்டப்பெற்ற மதிப்புமிக்க அந்நியச் செலாவணி அடிப்படைத் தொழில்களையும், பெரிய தொழில்களையும் நிறுவுவதற்குத் தேவையான கனரகப் பொருட்களை இறக்குமதி செய்யப் பயன்படுத்தபட வேண்டும். இயந்திரங்களையும், கருவிகளையும் பிற நாடுகளினின்றும் இறக்குமதி செய்வதின் மூலமே வளர்ச்சிக்குன்றிய நாடுகள் தொழில் முன்னேற்றத்தைப் பெற முடியும்.

(7) விலைநிலைப் பெருக்கம்

பணவீக்க நிலையைக் கட்டுப்படுத்த வேளாண்மை வளர்ச்சி இன்றியமையாதது. பொருளாதார முன்னேற்றத்தின் முதற்சில நிலைகளில் விலைகளின் உயர்வு ஏற்படுதல் இயல்பானதேயாகும். வேளாண்மை உற்பத்தியைக் கூட்டுவதின் மூலம் விலைகளின் உயர்வைக் கட்டுப்படுத்தலாம். திட்டமிட்டுப் பொருளாதார வளர்ச்சியைப் பெறும்போது அதிக அளவில் முதலீடுகள் செய்யப் படுகின்றன; வேலை வாய்ப்புகளும் பெருகுகின்றன; பொருளாதாரத்தில் வருவாய்ப் பெருக்கமும் தோன்றுகின்றது. இந்நிலையில் குறுகிய காலத்தில் பணவருவாய் விரைவாக அதிகரிக்கின்றது. ஆனால் நுகர் பொருட்களின் அளிப்பு குறுகிய காலத்தில் பெருகுவதில்லை. இதன் காரணமாகவே பணவீக்க நிலை ஏற்படுகின்றது. பணவீக்க நிலையை நீக்க நுகர்பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்கவேண்டும். பல நுகர்பொருட்களின் உற்பத்தி வேளாண்மைத் துறையைச் சார்ந்தே அமைகின்றது. பொருட்களின் அளிப்பு தேவையைக் காட்டிலும் குறைவாக இருக்கின்றமையால் விலைகள் பல மடங்கு உயர்வடைகின்றன. சுருங்கக் கூறினால், பணவீக்க நிலையைக் கட்டுப்படுத்த அவசியமான நுகர்பொருட்கள், கச்சாப்பொருட்கள் ஆகியவற்றின் அளிப்பைக் கூட்டவேண்டும். இவ்வகைப் பொருட்கள் வேளாண்மைத்துறையில் உற்பத்தியாகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் பொருளாதாரத்தில் தோன்றக் கூடிய பணவீக்க நிலையைக் கட்டுப்படுத்த வேளாண்மைத் துறையின் வளர்ச்சி அவசியமாகின்றது.

இதைப் போன்றே, தொழில் முன்னேற்றமும் வேளாண்மை வளர்ச்சிக்குப் பல வழிகளில் உதவுகின்றது. பின்வருபவைகளின் மூலமாக வேளாண்மை வளர்ச்சி தொழில் முன்னேற்றத்திற்கு எவ்வகைகளில் உதவுகின்றது என்பதை உணரலாம்:

(1) வேளாண்மைக்குத் தேவையான சில வசதிகளை அளிப்பது தொழில் துறையாகும். வேளாண்மை வளர்ச்சிக்கான உரங்கள் தொழில் துறையினின்றும் பெறப்படுகின்றன. வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்திற்கு நீர்ப்பாசன வசதிகள் இன்றியமையாதன. இவ்வசதிகளைப் பெருக்குவதற்கான இயந்திரங்களும், கருவிகளும் தொழில் துறையிலேயே உற்பத்திச் செய்யப்படுகின்றன. வேளாண்மை உற்பத்தியைப் பல மடங்கு கூட்ட இவ்வசதிகள் பெரிதும் உதவுகின்றன.

(2) வேளாண்மையை இயந்திர மயமாக்குவதும் தொழில் துறையைச் சார்ந்தே அமைகின்றது. தொழில் துறையின் மூலம் இயந்திரக் கலப்பைகள், விதை விதைக்கும் கருவிகள், அறுவடை இயந்திரங்கள் போன்றவை தயாரிக்கப்படுகின்றன. இவற்றைத் தவிர வேளாண்மைக்கான உற்பத்திச் சாதனப்பொருட்களும், சிறிய கருவிகளும் தொழில்துறையால் உற்பத்தியாகின்றன.

(3) தொழில்துறை வேளாண்மைத் துறையில் உற்பத்திச் செய்யப்படுகின்ற கச்சாப்பொருட்களின் தேவையைக் கொண்டிருக்கின்றது. கச்சாப்பொருட்களின் தேவை அதிகரிப்பதால் விவசாயிகள் அதிக ஊக்கத்தோடு உற்பத்தியை உயர்த்துகின்றார்கள். அதிக விற்பனையைச் செய்து உயர்ந்த வருவாயைப் பெறுகின்ற அவர்கள் சேமித்து, முதலீடு செய்யும் திறனையும் அடைகின்றார்கள்.

(4) தொழில் முன்னேற்றம் நகரத்தில் அமைந்திருக்கக் கூடிய தொழிலாளர்கள், ஊழியர்கள் ஆகியோரின் வருவாயை உயர்த்துகின்றது. நகர மக்களின் வாழ்க்கைத்தரமும் உயர்வடைகின்றது. இதனால் வேளாண்மைப் பொருட்களுக்கான தேவை மிகவும் அதிகரிக்கின்றது. உணவிற்கான தேவை நெகிழ்ச்சி அதிகமாக இருப்பதே தேவைப் பெருக்கத்திற்குக் காரணமாகின்றது. வேளாண்மை வளர்ச்சிக்கு இது மேலும் ஊக்கத்தை அளிக்கின்றது. நகர மக்களின் வாழ்க்கைத்தர உயர்வு கிராம மக்களின் வருவாய் உயர்விற்குக் காரணமாகிறது. தொழில்களின் முன்னேற்றம் வேளாண்மையை வளரச்செய்கின்றது.

(5) பின்தங்கிய நாட்டின் கிராமப் பொருளாதாரத்தில் பராமரிப்புத் துறையாகிய வேளாண்மை 'மறைந்துள்ள வேலையின்மையைக்' கொண்டதாக இருக்கின்றது. வேலைவாய்ப்புகள் குறைவாக உள்ள காரணத்தால், நிலத்தின் மீதான மக்கட்தொகை பெருகிக்கொண்டே உள்ளது. இதனால் உபரி உழைப்பாளர்கள் வேளாண்மையில் அமைந்துள்ளார்கள். இவ்வுபரி உழைப்பாளர்

களுக்கு வேலை வாய்ப்புகளைத் தர தொழில் முன்னேற்றம் பெரிதும் உதவுகின்றது. இவ்வகையிலும் தொழில்துறை முன்னேற்றம் வேளாண்மை வளர்ச்சிக்கு வகைசெய்கின்றது.

இக்காரணங்களால், பொருளாதார முன்னேற்றத் திட்டங்களில் வேளாண்மை, தொழில் ஆகிய இரண்டின் வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். இவ்விரு துறைகளும் ஒன்றோடொன்று தொடர்புடையவைகளாக இருக்கின்றன. ஒரு துறையின் வளர்ச்சி மற்றொரு துறையின் வளர்ச்சிக்கு உதவுகின்றது. இந்த இரண்டு துறைகளிலும் சிறப்பான முன்னேற்றத்தைப் பெறத் திட்டமிடுதல் இன்றியமையாததாகின்றது. வேளாண்மைத்துறை, தொழில்துறை ஆகிய இரண்டையும் தொடர்புபடுத்தி விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுவதே திட்டத்தின் முக்கிய நோக்கமாக இருக்கவேண்டும். திட்ட முறைகளைத் தெரிந்தெடுக்கும்போது இந்நிலை நன்கு ஆராயப்படுதல் அவசியமாகும்.

இந்நிலைகள் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்களினின்றும் நன்கு உணரப்படுகின்றன. நம்முடைய திட்டங்களின் படிப்பினைகள் வேளாண்மை வளர்ச்சியையும், தொழில் முன்னேற்றத்தையும் இணைத்துப் பெறவேண்டியதின் அவசியத்தை உணர்த்தியுள்ளன. தொழில் முன்னேற்றம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியைத் தீவிரமடையச் செய்கின்றது. ஆனால் பொருளாதாரத்தின் அடிப்படையை வேளாண்மை வளர்ச்சியின் மூலம்தான் அமைக்க முடியும். வேளாண்மையின் வளர்ச்சி தொழில் முன்னேற்றத்தைத் தருகின்றது. தொழில் முன்னேற்றம் உயர்வான பொருளாதார வளர்ச்சி வீதத்தை அளிக்கின்றது.

நம் நாட்டின் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் உணவு உற்பத்திக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கி, அதன் அடிப்படையில் தொழில் முன்னேற்றத்தைப்பெற திட்டமிடப் பெற்றது. முதல் திட்டத்தில் வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களுக்காக ரூ. 241 கோடி செலவிடப்பட்டது. வேளாண்மைச் சீர்திருத்தங்களுக்கும், சமுதாய வளர்ச்சித் திட்டங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இந் நடவடிக்கைகளினால் முதல் திட்டக்காலத்தில் வேளாண்மை உற்பத்தி 18 சதவீதம் அதிகரித்தது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் பொருளாதார முன்னேற்றத்தை விரைவுபடுத்த அடிப்படைத் தொழில்களுக்கும், பெரிய

தொழில்களுக்கும் முக்கியத்துவம் அளித்தது. முதல் திட்டம் வேளாண்மைத் துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்தது போல இரண்டாவது திட்டம் தொழில்துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்தது. இரண்டாவது திட்டத்தில் வேளாண்மை வளர்ச்சி சிறப்பாக இல்லாமையால், பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப் பட்டது. வேளாண்மை வளர்ச்சி போதுமான அளவில் இல்லா மையால் உணவுப் பற்றுக்குறை ஏற்பட்டதோடு, கச்சாப்பொருட் களின் பற்றுக்குறையும் அமைந்திருந்தது. இக் காலத்தில் 'சுழலும் பண வீக்கம்' (Spiral Inflation) ஏற்பட்டது. பலவகைப்பட்ட பண்டங்களின் விலைகளும் அதிகரித்தன. 'மொத்த விற்பனை விலை களின் பொதுக் குறியீட்டெண்' (General Index of Wholesale Prices) 1955–56-ல் 95·4 ஆக இருந்தது; 1960–61-ல் இது 124·9 என்ற அளவிற்கு உயர்ந்துள்ளது. 30 சதவீதத்திற்கும் அதிகமாக மொத்த விற்பனை விலைகளின் பொதுக் குறியீட்டெண் உயர் வடைந்ததை இது உணர்த்துகின்றது. இக்காலத்தில் வேளாண் மையில் அமைந்திருந்த தேக்க நிலையே தொழில் முன்னேற்றத்தைப் பாதித்தது. பணவீக்க நிலையும் தொழில் முன்னேற்றத்திற்குத் தடையாக இருந்த காரணிகளில் ஒன்று எனக் கூறலாம். வேளாண்மை வளர்ச்சியில் ஏற்பட்ட தடையே அந்நியச் செலா வணிச் சிக்கல், உணவுப் பற்றுக்குறைச் சிக்கல், வேலையின்மைச் சிக்கல் போன்றவற்றைத் தோற்றுவித்தது எனலாம். இத்திட்டக் காலத்தில் வருவாயிலும், செல்வப் பங்கீட்டிலும் உள்ள ஏற்றத் தாழ்வுகள் மிகுதியடைந்தன.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டத்தைத் தீட்டுப வர்கள் தங்களின் தவறுகளை உணர்ந்தார்கள். இத் திட்டத்தில் வேளாண்மை வளர்ச்சிக்கே திரும்பவும் முதல் முக்கியத்துவம் தரப்பட்டது. மூன்றாவது திட்டத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக இருந்தது வேளாண்மை வளர்ச்சி வீதத்தை விரைவு படுத்துவதாகும். விரைவான வேளாண்மை வளர்ச்சியைப் பெற்று உணவில் தன்னிறைவைப் பெறக் கருதப்பட்டது. வேளாண்மை வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட நிலைக்குப் பிறகு, தொழில் முன்னேற் றத்தைப் பெறுவதும் அவசியமானதென உணரப்பட்டது. மக்கள் வளத்தைச் சிறப்பாக உற்பத்திக்குப் பயன்படுத்துவதும் இன்றிய மையாததென அறியப்பெற்றது. 'தன்னைச் சார்ந்து தானே வளர் கின்ற' பொருளாதாரத்தைப்பெற சிலவகைப்பட்ட தொழில்களின் முன்னேற்றத்தில் அதிகக் கவனம் செலுத்தப்பட்டது. சில தொழில்கள் தெரிந்தெடுக்கப்பட்டு, அவற்றின் வளர்ச்சிக்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

மூன்ருவது திட்டத்தின் நோக்கங்கள் சிறப்பாக அமைந்திருந்தன. எனினும் எதிர்பார்த்த அளவிற்கு முன்னேற்றம் இத் திட்டக்காலத்திலும் கிட்டவில்லை. வேளாண்மைத் துறையிலும், தொழில் துறையிலும் விரைவான வளர்ச்சிவீதம் ஏற்படவில்லை. மூன்ருவது திட்டக்காலத்தில் ஆண்டொன்றிற்குச் சராசரி 6 சதவீத வளர்ச்சியைப்பெற திட்டமிடப்பட்டது. ஆனல் 1961–62-ல் உற்பத்தியானது 1 சதவீதம் மட்டுமே உயர்வடைந்தது. 1962–63-ல் உற்பத்தியில் 3 சதவீதக் குறைவு ஏற்பட்டது. தட்ப வெப்ப நிலைகள் வேளாண்மைக்குச் சாதகமாக இல்லாத நிலை மட்டும் குறைவான உற்பத்திக்குக் காரணமல்ல. வேளாண்மை அமைப்பு முறை, குறைபாட்டைக் கொண்டதாக இருந்தது. வேளாண்மை வளர்ச்சிக்கான திட்டமும் வெற்றியைப் பெறுவதாக அமைந்திருக்கவில்லை. போதுமான அமைப்பு முறைகள் இல்லாமையும், சமுதாய மாற்றங்கள் ஏற்படாமையும் நம் நாட்டின் வேளாண்மை வளர்ச்சிக்கு முக்கியத் தடைகளாக இருக்கின்றன.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பல நிலைகளும், இனி நிறைவேற்றப் படும் திட்டங்கள் வெற்றியடைய, நன்கு ஆராயப்படுதல் வேண்டும். பொருளாதார முன்னேற்ற நிலைக்கேற்ப வேளாண்மை, தொழில் துறை ஆகிய இரண்டும் சரிசம வளர்ச்சியைப் பெறுமாறு செய்தல் வேண்டும். எனினும், நம்முடைய நாட்டில் வேளாண்மைத் துறையின் அடிப்படை மேலும் வலுவாக்கப்படுதல் அவசியம். சிறந்த வேளாண்மை அடிப்படையிலேயே விரைவான பொருளாதார முன்னேற்றம் அடங்கியுள்ளது. அலக் கோஷ் (Alak Ghosh) குறிப்பிடுவதுபடி, ''இந்திய வேளாண்மை வளர்ச்சிக்கு சமுதாய முன்னேற்றத்திட்டங்கள் பெரிதும் உதவுபவைகளாகும்; கூட்டுறவு துறையை வளர்ப்பதும் நன்மையைத் தருவதாகும். அதிக விளைச்சலைத் தரக்கூடிய நல்விதைகளைக் கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சி நிலையங்களும் அமைக்கப்படுதல் வேண்டும். உர உற்பத்தியைப் பெருக்கி சிறப்பாகப் பங்கீடு செய்வதும் அவசியமானதாகும். இவற்ருேடு விலை நிலைப் பேருக்கத்திற்கான நடவடிக்கைகளையும் அரசு எடுக்கவேண்டும். பல வகைப்பட்ட நிர்வாகத் தீர்வுகளும், அமைப்பு முறை மாற்றங்களும் அவசியமானவைகளாகின்றன.''

எனவே, பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுவதற்கான கருவியாக தொழில்துறை வளர்ச்சி அமைந்திருந்தாலும், இந்தியா போன்ற வேளாண்மை நாடுகளில் தொழில் மயமாக்குதலின் மூலம் பொருளாதார முன்னேற்றத்தைப் பெற்றுவிட முடியாது. ஒரு நாட்டுப் பொருளாதாரத்தை வண்டியாகக் கொண்டால், அதன் இரண்டு சக்கரங்களாக இருப்பவை வேளாண்மைத் துறையும்

தொழில்துறையும் ஆகும். முன்னேற்றப் பாதையில் பொருளாதாரம் என்ற வண்டி ஒழுங்காகச் செல்லவேண்டுமென்ருல், வேளாண்மை தொழில் ஆகிய இரண்டு சக்கரங்களும் ஒருங்கே உருள வேண்டும்.

இந்தியப் பொருளாதார முன்னேற்றத்திற்கானத் திட்டங்களில் பொதுத்துறையின் நிலை

இந்தியாவின் பொதுத்துறை இந்தியச் சுதந்திரத்தின் குழந்தையாகும். சுதந்திரமடைவதற்கு முன்பு இந்தியப் பொருளாதாரத்தில் பொதுத்துறையே அமைந்திருக்கவில்லை. ஆங்கிலேயர்களின் ஆட்சிக் காலத்தில் 'தலையிடாமைக் கொள்கை' (Laissez - faire Policy) பின்பற்றப்பட்டது. பொருளாதார நடவடிக்கைகள் யாவும் தனியார்துறையின் மூலமே பெருமளவிற்குச் செய்யப்பட்டன. மக்களின் வாழ்க்கைத் தரம் தாழ்ந்திருந்தமைக்கும், வருவாயிலும் செல்வப் பங்கீட்டிலும் அதிக ஏற்றத்தாழ்வுகள் இருந்தமைக்கும், பொருளாதாரம் வளராமல் தேக்க நிலையில் அமைந்திருந்தமைக்கும் இதுவே காரணமாக இருந்தது. அரசு பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதின் மூலமே விரைவான முன்னேற்றத்தை ஒரு நாடு பெறமுடியும். நாட்டின் பல தொழில்களும் பொதுத் துறையில் அமைந்திருத்தலே நன்மை தருவதாகும்.

இந்தியா சுதந்திரமடைந்த பிறகு, பொதுத்துறையின் முக்கியத்துவம் உணரப்பட்டது. அரசின் நடவடிக்கைகளிலும், கொள்கைகளிலும் பெரிய மாற்றங்கள் தோன்றின. 1948, 1956ஆம் ஆண்டுகளின் தொழிற் கொள்கைகள் சில தொழில்களைத் தனியார் துறையினர் நடத்த அனுமதிக்கவில்லை. 'கலப்புப் பொருளாதார' (Mixed Economy) முறையும் இந்திய அரசால் கைக்கொள்ளப்பட்டது. இம் முறையின் மூலமாக முதலாளித்துவப் பொருளாதாரத்தில் அமைந்துள்ள நன்மைகளும், பொதுவுடைமைப் பொருளாதாரத்தில் அமைந்துள்ள நன்மைகளும் பெறப்படுகின்றன. இந்தியக் கலப்புப் பொருளாதார முறையில், பொதுத் துறையோடு தனியார்துறையும் இயங்கி வருகின்றது. கலப்புப் பொருளாதார முறையைச் சிறப்பானதொரு முறையாகக் கருதலாம். முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகளில் முதலாளித்துவம் பல நன்மைகளையும் அளிக்கக்கூடும். ஆனுல் பின்தங்கியப் பொருளாதாரங்களைக் கொண்ட நாடுகளில் முதலாளித்துவம் எவ்வித நன்மையையும் மக்களில் பெரும்பாலானவர்களுக்கு அளித்துவிட முடியாது. பொதுவுடைமை நாடுகளில் மக்கள் தங்கள் உரிமையையும், செல்வாக்கையும், சுதந்திரத்தையும் இழக்கின்ருர்கள் எனக் குறை கூறப்படுகின்றது. இந்தியா போன்ற

'சமதர்ம' நாடுகளில் மக்கள் உரிமையையும், சுதந்திர நிலையையும் இழப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். சமதர்ம முறையில் ஒருசில குறைபாடுகள் அமைந்திருத்தல் இயல்பானதேயாகும். அக் குறைபாடுகளுக்கெல்லாம் மக்களே காரணமாக இருக்கின்றனர். மக்கள் அனைவரும் 'உரிமையோ உரிமையென்று' குரல் எழுப்புவதை விட்டுக் 'கடமையோ கடமையென்று காரியம் செய்தால்' சமதர்ம முறையில் அமைந்துள்ள குறைபாடுகளை நீக்கி விடலாம்.

சமதர்மச் சமுதாயத்தை அமைக்க விரும்புகின்ற அரசு பொதுத்துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகின்றது. தனியார்த்துறைத் தொழில்கள் பலவும் நாட்டுடைமையாக்கப்பட்டு வருகின்றன. ஆயினும், நம் நாட்டின் தேசிய வருவாயில் பொதுத் துறையின் பங்கு குறைவானதாகவே இருக்கின்றது. இது அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன. ஏனெனில் பொதுத்துறையின் முதலீடு ஆண்டுதோறும் படிப்படியாக அதிகரித்து வருகின்றது. 1960–61-ல் நிகர தேசிய உற்பத்தியில் பொதுத்துறையின் பங்கு 10·4 சதவீதமாகும்; எனவே மிகுதியுள்ள 89·6 சதவீத நிகர தேசிய உற்பத்தித் தனியார்துறை மூலமே பெறப்பட்டது. இந்நிலை படிப்படியாக மாற்றப்படவேண்டும் அதிக இலாப நோக்குக் கொண்ட தனியார்துறை நிறுவனங்களின் எண்ணிக்கை குறைக்கப்படவேண்டும். பொதுத்துறையின் மூலமே அதிகத் தேசிய வருவாயைப்பெற அரசு தீவிர நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

பொதுத்துறை விரிவடைந்து வருகின்றமைக்கான காரணங்கள்

இந்தியாவில் பொதுத்துறையின் தோற்றத்திற்கும், விரைவான வளர்ச்சிக்கும் கீழ்க்கண்ட காரணங்களைக் கூறலாம்:

(1) விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுதல்

இந்தியாவில் தனியார் துறையை வளர்ப்பதின் மூலம் பொருளாதார முன்னேற்றத்தைப் பெறமுடியாது. விரைவான பொருளாதார வளர்ச்சி வீதத்தைப்பெற பொதுத்துறையின் வளர்ச்சியே இன்றியமையாதது. பொதுத்துறையை வளர்க்க அரசு திட்டங்களின் மூலம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அரசியல் சட்டங்களும் கூட இதற்காகத் திருத்தப்படுகின்றன. அரசியல் சட்டங்கள் திருத்தப்படுவதைச் சிலர் குறை கூறுவதுண்டு. சட்டங்களைத் திருத்துவது எவ்வகையிலும் தவறாகாது. நாட்டு மக்களில் பெரும்பாலானவர்களின் நன்மைக்காகவே அரசியல் சட்டங்கள் திருத்தப்படுகின்றன. "மக்களுக்காகச்

சட்டங்களே தவிர, சட்டங்களுக்காக மக்கள் இல்லை'' என்பது உணரப்படுதல் வேண்டும். தொழில்துறை, வங்கித்துறை, காப்புறுதித்துறை ஆகியவற்றை தேசிய மயமாக்குதல் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உதவும். மக்களுக்கு அதிக நன்மையை அளிக்கக்கூடிய துறைகளையும் அரசே ஏற்று நடத்த வேண்டும். பொதுப்பணித் துறைகளை அரசே நடத்துவது அவசியமாகின்றது. சில அடிப்படைத் தொழில்களும், பெரிய தொழில்களும் அரசின் வசமே அமைந்திருக்க வேண்டும். போக்கு வரத்து, செய்தித் தொடர்பு வசதிகள், நீர்ப்பாசனம், மின்சார உற்பத்தி, கல்வி வசதிகள், மருத்துவ வசதிகள் ஆகியவற்றின் முன்னேற்றத்தை அரசே செய்யவேண்டும். சமுதாயத்திற்கு அதிகப் பயனை அளிக்கக்கூடிய துறைகள் தனியார்துறையில் அமைந்திருக்கக்கூடாது. அவ்வாறு அமைந்திருந்தால் முற்றுரிமை நிலைகள் தோன்றக்கூடும். தனியார் கொள்ளை இலாபத்தைப் பெறவும் வாய்ப்புகள் ஏற்படும். இதைத் தவிர்க்க அரசே இத் துறைகளை ஏற்று நடத்தவேண்டும். பொதுத்துறை நிறுவனங்கள் இலாப நோக்கிற்காகச் செயல்படுவதில்லை. இந்தியப் பொருளாதார முன்னேற்றத்தில் பொதுத்துறை முக்கியப் பங்கேற்கின்றது. நம் நாட்டில் பொதுத்துறை நிறுவனங்கள் இன்றிப் பொருளாதார முன்னேற்றத்தைப் பெற இயலாது. கடந்த 15 ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சி வீதம் உயர்ந்துள்ளமைக்கு, பொதுத் துறையின் முன்னேற்றமும் ஒரு காரணமாகும். முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்க்ள் நிறைவேற்றப்பட்டக் காலத்தில் தேசிய வருவாய் சுமார் 65 சதவீதம் அதிகரித்தது. தனியார்துறையை மட்டும் வளர்ச்சியடையச் செய்திருந்தால் இந்த அளவிற்குத் தேசிய வருவாயில் உயர்வைப் பெற்றிருக்க முடியாது. அதற்கு முன்பு 50 ஆண்டுக்காலத்தில் தேசிய வருவாய் 10 சதவீதம் மட்டுமே அதிகரித்திருந்தது. அக்காலத்தில் பொதுத்துறையே செயல்படவில்லையென்பது குறிப்பிடத்தக்கது. பொதுத்துறை விரிவடைந்த பிறகே, தேசிய வருவாயில் சிறப்பான முன்னேற்றம் ஏற்படத் தொடங்கியது. இந்தியா சுதந்திரமடைவதற்குமுன் தனியார்துறை மட்டுமே செயல்பட்டபோது, பின்தங்கிய தேக்கப் பொருளாதாரமே அமைந்திருந்தது. பொருளாதாரத்தின் எந்தத் துறையிலும் குறிப்பிடத்தக்க அளவிற்கு முன்னேற்றம் ஏற்பட வில்லை. எனவே, விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப் பெற பொதுத்துறையை விரிவடையச் செய்யவேண்டும்.

(2) முதலீட்டு முறை

திட்டங்களின் மூலம் வெவ்வேறு வகைப்பட்ட முதலீட்டு முறைகள் பின்பற்றப்பட்டன. பொதுத்துறையை விரிவடையச்

செய்வது அவசியமென அரசு உணர்ந்தது. பொருளாதாரத்தின் சில துறைகளில் தனியார் துறையினர் முதலீடு செய்ய முன்வர மாட்டார்கள். நீண்டகாலத்தில் இலாபத்தைத் தரக்கூடியதும், அதிக இடர்களைக் கொண்டதும், மிகுந்த மூலதனத் தேவையைக் கொண்டதும் ஆகிய தொழில்களில் தனியார் முதலீடு செய்ய விரும்புவதில்லை. இத் தொழில்களை அரசு தொடங்கி நடத்துவது அவசியமானது. மேலும் தனியார்துறையினர் குறுகிய காலத்தில், குறைந்த முதலீட்டிற்குக் கொள்ளை இலாபத்தைப்பெற விரும்புகின்றனர். இவ்வாய்ப்பு இல்லாத தொழில்களில் அவர்கள் முதலீடு செய்வதில்லை. இடர் மிகுந்தத் தொழில்களில் அரசு முதலீடு செய்யவேண்டும். பல நிலைகளிலும் அரசு தொழில் முயல்வோருடைய பணிகளை ஆற்றவேண்டும். முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், பொதுத்துறைத் தொழில் முதலீடு ரூ. 233 கோடியாகவும், தனியார்துறைத் தொழில் முதலீடு ரூ. 57 கோடியாகவும் இருந்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், தனியார் தொழில் முதலீடு ரூ. 617 கோடியாக உயர்ந்தது; பொதுத்துறைத் தொழில் முதலீடு ரூ. 1,077 கோடியாக இருந்தது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில், பெரிய தொழில்களில் பொதுத் துறை முதலீடு ரூ. 2,425 கோடியாக அமைந்திருந்தது. இத்திட்டக் காலத்தில் தொழில்களில், தனியார்துறை முதலீடு ரூ. 1,050 கோடியாக இருந்தது.

(3) பொருளாதாரச் சக்தியைச் சமமாகப் பகிர்தல்

நம் நாட்டில் வருவாயிலும், செல்வப் பங்கீட்டிலும் அதிக ஏற்றத்தாழ்வுகள் அமைந்துள்ளன. இந்த ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க உதவுவது பொதுத்துறையேயாகும். பொதுத்துறை நிறுவனங்களின் இலாபங்கள் அரசைச் சேர்கின்றன. இந்த இலாபங்கள் மக்களின் நன்மைக்காகவே செலவிடப்படுகின்றன. தனியார் துறையினர் பெறுகின்ற இலாபங்கள் திரும்பவும் இலாப நோக்குக் கொண்டே முதலீடு செய்யப்படுகின்றன. சமுதாயத்தில் உள்ள மக்களின் நலம் காக்கப்படுவது அவர்களின் நோக்கமல்ல. தனியார்துறையை வளரவிட்டால் சமுதாயத்தில் உள்ள சிலர் வாழ்வார்கள்; பலர் வாடுவார்கள். இந்நிலையைத் தவிர்த்து மக்கள் எல்லோருடைய வருவாயையும், வாழ்க்கை நிலையையும் உயர்த்தப் பொதுத்துறை வளரவேண்டும். அரசாங்கத்தாலும் புதிய தொழில்கள் தொடங்கப்பட்டு, அவை சிறப்பாக வளர்க்கப்பட வேண்டும். உழைப்பாளர்களைத் தொழில் முதலாளிகள் சுரண்டும் நிலை தனியார்துறையில் அமைந்துள்ளது. ஆக்கக் காரணிகளில் முக்கியமானதாகிய உழைப்பிற்குச் சரியான அளவில் ஊதியம்

வழங்கப்படாத நிலையும் தனியார்துறையில் இருக்கின்றது. பொதுத் துறையில் உழைப்பாளர்கள் சுரண்டப்படும் நிலை அமைந்திருக்க வில்லை. பொதுத்துறையில் உழைப்பிற்கேற்ற ஊதியம் வழங்கப்படு கின்றது. உழைப்பாளர்கள் அதிகச் செல்வாக்கையும், மதிப்பையும் கொண்டிருப்பது பொதுத்துறை நிறுவனங்களிலேயே ஆகும். இதன் காரணமாகவே, பலரும் அரசின் நிறுவனங்களில் பணியாற்ற விரும்புகின்றனர். குறைந்த ஊதியத்திற்கும் கூட பணியாளர்கள் அரசின் நிறுவனங்களில் பணியாற்ற முன்வருவது குறிப்பிடத்தக்கது. சமதர்மச் சமுதாயத்தை இந்திய அரசு அமைக்க நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. சமதர்மத்தைப் பெற பொதுத்துறையை வளர்ப்பதே சிறந்த வழியாகும். படிப்படி யாகத் தனியார்துறை நிறுவனங்களை அரசுடைமையாக்க வேண்டும். இதன்மூலமே நாட்டின் பொருளாதாரச் சக்தியைச் சமமாகப் பகிர்வு செய்யமுடியும். பெரும்பாலான மக்களின் வாழ்க் கைத் தரத்தை உயர்த்த இது உதவும்.

Balanced Development

(4) நாட்டின் பல பகுதிகளிலும் சமமான வளர்ச்சியைப் பெறுதல்

இந்தியாவில் சில மாநிலங்கள் வளர்ச்சியடைந்தவைகளாகவும், வேறு சில மாநிலங்கள் வளர்ச்சியடையாதவைகளாகவும் இருக் கின்றன. வளர்ச்சியடையாத மாநிலங்களை வளர்ச்சியடைச் செய்ய பொதுத்துறை உதவுகின்றது. பின்தங்கிய மாநிலங்களில் அரசு பொதுத்துறையில் தொழில்களை அமைக்கலாம். இதன் மூலம் அம் மாநிலங்கள் மேம்பாடடைகின்றன. நாட்டின் எல்லாப் பகுதி களிலும் பொருளாதார முன்னேற்றம் ஏற்படுவது அவசியமானது. இதன் மூலமே நாட்டுமக்கள் அனைவருடைய நன்மையையும் காக்க முடியும். பொதுத்துறை நிறுவனங்களை நாட்டின் ஒருசில பகுதிகளில் மட்டும் நிறுவாமல் பல பகுதிகளிலும் நிறுவுவது இன்றியமையாதது. இவ்வாறு பொதுத்துறையின் மூலம் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் சமமான வளர்ச்சி ஏற்படுமாறு செய்யலாம்.

(5) சமதர்மச் சமுதாயத்தை அமைத்தல்

நமது அரசின் அடிப்படைக் கொள்கை சமதர்ம முறைச் சமுதாயத்தை அமைப்பதாக இருக்கின்றது. நாட்டின் பல உற்பத்தி நிலைகளைப் பொதுவுடைமையாக்குவதின் மூலமே சமதர்மத்தைப் பெறமுடியும். அரசு பொதுத்துறையை விரிவடையச் செய்வதும் அவசியமாகின்றது. புதிய தொழில்கள் பலவற்றை அரசு பொதுத் துறையில் அமைக்க வேண்டும். தனியார்துறையில் அமைந்துள்ள பல தொழில்களையும் அரசு நாட்டுடைமையாக்க வேண்டும். பொருளாதாரத்தின் பல துறைகளையும் நாட்டுடைமையாக்குதல்

மூலம் மட்டும் சமதர்மச் சமுதாயத்தை அமைத்துவிட முடியாது. பொதுத்துறை நிறுவனங்கள் சிறப்பாகச் செயல்படுவதிலேயே சமதர்மத்தின் உண்மையான வெற்றி அடங்கியுள்ளது.

பொதுத்துறையை விரிவடையச் செய்வதின் மூலம் விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப் பெறமுடியும். இந்தியாவின் திட்ட மிட்டப் பொருளாதார வளர்ச்சியின் வெற்றி பொதுத்துறையையே சார்ந்திருக்கின்றது. நம்முடைய திட்டங்களின் முதலீட்டு முறைகள் அதிக மூலதனத் தேவையைக் கொண்டவைகளாக இருக்கின்றன. அரசு மட்டுமே இம் முதலீடுகளைச் செய்யத்தக்க நிதி வசதியைப் பெற்றிருக்கின்றது. தனியார்துறையினர் பெரிய திட்டங்களில் அதிக அளவு முதலீடுகளைச் செய்யமுடியாது. எனவே, வளர்ச்சி யடைந்துவரும் இந்தியா போன்ற நாடுகளில் பொதுத்துறையின் வளர்ச்சி இன்றியமையாததாகின்றது. பல நன்மைகளையும் கொடுக்கக்கூடிய பொதுத்துறை இந்தியாவில் சிறப்பான அளவிற்கு வளர்க்கப்பட்டிருக்கவில்லை; அதனுடைய குறிப்பிடத்தக்க அளவில் அமைந்திருக்கவில்லை. பொதுத்துறை வளர்க்கப்பட வேண்டு மென்றால், தனியார்துறை முற்றிலுமாக நீக்கப்படவேண்டுமென்பது அவசியமில்லை. பல தனியார் தொழில்களில் ஒருசிலர் கொள்ளை இலாபம் பெறுவது தடுக்கப்படவேண்டும். செல்வந்தர்களைப் பெரிய செல்வந்தர்கள் ஆகாமல் அரசு பார்த்துக்கொள்ள வேண்டும். செல்வந்தர்களை வறியவர்களாக மாற்றி, வறியவர்களை செல்வந்தர்களாக மாற்றவேண்டியதில்லை. செல்வந்தர்களைச் செல்வந்தர்களாகவே இருக்க அனுமதிக்கலாம்; ஆனால் வறியவர் களையும் செல்வந்தர்களாக்கவேண்டும். வருவாய்ப் பகிர்வில் உள்ள ஏற்றத்தாழ்வுகளையும், செல்வப் பங்கீட்டில் உள்ள வேறுபாடு களையும் குறைப்பதின் மூலமே சமதர்மச் சமுதாயத்தை அடைய முடியும். அரசின் தீவிரக் கொள்கைகளாலும், பொதுத்துறையை விரிவடையச் செய்வதின் மூலமாகவும் உண்மையான சமதர் மத்தைப் பெறலாம். பொதுமக்களின் ஒத்துழைப்பும் இதற்குத் தேவையாகின்றது. வளமான வாழ்வைப் பலரும் பெற பொதுத் துறையின் வளர்ச்சி பல வழிகளிலும் உதவுமெனலாம்.

இந்தியாவில் பொதுத்துறை செயல்படுகின்ற நிலை

பொதுத்துறை நிறுவனங்களில் பெருமளவிற்குப் பொது மக்களின் பணம் முதலீடு செய்யப்படுகின்றது. எனவே இந் நிறுவனங்கள் சிறப்பாகச் செயல்படுவது இன்றியமையாதது. இந்தியாவில் பொதுத்துறை நிறுவனங்கள் சிறந்த முறையில் செயல்படவில்லை. குடிமக்கள் அனைவருக்கும் மன நிறைவைத் தரும் வகையில் அவை இயங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுத்துறை நிறுவனங்களில் அமைந்துள்ள குறைபாடுகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்:

(1) திட்டமிட்டக் காலத்திற்குள் பல பொதுத்துறைத் தொழில்களும் நிறுவப்பட்டு, உற்பத்தித் தொடங்கப்படவில்லை. நீண்ட காலத்திற்குப் பிறகே இத் தொழில்கள் உற்பத்தியைத் தொடங்குகின்றன. திட்டமிட்டபடி உற்பத்தித் தொடங்காத நிலை பொருளாதாரத்தின் பிறதுறைகளையும் பாதிக்கிறது. விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுவது இதனுல் தடைப்படுகின்றது.

(2) குறிப்பிட்ட சில பொதுத்துறை நிறுவனங்கள் சிறப்பான நோக்கங்களுக்காகத் தொடங்கப்படுகின்றன. எவ்வித நோக்கங்களுக்காகப் பொதுத்துறை நிறுவனங்கள் தொடங்கப்படுகின்றன என்பது தெளிவாக விளக்கப்படுவதில்லை.

(3) பொதுத்துறை நிறுவனங்களின் வெற்றி தோல்விகளை மதிப்பீடு செய்ய அரசு நடவடிக்கைகளை எடுப்பதில்லை.

(4) பல பொதுத்துறை நிறுவனங்களிலும் உற்பத்திக் குறியிலக்குகள் அடைய முடியாத அளவிற்கு உயர்வாக நிர்ணயிக்கப்படுகின்றன. குறிப்பிட்டக் காலத்தில் உற்பத்திக் குறியிலக்குகளை அடைய பொதுத்துறை நிறுவனங்கள் தவறிவிடுகின்றன.

(5) தரம் மிக்கப் பொருட்களை உற்பத்தி செய்பவைகளாகப் பொதுத்துறை நிறுவனங்கள் அமைந்திருப்பதில்லை.

(6) பொதுத்துறை நிறுவனங்களில் வீணுன செலவுகள் பலவும் செய்யப்படுகின்றன. மிகப் பெரிய பொதுத்துறை நிறுவனங்களில் அவசியம் குறைந்த செலவுகள் மிகவும் அதிகமாக இருக்கின்றன. இதற்கு உதாரணமாக ஹிந்துஸ்தான் இரும்பு எஃகு நிறுவனத்தைக் குறிப்பிடலாம். மிகப் பெரிய இந்நிறுவனத்தில் வீணுன செலவுகள் பல செய்யப்படுகின்றன.

(7) பொதுத்துறை நிறுவனங்கள் பலவற்றில் விலைகள் சரியான அளவுகளில் நிர்ணயிக்கப்படுவதில்லை.

(8) பல பொதுத்துறை நிறுவனங்களில் செலவைக் காட்டிலும் வருவாய் குறைவானதாக இருக்கின்றது. அரசு உதவி வருகின்ற காரணத்தினுலேயே இவை தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. சில பொதுத்துறை நிறுவனங்கள் மிகக் குறைந்த அளவு இலாபத்தை மட்டுமே பெற்றுவருகின்றன. இலாப நோக்குக் கொண்டு இந்நிறுவனங்கள் செயல்படுவதில்லை. எனினும் ஒரு

நிறுவனம் சிறப்பாகச் செயல்படுகின்றதா என்பதை அதனுடைய இலாபத்தின் அளவிலிருந்தே அறிகின்றோம். பொதுத்துறையில் முதலீடு செய்யப்படும்போது, முதலீட்டிற்கான வருவாய் சிறப்பான அளவில் பெறப்படுமா என்பதை அரசு ஆராய வேண்டும். பொதுத்துறை நிறுவனங்களில் உற்பத்திச் செலவு உயர்ந்த அளவில் அமைகின்றது. திட்டமிட்டக் காலத்திற்குள் இந் நிறுவனங்கள் உற்பத்தியைத் தொடங்குவதில்லை. முதலீட்டின் மூலம் பெறப்படுகின்ற வருவாயும் குறைந்த அளவிலேயே இருக் கின்றது. அரசு இக்குறைகளை நீக்குவதற்கான நடவடிக்கைகளையும் சிறப்பாக, உரியகாலத்தில் எடுப்பதில்லை.

(9) இந்தியப் பொதுத்துறையில் திறமை குறைந்த நிர்வாகம் அமைந்துள்ளது. ஆனால் பொதுத்துறை நிர்வாகிகளும், ஊழியர் களும், உழைப்பாளர்களும் திறமையற்றவர்கள் எனக் கருத முடியாது. இவர்கள் யாவரும் கடமை உணர்வோடு பணி யாற்றினால் பொதுத்துறை நிறுவனங்கள்சிறப்பான முன்னேற்றத்தை உறுதியோடு பெறலாம். பொதுத்துறையில் திறமையானவர்களுக் குச் சரியான வாய்ப்புத் தரப்படுவதில்லை. பயிற்சி வசதிகளும் சிறப்பாக அமைந்திருப்பதில்லை. மேலும், பொதுத்துறை ஊழியர்கள் துணிவுமிக்கக் கொள்கைகளைப் பின்பற்றுவதில்லை. உண்மையான உழைப்பிற்கான ஊக்கங்கள் அளிக்கப்படுவதில்லை. அவர்களின் ஆர்வத்தை அரசின் கட்டுப்பாடுகள் குலைத்துவிடுகின்றன. பொதுத்துறை நிறுவனங்களின் நிர்வாகத்தில் பலவிதக் கட்டுப் பாடுகள் அமைந்துள்ளன. இதனால் எளிய நடவடிக்கைகளுக்கும் அதிகக் காலதாமதம் ஏற்படுகின்றது. சிவப்பு நாடாமுறை இந் நிறுவனங்களில் அமைந்திருத்தல் குறிப்பிடத்தக்கது. பொதுத்துறை நிறுவனங்களின் நிர்வாகத்தில் அரசியல்வாதிகளின் குறுக்கீடு முன்னேற்றத்திற்குத் தடையாக அமைகின்றது. இந்நிறுவனங்கள் திறமையாகச் செயல்படாமைக்கு அரசியல்வாதிகளின் குறுக்கீடு காரணமாகின்றது.

சுருங்கக் கூறின், பொதுத்துறை நிறுவனங்களில் சில குறை பாடுகள் உள்ளன. அவற்றின் உற்பத்தித் திறன் குறைவாக இருக்கின்றது. ஏனெனில் பொதுத்துறை நிறுவனங்களின் வெற்றி தோல்விகள் மதிப்பீடு செய்யப்படுவதில்லை. இதன் காரணமாக இருள் மயமான தோற்றத்தைக் கொண்டதாகவே பொதுத்துறை காட்சியளிக்கின்றது. செல்வந்தர்களிடமிருந்தும், வருவாய் குறைந்த வர்களிடமிருந்தும் வரிகள் வசூலிக்கப்படுகின்றன. பொதுத்துறை யில் இவ்வரி வருவாய் சிறப்பாகப் பயன்படுத்தப்படாமல் வீணடிக்கப்படுகிறது.

சில குறைபாடுகளைக் கொண்டுள்ளன என்பதற்காகப் பொதுத் துறையைப் பெரிதும் குறைகூற முடியாது. பொதுத்துறை பலருக்கும் வேலைவாய்ப்புகளை அளிக்கின்றது. இலாப நோக்கின்றி அது செயல்படுகின்றது. பொதுத்துறையின் வருவாய் திரும்பவும் மக்கள் நலனிற்காகவே செலவு செய்யப்படுகின்றது. வருவாய், செல்வப் பங்கீடுகளில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க உதவுகிறது. சமதர்மச் சமுதாயத்தை அமைக்கவும் இதுவே வழி வகுக்கின்றது. வேளாண்மை, தொழில்துறை ஆகிய இரண்டின் வளர்ச்சியும் பொதுத்துறையின் முன்னேற்றத்தால் காக்கப்படுகின்றது. பொதுத் துறையை விரிவடையச் செய்யாமல் இந்தியா போன்ற வளர்ச்சியடைந்துவரும் நாடுகள் விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப் பெறமுடியாது.

38. இந்தியாவில் திட்டமிட்டப் பொருளாதார வளர்ச்சி

திட்டமிட்ட வளர்ச்சியின் தேவை

வளர்ச்சி குன்றிய நாடுகள் பலவிதச் சிக்கல்களையும் பொருளாதார வளர்ச்சி நிலைகளில் கொண்டுள்ளன. இச் சிக்கல்களைத் தவிர்த்து வளர்ச்சியை எளிதாக்க திட்டம் உதவுகின்றது. திட்டங்களை மேற்கொள்ளாமலும் பொருளாதாரத்தில் வளர்ச்சி ஏற்படுகின்றது. ஆனால் அவ்வளர்ச்சி விரைவானதாக அமைந்திருக்காது. சோவியத் ரஷ்யா திட்டங்களின் மூலம் பெற்ற வெற்றியைத் தொடர்ந்து, உலகின் பல பின் தங்கிய நாடுகளும் திட்டமிட்டுப் பொருளாதார வளர்ச்சியைப் பெற முயன்று வருகின்றன. இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர்தான் திட்டமிட்டு முன்னேற்றமடைவதின் அவசியத்தைப் பல நாடுகளும் உணர்ந்தன. திட்டத்தின் பயனால் பயன்படுத்தப்படாத இயற்கை வளங்களை நாட்டின் ஆக்கத்தை உயர்த்தப் பயன்படுத்தலாம். ஒரு நாட்டின் அதிக ஆக்கமே மக்களுக்கு நல்ல வாழ்க்கைத்தரத்தை அளிக்கிறது. உற்பத்தி உயர்வால் வருவாய் பெருகி, சேமிப்பின் அளவும் அதிகரிக்கின்றது. இவ்வாறு பெறப்பட்ட மூலதனத் திரட்சி வேளாண்மை, சிறு தொழில்கள், பெரிய தொழில்கள் ஆகிய யாவற்றின் வளர்ச்சிக்கும் வகை செய்கின்றது.

திட்டமிடுதலின் மூலம் அரசு பல பொருளாதார வசதிகளைப் பெருக்கித் தருவது போலவே, சமுதாய நலனுக்காகவும் பல நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. பொருளாதாரச் சிக்கல்களைத் தீர்க்கப் பல திட்டங்களைத் தீட்டுகின்றது. திட்டங்களின் முதலீடுகள் முக்கியத்துவங்களுக்கு ஏற்ப பல துறைகளிலும் செய்யப்படுகின்றன. பொருளாதார முன்னேற்றத்தை எளிதாக்கத்

திட்டங்கள் உதவுகின்றன. ஆக்கப்பணிகளில் அரசு திட்டங்களின் மூலம் முதலீடு செய்கிறது. போக்குவரத்து, செய்தித் தொடர்பு, கல்வி வசதி, மருத்துவ வசதி, குடியிருப்பு வசதி போன்ற பலவித வசதிகளும் திட்டங்களின்மூலம் செய்து தரப்படுகின்றன.

இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பிருந்த பொருளாதார நிலைகளுக்கும், தற்பொழுதுள்ள நிலைகளுக்கும் அதிக வேறுபாடுகள் உள்ளன. சுதந்திரம் அடைந்த பிறகு பல திட்டங்களின் மூலம் சிறப்பான முன்னேற்றத்தைப் பொருளாதாரத்தில் பெற்றுள்ளோம். சிறு தொழில்களும், பெரிய தொழில்களும் பெருகியுள்ளன. நீர்ப் பாசன வசதிகள் அதிகரித்துள்ளன. பல அணைகளும் கட்டப்பட்டு மின்சார உற்பத்தியையும் அவற்றின் மூலம் பெற முடிகிறது. முன்பு சாகுபடியில் இல்லாத நிலங்கள் புதிதாகச் சாகுபடிக்குப் பயன்படுத்தப்படுகின்றன. உற்பத்தி அதிகரித்து, வருவாய் உயர்ந்து வசதிகள் பெருகி உள்ளமையால் மக்கள் நல்வாழ்வைப் பெற்று வருகின்றனர். திட்டங்கள் இல்லையென்றால் பொருளாதார வளர்ச்சியைப்பெற நீண்டகாலம் பிடிக்கும் என்பதை அனைவரும் உணர்ந்துள்ளனர்.

எனினும் இந்தியா திட்டங்களின் மூலம் குறிப்பிடத்தக்க அளவில் சிறப்பான முன்னேற்றத்தைப் பெற்றுள்ளது எனக் கூற முடியாது. பல திட்டங்களை நிறைவேற்றிய பின்னும் மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயரவில்லை. இந்தியாவில் தலா வருவாய் ரூ. 230 எனக் கணக்கிடப்பட்டுள்ளது. நம் நாட்டில் வருவாய்களில் அதிக ஏற்றத்தாழ்வுகள் உள்ளமையால், சராசரித் தலா வருவாய் எல்லா மக்களின் உண்மையான வாழ்க்கை நிலையையும் உணர்த்தாது. ஏனெனில் தலா வருவாய் கணக்கெடுப்பில் டாட்டா, பிர்லா, டால்மியா போன்ற மிக அதிக வருவாய் பெறுபவர்களின் வருவாயும் சேர்க்கப்பட்டுள்ளது. நம் நாட்டின் குறைவான தலா வருமானத்துக்கு முக்கிய காரணம் அதிக மக்கட்தொகைப் பெருக்கமேயாகும். நம்முடைய தலா வருவாயை விட அமெரிக்கர்கள் 30 மடங்கு அதிக வருவாயையும்; கனடா நாட்டவர்கள் 20 மடங்கும், இஸ்ரேல் நாட்டவர்கள் 8 மடங்கும், மலேசியர்கள் 5 மடங்கும், ஜப்பானியர்கள் 3 மடங்கும், இலங்கை நாட்டவர்கள் 2 மடங்கும் அதிகத் தலா வருவாயைப் பெறுகின்றனர். இந்தியாவில் குறைந்த சராசரித் தலா வருவாய்க்குக் காரணமான அதிக மக்கட் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தக் 'குடும்பநலத் திட்டங்களை' அரசு செயல்படுத்தி வருகின்றது.

இந்தியாவில் திட்டங்களின்மூலம் வேலையின்மைச் சிக்கலானது தீர்க்கப்படவில்லை. மிக அதிக அளவு முதலீடுகளை அரசு

திட்டங்களின் மூலம் செய்தும் வேலையின்மைச் சிக்கல் அமைந் துள்ளது. இது பொருளாதாரம் முன்னேறுத நிலையையே காட்டு கின்றது. போதுமான நிதிவசதி இன்மையால் அரசு மிகப் பெரிய திட்டங்களை மேற்கொள்ள முடியவில்லை. மூலதனப் பற்றுக்குறையும் அதிக மக்கட் தொகைப் பெருக்கமும் வேலையின்மைச் சிக்கலைத் தந்துள்ளன. இதைத் தீர்ப்பதற்குத் திட்டங்களில் வகை செய்யப் பட்டு வருகின்றது.

வேளாண்மைக்கு நம்முடைய திட்டங்களில் முதல் முக்கியத் துவம் அளிக்கப்பட்டாலும், உணவில் தன்னிறைவை நாம் பெற வில்லை. அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து உணவு இறக்குமதி யைச் செய்கின்றோம். திட்டங்களின் மூலம் மருத்துவ வசதிகள், போக்குவரத்து வசதிகள், நீர்ப்பாசன வசதிகள் ஆகிய யாவும் பெருகியுள்ளன. எனினும் அவற்றின் வளர்ச்சி போதுமான அளவினைக் கொண்டதாக அமைந்திருக்கவில்லை. கல்வி வசதிகள் பெருகியுள்ளன; எனினும் எழுத்தறிவு பெற்றவர்களின்எண்ணிக்கை அதிக அளவு பெருகவில்லை. நாட்டின் வளங்கள் திட்டங்களின் மூலம் பயன்படுத்தப்படுகின்றன; ஆனால் அவை முற்றிலும் சிறப் பாகப் பயன்படுத்தப்படுவதில்லை. தொழில்துறையில் உற்பத்திச் சக்தி பெருகியுள்ளது; பெருகியுள்ள சக்தி முழுதும் பயன் படுத்தப் படவில்லை. திட்டங்களும் பல மேற்கொள்ளப் படுகின்றன; ஆனால் குறியிலக்குகளை எட்டுகின்ற திட்டங்களைப் பெறமுடிவதில்லை. திட்டமிட்டுப் பொருளாதார வளர்ச்சியைப் பெற முயலும் நிலையிலேயே இவ்விதமான பல சிக்கல்களும் தோன்று கின்றன. திட்டங்களை நாம் மேற்கொள்ளாவிட்டால் மேலும் பல சிக்கல்களை நம் பொருளாதாரம் ஏற்கவேண்டி வரும்.

திட்டமென்பது பலவித நோக்கங்களுக்காகச் செயல்படுத்தப் படுகின்றது. பொருளாதாரத்தில் அமைந்துள்ள வளங்கள் எல்லா வற்றையும் சிறப்பாகப் பயன்படுத்தி உற்பத்தியை உயர்த்தத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. திட்டமிடுதலால்தான் உழைப்பின் பயன் சிறப்பாகப் பயன்படுத்தப்படுகின்றது. புதுமை யான சமுதாயம் அமையவும் திட்டங்கள் உதவுகின்றன. குறிப் பிட்ட காலத்திற்குள் குறியிலக்குகளை அடைவதும் திட்ட நோக்கமாக அமைகின்றது. மாறுபடுகின்ற பொருளாதாரச் சூழ்நிலைகளுக்கு ஏற்பத் திட்டங்களில் சில மாறுதல்களும் செய்யப் படுவதுண்டு. ரஷ்யாவில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் அரசின் சர்வாதிகார நிலையோடு கைக்கொள்ளப்பட்டன. ஆனால் இந்தி யாவின் திட்டங்களில் அரசின் சர்வாதிகாரப் போக்கு அமைய முடியாது. ஏனெனில் இந்தியாவில் ஜனநாயக முறையில் சமதர்மம்

கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மக்களின் விருப்பமே அரசால் திட்டங்களின் மூலம் நிறைவேற்றப்படுகின்றது. உலகின் பல நாடுகளும் இந்தியாவின் திட்டமிட்ட வளர்ச்சியைக் கவனித்து வருகின்றன. நாம் பொருளாதாரத்தை முன்னேற்றமடையச் செய்யும் திட்டங்களில் வெற்றி பெற்றால்தான், நம் அரசு பின்பற்றுகின்ற 'சமதர்மக் கொள்கை' வெற்றியைப் பெற முடியும்.

(planning commission)

திட்டமிட்ட வளர்ச்சியின் பின்புலம்

திட்டமிட்டு வளர வேண்டுமென்ற விருப்பமானது நாடு சுதந்திரமடைவதற்கு முன்னமேயே நம் நாட்டில் அமைந்திருந்தது. இந்தியாவில் திட்ட உணர்வை ஏற்படுத்தியவர் மைசூர் மாநிலத்தைச் சேர்ந்த போற்றுதற்குரிய பொறியியல் நிபுணர் சர். விஸ்வேஸ்வரய்யா ஆவார். அவரால் 1934ஆம் ஆண்டில் எழுதப்பட்ட 'இந்தியாவிற்கான திட்டமிட்டப் பொருளாதாரம்' (Planned Economy for India) என்னும் நூல் இந்தியாவில் திட்டமிடுதலின் அவசியத்தை வலியுறுத்தியது. அந்நூலில் இந்தியப் பொருளாதார முன்னேற்றத்திற்கான பத்து ஆண்டுத் திட்டம் ஒன்றும் விளக்கப்பட்டிருந்தது. இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சி திட்டமிடுதலின் இன்றியமையாமையை உணர்ந்து, 1938ஆம் ஆண்டில் 'தேசியத் திட்டக்குழு' (National Planning Committee) அமைக்கப்பட்டது. அதன் பிறகு விடுதலைப் போராட்டமும், இரண்டாவது உலகப் போரும் தொடங்கிவிட்டதால் அக்குழு சரியாகச் செயல் படவில்லை. உலகப் போரினால் பாதிக்கப் பட்டிருந்த பொருளாதாரம் அரசால் சீர்திருத்தப்பட்டது. தேசியத் திட்டக்குழு 1946ஆம் ஆண்டில் பொருளாதாரத்தின் பல துறைகள் பற்றிய ஆய்வுகளை வெளியிட்டது.

இதற்கு முன்பாகவே பம்பாயில் எட்டுத் தொழில் அதிபர்கள் 1943ஆம் ஆண்டில் இந்தியப் பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டம் ஒன்றை வகுத்தனர். ஜனவரி 1944-ல் வெளியிடப்பட்டு அது 'பம்பாய்த் திட்டம்' (Bombay Plan) என அழைக்கப்பெற்றது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாக அமைந்திருந்தவை, பெரிய அடிப்படைத் தொழில்களைத் தொடங்கி 15 ஆண்டுகளில் தொழில் ஆக்கத்தை 500 சதவீதம் அதிகரிப்பதும், வேளாண்மை ஆக்கத்தை 130 சதவீதம் அதிகரிப்பதும் ஆகும். சராசரித் தலா வருவாயை இரு மடங்காக்கும் நோக்கத்தையும் இது கொண்டிருந்தது. 15 ஆண்டுகளில் ரூ. 10,000 கோடி செலவினங்களைக் கொண்டதாக இத்திட்டம் அமைந்தது. இக்காலத்தில் தேசிய வருவாயை 3 மடங்கு உயர்த்தவும் திட்டமிட்டிருந்தது.

இந்திய அரசு ஆகஸ்டு 1944-ல் சர். ஏ. டலால் (Sri. A. Dalal) தலைமையில் 'திட்ட, முன்னேற்றத் துறையை' (Planning and Development Department) ஏற்படுத்தியது. அத்துறை இரண்டாவது உலகப் போரால் சிதைந்திருந்தப் பொருளாதாரத்தை மறு நிர்மாணம் செய்ய ஒரு குறுகியகாலத் திட்டத்தையும், பொதுவான நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கான நீண்டகாலத் திட்டத்தையும் தயாரித்தது. 'பம்பாய்த் திட்டம்' வெளியிடப்பட்டக் காலத்திலேயே எம். என். ராய் (M. N. Roy) 'மக்கள் திட்டம் (Peoples Plan) என்ற ஒன்றை வெளியிட்டார். இது 'இந்திய உழைப்பாளர் பெடரேஷன்' (Indian Federation of Labour) ஆதரவில் தரப்பட்ட திட்டமாகும். பத்து ஆண்டுகளில் ரூ. 15,000 கோடி செலவில் இது மேற்கொள்ளப்பட்டது. இக்காலத்தில் செயல்படுத்தப்படவேண்டிய பணிகள் குறிப்பிடப்பட்டிருந்தன. இத்திட்டம் வேளாண்மை, நுகர் பொருட்களின் உற்பத்தித் தொழில்களுக்கு முக்கியத்துவம் அளித்திருந்தது. வேளாண்மை உற்பத்தியையும், பகிர்வையும் தேசியவுடைமையாக்க வேண்டும் என்ற எண்ணத்தைக்கொண்டதாகவும் இத்திட்டம் அமைந்திருந்தது. இவ்விதத் தனியியல்பை இத்திட்டம் கொண்டிருந்தமையால் அதைச் செயல் படுத்த இயலவில்லை.

இதைத் தொடர்ந்து எஸ். என். அகர்வால் (S. N. Agarwal) 'காந்தியத் திட்டம்' (Gandhian Plan) ஒன்றைத் தயாரித்தார். காந்திய முறையில் முன்னேற்றத்தை அடைய இத் திட்டம் நோக்கத்தைக் கொண்டிருந்தது. 'வார்தா வாணிபக் கல்லூரியின்' (Wardha Commercial College) முதல்வராக இருந்தவர் எஸ். என். அகர்வால். ரூ. 3,500 கோடி செலவிடும் திட்டமாக இது இருந்தது. வேளாண்மைச் சமுதாயத்தைத் தன்னிறைவு பெறச் செய்வதும், குடிசைத்தொழில்களை வளர்ப்பதும் இதனுடைய முக்கிய நோக்கங்களாக இருந்தன. இது ஒரு இலட்சியத் திட்டமாக அமைந்தாலும் சில பெரிய, அடிப்படைத் தொழில்களின் முன்னேற்றத்திற்கு வகை செய்யவில்லை.

இடைக்கால அரசின் மூலமாக 1946-ல் 'திட்ட ஆலோசனைக் குழு' (Planning Advisory Board) அமைக்கப்பட்டது. பல அரசின் துறைகளும் தயாரித்திருந்த திட்டங்களைச் சரிபார்த்து அறிக்கைதர இது அரசால் தோற்றுவிக்கப் பெற்றது. இக்குழு டிசம்பர் 1946-ல் தன்னுடைய அறிக்கையைச் சமர்ப்பித்தது. விடுதலை பெற்றவுடனேயே அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி பண்டித ஜவஹர்லால் நேரு தலைமையில் 'பொருளாதாரத் திட்டக் கமிட்டியை' (Economic Programme Committee) அமைத்தது. அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி பொருளாதாரத்தில் அதிக

உற்பத்தியைப் பெருக்குவதையும், தனியார் முற்றுரிமைகளை நீக்குவதையும், செல்வம் ஒரு சிலரிடத்தில் குவிந்திருப்பதைத் தடுப்பதையும், நகர கிராமப்புறங்களின் வளர்ச்சியில் சமநிலையை ஏற்படுத்துவதையும் நோக்கங்களாக அறிவித்தது. இதன் மூலமே இந்தியப் பொருளாதார முன்னேற்றத்தில் 'கலப்புப் பொருளாதாரம்' (Mixed Economy) ஏற்றுக்கொள்ளப்பட்டது பொருளாதார திட்டக்கமிட்டி அதன் கருத்துகளை ஜனவரி 25, 1948-ல் வெளியிட்டது. நிரந்தரமாகத் திட்டக்குழு அமைக்கப்படுவதின் அவசியத்தையும் இது உணர்த்தியது.

இந்திய அரசின் முதல் தொழிற் கொள்கை ஏப்ரல் 6, 1948-ல் அறிவிக்கப்பட்டது. எதிர்கால பொருளாதார முன்னேற்றத்திற்கான வழி முறைகளைப் பற்றியும் இதில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஜனவரி 26, 1950-ல் இந்தியா குடியரசு நாடாக மாறியது. மக்களின் அரசு பொருளாதாரச் சிக்கல்களைக் களைந்து, பொருளாதார முன்னேற்றத்தை விரைவுபடுத்த விரும்பியது. இதனால் 1950ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் பண்டித ஜவஹர்லால் நேரு தலைமையில் 'திட்டக்குழு' அமைக்கப்பெற்றது. நாட்டின் வளங்கள் எல்லாவற்றையும் பயன்படுத்தி வளர்ச்சியை விரைவாக்கும் வழிகளை ஆராயுமாறு இது கேட்டுக் கொள்ளப்பட்டது. திட்டக்குழு ஏப்ரல் 1951 முதல் மார்ச் 1956 வரை செயல்படுத்தத் தக்க முதல் ஐந்தாண்டுத் திட்ட நகலினை ஜூலை 1951-ல் அளித்தது. ஆனால் டிசம்பர் 1952-ல் தான் முதல் ஐந்தாண்டுத் திட்டம் இறுதி வடிவில் வெளியிடப்பட்டது.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் (ஏப்ரல் 1951 முதல் மார்ச் 1956 வரை)

எதிர்காலத்தில் விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுவதற்கான அடிப்படைகள் முதல் திட்டத்தில் அமைக்கப் பட்டன. திட்டக்குழுவால் விரைவாகத் தயாரிக்கப்பட்ட திட்டமாகவும் இது அமைந்திருந்தது. இருப்பினும் ஏப்ரல் 1951-ல் தொடங்குவதற்குப்பதில், $1\frac{1}{2}$ ஆண்டுக் காலம் கழித்து, டிசம்பர் 1952-ல் மட்டுமே இது தொடங்கப்பட்டது. சுதந்திரமடைந்திருந்த நிலையில் இந்தியப் பொருளாதாரம் தேக்க நிலையில் இருந்தது. மக்கட்தொகை பெருக்கம் மிகுதியாக இருந்தபோது, பொருளாதார வளர்ச்சி மெதுவாகவே ஏற்பட்டது. குறைந்த அளவு தொழில் முன்னேற்றமே ஏற்பட்டிருந்தது. மக்களின் வருவாய்க் குறைவால் கிராமங்களிலும், சிறு நகரங்களிலும் அமைந்திருந்த சிறு தொழில்களும், குடிசைத் தொழில்களும் நலிந்திருந்தன. விரைவான மக்கட்தொகைப் பெருக்கத்தால் வேலையின்மைச் சிக்கலும் தோன்றத்தொடங்கியது.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் பொதுமக்களிடம் திட்ட உணர்வைத் தூண்டவும், அவர்களையும் திட்டத்தில் பங்கு கொள்ளச் செய்யவும் சமுதாயநலத் திட்டங்களை மேற்கொண்டது. வேளாண்மை முறையை மாற்றியமைக்க நிலச்சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. உற்பத்தி முறைகளில் மாறுதல்களை ஏற்படுத்துவதின் மூலமே அதிக வேளாண்மை ஆக்கத்தைப் பெற முடியுமென முதல் திட்டம் கருதியது. வருவாய், செல்வப் பங்கீடுகளில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதும் முதல் திட்டத்தின் நோக்கமாக அமைந்தது.

திட்ட அளவு

முதல் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் பொதுத்துறையில் முதலீடு செய்ய ரூ. 2,069 கோடி ஒதுக்கப்பட்டது. பின்னர் இது ரூ. 2,356 கோடியாக மாற்றப்பட்டாலும், உண்மையில் பொதுத் துறையில் செலவிடப்பட்டது ரூ. 1,960 கோடியே ஆகும். தனியார் துறையில் ரூ. 1,800 கோடி முதல் ரூ. 1,900 கோடி வரை செலவிட மதிப்பிடப்பட்டது.

மொத்தத் திட்டச் செலவில் 43 சதவீதம் வேளாண்மை வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டது. இதில் வேளாண்மை வளர்ச்சிக்கு உதவக்கூடிய மின்சார உற்பத்திக்காக 28·1 சதவீதம் ஒதுக்கப்பட்டது; 15 சதவீதம் வேளாண்மை, சமுதாய வளர்ச்சிப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டது. மொத்தச் செலவில் தொழில்களின் முன்னேற்றத்திற்கு 7·7 சதவீதமும், சமுகப் பணிகளுக்காக 22·6 சதவீதமும், போக்குவரத்துச் செய்தித் தொடர்பு வசதிகளுக்காக 23·6 சதவீதமும், மற்றவற்றிற்காக 3 சதவீதமும் ஒதுக்கப்பட்டது.

முக்கியத் துறைகள்

திட்டத்தில் வேளாண்மைத் துறைக்கு முதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. நீர்ப்பாசனம், மின்சாரம் ஆகியவற்றின் வசதிகளைப் பெருக்கி உணவு உற்பத்தியையும், மூலப் பொருட்களின் உற்பத்தியையும் பெருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதற்காக மொத்தச் செலவில் ரூ. 861 கோடி ஒதுக்கப்பெற்றது. முக்கியத்துவத்தில் இரண்டாவது இடம் போக்குவரத்துச் செய்தித் தொடர்பு வசதிகளுக்கு கொடுக்கப்பட்டது. இதற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 523 கோடியாகும். அடுத்து கல்வி, சுகாதாரம், வீட்டு வசதிகளுக்காக மொத்தச் செலவில் 22·6 சதவீதம் ஒதுக்கப் பெற்றது. தொழில் வளர்ச்சிக்குக் குறைந்த அளவு மூலதனமே ஒதுக்கப்பட்டது. பெரிய தொழில்களின் முன்னேற்றத்திற்கு

ரூ. 139 கோடியும், சிறு தொழில்களின் வளர்ச்சிக்கு ரூ. 49 கோடியும் ஒதுக்கப்பட்டது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில் முன்னேற்றத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. தனியார் துறையிடமே தொழில்துறை முன்னேற்றம் விடப்பட்டது. இத் திட்டக்காலத்தில் பல துறைகளிலும் கணிசமான முன்னேற்றம் எதிர்பார்க்கப்பட்டது. உணவு உற்பத்தி, சணல், பருத்தி ஆகிய வேளாண்மை உற்பத்திப் பொருட்களின் ஆக்க அளவில் அதிகரிப்பைப்பெற குறியிலக்குகள் நிர்ணயிக்கப்பெற்றன. நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கி வேளாண்மைத்துறைக்கு உதவவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மின்சார உற்பத்தி, போக்குவரத்து, கல்வி, சுகாதாரம், பல்வேறு தொழில்கள் ஆகியவற்றிலும் முன்னேற்றமடையத் திட்டமிடப்பட்டது. இக் காலத்தில் புதிதாக 32·54 இலட்சம்பேர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கவும், நாட்டு வருவாயில் 11 சதவீத உயர்வைப் பெறவும் முடிவு செய்யப்பட்டது. (1950–51-ல் ரூ 9,000 கோடியிலிருந்து 1955–56-ல் ரூ. 10,000 கோடியாக).

1971–72ஆம் ஆண்டிற்குள் தேசீய வருவாயை இரு மடங்காக்கவும், 1977–78 ஆம் ஆண்டிற்குள் தலா வருவாயை இரு மடங்காக்கவும் முதல் திட்டம் திட்டமிட்டது. சேமிப்புவீதம் இத் திட்டக்காலத்தில் 50 சதவீதம் அதிகரிக்குமெனக் கணக்கிடப்பட்டது. சேமிப்புவீதம் தேசிய வருவாயில் 1950–51ஆம் ஆண்டில் 5 சதவீதமாகவும், 1955–56-ல் 6¾ சதவீதமாகவும், 1960–61-ல் 11 சதவீதமாகவும், 1967–68-ல் 20 சதவீதமாகவும் உயரும் எனக் குறியிலக்குகள் நிர்ணயிக்கப்பட்டன.

திட்டத்திற்கான நிதி

பொதுத்துறைக்காக ரூ. 2,356 கோடி ஒதுக்கப்பட்டிருந்தாலும், உண்மையில் செலவிடப்பட்டது ரூ. 1,960 கோடியே ஆகும். திட்டத்தை நிறைவேற்றத் தேவையான மூலதனம் பல வழிகளில் பெறப்பட்டது. வரி விதிப்பினாலும், பொதுத்துறை வருவாய் மூலமும் ரூ. 745 கோடி கிடைக்கப்பெற்றது. சிறு சேமிப்பால் ரூ. 300 கோடியும், உள்நாட்டில் பொதுமக்களிடமிருந்து பெற்ற கடன் மூலமாக ரூ. 203 கோடியும், பிற வழிகளில் ரூ. 100 கோடியும் அரசிற்குக் கிடைத்தது. போதுமான நிதி வசதியைப் பெற முடியாமையால் பற்றுக்குறை நிதியாக்கம் ரூ. 415 கோடி என்ற அளவிற்குப் பின்பற்றப்பட்டது. வெளிநாட்டு உதவியால் ரூ. 197 கோடி கிடைத்தது.

வசதிகளைத் திரட்டுவதற்கும், முன்னேற்றத் திட்டங்களுக்கு உதவுவதற்கும் நிதி வசதி தேவையாகின்றது. மொத்த மூலதனத்தில் அரசின் வரிவிதிப்பு, உள்நாட்டுக் கடன் போன்றவைகளின் மூலம் 73 சதவீதமும், பற்றுக்குறை நிதியாக்கத்தின் மூலம் 17 சதவீதமும், வெளிநாட்டு உதவியின் மூலம் 10 சதவீதமும் பெறப்பட்டன. இத் திட்டக்காலத்தில் சிறு சேமிப்பு பெருகியது. பற்றுக்குறை நிதியாக்கமும் எச்சரிக்கையாகப் பின்பற்றப்பட்டது. வெளிநாட்டு மூலதனம் முற்றிலும் பயன்படுத்தப்படாமைக்கு குறையுள்ள திட்டமும், திட்டங்களை நிறைவேற்றுவதில் காலதாமதமும், கருவிகள் இயந்திரச் சாதனங்கள் பற்றுக்குறையும், பயிற்சி பெற்றத் தொழிலாளர்கள் இல்லாமையும் காரணங்களாக அமைந் திருந்தன. பொதுவாக, முதல் திட்டத்தை நிறைவேற்றுவதில் நிதிப் பற்றுக்குறை ஏற்படவில்லை எனலாம்.

சாதனைகள்

முதல் ஐந்தாண்டுத்திட்டக் காலத்தில் பொருளாதாரத்தில் அமைந்திருந்த பல சிக்கல்கள் நீக்கப்பட்டன. திட்ட நோக்கங்கள் யாவும் வெற்றி பெருவிடினும், பொருளாதாரப் போக்கில் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. கட்டுக்கோப்பான பொருளா தாரத்தை முதல் திட்டத்தின்மூலம் பெற முடிந்தது. பணவீக்கநிலை கட்டுப்படுத்தப்பட்டமைக்கு வேளாண்மை உற்பத்தியில் ஏற்பட்ட உயர்வும் காரணமாக இருந்தது. 1951ஆம் ஆண்டிற்கும் 1956ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்டக் காலத்தில் விலைகள் 15 சதவீதம் குறை வடைந்தன. இயற்கைச் சக்திகளின் ஒத்துழைப்பினல் உணவு உற்பத்தியும் 25 சதவீதம் கூடியது. பல துறைகளிலும் முன்னேற்றம் பெறப்பட்டாலும் வேளாண்மை, நீர்ப்பாசனம், சமுதாய நலன் ஆகிய துறைகளில் மிகச் சிறப்பான வளர்ச்சி ஏற்பட்டது. சில துறைகளில் குறியிலக்குகளைவிட அதிக உற்பத்தி உயர்வு தோன்றியது.

முதல்திட்ட வெற்றியின் விளைவாக தேசிய வருவாய் 18·4 சதவீதம் உயர்ந்தது; தலா வருவாய் 11 சதவீதம் அதிகரித்தது. நீர்ப்பாசனத் திட்டங்களின் மூலம் புதிதாக 1·6 கோடி ஏக்கர் நிலம் பாசன வசதிபெற்றது. பருத்தி உற்பத்தியின் அளவு 45 சதவீதம் கூடியது. தொழில்கள் தொடங்கப்பட்டதால், தொழில் உற்பத்தியின் அளவும் 25 சதவீதம் அதிகரித்தது. சமுதாய வளர்ச்சித் திட்டம் நாடுமுழுதும் விரிவுபடுத்தப்பெற்றது. வட்டார வளர்ச்சி முறையின் மூலமாக வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கவும், மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன.

திட்டம் தொடங்கிய ஆண்டு முதல் முதலீட்டின் அளவும் படிப் படியாக அதிகரித்து வருகின்றது. 1950–51-ல் ரூ. 450 கோடியாக மட்டுமே இருந்த முதலீடு 1955–56-ல் ரூ. 790 கோடியாக உயர் வடைந்தது. தேசிய வருவாயில் முதலீட்டுவீதம் 5 சதவீதத்தி லிருந்து 7 சதவீதமாக அதிகரித்தது. சராசரித் தலா வருவாய் 246 ரூபாயிலிருந்து 274 ரூபாயாக உயர்ந்தது தேசிய வருவாய் எதிர் பார்த்த அளவைவிடக் கூடியது.

நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வகையில் பொருளாதார அமைப்பு முறைகளில் சமுதாய வளர்ச்சித் திட்டங் களின் மூலம் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. இக்காலத்தில் கூட்டுறவு இயக்கம் சிறப்பான அளவிற்கு விரிவாக்கம் பெற்றது. நாடு முழுவதும் பலவகைப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் தோற்று விக்கப்பட்டு, அவை கணிசமான வளர்ச்சியைப் பெற்றுவிட்டன. நிலச் சீர்திருத்தமாக ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்டு, நிலக் குத்தகை முறையிலும் மாறுதல்கள் செய்யப்பட்டன. ஆனால் நிலச் சீர்திருத்தங்கள் பல மாநிலங்களுக்கிடையேயும் வேறுபடுகின்ற நிலையைக் கொண்டிருந்தன. எல்லாக் கிராமங்களிலும் பஞ்சாயத்து முறை கொண்டுவரப்பட்டது. வேளாண்மைத் துறையைச் சார்ந்த வர்கள் இத் திட்டத்தின் மூலம் அதிக அளவு நன்மைகளைப் பெற்றார்கள். எனினும் திட்டத்தினால் பெற்ற வெற்றியையும் அதன் நன்மைகளையும் விரைவாகப் பெருகிய மக்கட்தொகை இழக்கச் செய்து விட்டது.

மதிப்பீடு

பொதுவாக முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை வெற்றியைப்பெற்ற திட்டமாகவே கருதலாம். எல்லாத் துறைகளின் வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமைந்தது வேளாண்மை ஆக்கத்தில் ஏற்பட்ட அதிகரிப்பே ஆகும். முதல் திட்டத்தை நிறைவேற்றுவதில் ஒரு சில குறைகளும் அமைந்திருந்தன. பல துறைகளுக்குமான திட்டங்கள் சிறப்பாக அமையாமல் இருந்ததால், எல்லாத் துறைகளிலும் சமமான நிலையில் விரைவான வளர்ச்சி ஏற்படவில்லை. சிறப்பான அளவிற்குச் சமுதாய மாற்றங்கள் ஏற்படவில்லையெனவும், வேலை வாய்ப்புகள் பெருகவில்லையெனவும், மக்களிடம் திட்டஉணர்வு எழ வில்லையெனவும் குறைகள் கூறப்படுகின்றன. நிலச்சீர்திருத்தங்கள் எல்லா மாநிலங்களிலும் ஒரே மாதிரியாக நிறைவேற்றப்படாதது, தவறுடையது எனவும் சொல்லப்படுகின்றது. எனினும் இத்திட்டம் அடைந்த சாதனைகளைக் கருதும்போது, இது ஒரு வெற்றியைப் பெற்ற திட்டமே என முடிவிற்கு வரலாம்.

முதல் திட்டக்காலத்தில் மக்கட்தொகை 35·9 கோடியிலிருந்து 38·4 கோடியாக உயர்ந்தது. இதன் காரணமாகத் தேசிய வருவாய் உயர்வு அதிகமாக ஏற்பட்டும், தலா வருவாய் உயர்வு குறைந்த அளவிலேயே ஏற்பட்டது. போக்குவரத்து, செய்தித் தொடர்பு போன்றவைகளின் முன்னேற்றமும் கருதத்தக்க அளவில் அமைந்திருந்தது. பக்ரா-நங்கல், தாமோதர் பள்ளத்தாக்கு, ஹிராகுட் போன்ற பலநோக்கு நதித்திட்டங்களை நிறைவேற்றுவது விரைவாக்கப் பெற்றது; புதிதாகச் சேம்புல், ரிஹண்ட், கொய்னு, கோசி ஆகிய திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன.

1950–51ஆம் ஆண்டிற்கும் 1955–56ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்டக் காலத்தில் பணத்தின் அளிப்பு சுமார் 10 சதவீதம் அதிகரித்தும், விலைகள் 73 சதவீதம் குறைவடைந்தது. இதனால் வாழ்க்கைச் செலவு குறைந்தது. அயல்நாட்டுச் செலுத்து நிலையிலும் அதிகப் பாதக நிலை ஏற்படவில்லை. திட்டக்காலத்தில் அயல்நாட்டுச் செலுத்து நிலையில் ஏற்பட்ட பற்றுக்குறையின் அளவு ரூ. 30 கோடியே ஆகும்.

திட்டக்குழு இத்திட்டத்தின் வெற்றியைப்பற்றிக்குறிப்பிடுவதாவது, ''முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலமாகக் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் வேளாண்மை உற்பத்தியிலும், தொழில் உற்பத்தியிலும் ஏற்பட்டுள்ளது. அமைப்பு முறைகளில் பல மாற்றங்களை ஏற்படுத்தவும் அது உதவியுள்ளது'' என்பதாகும். இவ்விதமாகப் பல வெற்றிகளையும் பெற்ற இத்திட்டத்தை ஒரு 'மாற்றத் திட்டமாகக்' (Transitional Plan) கருதலாம். திட்டமிடப்பட்ட குறியிலக்குகள் குறைந்த அளவிலேயே அமைந்ததால், அவற்றை அடைதல் எளிதாகவே இருந்தது. பருவநிலைகள் வேளாண்மைக்குச் சாதகமாக அமைந்ததால்தான் முதல் திட்டம் வெற்றியைப் பெற்றது எனலாம்.

ஆனால் திட்டக்காலத்தில் தேசிய வருவாய் உயர்ந்தபோது, வேலையின்மைச் சிக்கல் குறைவதற்குப் பதிலாக அதிகரித்தது. 1953ஆம் ஆண்டில் இச்சிக்கல் மோசமான நிலையை அடைந்தபோது, அரசு வேலையின்மையைத் தவிர்க்கப் புதிதாக ரூ. 309 கோடி செலவிட முன் வந்தது. எனினும் வேலையின்மை தீர்க்க முடியாத சிக்கலாகவே அமைந்துவிட்டது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில்துறைக்கு முற்றிலும் முக்கியத்துவம் அளிக்கப்படாமை பெரிதும் குறையுள்ள ஒன்றாகக் கருதப்படுகின்றது. பெரிய தொழில்களும், அடிப்படைத் தொழில்களும் வளர்க்கப்படாத காரணத்தால், இரண்டாவது திட்டக்

காலத்தில் பல சிக்கல்கள் தோன்றின. அரசு கட்டுப்பாட்டு முறைகளையும், ஒழுங்குபடுத்தலையும் மேற்கொள்ளவில்லை. இரண்டாவது திட்டக்காலத்தில் உணவுப் பற்றுக்குறை, தொழில் மூலப்பொருட்களின் பற்றுக்குறை, பணவீக்க நிலை ஆகிய யாவும் ஏற்படுமென்பதை முதல் திட்டக்காலத்தில் உணர்ந்திருக்கவில்லை.

இவ்விதக் குறைபாடுகள் அமைந்திருந்தாலும், முதல் முயற்சியாக இருந்த முதல் ஐந்தாண்டுத் திட்டம் தேக்க நிலையில் இருந்த இந்தியப் பொருளாதாரத்தை இயக்கநிலைப் பொருளாதாரமாக மாற்றியது. தொடர்ந்து இரண்டாவது திட்டத்தை மேற்கொள்ள ஊக்கத்தை அளிப்பதாக அமைந்தது முதல் திட்டத்தின் வெற்றியேயாகும். அரசியல் தலைவர்களும், திட்டத்தைத் தீட்டியவர்களும் திட்டங்களைக்கொண்டு விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப்பெற முடியுமென்ற ஊக்கத்தைப் பெற்றனர். மக்களுடைய வாழ்வின் தரத்தை உயர்த்தவும், வேலையின்மையைத் தீர்க்கவும் தீவிரமானத் திட்டங்கள் தேவையென உணரப்பட்டது. எனவே இரண்டாவது திட்டம் மிகுதியான நம்பிக்கையோடு தொடங்கப் பெற்றது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (ஏப்ரல் 1956 முதல் மார்ச் 1961 வரை)

இரண்டாவது திட்டம் 1956ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நாள் தொடங்கப்பட்டது. முதல் திட்டத்தைக் காட்டிலும் பெரிய திட்டமாக அமைந்த இத்திட்டம் பல இலட்சிய நோக்கங்களைக் கொண்டதாக இருந்தது. கிராமப் பொருளாதாரத்தையே மிகுதியாகக் கொண்ட இந்தியாவைத் தொழில்மயமாக்க இத்திட்டம் முயன்றது; தொழில் வளர்ச்சிக்கு வித்திட்டு, வளர்ச்சியடையாத சமுதாயத்தின் தாழ்ந்த நிலையில் இருந்தவர்களுக்குப் பல வாய்ப்புகளையும் ஏற்படுத்தித் தந்து பொருளாதார முன்னேற்றத்தைப் பெற விழைந்தது. நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் சமநிலை வளர்ச்சியைப் பெறுவதும் இத்திட்டத்தின் ஒரு நோக்காக அமைந்தது.

முதல் திட்டத்தில் எவ்வித குறிப்பிட்ட நோக்கமும் இன்றி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இரண்டாவது திட்டக் காலத்தில் அரசின் நோக்கம் 'சமதர்ம முறைச் சமுதாயத்தை' (Socialistic Pattern of Society) அமைப்பதாக இருந்தது. மக்களின் நலங்காக்கும் அரசாகவும் அது அமைந்தது. முதல் திட்டக் காலத்தில் வேளாண்மை வளர்ச்சி ஓரளவு பெறப்பட்டுவிட்டதால், இரண்டாவது திட்டத்தில் தொழில் முன்னேற்றத்திற்கு முதன்மை

முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. திட்டக்குழுவின் அறிக்கை பிப்ரவரி 1956-ல் வெளியிடப்பட்டு, அது மே 1956-ல் பாராளு மன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 'சமதர்ம முறைச் சமுதா யத்தை' அமைக்க வேண்டுமென்ற அரசியற் கொள்கையோடு, இத்திட்டம் பல இலட்சிய நோக்கங்களைக்கொண்டதாக இருந்தது.

நோக்கங்கள்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கீழ்க்கண்டவை நோக்கங்களாக இருந்தன:

1. மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த தேசிய வருவாயை அதிகரிப்பது. இதன்படி, தேசிய வருவாயை 25 சதவீதமும், சராசரித் தலாவருவாயை 18 சதவீதமும் உயர்த்த முடிவு செய்யப் பட்டது.

2. விரைவானத் தொழில் வளர்ச்சியைப் பெற்று, பொரு ளாதார வளர்ச்சி வீதத்தை உயர்த்துவது. இதற்காக அடிப்படைத் தொழில்களாகிய இரும்பு எஃகு, நிலக்கரி, சிமெண்ட், இரசாயனம் ஆகியவற்றின் வளர்ச்சியில் கவனத்தைச் செலுத்தத் தீர்மானிக்கப் பட்டது.

3. உழைப்புச் செறிந்தத் தொழில்களைக் கிராமங்களிலும், நகரங்களிலும் தோற்றுவித்து முழு நேர வேலையின்மை, பகுதி நேர வேலையின்மையைக் குறைப்பது.

4. தேசிய வருவாயைச் சம அளவில் பங்கிடுவது. வருவாய், செல்வப் பங்கீடுகளில் உள்ள வேறுபாடுகளை நீக்கி சமதர்மப் பொருளாதாரத்தை நிறுவுவது. முன்னேற்றத்திற்கான வாய்ப்பை மக்களுக்குச் சமமாக வழங்குவது.

முதலீடு

இரண்டாவது திட்டக்காலத்தில் பொதுத்துறையில் ரூ. 4,800 கோடியும், தனியார் துறையில் ரூ. 2,400 கோடியும் முதலீடு செய்ய முடிவு செய்யப்பட்டது. எனவே மொத்த முதலீட்டின் அளவு ரூ. 7,200 கோடி என்ற அளவில் அமைந்திருந்தது. பொதுத் துறைக்காக ஒதுக்கப்பட்ட ரூ. 4,800 கோடியில், போக்குவரத்துச் செய்தித் தொடர்பு வசதிக்காக ரூ. 1,385 கோடியும், சமுதாயப் பணிகளுக்காக ரூ. 945 கோடியும், மின்சாரத் துறைகளின் முன்னேற்றத்திற்காக ரூ. 913 கோடியும், தொழில், சுரங்கம்

ஆகியவற்றிற்காக ரூ. 890 கோடியும், வேளாண்மை, சமுதாய வளர்ச்சிக்காக ரூ. 568 கோடியும் ஒதுக்கப்பட்டிருந்தன.

முக்கியத்துவம்

இரண்டாவது திட்டத்தில் எல்லாத் துறைகளுக்கும் முதல் திட்டத்தைக் காட்டிலும் அதிக மூலதனம் ஒதுக்கப்பட்டிருந்தது. முதல் திட்டத்தில் வேளாண்மைக்கு முக்கியத்துவத்தில் முதன்மையான இடம் தரப்பட்டது. ஆனால் இரண்டாவது திட்டத்தில் தொழில் முன்னேற்றத்திற்கு முதல் முக்கியத்துவம் அளிக்கப் பெற்றது. மொத்தத் திட்ட முதலீட்டில் 50 சதவீதத்திற்குமேல் தொழிலைச் சார்ந்த துறைகளிலேயே முதலீடுசெய்ய முடிவு எடுக்கப் பட்டது. வேளாண்மைத்துறை முற்றிலும் புறக்கணிக்கப்படா விட்டாலும், மொத்தத்திட்டச் செலவில் மூன்றில் ஒரு பங்கு அதற்காக ஒதுக்கப்பட்டது. முதல் திட்டத்தில் வேளாண்மை வளர்ச்சிக்காகச் செலவிடப்பட்ட மூலதனத்தைவிட, இரண்டாவது திட்டத்தில் அதிக மூலதனம் கொடுக்கத் திட்டமிடப்பட்டது.

அடிப்படைத் தொழில்களுக்காகவும், கனரகத் தொழில்களுக் காகவும், சிறு தொழில்களுக்காகவும் மொத்தச் செலவில் 24 சதவீத மும், வேளாண்மைக்கும் 12 சதவீதமும், பாசனவசதி, மின்சார உற்பத்தி ஆகியவற்றிற்கு 18 சதவீதமும், போக்குவரத்துச் செய்தித் தொடர்புத்துறைக்கு 29 சதவீதமும் ஒதுக்கப்பட்டது. இரண்டாவது திட்டத்தைத் 'தொழில்கள், போக்குவரத்துத்திட்டம்' (Industries and Transport Plan)எனவும் கூறலாம். முதல்திட்டம் 'வேளாண்மை நீர்ப்பாசனத்திட்டமாக' (Agriculture and Irrigation Plan)இருந்தது கிராமத் தொழில்களுக்கும், சிறு தொழில்களுக்குமான முதலீடு முதல் திட்டத்தைவிட இரண்டாவது திட்டத்தில் இரு மடங்காக்கப் பெற்றது. இரண்டுத் திட்டங்களிலும் போக்குவரத்துச் செய்தித் தொடர்புத்துறைக்கான முக்கியத்துவம் ஒரே அளவில் இருந்தது, மொத்தச் செலவில் சமுதாயப்பணிக்கான சதவீதச் செலவு முதல் திட்டத்தைவிட, இரண்டாவது திட்டத்தில் குறைக்கப்பட்டது. திட்டச் செலவில் இரண்டாவது திட்டத்தில் தொழில்களுக்கும், மூலப்பொருட்கள் உற்பத்திக்கும் 20 சதவீதம் ஒதுக்கப்பட்டது; முதல் திட்டத்தில் இதன் அளவு 4 சதவீதமேயாகும். இரண்டாவது திட்டத்தில் வேளாண்மைக்காகவும், நீர்ப்பாசன வசதிகளுக் காகவும் 20 சதவீதம் ஒதுக்கப்பெற்றது; முதல் திட்டத்தில் இதன் அளவு 31 சதவிதமாகும்.

இரண்டாவது திட்டத்தைத் தயாரித்த பேராசிரியர் பி. சி. மகலானோபிஸ் (Prof. P. C. Mahalanobis) அதனுடைய அடிப்

படைக் கொள்கையைப் பின்வருமாறு தருகின்றார்: "பெரிய தொழில்களில் முதலீடுகளை அதிகரிப்பதும், பல பணிகளின்மீது செலவிடுவதும், புதிய தேவையை ஏற்படுத்துவதோடு வாங்கும் திறனையும் உயர்த்தும். புதிய தேவையைப் பூர்த்தி செய்ய நுகர் பொருட்களின் உற்பத்தியை அதிக முதலீடு செய்து சிறிய தொழில் களின்மூலம் பெறலாம்." இக்கொள்கை அதிக வேலைவாய்ப்பு களைப் பெருக்கவும், உறுதியான மூலதன அடிப்படையை ஏற்படுத்திக் கொள்ளவும், உற்பத்தித்திறனையும் தொழில் நுணுக்கத் திறனையும் வளர்த்துக்கொள்ளவும் வகை செய்யும் எனக் கூறப் பட்டது. எனவே அதிக முக்கியத்துவம் பெரிய இயந்திரங்களின் உற்பத்திக்கும், மின்சாரப் பொருட்களுக்கும், இரும்பு - எஃகு உற்பத்திக்கும், பிற உலோகங்களின் உற்பத்திக்கும், மின்சார உற்பத்திக்கும் தரப்பெற்றது. குறுகிய காலத்தில் பெரிய தொழில் களில் வேலைவாய்ப்புகளைப் பெருக்க முடியாதாகையால் சிறு தொழில்கள், குடிசைத் தொழில்களின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்தப்பட்டது. இக்காரணத்தால் அவற்றின் முன்னேற்றத் திற்காக ரூ. 175 கோடி செலவிடப்பட்டது. வேளாண்மையும், தொழில் துறையும் தொடர்புடையவையாதலால் இரண்டின் முன்னேற்றமும் முக்கியமாகக் கருதப்பட்டது. தொழில் முன்னேற் றத்திற்கான மூலப்பொருட்களை அளிக்கவும், பெருகிய மக்கட் தொகைக்குத் தேவையான உணவுப் பொருட்களை உற்பத்திச் செய்யவும் வேளாண்மை வளர்ச்சி தேவைப்பட்டது.

தொழில் முன்னேற்றம் உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள், இயந்திரங்கள், கருவிகள், நில முன்னேற்ற முறைகள் ஆகியவற்றைப் பெறத் தேவையானது. இவற்றின் உற்பத்தி அளவை அதிகரிக்க விஞ்ஞான, தொழில் நுட்பப் பயிற்சிகள் அளிப்பது அவசியமாயிற்று. போக்குவரத்து, செய்தித்தொடர்பு, சமுதாயப் பணிகள் போன்றவைகளும் வளர்ச்சியைப் பெறுவது அவசியமாகின்றது. இறுதியாகப் பேராசிரியர் மகலாநோபிஸ் குறிப்பிட்டதாவது, "இரண்டாவது திட்டத்தின் அடிப்படைத் தத்துவம் சமுதாயப் பணிகள், கல்வி, ஆரோக்கியம் ஆகிய வற்றிற்குச் செலவிட்டு மக்களுடைய வாங்கும் திறனை அதிகரிப்ப தாகும். அதிகரிக்கின்ற தேவைக்கு ஏற்ப நுகர்பொருட்களைத் திட்டமிட்டு உற்பத்தி செய்தால், தேவையில்லாத பணவீக்க நிலை ஏற்படாது. திட்டமென்பது தொடர்ச்சியாகப் பெருகும் தேவைக்கு ஏற்பத் தொடர்ச்சியாக உற்பத்தியைப் பெருக்கி பொருளாதாரத்தை விரிவுபடுத்துவதாகும்." [1]

1. P. C. Mahalanobis, Talks on Planning, p. 22.

குறியீட்டளவுகள்

அடிப்படைத் தொழில்களாகிய இரும்பு - எஃகுத் தொழில் போன்ற கனரகத் தொழில்களுக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. பிலாய், ரூர்கேலா, துர்க்காப்பூர் ஆகிய மூன்று இடங்களிலும் அமைந்திருக்கின்ற இரும்பு-எஃகுத் தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறனைப் பெருக்கத் தீர்மானிக்கப்பட்டது. உணவு, பருத்தி, சணல், உற்பத்தியை உயர்த்தவும், நீர்ப்பாசன வசதிகளை அதிகரிக்கவும், சாலைப் போக்குவரத்து, இருப்புப்பாதைப் போக்குவரத்து ஆகிய வற்றை வளர்க்கவும் திட்டமிடப்பட்டது. முன்னமேயே இருந்த இரும்பு-எஃகுத் தொழிற்சாலைகள் ஊக்கமளிக்கப்பட்டதோடு, பிற நாடுகளின் உதவியோடு புதிய தொழிற்சாலைகளும் ஏற்படுத்தப் பட்டன. நாடு முழுவதும் பொறியியல், இரசாயனத் தொழில்கள் வளர்க்கப்பெற்றன. 'கார்வே குழுவின்' அறிக்கைப்படி சிறு தொழில்களின் முன்னேற்றத்திலும் கவனம் செலுத்தப்பட்டது. தொழில் மயமாக்குவதற்கான அடிப்படை இரண்டாவது திட்டக் காலத்தில் அமைக்கப்பட்டது.

உணவுத் தானியங்களின் உற்பத்தியை 650 இலட்சம் டன்னில் இருந்து 805 இலட்சம் டன்னாக உயர்த்தவும், பருத்தி உற்பத்தியை 42 இலட்சம் பேல்களிலிருந்து 65 இலட்சம் பேல்களாகவும், சணல் உற்பத்தியை 40 இலட்சம் பேல்களிலிருந்து 55 இலட்சம் பேல் களாகவும் உயர்த்தத் தீர்மானிக்கப்பட்டது.

நிதி

திட்டத்திற்குத் தேவையான நிதியை ரூ. 800 கோடி வரி விதிப்பின் மூலமும், ரூ. 1,200 கோடி பொதுக்கடன் வாயிலாகவும், இருப்புப்பாதைப் போக்குவரத்துப் போன்ற அரசின் உடைமை களிலிருந்து ரூ. 400 கோடியும் வருவாய் கிடைக்குமென மதிப்பிடப் பட்டது. வெளிநாட்டு உதவியாக ரூ. 800 கோடியும், பற்றுக்குறை நிதியாக்கத்தின் மூலம் ரூ. 1,200 கோடியும், உள்நாட்டு வருவாய்த் துறைகளின் மூலம் ரூ. 400 கோடியும் பெற முடிவு செய்யப் பட்டது.

திட்ட முன்னேற்றம்

இரண்டாம் திட்டக்காலத்தில் நாட்டு வருவாய் 19·5 சதவீதமும் தலா வருவாய் 8 சதவீதமும் அதிகரித்தன. மக்கட்தொகைப் பெருக்கம் 10·3 சதவீதமாக இருந்ததால் நாட்டு வருவாய் எதிர் நோக்கிய 25 சதவீத அளவை எட்டமுடியவில்லை. உணவுத் தானியங்கள், பருத்தி, சணல், எண்ணெய் வித்துகள் போன்ற

வற்றின் உற்பத்தியிலும் உயர்வு ஏற்படவில்லே. அரசின் முதலீட்டின் அளவு அதிக அளவிற்கு உயர்ந்தது. முதல் திட்டக்காலத்தில் தேசிய வருவாயில் 7·5 சதவீதமாக இருந்த முதலீட்டின் அளவு இரண்டாவது திட்டக்காலத்தில் 11 சதவீதமாக உயர்ந்தது. தேசிய வருவாய் அதிக அளவிற்கு உயர்ந்தும் தலா வருவாய் குறைந்த அளவிற்குமட்டுமே உயர்ந்தமைக்கு விரைவாகப் பெருகிய மக்கட் தொகையே காரணமாகும். சிறு சேமிப்பின் அளவு திட்ட மிட்ட அளவை விட ரூ. 100 கோடி குறைவாக இருந்தது. பற்றுக் குறை நிதியாக்கத்தின் அளவு ரூ. 1, 200 கோடி எனத் திட்டமிடப் பட்டாலும், ரூ. 948 கோடி என்ற அளவிற்கு மட்டுமே அம்முறை பின்பற்றப்பட்டது. ஆனல் இதுவே அதிக விலேவுயர்வுகளுக்குப் போதுமானதாக இருந்தது.

வெளிநாட்டு உதவியின் அளவு ரூ. 800 கோடி என நிர்ண யிக்கப் பெற்றிருந்தாலும், அதைவிட ரூ. 290 கோடி அதிகமாகப் பெறப்பட்டது. அயல்நாட்டுச் செலுத்து நிலே பாதமாகவே இருந்தது. இதனுல் அதிக அவசியமில்லாத பொருட்களின்மீது இறக்குமதிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. பொதுச்சட்டம் 480இன் கீழ் ரூ. 534 கோடி மதிப்புள்ள பொருட்கள் இறக்குமதி யாயின. முதல் திட்டத்தைப் போலன்றி இரண்டாவது திட்டத்தில் மொத்த நிதி வசதியில் 24 சதவீதம் வெளிநாட்டு உதவியின்மூலம் பெறப்பட்டது. பற்றுக்குறை நிதியாக்கத்தோடு, மறைமுக வரி விதிப்பாலும் விலேயுயர்வுகளேப் பொருளாதாரம் பெற்றது. தாழ்ந்த நிலேயில் இருந்தவர்கள், நடுத்தரக் குடும்பத்தினர் ஆகியோரின் வாழ்க்கை நலன் இதனுல் பாதிக்கப்பட்டது. தீவிர வரி விதிப்புக் கொள்கை அரசால் பின்பற்றப்பட்டாலும் தனியார் முதலீடு பாதிக்கப்படவில்லே. தனியார் முதலீட்டின் அளவு ரூ. 2,400 கோடி என மதிப்பிடப்பட்டிருந்தாலும், அதைவிட ரூ. 600 கோடி அதிக முதலீடு செய்யப்பட்டது.

திட்டத்தின் சிக்கல்கள்

உணவு உற்பத்தியை ஆண்டொன்றுக்கு 80 மில்லியன் டன்களாக உயர்த்தத் திட்டமிடப்பட்டது. ஆனல் உற்பத்தியில் அதிக அளவு ஏற்றத்தாழ்வுகள் அமைந்திருந்தன என்பதை அடுத்த பக்கத்தில் உள்ள அட்டவணேயின் மூலம் அறியலாம்:

சில ஆண்டுகளில் பருவமழை தவறியமையால் உற்பத்திக் குறைவும், வேறு சில ஆண்டுகளில் பருவமழைச் சாதகமாக இருந் தமையால் உற்பத்தி உயர்வும் ஏற்பட்டது. ஆனல் இறுதிவரை

உணவு உற்பத்தி எதிர்பார்த்த அளவிற்குக் கூடவே இல்லை. பருத்தி, சணல், எண்ணெய்வித்துக்கள் ஆகியவற்றின் உற்பத்தியும் திட்டமிட்ட அளவிற்கு உயரவில்லை.

ஆண்டு	உணவு உற்பத்தி (மில்லியன் டன்களில்)
1955-56	65·8
1956-57	68·8
1957-58	65·2
1958-59	75·5
1959-60	71·7
1960-61	78·0

வேளாண்மை வாணிபப் பொருட்களின் உற்பத்தி உயர்வடைந்ததென்றாலும், திட்டமிடப்பட்டக் குறியீட்டளவை எட்ட முடியவில்லை. தொழில் உற்பத்தியில் சிறப்பான முன்னேற்றம் ஏற்பட்டது. ஆனால் இரும்பு-எஃகு, பருத்தித் தொழில்கள் போன்றவற்றில் வேலைநிறுத்தம் போன்ற சிக்கல்கள் தோன்றின. பெரிய தொழில்கள் வளர்க்கப்பட்டமையால் பல மூலதனப் பொருட்களையும் மூலப்பொருட்களையும் இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. உணவுப் பொருட்களின் இறக்குமதியும் அதிகரித்ததால் அந்நியச் செலாவணிப் பற்றாக்குறை தோன்றியது. பணவீக்க நிலையால் திட்டச்செலவுகள் 30 முதல் 40 சதவீதம் கூடின. வெளிநாட்டு உதவியை அதிகம் அளித்த நாடு அமெரிக்காவாகும். திட்டத்தின் மொத்த முதலீடான ரூ. 4,600 கோடியில் ரூ. 1,090 கோடி (24 சதவீதம்) வெளிநாட்டு உதவியின்மூலம் பெறப்பட்டது.

மதிப்பீடு

இரண்டாவது திட்டத்தைச் செயல்படுத்துவதில் பல சிக்கல்கள் தோன்றின. இயற்கைக் காரணிகள் ஒத்துழையாமையால் வேளாண்மை உற்பத்தி பாதிக்கப்பட்டது. இதனால் தொழில் முன்னேற்றமும் தடைப்பட்டது, விலைகளும் உயர்வடைந்தன. இறக்குமதிப் பெருகி அந்நியச் செலாவணிச் சிக்கல் ஏற்பட்டது. இத்திட்டத்தை இலட்சியமான, துணிகரத் திட்டமெனலாம். முதல் திட்டத்தில் திட்டமிடப்பட்ட செலவுகள்முழுவதும் முதலீடாக்கப்படவில்லை. இரண்டாவது திட்டத்தில் திட்டமிடப்பட்டதைவிட, ரூ. 200 கோடி மட்டுமே குறைவாகச் செலவிடப்பட்டது. இத் திட்டம்

தொடங்கப்பட்ட ஆண்டிலிருந்தே பல சிக்கல்கள் தோன்றிய வண்ணம் இருந்தன. பருவமழை தவறிய நிலை, சூயஸ் கால்வாய் மூடப்பட்டமை, அந்நியச் செலாவணிப் பற்றுக்குறை, விலைகளின் உயர்வு போன்ற பல சிக்கல்கள் ஏற்பட்டன. இக்காரணங்களால் குறியீட்டளவுகளை அடைவதில் ஏற்றத்தாழ்வுகள் அமைந்திருந்தன.

சேமிப்பிற்கும் முதலீட்டிற்கும் இடையே ஏற்பட்டிருந்த இடைவெளியை நீக்க வெளிநாட்டு உதவி, இறக்குமதி, அயலகச் செலாவணி இருப்பைப் பயன்படுத்துதல் ஆகியவை கைக்கொள்ளப் பட்டன. இத்திட்டக்காலத்தில் ஆண்டொன்றுக்கு மக்கட் தொகைப் பெருக்கம் 2 சதவீதத்திற்கும் அதிகமாக இருந்ததால், தேசிய வருவாய் அதிக அளவு உயர்ந்தும் தலா வருவாயில் குறைந்த அளவு உயர்வே ஏற்பட்டது. திட்டக்குழு கணக்கிட்டது படி பொருளாதார வளர்ச்சிவீதம் ஆண்டொன்றுக்கு 1·3 சதவீதம் என்ற அளவிற்கு ஏற்படவில்லை. இதற்குக் காரணமாக அமைந்ததும் அதிக மக்கட்தொகைப் பெருக்கமேயாகும்.

தேசிய ஆக்கமும் எதிர்பார்த்த அளவிற்கு உயரவில்லை. நீண்ட கால மூலதனச் செறிவுள்ளத் திட்டங்களில் மூலதன-உற்பத்திவீதம் (Capital - Output Ratio) 3·86 : 1 என்ற அளவில் அமைந்திருந்தது. திட்டக்குழு மூலதன உற்பத்தி வீதம் 2·3 : 1 என்ற அளவில் அமையுமெனக் கணக்கிட்டது. தேசிய வருவாய் திட்டமிட்டபடி 25 சதவீதம் உயராமையால்தான் மூலதன உற்பத்தி வீதத்தைக் குறைந்த அளவில் பெற முடியவில்லை.

இரண்டாவது திட்டக்காலத்தில் உணவுத் தானியங்களின் உற்பத்தி 65·8 மில்லியன் டன்களிலிருந்து 76 மில்லியன் டன்களாக உயர்ந்தது; பருத்தி உற்பத்தி 4 மில்லியன் பேல்களிலிருந்து 5·1 மில்லியன் பேல்களாகவும், கரும்பு உற்பத்தி 6 மில்லியன் டன் களிலிருந்து 8 மில்லியன் டன்களாகவும், எண்ணெய் வித்துக்கள் 5·6 மில்லியன் டன்களிலிருந்து 7·1 மில்லியன் டன்களாகவும் உயர்ந்தன. எனினும் சணல் உற்பத்தி 4·2 மில்லியன் பேல்களி லிருந்து 4 மில்லியன் பேல்களாகக் குறைந்துவிட்டது. வேளாண்மை உற்பத்தியின் குறியீட்டெண் (1949–50 = 100) எல்லாப் பயிர் களுக்கும் 117 என்ற அளவிலிருந்து 135 என்ற அளவிற்குத் திட்டக் காலத்தில் உயர்ந்தது.

தொழில் முன்னேற்றம் குறிப்பிடத்தக்க நிலை ஏற்பட்டது இரண்டாவது திட்டக்காலத்தில் இரும்புத்தாது, அலுமினியம் ஆகியவற்றின் உற்பத்தி 150 சதவீதம் உயர்ந்தது; எஃகு உற்பத்தி

100 சதவீதமும், இயந்திரக் கருவிகள் உற்பத்தி 500 சதவீதமும், நிர்மாணிக்கப்பட்ட இயக்கச் சக்தியின் திறன் 68 சதவீதமும் உயர்ந்தன. பொதுவான தொழில்உற்பத்திக் குறியீட்டெண் (1950–51 = 100) 40 சதவீதம் அதிகரித்தது.

இரண்டாவது திட்டம் 'தொழில், போக்குவரத்துத் திட்டமாக' அமைந்ததால் பெருமளவில் இயந்திரங்கள், கருவிகள் யாவும் வேளாண்மை, தொழில், போக்குவரத்து முன்னேற்றத்திற்காக உற்பத்தி செய்யப்பட்டன. விஞ்ஞானக் கருவிகளும், மின்சாரச் சாதனங்களும் ஆக்கப்பெற்றன. பொதுத்துறையில் துர்க்காபூர், பிலாய், ரூர்கேலா ஆகிய மூன்று இரும்பு உருக்குத் தொழிற் சாலைகள் அமைக்கப்பட்டன. ஒவ்வொன்றும் தொடக்கக் காலத்தில் 10 இலட்சம் டன்கள் உற்பத்தித் திறன் கொண்டவை. டாடா இரும்பு எஃகு நிறுவனம், இந்திய இரும்பு உருக்கு நிறுவனம், மைசூர் இரும்பு உருக்கு நிறுவனம் ஆகியவற்றின் உற்பத்தித்திறன் முறையே 7 இலட்சம் டன்கள், 5 இலட்சம் டன்கள், 75,000 டன்கள் அதிகரிக்கப்பட்டது.

தொழில்துறையில் பெற்ற சாதனைகள் இயந்திரக் கலப்பைகள், அச்செழுத்துக்கள், மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள், மருந்துகள், டி. டி. டி. (D.D.T.), சாயப்பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்திகளுமாகும். நீண்டகாலத்திற்குப் பயனளிக்கக்கூடிய நுகர் பொருட்களாகிய வானொலிப் பெட்டிகள், மின் விசிறிகள், தையல் இயந்திரங்கள், சைக்கிள்கள், மின்சாரப் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தியும் விரைவடைந்தது.

நிலச்சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. கல்வி, ஆரோக்கிய வசதிகளிலும் சிறப்பான முன்னேற்றம் ஏற்பட்டது.

வேளாண்மை, தொழில்துறைகளில் உற்பத்திப் பெருகியது என்றாலும், குறியீட்டு அளவை எட்டமுடியவில்லை. தேசிய வருவாய் திட்டமிட்ட அளவைக்காட்டிலும் 5·5 சதவீதம் குறைவாகவே பெறப்பட்டது. குறியிலக்கு அளவுகளைவிட பருத்தி உற்பத்தி 1·1 மில்லியன் பேல்கள் குறைவாகவும், கரும்பு உற்பத்தி 3·2 மில்லியன் டன்கள் குறைவாகவும், எண்ணெய் வித்துகள் 0·7 மில்லியன் டன் குறைவாகவும், நிலக்கரி 5·4 மில்லியன் டன்கள் குறைவாகவும், எஃகு 1·9 மில்லியன் டன்கள் குறைவாகவும் உற்பத்தி செய்யப்பட்டன. ஆலை பருத்தித் துணி உற்பத்தியிலும் குறியிலக்கைப்பெற இயலவில்லை. 10 மில்லியன் பேர்களுக்கு வேலை வாய்ப்புகள் தர முயன்றும், 6 மில்லியன் பேர்களுக்கு மட்டுமே வேலை வாய்ப்புகளைத்தர முடிந்தது.

இவ்விதமாகப் பல தோல்விகளையும் கொண்ட இரண்டாவது திட்டம் வசதிகளுக்கு மேல் நிறைவேற்றப்பட்ட ஒன்று என்றும் சொல்லப்படுகிறது. சில காரணங்களால் பொருளாதாரம் வளர்ச்சியில் குறைவான வீதத்தையே கொண்டிருந்தது. அக் காரணங்களைப் பின்வருமாறு தரலாம் :

(1) பருவநிலை மாற்றங்கள் வேளாண்மை உற்பத்திக்குச் சாதகமாக அமையவில்லை. நிலையான முன்னேற்றப் போக்கு வேளாண்மை உற்பத்தியில் ஏற்படவே இல்லை. தொழில்துறையின் தேவைகளை இதனால் பூர்த்தி செய்ய இயலவில்லை. 1957–58ஆம் ஆண்டின் வேளாண்மை உற்பத்தி 1956–57ஆம் ஆண்டை விட 0·9 சதவீதம் மட்டுமே உயர்ந்தது; 1958–59-ல் 1·1 சதவீதம் உயர்ந்தபோது அதற்கு அடுத்த ஆண்டில் உற்பத்தி 1 சதவீதம் குறைந்துவிட்டது. இவ்வாறு உற்பத்தியின் அளவுகளில் வேறு பாடுகள் இருந்தன.

(2) தொழில் உற்பத்தியும் கச்சாப்பொருட்களின் பற்றுக்குறை யாலும், இயந்திரங்கள், கருவிகள் கிடைக்காமையாலும், இயக்கச் சக்தி போதா நிலையாலும் தடைப்பட்டது. 1957–58, 1958–1959ஆம் ஆண்டுகளில் தொழில் உற்பத்தி 1 சதவீத உயர்வு என்ற நிலையான நிலையில் இருந்தது. இது 1959–60-ல் 4·8 சதவீதமாகவும், 1960–61-ல் 7 சதவீதமாகவும் உயர்ந்தது.

(3) திட்டத்தின் தொடக்கத்திலிருந்தே உணவு இறக்குமதி யாலும், மூலப்பொருட்கள், இயந்திரங்கள், கருவிகள், பிற உற்பத்திச் சாதனங்களின் இறக்குமதியாலும் பாதக அயல்நாட்டுச் செலுத்து நிலையே அமைந்திருந்தது. இத்திட்டக் காலத்தில் அயலகச் செலாவணி இருப்பில் ரூ. 521 கோடி பயன்படுத்தப்பட்டு விட்டது. உர உற்பத்தி, இரசாயனப் பொருட்கள் உற்பத்தி, இயக்கச் சக்தி உற்பத்தி ஆகியவைகளின் தொடக்கத்திற்கு நீண்ட காலம் பிடித்தமையாலும் அந்நியச் செலாவணிப் பற்றுக்குறை ஏற்பட்டது. திட்டங்களை நிறைவேற்றி உற்பத்தியைத் தொடங்க நீண்டகாலம் தேவைப்பட்டதாலும் விலையுயர்வுகள் ஏற்பட்டன.

(4) நுகர்பொருட்களின் உற்பத்தியை சிறு தொழில்களாலும், குடிசைத் தொழில்களாலும் உயர்த்தமுடியாத காரணத்தால் பொருளாதாரத்தில் பணவீக்க நிலை தோன்றியது. அத்தொழில் களின் முன்னேற்றத்திற்கான போக்குவரத்து வசதிகளும், நிர்வாக அமைப்பு முறைகளும் சிறப்பாக அமையவில்லை; மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் குறிப்பிடுவதுபோல, இரண்டாவது திட்டக் காலத்தில் மொத்த விற்பனை விலைகளின் குறியீட்டெண் 30 சத

வீதமும், உணவுப் பொருட்களின் குறியீட்டெண் 27 சதவீதமும், தொழில் மூலப்பொருட்கள் 45 சதவீதமும், பொறிசெய்ப் பொருட்கள் 35 சதவீதமும் உயர்வடைந்தன. இவ்வாறு அமைந்திருந்த விலையுயர்வுகளின் காரணமாக இந்தியா விற்பனைக்குரியச் சந்தையாக இருந்தது; வாங்குவதற்குரியச் சந்தையாக அமையவில்லை.

(5) இதன் விளைவாக இந்தியாவின் ஏற்றுமதிகள் பெருகுவதற்கான அறிகுறியே தோன்றவில்லை. ஏற்றுமதியில் தேக்க நிலையே நிலவியது. இரண்டாவது திட்டக்காலத்தில் ஏற்றுமதியின் அளவு ரூ. 51·3 கோடி என்ற குறைந்த நிலையையே கொண்டிருந்தது.

அந்நியச் செலாவணி, நிதிப் பற்றுக்குறையின் காரணமாக 1958-ல் முதலீடுகளில் மாறுதல்கள் செய்யப்பட்டன. அம்முறையின்படி, திட்டத்தை அடிப்படைத் திட்டங்கள் அடங்கிய முதல் பகுதி எனவும், இரண்டாவது பகுதி எனவும் பிரித்தனர். முதல் பகுதியில் ரூ. 4,500 கோடி முதலீட்டளவைக் கொண்ட இரும்பு, நிலக்கரி, இருப்புப் பாதைப் போக்குவரத்து, துறைமுகம், மின்சாரம் ஆகிய திட்டங்கள் அமைந்திருந்தன. இரண்டாவது பகுதித் திட்டத்திற்காக ரூ. 300 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்தது. முக்கியமாகக் கருதப்பட்ட முதல் பகுதித் திட்டங்களை நிறைவேற்றி நிதிவசதி மிகுந்திருந்தால் இரண்டாவது பகுதித் திட்டங்களையும் மேற்கொள்வது என முடிவு செய்யப்பெற்றது.

இவ்வாறு இரண்டாவது திட்டக்காலத்தில் பல சிக்கல்கள் தோன்றிய காரணத்தால், திட்டத்தை நிறைவேற்றுவது அரசிற்குக் கடினமான நிலைகளைத் தந்தது.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் (ஏப்ரல் 1961 முதல் மார்ச் 1966 வரை)

மூன்றாவது திட்டம் தொடங்கப்பட்டபோது, நீண்டகால முன்னேற்றத்தைப் பொருளாதாரத்தில் அடுத்த 15 ஆண்டுகளில் (1961–76) பெறவேண்டுமென்ற நோக்கம் அமைந்திருந்தது. மூன்றாவது திட்ட அறிக்கை இந்த 15 ஆண்டுக் காலத்தில் இந்தியப் பொருளாதாரம் தன்னிறைவைப் பெற்றுத் தானே முன்னேற்றத்தைப் பெறும் வகையில் விரைவான வளர்ச்சியை அடையவேண்டுமென உணர்த்தியது. இரண்டாது திட்டத்தினால் பெற்ற அனுபவம், பொருளாதார முன்னேற்றத்தை நிலையானதாகப் பெற வேளாண்மையை உறுதிப்படுத்தவேண்டும் என்பதை அறிவுறுத்தியது. தொழில்களின் முன்னேற்றத்தைப் பெறுவதும் அவசியமென்பது உணரப்பட்டது.

முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் இந்தியப் பொருளாதாரம் வலுப்பெற்றிருந்தது. அதைத் 'தன்னிறைவைப் பெற்றுத் தானே முன்னேற்றமடைகின்ற' (Self-Veliant and Self-Generating) பொருளாதாரமாக மாற்றவேண்டுமெனக் கருதப் பட்டது. முதல் இரண்டுத் திட்டங்களின் மூலமும் பெற்ற அனுபவ அடிப்படையில் மூன்ருவது ஐந்தாண்டுத்திட்டம் வரையப்பட்டது. இத்திட்டத்தில் திரும்பவும் வேளாண்மை உற்பத்திக்கு முதன்மை யான முக்கியத்துவம் தரப்பட்டது. மறுபுறத்தில், அடிப்படைத் தொழில்களாகிய இரும்பு எஃகு, நிலக்கரி, இயந்திரங்கள், கருவிகள், இரசாயனப் பொருட்கள், மின்சாரம் ஆகியவற்றை உற்பத்திச் செய்யும் தொழில்களின் முன்னேற்றத்திலும் கவனம் செலுத்தப்பட்டது. உற்பத்திப் பணிகளை ஊக்குவிக்கும், நாட்டின் எல்லாத்துறை முன்னேற்றத்திற்குமான முதலீடுகள் செய்யப் பட்டன. தொழில்களின் முன்னேற்றத்திற்கு வேளாண்மை வளர்ச்சியின் அடிப்படை தேவை என நன்கு அறியப்பட்டது.

நோக்கங்கள்

மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கங்கள் கீழ்க்கண்ட வாறு அமைந்திருந்தன :

1. திட்டக்காலத்தில் தேசிய வருவாயை 5 சதவீதத்திற்குக் குறையாமல் உயர்த்துவது; தொடரும் திட்டக் காலங்களிலும் அதே அளவு வளர்ச்சிவீதம் இருக்கும் வகையில் முதலீடுகளைச் செய்வது.

2, உணவுப் பொருட்களின் உற்பத்தியின் அளவில் தன் னிறைவைப் பெறுவது; தொழில் முன்னேற்றத்திற்கும், ஏற்றுமதிக் காகவும் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவது.

3. அடிப்படைத் தொழில்களாகிய இரும்பு - எஃகு, நிலக்கரி, மின்சாரம் ஆகியவற்றை முன்னேற்றமடையச் செய்வது; நாட்டைத் தொழில் மயமாக்குவதற்குத் தேவையான இயந்திரச் சாதனங்களை உற்பத்திச் செய்யும் திறனைப் 10 ஆண்டுகளில் உள் நாட்டிலேயே பெறுவது.

4. வேலை வாய்ப்புகளைப் பெருக்கி, இயன்ற அளவில் மனிதச் சக்தியைப் பயன்படுத்துவது.

5. பொருளாதார வசதிகளைச் சமமாகப் பங்கிடுவது; வருவா யிலும், சொத்துக்களிலும் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பது; வாய்ப்புகளைச் சமமாகப் பகிர்ந்தளிப்பது.

இவ்விதமான நோக்கங்களை நிறைவேற்ற வேண்டியிருந்ததால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் இரண்டாவது திட்டத்தைவிட அதிக நிதித் தேவையைக் கொண்டதாக இருந்தது.

முதலீடு

இத்திட்டக்காலத்தில் பொதுத்துறையில் ரூ. 7,500 கோடி செலவிட முடிவு செய்யப்பட்டது. இதில் ரூ. 6,300 கோடி முதலீடாக இருக்குமெனக் கூறப்பட்டது. தனியார்துறை முதலீடு ரூ. 4·100 கோடியாக இருக்குமென்று மதிப்பிடப்பட்டது. மொத்த முதலீட்டின் அளவு ரூ. 10,400 கோடியாகும். பிறகு நாட்டில் தோன்றிய நெருக்கடி நிலைகள் காரணமாகப் பொதுத்துறையில் செலவிடப்படுகின்ற மூலதன அளவு ரூ. 8,500 கோடியாக உயர்த்தப்பெற்றது. இரண்டாவது திட்டக்காலத்தின் தனியார் துறை முதலீட்டைவிட மூன்றாவது திட்டத் தனியார்துறை முதலீடு 54 சதவீதம் அதிகரித்திருந்தது.

முக்கிய துறைகள்

வேளாண்மை முன்னேற்றத்திற்குத் திரும்பவும் இத் திட்டத்தில் முதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. மொத்த முதலீட்டின் அளவில் வேளாண்மை, நீர்ப்பாசனம், மின்சாரம் ஆகியவற்றின் வளர்ச்சிக்காக 36 சதவீதம் ஒதுக்கப்பட்டது. போக்குவரத்துச் செய்தித் துறைக்காக 20 சதவீதமும், பெரிய தொழில்கள், சிறிய தொழில்கள், உலோகங்களின் உற்பத்தி இவற்றிற்காக 33 சதவீதமும் முதலீடு செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

வேளாண்மை, நீர்ப்பாசனம், மின்சாரம் ஆகியவற்றின் வளர்ச்சிக்காக மூன்றாவது திட்டத்தில் மொத்தச் செலவில் 35 சதவீதம் ஒதுக்கப்பட்டது; இரண்டாவது திட்டத்தில் இதன் அளவு 30 சதவீதம் மட்டுமே ஆகும். வேளாண்மை உற்பத்தியில் 30 சதவீத உயர்வைப்பெறத் திட்டமிடப்பட்டது. திட்டக்குழுவின் கருத்துப்படி, "வேளாண்மை வளர்ச்சி கிராமப்புறங்களில் உள்ள மனிதச் சக்தியைப் பயன்படுத்துவதிலும், உள்நாட்டு வசதிகளை உயர்ந்த அளவு பயன்படுத்துவதிலும் அடங்கியுள்ளது. நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தைப்பெற இதுவே சிறந்த வழியாகும்."

குறியீட்டளவுகள்

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் வேளாண்மை உற்பத்தியை ஆண்டுதோறும் 6 சதவீதம் அதிகரிக்கத் திட்டமிட்டனர். தொழில்துறை உற்பத்தியை ஆண்டுதோறும் 14 சத

வீதம் உயர்த்தக் கருதினர். இயந்திரங்கள், கருவிகள் ஆகியவற்றை உற்பத்திச் செய்யும் தொழில்களின் வளர்ச்சி இன்றியமையாதது என உணரப்பட்டது. 14 மில்லியன் பேர்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் அளிக்க திட்டமிடப்பட்டது. 1966ஆம் ஆண்டிற்குள் உணவு உற்பத்தியை 100 மில்லியன் டன்களாக உயர்த்துவது குறிக்கோளாக இருந்தது. தேசிய வருவாயை மூன்ருவது திட்டக்காலத்தில் ரூ. 14,500 கோடியிலிருந்து ரூ. 19,000 கோடியாக உயர்த்தவும், சராசரித் தலா வருவாயை 330 ரூபாயிலிருந்து 385 ரூபாயாக உயர்த்தவும் குறியீட்டளவுகள் நிர்ணயிக்கப்பெற்றன. முதலீட்டின் அளவைப் பொறுத்த அளவில் இத்திட்டத்தைத் துணிகரமானத் திட்டமெனலாம்.

வளர்ச்சியடைந்து வரும் பொருளாதாரத்தில் உணவுத் தேவையும், கச்சாப் பொருட்களின் தேவையும் பெருகுவதால் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவது அவசியமாகிறது. போதுமான நீர்ப்பாசன வசதிகள், நல்விதைகள், உரங்கள், இயந்திரங்கள், கருவிகள் ஆகியவற்றை அளிப்பதின் மூலம் வேளாண்மை ஆக்கத்தை அதிகரிக்க முடியும். முன்னேற்றமடைந்த பயிர்ச்சாகுபடி முறைகள், நிலப்பாதுகாப்பு, நிலவளப் பாதுகாப்பு ஆகியவையும் வேளாண்மைத்துறையின் வளர்ச்சிக்கு உதவுபவைகளாகும். மேலும் திட்டத்தை வரைந்தவர்கள் வேளாண்மை வளர்ச்சியைக் கூட்டுறவு முறைகளில் பெறுவதையும் வலியுறுத்தினர்கள். கிராமப் பொருளாதாரத்தைப் பலவகைப் படுத்தி, வேளாண்மையல்லாத நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்ய வேண்டும். பால் பண்ணை, கால்நடைப் பராமரிப்பு, கோழிப்பண்ணை மீன் பிடிப்பு போன்றவற்றில் கிராம மக்களை ஈடுபடச் செய்யலாம்.

தொழில்துறை வளர்ச்சி விரைவான பொருளாதார மேன்மைக்குப் பெரிதும் உதவும் எனக் கருதப்பட்டது. 'தன்னிறைவு பெற்றுத் தானே முன்னேற்றத்தைப் பெறத்தக்கப்' பொருளாதாரத்தை அடைய சிறப்பான முதலீட்டு அடிப்படை அமையவேண்டும். அதற்காக இரும்பு எஃகு, நிலக்கரி, எண்ணெய், மின்சாரம், இரசாயனப் பொருட்கள், இயந்திரங்கள், கருவிகளை உற்பத்திச் செய்யும் பொறியியற் தொழில் ஆகிய பல தொழில்கள் வளர்க்கப் பட்டன. பொதுவானத் தொழில் உற்பத்தியை 70 சதவீதமும், இரசாயனப் பொருட்களை 150 சதவீதமும், இரும்பு எஃகு உற்பத்தியை 168 சதவீதமும் எல்லாவகைப்பட்ட இயந்திரங்களின் உற்பத்தியை 143 சதவீதமும் உயர்த்தத் திட்டமிடப்பட்டது.

இவ்விதமான முன்னேற்றக்கொள்கை மூன்ருவது திட்டத்தில் பின்பற்றப்பட்டமைக்குக் காரணம், நிரந்தரமான நீண்டகால

முன்னேற்றத்தைப் பெறுவதற்கான அடிப்படையை அமைத்துக் கொள்வதும், பின் வருகின்ற திட்டங்களில் வெளிநாட்டு உதவியின் அளவைக் குறைப்பதற்காகவும் ஆகும். மூன்றுவது திட்டம் உற்பத்தியைப் பெருக்கி, உற்பத்திச் செலவைக் குறைத்து, நுகர்வைக் கட்டுப்படுத்தி ஏற்றுமதியை அதிகரிக்க நடவடிக் கைகளை மேற்கொண்டது. சிறு தொழில்களும் குடிசைத்தொழில் களும் அதிக வேலை வாய்ப்புக்களை அளிப்பதற்கும், நுகர் பொருட்களை உற்பத்திச் செய்து அளிப்பதற்கும் அவசியமென அறியப்பட்டது. எனவே இவற்றிற்காக மூன்றுவது திட்டத்தில் ரூ. 240·8 கோடி செலவிடப்பட்டது; இரண்டாவது திட்டத்தில் இதன் அளவு ரூ. 175 கோடியாக மட்டுமே இருந்தது.

முன்னேற்றத்திட்ட நிலைகளில் தடைகள் தோன்ருமல் இருக்க போக்குவரத்துச் செய்தித் தொடர்பு வசதிகளும் வளர்க்கப்பட்டன. இருப்புப் பாதைப் போக்குவரத்து, சாலைப் போக்குவரத்து இவை களோடு துறைமுக அபிவிருத்தி, கப்பல் போக்குவரத்து, நீர்வழிப் போக்குவரத்து, ஆகாய விமானப் போக்குவரத்து ஆகியவற்றின் வளர்ச்சியிலும் கவனம் செலுத்தப்பெற்றது. ஆனுல் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் போக்குவரத்துச் செய்தித் தொடர்புத் துறைக்காக மொத்தச் செலவில் 24·6 சதவீதம் மட்டுமே ஒதுக்கப்பட்டது; இரண்டாவது திட்டத்தில் 28 சதவீதம் செலவிடப்பட்டது.

நாட்டின் மக்கள் வசதியை நன்கு பயன்படுத்த கல்வி, ஆரோக்கியம் ஆகியவை வளர்க்கப்பட்டன. மூன்றுவது திட்டத் தின் முக்கிய அம்சமாக இது இருந்தது. வேளாண்மை, தொழில் முன்னேற்றங்களோடு தொடர்புடைய விஞ்ஞான, தொழில் நுட்பக் கல்வியும், ஆராய்ச்சி வசதிகளும் பெருக்கப்பட்டன. எல்லா நிலையில் உள்ள மக்களுக்கும் கல்வி வசதியைப் பெருக்கவும், பொது ஆரோக்கியம், குடும்பநலத் திட்டங்கள் ஆகியவற்றை அளிக்கவும் திட்டமிடப்பட்டது. திட்டமிட்டப் பொருளாதார வளர்ச்சி முறை மக்கட்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தி நிலைப் படுத்தினுல்தான் வெற்றியைப் பெறும் என உணரப்பட்டது. எனவே கல்வி, சுகாதாரம், குடும்பநலத் திட்டம் இவற்றிற்காக ரூ. 839·5 கோடி செலவழிக்கப்பட்டது.

மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டமுறை வேளாண்மை, தொழில் துறைகளை இணைப்பதாகவும், பொருளாதார சமுதாய முன்னேற்றங் களை ஒருங்கு சேர்ப்பதாகவும், நாட்டு முன்னேற்றத்தோடு பிரதேச முன்னேற்றத்தைப் பெறுவதாகவும், உள்நாட்டு வெளிநாட்டு வசதிகளைத் திரட்டுவதாகவும் அமைந்தது. பொதுவான உற்பத்திச்

திறனைப் பெருக்கும் வகையில் விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் வகை செய்யப்பட்டது. சமுதாய மாற்றம், வேலை வாய்ப்பு, மக்கட்தொகைப் பெருக்கத்தின் கட்டுப்பாடு ஆகியவைகளுக்கான கொள்கைகளும் தனித்தனியே பின்பற்றப்பட்டன.

இடையூறுகள்

மூன்றுவது திட்டக்காலத்தில் சில நெருக்கடி நிலைகள் தோன்றின. அயல்நாட்டுச் செலுத்துநிலை பாதகமாக இருந்தது. 1962ஆம் ஆண்டின் சீனப் படையெடுப்பால் பாதுகாப்புச் செலவுகள் கூடின. 1964–65-ல் பருவமழை தவறியமையால் வேளாண்மை உற்பத்தி குறைந்தது. பல மாநிலங்களிலும் பஞ்ச நிலை தோன்றியது. தென் மாநிலங்களிலும், பஞ்சாப் மாநிலத்திலும் வரட்சி நிலவியதால் மின்சார உற்பத்தி பாதிக்கப்பட்டது. இதனுல் மின்சார அளிப்பில் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டமையால் தொழில் முன்னேற்றம் தடைபட்டது. 1965-ல் பாகிஸ்தான் ஊடுருவலால் தோன்றிய போர் நிலையும் பாதுகாப்புச் செலவை அதிகரித்தது. அமெரிக்கா உதவியை அளிப்பதில் ஏற்பட்ட தாமதத்திலும் திட்டத்தைச் செயல்படுத்தும் வேகம் குறைவடைந்தது.

பாதுகாப்புச் செலவு இத் திட்டக்காலத்தில் மிகவும் அதிகரித்தது. 1951ஆம் ஆண்டு முதல் 1961ஆம் ஆண்டு வரை ரூ. 2,074 கோடி பாதுகாப்பிற்காகச் செலவிடப்பட்டது. மூன்றுவது திட்டக்காலத்தில் மட்டும் பாதுகாப்புச் செலவின் அளவு ரூ. 2,884 கோடியாகும். 1962–63ஆம் ஆண்டில் ரூ. 343·37 கோடியாக இருந்த பாதுகாப்பிற்கான செலவு, சீனுவின் படையெடுப்பால் 1963–64ஆம் ஆண்டில் ரூ.708·51 கோடியாக உயர்ந்தது. சீனுவின் படையெடுப்பும், பாகிஸ்தானின் தாக்குதலும் பொருளாதார வளர்ச்சி வேகத்தைப் பாதித்தன. மிகுதியான மூலதனம் பாதுகாப்பிற்காகச் செலவிடப்பட்டது.

நிதி

திட்டத்தின் தொடக்கத்தில் வரிவிதிப்பின்மூலம் திட்டக்காலத்தில் ரூ. 1,100 கோடி மூலதனத்தைப்பெற முடிவு செய்தது. சீனப் போரினுல் பாதுகாப்புச் செலவுகள் அதிகரித்து, அதிக வரிகள் விதிக்கப்பட்டன. மத்திய–மாநில அரசுகளின் வரிவிதிப்பால் ரூ 2,880 கோடி கிடைக்குமென எதிர்பார்க்கப்பட்டது. பற்றுக்குறை நிதியாக்கத்தின்மூலம் ரூ. 1,150 கோடியும், வெளிநாட்டு உதவியாக ரூ. 2,455 கோடியும் பெற முடிவு எடுக்கப்பெற்றது 1963–64ஆம் ஆண்டில் கட்டாயச் சேமிப்புத்திட்டம் கொண்டுவரப்பட்டது.

இத் திட்டக்காலத்தில் புதிய வரிகள் விதிக்கப்பட்டு, பழைய வரிகளின் வீதங்கள் உயர்த்தப்பட்டமையால் மத்திய, மாநில அரசுகளின் வரி வருவாய் அதிக அளவு உயர்ந்தது.

1960–61-ல் மத்திய, மாநில அரசுகளின் மொத்த வருவாய், ரூ. 1,178 கோடியாக இருந்தது; 1965–66-ல் வரி வருவாய் ரூ. 3,599 கோடியாக உயர்ந்தது. இது சுமார் 100 சதவீத உயர்வாகும். நாட்டின் வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்த வரிவிதிப்பு முறை தீவிரமாக்கப்பட்டது. அதிகரிக்கப்பட்ட வரிவிதிப்பின் மூலம் ரூ. 1,710 கோடி கிடைக்குமென மதிப்பிடப்பட்டது; ஆனால் அதைக் காட்டிலும் ரூ. 1,182 கோடி அதிக வரிவருவாய் கிடைத்தது. இதற்குக் காரணமாக அமைந்தது மத்திய அரசும், மாநில அரசுகளும் வரிமுறைகளை அதிகரித்த நிலையாகும். புதிய வரிகளை விதிப்பதைவிட, பழைய வரிவீதங்களை உயர்த்துவதற்கே முக்கியத்துவம் தரப்பட்டது.

பொதுமக்களிடமிருந்து கடனைத் திரட்டுவதில் அரசு இத் திட்டக்காலத்தில் வெற்றி கண்டது. திட்டமிடப்பட்ட ரூ. 800 கோடியைவிட ரூ. 23 கோடி அதிகமாகப் பொதுக்கடன் மக்களிடமிருந்து பெறப்பட்டது. ஆனால் சிறு சேமிப்பின் அளவைத் திட்டமிட்டபடி பெற இயலவில்லை. சிறு சேமிப்பின்மூலம் பெறப்பட்ட நிதி ரூ. 565 கோடியாகும்; திட்டமிட்டதைவிட இது ரூ. 35 கோடி குறைவானதாகும். இதில் மாநிலங்களில் பெற்ற பிராவிடென்ட் நிதி ரூ. 336 கோடியாகும்.

பல வழிமுறைகளைப் பின்பற்றியும் திட்டத்தை நிறைவேற்றத் தேவையான நிதிவசதி கிடைக்காமையால் பற்றுக்குறை நிதியாக்கத்தின் அளவு அதிகரிக்கப்பட்டது. திட்டம் தொடங்கப்பட்டபோது, பற்றுக்குறை நிதியாக்கத்தின் அளவு ரூ. 550 கோடி என நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் இதைக்காட்டிலும் ரூ. 583 கோடி அதிகமாகப் பற்றுக்குறை நிதி பயன்படுத்தப்பெற்றது. எனவே பற்றுக்குறை நிதியாக்கத்தின் மொத்த அளவு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் ரூ. 1,153 கோடியாக அமைந்தது.

பொதுவாக இத் திட்டத்தின்மூலம் நாட்டு வளங்கள் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டன. தேவையான நிதி வசதிகளையும் அரசால் பெற முடிந்தது. வரி விதிப்பை உயர்த்துவதிலும், சிறு சேமிப்பு, கட்டாயச் சேமிப்பு, பிராவிடென்ட் நிதி, பொதுக்கடன் ஆகிய எல்லாவற்றையும் பெறுவதிலும் அரசிற்கு வெற்றி கிட்டியது. ஆனால் பற்றுக்குறை நிதியாக்கம் திட்டமிட்டதைவிட சற்றேறக்குறைய இருமடங்கு உயர்ந்தது. ஆனால் சீனப் படையெடுப்பாலும்,

பாகிஸ்தானின் தாக்குதலாலும் ஏற்பட்ட நெருக்கடி நிலைகளால் இதைத் தவிர்ப்பது இயலாத ஒன்றானது. பணவீக்க நிலையாலும் அரசின் செலவினங்கள் அதிகரித்தன. இதனால் உற்பத்திச் சாதனங்களைப் பெறுவதற்கான செலவும், உழைப்பாளர்களுக்கு ஊதியத்தை அளிப்பதற்கான செலவும் அதிகரித்தன. இந்நிலை மேலும் பற்றுக்குறை நிதியாக்கத்தைப் பின்பற்றத் தூண்டியது எனலாம்.

முன்னேற்றம்

தேசிய வருவாய் உயர்ந்ததென்றாலும், எதிர்பார்த்த அளவிற்கு அதிகரிக்கவில்லை. வருவாய்ப் பெருக்கம் உற்பத்திப் பெருக்கத்தை விட உயர்வாக இருந்தது. தேசிய வருவாய் திட்டமிட்டதில் பாதியளவை மட்டுமே எட்ட முடிந்தது. சராசரித் தலா வருவாய் முதல் நான்கு ஆண்டுகளில் 7 சதவீதமே அதிகரித்திருந்தது.

உணவு உற்பத்தியின் அளவில் நிலையான முன்னேற்றம் அமைந்திருக்கவில்லை. உற்பத்தியில் அமைந்திருந்த ஏற்றத்தாழ்வுகளைப் பின்வரும் அட்டவணையின்மூலம் அறியலாம்.

ஆண்டு	உணவு உற்பத்தி (மில்லியன் டன்களில்)
1960-61	82·0
1962-63	78·5
1964-65	89·0
1965-66	72·0

உணவு உற்பத்தியில் நிலையற்ற போக்கு இருந்ததோடு, குறைந்த அளவில் உற்பத்தி அமைந்திருந்தமையாலும் உணவை இறக்குமதி செய்வது தவிர்க்கமுடியாத ஒன்றாகிவிட்டது. உணவு உற்பத்தி ஆண்டிற்கு 2·6 சதவீதம் மட்டுமே உயர்ந்தது. உணவு உற்பத்தியின் அளவு 1964–65-ல் மட்டுமே உச்சநிலையாகிய 89 மில்லியன் டன் என்ற அளவில் இருந்தது. ஆனால் 1965–66ஆம் ஆண்டிலேயே வரட்சி நிலையால் உற்பத்தி 72 மில்லியன் டன்னாகக் குறைந்துவிட்டது.

பொருட்களின் உற்பத்தியைவிட வருவாய்ப் பெருக்கம் அதிகமாக இருந்ததால் மொத்த விலைகளின் குறியீட்டெண் 36·4 சதவீதம் கூடியது.

தொழில் உற்பத்தி ஆண்டொன்றுக்கு 14 சதவீதம் உயருமென எதிர்பார்க்கப்பட்டது; ஆனால் உற்பத்தி 5·7 சதவீதமே உயர்வடைந்தது. பெரிய தொழில்களும், அடிப்படைத் தொழில்களும் வளர்க்கப்பட்ட அளவிற்கு நுகர்பொருட்களை உற்பத்திச் செய்யும் சிறு தொழில்கள் வளரவில்லை. இதன் காரணமாகவும் பொருளாதாரத்தில் பணவீக்கநிலை ஏற்பட்டது.

இத் திட்டக்காலத்தில் 14·5 மில்லியன் பேர்களுக்கே வேலை வாய்ப்பைப் புதிதாகத் தரமுடிந்தது. இரண்டாவது திட்டக் காலத்தின் இறுதியில் வேலையின்றி இருந்தவர்கள் 7 மில்லியன் பேர்கள். மூன்றாவது திட்டக்காலத்தில் புதிதாக வேலையின்றி இருந்தவர்களின் எண்ணிக்கை 17 மில்லியன் ஆகும். எனவே வேலையின்றி இருந்த 24 மில்லியன் பேர்களில், 14·5 மில்லியன் பேர்களுக்கு வேலைவாய்ப்புகள் தரப்பட்டமையால் மூன்றாவது திட்ட இறுதியில் சுமார் 9·5 மில்லியன் பேர்கள் வேலையின்றி இருந்தனர்.

விலைகளின் உயர்வு வேளாண்மைப் பொருட்களில் மிக அதிகமாக இருந்தது. மூன்றாவது திட்டக்காலத்தில் உணவுப் பொருட்களின் விலைகள் 48·4 சதவீதம் உயர்ந்தன; தொழிற் பொருட்களின் விலைகள் 22·1 சதவீதம் அதிகரித்தன.

இத் திட்டத்தில் பொதுத்துறையில் ரூ. 8,577 கோடி செலவிடப் பட்டது. நிலச்சீர்திருத்தங்களை எல்லா மாநிலங்களும் ஒரே முறையைப் பின்பற்றிக்கொண்டு வரவில்லை. மத்திய அரசிற்கும், மாநில அரசுகளுக்குமிடையே சரியான ஒத்துழைப்பு இல்லாமையாலும் சில சிக்கல்கள் தோன்றின. திட்டக்குழுவின் பரிந்துரைகளின்படி மாநில அரசுகள் செயல்படவில்லை. அவை வரி உயர்வுகளைச் செய்ய விரும்பவில்லை. மாநில அரசுகள் வரி வருவாயைப் பெருக்காமல், திட்டங்களை நிறைவேற்றத் தேவையான நிதி வசதியைப்பெற மத்திய அரசையே நோக்கி இருந்தன. இவ்விதமான காரணங்களால் எதிர்பார்த்த அளவு முன்னேற்றத்தை மூன்றாவது திட்டக்காலத்திலும் பெறமுடியவில்லை.

மதிப்பீடு

மூன்றாவது திட்டம் 1966ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் நாளோடு முடிவடைந்தது. இதனை வெற்றிபெற்றத் திட்டமெனக் கருத முடியாது. மூன்றாவது திட்டத்தை மதிப்பீடு செய்த திட்டக் குழுவும் இதே கருத்தையே பின்வருமாறு கூறியது: ''முன்னேற்றமானது போதுமானதாக இல்லை; எதிர்பார்த்ததைவிட குறைவான முன்னேற்றம் மட்டுமே மூன்றாவது திட்டத்தில் பெறப்பட்டது.''

திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட மூலதனத்தின் பெரும்பகுதி செலவழிக்கப்பட்டாலும், எதிர்பார்த்த அளவிற்கு உற்பத்திக் குறியிலக்குகளைப் பெறமுடியவில்லை. வேளாண்மை, தொழில் துறைகளின் உற்பத்தி குறைந்த அளவிற்கே உயர்ந்தமைக்கு பாதகமான தட்ப வெப்ப நிலைகளே காரணமாகும். வேளாண்மை உற்பத்திக் குறைவும், திட்டங்களை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட காலதாமதமும், வெளிநாட்டு மூலதனத்தையும் மூலதனப்பொருட்களையும் பெறுவதில் தோன்றிய காலதாமதமும், இரண்டாவது திட்டத்தினால் ஏற்பட்ட சில குறைபாடுகளும், எல்லைகளில் ஏற்பட்டத் தாக்குதல்களும் திட்டமிடப்பட்ட குறியிலக்குகளை அடைய முடியாமற் செய்துவிட்டன.

வேளாண்மைப் பொருட்களின் உற்பத்தியில், கரும்பைத் தவிர பிற பொருட்களின் உற்பத்தி குறியீட்டளவுகளை எட்டவில்லை. 1960–61ஆம் ஆண்டின் வேளாண்மை உற்பத்தியைவிட 1961–62-ல் உற்பத்தி 1·2 சதவீதம் மட்டுமே உயர்ந்தது. அடுத்த ஆண்டில் தட்பவெப்ப நிலைகள் சாதகமாக இல்லாத காரணத்தால் உற்பத்தி 5 சதவீதம் குறைந்தது. 1963–64ஆம் ஆண்டின் வேளாண்மை உற்பத்தி அதற்கு முந்தைய ஆண்டைவிட 3·7 சதவீதம் அதிகரித்தது. 1964–65-ல் வேளாண்மை உற்பத்தியின் குறியீட்டெண் 11·2 சதவீதம் உயர்ந்தது. திட்டத்தின் இறுதி ஆண்டில் (1965–66) உற்பத்தி 16·9 சதவீதம் குறைந்தது.

மூன்றாவது திட்டத்தின் முதலாண்டில் தொழில் உற்பத்தி 6·6 சதவீதம் கூடியது; திட்டமிடப்பட்டது 11 சதவீத உற்பத்தி உயர்வாகும். குறைந்த அளவு முன்னேற்றத்திற்கு போக்குவரத்து, கச்சாப்பொருட்கள், இயக்கச்சக்தி, இறக்குமதிப் பொருட்கள் பற்றாக்குறையே காரணமாகும். அடுத்த இரண்டு ஆண்டுகளில் இவற்றின் அளிப்பு அதிகரித்தமையால், உற்பத்தி வீதமானது முறையே 8·1 சதவீதமாகவும், 9 சதவீதமாகவும் உயர்வடைந்தது. ஆனால் 1964–65ஆம் ஆண்டில் வளர்ச்சிவீதம் 8 சதவீதமாகக் குறைந்தது. நிலக்கரி உற்பத்திக் குறைவும், சிமெண்ட் உற்பத்தியில், அதிக உயர்வு இல்லாமையும், பருத்தி, சணல், இரும்பு - எஃகு, அலுமினியம் ஆகியவற்றின் உற்பத்திக்குறைவும் இதற்குக் காரணமாகும். திட்டத்தின் இறுதியாண்டில், இந்தியா - பாகிஸ்தான் சண்டையால் வெளிநாட்டு உதவி பாதிக்கப்பட்டு தொழில் உற்பத்தியின் வளர்ச்சிவீதம் 4·3 சதவீதம் என்ற அளவிற்குக் குறைந்துவிட்டது. மூன்றாவது திட்டக்காலத்தில் மொத்தத் தொழில் உற்பத்தியின் வளர்ச்சி வீதம் 7·9 சதவீதமாக இருந்தது; திட்டமிடப்பட்ட தொழில் உற்பத்தியின் வளர்ச்சிவீதம் 11 சதவீதமாகும்.

இறக்குமதிச் செய்யப்பட்ட மூலப்பொருட்களின் பற்ருக்குறையும், இயந்திரப் பகுதிகள், பாகங்கள் கிடைக்காமையும் குறைந்த தொழில் வளர்ச்சி வீதத்திற்குக் காரணமாக இருந்ததெனத் திட்டக்குழு குறிப்பிட்டது.

குறியிலக்குகளை தொழில் உற்பத்தியில் மூன்ருவது திட்டத்தில் பெறமுடியாவிட்டாலும், மொத்தத் தொழில் உற்பத்தியின் அளவு கணிசமாகக் கூடியது எனலாம். உற்பத்தித் திறன் இரும்பு-எஃகு, அலுமினியம், இரசாயனப்பொருட்கள், பொறியியல், பெட்ரோலியம், உர உற்பத்தித் தொழில்களில் உயர்வடைந்தது. குறிப்பாக, இயந்திரக் கருவிகளின் உற்பத்தி மதிப்பு ரூ. 7 கோடியிலிருந்து ரூ. 29 கோடிக்கு உயர்வடைந்தது. இதைப்போன்றே பெரிய மின்சாரச் சாதனங்கள், பெரிய பொறியியற் சாதனங்கள், இரசாயனப் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தி மதிப்பும் உயர்ந்தது. பெட்ரோலியம், காகிதம், பிளாஸ்டிக் பொருட்கள், உரங்கள் போன்றவற்றின் உற்பத்தியிலும் உயர்வு ஏற்பட்டது.

இருப்புப்பாதைப் போக்குவரத்து, சாலைப் போக்குவரத்து ஆகியவற்ருேடு கடல் போக்குவரத்து முன்னேற்றத்திற்கும் இத் திட்டக்காலத்தில் வகை செய்யப்பட்டது. ஆகாய விமானப் போக்குவரத்தும் வளர்க்கப்பட்டது.

பொதுக்கல்வி வசதிகள் பெருக்கப்பட்டன. எனினும் ஆசிரியர் மாணவர் வீதமானது குறைந்துவிட்டது. இதனுல் கல்வியின் பொது வான தரம் குறைந்துவிட்டது எனவும் சொல்லப்படுகிறது. தொழில் நுணுக்கக் கல்வியின் முன்னேற்றம் ஊக்கமளிப்பதாக அமைந் திருந்தது. மருத்துவம், பொது ஆரோக்கியம், குடும்பநலத் திட்டம், பின்தங்கிய வகுப்பினரின் முன்னேற்றம் ஆகியவற்றிலும் வளர்ச்சி ஏற்பட்டது. குறைந்த வருவாய் பெறுபவர்கள், தொழிற்சாலைகளின் தொழிலாளர் ஆகியோரின் நலனுக்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பெற்றன. பொது ஆரோக்கியத்தின் வளர்ச்சியால் மலேரியா ஒழிக்கப்பட்டது; சராசரி வயதானது 50 ஆண்டுகளாக உயர்ந்துள்ளது. கிராமங்களில் குடும்பநலத்திட்ட நிலையங்கள் 1100லிருந்து 3676 ஆகவும், நகர்ப்புறங்களில் 549லிருந்து 1381 ஆகவும் உயர்ந்துள்ளன. சீன, பாகிஸ்தானிய நாடுகளின் ஊடுருவல்களால் நெருக்கடி நிலைதோன்றி, வேறு பல சமுதாய நலப் பணிகள் மேற்கொள்ளப்படுவது தடைப்பட்டது.

மூன்ருவது ஐந்தாண்டுத்திட்டம் வேலைவாய்ப்புகளைப் பெருக்கித் தருவதில் தவறிவிட்டது. கல்வி கற்றவர்களும், கிராமங்களிலிருந்து நகர்ப்புறங்களில் வந்து குடியேறியவர்களுக்கும் வேலை வசதிகள்

பெருகவில்லை. பொதுவாக மக்கட்தொகைப் பெருக்கமே வேலையின்மைச் சிக்கலுக்கு முக்கியக் காரணமாக அமைகின்றது. தொடர்ச்சியான விலையுயர்வுகளைக் கட்டுப்படுத்துவதிலும் அத் திட்டத்திற்கு வெற்றி கிடைக்கவில்லை. இரண்டாவது திட்டக் காலத்தில் விலைகளின் உயர்வு ஏற்பட்டது. மூன்ருவது திட்டக் காலத்தில் அவசரநிலை அறிவிக்கப்பட்டபோது விலைகளின் உயர்வில் தீவிரப்போக்குக் காணப்பட்டது. 1962–63ஆம் ஆண்டு வரை குறைந்த அளவு மட்டுமே விலையுயர்வுகள் ஏற்பட்டன. அதற்குப்பின் விலையுயர்வுகள் மிக அதிக அளவில் ஏற்பட்டன. 1965–66-ல் மொத்த விற்பனைக் குறியீட்டெண் 1960–61ஆம் ஆண்டைவிட 32 சதவீதம் உயர்வடைந்தது.

வேளாண்மை, தொழில் துறைகளின் உற்பத்திக் குறைவாக இருந்தமையால், பொருளாதாரத்தின் வளர்ச்சிவீதமும் குறைவாகவே இருந்தது. ஆண்டொன்றிற்கு 5 சதவீத பொருளாதார வளர்ச்சியைப்பெறத் திட்டமிடப்பட்டது. ஆனால் அந்த அளவிற்கு எந்த ஆண்டிலும் வளர்ச்சி பொருளாதாரத்தில் ஏற்படவில்லை. இத் திட்டத்தின் ஐந்தாண்டுகளிலும் தேசிய வருவாய் உயர்வில் மிகுந்த ஏற்றத்தாழ்வுகள் அமைந்திருந்தன.

திட்டக்குழு மூன்ருவது திட்டக்காலத்தில் மூலதன - உற்பத்தி வீதம் 2·3: 1 என்ற குறைந்த அளவில் இருக்குமெனக் கணக்கிட்டது. ஆனால் உண்மையில் மூலதன - உற்பத்தி வீதம் 3·53 : 1 என்ற அதிக அளவில் அமைந்திருந்தது. மூன்ருவது திட்டம் நிறைவேற்றப்படும்போது ஏற்றுமதிகளைவிட இறக்குமதிகள் அதிகமாக இருந்தன. 1965–66-ல் ரூ. 1,335·3 கோடி என்ற அளவிற்கு இறக்குமதிச் செய்யப்பட்டு, ரூ. 781·8 கோடி என்ற அளவிற்கு மட்டுமே ஏற்றுமதிச் செய்யப்பட்டது.

மூன்ருவது திட்டம் ஓரளவு வெற்றி பெற்றமைக்கு அதிக அளவு அயல்நாட்டு உதவியே காரணமாகும். இவ்வாறு வெளிநாட்டு உதவியை உயர்ந்த அளவில் பெற்றமை பொருளாதாரம் வளர்ச்சி யடைந்து வந்த நிலையையே உணர்த்தியது. ஆயினும் எதிர் காலப் பொருளாதார முன்னேற்றம் அதிக வெளிநாட்டு உதவியால் தடைப்படும். மூன்ருவது திட்டத்தைப் பற்றிய திட்டக்குழுவின் இடைக்கால மதிப்பீடும் இக்கருத்தையே கொண்டிருந்தது. பொதுத்துறையும், தனியார்துறையும் அதிக அளவில் வெளிநாட்டு உதவியைப் பெறக்கூடாது எனவும் அது வலியுறுத்தியது.

மத்திய அரசிற்கும் மாநில அரசுகளுக்கும் இடையே சிறப்பான ஒத்துழைப்பு இல்லாமையால், திட்டங்களை நிறைவேற்றுவதற்கு

நீண்டகாலம் பிடித்தது. மக்கள் திட்டத்தை நிறைவேற்றத் தங்கள் ஆதரவைச் சிறப்பாக அளிக்கவில்லை. மூன்ருவது திட்டத்தின் குறிக்கோளாகிய 'தன்னிறைவு பெற்றுத் தானே முன்னேற்றமடையும்' பொருளாதாரம் பெறப்பட்டதா என்பதை ஆராய்வது அவசியமாகிறது. இதை 'உள்நாட்டுச் சேமிப்பு - வருவாய் வீதத்தைக்' (Domestic Saving - income Ratio) கொண்டு அறியலாம். திட்டக்குழு மூன்ருவது திட்டத்தின் இறுதியில் உள்நாட்டுச் சேமிப்பு 11·5 சதவீதம் உயருமெனக் கணக்கிட்டது. 1951–52-ல் உள்நாட்டுச் சேமிப்பு தேசிய வருவாயில் 5·3 சதவீத மாக இருந்தது. வெளிநாட்டு உதவியால் பொருளாதாரம் முன்னேற்றமடைந்தமையால் 1960–61-ல் உள்நாட்டுச் சேமிப்பு தேசிய வருவாயில் 8 சதவீதமாகவும், 1965–66-ல் 10·6 சதவீத மாகவும் உயர்ந்தது. தேசிய வருவாயின் முதலீட்டு வீதமும் மூன்ருவது திட்டத்தின் இறுதியில் 11 சதவீதத்திலிருந்து 13 சதவீத மாக அதிகரித்தது. இவற்றின் மூலமாக இந்தியா 'தன்னிறைவு பெற்றுத் தானே முன்னேறுகின்ற' பொருளாதாரத்தைப் பெற வில்லை என்பதை உணரலாம்.

ஆண்டுத் திட்டங்கள் (1966–67 முதல் 1968–69 வரை)

மூன்ருவது திட்டம் எதிர்பார்த்த அளவிற்கு வெற்றியைப் பெற வில்லை. 1962-ல் சீனப்படையெடுப்பாலும், 1965-ல் பாகிஸ்தானின் படையெடுப்பாலும் பொருளாதாரத்தில் பல சிக்கல்கள் தோன்றின. விலைகள் உயர்ந்தவண்ணம் இருந்தன. அயல் நாட்டு வாணிபத்தில் பாதகநிலை அமைந்திருந்தது. வேலையின்மைச் சிக்கல் தீவிரமடைந்தது. பொருளாதாரத்தில் நிலையற்ற தன்மை இருந்ததால். மக்களுக்கும் திட்டத்தின் மீதிருந்த நம்பிக்கை குறைந்தது. இக்காரணங்களால் பொருளாதார முன்றேற்றத் தையும், நாட்டின் பாதுகாப்பையும் காக்கும் வகையில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தை வரைந்து செயல்படுத்தக் காலதாமதம் ஏற்பட்டது. இதனுல் நான்காவது திட்டம் தீட்டப்பட்டு செயல் படுத்தத் தொடங்கும்முன், மூன்று ஆண்டுத் திட்டங்களை அரசு மேற்கொண்டது.

மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டமானது 1966ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் நாளோடு முடிவடைந்தது. அதைத் தொடர்ந்து நான் காவது ஐந்தாண்டுத் திட்டமானது தொடங்கப்படவில்லை. அதற்குப் பதிலாக 1966–67, 1967–68ஆம் ஆண்டுகளுக்கான ஆண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. செப்டம்பர் 1967-ல் திட்டக்குழு 1968–69ஆம் ஆண்டிற்கான ஆண்டுத்திட்டத்தை மேற்கொள்ளவும் திட்டமிட்டது. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கும், நான்காம்

ஐந்தாண்டுத் திட்டத்திற்கும் இடைப்பட்ட மூன்று ஆண்டுகளில் மூன்று ஆண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆண்டுத் திட்டங்கள் மூன்ருவது திட்டக்காலத்தில் பொருளாதார நிலைகளில் ஏற்பட்டக் குறைபாடுகளை நீக்க முயன்றன. சாத்தியமான வளர்ச்சிவீதத்தைப் பெறவும், பணவீக்க நிலை ஏற்படாத வகையில் பொருளாதாரத்தைக் காக்கவும் இத்திட்டங்கள் அவற்றை முக்கிய நோக்கங்களாகக் கொண்டிருந்தன. முன்னமேயே ஏற்பட்டிருந்த பொருளாதார, சமுதாய அவசிய வசதிகளைப் பயன்படுத்தி எதிர்கால முன்னேற்றத்தைப் பெறவும் திட்டமிடப் பட்டது. முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் ஏற்படுத்தப் பட்ட பொருளாதார வசதிகளை நன்கு பயன்படுத்தக் கருதப் பட்டது.

1966–67ஆம் ஆண்டுத் திட்டம்

இந்த ஆண்டுத் திட்டத்திற்கான மொத்தச் செலவு ரூ. 2,082 கோடியாக நிர்ணயிக்கப்பட்டாலும், உண்மையில் செலவிடப் பட்டது ரூ. 2,221 கோடி ஆகும். நாட்டில் வரட்சிநிலை மாறி பொருளாதாரத்தில் மறுமலர்ச்சி ஏற்படுமெனக் கருதப்பட்டது. மாருக உணவு உற்பத்தியின் குறியீட்டளவாகிய 97 மில்லியன் டன்னிற்குப் பதிலாக 76 மில்லியன் டன் மட்டுமே பெறப்பட்டது. இதனுல் உணவுப் பொருட்களின் விலை உயர்வு 18·4 சதவீதம் என்ற அளவில் இருந்தது. உணவு இறக்குமதியும் தவிர்க்க இயலாததாயிற்று. அயல்நாட்டுச் செலுத்துநிலை தொடர்ந்து பாதகமாகவே இருந்ததால் ஜூன் 1966-ல் ரூபாயின் மதிப்புக் குறைக்கப்பட்டது.

1966–67ஆம் ஆண்டுத் திட்டத்தின் மொத்தச் செலவான ரூ. 2,221 கோடியில் வேளாண்மைக்கு ரூ. 347 கோடியும், நீர்ப் பாசனத்திற்கு ரூ. 144 கோடியும், மின்சார உற்பத்திக்கு ரூ. 399 கோடியும், பெரிய தொழில்களுக்கு ரூ. 543 கோடியும், சிறுதொழில் களுக்கும் கிராமத் தொழில்களுக்கும் ரூ. 45 கோடியும், போக்கு வரத்துச் செய்தித் தொடர்புத் துறைக்கு ரூ. 432 கோடியும், சமூகப் பணிகளுக்கும் மற்றவற்றிற்கும் ரு. 311 கோடியும் செலவிடப் பட்டது. இந்த ஆண்டில் உணவு உற்பத்தி 76 மில்லியன் டன் என்ற அளவில் மட்டுமே இருந்ததால், 8·7 மில்லியன் டன் உணவுத் தானியங்கள் இறக்குமதிச் செய்யப்பெற்றன. தொழில் உற்பத்தி 3 சதவீதம் மட்டுமே கூடியமைக்கு வேளாண்மை உற்பத்திப் பெருகாமையே காரணமாகும். உணவில் தன்னிறைவு அடையாத நிலையோடு, தொழில் உற்பத்திக்குத் தேவையான கச்சாப்

பொருட்கள் பற்றுக்குறையும் இருந்தது. நல்ல முன்னேற்றத்தை 1966-67ஆம் ஆண்டுத் திட்டத்தின்மூலம் பெற இயலவில்லை.

1967–68ஆம் ஆண்டுத் திட்டம்

இத் திட்டக்காலத்தில் ரூ. 2,246 கோடி செலவிடத் தீர்மானம் செய்யப்பட்டது. ஆனால் உண்மையில் செலவிடப்பட்டது ரூ. 2,205 கோடியாகும். திட்டத்தின் மொத்தச் செலவிற்காக ஒதுக்கப்பெற்ற ரூ. 2,246 கோடியில் வேளாண்மை, சமூக வளர்ச்சி, கூட்டுறவு ஆகிய துறைகளுக்கு ரூ. 376 கோடியும், நீர்ப்பாசனத்திற்கு ரூ. 147 கோடியும், மின்சார உற்பத்திக்காக ரூ. 385 கோடியும், பெரிய தொழில்களுக்காக ரூ. 520 கோடியும், கிராமச் சிறுதொழில்களுக்காக ரூ. 43 கோடியும், போக்குவரத்துச் செய்தித் தொடர்புத் துறைக்காக ரூ. 419 கோடியும் சமுதாயப் பணிகளுக்காகவும் மற்றவற்றிற்காகவும் ரூ. 356 கோடியும் ஒதுக்கப்பட்டது. இக்காலத்தில் வேளாண்மையில் வளர்ச்சிப்போக்குக் காணப்பட்டது. வெளிநாட்டு வாணிபத்திலும் வளர்ச்சி ஏற்பட்டது. ஏற்றுமதியில் 3·7 சதவீதம் உயர்வு தோன்றியது. இதனால் அயல்நாட்டுச் செலுத்து நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டது. தேசிய வருவாய் 8·9 சதவீதம் அதிகரித்தது. பொருளாதாரத்தின் பல துறைகளின் முன்னேற்றமும் சிறப்பான அளவில் அமைந்திருந்தது. 1968–69ஆம் ஆண்டுத் திட்டத்தின் வெற்றிக்கு இத் திட்டம் அடிப்படையை ஏற்படுத்தித் தந்தது.

1968–69ஆம் ஆண்டுத் திட்டம்

1968–69ஆம் ஆண்டுத் திட்டத்தில் ரூ. 2,337 கோடி செலவிடத் தீர்மானிக்கப்பட்டது. இம்மொத்தச் செலவில் வேளாண்மை, சமூக வளர்ச்சி, கூட்டுறவு ஆகியவற்றிற்கு ரூ. 328 கோடியும், நீர்ப்பாசனத்திற்கு ரூ. 155 கோடியும், மின்சாரத்திற்காக ரூ. 339 கோடியும், பெரிய தொழில்களுக்காக ரூ. 539 கோடியும், சிறு தொழில்கள், கிராமத் தொழில்களுக்கு ரூ. 41 கோடியும், போக்குவரத்து, செய்தித் தொடர்புத் துறைகளுக்காக ரூ. 426 கோடியும், சமூகப் பணிகளுக்கும் மற்றவற்றிற்கும் ரூ. 509 கோடியும் ஒதுக்கப்பட்டது.

இத் திட்டத்தின்மூலம் மிகச்சிறந்த வளர்ச்சி பொருளாதாரத்தில் ஏற்பட்டது. வேளாண்மைச் சாகுபடிக்குத் தட்பவெப்ப நிலைகள் சாதகமாக இருந்தமையால் உற்பத்தி உயர்ந்தது. எனவே உணவுத் தானியங்களின் விலை 9·5 சதவீதம் குறைவடைந்தது. வேளாண்மை உற்பத்திப் பெருகியமையால் தானியங்களைச்சேமித்து

3·5 மில்லியன் டன் என்ற அளவிற்கு இருப்பாக வைக்கமுடிந்தது. பொருளாதாரத்தின் எல்லாத்துறைகளின் முன்னேற்றமும் சிறப்பாக அமைந்தமையால், ஏற்றுமதியும் 17·5 சதவீதம் அதிகரித்தது. இவ் விதமானப் பல திட்டங்களை நிறைவேற்றியதன் விளைவாக உணரப் பட்டப் படிப்பினை பலவாகும். முதல் திட்டம் ஓரளவு வெற்றி பெற்றமைக்கு வேளாண்மையில் ஏற்பட்ட வளர்ச்சியே காரண மாகும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் மிகவும் தோல்வி யடைந்தமைக்கு, வேளாண்மைக்கு முக்கியத்துவம் அளிக்கப் படாமையும் ஒரு காரணமாக அமைந்தது. 1968–69ஆம் ஆண்டு முதல் இந்தியப் பொருளாதாரம் 'முன்னேக்கித் தள்ளப்பட்டு' (Forword thrust) விரைந்த முன்னேற்றத்தைப் பெற்று வருகின்ற மைக்கும் வேளாண்மை வளர்ச்சியே காரணமாகும்.

மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் வேளாண்மைக்கு முதன்மையான முக்கியத்துவம் தரப்பட்டாலும், பருவமழை சாகு படிக்குச் சாதகமாக இல்லாமையால் உற்பத்தி எதிர்பார்த்த அளவு கூடவில்லை. இதனுல் பொருளாதார வளர்ச்சிவீதமும் சிறப்பாக அமையவில்லை. திட்டங்களின் வெற்றி இவ்வாறு இயற்கைக் காரணிகளைச் சார்ந்தே அமைந்துள்ளது. சிறப்பான நீர்ப்பாசனத் திட்டங்களின்மூலம் இந்நிலையை மாற்ற இயலும். தற்பொழுது அமைந்துள்ள நீர்ப்பாசன வசதிகளையும் முற்றிலுமாகச் சிறப்பாகப் பயன்படுத்த வேண்டும். திட்டத்தின்மூலம் உண்மையான வளர்ச்சியை அப்போதுதான் பெற முடியுமெனலாம்.

1966–67 முதல் 1968–69 வரை நிறைவேற்றப்பட்ட மூன்று ஆண்டுத் திட்டங்களையும் மொத்தமாக ஆராயும்போது, வேளாண் மைக்கும் நீர்ப்பாசனத்திற்கும் அதிக அளவு முக்கியத்துவம் தரப் பட்டது. இவற்றிற்காக ரூ. 1,623·9 கோடி செலவிடப்பட்டது. வேளாண்மை உற்பத்தியைத் திரட்டுவதற்கு இது இன்றியமையாத தாக இருந்தது. இயக்கச் சக்தித் திட்டங்களுக்காக ரூ 1,182·2 கோடியும், போக்குவரத்துச் செய்தித் தொடர்புகளுக்காக ரூ 1,239·1 கோடியும் செலவிடப்பட்டது. பொருளாதாரமுன்னேற்றம் விரைவாக ஏற்பட இவ்வசதிகள் உதவின. வளர்ச்சியடைந்து வரும் பொருளாதாரத்தில் இவ்வித முன்னேற்றங்களைப் பெறுவது அவசியமானது.

தொழில் அடிப்படையைச் சிறப்பாக அமைக்க, 1966ஆம் ஆண்டிற்கும் 1969ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்டக் காலத்தில் ரூ. 1,575 கோடி முதலீடு செய்யப்பட்டது. பல திட்டங்களின் மூலம் பெறப்பட்டிருந்த தொழில் உற்பத்தித்திறனை நன்கு பயன் படுத்துவதும் முக்கிய நோக்கமாக அமைந்திருந்தது.

சமுதாயப் பணிகளுக்கான மொத்தச் செலவு ரூ. 992·4 கோடியாகத் திட்டமிடப்பட்டது. எனினும் கல்வி, விஞ்ஞான ஆராய்ச்சி, குடும்பநலத் திட்டம், குடிநீர் வசதி, ஆரோக்கியத் திட்டங்கள் ஆகியவைகளுக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டது. ரூ. 373·5 கோடி கல்விக்காகவும், விஞ்ஞான ஆராய்ச்சிக்காகவும் ஒதுக்கப் பெற்றது. குடும்பநலத் திட்டத்திற்காக ரூ. 75·2 கோடி செலவிடப் பட்டது. இது மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின் செலவைக் காட்டிலும் சுமார் 3 மடங்கு அதிகமானதாகும். குடிநீர் வசதி ஆரோக்கியத் திட்டங்களுக்காக ரூ. 100·6 கோடி செலவு செய்யப் பட்டது இது மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அளவைவிட ரூ. 5 கோடி குறைவாகும்.

நிதி

1965 முதல் 1967 வரை வேளாண்மை உற்பத்திக் குறைவால் விலையுயர்வுகள் ஏற்பட்டன. தொழில் உற்பத்தியின் வளர்ச்சி வீதமும் தடைப்பட்டது. வரி வருவாய் எதிர்பார்த்த அளவைவிட ரூ. 504 கோடி குறைவாகவே கிடைத்தது. திட்டமல்லாதவைகளுக் கான செலவினங்களும் அதிகரித்தன. அரசின் ஊழியர்களுக்கான பஞ்சப்படி உயர்த்தப்பட்டது. அரசு வாங்கிய பொருட்களின் விலை யுயர்வால் செலவு அதிகரித்தது. ரூபாய் மதிப்புக் குறைப்பால் வெளிநாட்டுக் கடன்களுக்கான வட்டியும் உயர்ந்தது. உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஊக்கச் செலவுகளும் பெருகின.

இருப்புப்பாதைப் போக்குவரத்தின் உபரி ரூ. 55 கோடியாகக் குறைந்தது. போக்குவரத்துச் செலவுகள் அதிகரித்தமையாலும், அமைப்புச் சாதனங்களின் விலை உயர்வாலும், இரயில்வே ஊழியர் களுக்கான பஞ்சப்படி உயர்த்தப்பட்டமையாலும் இந்நிலை ஏற்பட்டது. இரயில்வேயின் முழுத்திறனும் பயன்படுத்தப்பட வில்லை. மற்றப் பொதுத்துறை நிறுவனங்களின் உபரியும் ரூ. 169 கோடியாகக் குறைந்தது.

புதிதாக விதிக்கப்பட்ட வரிகளின்மூலம் ரூ. 611 கோடி வருவாய் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அதில் ரூ. 153 கோடி யளவிற்கு வருவாய்க் குறைவாகவே பெற முடிந்தது.

பற்றுக்குறை நிதியாக்கம் ரூ. 388 கோடி என்ற அளவிற்குத் திட்டமிடப்பட்டது. ஆனால் அதைவிட ரூ. 28 கோடி அதிகமாக அம்முறை பின்பற்றப்பட்டது.

சாதனைகள்

முதல் இரண்டு ஆண்டுத் திட்டங்களாலும் குறைந்த அளவு பொருளாதார முன்னேற்றமே ஏற்பட்டது. 1966–67ஆம் ஆண்டுத் திட்டக்காலத்தில் வரட்சி நிலையால் தேசிய வருவாய் 1·1 சதவீதமே உயர்ந்தது. ஆனால் 1967–68-ல் வேளாண்மை உற்பத்தி அதிகரித்தமையால், தேசிய வருவாய் 9 சதவீதம் அதிகரித்தது. 1968–69ஆம் ஆண்டின் தேசிய வருவாய் அதற்கு முந்தைய ஆண்டைவிட 3 சதவீதம் உயர்வாக இருந்தது.

இவ்வாறு தேசிய வருவாயில் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகளுக்கு, வேளாண்மை உற்பத்தியில் பல ஆண்டுகளிலும் இருந்த வேறுபாடுகளே காரணமாகும். 1966–67-ல் வேளாண்மை உற்பத்தி மிகக் குறைந்த அளவாகிய 76 மில்லியன் டன்களாக இருந்தது. ஆனால் 1967–68-ல் அது 95·6 மில்லியன் டன்களாக உயர்வடைந்தது. 1968–69-ல் 98 மில்லியன் டன்கள் உற்பத்தியைப் பெற இயலும் எனத் திட்டமிடப்பெற்றது. மற்ற பயிர்களின் உற்பத்தி அதிகரித்தாலும், கணிசமான அளவிற்கு உயர்வடைந்தது எனக் கூற முடியாது. 1967–68-ன் எல்லா வேளாண்மைப் பொருட்களின் உற்பத்திக்குமான குறியீட்டெண் 1964–65-ன் குறியீட்டெண்ணைவிட 2 சதவீதம் மட்டுமே அதிகமாக இருந்தது.

பல தொழில்களிலும் உற்பத்தித்திறன் முற்றிலும் பயன்படுத்தப் படாமையால், 1966–67ஆம் ஆண்டின் தொழில் உற்பத்தியில் சிறிது குறைவு ஏற்பட்டது. இதன் விளைவாக தொழில் உற்பத்திக் குறியீட்டெண் 1966–67-ல் 1·7 சதவீதமும் 1967–68-ல் 0·3 சதவீதமும் உயர்வடைந்தது. இது குறைந்த அளவு முன்னேற்ற நிலையையே உணர்த்துகின்றது. இந்நிலை 1968–69-ல் மாறுதல் ஏற்பட்டு தொழில் உற்பத்தி 6 சதவீதம் உயருமெனக் கணக்கிடப்பட்டது.

1968–69ஆம் ஆண்டின் இறுதிவரை விலைகளின் உயர்வு இருந்தது. 1966–67-ல் மொத்த விற்பனை விலைகள் 16 சதவீதவீம், உணவுப் பொருட்களின் விலைகள் 18 சதவீதமும், நுகர் பொருட்களின் விலைக் குறியீட்டெண் மிக அதிக வீதத்திலும் உயர்வடைந்தன. நுகர் பொருட்களின் விலைக் குறியீட்டெண் 1965–66-ல் 169ஆக இருந்தது; இது 1966–67-ல் 191ஆக உயர்ந்துவிட்டது. 1967–68-ல் மொத்த விற்பனை விலைகள் மேலும் 11 சதவீதமும், உணவுப் பொருட்களின் விலைகள் 21 சதவீதமும் அதிகரித்தன. 1966–67-ல் நுகர் பொருட்களின் விலைக் குறியீட்டெண் 191ஆக இருந்தது; இது 1967–68-ல் 213 ஆகக் கூடிவிட்டது.

மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் வெளிநாட்டுக் கடன் அளவும், இறக்குமதிகளின் அளவும் அதிகரித்தன. இதன் விளைவாகத் தோன்றிய பாதக அயல்நாட்டுச் செலுத்து நிலையைக் குறைக்க ஜூன் 1966-ல் ரூபாயின் மதிப்பைக் குறைப்பது இன்றியமையாததாயிற்று. இதன் காரணமாக 1966–67-ல் ஏற்றுமதி, இறக்குமதிகளின் அளவில் குறைவு ஏற்பட்டது. ஆயினும் 1967–68-ல் ஏற்றுமதியில் முன்னேற்றம் ஏற்படத் தொடங்கியது. இது 1968–69ஆம் ஆண்டிலும் தொடர்ந்து நீடித்தது.

பொதுவாக, இம்மூன்று ஆண்டுத் திட்டங்களும் (1966–68) மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் (1965–66) இருந்த பொருளாதாரச் சிக்கல் நிலைகளைத் தவிர்க்க உதவின. பொருளாதார முன்னேற்றத்தில் அமைந்திருந்த தேக்கநிலை நீக்கப்பட்டு இயக்க நிலை தோன்றியது. ஆண்டுத் திட்டங்கள் வேளாண்மை உற்பத்தியை உயர்த்த உதவியதோடு, 'தொழில் பின்னிறக்கத்தை' (Industrial Recession) நீக்கவும் உதவின. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைத் தொடங்குவதற்குமுன் முன்னேற்றத் திற்குச் சுமுகமான நிலையை இத்திட்டங்கள் ஏற்படுத்தின. பழைய திட்டங்களின்மூலம் பெறப்பட்டிருந்த முன்னேற்றத்திற்கு விரைவுத் தன்மை அளிப்பதாக அவை இருந்தன. 1966 முதல் 1968 வரை 'திட்ட விடுமுறை' (Plan Holiday) எனக் கூறயியலாதபடி அதிக அளவு முதலீடுகள் அரசால் செய்யப்பட்டன. இம்மூன்று ஆண்டுத் திட்டங்களையும் நிறைவேற்ற அரசு அதிக அளவுச் செலவழித் தாலும் குறியிலக்குகளை எட்டமுடியவில்லை. ஏற்படுத்தப்பட்ட சக்தி முற்றிலும் பயன்படுத்தப்படாமையும், நிர்மாணப் பணிகளில் ஏற்பட்ட காலதாமதமும் எதிர்பார்த்த அளவு முன்னேற்றத்தைப் பெற முடியாமற் செய்துவிட்டன.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் (ஏப்ரல் 1969 முதல் 1974 வரை)

செப்டம்பர் 1967-ல் திட்டக்குழு பேராசிரியர் டி. ஆர். காட்கில் (Prof D. R. Gadgil) தலைமையில் மாற்றியமைக்கப்பட்டது. பேராசிரியர் காட்கில் துணைத்தலைவராக நியமிக்கப்பட்டார். இதற்குமுன் அசோக்மேத்தா துணைத்தலைவராக இருந்தார். நான்காம் திட்டத்தின் முதல் அறிக்கை 1969ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் நாள் பாராளுமன்றத்தில் அளிக்கப்பட்டது. ஆனல் சில மாற்றங்கள் செய்யப்பட்டு நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி வடிவம் 1970ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் நாள் பாராளுமன்றத்தின் மக்களவையில் தலைமை அமைச்சரால் அளிக்கப்பட்டது. முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களின்மூலம் பெறப்பட்ட படிப்பினைகளின் அடிப்படையில் நான்காவது திட்டம்

வரையப்பட்டது. பொருளாதாரத்தில் நிலையான தன்மையை ஏற்படுத்துவது அவசியமென உணரப்பட்டது. அதிக அளவு வெளிநாட்டு உதவியைப் பெறுவதும், உணவில் தன்னிறைவைப் பெருத நிலையும் விரைவான வளர்ச்சியைப் பாதிக்கும் எனக் கருதப்பட்டது. அதிக வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதும், மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதும் விரைவான பொருளாதார வளர்ச்சிவீதத்தால் மட்டுமே பெற இயலும் எனவும் உணரப்பட்டது.

நோக்கங்கள்

நான்காது ஐந்தாண்டுத் திட்டம் கீழ்க்கண்ட நோக்கங்களைக் கொண்டு வரையப்பட்டது:

1. தன்னிறைவைப் பெற்று தன்னைச் சார்ந்திருக்கும் நிலையை நோக்கி முன்னேற்றத்தைப் பெறுவது.

2. பொருளாதாரத்தில் நிலையான முன்னேற்றத்தைப்பெறுவது.

3. முன்னேற்றத்தின் நன்மைகளைச் சமமாகப் பகிர்ந்தளித்து வட்டாரங்களுக்கிடையே சமநிலையை ஏற்படுத்துவது.

4. வெளிநாட்டு உதவியின் அளவைக் குறைத்து, முன்னேற்றத்திற்கான நிதியை உள்நாட்டிலேயே திரட்டுவது.

5. வேளாண்மையில் உணவு உற்பத்தியைப் பெருக்கி, தானியங்களைச் சேமித்துக் கையிருப்பாக வைத்துக்கொள்ளுதல்.

6. பொதுத்துறையைப் பொருளாதார முன்னேற்றத்தில் பெரும்பங்கு கொள்வதாக மாற்றுதல். இலாபத்தைத் தரும் வகையில் பொதுத்துறைத் தொழில்களின் உற்பத்தித்திறனை முழுமையாகப் பயன்படுத்துதல்.

7. வருவாயில் உள்ள வேறுபாடுகளைக் குறைத்து, பின்தங்கிய பகுதிகளுக்கும், மிகக் குறைந்த வருவாய்ப் பெறுபவர்களுக்கும் நன்மையளிக்க ஆவன செய்தல்.

8. பொருளாதாரச் சக்திகள் ஒரு சிலரிடம் குவிந்திருத்தலைத் தடுத்தல்.

9. வேலைவாய்ப்புகளைப் பெருக்குதல்.

10. குடும்பநலத் திட்டத்தைச் செயல்படுத்துவதில் தீவிரக் கவனம் செலுத்துதல்.

11. சுகாதார, மருத்துவ வசதிகளைப் பெருக்குதல்.

12. பதினான்கு வயது வரைக் கல்வி பெறுவதைக் கட்டாய மாக்குதல்.

கிடைக்கக்கூடிய வசதிகளை அதிக அளவில் பயன்படுத்தி பொருளாதார முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதும் முக்கியமான தாகக் கருதப்பட்டது. பொதுவான தொழில் முன்னேற்றத்தையும், அதிக உற்பத்தியை எல்லாத் துறைகளிலும் பெறுவதையும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் அவசியமென உணர்ந்திருந்தது; விரைவான பொருளாதார முன்னேற்றத்தைத் தொடர்ச்சியாகப் பெறுவதை ஒரு நோக்கமாகவும் கொண்டிருந்தது. அது சம வாய்ப்பை எல்லோருக்கும் தந்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த எண்ணியது; சாதாரண மனிதர்களுடைய வாழ்க்கை நலனைப் பெருக்கக் கருதியது.

இவற்றைத்தவிர வேறு சில குறிப்பிட்ட நோக்கங்களைக் கொண்டதாகவும் நான்காவது திட்டம் அமைந்திருந்தது அவை:

(1) பொருளாதார வளர்ச்சிவீதத்தை ஆண்டொன்றிற்கு $5\frac{1}{2}$ சதவீதம் உயர்த்துவது.

(2) வேளாண்மை வளர்ச்சிவீதத்தை ஆண்டொன்றிற்கு 5 சதவீதம் உயர்த்துவது.

(3) உணவுத் தானியங்கள், அவசிய நுகர்பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்துவது.

(4) 1970–71ஆம் ஆண்டிற்குப் பிறகு பொதுச்சட்டம் 480 (Public Law 480) மூலம் பெறப்படுகின்ற உணவுத் தானியங்களின் இறக்குமதியை நீக்குவது.

(5) தொழில் வளர்ச்சிவீதத்தை ஆண்டொன்றிற்கு 8 முதல் 10 சதவீதம் உயர்த்துவது.

(6) ஏற்றுமதியை ஆண்டொன்றிற்கு 7 சதவீதம் அதிகரிப்பது.

(7) அயல்நாட்டு உதவியை திட்ட இறுதியில் தற்பொழுதுள்ள அளவில் பாதியாகக் குறைப்பது.

முதலீடு

முதலில் தீட்டப்பட்டத் திட்டத்தின்படி ரூ. 24,398 கோடி செலவிடக் கருதப்பட்டது. இதில் ரூ. 14,398 கோடி பொதுத்

துறைக்காகவும், ரூ. 10,000 கோடி தனியார் துறைக்காகவும் ஒதுக்கப்பெற்றது. இறுதி வடிவம் பெற்றத் திட்டத்தில் பொதுத் துறைக்காக ரூ. 15,902 கோடியும், தனியார்துறைக்காக ரூ. 8,980 கோடியும் ஒதுக்கப்பட்டது. எனவே மொத்த முதலீடு ரூ. 24,882 கோடியாக இருந்தது. இத் திட்டம் 1970 மே 18-ல் பாராளு மன்றத்தின் மக்களவையில் அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் முதலீடு மூன்றாவது திட்டத்தின் முதலீட்டைவிட இரு மடங்கிற்கும் அதிகமாக இருப்பது குறிப்பிடத்தக்கது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலீடு ரூ. 10,400 கோடி மட்டுமே ஆகும்.

திட்டமுறையும் முக்கியத்துவமும்

நான்காவது திட்டம் தொழில், போக்குவரத்து, இயக்கச்சக்தி ஆகியவற்றின் வளர்ச்சியை முக்கியமாகக் கருதியது. மொத்தச் செலவாகிய ரூ. 24,398 கோடியில் 50·7 சதவீதம் தொழில், போக்கு வரத்து, மின்சாரம் ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கும், 20·4 சதவீதம் வேளாண்மையைச் சார்ந்தவைகளுக்கும், 28·9 சதவீதம் சமுதாயப் பணிகளுக்கும் பிறவற்றிற்கும் ஒதுக்கப்பட்டது.

வேளாண்மைக்கான நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதில் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. புதிய அடிப்படைத் தொழில்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. விவசாயி களுக்கு முழு வேலைவாய்ப்பை அளிக்கும் வகையில் சிறிது தொழில்களை கிராமப்புறங்களில் ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டது. மாநில அளவுகளிலும், மாவட்ட அளவுகளிலும் திட்டத்தைச் செயல்படுத்த பஞ்சாயத் ராஜ் அமைப்புகளும், கூட்டுறவுகளும் பயன்படுத்தப்படும். வங்கிகளைக் கட்டுப்படுத்தி கடன் வசதிகள் பெருக்கப்படும். பொது நிறுவனங்களில் கிட்டங்கி வசதிகள் செய்யப்படும். உணவுத் தானியங்கள் போன்ற அவசிய வேளாண் மைப் பொருட்களைச் சேமித்து வைக்க கிட்டங்கி வசதிகள் பெருக்கப்படும். வேளாண்மைப் பொருட்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த இவை உதவும். 'இந்திய உணவுக் கார்ப்பரேஷன்' (Food Corporation of India) மாநிலங்களுக்கிடையே உணவுப் பொருட்களின் போக்கைக் கட்டுப்படுத்தியும், 'கையிருப்பு முறை யின்' (Buffer Stock Operation) மூலமாகவும் விலையைக் கட்டுப் படுத்தும். நியாயவிலைக் கடைகளும் தொடர்ந்து செயலாற்றி வரும். வேளாண்மை விரிவாக்கத்திற்கான உதவிகள் அளிக்கப்படும்.

புதியத் தொழில்களின் முன்னேற்றம் எதிர்காலத் தொழில் நுணுக்க வளர்ச்சிக்கு உதவுமெனவும், தொழில் நடவடிக்கைகள் பரவ உதவுமெனவும் கருதப்படுகின்றது. வட்டாரத் திட்டங்களின்

மூலமே சிறு உற்பத்தியாளர்கள் பயனடைவார்கள். இவை உடனடி வேலையைப் பெருக்கவும் நீண்டகால வேலைவாய்ப்புகளை அதிகரிக்கவும் உதவுமெனலாம். பொருளாதாரச் சக்திகள் ஒரு சிலரிடம் குவிந்திருப்பதைத் தடுக்க 'முற்றுரிமைச் சட்டமும்' (Monopoly Legislation), பொருத்தமான நிதிக் கொள்கைகளும் பின்பற்றப்படும்.

தேசிய நோக்கோடு பொது நிறுவனங்கள் செயல்படவேண்டும்; அவற்றின் கொள்கைகளும் அதற்கேற்ப அமையவேண்டும். எனினும் வாணிப நோக்கோடு அவை செயல்பட்டால்தான் இலாபத்தைப்பெற இயலும். சிறப்பான வகைகளில் உற்பத்தியை மேற்கொள்ளும் உரிமைகள் அவற்றிற்கு வழங்கப்பட வேண்டும். உற்பத்திச் செலவைக் குறைக்க பல நிறுவனங்களுக்கிடையே போட்டி நிலையும் அமைந்திருத்தல் அவசியமாகும்.

இந்தியாவில் திட்டநோக்கு தேசிய வருவாய், தலா வருவாய் இரண்டையும் அதிகரித்து, வருவாய்களில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதாகும். செல்வமானது ஒரு சிலரிடம் குவிவதைத் தடுக்க நிதிக் கொள்கைகளும், பிற முறைகளும் பின்பற்றப்படும். நுகர்வைக் கட்டுப்படுத்திச் சேமிப்பை அதிகரிக்க 'குறிப்பிடத்தக்க நுகர்வு' (Conspicuous Consumption) கட்டுப்படுத்தப்படும். புதிய நிறுவனங்கள் ஏற்பட கல்விமுறை மாற்றங்களும் உதவுமென உணரப்பட்டது. உழைப்பின் பெயர்ச்சிக்கும், அது உதவும்; வேலைவாய்ப்புகளைப் பெருக்கும். வகுப்புவாதங்களையும், சாதிபேதங்களையும் ஒழிக்க உதவும். சமநிலைச் சமுதாயத்தை அமைக்கவும் திட்டமிட்டப் பொருளாதாரம் தேவை. திட்டத்தினால் விளைந்த பல நன்மைகளைச் சமமாகப் பங்கிடவும் அது உதவுவதாகும். பொருளாதார அடிப்படையை வலுப்படுத்தவே அரசு அதிகச் செலவுகளைச் செய்யும்.

ஏற்றுமதியை ஆண்டொன்றிற்கு 7 சதவீதம் உயர்த்த ஏற்றுமதி உபரியை ஏற்படுத்தும் கொள்கைகள் மேற்கொள்ளப்படும். ஏற்றுமதியின் போட்டியிடும் திறனை அதிகரிக்கவும், ஏற்றுமதியைப் பெருக்குவதில் உள்ள தடைகளை நீக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். ஏற்றுமதிகள் ஊக்குவிக்கப்படவேண்டும்; இறக்குமதிகள் குறைக்கப்படவேண்டும். அவசியமற்றப் பொருட்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதும், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படாத அல்லது தேவையான அளவு உற்பத்தி செய்யப்படாத கச்சாப் பொருட்களை இறக்குமதிச் செய்ய அனுமதிப்பதும் நான்காவது திட்டத்தின் இறக்குமதிக் கொள்கையாக அமைந்துள்ளது. இத் திட்டக்காலத்தில் இயந்திரங்கள், இயந்திர

பாகங்கள், கச்சாப் பொருட்கள் ஆகியவற்றின் இறக்குமதி அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதை ஈடுசெய்ய மற்ற இறக்குமதிகள் குறைக்கப்படவேண்டும்; அதோடு இறக்குமதிப் பொருட்களை உள்நாட்டிலேயே உற்பத்திச் செய்யவேண்டும்.

குறியிலக்குகள்

நான்காவது திட்டத்தின் இறுதியில் தேசிய வருவாய் ரூ. 37,900 கோடியாக உயருமெனத் திட்டமிடப்பட்டுள்ளது. 1968–69-ல் தேசிய வருவாய் ரூ. 28,800 கோடியாகும்; தலா வருவாய் ரூ. 546 ஆகும். இது திட்ட இறுதியில் ரூ. 636ஆக உயருமென குறியீட்டளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நான்காவது திட்டக்காலத்தில் பொருளாதார வளர்ச்சிவீதம் ஆண்டிற்கு 5·5 சதவீதமாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஆண்டுதோறும் வேளாண்மையில் 5 சதவீதமும், தொழிலில் 8 முதல் 10 சதவீதமும், ஏற்றுமதி 7 சதவீதமும், உணவுப் பொருட்கள் தவிர பிற பொருட்களின் இறக்குமதி 5·5 சதவீதமும், பொது நுகர்வுச் செலவு 5·3 சதவீதமும் வளருமெனத் திட்டமிடப்பட்டுள்ளது. மக்கட்தொகைப் பெருக்கம் ஆண்டொன்றிற்கு 2·5 சதவீதம் இருக்குமெனவும், தலா வருவாய்ப் பெருக்கம் ஆண்டொன்றிற்கு 3 சதவீதம் ஏற்படுமெனவும் கணக்கிடப்பட்டுள்ளது. 1968–69-ல் 9 சதவீதமாக உள்ள உள்நாட்டுச் சேமிப்புவீதம், திட்ட இறுதியில் 12·6 சதவீதமாக உயரவேண்டும்; முதலீட்டு வீதம் 11·8 சதவீதத்திலிருந்து 13·8 சதவீதமாக அதிகரிக்கவேண்டும். 1968-69-ல் உணவுத் தானியங்களின் உற்பத்தி 98 மில்லியன் டன்களாகும்; 1973–74-ல் இது 129 மில்லியன் டன்களாக உயரும். உணவல்லாத பொருட்களின் இறக்குமதி ஆண்டிற்கு 5 சதவீதமாகவும், ஏற்றுமதி 7 சதவீதமாகவும் அமைந்திருக்கும். இதனால் வெளிநாட்டு உதவியை எதிர்பார்ப்பதின் அளவு பாதியாகக் குறையும்.

வேளாண்மையில் உற்பத்தியின் வளர்ச்சிவீதம் ஆண்டிற்கு 5 சதவீதமாக இருக்கும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது. வேளாண்மைத் திட்டத்தின் நோக்கம் உற்பத்தியைப் பெருக்குவதும், இறக்குமதியைக் குறைப்பதும் ஆகும். திட்டத்தின் இறுதியில், உணவுத் தானியங்களின் உற்பத்தி 31·6 சதவீதம் உயர்வடையும்; கரும்பு உற்பத்தி 25 சதவீதமும், பருத்தி 33 சதவீதமும், சணல் 19 சதவீதமும், எண்ணெய் வித்துகள் 24 சதவீதமும் அதிகரிக்கும். இக்குறியிலக்குகளை வேளாண்மையில் அடைய பின்வரும் முறைகள் பின்பற்றப்படும் :

(1) நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குதல்;

(2) உரங்கள், பயிர்ப் பாதுகாப்புப் பொருட்கள், கடன், இயந்திரங்கள் ஆகியவற்றை அளித்தல்;

(3) தானியங்களின் உற்பத்தியில் பலபோகச் சாகுபடி முறையைப் பின்பற்றச் செய்தல்; அதிக விளைச்சலைத் தரக் கூடிய நல்விதைகளைப் பயன்படுத்தச் செய்தல்;

(4) முக்கிய வாணிபப் பயிர்களின் உற்பத்தியின் அளவை உயர்த்தும் முயற்சிகளைத் தீவிரமாக எடுத்தல்;

(5) வேளாண்மை விற்பனை முறையை முன்னேற்றமடையச் செய்து, முக்கிய வேளாண்மைப் பொருட்களுக்குக் குறைந்த பட்ச விலைகளை உறுதியளித்தல்.

சிறு விவசாயிகளுக்கு உதவ வேளாண்மைக் கடன் வசதிகள், கால்நடைப் பராமரிப்பு வசதிகள், சிறிய நீர்ப்பாசன வசதிகள் ஆகியவையும் அளிக்கப்படவேண்டும். முதலீட்டுப் பணிகளும், கடன் வசதிகளும் 20 தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் 'சிறு விவசாயிகளின்முன்னேற்ற நிறுவனம்'(Small Farmers Development Agency) மூலம் உறுதியளிக்கப்படும்.

வேளாண்மை ஆராய்ச்சித் திட்டங்களும், கல்வியும், பயிற்சி வசதிகளும், பல்கலைக் கழகங்களிலும், வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களிலும் விரிவுபடுத்தப்படும். விவசாயிகளிடம் இவற்றைப் பரப்ப தனிப்பட்ட மத்திய திட்டத்தின் குழுக்கள் 100 தெரிந்தெடுக் கப்பட்ட மாவட்டங்களில் அமைக்கப்பெறும். வேளாண்மை முதலீட் டிற்குத் தேவையானவை விவசாயிகளுக்கு எளிதாக, போதுமான அளவில் உரியகாலத்தில் கிடைக்கப் பல நிறுவனங்கள் அமைக்கப் படும். நான்காவது திட்ட இறுதிக்குள் இரசாயன உரங்களின் அளவு மூன்று மடங்கு அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. 'வேளாண்மைத் தொழில்களின் கார்ப்பரேஷன்' (The Agro-Industries Corporation) வேளாண்மைக் கருவிகளை அளிக்கும். கடன் முறைகளிலும் அவை அளிக்கப்படும். இதன்மூலம் தொழில் நுட்பங்கள் விவசாயிகளுக்கிடையே பரப்பப்படும். சாகுபடிக்கு ஏற்ற 2·2 மில்லியன் ஹெக்டேர் தரிசு நிலங்களில் ஒரு மில்லியன் ஹெக்டேர் நிலங்கள் சாகுபடிக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

வேளாண்மை உற்பத்தித் திட்டங்கள் மாநில அரசுகளோடு நெருங்கிய தொடர்புடையவை. திட்டத்தில் வேளாண்மைக்கான மொத்தச் செலவில் மாநிலங்களுக்கு ரூ. 1,524 கோடி தரப்படும்;

மொத்தத் திட்டச் செலவு ரூ. 2,217 கோடியாகும். இதைத்தவிர மாநிலத் திட்டங்களுக்கு உதவும் வகையில் நிதி நிறுவனங்களுக்கு ரூ. 263 கோடி அளிக்கப்படும்.

கால்நடைத் துறையில் மீன் பிடிப்பிற்காகவும், காடுகளுக்காகவும் முறையே ரூ. 83·57 கோடியும், ரூ. 92·30 கோடியும் ஒதுக்கப்படும். கால்நடை வளர்ச்சியில் கீழ்க்கண்ட நோக்கங்கள் அமைந்துள்ளன; அவை:

(i) பால், பால் பண்டங்கள், முட்டைகள், மாமிசம் ஆகியவற்றின் அளிப்பை அதிகரித்தல்;

(ii) கம்பளி, தோல், எலும்பு, உரோமப் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்குதல்;

(iii) சிறு விவசாயிகள் கால்நடைப் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவுதல் ஆகியவைகளாகும்.

மீன் உற்பத்தியை உயர்த்தி உள்நாட்டில் அதைச் சத்துள்ள உணவாகப் பயன்படுத்துவதும், ஏற்றுமதித் திறனைப் பெருக்குவதும் நோக்கங்களில் ஒன்ருக உள்ளது. கடல்மீன் பிடிப்பு 0·44 மில்லியன் டன்களும், உள்நாட்டு மீன்பிடிப்பு 33,000 டன்களும் உயர்த்தப்படும்.

காடுகளின் முன்னேற்றத்திற்கும் வகை செய்யப்பட்டுள்ளது. காகிதம், அச்செழுத்துக்கள், தீக்குச்சிகள் போன்ற பொருட்களின் உற்பத்தி காடுகளைச் சார்ந்துள்ளது. எரிபொருட்களைப் பெறவும், விரைவாக வளரக்கூடிய மரங்களை முன்னேற்றமடையச் செய்யவும், தொழில் வாணிபப் பயன்களுக்கான பொருட்களைப் பெறவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

நீர்ப்பாசனத்திற்காக மொத்தச் செலவில் ரூ. 857 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் முன்பே ஏற்படுத்தப்பட்ட பழையத் திட்டங்களுக்காக ரூ. 717·4 கோடியும், ரூ. 97·4 கோடி புதியத் திட்டங்களுக்காகவும் செலவிடப்படும். இத் திட்டங்களால் நான்காவது திட்டக்காலத்தில் புதிதாக 5·7 மில்லியன் ஹெக்டேர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும். இவ்வசதி 4·2 மில்லியன் ஹெக்டேர் நிலங்களில் பயன்படுத்தப்படும். குழாய்க் கிணறுகளும், மின்சாரத் திட்டங்களும் மேலும் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்க உதவும்.

நான்காவது திட்டக்காலத்தில் மின்சார உற்பத்திக்காக ரூ. 2,085 கோடி செலவிடப்படும். இதன்மூலம் உற்பத்தித்திறன்

22 மில்லியன் கிலோவாட் என்ற அளவிற்கு உயரும். இத்திட்டக் காலத்தில் 7·96 மில்லியன் கிலோவாட் மின்சாரம் அதிகம் கிடைக்கப்பெறும். இதுசம்பந்தமாக பீஸ் (Beas), யமுனு(Yamuna), ராம்கங்கா (Ramganga), யுகை (Ukai), ஷராவதி (Sharavati), இடிக்கி (Iddiki), பலிமேலா (Balimela), ஆகிய மின்சக்தித் திட்டங்கள் முடிக்கப்பட்டு உற்பத்தித் தொடங்கும். இவற்றைத் தவிர கல்பாக்கம் (Kalpakam), தாராபூர் (Tarapore), ராணு பிரதாப் சாகர் (Ranapratap Sagar) ஆகிய அணு மின்சக்தி நிலையங்களும் மின்சார உற்பத்தியை திட்டக்காலத்திற்குள் துவங்கும்.

மொத்தத் திட்டச்செலவில் 21·5 சதவீதம் தொழில், சுரங்கத் துறையில் செலவிடப்படும். இதன் விளைவாக தொழில் உற்பத்தி ஆண்டொன்றிற்கு 8·10 சதவீதம் உயரும். தொழில் முன்னேற்றத்தின் முக்கிய நோக்கங்களாவன:

(i) முன்னமேயே மேற்கொண்ட முதலீடுகளைப் பூர்த்தி செய்வது;

(ii) தொழில்துறையின் உற்பத்தித் திறனை எதிர்கால முன்னேற்றத்திற்காகவும் பெருக்குவது;

(iii) உள்நாட்டு முன்னேற்ற நிலைகளுக்கும், வசதிகளுக்கும் ஏற்பப் புதிய தொழில்களை அல்லது புதிய தொழில்களுக்கான அடிப்படையை ஏற்படுத்துவது.

தொழில் முன்னேற்றக் கொள்கை நாட்டைப் பெரிதும் தொழில் மயமாக்கவும், பல தொழில் முயல்வோரைத் தோற்றுவிப்பதாகவும் அமையும். தொழில்களைக் கட்டுப்படுத்திப் பரவலாக நாடு முழுதும் அமைப்பதும் நோக்கமாக உள்ளது. 1956ஆம் ஆண்டின் தொழிற்கொள்கையில் தொழில்களின் முன்னேற்றத்திற்கு இணக்கமான முறை பின்பற்றப்பட்டது. பொதுத்துறை, தனியார்துறை, கூட்டுறவுத் துறைகளில் தொழில் முன்னேற்றமடைய வகை செய்யப்பட்டுள்ளது. 1956ஆம் ஆண்டின் தொழிற் கொள்கையே தொடர்ந்து நீடிக்கும். உள்நாட்டில் பொறியியற் திறமைகளையும், தொழில் நுணுக்கங்களையும் வளர்க்க முயற்சிகள் எடுக்கப்படும்.

நான்காவது திட்டக்காலத்தில் இரும்பு - எஃகு உற்பத்தி 6·5 மில்லியன் டன்களிலிருந்து 10·8 மில்லியன் டன்களாக உயர்த்தப்படும்; அலுமினியம் 120,000 டன்களிலிருந்து 220,000 டன்களாகவும், செம்பு 950,000 டன்களிலிருந்து 3550,000 டன்களாகவும், இரும்புத்தாது 26 மில்லியன் டன்களிலிருந்து 53·40 மில்லியன் டன்களாகவும், பண்படுத்தப்படாத பெட்ரோலியம்

5·85 மில்லியன் டன்களிலிருந்து 9·70 மில்லியன் டன்களாகவும் அதிகரிக்கப்படும்.

பொதுத்துறையில் முடிக்கப்படாத திட்டங்கள் நிறைவேற்றப் பெறும். இத்திட்டக்காலத்தில் உரங்கள், பூச்சி மருந்துகள், இரசாயனப் பொருட்கள், இரும்புத் தாது, உலோகங்கள் ஆகிய வற்றைப் பெருக்குவதற்கான சில புதிய திட்டங்களும் மேற்கொள் ளப்படும். பொதுத்துறையில் நெசவுக் கார்ப்பரேஷனும், காகிதக் கார்ப்பரேஷனும் அமைக்கப்படும். பொதுத் துறையிலேயே 2 அல்லது 3 காகித உற்பத்தித் திட்டங்கள் தொடங்கப்படும்.

கிராம, சிறு தொழில்களின் முன்னேற்றத்திற்காகப் பொதுத் துறையில் ரூ. 800 கோடியும், தனியார்துறையில் ரூ. 500கோடியும் செலவிடப்படும். இத்திட்டங்கள் வேளாண்மையைச் சார்ந்த தொழில்களை முன்னேற்றமடையச் செய்யவும், சிறு தொழில்களைப் பரவலாக நாடு முழுதும் பெறவும், சிறு தொழில்களில் தொழில் நுணுக்க உற்பத்தி முறைகளை பின்பற்றவும் உதவும். ஆராய்ச்சி வசதிகளைப் பெருக்கவும், புதிய வகைப்பொருட்களை உற்பத்தி செய்யவும், பெரிய நகரங்களில் வாணிப நிலையங்களை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. ஏற்றுமதிப் பொருட்களை உற்பத்திச் செய்கின்ற தொழில்களுக்கு கடன் வசதிகள், கச்சாப்பொருட் களின் வசதிகள் செய்து தரப்படும். கைத்தறிப் பருத்தித்துணி உற்பத்தியும், காகிதத்துணி உற்பத்தியும் 3,350 மில்லியன் மீட்டர் களிலிருந்து 4,250 மில்லியன் மீட்டர்களாக உயரும். கைத்தறிப் பொருட்களின் ஏற்றுமதியின் மதிப்பு ரூ. 9 கோடியிலிருந்து ரூ. 15 கோடியாகவும்; கயிற்றுப் பொருட்களின் ஏற்றுமதியின் மதிப்பு ரூ. 13 கோடியிலிருந்து ரூ. 17 கோடியாகவும் அதிகரிக்கும்.

நான்காவது திட்டக்காலத்தில் போக்குவரத்துச் செய்தித் தொடர்பு வசதிகளுக்காக ரூ. 3,173 கோடி செலவழிக்கப்படும். இதில் அதிக அளவாகிய ரூ 1,050 கோடி இருப்புப் பாதைப் போக்குவரத்து வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இப்போக்கு வரத்தின் திறனைப் பெருக்கவும், செலவைக் குறைக்கவும் இயந்திர அமைப்பு முறைகள் புதுப்பிக்கப்பட வேண்டும். விரைவான பொருளாதார முன்னேற்றம் ஏற்படும் பகுதிகளில் 'மீட்டர்கேஜ்' பாதைகள் 'பிராட்கேஜ்' பாதைகளாக மாற்றப்படுதல் அவசிய மாகும். இவ்வாறு மாற்றம் 1,500 கிலோ மீட்டர் பாதைகளில் செய்யப்படும்.

சாலைப் போக்குவரத்தின் முன்னேற்றத்திற்காக ரூ. 418 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் தேசிய நெடுஞ்சாலைகளில்

16 பாலங்கள் கட்டி முடிக்கப்பெறும். சாலைகளின் நீளம் 317,000 கிலோ மீட்டர்களிலிருந்து 367,000 கிலோ மீட்டர்களாக வளர்க்கப் படும். சரக்குப் போக்குவரத்தின் அளவு 40 மில்லியன் டன்னி லிருந்து 82 மில்லியன் டன்னுக உயரும். மாநில அரசுகள் சாலைப் போக்குவரத்தை மேற்கொள்ள ரூ. 82 கோடி செலவழிக்கப்படும். இதைத் தவிர இரயில்வேக்களின் நிதிகளில் (Railways Funds) ரூ. 10 கோடி இதற்காகத் தரப்படும். சாலைப் போக்குவரத்தின் முன்னேற்றம் பெரிதும் தனியார்துறையையே சார்ந்துள்ளது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் துறைமுக வசதிகளின் முன்னேற்றத்திற்காக ரு. 195 கோடி செலவிடப்படும். இதன் மூலம் முக்கியத் துறைமுகங்களின் சரக்குப் போக்குவரத்து 55 மில்லியன் டன்களிலிருந்து 90 மில்லியன் டன்களாக உயரும். முக்கியத் துறைமுகங்களில் கனமான பொருட்களாகிய பெட்ரோலியம், உரங்கள், இரும்புத்தாது போன்றவற்றை ஏற்றிச் செல்ல வசதிகள் செய்யப்படும்.

புதியக் கப்பல்களை வாங்குவதற்கு ரூ. 125 கோடி ஒதுக்கப் பட்டிருக்கிறது. 1973–74ஆம் ஆண்டிற்குள் 40 சதவீத வெளி நாட்டு வாணிபம் இந்தியக் கப்பல்களாலேயே செய்யப்படும். கல்கத்தாத் துறைமுகமும் முன்னேற்றத்தைப் பெற வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

ஆகாய விமானப் போக்குவரத்திற்காக ரூ. 212 கோடி செல விடப்படும். பெரிய, வேகமாகச் செல்லக்கூடிய ஆகாய விமானங்கள் வாங்கப்படும். 'ஏர் இந்தியா' நான்கு போயிங் ஜம்போ ஜெட் விமானங்களை வாங்கும். டெல்லி, பம்பாய், சென்னை, கல்கத்தா ஆகிய இடங்களில் உள்ள ஆகாய விமானத் திடல்களில் முன்னேற்றம் செய்யப்படும்.

உல்லாசப் பயணத்தை ஊக்குவிக்கும் வசதிகளை ஏற்படுத்த ரூ. 34 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக அதிக அந்நியச் செலாவணியைப்பெற வாய்ப்பு உண்டு. மத்தியத் திட்டத்தில் ரூ. 24 கோடி உணவு விடுதித் தொழிலுக்கான கட்ட டங்கள் கட்ட கடனளிக்கவும், உல்லாசப் பயண வண்டிகளை வாங்கவும், உல்லாசப் பயணத்திற்குரியச் சில இடங்களை முன்னேற்றமடையச் செய்யவும் செலவழிக்கப்படும். இவை யாவும் 'மத்திய உல்லாசப் பயணத் துறையைச்' (Central Department of Tourism) சார்ந்தவைகளாகும். 'இந்திய உல்லாசப் பயண வளர்ச்சிக் கார்ப்பரேஷன்' (The India Tourism Development Corporation) புதிய ஹோட்டல்களைக் கட்டுவதோடு, உல்லாசப்

பயண விடுதிகளையும் புதிப்பிக்கும். உல்லாசப்பயணத்திற்கான இடங்கள் பெருக்கப்படுவதோடு, விளம்பரங்களும் செய்யப்படும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செய்தித் தொடர்பு வசதிகளுக்காக ரூ. 520 கோடி செலவழிக்கப்படும். தொலைபேசிகளின் எண்ணிக்கை 1·1 மில்லியனில் இருந்து 1·8 மில்லியனாக உயரும். 'டெலிபிரின்டர்' உற்பத்தி 4800லிருந்து 8500ஆக அதிகரிக்கும். 31,000 புதிய தபால் - தந்தி நிலையங்கள் கிராமப் புறங்களில் தொடங்கப்பெறும். வெளிநாடுகளோடு செய்தித் தொடர்பு வசதிகளைப் பெருக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ஒலிபரப்பு வசதிகளைப் பரப்பவும் ரூ 45 கோடி ஒதுக்கப் பெற்றுள்ளது. 'மத்திய - அலை ஒலிபரப்புக்கள்' (Medium - wave Broadcasts) நாட்டு மக்கட்தொகையில் 80 சதவீதத்தினருக்குப் பயனளிக்கத்தக்கவைகளாக இருக்கும். இரு 'அதிகச் சக்தியுள்ள மத்திய - அலை ஒலிபரப்பும் இயந்திரங்கள்' (Super - power medium wave Transmitters) கல்கத்தாவிலும், ராஜ்காட்டிலும் அமைக்கப் பெறும். மாநில ஒலிபரப்பு வசதிகள் அகமதாபாத், லக்னோ, போப்பால், ஜெய்ப்பூர், பெங்களூர், ஹைத்திராபாத், திருவனந்தபுரம், ஜலந்தர், ஸ்ரீநகர் ஆகிய இடங்களில் பெருக்கப்படும். டெல்லியில் உள்ள தொலைநோக்கித் திட்டம் வளர்க்கப்படும். இது பம்பாய், சென்னை, கல்கத்தா, கான்பூர், லக்னோ, ஸ்ரீநகர் ஆகிய இடங்களிலும் தொடங்கப்பெறும்.

கல்விக்காகத் திட்ட முதலீட்டைத் தவிர ஆண்டுதோறும் ரூ. 552 கோடி செலவிடப்படுகின்றது. நான்காவது திட்டத்தில் கல்வி வளர்ச்சிக்காக ரூ. 802 கோடி செலவழிக்கப்படும். பின்தங்கிய பகுதிகளில் ஆதாரக் கல்வி வசதிகளைப் பெருக்குவதே திட்டத்தின் முக்கிய நோக்கமாக உள்ளது. இடைநிலைக் கல்வியைப் பெருக்குவதற்கும், தரத்தை உயர்த்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டக்காலத்தில் ஆதாரப் பள்ளிகளுக்கு 6,44,000 ஆசிரியர்களும், இடைநிலைப் பள்ளிகளுக்கு1,53,000 ஆசிரியர்களும் தேவைப்படுவார்கள். கல்வியின் தரத்தை உயர்த்தவும், ஆராய்ச்சி, பயிற்சி வசதிகளை அதிகரிக்கவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. திட்டம் முடிவடைவதற்குள் மருத்துவக் கல்லூரிகள் 102 ஆக உயரும். அவற்றில் 13,000 மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள். மருத்துவர்களின் எண்ணிக்கை 1,38,000ஆக அதிகரிக்கும். தொழில்நுட்பக் கல்வி மேலும் வளர்க்கப்படமாட்டது. தற்பொழுதுள்ள வசதிகளே திட்டத் தேவையைப் பூர்த்திசெய்து விடுபவைகளாக உள்ளன.

ஆரோக்கிய, மருத்துவ வசதித் திட்டங்களுக்காக ரூ. 437·50 கோடி செலவிடப்படும். இதில் தொத்து நோய்களைத் தடுக்க ரூ. 127.01 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. கிராமப்புறங்களில் அடிப் படை மருத்துவ வசதிகள் செய்துதரப்படும். குடும்பநலத் திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான ரூ. 300 கோடி மொத்தச் செலவையும் மத்திய அரசே ஏற்கும். குடும்பநலத் திட்டச் சாதனங்களின்மூலம் சுமார் 18 மில்லியன் பிறப்புகளைத் தவிர்க்க இயலும். நான்காவது திட்ட இறுதிக்குள் பிறப்பு வீதமானது ஆயிரத்திற்கு 39 என்ற நிலையி லிருந்து ஆயிரத்திற்கு 32 என்ற நிலைக்குக் குறைந்துவிடும்.

தற்பொழுது அதிகரிக்கின்ற வேகத்தில் மக்கட்தொகை பெரு கினால் 2000-ல் மக்கட்தொகை 110 கோடியைக் கடந்துவிடுமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. நீண்டகாலத்தில் குடும்பநலத் திட்டங் களின்மூலம் பிறப்புவீதத்தை 1000-க்கு 39 ஆக இருப்பதினின்றும் 25 ஆகக் குறைக்கவேண்டும். அதாவது மக்கட்தொகைப் பெருக்க வீதம் ஆண்டொன்றிற்கு 2·5 சதவீவிதத்திலிருந்து 1·7 சதவீதமாகக் குறைக்கப்படுவது இன்றியமையாதது. இவ்வாறு குடும்பநலத் திட்டங்கள் வெற்றியைப் பெற்றுவிட்டால் 2000-ல் மக்கட்தொகை ஏறக்குறைய 89 கோடியாக இருக்குமெனத் திட்டமிடப் பட்டுள்ளது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், ஆருவது ஐந்தாண்டு திட்டத்தின் இறுதிவரை (1980–81) மக்கட்தொகைப் பெருக்கம், வேளாண்மை உற்பத்தி, உள்நாட்டில் சேமிப்பின் திரட்சி, முதலீட்டின் திறன், ஏற்றுமதி வளர்ச்சி இறக்குமதிக் கட்டுப்பாடு ஆகியவற்றில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் ஆராயப்பட்டுள்ளன.

பொருளாதார வளர்ச்சிவீதம் ஐந்தாவது, ஆருவது ஐந்தாண்டுத் திட்டக் காலங்களில் ஆண்டொண்டிற்கு 6 சதவீத மாக இருக்குமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதன்மூலம் 1980–81 ஆண்டிற்குள் உள்நாட்டு நிகர உற்பத்தி இரு மடங்கு பெருகிவிடும். (1967–68ஆம் ஆண்டோடு ஒப்பிடும்போது) 1967–68ஆம் ஆண்டிற்கும் 1980–81ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்டக் காலத்தில் தலாவருவாய் 55 சதவீதம் கூடுமெனக் கருதப்படு கின்றது. இக்குறியிலக்குகள் கீழ்க்கண்ட முன்னேற்ற நிலைகளை ஆராய்ந்து பெறப்பட்டன.

(1) நான்காவது திட்டக்காலத்தில் மக்கட் தொகைப் பெருக்கம் ஆண்டொன்றிற்கு 2·5 சதவீதமாக இருக்கும் அதற்குப் பிறகு குறைவு ஏற்படத் தொடங்கி, 1980–81 மக்கட்தொகைப்

பெருக்கம் ஆண்டொன்றிற்கு 1·7 சதவீதமாகக் குறைந்துவிடும் எனக் கொள்ளப்படுகின்றது.

(2) ஐந்தாவது திட்டக்காலத்தில் வெளிநாட்டுக் கடன் அளவில் எந்தவித உயர்வும் ஏற்படாது என்ற அடிப்படையில் வருவாய், முதலீட்டுக் குறியிலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பிறகு உள்நாட்டுச் சேமிப்பே முதலீடு செய்வதற்கும், வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பித்தருவதற்கும் போதுமானதாக இருக்கும். வெளிநாட்டுக் கடன்களுக்கான வட்டியைத் தருமளவிற்கு ஏற்றுமதி உபரி அமைந்திருக்கும். ஏற்றுமதிப் பெருக்கவீதமானது ஆண்டொன்றிற்கு 7 சதவீதமாக வும், உணவல்லாத பொருட்களின் இறக்குமதி வீதமானது ஆண்டொண்றிற்கு 5 சதவீதமாகவும் இருக்குமெனக் கொள்ளப் படுகின்றது.

(3) 1967–68-ல் மொத்தச் சேமிப்பு தேசிய வருவாயில் 8 சதவீதமாகவும், 1973–74-ல் 12·6 சதவீதமாகவும், 1980–81-ல் 16·5 சதவீதமாகவும் உயரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும் மொத்தச் சேமிப்பானது 1980–81-ல் 18 சதவீதமாக இருப்பது அவசியமாகும். எனவே சேமிப்பில் உள்ள இடைவெளியை வரி விதிப்பின்மூலம் பெறலாம் எனக் கருதப்படுகின்றது. சுமார் 2 சதவீத சேமிப்பைப் புதிய வரிகளின்மூலம் அடையலாம். இதனால் 1965–66-ல் தேசிய வருவாயில் 14 சதவீதமாக இருந்த வரிகள், ஆருவது திட்ட இறுதியில் 18·5 சதவீதமாக உயர்வடையும்.

(4) மொத்த நுகர்வானது ஆண்டொன்றிற்கு 5 சதவீதம் அதிகரிக்கும்; தேசிய வருவாய் வளர்ச்சிவீதம் ஆண்டொன்றிற்கு 6 சதவீதம் உயரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நான்காவது திட்டத் தொடக்கத்திற்கும் ஆருவது திட்ட இறுதிக்கும் இடைப் பட்டக் காலத்தில் மொத்த நுகர்வு 80 சதவீதம் அதிகரிக்கும். பொது முன்னேற்றச் செலவுகள் ஆண்டொன்றிற்கு 8.9 சதவீதமும், முன்னேற்றமில்லாதச் செலவுகள் ஆண்டொன்றிற்கு 4·5 சத வீதமும் உயருமெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

(5) நாட்டு ஆக்கத்தில் நிகர முதலீட்டுவீதம் 1967–68-ல் 12 சதவீதமாக உயரும்; 1973–74-ல் 13·8 சதவீதமாகவும், 1980–81-ல் 17 முதல் 18 சதவீதமாகவும் அதிகரிக்கும்.

(5) நான்காவது திட்டக்காலத்தில் மூலதன உற்பத்திவீதம் 2·0 ஆகவும் அதற்குப்பின் நிறைவேற்றப்படுகின்ற திட்டங்களில் 2·4 ஆகவும் அமையும்.

திட்டத்திற்கான நிதி

1968–69ஆம் ஆண்டில் தேசிய வருவாயில் 13 சதவீதம் வரி வருவாயாகப் பெறப்பட்டது. இதன் அளவு 1973–74-ல் 14 சதவீத மாக உயருமெனத் திட்டமிடப்பட்டுள்ளது. திட்டத்திற்குத் தேவை யான நிதியில் ரூ. 850 கோடி பற்றுக்குறை நிதியாக்கத்தின்மூலம் பெறப்படும். வெளிநாட்டு உதவியாக ரூ. 3,730 கோடி கிடைக்கும். இதில் ரூ 1,216 கோடி பழைய கடன்களுக்காகத் திருப்பித் தர வேண்டும். எனவே நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் ரூ. 2,514 கோடி வெளிநாட்டு நிகர உதவி கிடைக்கும். பொதுச் சட்டம் 480 (Public Law 480) மூலமாகக் கிடைக்கக்கூடிய ரூ. 380 கோடியும் இதில் அடங்குவதாகும். வெளிநாட்டு உதவியின் அளவைக் குறைக்க, உள்நாட்டுச் சேமிப்புவீதம் பெருகவேண்டும். இதற்காக 1968–69-ல் ரூ. 2,530 கோடியாக இருந்த சேமிப்பின் அளவை, 1978–79-ல் ரூ. 8,800 கோடியாக உயர்த்தத் திட்டமிடப் பட்டுள்ளது.

வரி வருவாயின்மூலம் மத்திய அரசிற்கும், மாநில அரசுகளுக் கும் ரூ. 2,455 கோடி கிடைக்கப்பெறும். திட்டமில்லாதவைகளுக் கான செலவினங்கள் குறைக்கப்படும். இரயில்வேக்களின் உபரி ரூ. 265 கோடியாகவும், தபால் தந்தித் துறையின் உபரி ரூ. 225 கோடியாகவும் இருக்கும்; மற்ற நிறுவனங்களின்மூலம் கிடைக்கக் கூடிய உபரி ரூ. 685 கோடியாகவும் இருக்கும். மாநில அரசுகளின் நிறுவனங்கள் மூலமாக ரூ. 555 கோடி உபரியாகக் கிடைக்கும். இதில் ரூ. 513 கோடி 'மாநில மின்சார வாரியங்கள்' (State Electricity Boards) வாயிலாகவும், ரூ. 42 கோடி சாலைப் போக்குவரத் தாலும், பிற மாநில அரசுகளின் நிறுவனங்களாலும் கிடைக்கும்.

இந்திய ரிசர்வ் வங்கி இலாபத்திலிருந்து ரூ. 165 கோடி செலவிடும். ரிசர்வ் வங்கி வேளாண்மை, தொழில் முதலீடுகளுக் காக நிதிவசதியளிக்கும் ஆயுள் காப்புறுதி நிறுவனம், சேமிப்பு நிதி, வணிக வங்கிகள், மத்திய அரசும், மாநில அரசுகளும் பெறக்கூடிய சந்தைக் கடன்கள் ஆகியவற்றின் மூலமாக ரூ. 1,166 கோடி கிடைக்கும்.

நான்காவது திட்டக்காலத்தில் சிறு சேமிப்பு ரூ. 800 கோடி என்ற அளவிற்குக் கிடைக்குமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதில் 'ஊழியர்களின் சேமிப்பு நிதிகளும்' (Employees' Provident Funds) அடங்குவதாகும். மாநில அரசுகளில் ஊழியர்களின் சேமிப்பு நிதிகளின் மூலம் ரூ. 640 கோடி பெறமுடியும்.

இவற்றைத் தவிர மத்திய அரசிற்கு பிற வகைகளில் ரூ. 1,942 கோடி வருவாய் கிடைக்கப்பெறும். அதில் ரூ. 812 கோடி மாநிலங்களுக்கு அளிக்கப்பட்டு விடுமாதலால், திட்டத்திற்கான நிகர வருவாயாக ரூ. 1,130 கோடி கிடைக்கும்.

மாநில அரசுகள் சந்தைக் கடன்களைப் பெறுவதோடு, தண்ணீர் வசதிக்காகவும், குடியிருப்புத் திட்டங்களுக்காகவும் 'ஆயுள் காப்புறுதி நிறுவனத்திடமிருந்து' ரூ. 96 கோடி கடன் பெறவேண்டி வரும். மாநில அரசுகள் பொதுத்துறை நிறுவனங்களை ஏற்படுத்தவும் 'ஆயுள் காப்புறுதி நிறுவனத்திடமிருந்து' ரூ. 136 கோடி கடன் பெறும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதைத் தவிர, மாநில அரசுகளின் உடைமையான நிறுவனங்கள் ரூ. 116 கோடி சந்தையினின்றும் கடன் பெறும்.

பற்றுக்குறை நிதியாக்கத்தின் அளவு ரூ. 850 கோடி என நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், ஓர் ஆண்டிற்கான பற்றுக்குறை நிதியின் அளவு மாறுபடுகின்ற பொருளாதாரச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்படும் என நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் குறிப்பிடுகின்றது.

திட்டத்திற்கான நிதியைப்பெற வேறு வசதிகளும் உதவுகின்றன. அவற்றின்மூலம் ரூ. 2,700 கோடி பெறப்படும். இதில் ரூ. 1,600 கோடியை மத்திய அரசும், ரூ, 1,100 கோடியை மாநில அரசுகளும் பெறவேண்டும். மாநில அரசுகள் புதிய வரிகளின் மூலம் பெறுகின்ற வருவாயில் ஒரு பகுதி மத்திய அரசைச் சேரும். அதிக நிதி வசதிகளைப் பெற்றால்தான் திட்டத்தை எளிதில் நிறைவேற்ற இயலும்; திட்டத்தின் வெற்றியும் நிதி வசதிகளைப் பொறுத்தே அமையுமெனலாம்.

திட்டத்திற்குத் தேவையான நிதியை அதிக அளவில் திரட்ட சிறு சேமிப்புகள், வேளாண்மை வருவாய்மீது புதிய வரிகள், நகரச் சொத்துக்களின்மீதான வரிகள் ஆகியவை பெரிதும் உதவுபவைகளாகும். வேறு சில குறிப்பிட்ட முறைகளின் மூலமும் அதிக மூலதன வசதியைப் பெறமுடியும். அவற்றைப் பின்வருமாறு விளக்கலாம் :—

1. மாநில மின்சார விநியோகிப்பில் பயன்படுத்தப்படுகின்ற மூலதனத்திற்கான வருவாய் ஆண்டொன்றிற்கு 11 சதவீதமாக இருத்தல்வேண்டும்.

2. நீர்ப்பாசனத்தினால் பெறப்பட்ட நிகர நன்மையில் 25 முதல் 40 சதவீதம் விவசாயிகளிடமிருந்து தீர்வையாகப் பெறவேண்டும்.

நிகர நன்மையைக் கணக்கிட இயலாவிட்டால் நீர்ப்பாசன வசதிகளைப் பெற்றுப் பயிர்களின்மூலம் கிடைத்த மொத்த வருவாயில் 5 முதல் 12 சதவீதம் தீர்வையாகப் பெறலாம்.

3. பொதுத்துறையில் அமைந்துள்ள தொழில், வாணிப நிறுவனங்கள் முதலீட்டிற்கான வருவாயை ஆண்டொன்றிற்கு 15 சதவீதம் பெறவேண்டும். மக்களுக்கு அதிக நன்மையளிக்கக் கூடிய அவசிய வசதிகளை அரசு அளிக்கும்போது முதலீட்டிற்கான வருவாயை அதிக அளவில் எதிர்பார்க்கத் தேவையில்லை.

4. கிராம மக்களுக்கு நேரடியாகப் பயனளிக்கும் வகையில் கிராமக் கடன் பத்திரங்கள் வெளியிடப்படவேண்டும். அவ்வாறு பெறப்பட்ட நிதியை கிராமங்களின் வளர்ச்சிக்கான குறிப்பிட்டத் திட்டங்களுக்கே பயன்படுத்துதல் வேண்டும்.

5. சமத்துவத்தை நிலைநாட்ட, புதிய வரிச்சுமைகள் அதிக வருவாயைப் பெறுகின்ற விவசாயிகளின்மீது சுமத்தப்படவேண்டும். வேளாண்மை வருவாய்வரி இல்லாத மாநிலங்களில் அது விதிக்கப்படவேண்டும். வேளாண்மை வருவாய்வரி வீதம் எல்லா மாநிலங்களிலும் ஒரே அளவில் அமையவேண்டும். மத்திய அரசு விதிக்கும் வருவாய் வரிவீதத்தைப் போன்று அது அமைதல் அவசியமானது. அல்லது நிலவரி விதிப்பில் வளர்வீத வரிவிதிப்பு முறை பின்பற்றப் படவேண்டும். நில அளவிற்கு ஏற்பவும், பயிர்களுக்கு ஏற்பவும் வரிவீதங்கள் அமைக்கப்படலாம்.

6. சமுதாயத்தின் உயர்ந்த நிலையில் அதிக வருவாய் பெறுபவர்களின் 'குறிப்பிடத்தக்க நுகர்வைக்' கட்டுப்படுத்தும் வகையில் நுகர்பொருட்களின்மீது அதிக வரிகளை விதிக்கவேண்டும். குறிப்பாக ஆடம்பரப் பொருட்களின்மீதும், வசதிப் பொருட்களின் மீதும் இவ்வித வரிகள் விதிக்கப்படலாம். இதன்மூலம் ஏற்றுமதிக்கான உபரியின் அளவையும் அதிகரிக்க முடியும். அதிக உற்பத்தியைச் செய்து மிகுந்த இலாபத்தைப் பெறுபவர்கள் இவ்விதமான 'குறிப்பிடத்தக்க நுகர்வில்' (Conspicuous Consumption). அவர்களின் அதிக வருவாயினின்றும் நிதியைத் திரட்ட பொருட்களின்மீது விதிக்கப்படும் வரிகள் பெரிதும் உதவுகின்றன. மாநிலங்களுக்கிடையே விற்பனை வரியில் உள்ள வேறுபாடுகள் நீக்கப்படுதல் வேண்டும். குறைந்த விற்பனைவரி வீதத்தைக் கொண்டுள்ள மாநிலங்களில், விற்பனை வரியை உயர்த்துவதின் மூலம் அதிக வரி வருவாயைப்பெற இயலும்.

7. சொத்தின்மீதும், வருவாய்மீதும் வரிவிதிப்பது அதிக வரி வருவாயைப் பல வழிகளிலும் பெற உதவுகின்றது எனலாம். அதற்காக,

(i) வரிவிதிக்கத்தக்க வருவாயும், சொத்தும் சரியான அளவில் கணக்கிடப்படவேண்டும்.

(ii) வருவாயையும், சொத்துக்களையும் இனமாகக் கொடுக்கப் படுதல் தடுக்கப்படவேண்டும். பண்ணைவரி (Estate Duty) விதிக்கப்படும்போது சேமிக்கப்பட்டுள்ள எல்லா சொத்துக்களையும் முழுமையாகக் கணக்கிட வேண்டும்.

(iii) முதலீட்டினால் பெறப்பட்ட இலாபத்தின்மீது அதிக வரி விதிப்பைச் செய்யவேண்டும்.

(iv) நடுத்தர வருவாய் பெறுபவர்களின்மீதான வரி உயர்த்தப்படவேண்டும்.

(v) நகர்ப்புறங்களில் நிலத்தின் மதிப்பு உயர்வதற்கு ஏற்ப வரிவீதம் அமையவேண்டும்.

(vi) 'வரி ஊக்கங்களை' (Tax Incentives) நீக்கினாலும் அது வருவாயை அரசிற்குத்தர உதவுமெனலாம்.

நான்காவது திட்டக்காலத்தில் தனியார்துறையின் சேமிப்புகள் ரூ. 13,900 கோடி என்ற அளவிற்கு அமைந்திருக்குமெனக் கருதப் படுகின்றது. மத்திய அரசும், மாநில அரசுகளும் இதனின்றும் ரூ. 3,930 கோடியைப் பெறுகின்ற நிலை ஏற்படும். எனவே மிகுதியாக இருக்கக்கூடிய ரூ. 9,970 கோடி தனியார் முதலீட் டிற்குப் பயன்படுத்தப்படும். தனியார்துறை நிறுவனங்களுக்கு வெளிநாட்டு நிதியும் கிடைக்கின்றது: இதையும் சேர்க்கும்போது தனியார்துறை முதலீடு ரூ. 10,000 கோடி என்ற அளவிற்கு உயரும். இவையாயும் திட்டமிடப்பட்டுள்ள அளவுகளே ஆகும். தனியார் சேமிப்பின் அளவு தேசிய வருவாய்ப் பெருக்கத்தைப் பொறுத்தும், விலையின் நிலைத்தன்மையைப் பொறுத்தும் அமையும்.

'பன்னாட்டுப் பண நிதிக்கு' (International Monetary Fund) ரூ. 280 கோடி திருப்பித்தரவேண்டும். பிற வெளிநாட்டுக் கடன் களுக்கான தொகைகள் ரூ. 2,280 கோடி என்ற அளவிற்குத் தரவேண்டும். இவற்றை நீக்கி நமக்குத் தேவைப்படுகின்ற அந்நியச் செலாவணியின் அளவு ரூ. 10,050 கோடியாகும். நான்காவது

ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் இரண்டு ஆண்டுகளிலும் அந்நியச் செலாவணியின் தேவை அதிகமாக இருக்கும். இத்தேவையை வெளிநாட்டு உதவியின் மூலமும், ஏற்றுமதி வருவாயின் மூலமும் பூர்த்திச் செய்யவேண்டும். ஆண்டிற்கு ரூ. 600 கோடியாக உள்ள வெளிநாட்டு உதவியை, திட்டத்தின் இறுதியாண்டில் ரூ. 300 கோடியாகக் குறைக்கவேண்டும் என்பதே கொள்கை நோக்கமாக உள்ளது.

உள்நாட்டுச் சேமிப்பின் அளவானது திட்டக்காலத்தில் ரூ. 19,700 கோடி என்ற அளவில் அமைந்திருக்கும். இதில் தனியார் சேமிப்பு ரூ. 13,900 கோடியாகவும், பொதுச் சேமிப்பு ரூ. 5,800 கோடியாகவும் இருக்கும். உள்நாட்டுச் சேமிப்பை இந்த அளவிற்குப்பெற, சராசரிச் சேமிப்பு வீதமானது ஆண்டொன்றிற்கு 9 சதவீதத்திலிருந்து 12·6 சதவீதமாகத் திட்ட இறுதிக்குள் உயர்த்தப்படவேண்டும். வெளிநாட்டுக் கடன் தொகைகளைக் கொடுத்த பிறகு கிடைக்கக்கூடிய மொத்த வெளிநாட்டு உதவியின் அளவு ரூ. 2,544 கோடியாக இருக்கும். திட்டத்தின் மொத்த முதலீட்டின் அளவு ரூ. 22,250 கோடியாகும். இதில் பொதுத் துறைக்காக ரூ. 12,250 கோடியும், தனியார்துறைக்காக ரூ. 10,000 கோடியும் செலவிடப்படும். இதன்மூலம் திட்ட இறுதிக்குள் சராசரி முதலீட்டுவீதம் 11·8 சதவீதத்திலிருந்து 13·8 சதவீதமாக உயர்ந்துவிடும்.

நான்காவது திட்டக்காலத்தில் ரூ. 110 கோடி முதலீட்டில் தமிழ்நாட்டில் சேலத்திலும், மைசூர் மாநிலத்தில் ஹோஸ்பேட்டிலும், ஆந்திர மாநிலத்தில் விசாகப்பட்டினத்திலும் மூன்று இரும்பு உருக்கு ஆலைகள் அமைக்கப்படும். இது தலைமை அமைச்சரால் 1970 ஏப்ரல் 18-ல் பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. வேளாண்மையில் 'பசுமைப் புரட்சி' தோன்றுவதற்கான அறிகுறிகள் ஏற்பட்டுள்ளன. வேளாண்மையில் ஏற்பட்டுவரும் சிறந்த விரைவான வளர்ச்சியினால் உணவுப்பொருட்களின் உற்பத்தி 123 மில்லியன் டன்னாக உயருமென எதிர்பார்க்கப்படுகின்றது. தொழில் முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் இரும்பு - எஃகு உற்பத்தி 10·8 மில்லியன் டன்னாகவும், நிலக்கரி உற்பத்தி 93·5 மில்லியன் டன்னாகவும் உயருமெனத் திட்டமிடப்பட்டுள்ளது. நான்காம் ஐந்தாண்டுத்திட்டம் வேளாண்மைத் துறையையும் தொழில் துறையையும் இணைக்க முயலுகின்றது. நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் சமநிலை வளர்ச்சி ஏற்பட முதலீடுகள் செய்யப்படுகின்றன.

1973–74ஆம் ஆண்டில் பெட்ரோலியம் உற்பத்தி 26 மில்லியன் டன்னாகவும், உரங்களின் உற்பத்தி 3·4 மில்லியன்

டன்னுகவும் அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. 1968-69-ல் உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பு ரூ. 29,000 கோடியாகும். இதன் மதிப்பு 1973–74-ல் ரூ. 38,300 கோடியாகவும், 1980–81-ல் ரூ. 58,200 கோடியாகவும் அதிகரிக்குமெனக் குறியிலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

மதிப்பீடு

நான்காவது ஐந்தாண்டுத்திட்டம் (1969–74) நம் பொருளாதாரச் சக்திக்குட்பட்ட நிலையிலேயே தீட்டப்பெற்றுள்ளது எனலாம். எனினும் திட்டத்தின் முதலீட்டின் அளவைவும், குறியிலக்குகளேயும் கொண்டு ஆராயும்போது, இதை ஒரு பெரிய திட்டமாகவும், துணிகரமான திட்டமாகவும் கருதலாம். பொதுவாக நல்ல நிலையில் வரையப்பட்டுள்ள திட்டமிது எனக் கூறலாம். ஏனெனில் வேளாண்மையில் வளர்ச்சி 5 சதவீதமும், தொழில் துறையில் வளர்ச்சி 8·10 சதவீதமும் குறியிலக்குகளாகக் கொண்டதே இத்திட்டம். பொருளாதார வளர்ச்சி $5\frac{1}{2}$ சதவீதம் ஏற்பட வேண்டுமென்ற நோக்குடையதாக இத்திட்டம் அமைந்துள்ளது. இவை யாவுமே குறைந்த அளவு வளர்ச்சி வீதங்களேயாகும். நிலையான, உறுதியான, தொடர்ச்சியான முன்னேற்றத்தை ஏற்படுத்த இது முயலுகின்றது. தன்னிறைவைப் பெறுவதற்கான விரைந்த முன்னேற்றத்தைப் பெறவும் இது நோக்கம் கொண்டுள்ளது. எனினும் இவ்வகைக் குறைந்த வளர்ச்சிவீதங்களேயும் பெற இயலாத வகையில் பல பொருளாதாரத் தடைகள் தோன்றலாம்.

இந்தியா வேளாண்மையை முக்கியமாகக் கொண்ட நாடாகையால், இந்தியாவின் பொருளாதார முன்னேற்றம் வேளாண்மை உற்பத்தியைச் சார்ந்து அமைகின்றது. வேளாண்மையில் 5 சதவீத வளர்ச்சியைப்பெற, சாகுபடிக்குப் பருவமழையை நம்பியிருக்கும் நிலை குறையவேண்டும்.. நாட்டின் சில பகுதிகளில் வறட்சி நீடிப்பதாலும், நீர்ப்பாசன வசதிகள் போதுமான அளவிற்கு இல்லாமையாலும் இக்குறைந்த அளவு வளர்ச்சிக் குறியீட்டளவை எட்டுவதும் கடினமானது என்ற கருத்து நிலவி வருகின்றது. தற்பொழுதுள்ள சூழ்நிலைகளைக் கொண்டு ஆராயும்போது 129 மில்லியன் டன்கள் உணவுத் தானியங்களின் உற்பத்தியைப் பெறுவது சிரமமான ஒன்றேயாகும். வேளாண்மையில் நம்முடைய முயற்சிகள் வெற்றியடைய இயற்கையின் ஒத்துழைப்பும் இன்றியமையாதது. இதைப்போன்றே வேளாண்மைக் கச்சாப் பொருட்களின் உற்பத்திக் குறியளவை எட்டுவதும் கடினமானதேயாகும். இதனுல் தொழில் உற்பத்திக் குறியளவை

அடைவது முடியாத ஒன்றாகிவிடும். வேளாண்மையும், தொழிலும் ஒன்றோடொன்று நெருங்கியத் தொடர்பு கொண்டுள்ளவை. தொழில் உற்பத்தியைப் பெருக்க வேளாண்மை வளர்ச்சி உயர்வாக இருக்கவேண்டும்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்திலும், மூன்று ஆண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டக் காலத்திலும் தொழில் முன்னேற்றம் சிறப்பாக இருந்ததெனக் கூற இயலாது. 1961–62 லிருந்து 1964–65 வரை ஏற்பட்டத் தொழில் உற்பத்தியின் சராசரி உயர்வு 8·8 சதவீதமாகும். அதற்குப் பிறகு வளர்ச்சி வீதமானது குறைந்துவிட்டது. 1965–66-ல் 4·3 சதவீதமாக இருந்த வளர்ச்சி வீதம் 1967-68-ல் 0·3 சதவீதமாகத் தாழ்ந்துவிட்டது. ஆனால் 1968–69-ல் வளர்ச்சிவீதம் 6 சதவீதமாக உயருமென எதிர்பார்க்கப் பட்டது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், திட்டக்குழு வளர்ச்சிவீதத்தை 8 முதல் 10 சதவீதமாக நிர்ணயித்துள்ளது. இதைப்பெற முடியுமா என்பது பல காரணிகளைச் சார்ந்து அமைகின்றது.

சமீபகாலத்தில் தொழில் மீட்சி நிலை தோன்றியுள்ளது என்று லும், நாட்டின் சில பகுதிகளில் அமைதியின்மையும் அமைந் துள்ளது. தொழில் அமைந்துள்ள இடங்களில் அமைதியும், பாதுகாப்பும் இல்லாத நிலை தொழில் முன்னேற்றத்திற்குத் தடை யாகவே அமையும். அரசியல் கட்சிகளின் ஆதரவோடு தொழிலாளர் சங்கங்கள் பதட்ட நிலையைத் தோற்றுவிக்கின்றன. வேலை நிறுத்தம், கதவடைப்பு (Lock-out) ஆகியவையும் தொழில் முன்னேற்றத்திற்கு உதவமாட்டா. இந்நிலைகள் நீடித்தால் தொழில் வளர்ச்சிவீதக் குறியீட்டளவை எட்டுவது முடியாத தாகிவிடும்.

உணவுப் பொருட்கள் அல்லாத பிற பொருட்களின் இறக்குமதியை 5 சதவீதம் குறைக்க உள்நாட்டிலேயே இயந்திரங் கள், பொறியியற் கருவிகள், பிற மூலதனப் பொருட்கள் யாவும் உற்பத்திச் செய்யப்படவேண்டும். இதுவரை பெரிய தொழில்களை நிறுவ மூலதனப் பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து வந்தோம். இனி அப்பொருட்களை இந்தியாவிலேயே உற்பத்திச் செய்து பெரிய தொழில்களை மேலும் ஏற்படுத்த முயல வேண்டும். திட்டக்காலத்தில் ஏற்றுமதியை ஆண்டொன்றிற்கு 7 சதவீதம் அதிகரிப்பது முடியாததாகும். 1958–59 முதல் 1964–65 வரை ஏற்றுமதியின் சராசரி வளர்ச்சி 4·5 சதவீதமேயாகும். 1965–66, 1966–67 ஆகிய இரு ஆண்டுகளிலும் ஏற்றுமதியின்

அளவு மிகக் குறைந்துவிட்டது. ஜுன் 1966-ல் ரூபாய் மதிப்புக் குறைப்பால் 1967–68-ல் ஏற்றுமதி 3 சதவீதம் அதிகரித்தது. 1968–69ஆம் ஆண்டின் ஏற்றுமதி 1967–68-ன் ஏற்றுமதியைவிட 11 சதவீதம் உயர்ந்தது என்றாலும், 1964–65-ன் ஏற்றுமதியைவிட 4·2 சதவீதம் மட்டுமே அதிகமாக இருந்தது எனலாம். ஏற்றுமதிப் பொருட்களின் அல்லது ஏற்றுமதிக்குரிய பொருட்களின் உற்பத்திச் செலவு அதிகரித்து வருகின்றது. உலகச்சந்தையில் கடுமையான போட்டியும் நிலவுவதால் ஏற்றுமதியை 7 சதவீதம் உயர்த்துவது கடினமானதேயாகும்.

வசதிகளைத் திரட்டுவதிலும் அதிகஅளவுக் குறியீட்டளவுகளே திட்டமிடப்பட்டுள்ளன. வரிவருவாய் மூலம் ரூ. 2,455 கோடி கிடைக்குமென மதிப்பிடப்பட்டது. இது அதிக மதிப்பீடு என்றே கருதலாம். ஏனெனில் அதற்கு முன் அரசு எந்தத் திட்டத்திலும் இந்த அளவிற்கு வரி வருவாயைப் பெற்றதில்லை. இரண்டாவது திட்டத்தில் இதைவிட ரூ. 50 கோடி குறைவாகவும், மூன்றாவது திட்டத்தில் ரூ. 419 கோடி குறைவாகவும் பெறப்பட்டது. திட்ட அறிக்கையில் அரசின் ஊழியர்களுக்கான ஊழிய உயர்வு பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. வாழ்க்கைச் செலவு விரைவாகப் பெருகுகின்ற நிலையில் மத்திய அரசும், மாநில அரசுகளும் ஊதிய உயர்வு அளிப்பது அவசியமானதாகும். பணவீக்க நிலைக்கும், வாழ்க்கைச் செலவு அதிகரித்தமைக்கும் மத்திய அரசு மாநில அரசுகளின் திட்டங்களே காரணமாகும்.

இரயில்வேக்களின் மூலம் ரூ. 265 கோடி உபரி கிடைக்குமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. மூன்றாவது திட்டத்தில் இரயில்வேக்களின் மூலம் கிடைத்த உபரி ரூ. 62 கோடியே ஆகும். முதல் இருஆண்டுத் திட்டங்களிலும் (1966–68) ரூ. 50 கோடியும், கடைசி ஆண்டுத் திட்டத்தில் ரூ. 69 கோடியும் மட்டுமே உபரியாகக் கிடைத்தது. ரூ. 265 கோடியை உபரியாகப் பெறுவது கடினமானதே ஆகும்.

நிதிமுறையில் ரூ. 850 கோடி என்ற அளவிற்குப் பற்றுக்குறை நிதியாக்கமும் சேர்க்கப்பட்டுள்ளது. திட்டக்குழு எல்லாத் திட்டங்களிலும் பற்றுக்குறை நிதியாக்கத்தின் அளவைக் குறைவாகவே மதிப்பிட்டுள்ளது. உண்மையில், நிதிப்பற்றுக்குறை ஏற்பட்ட எல்லா நிலைகளிலும் இம்முறையே பின்பற்றப்பட்டது. எனவே பற்றுக்குறை நிதியாக்கத்தின் அளவு திட்டத்தின் ஒவ்வொரு ஆண்டிலும் நிலவுகின்ற பொருளாதார நிலைகளைப் பொறுத்தே அமையுமெனலாம்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் புதிய வரிகளின் மூலம் ரூ. 2,700 கோடி பெறத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்பொழுதுள்ள வரிவிதிப்பே உயர்வாக இருக்கும்போது மேலும் வரிகளை விதிப்பது இயலாததாகும். ஆனால் குறைந்த அளவே வரிவிதிப்பு செய்கின்ற நாடு இந்தியாவாகும். தேசிய வருவாயில் வரிவருவாயின் மூலம் 14 சதவீதமே பெறப்படுகின்றது. குறைந்த அளவு வரி விதிப்பே பொருளாதார முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளது என்று கூறலாம். மறைமுக வரிகள் விலைகளில் 25 முதல் 50 சதவீதம் வரை விதிக்கப்படுவதால் பணவீக்கநிலை தோன்றும். இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னால் கவர்னராக இருந்த திரு. பி. சி. பட்டாச்சார்யா (P. C. Bhattacharya) இந்தியாவில் வரிவிதிப்பு பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தாமல் அதிக விலையுயர்வுகளை ஏற்படுத்தி விடுகின்றது என்கிறார்.

அரசின் வரிவிதிப்புக் கொள்கை தனியார் சேமிப்பையும், சிறு சேமிப்பையும் குறைத்துவிடுகின்றது. திட்டக்குழு குறிப்பிட்டுள்ள முறைகளில் புதிய நிதிவசதிகளைத் திரட்டுவது நன்மை பயப்பதாகும். மத்திய அரசும், மாநில அரசுகளும் அவற்றைப் பின்பற்றும் போது தனியார் சேமிப்பையும், முதலீட்டையும் பாதிக்கப்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

சராசரி சேமிப்பு வீதத்தை 9 சதவீதத்திலிருந்து 12·6 சதவீதமாக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு உயர்வான சேமிப்பு வீதத்தைப் பெறுவது விலைகள், நிர்வாகச் செலவுகள், பொது நிறுவனங்களின் உபரிகள் ஆகியவற்றைப் பொறுத்து அமையும். விலைகள் தொடர்ச்சியாக உயர்ந்து வருகின்றன. நிர்வாகச் செலவுகளும் அதிகரித்துள்ளன. நாட்டின் பாதுகாப்புச் செலவுகள் கூடியுள்ளன. இக்காரணங்களால் புதிய வரிகளை விதித்து வருவாயைப் பெருக்குவது கடினமானது. 'இரயில்வே' போன்ற பொதுத்துறை நிறுவனங்களிலும் உபரிகள் படிப்படியாகக் குறைந்து வருகின்றன. நிலைகள் இவ்வாறு இருக்கும்போது, சராசரிச் சேமிப்பு வீதத்தை 9 சதவீதத்திலிருந்து 12·6 சதவீதமாக உயர்த்துவது கடினமானதே ஆகும்.

தனியார்துறை முதலீட்டிற்கான தனியார் சேமிப்பு ரூ. 10,000 கோடி என்ற அளவிற்குக் கிடைக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. பல ஆண்டுகளாகவே தனியார் சேமிப்பும், முதலீடும் குறைந்து கொண்டே வருகின்றன. 1950–51ஆம் ஆண்டிற்கும் 1960–61ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்டக் காலத்தில் சேமிப்பும், முதலீடும் 77 சதவீதம் குறைந்தன; 1965-66-ல் 66 சதவீதக் குறைவு ஏற்பட்டது. அதிக விலையுயர்வாலும் சேமிப்பு, முதலீடு ஆகிய

வைகளில் மேலும் குறைவு தோன்றும். திட்டக்குறியீட்டளவை தனியார் சேமிப்பில் பெறுவது இதனால் முடியாத ஒன்றாகிவிடும்.

இவ்விதமான பல தடைகள் பொருளாதார முன்னேற்ற நிலைகளில் அமைந்துள்ளன. அத்தடைகளைக் குறைத்து, முன்னேற்றத்தை விரைவுபடுத்த நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் திட்டக் குழுவால் சரியான முறையிலேயே வரையப்பட்டுள்ளது. திட்டம் வெற்றிபெற வேளாண்மை, தொழில் உற்பத்தி குறியீட்டளவு களின்படி உயரவேண்டும். தொழில் அமைதி, நிர்வாகத்திறமை, அரசியலின் நிலையான தன்மை இவற்றால் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்த முடியும். மத்திய அரசிற்கும், மாநில அரசுகளுக்கும் இடையே சுமுக உறவு இருப்பதும் இன்றியமையாததாகும். மத்திய அரசும், மாநில அரசுகளும் இணைந்து செயலாற்றுவதின்மூலம் விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப் பெற இயலும். திட்டங்களை நிறைவேற்றும்போது பல சிக்கல்கள் எழுவது இயல்பு. அச்சிக்கல்களைத் தீர்க்கும் நடவடிக்கைகள் அவ்வப்போது எடுக்கப் படவேண்டும். தற்பொழுது ஏற்பட்டுள்ள 'பசுமைப் புரட்சி' தொழில் முன்னேற்றத்திற்கும், திட்டத்தின் வெற்றிக்கும் அடிப் படையாக அமையுமெனலாம்.

39. இந்தியாவில் வேளாண்மைத் திட்டம்

(Agricultural Planning in India)

நம் நாட்டின் வாழ்வில் வேளாண்மை முக்கியத் தொழிலாக உள்ளது. மொத்த மக்கட்தொகையில் சுமார் 70 சதவீதம் வேளாண்மையை நம்பியே வாழ்கின்றது. தேசிய வருவாயில் சுமார் 50 சதவீதம் வேளாண்மைத் துறையின்மூலம் கிடைக்கின்றது. இந்திய வேளாண்மை இவ்வித முக்கியத்துவங்களைக் கொண்டிருந்தும், நீண்டகாலமாகத் தேக்க நிலையிலேயே அமைந்துள்ளது. அதனுடைய வளர்ச்சிக்கு நிண்டகாலமாகவே முக்கியத்துவம் தரப்படவில்லை. ஆங்கில ஏகாதிபத்திய அரசு வேளாண்மையை வளர்க்க அதிக அக்கறை கொண்டிருக்கவில்லை. இதனால் வேளாண்மை மந்த நிலையையே கொண்டிருந்தது. 'கிழக்கிந்தியக் கம்பெனி' வேளாண்மையைவிட வாணிபத்திலேயே அதிக ஆர்வம் கொண்டிருந்தது. 1857ஆம் ஆண்டிற்குப்பின் ஆங்கிலேய ஆட்சி ஏற்பட்ட பிறகு, பொருளாதார முன்னேற்றம் முக்கியமானதாகக் கருதப்படாமல் அரசியல் அமைப்பை உறுதிப்படுத்துவதே நோக்கமாக அமைந்திருந்தது. இந்தியாவில் ஏற்பட்ட பல பஞ்சங்களால், அரசின் நடவடிக்கைகளில் சில மாற்றங்கள் தோன்றின. அரசு பஞ்ச நிவாரணப் பணிகளில் ஈடுபட்டதே தவிர, நிரந்தர வேளாண்மை வளர்ச்சிக்கான வழிமுறைகளைப் பின்பற்றவில்லை. பஞ்சப் பகுதிகளில் 'தக்கவிக் கடன்கள்' (Taccavi Loans) தரப்பட்டன; வரி விலக்குகளும் அளிக்கப்பட்டன.

1880, 1898, 1902 ஆகிய ஆண்டுகளில் 'பஞ்சக் குழுக்களும்' (Famine Commissions), 1903ஆம் ஆண்டில் 'நீர்ப்பாசனக் குழுவும்' (Irrigation Commission) அமைக்கப்பெற்றன. இவையாவும் வேளாண்மை வளர்ச்சிக்காக ஏற்படுத்தப்பட்டவைகளே ஆகும். எனினும் 1928-ல் 'வேளாண்மைக்கான ராயல் கமிஷனின்'

(Royal Commission on Agriculture) அறிக்கை, "இவை எல்லாவற்றிலும் இந்திய அரசு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை" எனக் குறிப்பிடுகின்றது. தொடர்ந்து வேளாண்மை வளர்ச்சியில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. அப்பொழுது அமைந்திருந்த சூழ்நிலைகள் விவசாயிகளுக்குச் சாதகமாக இருக்கவில்லை. விடுதலையடைந்த பிறகு இவ்விதச் சிக்கல்களுக்குத் தீர்வு காண நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. படிப்படியாக வேளாண்மை வளர்ச்சியைப் பெறவேண்டுமென உணரப்பட்டது. கிடைக்கக்கூடிய எல்லா வளங்களையும் பயன்படுத்தி புதிய வசதிகளைப் பெருக்கி விரைவான வேளாண்மை முன்னேற்றத்தைப் பெறக் கருதப்பட்டது. விடுதலையடைந்த பிறகுதான் வேளாண்மைத் துறை வளர்வதற்கான நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க வகையில் எடுக்கப்பட்டன.

வேளாண்மைத் திட்டத்தின் நோக்கங்கள்

பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்களின் அடிப்படை நோக்கம் மக்களின் வளமான வாழ்வேயாகும். சமுதாயத்தில் தனியொருவருக்கான உற்பத்தியின் அளவை அதிகரிப்பதும், கிடைக்கக்கூடிய வசதிகளின் ஒவ்வொரு அலகிற்குமான உற்பத்தியின் அளவை உயர்த்துவதும் திட்டமிட்டப் பொருளாதாரத்தின் முக்கிய நோக்கமாகும். இந்நோக்கத்தை அடைய சமுதாய-பொருளாதார அமைப்பு முறைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும். அதன் மூலம்தான் புதிய உற்பத்தித் தொழில் நுணுக்கங்களை விரைவாகப் புகுத்த முடியும். நம்நாட்டின் பெரும்பகுதி மக்கட்தொகை வேளாண்மையைச் சார்ந்துள்ளது. வேறு வேலை வாய்ப்புகள் பெருகாமையால், வேளாண்மை மக்கட்தொகை அதிகரித்துவிட்டது. எதிர்காலத்திலாவது விவசாயிகளின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும் வகையில் திட்டங்களும், நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுதல் அவசியமானதாகும். திட்டத்தை வரைபவர்கள் எதிர்காலத்தில் கிராம மக்களின் வாழ்க்கைத்தர உயர்வைப்பெறும் வகையில் மாற்ற பலவிதக் கொள்கைகளையும் கைக்கொள்ளவேண்டும். நீண்டகாலத்தில் நன்மையளிக்கக்கூடிய வேளாண்மைத்துறை வளர்ச்சிக்கான முதலீடுகள் தேவைப்படுகின்றன. அதோடு திட்டத்தில் குறுகிய காலத்தில் பயனளிக்கக்கூடிய முதலீடுகளும் செய்யப்படுகின்றன. சிலவித முதலீடுகள் உடனடி நன்மைகளைத் தராதவைகளாக உள்ளன. இவ்வித முதலீடுகளால் உற்பத்தியைக் குறுகிய காலத்திலேயே பெற இயலாது. நீண்டகாலத்தில் பொருளாதாரத்தின் உற்பத்தித்திறனைப் பெருக்குவதாக அம் முதலீடுகள்

அமைகின்றன. வேளாண்மைக்கான முதலீடுகள் பெரும்பாலும் நீண்டகாலத்தில் பயனளிப்பவைகளேயாகும்.

வேளாண்மை முதலீட்டு முறைகளைக் கடைப்பிடிக்கும்போது, கீழ்க்கண்ட நிலைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கவேண்டும்.

(i) "நீண்டகாலத்திலும், குறுகியகாலத்திலும் நன்மையைத் தரத்தக்க வகையில் நாட்டின் வசதிகள் உத்தம அளவில் பயன் படுத்தப்படவேண்டும்;

(ii) வேளாண்மைத் துறையின் அவசியத் தேவைகளைப் பூர்த்திசெய்து, உற்பத்திக் குறியிலக்குகளைப் பெறவேண்டும்;

(iii) வேளாண்மை உற்பத்தியில் தொடர்ச்சியான நிரந்தர முன்னேற்றம் பெறத்தக்க வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்."[1]

வேளாண்மைப் பொருளாதாரம் உறுதியான அடிப்படையில் அமைந்திருத்தல் அவசியமானதாகும். வேளாண்மைக் கொள் கையின் நோக்கங்களை அதன்மூலமே பெற வாய்ப்பு ஏற்படும். உற்பத்தித்திறன், வருவாயில் உறுதிநிலை, பொருளாதாரத்தின் உறுதித்தன்மை, வேளாண்மையில் ஈடுபட்டுள்ள மக்களின் நலன் ஆகிய வேளாண்மைக் கொள்கையின் நோக்கங்களைப்பெற வேளாண்மையில் பல மாறுதல்கள் செய்யப்படவேண்டும். சமநிலை வளர்ச்சி ஏற்பட்டால்தான் சமுதாய நலன் காக்கப்படும்.

வேளாண்மைக்காகத் திட்டமிடுதலின் இன்றியமையாமை

கிராமப்புறங்களில் வசிக்கும் பெரும்பகுதி மக்கட்தொகையின் ஒரே வேலைவாய்ப்பாக அமைந்திருப்பது வேளாண்மையாகும். அம் மக்களின் பொருளாதார, சமுதாய நிலைகளில் மாற்றங்களைச் செய்வதன்மூலமே வேளாண்மையைத் திருத்தமுடியும். கிராம மக்களின் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளை அரசு மேற் கொண்டு, பொருளாதார முன்னேற்றத்தில் அவர்களைப் பெரும் பங்கு ஏற்கச் செய்யவேண்டும். நாட்டின் வளர்ச்சிக்கான திட்டங் களில் அவர்களின் பங்கு அதிக அளவுள்ளதாக இருத்தல் வேண்டும். வேளாண்மை உற்பத்தியின் நெகிழ்வற்ற நிலையே முன்னேற்றத்தைக் கட்டுப்படுத்துகின்றது. வேறு பல பொருளா தாரத் துறைகளின் முன்னேற்றத்தையும் குறைவான வேளாண்மை

1. S. R. Sen, The Strategy for Agricultural Development. p. 173.

உற்பத்தி தடைசெய்கின்றது. மொத்தப் பொருளாதாரத்தின் வளர்ச்சியும் இதனால் பாதிக்கப்படுகின்றது. மக்கட்தொகைப் பெருக்கத்தை மிகுதியாகக் கொண்ட நம்நாட்டில், திட்டங்களில் வேளாண்மை உற்பத்தியை அதிரிக்கும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படவேண்டும். பெருகும் மக்கட்தொகைக்குத் தேவை யான உணவில் தன்னிறைவு பெறவேண்டும். நம் திட்டங்களில் வேளாண்மைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டாலும், இதுவரை உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடையவில்லை. மதிப்புமிக்க அந்நியச் செலாவணி உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதில் வீணடிக்கப்படுகின்றது. வேளாண்மையைப் பெரும் பகுதி மக்கள் சார்ந்து வாழும் நம்நாட்டில் உணவு உற்பத்தியில் தன்னிறைவைப்பெற இயலவில்லை. மேலும் வேளாண்மைப் பொருட்களை அமெரிக்கா போன்ற பெரிய தொழில் நாடுகளி னின்றும் இறக்குமதிச் செய்கின்றோம் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியப் பொருளாதாரத்தில் வேளாண்மையும், அதன்மூலம் ஏற்படுகின்ற வருவாய்ப் பெருக்கமும் முக்கிய இடங்களைக் கொண் டுள்ளன. 1951–52-ல் தேசிய வருவாயில் 50·4 சதவீதம் 'வேளாண்மைத் துறையின்'மூலம் பெறப்பட்டது. 1961–62-ல் வேளாண்மை, காடுகள், மீன்பிடிப்பு ஆகியவற்றின் வாயிலாக தேசிய வருவாயில் 50·5 சதவீதம் கிடைத்தது. இது 1964–65-ல் 51·1 சதவீதமாக உயர்ந்தது. 1966-67-ல் தேசிய வருவாயில் வேளாண்மையின் பங்கு 49·4 சதவீதமாகும். இப்புள்ளி விவரங் களின் மூலம் வேளாண்மையும், அதைச் சேர்ந்த தொழில்களும் நாட்டு வருவாயில் பாதியைத் தருகின்றன என்பதை உணரலாம். இதைத்தவிர, வேளாண்மை பல பெரிய தொழில்களுக்கான கச்சாப்பொருட்களையும் அளிக்கின்றது. பருத்தி, சணல் நெசவுத் தொழில்கள், சர்க்கரைத் தொழில் ஆகியவற்றின் உற்பத்தியின் அளவு வேளாண்மையைச் சார்ந்துள்ளது. மேலும் இப்பெரிய தொழில்களே நம்நாட்டின் ஏற்றுமதியில் பெரும்பங்கைக் கொண்டு உள்ளன.

தொழில் முன்னேற்றம் வேளாண்மையின் வளர்ச்சியின் அடிப்படையில் ஏற்படக்கூடிய ஒன்று. பெருகி வருகின்ற மக்கட் தொகைக்குத் தேவையான உணவை அளிக்கவும், நாட்டைத் தொழில் மயமாக்கவும், ஏற்றுமதியின் அளவை அதிகரிக்கவும் வேளாண்மை வளர்ச்சி இன்றியமையாதது. உற்பத்திப் பெருகினால் விலைகளின் உயர்வையும் கட்டுப்படுத்தலாம். பொருளாதாரத்தின் எல்லாத் துறைகளின் வளர்ச்சிக்கும், மக்கள் தரமான வாழ்வைப் பெறவும் வேளாண்மை உதவும்.

வேளாண்மைக்காகத் திட்டமிடுதலில் உள்ள சிக்கல்கள்

வளர்ச்சியடையாத நாடுகளில் வேளாண்மை முன்னேற்றத்தைத் தடைசெய்யும் பல காரணிகள் அமைந்துள்ளன. இக் காரணிகளால் வேளாண்மையானது வளர்ச்சியைப் பெருமல் தேக்க நிலையையே கொண்டுள்ளது. நம்நாட்டில் வேளாண்மை குறைந்த அளவு உற்பத்தியைக் கொண்டுள்ள சமநிலையில் இருக்கின்றது. வேளாண்மை உற்பத்தியின் அளவை அதிகரிப்பது மிகக் கடினமான நிலையைத் தருகின்றது. குறைந்த உற்பத்திக்குக் குறைவான முதலீடு காரணமாகின்றது. முன்னேற்றமான உற்பத்தி முறைகள் பின்பற்றப்படுவதில்லை. விவசாயிகள் பயன்படுத்துகின்ற கால்நடைகள், தரம் குறைந்த விதைகள், பழைய உற்பத்திச் சாதனங்கள் ஆகியவையும் ஆக்கத்தைக் குறைந்த அளவிலேயே தருகின்றன. நிரந்தரமான, தொடர்ச்சியான, உறுதியான வேளாண்மை வளர்ச்சியைப்பெற இயலவில்லை. வேளாண்மையின் ஒருசில நிலைகளில் வளர்ச்சி ஏற்படும்போது, வேறு சில நிலைகளின் வளர்ச்சி பல காரணிகளால் தடைப்படலாம். இதனுல் வேளாண்மைப் பொருளாதாரத்தின் முழு நிலையும் சமநிலை வளர்ச்சியைப் பெறுவதில்லை.

வேளாண்மை வளர்ச்சியடையாத நிலையிலேயே இருக்கின்றமைக்கு வேருெரு காரணம் பல விவசாயிகள் வறிய நிலையில் இருப்பதும், அவர்கள் கல்வியறிவைப் பெற்றில்லாத நிலையும் ஆகும். அவர்கள் குறைந்த வசதிகளையே கொண்டுள்ளனர். கடன் வசதிகளையும் அவர்கள் எளிதில் பெறமுடிவதில்லை. மிகச்சிறிய அளவு நிலத்தையே அவர்கள் உடைமையாகக் கொண்டுள்ளனர். வேளாண்மை பருவகாலத் தொழிலாக இருப்பதால் அதில் உறுதியற்ற நிலையும் அமைந்துள்ளது. வேளாண்மை உற்பத்தி மழைப் பற்ருக்குறையால் பாதிக்கப்படலாம்; அதிக மழையும் உற்பத்தியின் அளவை அதிகரிக்க உதவுவதில்லை. சாதகமான தட்ப வெப்ப நிலைகளும் உற்பத்தியின் அளவை நிர்ணயிக்கின்றன. நம்முடைய வேளாண்மையில் வளர்ச்சியைப்பெற அடிப்படை மாற்றங்கள் பலவற்றைச் செய்யவேண்டும். பொருளாதார ரீதியில் அதிக இலாபங்கள் கிடைக்காவிட்டாலும், வேளாண்மை பெரும்பகுதி மக்களின் வாழ்விற்குப் பற்றுக்கோலாக இருப்பதால், உயர்ந்த அளவில் முதலீடுகள் செய்யப்படுதல் தேவைப்படுகின்றது.

நம்நாட்டின் வேளாண்மை அமைப்பு சில முக்கிய இயல்புகளைக் கொண்டுள்ளது. அவ்வியல்புகளைப் பின்வருமாறு தரலாம் :

1. நிலத்தின்மீது அதிக மக்கட்தொகை அமைந்துள்ளதால், குறைந்த அளவுள்ள நிலங்களையே மக்கள் பெறுகின்றனர்.

2. நிலங்கள் பிரிக்கப்பட்டு துண்டு துண்டுகளாகப் பல இடங்களிலும் சிதறிக் கிடக்கின்றன. இதனுல் சாகுபடி நிலங்கள் அதிக இலாபத்தைத் தருவதாக அமைவதில்லை.

3. ஒரு ஏக்கர் நிலத்திற்கான உற்பத்தி மிகவும் குறைவாக உள்ளது.

4. சாகுபடி நடவடிக்கைகள் குறைந்த அளவு வருவாயை மட்டுமே தருகின்றன. இதனுல் சாகுபடியாளர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தினருக்கும் பராமரிப்பு (Subsistence) அளவிற்கும் குறைவான வருவாய் மட்டுமே கிடைக்கின்றது.

5. நிலச்சீர்திருத்தங்கள் நிறைவேற்றப்பட்ட பிறகும், நிலவுடைமைகள் ஒரு சிலரிடம் மட்டுமே குவிந்துள்ளன. பெரும்பாலான சாகுபடியாளர்கள் சிறு நிலவுடைமைகளைக் கொண்டுள்ளனர்.

6. சிறு விவசாயிகளும், நடுத்தர விவசாயிகளும் நில உரிமையில் உறுதியற்ற நிலையைப் பெற்றுள்ளனர். அவர்களில் பலர் நிலவுடைமைகளைக் கொண்டிருப்பதில்லை. நிலவுடைமையைக் கொண்டுள்ள சிலர் அதை அடமானமாகப் பயன்படுத்திப் பணம் பெறுகின்றனர். சிலர் வேறு வழிகளில் கடன் பெற்றுவிடுவதால், தங்களின் நிலவுடைமைகள் பிற்காலத்தில் பறிக்கப்படும் எனக் கருதுவதால் ஊக்கத்தோடு வேளாண்மையில் ஈடுபடுவதில்லை.

7. பல சாகுபடியாளர்கள் குத்தகை முறையிலேயே வேளாண்மை உற்பத்தியைச் செய்கின்றனர். குத்தகை முறையில் பயிர் செய்யும் காலமும் உறுதியற்ற நிலையிலேயே உள்ளது.

8. வேளாண்மைச் சமுதாயத்தை மாற்றியமைக்கும் அமைப்பு முறை கிராம அளவில் அமைந்திருக்கவில்லை. தற்பொழுது வேளாண்மைச் சமுதாயம் சிறப்பாக அமைந்திருக்கவில்லை. இதை மாற்ற, வேளாண்மையின் அடிப்படைச் சிக்கல்களைக் களையும் அமைப்புமுறை தேவைப்படுகின்றது.

9. விவசாயிகள் எதையும் அதிகம் அறியாதவர்களாகவும், பழமைவாதிகளாகவும் உள்ளனர். சிறப்பான முறைகளில் அவர்கள் முதலீடு செய்வதில்லை. முன்னேற்றமடைந்த சாகுபடி முறைகளையும் அவர்கள் பின்பற்றுவதில்லை.

இவையாவும் வேளாண்மை வளர்ச்சியைத் தடை செய்யும் அடிப்படைச் சிக்கல்களாக உள்ளன. இவ்விதச் சிக்கல்கள் நமது

வேளாண்மைப் பொருளாதாரத்தில் நீண்டகாலமாகவே இருந்து வருகின்றன. இச் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பது பல திட்டங்களால் மட்டுமே முடியக்கூடிய ஒன்றாகும். உறுதியான, நிலையான இயக்கநிலை கொண்டதாக வேளாண்மையை மாற்றத் திட்டமிட்ட வளர்ச்சியே பெரிதும் உதவுமெனலாம். வேளாண்மை வளர்ச்சி நிலைகளில் அமைந்துள்ள பல தீமைகளையும் நீக்க உதவுபவை திட்டங்களேயாகும். வேளாண்மையை முக்கியத் தொழிலாகக் கொண்ட நாடு இந்தியா. அம் முக்கியத் தொழில் முன்னேற்ற மடையத் திட்டமிடுதல் இன்றியமையாததாகும்.

ஐந்தாண்டுத் திட்டங்களில் வேளாண்மைக்காகத் திட்டமிடுதல்

1951-ல் முதல் ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கப்படுவதற்கு முன் நம்நாட்டின் பொருளாதார நிலைகள் சிறப்பாக வளர்ந்திருக்க வில்லை. வருவாயின் அளவும், நுகர்வின் அளவும் மிகக் குறைந்த நிலையிலேயே அமைந்திருந்தன. இரண்டாவது உலகப் போருக்குப் பின்னும், பாகிஸ்தான் இந்தியாவிலிருந்து பிரிந்த பிறகும் கடுமையான உணவுப் பற்றாக்குறையும், கச்சாப்பொருட்களின் பற்றாக் குறையும் ஏற்பட்டன. ஜூன் 1950-ல் தொடங்கிய 'கொரியப் போரும்' (Korean War), 1950–51-ல் பருவ மழை தவறிய நிலையும் பற்றாக்குறை நிலையை மேலும் மோசமாக்கின. அச்சமயத்தில் மொத்த மக்கட்தொகையில் 64 சதவீதத்தினர் வேளாண்மையில் ஈடுபட்டிருந்தனர். தற்பொழுது இவ்வீதமானது மக்கட்தொகைப் பெருக்கத்தால் கூடியுள்ளது. பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்களில் வேளாண்மை உற்பத்திக்கு முதல் முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும். விரிவான முறையில், பரந்த அடிப் படையை ஏற்படுத்தித் தருவதாக வேளாண்மைத் திட்டங்கள் அமையவேண்டியது அவசியமானதாகும். கிராமப் பொருளாதாரம் மாற்றங்களைக் கொண்டு, விவசாய வளர்ச்சி வீதத்தை விரைவு படுத்துவதாக அமையவேண்டும்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண்மை

முதல் ஐந்தாண்டுத் திட்டம் (1951–56) பொருளாதாரத்தில் அமைந்திருந்த சமநிலையில்லாத நிலையை நீக்கும் நோக்கத்தைக் கொண்டிருந்தது. பொருளாதாரத்தின் எல்லாத்துறைகளிலும் சமநிலை வளர்ச்சியைப் பெற்று, அதன்மூலம் நாட்டு வருவாயை அதிகரித்து, மக்களுடைய வாழ்க்கைத்தரத்தையும் உயர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. முதல் திட்டத்தில் வேளாண்மை, நீர்ப்பாசனம், மின்சாரம் ஆகியவற்றிற்கான முதலீடு மொத்தச் செலவில் 43·2 சதவீதமாகும். தொழில் வளத்தை

நிலைநிறுத்த வேளாண்மைக்காக அதிக மூலதனத்தை ஒதுக்குவது அவசியமானது என திட்டக்குழு கருதியது. உணவுப் பொருட்களின் உற்பத்தி, கச்சாப்பொருட்களின் உற்பத்தி ஆகியவற்றை உயர்த்தாமல் தொழில் முன்னேற்றத்தைப் பெற இயலாது என அது அறிவுறுத்தியது. பொருளாதாரத்தை வலுப்படுத்த அடிப்படை சிறப்பாக அமைய வேண்டும். அந்த அடிப்படையை அளிப்பது வேளாண்மைவளர்ச்சியாகும். வேளாண்மையை வளர்ச்சியடையச் செய்து உற்பத்தியில் மிகுந்த உபரி தோன்றுமாறு செய்யவேண்டும். அவ்வுபரியைத் திரட்டுவதின் மூலமே பிற துறைகளில் வேலை வாய்ப்புகளைப் பெருக்க முடியும். எல்லாத்துறைகளின் முன்னேற்றமும் அடிப்படைத் துறையாகிய வேளாண்மையைச் சார்ந்துள்ளது. இக்காரணங்களால் முதல் திட்டத்தில் வேளாண்மைத் துறைக்கு முதன்மையான முக்கியத்துவம் தரப்பட்டது.

திட்டக்காலத்தில் உணவுத் தானியங்களின் உற்பத்தியை 54 மில்லியன் டன்னிலிருந்து 61·6 மில்லியன் டன்னாகவும், பருத்தி உற்பத்தியை 2·97 மில்லியன் பேல்களிலிருந்து 4·23 மில்லியன் பேல்களாகவும், சணல் உற்பத்தியை 3·28 மில்லியன் பேல்களிலிருந்து 5·39 மில்லியன் பேல்களாகவும், கரும்பு உற்பத்தியை 5·62 மில்லியன் டன்னிலிருந்து 6·32 மில்லியன் டன்னாகவும், எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை 5·1 மில்லியன் டன்னிலிருந்து 7·07 மில்லியன் டன்னாகவும் உயர்த்தக் குறியிலக்குகள் நிர்ணயிக்கப் பெற்றன. நீர்ப்பாசன வசதிகளை 51·5 மில்லியன் ஏக்கர்களிலிருந்து 70·7 மில்லியன் ஏக்கர்களுக்குப் பெருக்கத் திட்டமிடப்பட்டது.

வேளாண்மை உற்பத்தியின் அதிக அளவு குறியிலக்குகளை அடைய, முன்னேற்றமடைந்த முறைகளைப் பின்பற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதிக அளவு உரங்கள் பயன்படுத்தப் பட்டன; நல்விதைகள் சாகுபடிக்குப் பயன்படுத்தப் பெற்றன. அதிக நீர்ப்பாசன வசதிகளின் மூலமும் உற்பத்தியை உயர்த்தலாம் எனக் கருதப்பட்டது. ஜப்பானிய செறிவுச் சாகுபடிமுறை நெல் உற்பத்தியில் தொடங்கப்பெற்றது. கரும்பு உற்பத்தியைச் செறிவுச் சாகுபடி முறையின் பின்பற்ற செயல்முறைகள் கைக்கொள்ளப் பட்டன; உற்பத்தித்திறனைப் பெருக்கவும், வேளாண்மைத் தொழில் நுணுக்க உற்பத்தி முறைகளைப் பரப்பவும் விவசாயிகளுக்கு ஊக்கங்கள் அளிக்கப்பட்டன. நிலச்சீர்திருத்தங்களும் கொண்டு வரப்பட்டன. கூட்டுறவு முறையில் வேளாண்மையை வளர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. விற்பனை அமைப்புகள், ஆராய்ச்சிகள் ஆகியவையும் வேளாண்மை முன்னேற்றத்திற்காக ஏற்படுத்தப்பெற்றன. மீன் பிடிப்புத்துறை, நிலப்பாதுகாப்பு,

காடுகளின் வளர்ச்சித்துறை, கால்நடைப் பராமரிப்பு ஆகியவற்றின் முன்னேற்றத்திற்காகவும் முதலீடுகள் செய்யப்பட்டன. முதல் ஐந்தாண்டுத் திட்டம் வேளாண்மை வளர்ச்சிக்கான அடிப் படையை ஏற்படுத்தித் தந்தது எனலாம்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் மொத்த முதலீடாகிய ரு. 1,960 கோடியில், வேளாண்மைக்காக ரூ. 601 கோடி ஒதுக்கப்பட்டது. இதில் நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக ரூ. 310 கோடியும் வேளாண்மை, சமுதாய நலத் திட்டங்களுக்காக ரூ. 291 கோடியும் ஒதுக்கப்பட்டன. கல்வி, ஆரோக்கியம், போக்குவரத்து, தொழில் போன்றவைகளுக்கான முதலீடும் வேளாண்மை வளர்ச்சிக்கு மறைமுகமாக உதவியது எனலாம். வேளாண்மை ஆக்கத்தை அதிகரிக்கப் பல்வேறு பணிகளும் கைக்கொள்ளப்பெற்றன. நீர்ப் பாசன வசதிகளையும், மின்சார உற்பத்தியையும் பெருக்க 'பல நோக்கு நதிப்பள்ளத்தாக்குத் திட்டங்கள்' அரசால் அதிக முதலீட்டோடு மேற்கொள்ளப்பட்டன. நல்விதைகள், உரங்கள், முன்னேற்றமான உற்பத்திக் கருவிகள் வழங்கப்பட்டன. வேளாண்மைப் பொருட்களின் விற்பனை முறையில் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. 'மத்திய இயந்திரக் கலப்பை நிறுவனம்' (Central Tractor organization) முதல் திட்டக்காலத்தில் புதிதாக 14 இலட்சம் தரிசு நிலங்களைச் சாகுபடி நிலங்களாக மாற்றியது. சிறிய அளவுகளில் அமைந்துள்ள துண்டு நிலங்களை இணைப்பதற் கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. செறிந்த சாகுபடி முறைகளை விவசாயிகள் பின்பற்றத் தூண்டும் ஊக்கங்களும் அளிக்கப்பெற்றன.

முதல் திட்டக்காலத்தில் வேளாண்மை உற்பத்தி கணிசமான அளவிற்கு உயர்ந்தது. வேளாண்மைக்கான திட்டங்கள் வெற்றி பெறக் காரணமாக இருந்தவை இயற்கைக் காரணிகளுமாகும். பருவமழை சாகுபடிக்குச் சாதகமாக இருந்ததால் உற்பத்தி உயர் வடைந்தது. 1949–50-ல் உணவு உற்பத்தி 54 மில்லியன் டன் ஆகும். உணவு உற்பத்தியின் குறியிலக்கு 61·6 மில்லியன் டன்னாக நிர்ணயிக்கப்பட்டது. திட்டம் தொடங்கி மூன்றாண்டுகளுக் குள்ளாகவே வேளாண்மை உற்பத்தி இக்குறியிலக்கை விட அதிகமாகப் பெறப்பட்டுவிட்டது. திட்டத்தின் இறுதி இரண்டு ஆண்டுகளிலும் உற்பத்திக் கணிசமாக உயர்ந்துவிட்டது. முதல் திட்டத்தின் இறுதியாண்டில் (1955–56) உணவுத் தானியங்களின் உற்பத்தி குறியிலக்கைவிட 4·2 மில்லியன் டன் அதிகமாகக் கிடைத்தது. இந்நிலையில் முக்கியமான ஒன்று அறியப்படுதல் அவசியமாகின்றது. இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத்

திட்டங்களைவிடக் குறைந்த மூலதனமே முதல் திட்டத்தை நிறைவேற்றப் பயன்படுத்தப்பட்டது. குறியிலக்குகளும் எளிதில் பெறத்தக்க அளவிலேயே நிர்ணயிக்கப்பட்டன. தட்பவெப்பநிலைகளும், பருவ மழையும் சாதகமாக இருந்தன. இவற்றால் உற்பத்திக் குறியீட்டளவை எட்டுவது எளிதாகிவிட்டது. எனினும் வேளாண்மை உற்பத்தி எல்லா ஆண்டுகளிலும் சிறப்பாக இருக்கவில்லை. வேளாண்மை வளர்ச்சி முதல் திட்டக்காலத்தில் கணிசமான அளவிற்கு ஏற்பட்டது எனலாம்.

ஓரளவு வேளாண்மை உற்பத்தி உயர்வடைந்தமையால்தான் இரண்டாவது திட்டத்தில் வேளாண்மைக்கு முதல் முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. அது ஒரு 'தொழில் திட்டமாக' அமைந்தது. வேளாண்மை வளர்ச்சி முதல் திட்டக்காலத்தில் ஓர் அடிப்படையை ஏற்படுத்தித் தந்தது, முதல் திட்டம் முதல் முயற்சியாக இருந்தும், குறிப்பிடத்தக்க வளர்ச்சியை வேளாண்மைத் துறையில் அது அளித்தது. இவ்வேளாண்மைத் திட்டத்தின்மூலம் கிராமப் பொருளாதாரத்தில் பல மாற்றங்கள் தோன்றின.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண்மை

முதல் திட்டம் வேளாண்மை முன்னேற்றத்திற்கு முக்கியத்துவம் அளித்ததால் அதை ஒரு 'வேளாண்மைத்திட்டம்' எனவும் அழைக்கலாம். இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் சுரங்கத் தொழிலுக்கும், பிற தொழில்களின் முன்னேற்றத்திற்கும் முக்கியத்துவம் தரப்பட்டது. இவ்வாறு வேளாண்மையினின்றும் தொழில் துறைக்கு முக்கியத்துவம் அளித்த நிலை மாற்றப்பட்டமைக்கு இரு விதக் காரணங்கள் கூறப்படுகின்றன.

முதலாவதாக, முதல் திட்டக்காலத்திலேயே வேளாண்மை, நீர்ப்பாசனம், மின்சாரம் ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவிட்டன.

இரண்டாவதாக, இரண்டாவது திட்டக்காலத்தில் அடிப்படைத் தொழில்களை வளர்க்காமல் நாட்டு வருவாயை அதிகரிக்க இயலாது எனக் கருதப்பட்டது. வேலையின்மைச் சிக்கலைத் தீர்க்கவும் நாட்டைத் தொழில் மயமாக்குவது இன்றியமையாதது என உணரப்பட்டது.

இரண்டாவது திட்டத்தின் மொத்தச் செலவில் வேளாண்மை, நீர்ப்பாசனம், மின்சக்தி ஆகியவற்றிற்காக 30·8 சதவீதம் மட்டுமே ஒதுக்கப்பட்டது; முதல் திட்டத்தில் இவைகளுக்காக மொத்தச்

செலவில் 43·2 சதவீதம் செலவிடப்பட்டது. தொழில்துறை முன்னேற்றத்திற்காக இரண்டாவது திட்டத்தின் மொத்த முதலீட்டில் 18·5 சதவீதம் ஒதுக்கப்பட்டது; முதல் திட்டத்தில் இதன் அளவு 7·6 சதவீதம் மட்டுமேயாகும்.

இரண்டாவது திட்டக்காலத்தில் வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க முன்னேற்றமடைந்த உற்பத்தி முறைகள் புகுத்தப் பட்டன. செறிந்த முறைச் சாகுபடியும் நாட்டின் பல பகுதிகளிலும் பரப்பப்பட்டது. முதல் திட்டத்தில் தானியங்களின் உற்பத்தியைப் பெருக்குவதே முக்கிய நோக்கமாக இருந்தது. இரண்டாவது திட்டத்தில் வேளாண்மைப் பொருளாதாரத்தைப் பலவகைகளிலும் வளர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. கால்நடைப் பராமரிப்பில் முன்னேற்றத்தை ஏற்படுத்தவும், கிராமப் பொருளாதாரத்தில் பல மாற்றங்களைச் செய்யவும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. நீர்ப்பாசன வசதிகள், நல்விதைகள், உரங்கள் ஆகியவையும் அளிக்கப்பெற்றன. ஜப்பானிய நெல் சாகுபடி முறையும் விரிவாக்கப்பட்டது.

தொழில் முன்னேற்றத்தைப் பெறும் வகையில் இத்திட்டம் தீட்டப்பட்டாலும், வேளாண்மை வளர்ச்சிக்கும் சிறப்பான இடம் தரப்பட்டது. வேளாண்மையோடு தொடர்பு கொண்ட பல தொழில்களையும் வளர்க்கச் செயல் திட்டங்கள் கைக்கொள்ளப் பட்டன. மேலும் முதல் திட்டத்தில் வேளாண்மை வளர்ச்சியடைந்துவிட்டது எனவும், அதனால் இரண்டாவது திட்டத்தில் தொழில்துறையை வளர்க்கவேண்டும் என்ற கருத்தும் நிலவியிருந்தது. இரண்டாவது திட்டத்தின் மொத்த முதலீடு ரூ. 4600 கோடியாகும். வேளாண்மை, நீர்ப்பாசனம், சமுதாயநலத் திட்டம் ஆகியவற்றிற்காக ரூ. 950 கோடி ஒதுக்கப் பட்டது. இதில் நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு ரூ. 420 கோடியும், வேளாண்மை, சமுதாயநலத் திட்டம் இரண்டிற்கும் ரூ. 530 கோடியும் முதலீடு செய்யத் திட்டமிடப்பட்டது. இவற்றிற்கான செலவு மொத்த முதலீட்டில் 20 சதவீதமாக அமைந்திருந்தது. முதல் திட்டத்தைவிட இரண்டாவது திட்டத்தில் வேளாண்மைத் துறைக்கான முக்கியத்துவம் குறைந்தாலும், முதலீடு செய்யப்பட்ட பணத்தின் அளவு முதல் திட்டத்தைவிட இரண்டாவது திட்டத்தில் உயர்வாகவே இருந்தது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் மொத்த வேளாண்மை உற்பத்தியை 28 சதவீதமும், உணவுத் தானியங்களின் உற்பத்தியை 23·8 சதவீதமும் உயர்த்தத் திட்டமிடப்

பட்டது. உற்பத்தியை அதிகரிக்கப் பல நடவடிக்கைகளும் எடுக்கப் பெற்றன. அவற்றில் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களோடு, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களையும் மேற்கொண்டது குறிப்பிடத்தக்க தாகும். திட்டங்களைச் செயல்படுத்துவதில் மக்களின் ஒத்துழைப்பு அமைந்திருக்கவில்லை. அதிக முதலீட்டைக் கொண்ட நீர்ப்பாசன வசதிகள் சிறப்பாகப் பயன்படுத்தப்படவில்லை. நல்விதைகளின் பயனை விவசாயிகள் முற்றிலும் பெறவில்லை. விவசாயிகள் உரங் களைக் குறைந்த அளவிலேயே பயன்படுத்தினர். தொழில் நுணுக்க உற்பத்தி முறைகள் வேளாண்மைச் சாகுபடிகளில் சிறப்பான அளவிற்குப் பயன்படுத்தப்படவில்லை. வேளாண்மையில் கணிச மான வளர்ச்சி ஏற்பட்டாலும் திட்டக் குறியிலக்குகளை எட்ட இயல வில்லை. 1960–61-ல் உணவு உற்பத்தியை 80·5 மில்லியன் டன்னாக உயர்த்தத் திட்டமிடப்பட்டது; ஆனால் உற்பத்தி 79·7 மில்லியன் டன் என்ற அளவிற்கு மட்டுமே உயர்ந்தது. கரும்பு உற்பத்தி திட்டமிடப்பட்டதைவிட அதிகமான அளவை எட்டியது. 1960–61-ல் எதிர்பார்க்கப்பட்ட கரும்பு உற்பத்தி 7·8 மில்லியன் டன் மட்டுமே ஆகும்; ஆனால் உண்மை உற்பத்தி 10·4 மில்லியன் டன் என்ற அளவிற்கு உயர்ந்துவிட்டது. பிற விளைபொருட்கள் எல்லாவற்றிலும் திட்டமிட்டபடி குறியளவுகளை அடைய முடிய வில்லை. இரண்டாவது திட்டக்காலத்தில் 21 மில்லியன் ஏக்கர் புதிய நிலத்திற்கு நீர்ப்பாசன வசதிகள் அளிக்கக் கருதப்பட்டது; ஆனால் புதிதாக 15·9 மில்லியன் ஏக்கர் நிலத்திற்கு மட்டுமே நீர்ப் பாசன வசதிகளை அளிக்க முடிந்தது.

வேளாண்மை உற்பத்தி கூடவில்லையாதலால், பற்றுக்குறை ஏற்பட்டுப் பணவீக்கநிலை தோன்றியது. பற்றுக்குறை நிலை ஏற்பட் டமையால், உணவுத் தானியங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. இது அந்நியச் செலாவணியின் தேவையை மேலும் பெருக்கி விட்டது. மதிப்புமிக்க அந்நியச் செலாவணி உணவு இறக்கு மதிக்காகச் வீணடிக்கப்பட்டது. உணவு இறக்குமதிக்காகச் செலவிடப்பட்ட அந்நியச் செலாவணியை பலவகை இயந்திரச் சாதனங்கள், கருவிகள் ஆகியவற்றின் இறக்குமதிக்குப் பயன்படுத்தியிருந்தால் நாடு தொழில் மயமாக அது உதவி யிருக்கும். தொழில் முன்னேற்றம் இதனால் ஓரளவு பாதிக்கப் பட்டது எனக் கூறலாம். இத்திட்டக்காலத்தில் பல வேளாண்மைப் பொருட்களின் உற்பத்தியும் எதிர்பார்த்த அளவு உயரவில்லை. பற்றுக்குறை நிதியாக்கத்தை அதிக அளவு பின்பற்றியமையாலும், வேளாண்மைப் பொருட்களின் பற்றுக்குறை இருந்தமையாலும் பணவீக்க நிலை தோன்றியது. இக்காலத்தில் மொத்த விலைக் குறியீட்டெண் 35 சதவீதமும், எண்ணெய் வித்துக்களின் விலைகள்

76 சதவீதமும், தானியங்களின் விலைகள் 37 சதவீதமும் அதிகரித்தன. வேளாண்மைப் பொருட்களின் விலையுயர்வு தொழிற் பொருட்களின் விலையுயர்வையும் ஏற்படுத்தியது. பொதுவாகப் பணவீக்க நிலை இரண்டாவது திட்டக்காலத்திலிருந்து இந்தியப் பொருளாதாரத்தில் அமைந்திருக்கின்றது. இரண்டாவது திட்டத்தில் வேளாண்மைத்துறைக்கு முதல் முக்கியத்துவம் தரப்பட்டிருத்தல் வேண்டும் என்ற கருத்து நிலவி வருகின்றது.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண்மை

மூன்றாவது திட்டம் உணவுத் தானியங்களின் உற்பத்தியில் தன்னிறைவைப் பெறவும், ஏற்றுமதிகளுக்காகவும்; தொழில் துறைக்குத் தேவையான வேளாண்மைப் பொருட்களின் உற்பத்தியை உயர்த்துவதற்காகவும் முதலீடுகளைச் செய்தது. வேளாண்மைப் பொருளாதாரத்தில், வேளாண்மை முன்னேற்றத்திற்கும், விரிவாக்கத்திற்கும் அதிக முக்கியத்துவம் அளிப்பது தவிர்க்க முடியாதது. வேளாண்மை உற்பத்தியின் அளவு பொருளாதார வளர்ச்சிவீதத்தை நிர்ணயிக்கின்ற ஒன்றாகும்; வேளாண்மையைச் சார்ந்துள்ள பல மக்களின் வாழ்க்கை நலனை நிர்ணயிப்பதும் வேளாண்மை உற்பத்தியின் அளவேயாகும். இக் காரணங்களாலும், இரண்டாவது திட்டம் தொழில்துறைக்கு முக்கியத்துவம் அளித்து தோல்வியை அடைந்தமையாலும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதிக மூலதனம் வேளாண்மைத் திட்டங்களுக்கே ஒதுக்கப்பட்டது.

இரண்டாவது திட்டம் பல படிப்பினைகளைத் தந்தமையால், மூன்றாவது திட்டத்தில் முதலீடுகள் அதிக அளவிற்கு வேளாண்மைத் துறையிலேயே செய்யப்பட்டன. ரூ. 6,300 கோடி திட்டத்தின் மொத்த முதலீடாகும். இதில் வேளாண்மைக்கு ஒதுக்கப்பட்டது ரூ. 1,310 கோடியாகும்; ஆனால் செலவிடப்பட்டது ரூ. 1760 கோடியாகும். இத்திட்டக்காலத்தில் உணவுத் தானியங்களின் உற்பத்தியை 30 சதவீதமும், பிற வேளாண்மைப் பொருட்களின் உற்பத்தியை 31 சதவீதமும் உயர்த்தத் திட்டமிடப்பட்டது. நீர்ப்பாசன வசதிகள் செய்யப்பட்டன. நிலத்தை வளமாக்க நல் விதைகள், உரங்கள், கருவிகள் ஆகியவை வழங்கப்பட்டன. சமுதாயநலத் திட்டத்தின்மூலம் மக்களிடம் திட்ட உணர்வு வளர்க்கப்பட்டது. கூட்டுறவுக் கடன்கள் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டன. கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், கூட்டுறவுக் கிட்டங்கிகளும் ஏற்படுத்தப்பெற்றன. கால்நடைப் பராமரிப்புக்காகச் செலவிடப்பட்டது. ஒவ்வொரு மாநிலத்திலும் ஒவ்வொரு மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டு செறிவு முறைச்

சாகுபடியை வளர்க்கத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. உற்பத்தி முறைகளில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. பல இயந்திரங்களும், கருவிகளும் வேளாண்மைத்துறையில் பயன் படுத்தப்படுவதற்கான வசதிகள் அளிக்கப்பட்டன.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண்மை, சமுதாய முன்னேற்றம், சிறிய, நடுத்தர, பெரிய நீர்ப்பாசனங்கள் ஆகிய திட்டங்களுக்காக ரூ. 1,718 கோடி ஒதுக்கப்பட்டது. இரண்டாவது திட்டத்தில் இவைகளுக்கான செலவு ரூ. 950 கோடி மட்டுமே யாகும். திட்டக்குழு உற்பத்தித்தொழில் நுணுக்கங்கள் வேளாண் மையில் செறிந்த முறையில் பயன்படுத்தப்பட வேண்டுமெனக் கருதியது. பின்வரும் பணிகளைத் திட்டமிட்டு வளர்க்கவேண்டு மென்று அது அறிவுறுத்தியது.

(i) நீர்ப்பாசனம்;

(ii) நிலப்பாதுகாப்பு; தரிசு நிலங்களைச் சாகுபடி நிலங்களாக மாற்றுதல்;

(iii) செயற்கை உரங்களையும், இயற்கை உரங்களையும் அளித்தல்;

(iv) நல்விதைகளைப் பரப்புதல்;

(v) பயிர்ப் பாதுகாப்பு;

(vi) முன்னேற்றமடைந்த கலப்பைகள், வேளாண்மைக் கருவிகள் ஆகியவற்றை அளித்தல்.

உணவுத் தானியங்களின் உற்பத்தியில் தன்னிறைவு பெறவும், ஏற்றுமதிகளைப் பெருக்கி தொழில்துறைக்குத் தேவையான கச்சாப் பொருட்களை அடைய வாணிபப் பயிர்களை உற்பத்திச் செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. உணவுத் தானியங்களின் உற்பத்திக் குறியீடு 100 மில்லியன் டன்னுக நிர்ணயிக்கப்பட்டது. இது 1960–61ஆம் ஆண்டின் 76 மில்லியன் டன் உணவுத் தானியங் களின் உற்பத்தியைவிடச் சுமார் 31·6 சதவீதம் அதிகமாகும். எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை 38 சதவீதமும், கரும்பு உற்பத்தியை 25 சதவீதமும், பருத்தி உற்பத்தியை 37·2 சதவீதமும், சணல் உற்பத்தியை 55 சதவீதமும், தேயிலை உற்பத்தியை 24 சதவீதமும் உயர்த்தத் திட்டமிடப்பட்டது. பிற வேளாண்மை விளைபொருட்களின் உற்பத்தியிலும் உயர்வான குறியளவுகள் நிர்ணயிக்கப்பட்டன.

மூன்ருவது திட்டக்காலத்தில் வேறு பல தீர்வுகளுக்கான திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன. அவற்றைப் பின்வருமாறு தரலாம் :

(1) புதிதாக 20 மில்லியன் ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவது. இதன்மூலம் நீர்ப்பாசன வசதிகளைப் பெற்ற மொத்த நிலத்தின் அளவு 90 மில்லியன் ஏக்கராக அதிகரிக்கும்.

(2) நிலப்பாதுகாப்பு 11·22 மில்லியன் ஏக்கர் நிலத்தில் செய்யப்படும். 3·6 மில்லியன் ஏக்கர் தரிசு நிலம் சாகுபடி நிலமாக மாற்றப்படும்.

(3) நைட்ரஜன் உரங்களை நான்கு மடங்கு அதிகமாகவும் (23,000 டன்னிலிருந்து 1 மில்லியன் டன்ருக), பாஸ்பேட் உரங்களை ஆறு மடங்கு அதிகமாகவும் (70,000 டன்னிலிருந்து 4,00,000 டன்ருக), பொட்டாசிய உரங்களை எட்டு மடங்கு அதிகமாகவும் (25,000 டன்னிலிருந்து 2,00,000 டன்ருக) வேளாண்மைச் சாகுபடியில் பயன்படுத்தத் திட்டமிடப்பெற்றது. 41 மில்லியன் ஏக்கர் நிலங்களில் பசுமை உரங்கள் பயன்படுத்தப்படுமெனக் கருதப்பட்டது. 1960–61-ல் 11·8 மில்லியன் ஏக்கர் நிலம் மட்டுமே பசுமை உரங்களைப் பெற்றது.

(4) தெரிந்தெடுக்கப்பட்டப் பகுதிகளில் 'செறிந்த வேளாண்மை மாவட்டத் திட்டங்கள்' (Intensive Agricultural District Programmes) பின்பற்றப்பட்டன. முன்னேற்றமடைந்த கலப்பைகளும், சாகுபடிக் கருவிகளும் இப்பகுதிகளில் பயன் படுத்தப் பெற்றன.

(5) புதிதாக 800 விதைப் பண்ணைகளும், விதைச் சேமிப்பு நிலையங்களும் ஏற்படத் திட்டமிடப்பட்டது.

(6) கிராமச் சமுதாயநலத் திட்டம் விரிவாக்கப்பெற்றது. 360 மில்லியன் கிராம மக்களுக்கு நன்மையளிப்பதாகவும், கடன் வசதிகளைச் செய்து தருவதாகவும் அது அமைந்தது.

(7) பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் 50 மில்லியன் ஏக்கர் நிலத்தில் எடுக்கப்படும். 1,000 தானியச் சேமிப்புக் கிட்டங்கிகளும், 9,200 சிறிய தானியச் சேமிப்பு கிட்டங்கிகளும் அமைக்கப்பெறும்.

(8) கூட்டுறவுப் பண்ணை (Co-operative Farming) முறையை வளர்ப்பது.

(9) நிலச் சீர்திருத்தங்களை மூன்றாவது திட்டக்காலத்தில் விரைவாக மேற்கொள்வது.

பலவித மாறுபட்டச் சூழ்நிலைகளால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிபெறவில்லை. 1962-ல் சீனாவின் படையெடுப்பும், 1965-ல் பாகிஸ்தானின் தாக்குதலும் நாட்டின் பாதுகாப்பிற்கான செலவைக் கூட்டிவிட்டன. 1965–66ஆம் ஆண்டிலும் பருவ மழை தவறியமையால் வேளாண்மை உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டது. உணவுத் தானியங்களின் உற்பத்தி 1965–66-ல் 72·3 மில்லியன் டன்னாகக் குறைந்துவிட்டது. 1960–61-ல் உணவுத் தானியங்களின் உற்பத்தி அளவு 82 மில்லியன் டன்னாகும்; 1964–65-ல் இது 89 மில்லியன் டன்னாக உயர்ந்தது. திட்டத்தின் குறியளவாகிய 100 மில்லியன் டன்னை எந்த ஆண்டிலும் பெற இயலவில்லை.

பற்றாக்குறை நிதியாக்கத்தாலும், பொருட்களின் பற்றாக்குறை ஏற்பட்டதாலும் பணவீக்க நிலை தீவிரமடைந்தது. 1961–62-ல் உணவுத்தானியங்களின் விலைக் குறியீட்டெண் 118·4ஆக இருந்தது. இது 1965–66-ல் 168·8ஆக உயர்ந்துவிட்டது. அயல் நாட்டுச் செலுத்து நிலையில் பாதகநிலை மேலும் தீவிரமடைந்தது. அந்நியச் செலாவணி பற்றாக்குறை ஏற்பட்டது. ரூ. 1,100 கோடி மதிப்புள்ள உணவுத் தானியங்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

ஆண்டுத் திட்டங்கள்

மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டம் முடிவடைந்தபின், நான்காவது திட்டத்தைத் தொடங்க முடியவில்லை. எனவே 1966–67 முதல் 1968–69 வரை மூன்று ‘ஆண்டுத் திட்டங்கள்’ நிறைவேற்றப்பட்டன. இம்மூன்று திட்டக்காலத்திலும் ஒதுக்கப்பெற்ற மூலதனம் ரூ. 6,757 கோடியாகும். இதில் வேளாண்மைத் துறைக்காக ரூ. 1624 கோடி செலவிடத் தீர்மானிக்கப்பட்டது. இது மொத்தச் செலவில் 24 சதவீதமாகும். 1968–69-ல் உணவுத் தானியங்களின் உற்பத்தியை 98 மில்லியன் டன்னாக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டது; ஆனால் உண்மை உற்பத்தி 95·6 மில்லியன் டன் என்ற அளவில் அமைந்தது. புதிய வேளாண்மைக் கொள்கை உருவாக்கப்பட்டு 1966–67-ல் வேளாண்மைக்காக மிக அதிக முதலீடு செய்யப்பெற்றது. வேளாண்மைத் திட்டங்கள், சமுதாய நலத் திட்டங்கள், நீர்ப்பாசனம், கூட்டுறவு ஆகியவைகளுக்காக 1967–68-ல் ரூ. 523·27 கோடியும், 1968–69-ல் ரூ. 482·47 கோடியும் ஒதுக்கப்பட்டன.

1966–67ஆம் ஆண்டுத் திட்டத்தில் உணவுத் தானியங்களின் உற்பத்தி 97 மில்லியன் டன்னாக உயருமென எதிர்பார்க்கப்பட்டது;

ஆனல் உண்மை உற்பத்தி 76 மில்லியன் டன் என்ற அளவிற்கு மட்டுமே உயர்ந்தது. உற்பத்திக்குறைவால் உணவுப்பொருட்களின் விலை 18·4 சதவீதம் அதிகரித்தது உணவுப்பொருட்கள் இறக்குமதிச் செய்யப்பட்டன. மிகுதியான அந்நியச் செலாவணிச் சிக்கல் ஏற்பட்டமையால் ஜூன் 1966-ல் ரூபாய் மதிப்புக் குறைப்பு செய்யப்பட்டது.

1967–68ஆம் ஆண்டுத் திட்டத்தில் உணவுத் தானியங்களின் உற்பத்தி 76 மில்லியன் டன் என்ற அளவில் இருந்தது. உணவுப் பற்ருக்குறையால் 8·7 மில்லியன் டன் உணவுத் தானியங்கள் இறக்குமதியாயின. தொழில்களுக்குத் தேவையான கச்சாப் பொருட்களும் பற்ருக்குறை நிலையில் இருந்ததால், தொழில் உற்பத்தி 3 சதவீதம் மட்டுமே உயர்ந்தது. இத்திட்டத்தில் வேளாண்மை, கூட்டுறவு, சமுதாய வளர்ச்சி ஆகியவற்றிற்காக ரூ. 376 கோடியும், நீர்ப்பாசனத்திற்காக ரூ. 147 கோடியும், மின்சாரத்திற்காக ரூ. 387 கோடியும் மூலதனம் ஒதுக்கப்பெற்றது. இந்த ஆண்டில் வேளாண்மை வளர்ச்சி சிறப்பாக இருந்தது. ஏற்றுமதி 3·7 சதவீதம் பெருகியதோடு, உள்நாட்டின் விலையுயர்வு களும் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டன. இத்திட்டத்தின் செலவு ரூ. 2,246 கோடி எனத் திட்டமிடப்பட்டது; ஆனல் உண்மையில் செலவிடப்பட்டது ரூ. 2,205 கோடியாகும்.

1968–69ஆம் ஆண்டுத் திட்டத்தில் மொத்தச் செலவு ரூ. 2,337 கோடி எனத் தீர்மானிக்கப்பட்டது. இம் மூலதனத்தில் வேளாண்மை, கூட்டுறவு, சமுதாய வளர்ச்சி ஆகியவைகளுக்காக ரூ. 328 கோடியும், மின்சாரத்திற்காக ரூ. 339 கோடியும், நீர்ப்பாசன வசதிகளுக்காக ரூ. 155 கோடியும் ஒதுக்கப்பட்டன. இந்த ஆண்டில் பொருளாதார வளர்ச்சி சிறப்படைந்தமைக்கு வேளாண்மை உற்பத்தி பெருகியமையே முக்கியக் காரணமாகும். வேளாண்மை ஆக்கம் அதிகரித்தமையால் ஏற்றுமதி 17·5 சதவீதம் அதிகரித்தது. பொருளாதாரத்தில் அமைந்திருந்த விலையுயர்வுகள் கட்டுப்படுத்தப்பட்டன. குறிப்பாக உணவுத் தானியங்களின் விலை 9·5 சதவீதம் குறைவடைந்தது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண்மை

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மொத்த முதலீடு ரூ. 14,398 கோடியாகும். இதில் 22 சதவீதம் வேளாண்மைத் துறைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. செறிவுமுறைச் சாகுபடியைத் தீவிரமாக்கி ஒரு ஏக்கருக்கான உற்பத்தியின் அளவை உயர்த்து வது திட்டத்தின் நோக்கமாக உள்ளது. உணவுத் தானியங்களின்

உற்பத்தி 1974–74-ல் 129 மில்லியன் டன்னுக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. உணவுத் தானியங்களின் உற்பத்தியின் உயர்வு திட்டக்காலத்தில் 31 சதவீதம் இருக்குமென எதிர்பார்க்கப் படுகின்றது. வேளாண்மையின் வளர்ச்சிக்காக ரூ. 3,182 ஒதுக்கப் பட்டுள்ளது. பொருளாதார வளர்ச்சியில் நிலையான தன்மையைப் பெற வேளாண்மை வளர்ச்சி தேவை என உணரப்பட்டுள்ளது. உணவின் உற்பத்தியைப் பெருக்கி தன்னிறைவைப் பெறக் கருதப் பட்டிருக்கின்றது. வேளாண்மை உற்பத்தியை உயர்த்துவதோடு, பற்றுக்குறைக் காலங்களில் உணவுத்தானியப் பங்கீட்டைச் சிறப் பாகச் செய்ய உற்பத்தி உயர்கின்ற காலங்களில் தானியங்கள் சேமிக்கப்படும். தானியக் கையிருப்பு முறையை சிறப்பாக வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் உணவுத் தானியங்களின் அதிக விலையுயர்வையும் தடுக்கமுடியும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் 5 சதவீத வேளாண்மை வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. பின்தங்கிய கிராமப் பகுதிகளை முன்னேற்றமடையச் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படும். வருவாயில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மூன்ருவது திட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 10,400 கோடியாகும். நான்காவது திட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 24,882 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் வெற்றி பெரிதும் வேளாண்மையைச் சார்ந்துள்ளது. எல்லா பொருளாதாரத் துறைகளின் உற்பத்தி நிலைகளிலும் குறியிலக்குகள் உயர்வாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன. பல இலட்சிய நோக்கங்களைக்கொண்டு அதிக முதலீட்டையும் கொண்ட பெரிய திட்டமாக இத்திட்டம் அமைந்திருக்கிறது.

வேளாண்மைத் திட்டங்களின் விளைவுகள்

1950–51-ல் 95·6 என்ற அளவில் இருந்த வேளாண்மை உற்பத்திக் குறியீட்டெண் 1955–56-ல் 116·8 என்ற அளவிற்குக் கூடியது. இது 22 சதவீத உயர்வாகும். எதிர்பார்த்த அளவைவிட உயர்வான வேளாண்மை உற்பத்தி முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பெறப்பட்டது. 1953–54-ல் உணவுத்தானியங்கள், எண்ணெய் வித்துகள் ஆகியவற்றின் உற்பத்தி திட்டமிடப் பட்டதைவிட அதிகரித்தது. ஆனால் 1952–53, 1953–54 ஆகிய ஆண்டுகளில் கரும்பு, சணல் ஆகியவற்றின் உற்பத்தி குறைவாக இருந்தது. முதல் திட்டத்தின் இறுதி இரண்டு ஆண்டுகளிலும் வேளாண்மை உற்பத்திச் சிறப்பான அளவிற்கு உயர்ந்தது. 1954–55-ல் சர்க்கரை உற்பத்தி மிக உயர்ந்த அளவாகிய 15·9 இலட்சம் டன்னை எட்டியது. 1955–56-ல் இது மேலும் உயர்ந்து

18·7 இலட்சம் டன் என்ற அளவை அடைந்தது. 1950–51-ல் உணவுத் தானியங்களின் உற்பத்தி 50·8 மில்லியன் டன்னுகும்; 1955–56-ல் இதைவிட 16 மில்லியன் டன் அதிக உற்பத்தி பெறப் பட்டது. அதாவது உணவுத் தானியங்களின் உற்பத்தி சுமார் 22·2 சதவீதம் கூடியது. கூட்டுறவுப்பண்ணை முறை எதிர்பார்த்த விளைவுகளை ஏற்படுத்தவில்லை. அதனுடைய வளர்ச்சியும் குறைந்த அளவிலேயே அமைந்திருந்தது. நிலச்சீர்திருத்தங்களும் விரை வாகக் கொண்டு வரப்படவில்லை. நிலங்கள் உட்பிரிவுபடுத்தப்பட்டு துண்டாடப்பட்டிருந்த நிலையும் மாற்றப்படவில்லை. வேளாண்மை உற்பத்தியின் அளவு இத்திட்டத்தில் உயர்ந்தாலும், வேளாண்மை அமைப்பு முறைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படவில்லை. பருவமழைச் சாதகமாக இருந்ததாலும் உற்பத்தியின் அளவு உயர்வடைந்தது எனக் கூறலாம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில், வேளாண்மை உற்பத்தியின் வளர்ச்சி வீதத்தை உயர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எல்லா வேளாண்மைப் பொருட்களின் உற்பத்திக் குறியீட்டெண் 1955–56-ல் 116·8 என்ற அளவில் இருந்தது; இது 1960–61-ல் 142·2 என்ற அளவிற்கு உயர்ந்து விட்டது. உணவுத் தானியங்களின் உற்பத்தி 22·4 சதவீதம் உயர்ந்தது. 1955–56-ல் 66·8 மில்லியன் டன்னுக இருந்த உணவுத் தானியங்களின் உற்பத்தி 1960-61-ல் 82·0 மில்லியன் டன்னுகக் கூடியது. இரண்டாவது திட்டக்காலத்தில் பருப்பு வகைகளின் உற்பத்தி 16·2 சதவீதமும், கரும்பு உற்பத்தி 83 சதவீதமும், பருத்தி உற்பத்தி 33 சதவீதமும் உயர்ந்தன. பலவித ஆக்கப் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டமையால்தான் உற்பத்தியானது பல பொருட்களிலும் இந்த அளவிற்கு உயர்வடைந்தது. முன்னேற்ற மடைந்த வேளாண்மைச் சாகுபடி முறைகள், இருபோகச் சாகுபடி, களை எடுத்தல், ஜப்பானிய முறை நெல் சாகுபடி ஆகியவற்ருல் ஆக்கத்தின் அளவு அதிகரித்தது.

இவற்றைத் தவிர அரசால் சில அளிப்புத் திட்டங்களும் மேற் கொள்ளப்பட்டன. செயற்கை உரங்கள், பயிர்ப்பாதுகாப்பு, நல் விதைகள், பசுமை உரங்கள் ஆகியவற்றை அளிப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டன. காடுகள் அழிக்கப்பட்டு விளைநிலங் களாக மாற்றப்பட்டன. சிறந்த பயிர்ச்சாகுபடி முறைகளைப் பரப்பி வேளாண்மை உற்பத்தியை உயர்த்தத் திட்டங்கள் வகுக்கப் பட்டன. நிலச்சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தொழில்நுணுக்க உற்பத்தி முறைகள் வேளாண்மையில் உற்பத்தியை உயர்த்த வேண்டுமென்ருல், நிலச்சீர்திருத்தங்கள்

மேற்கொள்ளப்பட வேண்டும். கிராமச் சமுதாயத்திலேயே பல புது வகை மாற்றங்கள் ஏற்பட்டால்தான் முன்னேற்றமடைந்த சாகுபடி முறைகளில் வெற்றியைப்பெற முடியும். பொருளாதார, சமுதாய அமைப்பு முறைகளில் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டால்தான், வேளாண்மைத்துறையில் சீர்திருத்தங்களைப்பெற இயலும்.

மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் வேளாண்மை வளர்ச்சிவீதத்தை உயர்த்தத் திட்டங்கள் கைக்கொள்ளப்பட்டன. 1950–51-ல் 95·6என்ற அளவில் இருந்த வேளாண்மை உற்பத்திக் குறியீட்டெண் 1964–65-ல் 158 என்ற அளவை எட்டியது. இது 85 சதவீத உயர்வாகும். மூன்றுவது திட்டத்தின் இறுதியாண்டில் (1965–66) இக்குறியீட்டெண் 132·7 என்ற அளவிற்குக் குறைந்து விட்டது. 1960–61ஆம் ஆண்டிற்கும் 1965–66ஆம் ஆண்டிற்கும், பல வேளாண்மைப் பொருட்களின் உற்பத்தி அளவுகளில் மிகுந்த வேறுபாடுகள் உள்ளன. உணவுத் தானியங்களின் உற்பத்தி 1960–61-ல் 82 மில்லியன் டன்னுக இருந்தது; 1965–66-ல் அது 72 மில்லியன் டன்னுகக் குறைந்துவிட்டது; பருப்பு வகைகளின் உற்பத்தி 4·3 மில்லியன் டன்னிலிருந்து 3·8 மில்லியன் டன்னுகவும், பருத்தி உற்பத்தி 5·2 மில்லியன் பேல்களிலிருந்து 4·7 மில்லின் பேல்களாகவும் குறைந்துவிட்டன. கரும்பு உற்பத்தி 11 மில்லியன் டன்னிலிருந்து 11·9 மில்லியன் டன்னுகவும், சணல் உற்பத்தி 4·1 மில்லியன் பேல்களிலிருந்து 4·4 மில்லியன் பேல்களாகவும் உயர்வடைந்தன எனினும் இவை குறைந்த அளவில் மட்டுமே உற்பத்தி உயர்வைப் பெற்றுள்ள நிலையை உணர்த்துகின்றன.

வேளாண்மை வளர்ச்சிக்கான புதிய கொள்கை

1961–62-ல் வேளாண்மை வளர்ச்சிக்கான புதிய முறை உருவாக்கப்பட்டது. அப்புதிய முறையின் பல திட்டங்கள் வேளாண்மை உற்பத்தியை உயர்த்த உதவின. அப்புதிய முறையில் சிறு நீர்ப்பாசன வசதிகள், செயற்கை உரங்கள், பசுமை உரங்கள், தரம் உயர்ந்த நல்விதைகள், பயிர்ப்பாதுகாப்பு, நிலப் பாதுகாப்பு, கடன் வசதிகள் ஆகியவற்றிற்கான பல திட்டங்களும் தீட்டப்பெற்றன. அதிக விளைச்சலைத் தரக்கூடிய உணவுத் தானியங்கள் பயிரிடப்பட்டன. நீர்ப்பாசன வசதிகள் கொண்ட இடங்களில் இருபோக சாகுபடிமுறை பின்றப்பட்டது. இப்புதிய கொள்கையின்மூலம் வேளாண்மை வளர்ச்சியில் பெற்ற வெற்றி களைப் பின்வருமாறு விளக்கலாம். வேளாண்மை வளர்ச்சித் திட்டங்கள் எந்த அளவிற்கு வேளாண்மை திருந்த உதவின என்பதை அவற்றின்மூலம் உணரலாம்.

சிறிய நீர்ப்பாசனம்

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் 51·80 இலட்சம் ஹெக்டேர் நிலத்திற்கு சிறிய நீர்ப்பாசன வசதிகள் அளிக்கத் திட்டமிடப்பட்டது. திட்டமிடப்பட்டபடியே இவ்வசதிகள் பெறப் பட்டன. 1960–61-ல் 9·95 இலட்சம் ஹெக்டேர் நிலம் நீர்ப்பாசன வசதியைப் பெற்றது. 1965–66-ல் நீர்ப்பாசன வசதியைப் பெற்ற நிலத்தின் அளவு 14·25 இலட்சம் ஹெக்டேர் ஆகும். 1965–66, 1966–67ஆம் ஆண்டுகளில் வரட்சிநிலை தோன்றியமையால் 1967ஆம் ஆண்டில் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களைப் பெருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1967–68-ல் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக ரூ. 156 கோடி செலவிடப்பட்டது.

நிலப்பாதுகாப்பும், பண்படுத்துதலும்

பல நிலப்பாதுகாப்புத் திட்டங்களுக்காக மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 72 கோடி செலவிடப்பட்டது. முதல் திட்டத்தில் ரூ. 1·6 கோடியும், இரண்டாவது திட்டத்தில் ரூ. 18 கோடியும் மட்டுமே நிலப்பாதுகாப்புத் திட்டங்களை நிறைவேற்ற செலவிடப்பட்டன. மூன்றாவது திட்டக்காலத்தில் 44 இலட்சம் ஹெக்டேர் நிலம் இவ்வாறு காக்கப்பட்டது. 1966–67ஆம் ஆண்டில் நிலப்பாதுகாப்புத் திட்டங்களால் பயனடைந்த நிலத்தின் அளவு 15·12 இலட்சம் ஹெக்டேர்; 1967–68-ல் இதன் அளவு 13·37 இலட்சம் ஹெக்டேர் ஆகும். 14 மாநிலங்களின் 13 நதிப்பள்ளத் தாக்குத் திட்டங்கள் நிலப்பாதுகாப்பிற்குப் பெரிதும் உதவின. இவை மத்திய அரசின் ஆதரவால் தொடங்கப்பட்டத் திட்டங் களாகும்.

நிலத்தைப் பண்படுத்த ரூ. 3·6 கோடி ஒதுக்கப்பட்டது. 2·38 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவுள்ள நிலத்தில் பண்படுத்தும் திட்டங்கள் பின்பற்றப்பட்டன. 1967–68-ல் 1·54 இலட்சம் ஹெக்டேர் நிலத்தைப் பண்படுத்தத் திட்டமிடப்பட்டது. நிலமற்ற விவசாயிகளுக்குப் பண்படுத்தப்பட்ட நிலங்கள் அளிக்கப்பட்டன. இவ்வாறு ஜனவரி 1968 வரை 1·07 இலட்சம் குடும்பங்கள் 1·89 இலட்சம் ஹெக்டேர் நிலத்தைப் பெற்றுள்ளன. தரிசு நிலங்கள் சாகுபடி நிலங்களாக மாற்றப்பட்டன. மத்திய அரசால் இத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது, இவ்வகைத் திட்டங்களின்மூலம் சாகுபடிக்கு ஏற்ற நிலங்கள் வேளாண்மை உற்பத்திக்காக எடுத்துக்கொள்ளப்பட்டன. இவ்வித நடவடிக்கைகளாலும் ஆக்கம் அதிகரித்தது என்று கூறலாம்.

இயற்கை உரங்களும், செயற்கை உரங்களும்

1966–67-ல் நைட்ரஜன் உரங்கள் 8·4 இலட்சம் டன்கள் என்ற அளவிற்குப் பயன்படுத்தப்பட்டது; இதன் அளவு 1968–69-ல் 11·5 இலட்சம் டன்களாக உயர்ந்தது. ஆனால் 1968–69-ல் பயன்படுத்தப்படவேண்டிய நைட்ரஜன் உரங்களின் குறியிலக்கு 17 இலட்சம் டன்களாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. பாஸ்பேட் உரங்கள் 1965–66-ல் 1·32 இலட்சம் டன்கள் என்ற அளவில் பயன் படுத்தப்பெற்றது; 1968–69-ல் இதன் அளவு 2·5 இலட்சம் டன் களாக உயர்ந்தது. 1968–69ஆம் ஆண்டிற்கான குறியிலக்கு 6·50 இலட்சம் டன்களாகும். பொட்டாசிய உரங்கள் 1965–66-ல் 78 ஆயிரம் டன்கள் பயன்படுத்தப்பட்டன; இது 1966–67-ல் 1·16 இலட்சம் டன்களாக உயர்ந்தது; 1967–68-ல் 2 இலட்சம் டன்கள் உபயோகப்படுத்தப்பட்டன. 1968–69ஆம் ஆண்டிற்கான குறி யிலக்கு 4·5 இலட்சம் டன்களாக நிர்ணயிக்கப்பட்டது. இயற்கை உரங்களைப் பயன்படுத்துவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப் பட்டன. நிலத்தின் வளத்தைப் பெருக்க செயற்கை உரங்கள் பெரிதும் உதவியுள்ளன. இயற்கை உரங்களை அதிக அளவிற்குப் பயன்படுத்தும் நிலையானது இந்திய வேளாண்மையில் அமைந் திருக்கவில்லை. உரங்களைப் பயன்படுத்தி, நிலவளத்தைக் காத்து உற்பத்தியை உயர்த்தலாம் என்ற எண்ணத்தை விவசாயிகளிடம் தோன்றச் செய்தவை அரசின் இத்திட்டங்களேயாகும்.

பயிர்ப்பாதுகாப்பும், நல்விதைகளும்

1966–67-ல் மாநில அரசுகள் அதிக உற்பத்தியைத் தரக்கூடிய பலவகைப்பட்ட நல்விதைகளைப் பரப்பும் நடவடிக்கைகளைக் கைக் கொண்டன. 1963-ல் 'தேசிய விதைகள் கழகம்' (The National Seeds corporation) தொடங்கப்பட்டது. பெருமளவு உற்பத்தியைத் தரக்கூடிய நல்விதைகளை இது அளித்தது. உலக வங்கியின் உதவியோடு உத்தரப்பிரதேசத்தின் 'டெரை'ப் (Terai) பகுதியில் விதைகளின் உற்பத்தித்திட்டம் தொடங்கப்பட இருக்கின்றது. நல்ல விளைச்சலைத் தரக்கூடிய விதைகளைக் கண்டுபிடிக்க பல முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பல வேளாண்மை ஆராய்ச்சி அமைப்புகளும் இதில் ஈடுபட்டுள்ளன. பயிர்ப்பாதுகாப்பு முறைகளின்மூலம் 1965–66-ல் பயனடைந்த நிலத்தின் அளவு 1·66 கோடி ஹெக்டேர் ஆகும். 1966-67-ல் 2·43 கோடி ஹெக்டேர் அளவுள்ள நிலம் பயிர்ப்பாதுகாப்பு முறைகளால் பயனடைந்தது; 1967–68-ல் 3·64 கோடி ஹெக்டேர் நிலம் பயனடைந்தது. 1868–69ஆம் ஆண்டிற்கான குறியீட்டின் அளவு 5·5 கோடி ஹெக்டேர் ஆகும்.

செறிந்த வேளாண்மை மாவட்டத் திட்டம் (Intensive Agricultural District Programme–IADP)

அதிக நீர்ப்பாசன வசதிகளைக்கொண்ட பகுதிகளில் உற்பத்தி வசதிகளைச் சிறப்பாகப் பயன்படுத்த, செறிந்த வேளாண்மை மாவட்டத்திட்டம் கொண்டுவரப்பட்டது. 'போர்டு நிறுவனத்தின்' (Ford Foundation) நிதி உதவியோடு இது தொடங்கப்பெற்றது. இத் திட்டம் இருவித நோக்கங்களைக் கொண்டதாக இருந்தது. அவை:

(i) உணவுப் பற்ருக்குறையைத் தவிர்ப்பதற்கும், விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுவதற்கான அடிப்படையை அமைப்பதற்கும் உணவு உற்பத்தியை அதிகரிப்பது;

(ii) உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான சிறந்த முறைகளை நடத்திக் காண்பிப்பது; இவ்விதத் தீவிர வேளாண்மைத் திட்டங்களை நீர்ப்பாசன வசதிகள் மிக்க இடங்களில் மேற் கொள்வது ஆகியவைகளாகும்.

உற்பத்தியை உயர்த்துவதற்கான தீவிர வழிகளை இது மேற் கொண்டது. தனியொருவருக்கான உற்பத்தியையும், ஒரு ஏக்கருக்கான உற்பத்தியையும், உயர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. சாகுபடிக்குச் சாதகமான இடங்களில் மட்டுமே இத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. விவசாயிகளை முன்னேற்ற மான சாகுபடி முறைகளைப் பின்பற்ற இவை தூண்டுகின்றன. இதற்காகக் கடன் வசதிகள், உரங்கள், விதைகள், கருவிகள், பூச்சிக்கொல்லி மருந்துகள் ஆகியவையும் அளிக்கப்படுகின்றன. வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கான எல்லா வசதி களும் இத் திட்டத்தின்மூலம் தரப்படுகின்றன.

செறிந்த வேளாண்மை மாவட்டத்திட்டம் தற்பொழுது நாட்டின் 17 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இம்மாவட்டங்களில் வேளாண்மை புதுமைப்படுத்தப்படுவதால் நல்விதைகள், உரங்கள் ஆகியவற்றிற்கான தேவை பெருகியுள்ளது. பருவநிலை தவறிய காலங்களிலும்கூட இவ்விடங்களில் உற்பத்தி பாதிக்கப்படுவதில்லை. பயிர்களின் நோய்கள் தடுக்கப்படுகின்றன; பயிர்களை அழிக்கும் பூச்சிகள் ஒழிக்கப்படுகின்றன.

புதிய வேளாண்மை முறையின் கீழ் அதிக உற்பத்தியைத் தரும் விதைகளைப் பரப்பும் திட்டமும்; பலபோகச் சாகுபடித் திட்டமும் அடங்குவனவாகும். இவ்வாறு பலவகைக் கொள்கை களாலும் வேளாண்மை வளர்ச்சிக்கான புதிய முறை உற்பத்தியை உயர்த்த உதவியுள்ளது. இவை பரிசோதனை முறைகளில்

அமைவதால், கிடைக்கின்ற அதிக உற்பத்தியால் பல விவசாயிகளும் புதிய சாகுபடி முறைகளைப் பின்பற்ற முன்வருகின்றனர். வேளாண்மை உற்பத்தியைக் கூட்ட எடுக்கப்படும் பல கொள்கைகளில் இது ஒரு சிறந்த கொள்கையாக அமைந்துள்ளது.

அதிக விளைச்சலைத் தரும் விதைகளைப் பயன்படுத்தும் திட்டம் முதலில் தெரிந்தெடுக்கப்பெற்றச் சில பகுதிகளில் மட்டும் பயன்படுத்தப்பட்டது. 'டைச்சங் நேடிவ் I' (Taichung Native I)' 'டைச்சங் 64' (Taichung 64), 'டைநன் 3' (Tainan 3), 'ஐஆர்-8 (IR-8)' 'ஏடிடி 27' (ADT-27) ஆகிய நெல்லின் நல்வகை விதைகளும், சில மெக்ஸிகன் வகை கோதுமை விதைகளும், சோளம் போன்ற வேறு சில வேளாண்மைப் பொருட்களின் நல்விதைகளும் நாடு முழுதும் பரப்பப்பட்டன. 1967–68-ல் 60·7 இலட்சம் ஹெக்டேர் நிலத்தில் இவ்வித விதைகளைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டது; 1968–69-ல் 85 இலட்சம் ஹெக்டேர் நிலத்திற்குப் பயன்படுத்த குறியீட்டளவு நிர்ணயிக்கப்பட்டது.

ஆண்டொன்றிற்கு இரண்டு அல்லது மூன்று போகச் சாகுபடிக்கு ஏற்ற குறுகிய காலத்தில் பயனளிக்கக்கூடிய பயிர்களும் வேளாண்மையில் புகுத்தப்பட்டன. ஒரே ஆண்டில் மூன்று முறைச் சாகுபடி செய்யும்போது, நிலத்தின் வளத்தைக் காக்க உரங்களும் அளிக்கப்பெற்றன. ஒருபோகச் சாகுபடியைக் கொண்ட பகுதிகளிலும் வேளாண்மைக்கான வசதிகள் பெருக்கப்பட்டன. 1967–68-ல் 30 இலட்சம் ஹெக்டேரில் இருபோக, முப்போகச் சாகுபடி முறைகளைப் புகுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதைத்தவிர, 'ஆயக்கட் முன்னேற்றத் திட்டம்' (Ayacut Development programme) நடுத்தர, பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களின்மூலம் தண்ணீர் வசதியைப் பெறுகின்ற அதிக அளவு பரப்பு கொண்ட நிலங்களில் பின்பற்றப்படுகின்றது. இவ்வித 'முன்னோடித் திட்டங்கள்' (Pilot Projects) மத்திய அரசால் சில குறிப்பிட்ட வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகின்றன. பத்து முன்னோடித் திட்டங்கள் 1968–69-ல் தொடங்கப்பட்டுவிட்டன. இவ்வகைத் திட்டங்கள், குறிப்பிட்ட வசதிகள் மிக்க பகுதிகளில் உற்பத்தியை மிக அதிக அளவிற்கு உயர்த்த உதவுகின்றன. இத்திட்டங்களில் பயன்படுத்தப்படுகின்ற முறைகள் படிப்படியாக நாடு முழுதும் பரவுகின்றன.

இவற்றைத் தவிர, சூரத்கார் (Suratgarh) என்ற இடத்தில் 'மத்திய அரசின் பண்ணைகள்' (Central State Farms) அமைந்துள்ளன. இவை 1956ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டவைகளாகும். ஜெட்சர் (Jetsar) பகுதியில் 1964–65-ல் ஏற்படுத்தப்

பெற்ற 'ராஜஸ்தான் கால்வாய்ப் பகுதி' (Rajastan canal Area) சிறப்பான முறைகளில் முன்னேறி வருகின்றது. ஐந்து அரசின் பண்ணைகள் நவம்பர் 1966-ல் சோவியத் அரசோடு ஒப்பந்தம் செய்துகொண்டு தொடங்கப்படும். ஒரிசா மாநிலத்தில் 'ஹிராகுட்' பகுதியில் இப்பண்ணைகளில் ஒன்று முன்னமேயே செயல்படத் தொடங்கிவிட்டது. மற்ற நான்கு பண்ணைகளும் பஞ்சாப், ஹரியாறு, மைசூர், பீஹார் மாநிலங்களில் அமைக்கப்பட இருக்கின்றன.

மதிப்பீடு

நம் நாட்டின் ஐந்தாண்டுத் திட்டங்களில் வேளாண்மை வளர்ச்சிக்கே முதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகின்றது. சமுதாய, பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள் வெற்றியடைய வேளாண்மை உற்பத்தி பெருகவேண்டும். ஆனால் வேளாண்மை உற்பத்தியின் வளர்ச்சிவீதம் மிக குறைவாகவே உள்ளது. பிற நாடுகளோடு ஒப்பிடும்போது வேளாண்மை உற்பத்தித்திறன் குறைந்த அளவிலேயே அமைந்திருக்கின்றது. 'வேளாண்மை வளர்ச்சிக்கான புதிய கொள்கை' வேளாண்மை உற்பத்தி வீதத்தை உயர்த்தியுள்ளது. ஆயினும் மக்கட்தொகைப் பெருக்க வீதம் உணவு உற்பத்திவீதத்தைவிட உயர்வாக உள்ளது. பல வசதிகளைப் பெறுகின்ற சில இடங்களில் உற்பத்தி உயர்வடைந்தாலும், விற்பனை உபரியானது கணிசமான அளவிற்கு அதிகரிக்க வில்லை. இதற்குக் காரணம் பெருகும் மக்கட்தொகையாகும். மேலும் விவசாயிகள் குறைந்த உற்பத்தியைச் செய்தபோது குறைவான நுகர்வைச் செய்தார்கள். தற்பொழுது உற்பத்தி பெருகியுள்ளமையால் அதிக அளவு நுகர்வில் ஈடுபடுகின்றனர்கள்.

உற்பத்தியை உயர்ந்த அளவிற்குப் பெறுபவர்கள் அதிக பரப்பளவு நிலத்தை உடைமைகளாகக் கொண்டவர்களேயாவார்கள். சிறு விவசாயிகள், குத்தகையாளர்களின் நிலை, பலவகை வேளாண்மைத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டும் திருந்தவில்லை. இதற்கு அடிப்படைக் காரணம் நிலச்சீர்திருத்தங்கள் எல்லா மாநிலங்களிலும் ஒரே மாதிரியாகக் கொண்டு வரப்படாமையே யாகும். இந்தியாவின் நிலச்சீர்திருத்தங்கள் நில உடைமைகளில் அமைந்துள்ள வேறுபாடுகளைக் களையவில்லை. வேளாண்மை வளர நிலச்சீர்திருத்தங்களில் உள்ள குறைபாடுகள் நீக்கப்பெற வேண்டும். வேளாண்மையில் அமைந்துள்ளவர்களில் சிலர் நிலமற்றவர்களாக இருக்கின்றனர். சிலர் பெருமளவு நிலப்பரப்பை உடைமையாகக் கொண்டுள்ளனர்; பலர் மிகக் குறைந்த அளவு நிலப்பரப்பை

உடைமையாகக் கொண்டிருக்கின்றனர். இக்குறைபாடுகளை நீக்க நிலச்சீர்திருத்தங்கள் விரைவாகச் செயல்படுத்தப்பட வேண்டும்.

அதிக அளவு முதலீட்டைத் தேவையாகக் கொண்ட வேளாண்மைத் துறையினின்றும் முதலீட்டிற்கான வருவாய் குறைந்த அளவிலேயே கிடைக்கின்றது. வளர்ச்சிக்கான வாய்ப்பு ஏராளமாக இருந்தும், எல்லா வசதிகளும் முற்றிலுமாகப் பயன் படுத்தப்படவில்லை. இந்திய வேளாண்மை நிலங்கள் நீண்டகால மாக சாகுபடியில் அமைந்திருப்பவை. அவை மிகவும் வளமிழந்து காணப்படுகின்றன. நிலவளத்தைப் பெருக்க இயற்கை உரங்களை யும், செயற்கை உரங்களையும் பயன்படுத்துவது அவசியமாகின்றது. பசுமை உரங்களும், இரசாயன உரங்களும் அளிக்கப்படுகின்றன. எனினும் அவற்றின் அளிப்பு போதுமான அளவில் அமைந்திருக்க வில்லை. நிலவளத்தை மேம்படுத்த உரங்களின் உற்பத்தியைப் பெருக்கவேண்டும். உரங்களை எல்லா இடங்களிலும் வேளாண்மை சாகுபடியில் தீவிரமாகப் பயன்படுத்தத் தூண்டவேண்டும். அறிவியல் உற்பத்தி முறைகளைப் புகுத்தி இந்திய வேளாண்மை யைப் புதுமைப்படுத்த வேண்டியது இன்றியமையாதது.

வேளாண்மை வளர்ச்சிக்காகக் கடந்த பத்தாண்டுகளில் புதிய வேளாண்மைக் கருவிகள், இயந்திரங்கள் ஆகியவை உழுத லுக்கும், விதை விதைப்பதற்கும், அறுவடை செய்வதற்கும் அளிக்கப்படுகின்றன. எனினும் இவற்றைப் பல இடங்களிலும் பயன்படுத்தவில்லை. வேளாண்மையில் புரட்சி தோன்ற இவ்விதத் தொழில் நுணுக்க உற்பத்தி முறைகளே உதவுமெனலாம். இயந்திரக் கலப்பைகள், அறுவடை இயந்திரங்கள் ஆகியவற்றை மக்கள் நெருக்கம் குறைவாக உள்ள பகுதிகளில் பயன்படுத்தவேண்டும். மக்கட்தொகை நெருக்கம் மிகுதியாக உள்ள பகுதிகளில், சிறிய வேளாண்மைக் கருவிகள் முன்னேற்றச் சாகுபடி முறையில் பயன் படுத்தப்படவேண்டும். இம்முறைகளைப் புகுத்தும்போது நாட்டில் அமைந்துள்ள வேலையின்மைச் சிக்கல் தீவிரமடையாமல் பார்த்துக் கொள்ளுதல் அவசியமாகின்றது.

வேளாண்மை விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன. பரிசோதனைமுறைப் பண்ணைகளும் அமைக்கப் பெற்றுள்ளன. இவை முன்னேற்றமடைந்த விஞ்ஞானச் சாகுபடி முறைகளைப் பரப்ப முயன்றுவருகின்றன. எனினும் திருத்தமடைந்த உற்பத்தி முறைகள் நாடு முழுதும் பின்பற்றப்படுகின்றன எனக்கூற இயலாது. பல புதிய நல்விதைகள் உற்பத்திக்காகப் பயன்படுத்தப் படுகின்றன. நல்விதைகளின் அளிப்பு போதுமானதாக

அமைந்திருக்கவில்லை. அவ்விதைகளின் பகிர்வும் சரியான முறைகளில் செய்யப்படவில்லை. பலவகைப்பட்ட அதிக விளைச்சலைத் தரக்கூடிய விதைகள் மேலும் கண்டுபிடிக்கப்படவேண்டும். வேளாண்மை ஆராய்ச்சிக்காக அதிக அளவு மூலதனம் செலவிடப் படுகின்றது. திரண்ட வேளாண்மை உற்பத்தியைப்பெற ஆராய்ச்சிகள் அவசியமாகின்றன. வேளாண்மை ஆராய்ச்சிகள் சிறப்பான பலனைத் தந்துள்ளன எனக் கூறயியலாது. கடந்த இருபது ஆண்டுகளிலும் திட்டங்களில் ஆராய்ச்சிக்காக முதலீடு செய்யப்பெற்றது. விவசாயிகளின் பல சிக்கல்களில் சிலவற்றைத் தீர்க்கவும் வேளாண்மை ஆராய்ச்சிகள் உதவவில்லை. பல நிலைகளிலும் ஆராய்ச்சிகளின் முடிவுகள் இயல்பாக அமைந்திருப்பதில்லை. பயன்படுத்தத்தக்கக் கண்டுபிடிப்புகளை ஆராய்ச்சியின்மூலம் நாம் அதிக அளவிற்குப் பெறவில்லை. இவற்றைத் தவிர சில அமைப்பு முறை, நிர்வாகமுறைத் தடைகளும் அமைந்துள்ளன. வேளாண்மை வளர்ச்சியின் வழியில் இவை இடர்ப்பாடுகளாக அமைகின்றன. நீண்டகாலத் திட்ட அனுபவம் இந்தியாவில் பெறப்பட்டிருந்தாலும், வேளாண்மை வளர்ச்சிவீதத்தை உயர்த்துவது கடின நிலையைக் கொண்டுள்ளது. மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவடையும் வரை வேளாண்மையில் தேக்கநிலையே அமைந்திருந்தது எனலாம்.

ஆண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டக் காலத்தில் (1966–67 முதல் 1968–69 வரை) வேளாண்மை வளர்ச்சி சிறப்பாக இருந்தது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1969–74) மொத்தச் செலவு ரூ. 24,398 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் வேளாண்மைக்கும் அதைச்சார்ந்த திட்டங்களுக்கும் 20·4 சதவீதம் ஒதுக்கப்பட்டுள்ளது; தொழில், மின்சக்தி, போக்குவரத்து ஆகியவற்றிற்காக 50·7 சதவீதமும், சமுதாயப் பணிகளுக்காக 28·9 சதவீதமும் செலவிடப்படும். பொதுத்துறையிலும், தனியார்துறையிலும் வேளாண்மைத் திட்டங்களுக்காக ரூ. 4,981 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

வேளாண்மைத்துறையைப் பொறுத்த அளவில், நான்காவது திட்டம் இரண்டு முக்கிய நோக்கங்களைக் கொண்டுள்ளது. அவை:

(i) அடுத்தபத்தாண்டுகளில் வேளாண்மையில் ஆண்டொன்றிற்கு 5 சதவீத வளர்ச்சியை ஏற்படுத்தத் தேவையான வசதிகளைச் செய்வது;

(ii) கிராம மக்கட்தொகையின் பெரும்பகுதியையும், சிறிய விவசாயிகளையும் முன்னேற்றத்தில் பங்குபெறச் செய்வது;

முன்னேற்றத்தின் நன்மைகளை எல்லா விவசாயிகளும் அடையச் செய்வது ஆகியவைகளாகும்.

இவற்றைப்பெற, வேளாண்மை முன்னேற்றத் திட்டங்களில் அளிக்கப்பட்ட முக்கியத்துவங்களை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை, முதலாவதாக, உற்பத்தியை உயர்த்தும் நடவடிக்கைகள்; இரண்டாவதாக, பொருளாதாரத்தில் சமநிலை வளர்ச்சியை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் ஆகியனவாகும்.

வேளாண்மை உற்பத்தியின் குறியிலக்குகளை அடைய புதிய முறையானது செறிவுமுறைச் சாகுபடியைப் பரப்ப முயலுகின்றது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் பின்வரும் வழி முறைகள் பின்பற்றப்படும்:

(1) நீர்ப்பாசன வசதிகளைத் தொடர்ந்து விரிவாக்குவது; சிறிய, நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களை நன்கு பயன்படுத்துவது; தனித்திட்டங்களின்மூலம் தற்பொழுது அமைந்துள்ள பாசன வசதிகளைத் திறம்பட உபயோகிப்பது; பயிர்ச்சாகுபடி முறைகளைத் திருத்தத் தீவிர நடவடிக்கைகளை எடுப்பது;

(2) உரங்களின் அளிப்பை அதிகரிப்பது; கடன்கள், சாகுபடிக்கான இயந்திரங்கள், கருவிகள் ஆகியவற்றை அளிப்பது; பயிர்ப் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது;

(3) தானியங்களின் உற்பத்தியை உயர்த்த புதிய விதை வகைகளை அதிக அளவில் பயன்படுத்துவது;

(4) தீவிர முயற்சிகளை மேற்கொண்டு, பொருத்தமான வசதி களைக் கொண்ட பகுதிகளில் முக்கிய வாணிபப் பயிர்களின் உற்பத்தியை உயர்த்துவது.

(5) உற்பத்தியாளர்களுடைய ஊக்கத்தைக் காக்க வேளாண்மை விளைபொருட்களின் விற்பனை முறையை முன்னேற்ற மடையச் செய்வது; முக்கிய வேளாண்மைப் பொருட்களின் குறைந்தபட்ச விலைக்கு உறுதியளிப்பது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், உணவுத் தானியங் களின் உற்பத்திவீதம் அதிக அளவில் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகக் குறை கூறப்படுகின்றது. வாணிபப் பயிர்களின் குறியிலக்கும் உயர்ந்த அளவில் உள்ளதாகச் சொல்லப்படுகின்றது. இதுவரை எந்த ஆண்டிலும் பெறாத அளவிற்கு வேளாண்மைப் பொருட்களின் உற்பத்திக் குறியிலக்குகள் அமைந்துள்ளன. இக்குறியிலக்குகளை

அடைவது இயலாததாகும். ஆண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப் பட்ட காலத்தில், பருவமழைச் சாதகமாக அமைந்ததால் வேளாண்மை உற்பத்தி கணிசமான அளவிற்கு உயர்வடைந்தது. அதே வளர்ச்சிவீதம் நான்காவது திட்டக்காலத்திலும் அமைந் திருக்குமென உறுதியாகக் கருதமுடியாது.

உரங்களைப் பயன்படுத்துவதின் அளவும் உயர்வாகக் கணக் கிடப்பட்டுள்ளது. நல்விதைகளைப் பரப்புதல் திட்டமிட்டபடி வெற்றியைப் பெறுமா என்பது ஐயத்திற்கு உரியதே ஆகும். பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகளின் குறியிலக்குகளும் உயர்ந்த அளவிலேயே நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மொத்த முதலீட்டில் வேளாண்மைத் திட்டங்களுக்காகக் குறைந்த அளவு மூலதனம் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது. திட்டத் தின் அளவோடு ஒப்பிடும்போது வேளாண்மை வளர்ச்சித் திட்டங் களுக்கு ஒதுக்கப்பட்ட மூலதனம் குறைவானதேயாகும். முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் அளிக்கப்பட்ட முக்கியத் துவம், நான்காவது திட்டத்தில் வேளாண்மைத் துறைக்கு அளிக்கப்படவில்லை.

நான்காவது திட்டத்தில் வேளாண்மைக்காக ஒதுக்கப் பட்டுள்ள மூலதனத்தின் அளவு மற்ற திட்டங்களைவிட அதிகமாக இருந்தாலும், அதற்கு அளிக்கப்பட்டுள்ள முக்கியத்துவத்தின் அளவு குறைந்துவிட்டது. இந்தியா வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கியதிலிருந்து, அதனுடைய நோக்கம் உணவுத்தானியங் களிலும், பிற வேளாண்மைப் பொருட்களிலும் தன்னிறைவைப் பெறுவதாக அமைந்தது. நிறைவேற்றப்பட்ட திட்டங்களின் நோக்கத்தைப்போல நான்காவது திட்டத்திலும் வேளாண்மைப் பொருட்களின் உற்பத்தியில் "தன்னிறைவைப்" பெறுவது நோக்க மாக உள்ளது.

சிக்கல்களும் அதற்கான தீர்வுகளும்

இந்தியாவில் வேளாண்மைத் திட்டங்கள் வெற்றியடைவதில் பல இடர்ப்பாடுகள் அமைந்துள்ளன.

I. முதலாவதாக, இந்திய விவசாயி பழைமைவாதியாகவும், எழுத்தறிவில்லாதவனாகவும் இருக்கின்றான். வேளாண்மை முற்றிலும் இயற்கைக் காரணிகளைச் சார்ந்துள்ளது. இதனால் விஞ்ஞானச் சாகுபடி முறைகளைப் பின்பற்ற விவசாயி தானே முன்வருவதில்லை. புதிய முறைகளைப் பின்பற்றி இடர்களை ஏற்க விவசாயி விரும்புவ

தில்லை. பரிசோதனை முறைகளால் உற்பத்தி பெரிதும் பாதிக்கப் படலாம் என்ற எண்ணமும் விவசாயிடம் அமைந்திருக்கின்றது. மேலும் அறிவியல்முறைச் சாகுபடிகளைப் பின்பற்றத் தேவையான மூலதனமும் விவசாயிக்குக் கிடைப்பதில்லை. சமுதாய நலனைப் பெருக்குவதிலும், திட்டக் குறியிலக்குகளை அடைவதிலும் மக்கள் முக்கிய பங்கேற்கவேண்டும். முன்னேற்றத்தைப்பெற கிராமச் சமுதாய வளர்ச்சியே முக்கியமானதாகும். வேளாண்மை வளர்ச்சி யின் ஒவ்வொரு நிலையும் மக்களின் ஊக்கத்தோடு நிறைவேற்றப்பட வேண்டும். திட்டங்களின் வெற்றிக்காகக் கடின உழைப்பைத் தர மக்கள் முன்வருதல் தேவையானதாகும்.

வேளாண்மைத் திட்டங்கள் வெற்றியடைய, விவசாயிகளின் நடவடிக்கைகளில் அடிப்படை மாற்றங்கள் அவசியமாகின்றன. அம்மாற்றங்களைப் பின்வரும் முறைகளால் பெறலாம்:

(i) திட்டத்தின் நன்மையை விவசாயிகளுக்கு உணர்த்தி அவர்களை ஊக்கத்தோடு உழைக்கத் தூண்டுதல்வேண்டும். திட்டத்தின் வெற்றி பல நன்மைகளையும் அவர்களுக்கு அளிக்கும் என்பதை அறிவுறுத்த வேண்டும்.

(ii) விஞ்ஞான அடிப்படையில் வேளாண்மையை நிர்வகிக்கக் கிராமத் தலைமைகளை ஏற்படுத்துவது இன்றியமையாததாகும்.

(iii) குறுகிய காலத்தில் பயனளிக்கத்தக்கத் திட்டங்களை பரிசோதனை முறையில் நடத்திக்காட்டி, விவசாயிகளுக்கு அத்திட்டங்களில் விருப்பை ஏற்படுத்தவேண்டும். விவசாயிகளில் பலரின் நம்பிக்கையைத் திரட்டுவதின்மூலமே புதிய உற்பத்தி முறைகளை வேளாண்மையில் புகுத்தமுடியும். வேளாண்மைத் திட்டங்கள் உடனடி உற்பத்தி உயர்வை அளித்தால்தான் விவசாயிகள் புதிய உற்பத்தி முறைகளைப் பின்பற்ற முன்வருவார்கள். புதிய வேளாண்மை முறைகளில் விவசாயிகளுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த இவ்வகைப் பரிசோதனை முறைகள் பெரிதும் உதவும் எனலாம். அதிக விலையுயர்வுகளும், நிலச்சீர்திருத்தங்கள் சிறப் பாகச் செயல்படுத்தப்படாமையும், பெருகிவரும் வேலையின்மைச் சிக்கலும் அரசின் திறமையைக் குறைவாக மதிப்பிடும்படி அமைந் துள்ளன. விவசாயிகள் திட்டங்களில் அதிக ஈடுபாடு கொண்டவர் களாக இருப்பதில்லை.

(iv) வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்று கின்ற அரசின் ஊழியர்கள் நேர்மையாகச் செயல்படவேண்டும்.

அவர்களின் நேர்மையை விவசாயிகளும் நன்கு உணரும்படிச் செய்யவேண்டும். திறமைக் குறைவு, காலதாமதம், சமூக விரோதச் சக்தி ஆகியவற்றைக் களைவதின்மூலம் திட்டங்களின் மீது விவசாயிகளுக்கு நம்பிக்கையைத் தோன்றச் செய்யலாம். திட்ட உணர்வை விவசாயிகளிடம் ஏற்படுத்த அவர்களை கல்வி யறிவு பெற்றவர்களாக மாற்றுவதும் இன்றியமையாதது. புதிய வேளாண்மை முறைகளை உணர்ந்தவர்களாக அவர்களை மாற்ற வேண்டும்.

II. இரண்டாவதாக, பயிற்சிப் பெற்ற பணியாளர்களின் பற்றுக்குறை இருப்பதாலும் திட்டங்களைச் சிறப்பாக நிறைவேற்ற முடிவதில்லை. பயிற்சி பெற்றவர்கள் திறமை குறைந்தவர்களாக வும், நேர்மை குறைந்தவர்களாகவும் உள்ளனர். இதனால் சமுதாய வளர்ச்சித் திட்டங்களையும், செறிந்த வேளாண்மை மாநிலத் திட்டங்களையும் வெற்றியோடு நிறைவேற்றுவது கடினமாகின்றது. வேளாண்மை உற்பத்தியை உயர்த்த மேற்கொள்ளப்பட்ட இத்திட்டங்களை நிறைவேற்றுபவர்கள் திறமையானவர்களாகவும், நேர்மையானவர்களாகவும் இருத்தல் அவசியமாகும். கிராமப் பொருளாதாரம் வளர்ச்சியடைய இத்திட்டங்கள் உதவுகின்றன. இத்திட்டங்களை நிறைவேற்றும் ஊழியர்கள் உற்பத்தியை உயர்த்தப் பாடுபட வேண்டும். வேளாண்மைத் திட்டங்களை நிறைவேற்றப் போதுமான ஊழியர்களும் அமைந்திருக்கவில்லை. ஊழியர்கள் அடிக்கடி வெவ்வேறு இடங்களுக்கு மாற்றப்படுகின்றனர். பணியாற்றும் இடங்களும் சிறப்பான பணிகளைத் தரும் வகையில் அமைந்திருக்கவில்லை. அரசின் அதிகாரிகள் விவசாயிகளின் நன்மைக்காக அளிக்கப்படும் விதைகள், உரங்கள், கடன்கள் ஆகியவற்றைத் தாங்களே எடுத்துக்கொள்கின்றனர். திட்டமிட்ட வேளாண்மை வளர்ச்சி இதனால் பாதிக்கப்படுகின்றது. இந்நிலை சாதாரண மனிதனின் நம்பிக்கையையும், ஆர்வத்தையும் இழக்கும்படிச் செய்கின்றது. இவ்விதக் குறைபாடுகள் நீக்கப் பட்டால்தான், வேளாண்மைத் திட்டத்தை வெற்றியைப் பெறும் வகையில் நிறைவேற்ற இயலும். திட்டத்தின் நோக்கங்களையும் இதன்மூலம் அடையமுடியும்.

III. இறுதியாக, வேளாண்மைத் திட்டம் விந்தையான கிராம வாழ்க்கை முறையால் பாதிக்கப்படுகின்றது. கிராமச் சூழ்நிலைகளும் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற உதவு வதில்லை. கிராமப் புறங்களில் சிறப்பான சாலை வசதிகள் போதுமான அளவிற்கு அமைந்திருப்பதில்லை. நீர்ப்பாசன வசதி, கல்வி வசதி, பொழுதுபோக்கு வசதி ஆகியவையும் சிறப்பாக மேம்பாடு

அடைந்திருப்பதில்லை. கிராமப்புறங்களில் நகரங்களின் வசதிகள் அளிக்கப்படவேண்டும். நல்ல சாலைகள், குடியிருப்பு வசதிகள், பள்ளிக்கூடங்கள், மின்சார வசதி, வானொலி போன்ற பலவும் மேம்படுத்தப்படவேண்டும். கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் நியாயமான விலைகளில் தொழில் நுகர்பொருட்களை விவசாயிகள் பெறச் செய்யவேண்டும். இவ்வித நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பெற்ருல், திட்டங்களை வெற்றியைப் பெறத்தக்க வகையில் திறமை யாக நிறைவேற்ற முடியும். கிராமங்களில் 'நிலப்பிரபுத்துவம்' (Landlordism) நீக்கப்பட்டமையாலும், லேவாதேவிக்காரர்கள் கட்டுப்படுத்தப் பட்டமையாலும் வேறு சிலச் சிக்கல்களை விவசாயிகள் ஏற்க வேண்டியுள்ளது. சாகுபடியை மேற்கொள்ளத் தேவையான மூலதனத்தைப் பெறுவது கடினமாகின்றது. நல்விதை களையும், உரங்களையும், கால்நடைகளையும், முன்னேற்றமான கருவிகளையும் வாங்குவதற்குத் தேவையான நிதிவசதி விவசாயி களிடம் இருப்பதில்லை. பொதுவாக அவர்களின் வாழ்க்கைத்தரம் தாழ்வான நிலையிலேயே அமைந்துள்ளது எனலாம். வறிய நிலையிலேயே இன்றும் சிறிய விவசாயிகள் இருக்கின்றனர். இந்நிலைகளே வேளாண்மைத் திட்டங்கள் எதிர்பார்க்கும் அளவிற்கு வெற்றியடையாமைக்குக் காரணங்களாகின்றன.

இந்தியாவில் ஐந்தாண்டுத் திட்டங்கள் தொடங்கப்படுவதற்கு முன், வேளாண்மை மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருந்தது. உணவுப் பொருட்கள் அதிக அளவிற்கு இறக்குமதிச் செய்யப் பட்டன. பற்ருக்குறை நிலையால் உணவுப் பங்கீட்டு முறையும் அமைந்திருந்தது. நிலவுடைமை முறைகளும், சாகுபடி முறைகளும் உற்பத்தியைக் குறைந்த அளவிலேயே தந்தன. உரமிடுதலும், நல் விதைகளைப் பயன்படுத்துதலும் வேளாண்மையில் உயர்ந்த அளவிற்குப் பயன்படுத்தப்படவில்லை. முன்னேற்றமடைந்த கருவிகள் உபயோகத்தில் அமைந்திருக்கவில்லை. சாகுபடியை மேற்கொள்ளத் தேவையான நிதி வசதிகளும் போதுமான அளவிற்குக் கிடைக்கவில்லை. நிலங்கள் சிறிய அளவுகளில் துண்டு துண்டுகளாக அமைந்திருந்தமையும் வேளாண்மை வளர்ச்சியைப் பாதித்தது. இவ்விதக் குறைபாடுகள் வேளாண்மைத் திட்டங் களினுல் ஓரளவு நீக்கப்பட்டுள்ளன.

திட்டங்களால் வேளாண்மை வளர்ந்துள்ளது என்பதை எவரும் மறுக்க இயலாது. ஆனுல் திட்டமிடப்பட்ட அளவிற்கு வேளாண்மை வளர்ச்சியைப் பெறவில்லை என்பதை யாவரும் ஏற்றுக் கொள்ளவே வேண்டும். திட்டங்களின் விளைவால் வேளாண்மை உற்பத்தி ஆண்டொன்றிற்கு 2·92 சதவீதம் அதிகரித்தது.

சாகுபடிக்கு ஏற்ற நிலங்களின் அளவு உயர்ந்துள்ளது. இந்தியாவில் பல்வேறு மாநிலங்களுக்கிடையே வேளாண்மை வளர்ச்சிவீதம் வேறுபடுகின்றது. வேளாண்மை உற்பத்தியைத் தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், மைசூர், பஞ்சாப், குஜராத் மாநிலங்கள் உயர்ந்த அளவில் பெறுகின்றன. வேறு சில மாநிலங்கள் வேளாண்மையில் வளர்ச்சியைப் பெற்றிருக்கவில்லை. அவற்றில் வேளாண்மை பின் தங்கிய நிலையிலேயே இருக்கின்றது எனக் கூறலாம்.

நம் நாட்டில் வேளாண்மையை வளர்ப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. ஏனெனில் வேளாண்மையில் வளர்ச்சியடைந்துள்ள பிற நாடுகளோடு ஒப்பிடும்போது இந்தியாவில் ஒரு ஏக்கருக்கான உற்பத்தி மிகக் குறைவாகவே உள்ளது. தனியொருவருக்கான உற்பத்தியின் அளவும் குறைவாகவே இருக்கிறது. மக்கட்தொகைப் பெருக்கம் மிகுதியாக உள்ளதால் தனியொருவருக்கான உற்பத்தி யின் அளவை அதிகரிப்பது கடினமாகின்றது. ஆயினும் ஒரு ஏக்கருக்கான உற்பத்தியின் அளவை எளிதில் உயர்த்தமுடியும். செறிவுமுறைச் சாகுபடி பின்பற்றப்பட்டால் வேளாண்மையின் உற்பத்தி பல மடங்கு உயரும். ஆக்கக் காரணிகள் யாவும் சிறப் பாகப் பயன்படுத்தப் பெற்றால் வேளாண்மைத் துறையை எளிதில் வளரச் செய்யலாம்.

நிறைவுரை

வேளாண்மைப் பொருளாதாரத்தில் பல சிக்கல்கள் எழுவது இயல்பானதே ஆகும். அரசின் நடவடிக்கைகளின்மூலம் இச் சிக்கல்களை நீக்கிவிட முடியும். ஒரு ஏக்கருக்கான உற்பத்தியை உயர்த்துவதோடு, ஒரு அலகு உழைப்பிற்கான உற்பத்தியையும் உயர்த்த வேண்டும். உற்பத்தியைப் பெருக்கும் வாய்ப்புள்ள இடங் களில் தீவிரச் சாகுபடி முறைகள் கைக்கொள்ளப்பட வேண்டும். இந்த இடங்களில் உள்ள விவசாயிகளுக்குப் போதுமான நிதி வசதிகள் அளிக்கப்படவேண்டும். உற்பத்தித்திறனைக் கொண் டுள்ள பகுதிகளிலிருந்து உயர்ந்த அளவு உற்பத்தியைப் பெறும் வகையில் நடவடிக்கைகளைத் தீவிரமாக்குவது அவசியமான தாகும். பொருளாதார முன்னேற்றத் திட்டத்தில் முக்கிய பங்கைக் கொண்டுள்ள வேளாண்மை வளர நிதி, கல்வி, பயிற்சி, ஆராய்ச்சி ஆகிய பல வசதிகளும் இன்றியமையாதவைகளாக உள்ளன. தற்பொழுது இந்தியாவில் ஏற்பட்டுள்ள 'பசுமைப் புரட்சிக்கு' வேளாண்மைத் திட்டங்களே காரணமாகும்.

40. இந்தியாவின் தொழில் திட்டம்

(Industrial Planning in India)

தொழில்மயமாக்குதல்

தொழில்மயமாக்குதல் பின்தங்கிய நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்தில் ஒரு முக்கிய நிலையைக் கொண்டுள்ளது. முன்னேற்றம் அடைந்த நாடுகளின் பொருளாதார நிலையையும், பின்தங்கிய நாடுகளின் பொருளாதார நிலையையும் அவற்றின் சராசரி தலா வருமானத்தின் மூலம் அறிகிறோம். முன்னேற்ற மடைந்த நாடுகளில் தேசீய ஆக்கத்தின் பெரும் பங்கு இயந்திரத் தொழில்மூலமும், முன்னேற்றமடையாத நாடுகளில் வேளாண்மை மூலமும் கிடைக்கின்றது. 125 டாலருக்குக் குறைவாக சராசரி தலா வருமானம் பெறும் நாடுகளில் தேசீய ஆக்கத்தில் 47 சதவீதம் அடிப்படை உற்பத்திமூலமும், 20 சதவீதம் தொழில் உற்பத்திமூலமும் கிடைக்கின்றது. இதற்கு மாறாக, முன்னேற்றமடைந்த நாடுகளில் உற்பத்தியில் 13 சதவீதம் அடிப்படை உற்பத்தி மூலமும், 49 சதவீதம் தொழில் உற்பத்தி மூலமும் கிடைக்கின்றது. இதன்மூலம் தலா வருவாய்க்கும், தொழில்மயம் ஆக்குதலுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு தெரிகிறது. ஆனால் சில நாடுகளில் இயற்கை வளங்கள் மிகுதியாய் இருப்பதால் அந்நாடுகளின் தலா வருவாய் அதிகமாக இருக்கின்றது. உதாரணமாக டிரின்டாட் (Trindad), வெனிசுலா (Venezuela) ஆகிய நாடுகள் அவற்றின் பெட்ரோலிய வளத்தின் மூலம், தலா வருவாயை அதிகரித்திருக்கின்றன. ஆகவே இவை போன்ற நாடுகள் விதிவிலக்காக இருக்கின்றன.

மக்கட்தொகைப் பெருக்கமும், வேளாண்மையில் குறைந்து செல் விளைவு விதி செயல்படுகின்ற தன்மையும், தொழில் மய

மாக்குதலை விரைவுபடுத்த வேண்டியதை உணர்த்துகின்றன. நாடு முன்னேற்றம் அடைவற்கு உழைப்பின் சக்தியைக் குறைந்த இலாபம் தரும் துறையைத் தவிர்த்து அதிக இலாபம் தரும் துறையில் பயன்படுத்தவேண்டும். தொழில்துறையில் வேளாண்மைத் துறையைவிட நிகர உற்பத்தி அதிகமாக இருப்பதாலும், இலாபம் பெருகுவதாலும், உழைப்புச் சக்தியைத் தொழில் துறையில் பயன் படுத்த வேண்டும். இந்த இலாபம் மற்றொரு தொழிலைத் தொடங்கு வதற்கான மூலதனத்தைத் தருகிறது. இவ்வாறு மூலதனம் பெருகுவ தாலும், இதனால் வருவாய் அதிகரிப்பதாலும், நாட்டின் பொரு ளாதார முன்னேற்றம் விரைவு படுத்தப்படுகிறது. மூலதனம் பெருகு வதால் வேலை வாய்ப்புகள் அதிகரிக்கின்றன.

தவிர தொழிற்துறை முன்னேற்றம் தொழில் அறிவை வளர்க் கின்றது; தொழில் திறமையை வெளிப்படுத்துகின்றது; தொழில் நிர்வாகத்தை மேம்படுத்துகின்றது. இதன்மூலம் வேளாண்மை உற்பத்தியும் உயர்கின்றது. ஆகவே உழைப்புச் சக்தியை வேளாண்மையிலிருந்து தொழிற்துறைக்குத் திருப்புதல்மூலம் பொருளாதார முன்னேற்றம் விரைவுபடுத்தப்படுகின்றது. தொழிற் துறையின் முன்னேற்றத்தால் அதிக வருவாயும், அதிக உற்பத்தி யைப் பெரும் வாய்ப்பும் இருப்பதால், தொழில் மயமாக்குதல் என்பது முன்னேற்றமடையும் பொருளாதாரத்திலிருந்து பிரிக்க முடியாததாகின்றது. மக்கள் அதிக வருவாயினால் உணவைத் தவிர பிற நுகர்ப்பொருட்களிலும் அதிகச் செலவிடுகின்றனர். இதனால் மக்களின் தேவைகள் பெரும்பாலும் நெகிழ்ச்சியுள்ள தேவைகளாக இருக்கின்றன. அதிக உற்பத்தி மக்கட்தொகையை குறைந்த இலாபந்தரும் வேளாண்மைத் துறையிலிருந்து வெளியேறி தொழிற்துறையில் ஈடுபடுத்த ஊக்குவிக்கின்றது. ஆகவே தொழில் மயமாக்குதலால் அதிகமான அளவு உழைப்புத்திறனைத் தொழிற் துறை ஏற்றுக்கொள்ள முடிகிறது.

தொழில் முன்னேற்றம் வேளாண்மைத் துறையைச் சார்ந்து அமைந்திருக்கின்றது. வேளாண்மைத்துறையின் முன்னேற்றத் தின்மூலம் கிடைக்கக்கூடிய உபரிப் பொருட்களால் தொழிற் துறையிலுள்ள அதிக உழைப்புத்திறனை பாதுகாக்க முடிகின்றது. வளரக்கூடிய நகர மக்கட்தொகையைப் பாதுகாப்பதுடன், தொழிற் துறையில் உற்பத்திச் செய்யப்படுகின்ற பொருட்களின் விற்பனையை உண்மையான வருமான அதிகரிப்புமூலம் உயர்த்த முடிகிறது. மேலும் தொழிற்துறையில் ஈடுபடுத்தப்படுகின்ற இயந்திரங்களின் இறக்குமதிக்கான அந்நியச் செலாவணியைத் தருவதற்கும் வேளாண்மைத்துறை உதவுகின்றது. வேளாண்மை வாணிபத்தால்

கிடைத்த இலாபத்தைத் தொழிற்துறையில் முதலீடு செய்ய வேளாண்மைத்துறை உதவுகிறது. வேளாண்மைத்துறையைச் சீர்படுத்தாதவரை மக்களின் வாங்கும் திறன் குறைவாகவே இருக்கும். இதனுல் தொழில் முன்னேற்றம் தடைபடும்.

ஆகவே முன்னேற்றமடைய வேண்டிய நாடு வேளாண்மை வளர்ச்சிக்கு முக்கியத்துவம் தரவேண்டுமா அல்லது தொழில் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் தரவேண்டுமா என்று கருதாமல் இரு துறைகளும் சம அளவில் வளரச் சாதகமான சூழ்நிலையை உருவாக்கவேண்டும். தொழிற்துறையில் மட்டும் முன்னேற்ற மடைந்து வேளாண்மைத்துறையில் வளர்ச்சி அடையாத நாட்டின் பொருளாதாரம் சீர்குலேந்துவிடும்.

பொருளாதார வளர்ச்சியின் முதல் நிலேயில் நுகர்ப் பொருட்களே முக்கியப் பங்கு வகிக்கின்றன; இவற்றின் உற்பத்தி மூலப் பொருட்களின் உற்பத்தியைப்போல் ஐந்து மடங்காக இருக் கின்றது. இரண்டாம் நிலேயில் நுகர்ப் பொருட்களின் பங்கு குறைந்து, மூலப்பொருட்களின் பங்கு அதிகரிக்கின்றது. நுகர்ப் பொருட்களின் உற்பத்தி மூலப்பொருட்களின் உற்பத்தியைப்போல் 2·5 மடங்காக இருக்கிறது. பொருளாதார வளர்ச்சியின் இறுதி யான மூன்றும் நிலேயில், மூலப்பொருட்களின் தேவை பெருகி நுகர்ப் பொருட்களின் உற்பத்தியின் அளவை எட்டுகிறது. ஆகவே உற்பத்தியானது நுகர்ப் பொருட்களேவிட்டு மூலப்பொருட்களே நோக்கிச் செல்வதே தொழில் வளர்ச்சியின் அமைப்பாக இருக் கின்றது. தொழில் வளர்ச்சி நுகர்ப் பொருட்களின் உற்பத்தியின் அளவைச் சார்ந்திருந்தபோதும், மேற்கூறிய மூன்று நிலேகளே அடைவதில் சிறிது வேறுபாடு இருக்கின்றது. ரஷ்யத் தொழில் வளர்ச்சி அமைப்பின்படி, தொழில் வளர்ச்சியானது முதல் நிலேயி லிருந்து நேராக மூன்றும் நிலேயை அடைந்துவிட்டது. ஆனுல் இங்கிலாந்தில் தொழில் வளர்ச்சி படிப்படியாக, மூன்று நிலேயிலும் இருந்து முன்னேறி இருக்கிறது. இதுபோல் வளர்ச்சியடையும் நாடுகள் வெவ்வேறு முறைகளின்மூலம் தொழில் வளர்ச்சியை அடையலாம். முன்னேற்றமடையாத நாடுகளின் தொழில் வளர்ச் சிக்குத் தடையாக இருப்பது மூலதனப் பற்றுக்குறையாகும். இந்நாடுகளில் மூலதனம் குறைவாகவும், உழைப்பின் அளிப்பு அதிக மாகவும் இருப்பதால் உழைப்புச் சக்தியைச் சார்ந்துள்ள நுகர்ப் பொருட்களேத் தயாரிப்பது நன்மைதரும். ஆனுல் பற்றுக்குறையாக உள்ள மூலதனம் சிக்கனமாகப் பயன்படுத்தப்படவேண்டும். உற்பத்தியை அதிகரிப்பதே முக்கிய நோக்கமாக இருத்தல் வேண்டும். பொருளாதார முன்னேற்றம் உற்பத்தி அதிகரிப்பதன்

மூலம் விரைவடைதல், உற்பத்தி அதிகரிப்பிற்குத் தேவையான மூலப் பொருட்களை பெரும் அளவில் உற்பத்திச் செய்தல் அவசியமாகிறது. மூலப்பொருட்களின் உற்பத்தி அதிகமாகும்போது மொத்த பொருட்களின் உற்பத்தி அதிகமாகிறது; மூலதனம் அதிகரிக்கின்றது; மொத்த பொருள் உற்பத்தி அதிகரிக்கின்றது; மூலதனம் அதிகரிக்கின்றது; பொருளாதாரம் முன்னேற்றம் அடைகின்றது. ஆகவே மூலப் பொருட்களின் உற்பத்தி அளவு பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக விளங்குகின்றது.

பின்தங்கிய நாடுகளில் மூலப்பொருட்களின் உற்பத்திக் குறைவாகவும், அடிப்படை பொருட்களின் உற்பத்தி அதிகமாகவும் இருக்கின்றன. ஆனால் தொழில் வளர்ச்சியடைய மூலப்பொருட்களின் உற்பத்தியைப் பெருக்கவேண்டியது அவசியமாகும். பின்தங்கிய நாடுகள் உள்நாட்டில் உற்பத்தி செய்ய இயலாத மூலப் பொருட்களை வேறு நாடுகளிடமிருந்து இறக்குமதிச் செய்கின்றன. இதற்கு ஈடாக அவை அந்த நாடுகளுக்கு அடிப்படைப் பொருட்களைத் தருகின்றன. ஆகவே பின்தங்கிய நாடுகள் அடிப்படைப் பொருட்களை ஏற்றுமதிச் செய்து மூலப்பொருட்களை இறக்குமதிச் செய்கின்றன.

அடிப்படைப் பொருட்களை அதிக அளவில் ஏற்றுமதிச் செய்வதற்கு பதிலாக பின்தங்கிய நாடுகள் ஏற்றுமதியைப் பெருக்கக் கூடிய வேறு சில பொருட்களை உற்பத்திச் செய்யும் தொழில்களை ஆதரிக்கலாம். ஆனால் முன்னேற்றம் அடைந்த நாடுகள் இவ் வகைப் பொருட்களை உற்பத்தி செய்வதால் இவை பின்தங்கிய நாடுகளுக்குப் போட்டியாக இருக்கின்றன. இதனால் இத்தகைய பொருட்களை முன்னேற்றமடையும் நாடுகள் உற்பத்திச் செய்தல் கூடாது என்று கூறுவது தவறாகும். ஏற்றுமதிச் செய்யக்கூடிய பொருட்களை உற்பத்திச் செய்யும் ஒருசில தொழில்களை வளர்ப்பதன் மூலம் உள்நாட்டு தொழில் வளர்ச்சியைப் பெற்றுவிட இயலாது. இறக்குமதியின் பதிலாக கீழ்க்கண்டவை இருக்கின்றன :

(i) உள்நாட்டிலேயே இறக்குமதிச் செய்யப்படும் பொருட்களுக்குப் பதிலாக நுகர்ப்பொருட்களைத் தயாரித்தல்.

(ii) வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிச் செய்யப்படும் நுகர்ப் பொருட்களுக்குப் பதிலாக மூலப்பொருட்களையே இறக்குமதிச் செய்தல்.

ஆகவே ஒரு நாடு ஏற்றுமதிச் செய்யும் பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்க இயலாவிடில் நுகர்ப்பொருட்களை

இறக்குமதிச் செய்வதற்குப் பதிலாக மூலப்பொருட்களை இறக்குமதிச் செய்யலாம். ஆனால் இந்தியாவில் நுகர்ப்பொருட்களின் இறக்குமதி மொத்த நுகர்வில் சிறு பகுதியாக இருப்பதால் (ii)-ல் கூறப்பட்ட பதில் இந்தியாவின் தற்போதைய நிலைக்குப் பொருந்தாது. ஆகவே (i)-ல் கூறப்பட்டவாறு இறக்குமதிச் செய்யும் பொருட்களுக்குப் பதிலாக உள் நாட்டிலேயே தயாரிக்கப்படும் பொருட்களை உபயோகித்தல் இறக்குமதியின் அளவைக் குறைக்கின்றது. எனவே இந்த பதில் பொருட்களைத் தயாரிக்கும் தொழிலை ஊக்கு விப்பதால் இறக்குமதி செய்யப்படும் பொருட்களுடன் போட்டியாக நின்று வெளிநாட்டு செலாவணியை மிச்சப்படுத்த முடிகிறது.

இறக்குமதிப் பொருட்களுக்குப் பதிலாகத் தயாரிக்கப்படும் நுகர்ப் பொருட்களை உற்பத்திச் செய்ய சில மூலப்பொருட்களை இறக்குமதிச் செய்யவேண்டி இருக்கிறது. ஆகவே ஏற்றுமதியை அதிகரிக்கும் தொழிலின் வளர்ச்சியை மேம்படுத்துவதா அல்லது இறக்குமதிச் செய்யவேண்டிய பொருட்களுக்கு மாருகப் பதில் பொருட்களைத் தயாரிக்கும் தொழிலின் வளர்ச்சியைப் பெறுவதா என்பதை அறியவேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். முன்னேற்ற மடையாத நாடுகளில் மூலதனம் பற்றுக்குறை இருப்பதால் ஏற்றுமதி செய்யக்கூடிய பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பது குறைந்த அளவிலேயே சாத்தியமாகிறது. ஏற்றுமதிச் செய்யும் பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் அந்நியச் செலாவணியின் அளிப்பு அதிகரிக்கின்றது. இறக்குமதி செய்யவேண்டிய பொருட் களுக்குப் பதிலாக உள்நாட்டிலேயே சில நுகர்ப்பொருட்களை உற்பத்திச் செய்வதால் அந்நியச் செலாவணியில் மிச்சம் ஏற்படு கிறது. இந்த இரண்டில் எதைத் தேர்ந்தெடுப்பது என்பது இப்போது பிரச்சினையாகின்றது. ஏற்றுமதியை அதிகரிக்கக்கூடிய பொருட்களைத் தயாரிப்பதால், இவற்றின் விற்பனை இறக்குமதிச் செய்யப்படும் நாடுகளில் நிலவும் விலை, பொருளாதார நிலை ஆகிய வற்றைப் பொருத்து அமையும். ஆகவே ஏற்றுமதிச் செய்யும் நாடு மற்றைய நாடுகளின் பொருளாதார நிலைமைகளைச் சார்ந்துள்ளது. ஆனால் இறக்குமதிப் பொருட்களுக்குப் பதிலாக வேறு பொருட்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதால், மற்றைய நாடுகளைச் சார்ந்து இருக்கவேண்டிய அவசியம் இல்லை. ஒரு நாடு மற்றைய நாடுகளைச் சார்ந்திருப்பது நல்லதல்ல ஆகையால் ஏற்றுமதியை அதிகரிக்கும் தொழிலில் ஈடுபடுவதைவிட, பதில் பொருட்களைத் தயாரிக்கும் தொழிலில் ஈடுபடுவதே மிகவும் நல்லதாகும்.

பொதுவாக நோக்குமிடத்து தொழில் வளர்ச்சி மூலதன அளவையும், மூலப்பொருட்களின் உற்பத்தியையும் பொருத்து

அமைகிறது. மூலப் பொருட்களின் உற்பத்தியை இறக்குமதி மூலமாகவோ அல்லது உள்நாட்டு உற்பத்தி மூலமாகவோ பெருக்கலாம். மூலதனப் பொருட்களின் இறக்குமதி ஏற்றுமதி செய்யப்படும். அடிப்படைப் பொருட்களின் மதிப்பைப் பொருத்து அமையும். மற்றைய நாடுகளில் தேவையாக உள்ள பொருட்களை உற்பத்தி செய்வதாலோ அல்லது பதில் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்குவதாலோ அந்நியச் செலாவணி கிடைக்கப் பெறுகிறது. ஏற்றுமதியை அதிகரிக்கச் செய்யும் தொழில், பதில் பொருட்களைத் தயாரிக்கும் தொழில், மூலப்பொருட்களைத் தயாரிக்கும் உள்நாட்டுத் தொழில் ஆகியவை ஒன்றுக்கொன்று மாற்றுத் தொழிலாக இருக்க இயலாது. ஒவ்வொரு தொழிலிலும் முக்கியத்துவம் பெற்று அந்தந்த நாடுகளின் பொருளாதார நிலை உயர உதவுகிறது.

இந்தியாவின் தொழில் வளர்ச்சியின் அமைப்பு (Pattern of Industrial Development in India)

புதியத் தொழில் அமைப்பு ஏற்படுவதற்கு முன் இந்தியாவில் உற்பத்திச் செய்யப்பட்ட பொருட்களுக்கு உலக சந்தையில் நல்ல மதிப்பு இருந்தது. மஸ்லின் துணிகள், காலிகோ துணிகள், பருத்தி, பட்டு துணிகள் ஆகியவற்றை இந்தியா ஏற்றுமதிச் செய்து வந்தது. ஆங்கிலேயரின் ஆதிக்கமும், தொழிற்புரட்சியும் இந்தியாவின் கைத்தொழில் வளர்ச்சிகுன்றக் காரணமாக இருந்தன. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இந்தியாவிலிருந்து மூலப்பொருட்கள் ஏற்றுமதிச் செய்யப்பட்டு நெசவு செய்யப்பட்ட ஆடைகள் இறக்குமதிச் செய்யப்பட்டன. அக்காலத்தில் நெசவுத் தொழில் நலிவுற்றதால், இந்தியாவின் கைத்தொழில் திறமையும் வளர்ச்சியும் குன்றியது.

1918ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டிருந்த தொழிற்குழு அளித்த சிபாரிசின்படி இந்தியாவிலிருந்த ஆங்கில ஆட்சி ஒருசில கைத்தொழில்களின் வளர்ச்சிக்குப் பாதுகாப்பளித்தது. இதனால் பருத்திநெசவு, சர்க்கரை, காகிதம், தீப்பெட்டி தயாரித்தல் போன்ற தொழில்கள் முன்னேற முடிந்தது.

(1) ஏற்றத்தாழ்வுள்ள தொழில் அமைப்பு (Lop-Sided Pattern of Industry)

1956ஆம் ஆண்டு நிலவி வந்த தொழில் அமைப்பு ஏற்றத்தாழ்வுள்ளதாக இருந்தது. உற்பத்தியில் ஈடுபடுத்தப்பட்டோர் எண்ணிக்கை சுமார் 15 மிலியனாக இருந்தது. இதில் 3·9 மிலியன் மக்களே தொழிற்சாலைகளில் பணியாற்றினர். 11·1 மிலியன் மக்கள்

இல்லத் தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். இவ்வித இல்லத் தொழில்களில் 10 பேர்களுக்கும் குறைவானவர்களே ஈடுபட்டிருந்தனர். சிறிய தொழிற்சாலைகளிலும், பெரிய தொழிற்சாலைகளிலும் வேலைச் செறிவு அதிகமாக இருந்தது. நடுத்தரத் தொழில்கள் அப்போது வளர்ச்சி அடைந்திருக்கவில்லை. தொழில் அமைப்பில் இந்த ஏற்றத் தாழ்வு நிலவி வந்தமைக்கு முக்கிய காரணம் நமது நாடு அந்நியர் ஆதிக்கத்தில் இருந்த நிலையாகும். வெளிநாட்டுத் தொழிலதிபர்கள் மட்டுமே உயர்ந்த நிலையில் இருந்து வந்தனர். சிறிய தொழில்கள் வளர்ச்சியடையாமல் தாழ்ந்த நிலையிலேயே இருந்தன. நடுத்தரத் தொழிலதிபர்கள் இல்லாத நிலையே அப்போதிருந்த ஏற்றத் தாழ்வுள்ள தொழில் அமைப்பை எடுத்துக்காட்டுகிறது. 1956ஆம் ஆண்டு 5·2 மிலியன் என்ற அளவு இருந்த தொழில் நிறுவனங்களில் 5 மிலியன் நிறுவனங்கள் ஒவ்வொன்றிலும் சராசரியாக 5 நபர்களே வேலைபார்த்து வந்தனர். ஆகவே அப்போது சிறிய தொழில்களே மிகுதியாகப் பெருகி இருந்தன.

(2) குறைவான மூலதனம்

இந்தியாவின் தொழில் அமைப்பில் இருந்த மற்றொரு முக்கிய அம்சம் குறைந்த மூலதனமாகும். மூலதனக் குறைவிற்கு இரு காரணங்கள் உள்ளன. முதலாவதாக இந்தியாவில் கொடுக்கப் படும் ஊதியம் குறைவாக இருப்பது; இரண்டாவதாக குறைந்த அளவிலுள்ள சராசரி தலா வருவாய் காரணமாகும். இந்தியாவையும் அமெரிக்காவையும் ஒப்பிடும்போது ஒரு உழைப்பாளருக்கான மூலதனம் இந்தியாவில் மிகவும் குறைவாக இருக்கிறது. குறைந்த மூலதனம் நுகர்ப்பொருட்களைப் பயன்படுத்தும் அளவைக் கட்டுப்படுத்துகிறது.

காப்மேன் (Coffmann) கூற்றின்படி இந்தியா தொழில் வளர்ச்சியில் இரண்டாவது நிலையை அடைந்துள்ளது. இருந்த போதிலும், மூலதனப் பொருட்களை உற்பத்திச் செய்யும் துறை முன்னேறவில்லை. மூலதனப் பொருட்களை உற்பத்திச் செய்யும் துறையை விரிவுபடுத்துவதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கச் செய்யலாம். மேலும் தன்னிறைவுபெற்ற பொருளாதாரத்தை உருவாக்கலாம். இதனால் நாட்டின் தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்தலாம். சராசரித் தலா வருமானத்தை உயர்த்த இதுவே சிறந்த வழியாகும்.

நுகர்ப்பொருட்களின் உள்நாட்டு உற்பத்தி அதன் தேவையை விட அதிகமாக உள்ளது. ஆனால் மூலப்பொருட்களின் உற்பத்தி

அதன் தேவையைவிடக் குறைவாக இருக்கிறது. இதனால் மூலப் பொருட்களுக்காக ஏனைய நாடுகளைச் சார்ந்திருக்க வேண்டியநிலை ஏற்படுகிறது. தேவைகளுக்கு ஏற்ப பொருட்களின் உற்பத்தியை கூட்டவோ குறைக்கவோ வேண்டியிருப்பதால், மூலப்பொருட்களை இறக்குமதிச் செய்யவேண்டியது அவசியமாகிறது. தொழில் வளர்ச்சி என்பது சராசரித் தலா வருவாய் அதிகரிப்பதனால் ஏற்படு கின்ற அதிக தேவையைப் பூர்த்தி செய்ய மொத்த உற்பத்தியை அதிகரிப்பது மட்டுமன்று. இறக்குமதியைத் தவிர்த்து உள்நாட்டுப் பொருட்களின்மூலம் தேவைகளை அதிக அளவிற்குப் பூர்த்தி செய்வதுமாகும். குறைவான மூலதனம், நடுத்தரத் தொழில்கள் இல்லாத நிலை, நுகர்ப்பொருட்களின் உற்பத்திக்கும் மூலப்பொருட் களின் உற்பத்திக்கும் உள்ள இடைவெளி ஆகியவையே இந்தி யாவின் தொழில்கள் முன்னேற்றமடையாமைக்குக் காரணங்களாக உள்ளன. நம்நாட்டின் ஐந்தாண்டுத் திட்டங்கள் நமது தொழில் அமைப்பு சீரடையவும் மூலப்பொருட்களின் உற்பத்திப் பெருகவும் துணையாய் இருந்தன.

(1) முதல் ஐந்தாண்டுத் திட்டமும் தொழில் வளர்ச்சியும்

முதல் ஐந்தாண்டுத் திட்டம் தொழில் உற்பத்தி தனியார்துறை மூலமும், பொதுத்துறை மூலமும் அதிகரிக்கவும் உதவியது. பொதுத்துறையில் தொழில் உற்பத்தி பெருகிட அரசு தானே முழு பொறுப்பையும் ஏற்றது. தனியார்த்துறையில் உற்பத்தி பெருகிட அரசு ஒவ்வொரு தனியார்த்துறையும் குறித்த காலத்திற்குள் குறிப் பிட்ட உற்பத்திச் செய்யவேண்டும் என்ற விதியை வகுத்தது. மொத்த செலவாகிய 2356 கோடி ரூபாயில் 179 கோடி ரூபாயை (அதாவது 7·6 சதவீதத்தை) தொழிற்துறையிலும் சுரங்கத் தொழிலிலும் செலவிட திட்டம் வகுக்கப்பட்டது. இந்த 179 கோடி ரூபாயில் 148 கோடி ரூபாய் நடுத்தரத் தொழில் வளர்ச்சிக்காக செலவிடப்பட்டது. பொதுத்துறையில் தொழில் முன்னேற்றத் திற்காக புதிய கனரக இரும்பு-எஃகு தொழிற்சாலைகள் தொடங்கப் பட்டன. இவ்வாறு அரசு கலப்புப்பொருளாதார முறையைக் கைக்கொண்டது. இதனால் பெரிய தொழிற்சாலைகளை அரசு தொடங் கியது. திறமையும் அனுபவமும் பெற்ற தனியார்த் தொழில்களும் உற்பத்தியைப் பெருக்கமுடிந்தது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலீடு குறைவாக இருந்த தால் தொழில் துறையைவிட வேளாண்மைத் துறையிலேயே அதிக கவனம் செலுத்தப்பட்டது. இத் திட்டத்தின் முக்கிய அம்சங் களாவன :

(i) நுகர்ப்பொருட்கள் மூலப்பொருட்கள் ஆகியவற்றை உற்பத்திச் செய்யும் தொழில்களின் முழு சக்தியையும் பயன் படுத்துதல்.

(ii) இரும்பு, அலுமினியம், சிமெண்ட், உரங்கள், இயந்திரம், கருவிகள் ஆகியவற்றை உற்பத்திச் செய்யும் தொழில்களின் உற்பத்தித்திறனை அதிகரித்தல்.

(iii) முன்பே தொடங்கப்பட்டு முடிவடையாத தொழில்களை பூர்த்தியடையச் செய்தல்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தினுல் சிந்திரி உர உற்பத்திச் தொழிற்சாலை, சித்தரஞ்சன் இரயில் என்ஜின் தொழிற்சாலை, இந்திய தொலைபேசித் தொழிற்சாலை, இரயில்பெட்டித் தொழிற்சாலை, பென்சிலின் தொழிற்சாலை ஆகியவை நிறுவப்பட்டன. இரும்பு கனரகத் தொழில் வளர்ச்சிக்காக மூன்று தொழிற்சாலைகள் நிறுவப் பூர்வாங்க வேலைகள் செய்யப்பட்டன. இத்திட்டம் தொழில் வளர்ச்சியடைய நல்ல அடிப்படையாக இருந்தது.

(2) இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டமும், தொழில் வளர்ச்சியும்

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில், முதல் திட்டத்தைவிட தொழில் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. பொதுத்துறையின் வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. தொழில் வளர்ச்சிக்காகப் பொதுத்துறையில் 890 கோடி ரூபாய் (18·5 சதவீதம்) ஒதுக்கப்பெற்றது. இதில் பெரிய நடுத்தர தொழில் களுக்காக 617 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில்துறையில் செலவிடப்பட்டதைவிட அதிக அளவில் இத் திட்டத்தில் செலவிடப்பட்டுள்ளது. சமநிலைப் பொருளாதார முன்னேற்றத்தைக் கருதியே தொழில்துறைக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டது. இதன்மூலம் நாட்டின் வருமானத்தை அதிகரிக்கவும், வேலையின்மையைக் குறைக்கவும் முடிந்தது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கங் களாகக் கீழ்க்கண்டவை இருந்தன :

(i) இரும்பு கனரக எஃகுத் தொழில் உற்பத்தி, இயந்திரத் தொழில் உற்பத்தி ஆகியவற்றில் அதிகரிப்பு.

(ii) அலுமினியம், சிமெண்ட், இரசாயனப் பொருட்கள், மருந்துப் பொருட்கள், பாஸ்பேட்டு உரங்கள் ஆகிய உற்பத்திக்கு உதவும் பொருட்களைத் தயாரிக்கும் தொழில்களின் உற்பத்தித் திறனை அதிகரித்தல்.

(iii) சணல், பருத்தி, சர்க்கரை ஆலைகளை காலத்திற்கு ஏற்ற வாறு மாற்றி நவீன முறையில் அமைத்தல்.

(iv) உற்பத்தித் திறனைவிடக் குறைவாக உற்பத்திச் செய்யும் தொழில்களின் முழு உற்பத்தித் திறனையும் பயன்படுத்தல்.

(v) நுகர்ப்பொருட்களின் உற்பத்தியை அதிகரித்தல்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தனியார்துறையை விட பொதுத்துறைக்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. நுகர்ப் பொருட்களைத் தயாரிக்கும் தொழில்களின் வளர்ச்சியைவிட அத்தியாவசிய முக்கியத் தொழில்களின் வளர்ச்சிக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இத்திட்டத்தில் கிராம சிறு தொழில் வளர்ச்சிக்கு முதல் ஐந்தாண்டுத் திட்டத்தைவிட அதிக அளவில் முக்கியத்துவம் தரப்பெற்றது. சிறு தொழில் வளர்ச்சிக்கு 200 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. முதல் திட்டத்தில் இது 30 கோடி ரூபாய் அளவே ஆகும். வேலைவாய்ப்பு பெருகுவதற்கும், பொருளாதாரம் பரவலான முறையில் முன்னேறவும், சிறு தொழில் வளரவும் இந்தத் திட்டம் உதவியது.

(3) மூன்றும் ஐந்தாண்டுத் திட்டமும் தொழில் வளர்ச்சியும்

இந்தியாவின் கனரக இரும்பு–எஃகு தொழில் அதிக அளவிற்கு வளர்ச்சியடையச் செய்வதைத் தவிர, இயந்திரங்கள், இயந்திரங்களுக்குரிய கருவிகள், உரங்கள், தேவையான மருந்துகள், இரசாயனப் பொருட்கள் ஆகியவற்றை உற்பத்திச் செய்யும் தொழில்களை வளர்த்தலே மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களாக இருந்தன. இத்தகைய தொழில்களின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது இத் திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். (i) நிலையான போக்கைப் பொருளாதார முன்னேற்ற நிலைகளில் பெறுதல். (ii)ஏனைய நாடுகளை உதவிக்காகச் சார்ந்திருத்தலை இயன்ற அளவு குறைத்தல். (iii) எதிர்காலத்தில் சமநிலைத் தொழில் வளர்ச்சியடைதல் மேற் கூறப்பட்ட மூன்றும் மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களாக இருந்தன. இத் திட்டத்தில் நுகர்ப்பொருட்களின் உற்பத்திக்கு இரண்டாவது இடம் தரப்பட்டது. மூலப்பொருட் களின் உற்பத்திக்கே முதலிடம் தரப்பட்டது. பொதுத்துறையானது மூலப்பொருட்களையும், மூலதனப் பொருட்களையும் உற்பத்திச் செய்வதில் ஈடுபடுத்தப்பட்டது. தொழில் முன்னேற்றத்திற்குப் பொதுத்துறையிலும், தனியார்துறையிலும் கவனம் செலுத்தப் பட்டாலும், மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தில் பொதுத்துறையே தனியார்துறையைவிட முக்கியத்துவம் பெற்றதாக இருந்தது.

மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தில் ராஞ்சியில் கனரக இயந்திரங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையும், மின் உற்பத்தி நிலையங்களுக்குத் தேவையான மின் சாதனங்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளும் நிறுவப்பட்டன. தவிர சிமெண்ட், சர்க்கரை, துணி, காகிதம், எண்ணெய் ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் இத் திட்டத்தில் வகை செய்யப்பட்டது. கிராமத்தொழில், சிறு தொழில் ஆகியவற்றின் வளர்ச்சிக்காக 425 கோடி ரூபாய் இத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டது இதில் 150 கோடி ரூபாய் பொதுத் துறை மூலமும், 275 கோடி ரூபாய் தனியார்த்துறை மூலமும் செலவிடப்பட்டது. ஆனால் மூன்றும் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் சர்க்கரை, மண்ணெண்ணெய், மருந்துப் பொருட்கள், காகிதம், துணிகள் போன்ற நுகர்ப்பொருட்களின் விலைகள் உயர்ந்தன. எனவே இத் திட்டம் குறைந்த அளவு வெற்றியை மட்டுமே பெற்ற திட்டமாகும்.

(4) நான்காம் ஐந்தாண்டுத் திட்டமும் தொழில் வளர்ச்சியும்

நான்காம் ஐந்தாண்டுத் திட்டமும், மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தைப் போன்றே தொழில் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்தது. ஆனால் ஒரு வேறுபாடு இவ்விரு திட்டங்களுக்கிடையே இருந்தது. நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் கனரகத் தொழிலின் வளர்ச்சியைத்தவிர முக்கிய நுகர்ப்பொருட்களின் உற்பத்தியிலும் அதிக கவனம் செலுத்தப்பட்டது. இத் திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன :

(i) உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள், வேளாண்மைக் கருவிகள் போன்ற பொருட்களை அதிக அளவில் உற்பத்திச் செய்தல்.

(ii) இயந்திரங்களையும், அவற்றைத் தயாரிக்கத் தேவையான உலோகங்களையும் பெரும் அளவில் உற்பத்திச் செய்தல்.

(iii) இரசாயனப் பொருட்கள், பெட்ரோலியம், கரி, சிமெண்ட் போன்ற நடுத்தரப் பொருட்களை உற்பத்திச் செய்தல்.

(iv) சர்க்கரை, துணி, மண்ணெண்ணெய் போன்ற அத்தியாவசிய நுகர்ப்பொருட்களின் உற்பத்தியை அதிகரித்தல்.

தொழில் வளர்ச்சியை விரைவாக்குவதற்குக் கீழ்க்கண்ட முறைகள் கையாளப்பட்டன:

(i) தொழில்களின் முழுத்திறனையும் பயன்படுத்துதல்;

(ii) மூன்ரும் ஐந்தாண்டுத் திட்டத்தில் தொடங்கப்பட்டத் திட்டங்களை விரைவாக நிறைவேற்றுதல்;

(iii) புதிய நிறுவனங்களை அமைப்பதற்குப் பதிலாக இயங்கி வரும் நிறுவனங்களின் உற்பத்தித்திறனை இயன்ற அளவு அதிகரித்தல்.

பொதுத்துறையில் 3936 கோடி ரூபாயும், தனியார்த் துறையில் 2350 கோடி ரூபாயும் செலவிட தீர்மானிக்கப்பட்டது. கிராமத் தொழில், சிறு தொழில் ஆகியவற்றின் வளர்ச்சிக்குப் பொதுத்துறை மூலம் 370 கோடி ரூபாயும் தனியார்துறை மூலம் 320 கோடி ரூபாயும் செலவிட திட்டமிடப்பட்டிருக்கிறது. நான்காம் ஐந்தாண்டுத் திட்டம் முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைவிட நன்கு பயன் அளிக்கும் வகையில் திட்டமிடப்பட்டு இருக்கிறது. இத்திட்டம் நுகர்ப்பொருட்கள், வேளாண்மை உற்பத்திக்குத் தேவையான பொருட்கள், ஏற்றுமதிப் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தியை அதிகரிக்க உதவும்.

மதிப்பீடு

தொழில் அமைப்பில் உள்ள குறைபாடுகளைத் தவிர்ப்பதற்குக் கடந்த 20 ஆண்டு காலமாக நம் தொழில் வளர்ச்சிக்கேற்ற தொழில் அமைப்பை உருவாக்க முயற்சி நடைபெற்று வருகிறது. இதற்காக அடிப்படை கனரகத் தொழில்களின் வளர்ச்சிக்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஐந்தாண்டுத் திட்டங்களால் சிறு தொழில்களும் நடுத்தரத் தொழில்களும் பெரும் அளவில் வளர்ச்சி அடைந்திருக்கின்றன. கடந்த 20 ஆண்டுகால தொழில் அமைப்பிலிருந்து நாம் அறிந்துகொள்ள வேண்டியவை கீழ்க்கண்ட இரண்டாகும்:

(1) முக்கிய நிறுவனங்களை ஏற்படுத்துவதற்குத் தேவையான முன்னேற்பாடுகளை உடனுக்குடன் தொடங்கி அந்நிறுவனங்களைக் குறுகிய காலத்திற்குள் ஏற்படுத்தவேண்டும். அவற்றின் உற்பத்தித் திறன் முழுவதையும் பயன்படுத்த வேண்டும்.

(2) மூலதனப் பொருட்களைப் பிற நாடுகளினின்றும் இறக்குமதிச் செய்வதைத் தவிர்த்து அவற்றை உள்நாட்டிலேயே உற்பத்திச் செய்யவேண்டும்.

41. இந்தியாவின் சமுதாய வளர்ச்சித் திட்டம்

(Community Development Programme in India)

இந்தியாவில் பெரும்பகுதி மக்கள் கிராமப்புறங்களில் வசிக்கின்றனர். பொருளாதார நிலையில் பின்தங்கிய அவர்கள் வறியவர்களாகவும் இருக்கின்றனர். பலருடைய வருவாய் இன்றியமையாத அவசியத் தேவைகளைப் பூர்த்திச் செய்வதற்குக்கூடப் போதுமானதாக அமைந்திருப்பதில்லை. இதற்குக் காரணம் புதிய வாழ்க்கை முறைகளிலும், புதிய உற்பத்தி முறைகளிலும் அதிக ஈடுபாடு கொண்டில்லாத நிலையாகும். எழுத்தறிவின்மையும், அறியாமையும், வறுமையும், ஆரோக்கியமற்ற நிலையும், நோய்களும் அவர்களின் முன்னேற்றத்திற்குத் தடைகளாக உள்ளன. முன்னேற வேண்டுமென்ற பொதுவான நோக்கமும் அவர்களிடம் இருப்பதில்லை. முன்னேற வாய்ப்புகள் குறைவாக இருக்கும்போது, முன்னேற்றமடைய வேண்டுமென்ற எண்ணமும் அவர்களுக்குக் குறைவாகவே உள்ளது. இந்த அடிப்படைச் சிக்கல் நீண்ட காலமாகவே கிராமப்புறங்களில் அமைந்திருக்கின்றது. இந்தியா ஒரு காலனி நாடாக ஆங்கிலேயரின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த பொழுதும் கிராம மக்களின் முன்னேற்றத்திற்கான சிறப்பான பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. எந்த முன்னேற்றத் திட்டத்திலும் பெரும்பகுதியாக அமைந்துள்ள கிராம மக்கட்தொகை பங்கு கொள்வது இன்றியமையாத ஒன்றேயாகும். கிராம மக்களை முன்னேற்றப் பணிகளில் ஈடுபடுத்துவது மிக முக்கியமானதாகும்.

சமுதாய வளர்ச்சித் திட்டங்களும், தேசிய விரிவாக்கத் திட்டங்களும் (National Extension Schemes) இணைந்து செயல்படு

கின்றன. இத்திட்டங்களால் மக்களுடைய நோக்கத்தில் மாறுதல் ஏற்பட வழியுண்டு. நல்ல தரமான வாழ்வைப்பெற வேண்டுமென்ற எண்ணத்தை அவர்களிடம் தோற்றுவிக்கலாம். அதற்கேற்ப சிறப்பான உழைப்பை உயர்ந்த அளவில் அளிக்கவும் அவர்களைத் தூண்டலாம். கிராமச் சமுதாயத்தினரிடம் முன்னேற வேண்டுமென்ற விருப்பத்தை ஏற்படுத்தவேண்டும். கிராமங்களின் நிர்மாணப் பணிகளில் அவர்களை விருப்பு கொண்டவர்களாக மாற்றவேண்டும்.

விளக்கம்

சமுதாய வளர்ச்சித்திட்டம் சமூக, பொருளாதார, அரசியல் முன்னேற்றங்களை விரைவுபடுத்த உதவுகின்ற ஒன்றாகும். 1948ஆம் ஆண்டின் 'கேம்பிரிட்ஜ் மகாநாடு' (Cambridge Conference) சமுதாய வளர்ச்சித் திட்டத்தைப் பின்வருமாறு வரையறை செய்கின்றது, "இத்திட்டம் சமுதாயத்தின் வாழ்வின் நலனை உயர்த்துவதற்காக மேற்கொள்ளப்படுகின்றது. சமுதாயம் இத்திட்டத்தில் தீவிரப் பங்குகொள்ளவேண்டும்; அல்லது சமுதாயமே வளர்ச்சிக்கான திட்டத்தைத் தொடங்கலாம். இத்திட்டத்தில் சமுதாய மக்களைத் தீவிரமாகவும், ஆர்வத்தோடும் ஈடுபடச் செய்ய வேண்டியது அவசியமாகும்."

'ஐக்கிய நாடுகளின் நிர்வாகக் குழு' (The United Nations Administrative Committee) பின்வருமாறு குறிப்பிடுகின்றது:

"சமுதாய வளர்ச்சித்திட்டம் பல உலக நாடுகளிலும் பின்பற்றப்படுகின்ற ஒன்றாகும். இத்திட்டத்தினால் மக்களின் முயற்சிகள் அரசின் நடவடிக்கைகளோடு இணைக்கப்படுகின்றன. இதன்மூலம் சமுதாயங்களின் பொருளாதார, சமூக, பண்பாட்டு நிலைகளை முன்னேற்றமடையச் செய்யலாம். இவ்விதச் சமுதாயங்கள் நாட்டின் வாழ்வோடு சேர்க்கப்பட்டு, நாட்டின் வளர்ச்சிக்கு உதவுமாறு செய்யப்படுகின்றன."[1]

சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் நோக்கம் வலுவான சமுதாயத்தை அமைப்பதாகும். சமுதாயத்தின் சிக்கல்களை நன்கு அறிந்து, அதற்கேற்ப வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. சமுதாயத்தின் தேவைகளுக்கு ஏற்பவும் திட்டங்கள் நிறைவேற்றப் பெறுகின்றன. இத்திட்டம் மக்களைத் தாங்களே தங்களுக்கு உதவுமாறு செய்கின்றது. சமுதாயத்தின் சுதந்திர

1. U. N. Report of the Administrative Committee on Co-ordination to the Economic and Social Council, para 14, p. 5.

நிலையானது இதனால் முன்னேற்றமடைகின்றது. மக்களைக் கடமை உணர்வு கொண்டவர்களாக மாற்றுகின்றது. உள்ளூர்த் தலைமையில் வளர்ச்சிக்கான திட்டங்கள் கைக்கொள்ளப்படுகின்றன. மாற்றங்களைப் புகுத்துவதற்குப் பதிலாக மாற்றங்களை மக்களே ஏற்கும்படி இத்திட்டங்கள் அமைகின்றன. இதன்மூலம் சமுதாய எதிர்ப்பு மாற்றங்களுக்கு ஏற்படாது.

'பன்னாட்டுக் கூட்டுறவு நிர்வாகம்' (The International Co-operation Administration) கீழ்க்கண்டவாறு விளக்குகின்றது:

"பல அரசுகளும் சமுதாய வளர்ச்சித் திட்டங்களை மேற்கொண்டுள்ளன. இத்திட்டங்களால் கிராம மக்கள் அதிக உற்பத்தியைச் செய்து நல்ல வாழ்க்கைத்தரத்தைப்பெற தூண்டப்படுகின்றார்கள். தங்களுடைய திறமைகளைத் திறம்படப் பயன்படுத்தி உயர்ந்த உற்பத்தியைப்பெற அவர்கள் ஊக்குவிக்கப்படுகின்றார்கள். சமுதாயத்திலுள்ள மக்கள் தாங்களே திட்டங்களை மேற்கொள்கின்றனர். தனிப்பட்ட தேவைகளும், சிக்கல்களும் அவர்களால் ஆராயப்படுகின்றன. சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்திச் செய்யவும், சிக்கல்களுக்குத் தீர்வு காணவும் பலவகைத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. சமுதாயத்தின் வசதிகளைக் கொண்டே இத்திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. வசதிகள் போதாத நிலையில் அரசின் உதவியும், பிற அமைப்புக்களின் உதவியும் பெறப்படுகின்றன."

இந்தியாவின் 'திட்டக்குழு' சமுதாய வளர்ச்சித் திட்டங்களின் அவசியத்தைப் பின்வருமாறு வலியுறுத்துகின்றது. "சமுதாய மேம்பாட்டைப் பெற உதவும் சிறப்பான முறை சமுதாய வளர்ச்சித் திட்டமாகும்; சமுதாய நலத்தை உயர்த்த இது பெரிதும் உதவுகின்ற ஒன்றாகும்." கிராமங்களின் பொருளாதார, சமூக வாழ்வில் மாற்றங்களைப்பெற சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் உதவும் என முதல் ஐந்தாண்டுத் திட்டம் கருதியது.

சமுதாய வளர்ச்சித் திட்டங்களின் தேவையும், நோக்கங்களும்

இந்தியாவின் மக்கட்தொகையில் சுமார் 80 சதவீதம் கிராமப் புறங்களில் அமைந்திருப்பதால், சமுதாய வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்வது அவசியமாகின்றது. இம் மக்கட்தொகை வறிய நிலையைக் கொண்டும், தரம் குறைந்த வாழ்வினைக் கொண்டும் அமைந்திருக்கின்றது. இதன் விளைவாக அவர்களுடைய வாழ்விலேயே அவர்களுக்கு அக்கறை ஏற்படுவதில்லை. கிராமப்புறங்களில் கணிசமான முன்னேற்றத்தைப்பெற இத்திட்டங்கள் உதவு

கின்றன. கிராமவாசிகள் ஓராண்டின் பல மாதங்களில் வேலை யின்றி உள்ளார்கள். பெரும்பகுதி மக்கட்தொகை 'மறைந்துள்ள வேலையின்மையிலும்' அமைந்துள்ளது. வேளாண்மை ஒருபருவ காலத் தொழிலாக இருப்பதால் 'பகுதி நேர வேலையின்மையும்', வேளாண்மையில் அதிக மக்கட்தொகை ஈடுபட்டிருப்பதால் 'மறைந்துள்ள வேலையின்மையும்' கிராமங்களில் அமைந்துள்ளன. இவ்வாறு வீணடிக்கப்படுகின்ற மனித உழைப்பானது உற்பத்திப் பணிகளில் முற்றிலுமாகப் பயன்படுத்தப்படுவது மக்களின் வள வாழ்விற்கு வித்திடும். உற்பத்திப் பெருகும்போது மக்களின் வாழ்க்கைத்தரமும் உயருகின்றது. கிராமங்களில் இதன்மூலம் செழிப்பு நிலையும், முன்னேற்றமும் தோன்ற வாய்ப்பு ஏற்படும்.

நாட்டின் ஆக்கத்தை அதிகரிக்க வேண்டுமென்றால் கிராம மக்களுக்குக் கல்வி வசதிகள் அளிக்கப்படவேண்டும். புதிய, தொழில்நுட்பம் மிக்க உற்பத்திமுறைகளை அவர்கள் பின்பற்றுமாறு செய்யவேண்டும். பழக்க வழக்கங்களில் மாற்றங்களை ஏற்படுத்தி, மொத்த ஆக்கத்தின் அளவை அவர்கள் அதிகரிக்குமாறு ஊக்கு விக்கப்படுதல் அவசியமாகின்றது. வேளாண்மை வளர்ச்சிக்கான ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். தற்பொழுது கிராமங்களில் அமைந்துள்ள பல சிக்கல்களைத் தீர்க்க சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் உதவுகின்றன. கிராம மக்களுக்குத் திறமை யானவர்களின் ஆலோசனைகள் அளிக்கப்படவேண்டும்; அவர் களின் நிதித்தேவையும் பூர்த்திச் செய்யப்படவேண்டும். கிராம மக்களைக் கூட்டுறவுக் கொள்கையின் அடிப்படையில் இயங்கச் செய்தல் இன்றியமையாதது.

கிராம மக்கள் நம்பிக்கையற்ற, வெறுப்புற்ற வாழ்க்கையைக் கொண்டுள்ளனர். இந்நிலையை நீக்கி அவர்கள் ஊக்கங்கள் பெறும் வகையில் பல வசதிகளும் கிராமங்களில் செய்யப்பட வேண்டும். வேளாண்மையில் முன்னேற்றமடைந்த சாகுபடி முறைகளுக்கு உதவும் நடவடிக்கைகள் எடுக்கப்பெற வேண்டும். தண்ணீர் வசதிகள், மருத்துவ ஆரோக்கிய வசதிகள், போக்கு வரத்து வசதிகள் ஆகியவற்றை முன்னேற்றமடையச் செய்வது இன்றியமையாதது. கிராமப்புறங்களில் புதிதாகச் சிறு தொழில்கள் தொடங்கப்படுதல் பல நன்மைகளைத் தரும். கல்வி வசதிகள், பொழுதுபோக்கு வசதிகள் போன்றவற்றைப் பெருக்குவதால் கிராம மக்களின் பழமை நோக்கங்கள் மாறுபடுகின்றன. இவ்வாறு பல வசதிகளையும் கிராமங்களில் பெருக்குவதின் மூலம் பொருளாதார முன்னேற்றம் ஏற்படுவதோடு, சமுதாய அமைப்பு முறைகளிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதனால் கிராம மக்கள்

புதிய நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்; பலவித மாற்றங்களுக்கும் அவர்கள் எதிர்ப்பு நிலையைக் கொண்டிருக்கமாட்டார்கள்.

சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் கிராம மக்களைச் சிந்தித்துச் செயலாற்றச் செய்கின்றன. வாழ்வில் அக்கறை, ஆர்வம் ஆகியவற்றைக் கொள்ளவும் கிராம மக்களைத் தூண்டுகின்றன. அவர்கள் தாழ்ந்த வாழ்க்கை நிலைமாறித் தரமான வாழ்வைப் பெறுகின்றனர். பொருளாதாரத்தின் பல துறைகளிலும், வேளாண்மைத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் வாழ்க்கைத்தரமே மிகவும் தாழ்வாக அமைந்துள்ளது. இதை மாற்றி அவர்களுக்கு நல்வாழ்வை அளிக்க சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் பெரிதும் உதவுகின்றன எனலாம்.

சமுதாய முன்னேற்றத் திட்டங்களின் அடிப்படைக் கொள்கைகள் பின்வருமாறு அமைகின்றன:

(i) முன்னேற்றத்தைப் பெற வேண்டுமென்ற எண்ணம் மக்களிடையே தோன்றவேண்டும். கிராமப்புறங்களில் பயன் படுத்தப்படாத சக்தியானது ஆக்கப்பணிகளில் ஈடுபடுத்தப்பட வேண்டும். சமுதாயத்திற்கு நலமளிக்கும் வகையில் கிராமங்களின் எல்லாக் குடும்பங்களும் பணியாற்றவேண்டும்.

(ii) கிராம வாழ்க்கையின் எல்லாச் சிக்கல்களுக்கும் தீர்வு காணக் கூட்டுறவுக் கொள்கை பல்வேறு வகைகளில் செயல் படுத்தப்பட வேண்டும்.

சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் பற்றித் திட்டக்குழு குறிப்பிடுவதாவது, "உணவு, மற்றும் வேளாண்மை உற்பத்தியை விரைவாக உயர்த்தவும், கல்வி வசதியைப் பரப்பவும், ஆரோக்கிய வசதிகளை அளிக்கவும், புதிய திறமைகளைப் புகுத்தவும், புதிய தொழில் பாகுபாடுகளை ஏற்படுத்தவும் சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் உதவுகின்றன. இத்திட்டங்கள் கிராமச் சமுதாயத்தை உயர்த்துகின்றன. பொருளாதார அமைப்பு முறைகளும் வளர்கின்றன. புதிய அறிவைப் பெறுவதற்கான ஆர்வம் மக்களால் பெறப்படுகின்றது. மக்களின் வாழ்க்கை வசதிகள் பெருகுகின்றன." கிராமங்களில் பல வசதிகளும் அதிகரிப்பதால் கிராம மக்களின் மூன்று எதிரிகளாகச் சொல்லப்படுகின்ற பசி, நோய், அறியாமை ஆகியவை நீக்கப் படுகின்றன. கூட்டு மனப்பான்மையில் திட்டமிட்டுத் தீவிரமாக இத்திட்டங்களை மேற்கொள்வதின்மூலம் விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெறலாம். சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் கிராமப்புறங்களின் மனித உழைப்பைத் திரட்டி உற்பத்திப் பணிகளில் ஈடுபடுத்த நடவடிக்கைகளை எடுக்கின்றன. இந்தியக்

கிராமப் பொருளாதாரத்தில் அமைந்துள்ளத் தேக்க நிலையை, இத்திட்டங்களின் மூலமே நீக்கமுடியும்.

இந்தியாவின் பொருளாதார முன்னேற்றம் கிராமங்களின் வளர்ச்சியைப் பெறுவதிலேயே அடங்கியுள்ளது. விடுதலை அடைவதற்கு முன் கிராமங்களின் வளர்ச்சிக்கான சில பணிகள் செய்யப்பட்டிருந்தன. விடுதலை அடைந்த பிறகு கிராமச் சமுதாயத்தை மாற்றியமைப்பதின் அவசியத்தை அரசு உணர்ந்தது. புதிய அறிவியல் உற்பத்தி முறைகள் வேளாண்மைச் சாகுபடியில் கிராம மக்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டால்தான் பொருளாதார வளர்ச்சிவீதம் உயர்வடையும். எனவே திட்டமிட்டப் பொருளாதார வளர்ச்சியை அரசு மேற் கொண்ட பொழுது, கிராமப்புறங்களை முன்னேற்றமடையச் செய்ய சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

வரலாற்றுப் பின்புலம்

வளர்ச்சி குன்றிய நாடுகள் திட்டங்களின்மூலம் பொருளாதார முன்னேற்றத்தைப் பெற்று வருகின்றன. பொருளாதார வளர்ச்சித் திட்டங்களோடு, சமுதாய வளர்ச்சித் திட்டங்களும் மேற்கொள்ளப் படுகின்றன. சமுதாயத்தினரை அரசின் திட்டங்களில் பங்கு பெறச் செய்ய சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் உதவுகின்றன. பல உலக நாடுகளும் இத்திட்டங்களை மேற்கொண்டுள்ளன. இந்தியாவில் சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் முன்னோடியாகப் பல நிர்மாணப் பணிகள் நிறைவேற்றப்பட்டன. 1952-ல்தான் கிராமச் சமுதாயத்தை மேம்படுத்த அரசின் திட்டம் கொண்டுவரப்பட்டது. 1952ஆம் ஆண்டு மகாத்மா காந்தியடிகள் பிறந்த அக்டோபர் இரண்டாம் நாள் இத்திட்டம் செயல்படத் தொடங்கியது. ஐந்தாண்டுத் திட்டங்களில் சமுதாய வளர்ச்சிக்காக அதிக மூலதனம் ஒதுக்கப்பட்டது.

கிராமச் சீரமைப்பிற்கான ஆக்கப்பணிகளை 1908ஆம் ஆண்டி லேயே கவிஞர் ரவீந்திரநாத் டாகூர் ஸ்ரீநிகேதனத்தின் மூலம் மேற்கொண்டார். தற்பொழுது அமைந்துள்ள சமுதாய வளர்ச்சித் திட்டங்களுக்கும், தேசிய விரிவாக்கத் திட்டங்களுக்கும் முன்னோடியாகக் கிராம வளர்ச்சிக்கான திட்டங்கள் நாடு விடுதலை யடைவதற்கு முன்பே செயல்படுத்தப்பட்டன. சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் வரலாற்றை இரண்டு காலங்களில் பிரிக்கலாம். அவை யாவன: (i) 1921ஆம் ஆண்டிற்கும் 1952ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்டக்காலம்; (ii) 1952ஆம் ஆண்டிற்குப் பிற்பட்டக்காலம்.

1921ஆம் ஆண்டுமுதல் 1930ஆம் ஆண்டுவரை கிராமப் புனரமைப்பிற்கானத் தொடக்க முயற்சிகள் கணிசமான அளவிற்குச் செய்யப்பட்டன. இக்காலத்தில்தான் கிராமங்களின் வளர்ச்சிக்கான ஸ்ரீநிகேதன், மார்டான்டம் (Martandam) ஆகிய அமைப்புகள் தோன்றின. காந்தியடிகள் 1917ஆம் ஆண்டிற்கு முன்பே நாடு விடுதலை பெற அஹிம்சையும், சத்தியமும் கொண்ட 'நிர்மாணத் திட்டத்தை' நாட்டின் 18 பகுதிகளுக்கு வழங்கினர். காந்திய வழியின் நிர்மாணத் திட்டங்கள் மிகப் பழங்காலத்திலேயே தொடங்கப்பட்டுவிட்டன.

கிராமப் புனரமைப்பிற்கான ஸ்ரீநிகேதன் நிறுவனம் (Sriniketan Institute of Rural Reconstruction)

இந்நிறுவனமானது 1921-ல் கவிஞர் ரவீந்திரநாத் டாகூர் அவர்களால் ஏற்படுத்தப்பட்டது, இது எல்ம்ஹிர்ஸ்ட் (Elmhirst) என்பவருடைய மேற்பார்வையில் இயங்கத் தொடங்கியது. இதனுடைய நோக்கம் கிராம மக்களுக்கு முழு வாழ்வை அளிப்பது, தங்களைச் சார்ந்தே அவர்களை வாழச்செய்வது, புதிய வசதிகளை நன்கு பயன்படுத்துமாறு செய்வது, அவர்களுடைய பொருளாதார நிலையை உயர்த்துவது ஆகியவைகளாகும். இதன்மூலம் ஆரோக்கிய வசதிகள் கூட்டுறவு முயற்சியால் பெறப்பட்டன. புதிய கல்விக் கூடங்கள் தொடங்கப்பட்டன. குடிசைத் தொழில்கள் ஏற்படுத்தப்பட்டன. நல்விதைகளும், உரங்களும் வேளாண்மை வளர்ச்சிக்காக அளிக்கப்பெற்றன. வேளாண்மைப் பரிசோதனை முறைகளும் கைக்கொள்ளப்பட்டன. குறிப்பிட்டப் பகுதிகளில் இந்நிறுவனம் பொருளாதார ரீதியில் பல நன்மைகளை அளித்ததோடு, மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் காரணமாக இருந்தது. எண்ணிலடங்காத சிக்கல்கள் நாட்டின் பல பகுதிகளிலும் இருந்ததால், இந்நிறுவனம் தன்னுடைய நடவடிக்கைகளை பல பகுதிகளிலும் மேற்கொள்ள இயலவில்லை. இதனால் ஏற்பட்ட சமுதாய வளர்ச்சி நாட்டின் மிகச் சில பகுதிகளில் மட்டுமே ஏற்பட்டது எனலாம்.

1921 முதல் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள 'மார்டான்டம்' பகுதியில் டாக்டர் ஸ்பென்ஸர் ஹாச் (Dr. Spencer Hatch) பல பணிகளை மேற்கொண்டார். பரந்த அளவில் அமைந்துள்ள கிராம மக்களின் நிறைவான முன்னேற்றத்திற்காக இத்திட்டம் கைக்கொள்ளப்பட்டது. பொருளாதார, சமுதாய முன்னேற்றங்களை கிராமப் பகுதிகளில் ஏற்படுத்தவும் இது நோக்கம் கொண்டதாக இருந்தது. மக்களைச் சுய தேவைப் பூர்த்தியை அடைய இது

தூண்டியது. கீழ்க்கண்ட வேறு சில கொள்கைகளைக் கொண்டதாகவும் இத்திட்டம் இருந்தது:

(1) மக்கள் உழைக்கத் தயாராக உள்ள இடங்களில் பணிகளைத் தொடங்குவது;

(2) சமுதாயத்தின் நிலைகளைப்பற்றி நன்கு அறிவது;

(3) நிறைவான திட்டத்தை அளிப்பது;

(4) உள்ளூர்த் தேவைகளுக்கு ஏற்ப உற்பத்தித் திட்டங்களைத் தொடங்குவது;

(5) மக்களுக்குப் பழக்கமான உற்பத்தி முறைகளைக் கொண்ட தொழில்களை ஏற்படுத்துவது;

(6) உள்ளூர்த் தலைமைகளையும், பொறுப்புகளையும் ஏற்படுத்துவது;

(7) நீண்டகால அடிப்படையில் திட்டத்தை மேற்கொள்ளுவது; பயிற்சி பெற்றத் தலைமையே உறுதித்தன்மை வாய்ந்ததாகத் திட்டத்தை அமைப்பது.

இப்பரிசோதனை இடத்தைச் சுற்றி அமைந்திருந்த கிராமங்களும், இத்திட்டத்தைப்பற்றி நன்கு உணர்ந்தன. இப்பரிசோதனைத் திட்டம் தனக்குச் சொந்தமான பண்ணையைக் கொண்டிருந்தது; விலையுயர்ந்த கால்நடைகளையும், முன்னேற்றமடைந்த உற்பத்திக் கருவிகளையும் பெற்றிருந்தது. அப்பகுதியில் தேன் எடுத்தல் போன்ற குடிசைத் தொழில்களும் தொழில் நுட்பம் மிகுந்த கருவிகளைக்கொண்டு அமைக்கப்பட்டிருந்தன. கிராமக் கணக்கெடுப்புகள் செய்யப்பெற்றன. நாடகங்கள், பொருட்காட்சிகள், பரிசோதனை முறைகள் ஆகியவை நடத்தப்பட்டன. கோழிப்பண்ணை, தேன் எடுத்தல், நெசவு போன்ற உள்ளூர்த் தொழில்களும் கூட்டுறவின் அடிப்படையில் அமைக்கப்பட்டன. தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடங்கப்பெற்ற இப் பரிசோதனைமுறைத் திட்டம் நாட்டின் வேறு சில மாநிலங்களிலும் பரவியது. பரோடா, கொச்சி, மைசூர், ஹைதிராபாத் ஆகிய இடங்களில் கிராம மறு வாழ்விற்கான திட்டங்களை மேற்கொள்ள பயிற்சிகள் அளிக்கப்பெற்றன. தொண்டர்கள் பலர் தீவிரமாக இப்பயிற்சியளிக்கும் பணிகளில் ஈடுபட்டார்கள். இப்பரிசோதனைமுறை பர்மா, இலங்கை, எகிப்து ஆகிய நாடுகளுக்கும் பரவியது. இதனால் ஏற்பட்ட முக்கிய நன்மை கிராம மக்களிடம் கூட்டுறவு மனப்பான்மையை ஏற்படுத்திய

தாகும். அவர்களின் தேவையை சுய முயற்சியால் பூர்த்திச் செய்து கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தையும் இத்திட்டம் ஏற்படுத்தியது.

1920-ல் பஞ்சாப் மாநிலத்தின் கூர்ஹான் (Gurgaon) மாவட்டத்தில் துணைஆணையாளராக இருந்த எப்.எல். பிரெய்ன் (F.L.Brayne) அரசின் சார்பில் வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்டார். 'நல்ல கிராமங்கள்' (Better Villages)என்ற நூலில் கிராம புனரமைப்பிற்கான வழிமுறைகளை பிரெய்ன் குறிப்பிடுகின்றார். கிராமங்களின் மறு மலர்ச்சிக்குக் கடின உழைப்பு, சிக்கனம், தன்னம்பிக்கை, தன்னடக்கம் ஆகியவை தேவை என அவர் அறிவுறுத்துகின்றார். கிராம மறு நிர்மணத்திற்காக பின்வரும் நான்கு அடிப்படைகள் அமைக்கப்படவேண்டுமென பிரெய்ன் கூறுகின்றார். அவை,

1. நிரந்தரமான உறுதியான முன்னேற்றத்தை விரைவாகப் பெற கிராமப் பஞ்சாயத்துகள் போன்ற அமைப்புகள் ஏற்படுத்தப் படவேண்டும்.

2. கிராம மக்களின் அறிவை வளர்க்கக் கல்வி வசதிகள் பெருக்கப்படவேண்டும். குறிப்பாகப் பெண் கல்வி முன்னேற்றம் இன்றியமையாததாகும்.

3. எல்லா வகைகளிலும் எடுத்துக்காட்டாக அமையத்தக்க கிராமத் தலைமைகள் ஏற்படுத்தபட வேண்டும்.

4. உண்மையான உழைப்பைத் தரவேண்டுமென்ற எண்ணத்தை மக்களிடம் ஏற்படுத்த வேண்டும்; சமுதாய வளர்ச்சிக்காக எவ்விதத் தியாகத்தையும் செய்ய அவர்கள் முன் வருமாறு செய்யவேண்டும்.

தற்பொழுது அமைந்துள்ள வட்டார வளர்ச்சித் திட்டங்களைப் போன்ற பரந்த நோக்கங்களைக் கொண்ட விரிவான திட்டமாக இது அமைந்திருந்தது. கிராம மறுமலர்ச்சிக்காக அரசினால் எடுக்கப்பெற்ற இம்முயற்சிகள் சில குறைகளைக்கொண்டு அமைந் திருந்தன. இத்திட்டம் நிரந்தரத்திட்டமாக அமையவில்லை. திறமையான முறையில் இது செயல்படுத்தப்படவில்லை. சமுதாயத் தில் மிகப் பின்தங்கிய நிலையில் இருந்த மக்கள் புறக்கணிக்கப் பட்டனர். மேலும் திட்டத்தை நிறைவேற்றியவர்கள் அதிக அளவு முன்னேற்றத்தை எதிர்பார்த்தார்கள். பிரெய்ன் இத்திட்டம் வெற்றியடைய பின்வரும் நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டு மெனக் குறிப்பிட்டார்:

1. மருத்துவ, ஆரோக்கிய வசதிகள் அளிக்கப்படவேண்டும்.

2. வசதிகளைத் திறமையாகப் பயன்படுத்த முழு முயற்சிகளை மேற்கொள்ளும் 'அதிகாரிகளின் குழு' (Officers' Board) அமைக்கப் படவேண்டும்.

3. அதிகாரிகளுக்கும், அதிகாரிகள் அல்லாதவர்களுக்கும் இடையே கூட்டுறவை ஏற்படுத்தும் அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். மக்களுக்கும், அரசிற்கும் இடையே நல்லெண்ணம் நிலவச் செய்யவேண்டும்.

4. கிராம அளவில் தானே இயங்கக்கூடிய அமைப்பு முறை ஏற்படுத்தப்பெற வேண்டும். கிராம முன்னேற்றத்திற்கான எல்லா முயற்சிகளையும் இது மேற்கொள்ளவேண்டும். கிராம மக்களின் முன்னேற்றத்திற்கும், நல்வாழ்விற்கும் இது வழிகாட்டியாக அமைதல் அவசியமாகும்.

கிராமப் பொருளாதாரத்தில் உழைப்பின் உயர்வை உணர்த்தப் பள்ளிகளையும் ஏற்படுத்தினர். கிராம வளர்ச்சிக்கு இத்திட்டம் வழிகாட்டியாக அமைந்தது. பஞ்சாப் மாநிலத்தின் சில பகுதிகளில் மட்டுமே இத்திட்டம் பரவியது. பிற மாநிலங்களில் பரவ வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. பஞ்சாப் மாநிலத்திலும் குறுகிய காலத் திற்கு மட்டுமே இத்திட்டம் அமைக்கப்பட்டிருந்தது. பஞ்சாபில் மட்டும் இப்பரிசோதனைமுறை அமைந்திருந்தது. அதனுடைய படிப்பினைகள் இந்தியாவின் பிற பகுதிகளுக்கு உதவவில்லை.

காந்திய நிர்மாணத் திட்டம் (Gandhian Constructive Programme)

மகாத்மா காந்தியின் நிர்மாணத் திட்டத்தைப்பற்றிய கருத்துகள் கீழ்க்கண்டவற்றைக் கொண்டு அமைந்திருந்தன : அவை,

(1) காதியைப் பயன்படுத்துவது;

(2) கிராமத் தொழில்களை முன்னேற்றமடையச் செய்வது;

(3) கிராமங்களைத் துப்புரவாக வைத்துக்கொள்வது;

(4) மதுவிலக்கைப் பின்பற்றுவது;

(5) சமுதாய அமைதியைக் காப்பது;

(6) அடிப்படைக் கல்வியையும், வயது வந்தோருக்கான கல்வியையும் உயர்த்துவது;

(7) நல்லுணவு, ஆரோக்கிய வசதி ஆகியவற்றை பெறச் செய்வது;

(8) பெண்களின் முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளை எடுப்பது;

(9) தேசிய மொழியைப் பரப்புவது ஆகியவைகளாகும்.

உணவிலும், உடையிலும் தன்னிறைவைப் பெறவேண்டுமென மகாத்மா காந்தி பெரிதும் வலியுறுத்தினர். இத்திட்டத்தில் தனி மனிதர்களின் ஊக்கமானது முக்கியமானதாகக் கருதப்பட்டது. உள்ளூர்ப் பஞ்சாயத்துகள் தேசிய அமைப்போடு தொடர்புடையன ஆகும். இத்திட்டம் மக்களிடையே பண்பாட்டை வளர்க்க அதிகம் வலியுறுத்தியது. தன்னடக்கம், அஹிம்சை, அச்சமின்மை, உழைப்பின் பெருமை ஆகியவற்றைப் பெறவேண்டுமென காந்தியின் நிர்மாணத் திட்டம் உணர்த்தியது. நாட்டின் விடுதலையையும், முன்னேற்றத்தையும் இவற்றின் மூலமாகவே பெற வேண்டுமென இது கருதியது.

மகாத்மா காந்தியின் தத்துவங்கள் 'சர்வோதயத் திட்டங்களாக' (Sarvodaya Schemes) பம்பாய் மாநிலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டன. தற்பொழுது காந்திய முறையில் ஆச்சாரிய விநோபாபாவே பூமிதான, கிராமதான இயக்கத்தை நடத்தி வருகின்றார். ஜெயப்பிரகாஷ் நாராயண் போன்றவர்களும் இவ்வியக்கத்தோடு தொடர்பு உடையவர்கள் ஆவர். சமுதாய வளர்ச்சித் திட்டங்களின் பணிகளைப் போன்றே இவ்வகை இயக்கங்களின் பணிகளும் அமைந்துள்ளன.

எல்லாக் குடும்பங்களும் சுயமுயற்சியோடு முன்னேற வேண்டுமென்று 1930ஆம் ஆண்டில் பரோடா அரசின் சார்பில் திரு. வி. டி. கிருஷ்ணமாச்சாரி கிராமப் புனரமைப்புத் திட்டங்களைச் செயல் படுத்தினர்.

1945ஆம் ஆண்டிற்கும் 1952ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்டக் காலம்

கிராம வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள 1946-ல் தமிழ் நாட்டின் அரசு 'பிர்க்கா அபிவிருத்தித் திட்டத்தை'க் (Firka Development Scheme) கைக்கொண்டது. ஆல்பெர்ட் மேயர் காட்டிய வழியில் உத்தரப் பிரதேசத்தில் சமுதாய முன்னேற்றத் திற்காக 'எட்டாவா முன்னோடி வளர்ச்சித் திட்டம்' (Etawah Pilot Project) செயல்படுத்தப்பட்டது. 7,000 அகதிகளுக்குப் புது வாழ்வளிக்க நிலோகேரியில் (Nilokheri) எஸ். கே. டே என்பவர் செயல்படுத்தினர். பம்பாய் மாநிலத்தில் அரசு காந்திய வழியில் 'சர்வோதயத் திட்டத்தை' மேற்கொண்டது.

தமிழ்நாட்டில் பிர்க்கா அபிவிருத்தித் திட்டம்

பிர்க்கா அபிவிருத்தித் திட்டம் 1946ஆம் ஆண்டில் முப்பத்தி நான்கு பிர்க்காக்களில் அப்போதிருந்த தமிழ்நாடு அரசால் ஏற்படுத்தப்பட்டது. சிறந்த எதிர்காலத்தைக் கிராம மக்களுக்கு அளிக்கும் எண்ணத்தோடு இத்திட்டம் தொடங்கப்பட்டது. நிறைவான வாழ்வை அவர்களுக்கு அளித்து, முன்னேற வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவும் இத்திட்டம், எண்ணம் கொண்டிருந்தது. தனியாருடைய நிலையுயர்விற்கும், சமுதாய வளர்ச்சிக்கும் இத்திட்டம் கைக்கொள்ளப்பட்டது. குறுகிய காலத்தில் இதனுடைய நோக்கம் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருவதாகும். குறிப்பாகத் தண்ணீர் வசதி, சுகாதாரத் திட்டங்கள், செய்தித் தொடர்பு வசதிகள், பஞ்சாயத்துகளையும் கூட்டுறவுகளையும் ஏற்படுத்துதல் ஆகியவை குறுகிய காலத்திலேயே மேற்கொள்ளப்படுகின்றன. இத்திட்டத்தின் நீண்டகால நோக்கம் உணவு, . உடை, இருப்பிடம் ஆகியவற்றில் தன்னிறைவைப் பெறுவதாகும். இவற்றில் தன்னிறைவைப் பெற வேளாண்மை வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். காதித் தொழில், கால்நடைப் பராமரிப்பு, குடிசைத் தொழில்கள் ஆகியவைகளின் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

பிர்க்கா அபிவிருத்தித் திட்டம் 1953-54ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்ற சமுதாய வளர்ச்சித் திட்டத்தோடும், தேசிய விரிவாக்கத் திட்டத்தோடும் இணைக்கப்பட்டுவிட்டது.

நிலோகேரித் திட்டம்

சமுதாய வளர்ச்சித்திட்ட வரலாற்றில் நிலோகேரித் திட்டமும் முக்கிய நிலையைக் கொண்டு அமைந்துள்ளது. 1948ஆம் ஆண்டில் 1,100 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தில் 7,000 அகதிகளுக்கு மறுவாழ்வளிக்க இத்திட்டம் பின்பற்றப்பட்டது. நிலோகேரி நகரமானது ஏற்படுத்தப்பட்டு இம்மறுவாழ்வுத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. அந்நகரத்தைச் சுற்றி அமைந்திருந்த 100 கிராமங்களும் அதோடு இணைக்கப்பெற்றன. இத்திட்டமானது 'மஸ்தூர் மான்சில்' (Mazdoor Manzil) என அழைக்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கம் நகரத்திலும், நகரத்தைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் அவசியத் தேவைகளில் தன்னிறைவைப் பெறுவதாகும். அங்கு பயிற்சி வசதிகள் செய்யப்பட்டிருந்தன. கூட்டுறவு முறையில் கால்நடைப் பண்ணை, கோழிப் பண்ணை, தோல் தொழில், அச்சகங்கள், பொறியியற் கூடங்கள், எலும்புகளைப் பதப்படுத்தும் தொழிற் கூடங்கள் ஆகியவை அமையப்பெற்றிருந்தன.

பரிசோதனை முறையில் அமைந்த இத்திட்டம், சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் இந்தியாவில் தோன்றக் காரணமாக இருந்தது. நிர்வாக அமைப்பு முறைகளில் சிறந்த அடிப்படையை ஏற்படுத்தித் தந்ததாக இத்திட்டம் அமைந்தது. கிராமப்புறங்களில் சிறு தொழில்களை ஏற்படுத்துவதின்மூலம் விளைகின்ற நன்மைகளை இது உணர்த்தியது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் வரையப்பட்ட போது 52 சமுதாயத் திட்டங்களை மேற்கொள்வதென முடிவெடுக்கப்பெற்றது. ஆனால் இவை சில காரணங்களால் திட்டக் காலத்தில் மேற்கொள்ளப்படவில்லை.

'எட்டாவா முன்னோடி வளர்ச்சித் திட்டம்' பரிசோதனை முறையில் 1948-ல் ஆல்பெர்ட் மேயர் (Albert Mayer) என்பவரால் தொடங்கப்பட்டது. மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து இத்திட்டத்தை மேற்கொண்டன. 1952-ல் கைக்கொள்ளப்பட்ட சமுதாய வளர்ச்சித் திட்டத்திற்கு இதுவே முன்னோடி திட்டமாக அமைந்தது. இத்திட்டத்தின் நோக்கம் பின்வருமாறு அமைந்திருந்தது :

"உற்பத்தித் திறனையும், சமுதாய முன்னேற்றத்தையும் உயர்த்த இத்திட்டம் உதவும்; ஊக்கம், நம்பிக்கை, கூட்டுறவு மனப்பான்மை ஆகியவற்றை மக்களிடையே ஏற்படுத்தும். இவற்றைப் பெறுவது மக்களின் மனநிலையையும், நோக்கங்களையும் சார்ந்து அமையும்."

கீழ்க்கண்ட நிலைகளை இத்திட்டம் பெறவேண்டுமென அறிவுறுத்தியது:

(1) உற்பத்தியின் அளவை உயர்த்துவது;

(2) முன்னேற்றத்திற்கான தீவிர நடவடிக்கைகளை எடுப்பது;

(3) மக்களிடையே கூட்டுறவு மனப்பான்மையை வளர்ப்பது;

(4) மக்களின் நடவடிக்கைகளில் முன்னேற்றமான மாற்றங்களை ஏற்படுத்துவது;

(5) தீவிரமான முறைகளில் குறியிலக்குகளை அடைவது;

(6) நிர்வாகிகளைக் கவனமாகத் தெரிந்தெடுத்தல்;

(7) தன்னிறைவைப் பெறுதல்;

(8) கிராமத் தலைமைகளை ஏற்படுத்துவது;

(9) சமுதாயத்தின் பழமையான நிலைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவது.

எட்டாவா மாவட்டத்தின் 'மகேவா வட்டாரத்தில்' (Maheva Block) புதுமையான வேளாண்மை உற்பத்தி முறைகள் பின்பற்றப் பட்டன. நடைமுறையில் அமைந்திருந்த பழைய வேளாண்மைச் சாகுபடி முறைகள் படிப்படியாகக் குறைக்கப்பட்டன. பொது ஆரோக்கியத்தைக் காப்பதும், தூய்மையான சூழ்நிலைகளை ஏற் படுத்துவதும் இத்திட்டத்தில் அடங்குபவைகளாகும். சமுதாயக் கல்வி, பொழுதுபோக்கு வசதிகள், கால்நடைப் பராமரிப்பு, நிலப் பாதுகாப்பு, வேளாண்மைப் பரிசோதனைகள் ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கான திட்டங்களும் பின்பற்றப்பட்டன. சமு தாயத்தின் எல்லா நிலைகளிலும் முன்னேற்றத்தைப் பெற்று, நிறைவான சாதனைகளை அடைய இத்திட்டம் எண்ணம் கொண் டிருந்தது.

'எட்டாவா முன்னோடி வளர்ச்சித் திட்டம்' குறிப்பிடத்தக்க அளவு சமுதாய முன்னேற்றத்தையும் பெறச்செய்வது. முதலீட் டிற்குத் தக்க நன்மைகளைத் தருவதாக இது அமைந்தது. பொரு ளாதார முன்னேற்றத்தைப் பெறச் செய்ததோடு, சமுதாய மாற்றங்கள் சிலவற்றையும் இது ஏற்படுத்தியது. இத்திட்டத்தின் மூலம் ஏற்பட்ட வேளாண்மை வளர்ச்சி விவசாயிகளுக்கு ஊக்கத்தை அளித்தது. இத்திட்டத்தினால் எட்டாவா பகுதியில் உணவு உற்பத்தியின் அளவு 50 சதவீதம் அதிகரித்தது. அப்பகுதியில் மக்களின் வாழ்க்கை நிலையானது உயர்வடைந்தது. அவர்களுடைய குழந்தைகள் கல்வி வசதிகளைப்பெற முடிந்தது. பொதுவாக எட்டாவா பகுதியின் முன்னேற்றம் சிறப்பாக அமைந் திருந்தது எனலாம். எனவே இத்திட்டம் சிறப்பான வெற்றியைப் பெற்ற ஒன்று என்று கூறலாம்.

சமுதாய வளர்ச்சித் திட்டங்களும், தேசிய விரிவாக்கப் பணிகளும் Community Development Projects and National Extension Services).

இந்தியா விடுதலையடைந்த பிறகு சமுதாய வளர்ச்சித் திட்டங்களை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்ற உணர்வு அரசிற்குத் தோன்றியது. அதற்கேற்பத் திட்டக்குழுக் கிராமங்கள் சுயமுயற்சியில் முன்னேற வழிகாட்டியது. அதற்கான ஆலோசனைகளையும் அது வழங்கியது. பொருளாதார, சமுதாய மாற்றங்களை கிராம வாழ்க்கையில் ஏற்படுத்த சமுதாய வளர்ச்சித் திட்டம் ஒருமுறையாக அமைந்தது. தேசிய விரிவாக்கப் பணிகள் சமுதாய வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற உதவுகின்றன. பொருளாதார முன்னேற்றத்தைப்பெற சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் இன்றியமையாதவை என நாடு விடுதலை பெற்ற உடனேயே அறியப்பட்டுவிட்டது.

செறிந்த முறையில் முன்னேற்றத்தைப்பெற சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் உதவுமெனக் கருதப்பட்டது. வசதிகளையும், நன்மைகளையும், பணிகளையும், மக்களிடம் சமமாகப் பகிர இது உதவுமெனலாம். குறைந்தக் காலத்தில் சமுதாய முன்னேற்றத்தைப்பெற இத்திட்டங்கள் உதவுகின்றன. தேசிய விரிவாக்கப் பணிகள் பெரும்பாலும் வேளாண்மை முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்படுகின்றன. நிரந்தரமான முன்னேற்றத்தை வேளாண்மையில் பெற விரிவாக்கப்பணிகள் கைக்கொள்ளப்படுகின்றன. சமுதாய வளர்ச்சித் திட்டங்களும், தேசிய விரிவாக்கப்பணிகளும் இணைந்து செயல்பட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும், சமுதாயத்திற்குச் சம நீதியை வழங்கவும் முயலுகின்றன. இவை இரண்டின் மூலமாகக் கிராமப்புறங்களில் பல வகைப்பட்ட முன்னேற்றங்கள் ஏற்பட வழியுண்டு. கிராம மக்களிடையே கூட்டுறவு முயற்சிகளை வளர்க்கின்றன. எதையும் சரிவர அறியாத மக்கள், பலவற்றையும் முழுமையாக அறிகின்றனர்; பரந்த அறிவையும் அவர்கள் பெறுகின்றனர். இவற்றின்மூலம் பொருளாதார முன்னேற்றம் எளிதாக்கப்படுகின்றது. வளர்ச்சியடையாத நாடுகள் வேளாண்மையை முக்கியத் தொழிலாகக் கொண்டுள்ளன. பெரும்பகுதி மக்கள் கிராமங்களில் வசிக்கின்றனர். வேளாண்மை மக்கட்தொகையும் உயர்ந்த அளவில் உள்ளது. இந்நிலையில் கிராமச் சமுதாயத்தை முன்னேற்றமடையச் செய்யாமல், பொருளாதார முன்னேற்றத்தைப்பெற இயலாது. தொழில் முன்னேற்றத்திற்கு வேளாண்மை வளர்ச்சி அவசியமாகின்றது. வேளாண்மை வளர்ச்சியைப்பெற கிராமச் சமுதாயம் முன்னேறவேண்டும். விரைவான பொருளாதார முன்னேற்றத்திற்கு வேளாண்மை உற்பத்திப் பெருகவேண்டும்; கிராமச் சமுதாய மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவேண்டும். இவற்றைப்பெற சமுதாய வளர்ச்சித் திட்டங்களும் தேசிய விரிவாக்கப்பணிகளும் உதவுகின்றன. இந்தியாவில் திட்டங்களின் வெற்றி கிராமப் பொருளாதார முன்னேற்றத்தைச் சார்ந்தே அமைந்துள்ளது.

சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் நோக்கங்கள்

சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் பின்தங்கிய நாடுகள், வளர்ச்சியடைந்துவரும் நாடுகள் ஆகியவற்றின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவுகின்றன. தேக்கநிலைப் பொருளாதாரத்தை இயக்கநிலையைப் பெறுமாறு செய்வது இத்திட்டங்களேயாகும். கிராமப் பகுதிகளில் உபரி உழைப்பானது அமைந்திருக்கின்றது; ஆனால் குறைந்த வசதிகளே அமைந்துள்ளன. குறைந்த வசதிகளையும், உபரி உழைப்பையும் சிறப்பாகப் பயன்படுத்தி கிராமங்களில் அமைந்திருக்கக்கூடிய அதிக மக்கட்தொகை நன்மையடையுமாறு

செய்யவேண்டும். இத்திட்டங்கள் மக்களின் நலனையும், வருவாயையும் உயர்த்த உதவுகின்றன. முன்னேற்றத்திற்கான பல நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதால் நாட்டின் செல்வமும் உயர்கின்றது. அரசும், மக்களும் இணைந்து செயலாற்றி முன்னேற்றத்தைப்பெற நடவடிக்கைகள் எடுக்கப்பெறுகின்றன.

திரு. வி. டி. கிருஷ்ணமாச்சாரி சமுதாய வளர்ச்சித் திட்டங்களின் நோக்கங்களைப் பின்வருமாறு தருகின்றார் : அவை,

1. வேலையின்மையிலும், மறைந்துள்ள வேலையின்மையிலும் அமைந்துள்ள கிராம மக்களுக்கு முழு வேலைவாய்ப்பை அளிப்பது;

2. வேளாண்மையில் அமைந்துள்ள குறைவான உற்பத்தி நிலையை மாற்றி, அறிவியல் முறைகளின் அடிப்படையில் உற்பத்தியை அதிகரிப்பது;

3. கிராம குடும்பங்கள் நாணயமானவைகளாக மாற்றப்பட்டு, கூட்டுறவுக் கொள்கையை விரிவாகப் பரப்புவது;

4. நன்மையைத் தரும் வகையில் சமுதாய முயற்சிகளால் குளங்கள், கிணறுகள், சாலைகள், கல்விச்சாலைகள், மருத்துவமனைகள், குழந்தைகளின் பூங்காக்கள், பொழுதுபோக்கு வசதிகள் ஆகியவற்றை ஏற்படுத்துவது போன்றவைகளாகும்.

இந்தியாவின் சமுதாய வளர்ச்சித்திட்டம் பற்றி ஐக்கிய நாடுகளின் அறிக்கை குறிப்பிடுவதாவது "சமுதாய வளர்ச்சித்திட்டம், தேசிய விரிவாக்கப்பணி ஆகியவற்றின் நோக்கம் கிராம மக்களுக்குப் போதுமான உணவு, உடை, இடம், ஆரோக்கிய வசதிகள் ஆகியவற்றை அளிப்பது மட்டுமல்ல. இதைவிட முக்கியமானது கிராம மக்களின் நோக்கங்களை மாற்றுவதாகும். அவர்களின் திறமை நன்கு பயன்படுத்தப்பட்டு, வாழ்வில் முன்னேற வேண்டுமென்ற ஆர்வத்தைப் பெறுமாறு அவர்கள் மாற்றப்பட வேண்டும். நிறைவான வாழ்வைப்பெற அதிகச் செல்வத்தையும், வருவாயையும் பெறும் எண்ணத்தோடு அவர்கள் செயல்படுமாறு செய்ய வேண்டும். இதன்மூலம் மக்கள் தங்களுடைய நிலையைத் தாங்களே உயர்த்திக்கொள்ள முடியும்."

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் இந்தியாவில் அதிக வீதத்தில் அமைந்துள்ள கிராம மக்கட்தொகைப் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடையவேண்டும்; சமுதாய மாற்றங்கள் அவர்களிடம் தோன்றவேண்டும்; கல்வியறிவைப் பெற்றவர்களாக அவர்கள் திகழவேண்டும் என்பவைகளேயாகும். சமுதாய நலத்

திலும், தனியார் நலத்திலும் அக்கறை கொண்டதாக இத்திட்டம் அமைந்திருக்கின்றது.

இந்தியா விடுதலையடைந்தவுடன் உணவுப் பற்றுக்குறையை நீக்க அரசு விரும்பியது. அதற்காக 1949ஆம் ஆண்டில் 'உணவு உற்பத்திப் பெருக்கத் திட்டத்தைக்' (Grow More Food Campaign) கைக்கொண்டது. ஆனால் இத்திட்டம் உணவுத் தானியங்களின் உற்பத்தியைப் பெருக்குவதில் வெற்றிபெறவில்லை. வெற்றி பெறுமைக்கான காரணங்களை ஆராய திரு. வி. டி. கிருஷ்ண மாச்சாரி தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அக்குழு வேளாண்மை வளர்ச்சிக்கு தேசிய விரிவாக்கத் திட்டத்தை மேற் கொள்ள வேண்டுமெனப் பரிந்துரைத்தது. வேளாண்மையை உயர்த்தவேண்டுமானால், வேளாண்மையைச் சார்ந்துள்ளவர்களின் நிலையை உயர்த்த வேண்டுமென அது உணர்த்தியது. கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதின்மூலமே வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்க முடியும் என அக்குழு கருத்துத் தெரிவித்தது. கிராமங்களின் எல்லா வசதிகளும் செய்து தரப்படுவதின் மூலமே விவசாயிகள் ஊக்கத்தோடு வேளாண்மை உற்பத்தியில் ஈடுபடுவார்கள் என்றும் அது கூறியது. இக்காரணங் களால் சமுதாய வளர்ச்சித் திட்டமானது உருவாக்கப்பட்டது.

கிராம மக்களின் வாழ்வோடு தொடர்புடைய எல்லாத்துறை களிலும் வளர்ச்சி பெறுவதைச் சமுதாய வளர்ச்சித் திட்டம் நோக்க மாகக் கொண்டிருக்கிறது. தனி மனிதனின் நம்பிக்கையை வளர்க்கவும், சமுதாய உணர்வை உருவாக்கவும், கிராமங்களை அடிப்படைத் தேவைகளில் தன்னிறைவு பெறச்செய்யவும், மக்களிடம் கூட்டுறவு மனப்பான்மையை வளர்க்கவும் திட்டத்தின் மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. சமுதாயக் கல்வியின் மூலம் மக்களின் நோக்கத்தையும், கண்ணோட்டத்தையும் மாற்றி சமுதாய மேம்பாட்டைப் பெறக் கருதப்பட்டது. கிராம மக்களின் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ள "பசி, நோய், அறியாமை" ஆகியவற்றை ஒழிப்பதும் திட்டத்தின் நோக்கமாக உள்ளது.

சமுதாய வளர்ச்சித் திட்டம்

இத்திட்டம் 1952ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இரண்டாம் நாள் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் 390 முதல் 520 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் உள்ள சுமார் 100 கிராமங்கள் பல வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டன. மக்கட்தொகை இப்பகுதிகளில் சுமார் 60 முதல் 70 ஆயிரமாக அமைந்திருக்கும். மத்திய அரசு இதை ஒரு தேசியத் திட்டமாகச் செயல்படுத்துகின்றது. முதல்

ஐந்தாண்டுத் திட்டத்திலேயே திட்டக்குழு கிராம வாழ்வை வளப் படுத்த வேண்டுமென்பதை வலியுறுத்தியது. 1952ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் நாடுமுழுதும் தொடங்கப்பட்டது. இத் திட்டத்தின்மூலம் 55 சமுதாய அமைப்புகள் (Community Projects) உருவாக்கப்பட்டன. முதலில் இத்திட்டத்தினல் 164 இலட்சம் மக்கள் பயனடைந்தார்கள்.

1958ஆம் ஆண்டிற்குமுன் இத்திட்டம் மூன்று வெவ்வேறு நிலைகளில் நிறைவேற்றப்பெற்றது. தொடக்கத்தில் மூன்ருண்டு களுக்கு தேசிய விரிவாக்கப் பணிகளின் கீழ் ஒவ்வொரு வட்டாரமும் அமைந்திருக்கும். இதைத் தொடர்ந்து மேலும் மூன்ருண்டுகளுக்கு தீவிர முன்னேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இறுதியாக, மூன்ருவது நிலையில் வட்டாரங்கள் வளர்ச்சியடைந்த நிலையை அடைகின்றன. ஏப்ரல் 1958 முதல் மற்ருெரு புதிய முறை யானது பின்பற்றப்பட்டு வருகின்றது. பல்வந்தராய் மேத்தா தலைமையில் அமைக்கப்பட்ட குழு (Balwantrai Mehta Committee) இரண்டு நிலைகளைக் கொண்ட முறையைப் பரிந்துரைத்தது. தற்பொழுது முதல் நிலையில் ஐந்தாண்டுகளுக்கு வட்டாரங்கள் வளர்ச்சியைப் பெறுகின்றன. இரண்டாவது நிலையிலும் ஐந்தாண்டுக் காலத்திற்கு வளர்ச்சியானது வட்டாரங்களில் செய்யப்படுகின்றது. ஆனல் இரண்டாவது நிலையில் உள்ள ஐந்தாண்டுகளில் அரசு குறைந்த நிதி உதவியை மட்டுமே அளிக்கும். சமுதாய வளர்ச்சித் திட்டமானது தொடங்கப் படுவதற்குமுன், ஒவ்வொரு வட்டாரமும் ஓராண்டு காலத்திற்கு வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டத்தில் மட்டுமே ஈடுபடவேண்டும். திட்டமிட்டுப் பொருளாதார வளர்ச்சி யைப் பெறுவதில் சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முக்கிய நிலையைக் கொண்டுள்ளன.

சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் இயல்புகள்

சமுதாய வளர்ச்சித் திட்டங்களின் முக்கிய இயல்புகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம் : அவை,

(i) அறிவியல் முறைகளை வேளாண்மையில் புகுத்தி வேலை வாய்ப்புகளையும், உற்பத்தியையும் பெருக்குவது; கால்நடைப் பராமரிப்பு, மீன் பிடிக்கும் தொழில், தோட்டத் தொழில் ஆகிய வற்றையும் விஞ்ஞான அடிப்படையில் வளர்ப்பது; சிறு உப தொழில்களையும், குடிசைத் தொழில்களையும் ஏற்படுத்துவது;

(ii) மக்களிடையே கூட்டுறவு முயற்சியை வளர்ப்பது; ஒவ்வொரு கிராமத்திலும் அல்லது சில கிராமங்கள் இணைந்து பல

நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை (Multi-purpose Co-operative Society) அமைப்பது; கிராமங்களின் ஒவ்வொரு வேளாண்மைக் குடும்பத்தையும் இதோடு தொடர்பு படுத்துவது;

(iii) சமுதாயத்தின் பொது நன்மைக்கான நிர்மாணப் பணிகளை முயற்சியோடு மேற்கொள்வது (உதாரணமாக கிராமச் சாலைகள், குளங்கள், பள்ளிகள், மருத்துவ நிலையங்கள் போன்றவற்றை ஏற்படுத்துவது); கிராம மக்களிடையே தீவிர நோக்கத்தைப் பரப்புவது ஆகியவைகளாகும்.

சமுதாய வளர்ச்சித் திட்டம் கீழ்க்கண்டவைகளின் முன்னேற்றத்திற்கு முக்கியத்துவத்தை அளிக்கின்றது.

(1) கிராம மக்களின் உழைப்பைப் பயன்படுத்தும் திட்டம்

வேளாண்மைத் தொழில் ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பை அளிக்கின்ற ஒன்றாக அமைந்திருக்கவில்லை. வேளாண்மையில் பருவகால வேலையின்மை அமைந்திருப்பதோடு, 'மறைந்துள்ள வேலையின்மையும்' உள்ளது. சமுதாய வளர்ச்சித் திட்டம் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளவர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகளைத் தருகின்றது. குறிப்பாக நிலமற்ற விவசாயிகளின் பருவகால வேலையின்மையை நீக்க இத்திட்டம் உதவுகிறது. இத்திட்டத்தின் மூலம் சிறிய நீர்ப்பாசன வசதிகள், நிலப்பாதுகாப்பு, காடுகளை அழித்தல், வெள்ளத்தடுப்பு, புதிய நிலங்களைச் சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளுதல், கிராமங்களுக்கிடையே சாலைகளை அமைத்தல் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன. இந்தியாவில் மொத்த மக்கட் தொகையில் சுமார் 70 சதவீதத்தினர் வேளாண்மையை நம்பி வாழ்கின்றனர். இவர்களின் உழைப்பு முற்றிலுமாக ஆக்கப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டால்தான் நாட்டின் மொத்த உற்பத்தி அதிகரிக்கும். உழைப்பை நன்கு பயன்படுத்த வேலை வேலைவாய்ப்புகள் தேவைப் படுகின்றன. அவ்வேலை வாய்ப்புகளை அளிப்பதாக சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் அமைந்துள்ளன.

(2) கிணறுகள் வெட்டும் திட்டம்

பற்றுக்குறை அமைந்துள்ள கிராமங்களில் குடிநீர் வசதிகளுக்கான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுகின்றன. இதுவரை இத்திட்டம் 'உள்ளூர் முன்னேற்றப் பணிகளின் திட்டம்' (Local Development Works Programme) என அழைக்கப்பட்டு மத்திய அரசால் மேற்கொள்ளப்பட்டது. தற்பொழுது மாநில அரசுகளின் திட்டங்களில் ஒரு அங்கமாக இத்திட்டம் அமைந்துள்ளது. இத்திட்டம் கிராமப்

புறங்களின் வசதிகளுக்கு ஏற்பக் கைக்கொள்ளப்படுகின்றது. இவ்விதமான திட்டங்கள் கிராமங்களில் உள்ள மக்களின் வாழ்க்கை நலனைப் பெருக்குகின்றன. மக்களின் நல்வாழ்வு இவ்விதத் திட்டங்களைச் சார்ந்தே அமைகின்றது.

(3) சத்துள்ள உணவை கிராம மக்கள் பெறுவதற்கான திட்டம்

கிராம மக்களுக்குச் சத்தான உணவின் அவசியத்தை இத் திட்டம் உணர்த்துகின்றது. சத்துள்ள உணவுப் பொருட்களை அவர்கள் உற்பத்திச் செய்யவும், நுகரவும் நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றன. பழங்கள், காய்கறிகள், மீன், முட்டை, மாமிசம் போன்றவற்றை மக்கள் உணவில் சேர்த்துக்கொள்ளத் தூண்டப்படு கின்றனர். இத்திட்டமானது F.A.O., W.H.O., U.N.I.C.E.F., ஆகிய பன்னாட்டு நிறுவனங்களின் உதவியோடு செயல்படுத்தப் படுகின்றது. சத்துள்ள உணவை அளிக்கும் திட்டத்திற்கு இந் நிறுவனங்கள் உதவியளிக்கின்றன. இத்திட்டத்தில் குடிநீர் வசதியை அளிப்பதும் முக்கியமானதாக அமைந்திருக்கிறது. இந்திய உழைப்பாளர்களின் திறமை குறைவிற்கும், உற்பத்தித் திறன் குறைவிற்கும் சத்துள்ள உணவுப் பொருட்கள் நுகரப் படாமையே காரணமாகும். இக்குறையை நீக்க பன்னாட்டு நிறுவனங்களின் உதவி பெறப்பட்டு, சமுதாய வளர்ச்சித் திட்டங் களின்மூலம் அளிக்கப்படுகின்றன. ஊட்டம் தரும் கலப்புணவை மக்கள் பெற வளர்ச்சித் திட்டங்கள் உதவுகின்றன.

(4) வேளாண்மை உற்பத்தியும், சிறிய நீர்ப்பசனத் திட்டங்களும்

சமுதாய வளர்ச்சித் திட்டத்தில் வேளாண்மை உற்பத்திக் காகத் திட்டமிடுதல் முக்கிய நிலையைக் கொண்டுள்ளது. பஞ்சாயத்துராஜ் போன்ற அமைப்புக்களிடம் இப்பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பஞ்சாயத்துராஜ் சட்டங்கள் இயற்றப் பட்டுள்ள மாநிலங்களில் இம்முறையானது அமைந்திருக்கின்றது. வேளாண்மை முன்னேற்றப் பணிகளோடு வேறு சில பணிகளையும் அவை மேற்கொள்கின்றன. தோட்டக்கலை, பழங்கள் காய்கறிகள் ஆகியவற்றைச் சிறப்பான முறைகளில் பயிரிடுதல், பயிர்ப் பாதுகாப்பு முறைகளைப் பரப்புதல், பரிசோதனைமுறைப் பண்ணைகளை அமைத்தல், பண்ணை நிர்வாகத்தில் சிறந்த முன்னேற்ற முறை களைப் பின்பற்றுதல், கூட்டுறவு விற்பனை முறையை முன்னேற்ற மடையச் செய்தல் ஆகிய பணிகளையும் அவை நிறைவேற்று கின்றன. புதிய கொள்கையின்படி தெரிந்தெடுக்கப்பட்ட வசதிகள் மிக்க பகுதிகளில் வேளாண்மை முன்னேற்றத்திற்கான தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இப்பகுதிகளில் அதிக

அளவு முதலீடுகள் செய்யப்படுகின்றன. நிதி வசதிகளும், நிறுவன வசதிகளும் இப்பகுதிகளுக்கு அளிக்கப்பெறுகின்றன. இத்திட்டத்தின்கீழ், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவது அதிக முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க புதிய கருவிகள், நல்விதைகள், இரசாயன உரங்கள் ஆகியவை அளிக்கப்படுகின்றன. இந்தியாவில் சமுதாய வளர்ச்சித் திட்டங்களால் வேளாண்மை உற்பத்திப் பெரிதும் உயர்ந்துள்ளது.

(5) பிற திட்டங்கள்

சமுதாய வளர்ச்சித் திட்டத்தில் கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள், சுகாதாரத் திட்டங்கள், குடும்பநலத் திட்டங்கள் ஆகியவைகளின் முன்னேற்றமும் அடங்குவதாகும். 'சமுதாயப் பெண்கள் கல்வித் திட்டம்' பெண்களைச் சமுதாயப் பணிகளில் ஈடுபடத் தூண்டுகின்றது. பொதுவான சமுதாயக் கல்வியானது கிராம வாசிகளை வெளியுலகோடு தொடர்புகொள்ளச் செய்கின்றது. அவர்களின் பழமையான எண்ணங்களும், நடவடிக்கைகளும் இதனால் மாறுதல்களை அடைகின்றன. வளர்ச்சிக் குன்றிய கிராமத் தொழில்களும், சிறு தொழில்களும் திரும்பவும் வளர்க்கப்படுகின்றன. கோழி வளர்ப்பு, கால்நடைப் பராமரிப்பு ஆகியவற்றில் ஆராய்ச்சிகளைச் செய்யும் 'கேந்திரக் கிராமத்திட்டம்' (Key Village Scheme) போன்றவையும் அமைந்துள்ளன. இதன்மூலம் தரமான கால்நடைகளைப்பெற முடிகின்றது.

சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் நிர்வாக முறை

சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் நிர்வாகம் மத்திய அரசு, மாநில அரசுகள், மாவட்டங்கள், வட்டாரங்கள் ஆகியவற்றின் நிலைகளில், வெவ்வேறு வகைகளில் அமைந்திருக்கின்றது.

மத்திய அரசின் நிலையில் உணவு, வேளாண்மை, சமுதாய வளர்ச்சி, கூட்டுறவு அமைச்சகம் இத்திட்டத்தை நிறைவேற்றும் முழுப்பொறுப்பையும் கொண்டுள்ளது. அடிப்படைக் கொள்கைகள் 'மத்தியக் குழுவினால்' ஆராயப்படுகின்றன. அதிக அதிகாரங்களைக் கொண்ட இந்த மத்தியக்குழு பிரதம மந்திரியின் தலைமையில் இயங்குவதாகும். இக்குழுவில் திட்டக்குழு உறுப்பினர்களும், மந்திரிசபை உறுப்பினர்களும் உள்ளனர். தனித்தனியே அமைக்கப்பெற்ற குழுக்களின்மூலம் பிற மந்திரிசபைகளோடும் தொடர்பு கொள்ளப்படுகின்றது. சமுதாய வளர்ச்சித் திட்டங்களின் அதிகாரியால் தொடர்புகொள்ளும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மாநிலங்களின் நிலையில், ஒவ்வொரு மாநிலத்திலும் முதலமைச்சரின் தலைமையில் 'மாநில வளர்ச்சிக் குழு' (State Development Committee) செயல்படுகின்றது. முன்னேற்றத் துறைகளின் மந்திரிகளும் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர். மாநிலங்களில் வளர்ச்சிப் பணிகளைக் கண்காணிப்பவராக 'வளர்ச்சி ஆணையாளர்' (Development Commissioner) அமைந்துள்ளார். மாவட்ட ஆட்சித் துறைத் தலைவரின் கீழ் மாவட்ட அளவில் 'மாவட்டத் திட்ட வளர்ச்சிக்குழு' (District Planning and Development Committee) செயல்படுகின்றது. இதற்குக் கீழ் வட்டார நிலையில்' 'வட்டார வளர்ச்சி அலுவலர்'(Block Development Officer) அமைந்துள்ளார். வட்டார வளர்ச்சி அலுவலரின் கீழ் 'விரிவாக்க அலுவலர்கள்' Extension Officers) பணியாற்றுகின்றனர். கிராமங்களின் நிலையில் கிராம சேவக்குகளும், கிராம சேவிகைகளும் செயல்படுகின்றனர். ஒவ்வொரு கிராம சேவக்கும் (Gram Sevak) பத்து கிராமங்களில் பணியாற்றுகின்றனர்.

கிராம, வட்டார நிலைகளில் விரிவாக்க அமைப்புகள் இரு வகைகளில் உதவுகின்றன. கிராம மக்களுக்குப் பரந்த அறிவையும், பயனையும் இவை அளிக்கின்றன. கிராம மக்களுக்குப் பயனளிக்கக் கூடிய ஆராய்ச்சிகளும் கைக்கொள்ளப்படுகின்றன. இரண்டாவதாக கிராம மக்களின் சிக்கல்களுக்கான தீர்வுகள் ஆராய்ச்சி அமைப்புகளால் காணப்படுகின்றன. சிறப்பான ஆய்வுகளால் கிராம மக்களின் சிக்கல்கள் தீர்க்கப்படுகின்றன. மக்களின் நல்வாழ்விற்காகக் கூட்டுறவுப்பண்ணை முறைகளும், வேறு வகைக் கூட்டுறவுச் சங்கங்களும் அமைக்கப்பெறுகின்றன.

வளர்ச்சித் திட்டத்திற்கான நிதி

சமுதாய வளர்ச்சித் திட்டத்திற்கான நிதி வசதிகள் அரசிடமிருந்தும், மக்களிடமிருந்தும் பெறப்படுகின்றன. ஒவ்வொரு வட்டாரத்தின் நிலையில், முன்னேற்றத் திட்டங்களுக்காக மக்கள் தாங்களே பணம், பொருள், உழைப்பு ஆகியவற்றைத் தர முன் வரலாம். திட்டங்களை நிறைவேற்ற அரசின் உதவியானது தரப் பெற்றால், செலவுகள் மத்திய அரசாலும் மாநில அரசுகளாலும் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. திரும்பப் பெறத்தக்க முதலீடுகளாக இருந்தால் மத்திய அரசும், மாநில அரசும் சமமான நிதி உதவியைத் தருகின்றன. திரும்பப் பெறமுடியாத முதலீடுகளில் 3: 1 என்ற வீதத்தில் மத்திய அரசும், மாநில அரசும் செலவைப் பகிர்ந்து கொள்கின்றன. நீர்ப்பாசனம், புதிதாக நிலத்தைச் சாகுபடிக்கு எடுத்துக்கொள்ளுதல் போன்ற ஆக்கப் பணிகளுக்கு மத்திய அரசு மாநில அரசுகளுக்குக் கடன் வழங்குகின்றது.

வட்டார வளர்ச்சிக்காக மாநில அரசுகள் ஊழியர்களை நியமிக்கிறது. அதற்கான செலவில் பாதியை மத்திய அரசு ஏற்கின்றது.

சமுதாய வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற மத்திய அரசு மான்யங்களைத் தருகின்றது. மக்கள் தங்கள் வட்டாரத்தின் வளர்ச்சிக்காகப் பணம், பொருட்கள், உழைப்பு ஆகியவற்றை அளிக்கலாம். தனிப்பட்டவர்களின் ஆக்கப்பணிகளுக்காகக் கடன்களும், மான்யங்களும் அளிக்கப்படுகின்றன. பல்வந்தராய் மேத்தா தலைமையில், சமுதாய வளர்ச்சித் திட்டத்தை ஆய்வதற்காக அமைக்கப்பட்டக் குழு தன்னுடைய பரிந்துரையில் சமுதாய வளர்ச்சிக்கான அரசின் நிதி உதவி படிப்படியாகக் குறைக்க வேண்டுமெனக் கருத்துத் தெரிவித்தது. அதற்கேற்ப ஒவ்வொரு வட்டாரத்திற்கும் தரப்படுகின்ற நிதியின் அளவு குறைக்கப்பட்டு வருகின்றது. இறுதியில் அரசின் நிதி உதவியின்றி மக்களே இத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டுமென்பது நோக்கமாக உள்ளது.

ஐந்தாண்டுத் திட்டங்கள் வளர்ச்சிப் பணிகளுக்கான செலவுகள்

சமுதாய வளர்ச்சிக்காக ரூ. 90 கோடியும், தேசிய விரிவாக்கப் பணிகளுக்காக ரூ. 3 கோடியும் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பெற்றது; வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள ஒவ்வொரு சமுதாய அமைப்பும் மூன்று வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு வட்டாரத்திலும் 60,000 முதல் 70,000 வரை மக்கள் தொகையைக் கொண்ட சுமார் 100 கிராமங்கள் அடங்கியிருந்தன. ஒவ்வொரு வட்டாரமும் 5 முதல் 10 சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியின் முன்னேற்றத்திற்கும் ஒரு கிராம சேவக்கை நியமித்தனர்.

முதல் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் 248 சமுதாய வளர்ச்சி வட்டாரங்கள் செயல்பட்டன. சமுதாய வளாச்சித் திட்டம் 21 சதவீத மக்கட்தொகை உள்ளடக்கியதாக இருந்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக்குள் 3,000 வளர்ச்சி வட்டாரங்கள் ஏற்படுத்தப்பெற்றன. 70 சதவீத மக்கட் தொகை இத்திட்டத்தோடு தொடர்புகொள்ள வேண்டுமென அரசு கருதியது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் சமுதாய வளர்ச்சித்திட்டம் நாடு முழுதும் கொண்டுவரப்பட்டது.

இத்திட்டத்தின் பணிகளை மதிப்பிடவும், ஆலோசனைகள் கூறவும் அரசு சில குழுக்களை அமைத்தது. அவற்றுள் 1957ஆம் ஆண்டில் திரு. பல்வந்தராய் மேத்தா தலைமையில் அமைக்கப்

பெற்றக் குழு சிறப்பான நிலையைக் கொண்டுள்ளது. வளர்ச்சிப் பணிகளை கிராம, வட்டார, மாவட்ட நிலைகளில் உள்ள அமைப்புக் களிடமே விட்டுவிட வேண்டுமென அக்குழு பரிந்துரைத்தது. பஞ்சாயத்து ராஜ்யத்தைப் 'பரவலான ஜனநாயகமாக' (Democratic Decentralisation) ஏற்படுத்த வேண்டுமென அது கருத்துத் தெரிவித்தது. அக்குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. அதற்கேற்ப கிராம அளவில் பஞ்சாயத்துக் களும், வட்டார அளவில் 'பஞ்சாயத்து ஒன்றியங்களும்', மாவட்ட அளவில் 'மாவட்ட வளர்ச்சிக் குழுவும்' அமைக்கப்பெற்றன.

முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் சமுதாய வளர்ச்சித் திட்டங்களுக்காக ரூ. 233·1 கோடி செலவிடப்பட்டது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், சமுதாய வளர்ச்சிக்காக ரூ. 287·7 கோடியும், பஞ்சாயத்துகளுக்காக ரூ. 28·2 கோடியும், வட்டார அளவில் மத்திய அரசின் திட்டங்களுக்காக ரூ. 28·2 கோடியும் ஒதுக்கப்பட்டது. எனவே சமுதாய வளர்ச்சிப் பணிக்காக மூன்றாவது திட்டத்தில் ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ரூ. 321·9 கோடியாகும். ஆனால் இத் திட்டக்காலத்தில் செலவிடப்பட்டது ரூ. 269·1 கோடி மட்டுமேயாகும்.

வளர்ச்சித் திட்டத்தின் சாதனைகள்

சமுதாய வளர்ச்சித் திட்டம் கிராம மக்களின் தனியார் நலத்திற்காகவும், கூட்டு நலத்திற்காகவும் கைக்கொள்ளப்பட்டது. 1952ஆம் ஆண்டு அக்டோபர் இரண்டாம் நாள் தொடங்கப்பட்ட இத்திட்டம் பல சாதனைகளைப் புரிந்துள்ளது. தற்பொழுது ஏற்பட்டுள்ள 'பசுமைப் புரட்சிக்கு' சமுதாய வளர்ச்சித் திட்டம் காரணமாகிறது.

வேளாண்மை மக்கட்தொகை பொறுக்கு விதைகளை பெருமள விற்கு பயன்படுத்தத் தொடங்கியுள்ளது. இரசாயன உரங்களை விவசாயிகள் உயர்வான அளவிற்குப் பயன்படுத்துகின்றனர். இரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகள், முன்னேற்றமடைந்த கருவிகள், பசுந்தாள் உரம் ஆகியவற்றையும் அவர்கள் அறிந்து உபயோகிக்கின்றனர். பரிசோதனை முறையில் வேளாண்மைச் சாகுபடிகள் செய்யப்படுகின்றன. நிலத்தின் முன்னேற்றத்திற்காக நீர்ப்பாசன வசதிகள் பெருக்கப்பட்டுள்ளன. பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களோடு, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களும் வளர்ந் துள்ளன. சாகுபடிக்கு ஏற்ற நிலங்கள் உற்பத்திக்குச் சிறப்பான முறைகளில் பயன்படுத்தப்படுகின்றன. புதிதாக நிலங்கள் சாகு

படிக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றன. சில இடங்களில் சாகுபடிக்கு ஏற்றதாக மாற்ற நிலங்கள் சமப்படுத்தப்பட்டன.

கால்நடைப் பராமரிப்பும் சமுதாய வளர்ச்சித் திட்டங்களால் சிறப்பாக வளர்ந்துள்ளது. இத்திட்டங்களின்மூலம் நல்லினக் கால்நடைகள் நாடு முழுதும் பரப்பப்பட்டன. அரசு இக் கால் நடைகளை அளித்தது. நல்லினக் கால்நடைகள் விருத்தி யடையவும் நடவடிக்கைகள் எடுக்கப்பெற்றன. கோழி வளர்ப் பிற்கும் பல வசதிகள் செய்துதரப்பட்டன. கால்நடைகளின் பெருக்கத்திற்கு செயற்கை முறையில் கருத்தரிக்கும் முறைகள் பின்பற்றப்பட்டன. கிராமங்களில் சுகாதார, ஆரோக்கிய நடவடிக் கைகள் எடுக்கப்பட்டன. குடிநீர்க் கிணறுகள் புதுப்பிக்கப் பட்டன. கிராமங்களில் சாலை வசதிகள் பெருக்கப்பெற்றன. சாக்கடைத் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டன. சமுதாயக் கல்விக்காக பல வசதிகளும் செய்யப்பட்டன. வயது வந்தவர்கள் கல்வியறிவைப்பெற வசதிகள் அளிக்கப்பட்டன. கிராமங்களில் இதனுல் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் தொகை உயர்ந்தது. கிராமங்களில் கல்வியறிவைப் பரப்புவதற்கும் பலருக்குப் பயிற்சி தரப்பட்டது.

சமுதாய வளர்ச்சித் திட்டங்களால் கிராமப் புறங்களில் செய்தித் தொடர்பு வசதிகளும் பெருகின. புதிய சாலைகள் அமைக்கப்பட்டமை செய்தித் தொடர்பிற்கு உதவியது. முன்னமேயே சில சாலைகள் புதுப்பிக்கப்பட்டன. வாய்க்கால் களுக்குக் குறுக்கே சாலைகளை இணைக்கப் பாலங்கள் கட்டப் பெற்றன. கிராமத் தொழில்களும், சிறு தொழில்களும் வளர்க்கப் பட்டன. இத்தொழில்களில் புதிய கருவிகளும், முன்னேற்றமான உற்பத்தி முறைகளும் பயன்படுத்தப்பட்டன. இதன்மூலம் பல வகைப்பட்ட நுகர்ப்பொருட்களும் கிராமங்களில் உற்பத்திச் செய்யப் பட்டதால் கிராம மக்களின் வருவாயில் உயர்வு ஏற்பட்டது. ஓரளவு நல்வாழ்வை ஒரு சிலருக்காவது சிறு தொழில்களும், குடிசைத் தொழில்களும் அளித்தன எனலாம். புதிய கருவிகள் இத்தொழில் களில் பயன்படுத்தியமையால் தரமான உற்பத்தி அமைந்தது. உற்பத்தியின் அளவும் உயர்வடைந்ததோடு, உற்பத்திச் செலவும் குறைவடைந்தது.

இவை எல்லாவற்றிலும் வேளாண்மையில் இரசாயன உரங் களைப் பயன்படுத்தும் அளவு உயர்வடைந்துள்ளது. தொழில் நுட்பக் கருவிகள், நல்லினக் காளைகள் ஆகியவற்றை அளித்தலில் சிறப்பான முன்னேற்றம் ஏற்படவில்லை. அடிப்படைக் கல்விக் கான பள்ளிக்கூடங்களை ஏற்படுத்துவதிலும், வீட்டுத் தோட்

டங்களை அமைத்தலிலும், புதிய கூட்டுறவுச் சங்கங்களைத் தோற்று விப்பதிலும், குடிநீர் வசதிக்காகக் கிணறுகள் வெட்டுவதிலும் விரைவான வளர்ச்சி ஏற்படவில்லை.

சமுதாய வளர்ச்சித் திட்டங்களின் மெதுவான முன்னேற்றத்திற்கான காரணங்கள்

கிராமப்புறங்களின் வளர்ச்சி தானே ஏற்படக்கூடிய ஒன்றல்ல. கிராமங்களின் முன்னேற்றத்திற்காகவே சமுதாய வளர்ச்சித் திட்டம் கைக்கொள்ளப்பட்டது. அரசாங்கத்தால் புகுத்தப்பட்ட இத்திட்டத்தின் வெற்றி கிராம மக்களைச் சார்ந்தே அமையும். கிராம மக்களின் ஒத்துழைப்பின்றி சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் நன்மைகளைப்பெற இயலாது.

சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் பின்வரும் குறைபாடுகளால் சிறப்பாகச் செயலாற்ற முடியவில்லை :

(1) மக்களுடைய அக்கறையின்மை இத்திட்டங்களின் வளர்ச்சியைத் தொடக்க நிலையில் பாதித்தது. தற்பொழுது இந் நிலையில் ஓரளவு மாறுதல் ஏற்பட்டுள்ளது என்றாலும், இத்திட்டங் களில் கிராம மக்கள் முழு மனதோடு பங்கு கொள்வதில்லை. இதற்குக் காரணமாக இருப்பவை கல்வியறிவு பரவாமை, குறைந்த வருவாய், கடன் நிலை, குறைந்த உற்பத்தி, திட்டங்களால் விளையக் கூடிய நன்மைகளை உணராமை போன்றவைகளாகும். சமுதாய மாற்றங்கள் தோன்ற வேண்டுமெனச் சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. ஆனால் மாற்றங்கள் மிகக் குறைவான வேகத்திலேயே ஏற்பட்டு வருகின்றன.

(2) பஞ்சாயத்துகளும், பிற அமைப்புக்களும் கிராம மக்களுக்குக் கணிசமான அளவு உதவியை வழங்க முடியவில்லை. இன்றும்கூட எல்லா இடங்களிலும் பஞ்சாயத்துகள் அமைந் திருக்கவில்லை. பஞ்சாயத்துகள் அமைந்துள்ள இடங்களிலும், பலவிதமான எதிர்ப்புச் சக்திகள் பஞ்சாயத்துகளுக்கு எதிராக உள்ளன. கூட்டுறவுச் சங்கங்கள் பல நன்மைகளையும் அளிக்கக் கூடியவை. கிராம வளர்ச்சித் திட்டங்களுக்குக் கூட்டுறவு அமைப்புகள் உதவுவதில் சில இடர்ப்பாடுகள் அமைந்துள்ளன. கூட்டுறவு முறைகள் பெரும்பாலும் நகர்ப்புறங்களில்தான் வெற்றியைப் பெற்றிருக்கின்றன. இந்தியாவில் பெரிய நகரங் களிலும் சிறிய நகரங்களிலும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பான வெற்றியைப் பெற்று வருகின்றன. அதற்கு அடிப்படைக் காரணம் நகர மக்கள் கல்வியறிவு பெற்றவர்களாக இருப்பதே

யாகும். கூட்டுறவின் நன்மைகளை உணர்ந்தவர்களாக அவர்கள் உள்ளனர். கிராம மக்கள் கூட்டுறவின் நன்மைகளை நன்கு உணர்ந்திருப்பதில்லை.

(3) சமுதாய வளர்ச்சித் திட்டமென்பது பல சிறிய கிராமத் திட்டங்களும் இணைந்த ஒன்றாகும். சிறப்பாகத் திட்டமிடாமையும் குறைந்தவேக வளர்ச்சிக்குக் காரணமாகிறது. இத் திட்டங்களுக்கான நிதி வசதிகள் போதுமானதாக இருந்தும், திட்டங்களை நிறைவேற்றும்போது தேவையான நிதி உடனடியாகக் கிடைக்கப்பெறுவதில்லை. இதனால் திட்டங்களின் முன்னேற்ற நடவடிக்கைகளை விரைவாக எடுக்க முடிவதில்லை. சிறப்பாகக் கிராமத்தின் பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கும் திட்டமிட்டுக் குறிப்பிட்ட காலத்தில் நிதி வசதியை அளிப்பது இன்றியமையாததாகும். இதன் மூலமே கிராம வளர்ச்சித் திட்டங்கள் வெற்றியைப் பெறமுடியும்.

(4) பயிற்சி பெற்ற பணியாளர்களும், ஊழியர்களும் போது மான அளவிற்குத் திட்டங்களை நிறைவேற்றுவதில் பயன்படுத்தப் படுவதில்லை. ஆனால் இக்குறையை நீக்க ‘சமுதாய வளர்ச்சியின் தேசிய நிறுவனம்’ (National Institute of Community Development) திட்டங்களை நிறைவேற்றும் ஊழியர்களுக்கான பயிற்சியை அளித்து வருகின்றது. சமுதாய வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றும் ஊழியர்களின் நேர்மையற்ற நிலையும் மாற்றப்படவேண்டும். அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களுக்கான மூலதனம் முழுவதும் முற்றிலுமாகச் செலவிடப்படுவதில்லை. இக்குறைகளைக் களைவதின் மூலம் சமுதாய வளர்ச்சித் திட்டங்களின் எல்லா நன்மைகளையும் கிராம மக்கள் பெறலாம். விரைவான பொருளாதார வளர்ச்சியை அடையவும் சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் பெரிதும் உதவும் எனலாம்.

ஐக்கிய நாடுகளின் மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை (U. N. Evaluation Team's Report)

1959-ல் ஐக்கிய நாடுகளின் குழு இந்தியாவிற்கு வந்து, சமுதாய வளர்ச்சித் திட்டத்தைப்பற்றி மதிப்பீடு செய்தது. அக்குழு இருபதாம் நூற்றாண்டின் இப்பரிசோதனை முறைத்திட்டம் வேளாண்மை வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுமெனக் கருத்துத் தெரிவித்தது. இத்திட்டத்தின் விளைவுகளை அறிய உலக நாடுகள் பலவும் ஆர்வத்தோடு அறிய விரும்புகின்றன; ஜனநாயக முறையில் இத்திட்டம் சிறப்பாக அமைந்துள்ளது என்றும் அக்குழு

கூறியது. மக்களின் நடவடிக்கைகளும், கண்ணோட்டங்களும் மாற இத்திட்டம் உதவுகின்றது என்பதை அக்குழு ஒப்புக் கொண்டது. மக்களின் பழமை விரும்பும் நிலையும், மூடநம்பிக்கை களும் ஓரளவு மாறியுள்ளன. 'கண்மூடிப் பழக்கங்கள் மண்மூடிப் போக' ஓரளவிற்குச் சமுதாய வளர்ச்சித் திட்டம் உதவியிருக் கின்றது. எனினும் பிறப்பு, இறப்பு, திருமணம் ஆகியவற்றிற்கான மக்களின் செலவுகள் குறையவில்லை. சமீபகாலத்தில் வேளாண்மை உற்பத்தியை உயர்த்த விவசாயிகள் அதிக முதலீட்டைச் செய்து வருகின்றனர். அதிக முதலீட்டைச் செய்வதின் மூலமே அதிக உற்பத்தியைப் பெறமுடியுமென்பதை விவசாயிகள் உணர்ந்து விட்டார்கள்.

இம்மதிப்பீட்டுக்குழு சமுதாய வளர்ச்சித் திட்டத்தில் அமைந் திருக்கும் குறைபாடுகளையும் குறிப்பிட்டது. நிலப்பாதுகாப்பு நடவடிக்கைகள் சிறப்பாக அமையவில்லை. இரண்டு அல்லது மூன்று சாகுபடிகளை மேற்கொள்வதற்குப் போதுமான நீர்ப்பாசன வசதிகள் சில இடங்களில் அமைந்திருந்தும், அவ்வசதிகள் சிறப் பாகப் பயன்படுத்தப்படுவதில்லை. விவசாயிகளைக் கல்வியறிவைப் பெறச்செய்யும் நடவடிக்கைகள் மிகக் குறைந்த அளவிற்கே எடுக்கப்பட்டுள்ளன. அரசின் கொடைகளை அளிக்கும் முறையும் தவறானது என இக்குழு கருத்துத் தெரிவித்தது.

இக்குழு சமுதாய வளர்ச்சித் திட்டங்களின் முன்னேற்றத்திற் காகச் சில பரிந்துரைகளை அளித்தது. புதிதாகச் சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நிலங்களில் உற்பத்தியின் அளவை உயர்த்தவேண்டுமென மதிப்பீட்டுக் குழு கூறியது. இதற்காகக் கிராம அளவில் வேளாண்மை விரிவாக்கம் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவேண்டும். வேளாண்மைப் பயிர்கள், நீர்ப்பாசனங்கள் ஆகியவற்றை முன்னேற்றமடையச் செய்யும் திறமையாளர்கள் வேலைக்கு அமர்த்தப்படவேண்டும். மாறுபாடு அடைகின்ற நிலைகளுக்கு ஏற்ப இவர்கள் வெவ்வேறு இடங் களுக்குச் செல்லத்தக்கவர்களாக இருத்தல்வேண்டும். விளம்பரங் களின் மூலமும், பிற வழிகளிலும் விவசாயிகளை முன்னேற்றமான சாகுபடி முறைகளைப் பின்பற்றுமாறு தூண்டலாம். நீர்ப்பாசன வசதிகளை முற்றிலும் நன்கு பயன்படுத்துமாறு விவசாயிகளுக்கு வலியுறுத்தவேண்டும். மண்வளப் பாதுகாப்பு அதிக வேளாண்மை உற்பத்தியைப்பெற உதவும். நிலத்தின் உற்பத்தித்திறனை இதன் மூலம் அதிகரிக்க முடியும். எல்லாவற்றையும்விட, இத்திட்டத்தைச் சிறப்பாக வளர்க்க செய்தித் தொடர்பு வசதிகள் பெருக்கப்பட வேண்டும். இவ்வசதியின் மூலம் கிராம அளவில் அமைந்துள்ள

அதிகாரிகள் வட்டார, மாவட்ட, மாநில அளவுகளில் உள்ள அதிகாரிகளோடு எளிதில் தொடர்புகொள்ள முடியும்.

இவ்வாறு ஐக்கிய நாடுகளின் மதிப்பீட்டுக் குழு சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் பயன்களையும், குறைகளையும் குறிப்பிட்டு முன்னேற்றத்திற்கான ஆலோசனைகளையும் வழங்கியது.

ஆய்வுக்குழுவின் அறிக்கை (Survey Team's Report)

டிசம்பர் 1956-ல் திரு. பல்வந்தராய் மேத்தா தலைமையில் 'தேசிய முன்னேற்றக் குழுவால்' (National Development Council) ஆய்வுக்குழுவானது அமைக்கப்பெற்றது. சமுதாய வளர்ச்சித் திட்டத்தை மாற்றியமைக்க அக்குழு பல அரிய ஆலோசனைகளைப் பரிந்துரைத்தது. அவற்றைப் பின்வருமாறு விளக்கலாம்:

1. தேசிய விரிவாக்கப் பணிகள், தீவிரச் சமுதாய வளர்ச்சி, முதுநிலைத் தீவிரச் சமுதாய வளர்ச்சி என்ற மூன்று நிலைகளாக திட்டமுறையைப் பகுப்பது வசதிகளை வீணடித்துவிடும். எனவே வளர்ச்சித்திட்டம் முதல் நிலையில் ஆறு ஆண்டுகளுக்கும், இரண்டாவது நிலையில் ஐந்தாண்டுகளுக்கும் செயல்படுத்தப் பெறவேண்டும்.

2. சமுதாய நலத்திற்கான நடவடிக்கைகளை, மேற்கொள்வது மாற்றப்பட்டு, கிராம மக்களின் வருவாய் உயர்வுக்காகப் பொருளாதார முன்னேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். தற்பொழுது எடுக்கப்படும் நலம்சார் நடவடிக்கைகள் பொருளாதார முன்னேற்ற நடவடிக்கைகளாக மாற்றப்பட வேண்டும்.

3. பலவகைப்பட்ட நடவடிக்கைகளில் முக்கியத்துவம் பின்வரும் முறையில் அமைதல் அவசியமாகும். குடிநீர் வசதி அளித்தல், வேளாண்மை வளர்ச்சியும் கால்நடைப் பராமரிப்பும், கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தல், கிராமத் தொழில்களை ஏற்படுத்துதல், ஆரோக்கியத் திட்டங்கள், பிற நடவடிக்கைகள்.

4. பரவலான ஜனநாயக முறையையும் பஞ்சாயத்து ராஜ்யத்தை ஏற்படுத்துவதின் மூலம் அடைய வேண்டும். அடிப்படை நிலையில் கிராமங்களில் பஞ்சாயத்துகள் அமைந்திருக்க வேண்டும். வட்டார அளவில் 'பஞ்சாயத்து ஒன்றியமும்'(Panchayat Samiti), மாவட்ட அளவில் 'மாவட்ட வளர்ச்சிக் குழுவும்' (Zila Parishad) இருத்தல் வேண்டும். இவையாவும் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் ஒரே சமயத்தில் செயல்பட வேண்டும். கிராம அளவில் அமைந்துள்ள பணியாளர் கிராமப் பஞ்சாயத்தின்

'முன்னேற்றக் காரியதரிசியாக' (Development Secretary) இருக்க வேண்டும்.

5. பஞ்சாயத்துகளின் நிதி வசதிகள் பெருக்கப்பட வேண்டும். நிலவரியின் ஒரு பகுதி பஞ்சாயத்துகளுக்குத் தரப்பட வேண்டும். வேலைகளின் மீதான வரி, வாணிபவரி, பெயர்ச்சியற்றச் சொத்துக்களை மாற்றும்போது விதிக்கப்படும் வரி, குத்தகை வரி, சுங்க வரி, வாகனங்களின் மீதான வரி ஆகியவற்றிலும் குறிப்பிட்ட வீதம் பஞ்சாயத்துகளுக்கு அளிக்கப்பட வேண்டும். வசதிகளைப் பெருக்குவதின் மூலமே கிராமங்களில் வளர்ச்சிப் பணிகளை எளிதில் துவக்கி முடிவடையச் செய்யலாம்.

6. 'திட்ட மதிப்பீட்டு நிறுவனம்' (Programme Evaluation Organisation) சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் சாதனைகளையும், குறைபாடுகளையும் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்கின்றது. இதைப்போன்றே மற்றொரு நிறுவனம் சமுதாய வளர்ச்சித் திட்டம் எவ்வாறு செயல்படுகின்றது என்பதை மூன்றுண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பீடு செய்ய அமைக்கப்பட வேண்டும்.

இந்த ஆய்வுக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த பரிந்துரைகளுக்கு ஏற்ப சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் கைக் கொள்ளப்பட்டன. வளர்ச்சித் திட்டங்களை நன்கு நிறைவேற்ற ஆய்வுக்குழுவின் பரிந்துரைகள் பெரிதும் உதவின.

திட்ட மதிப்பீட்டு நிறுவனத்தின் ஏழாவது மதிப்பீட்டு அறிக்கை (Seventh Evaluation Report of the Programme Evaluation Organisation)

1960ஆம் ஆண்டு 18 தெரிந்தெடுக்கப் பெற்ற வட்டாரங்களில் சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் முக்கிய பிரிவுகளாகிய வேளாண்மை, கால்நடை, விற்பனை முறை, கூட்டுறவு, கிராமத் தொழில்கள், ஆரோக்கியம், கல்வி, சமுதாய முன்னேற்றம், பரவலான ஜனநாயக முறை, மக்களின் நடவடிக்கைகள் பணிகள் ஆகியவை பற்றி மதிப்பீடு செய்யப்பட்டது. இக்கணக்கெடுப்பு சில துறைகளில் வளர்ச்சியடையாத நிலையையும், வேறு சில துறை களில் முன்னேற்றமடைந்த நிலையையும் உணர்த்தியது. வளர்ச்சி நிலையிலும் வட்டாரங்களுக்கிடையே வேறுபாடுகள் அமைந் திருந்தன. பொதுவாக நோக்கும்போது சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் சாதனைகள் சிறப்பான அளவில் அமைந்திருக்கவில்லை. சாதனைகள் குறைந்த அளவில் அமைந்திருந்தன. விரைவான வளர்ச்சிக்குப் போதுமானவைகளாக அச்சாதனைகள் அமைந் திருக்கவில்லை.

1959–60-ல் ஒவ்வொரு வட்டாரத்திலும் நீர்ப்பாசன வசதி 36 சதவீதம் உயர்ந்தது. இருபோகச் சாகுபடி முறையைக் கொண்ட நிலத்தின் அளவு 11 சதவீதம் அதிகரித்தது. நீர்ப்பாசன வசதி களின் பற்றுக்குறையாலும், வேளாண்மைக் கருவிகளின் அளிப்பு போதுமானதாக இல்லாமையாலும், உரங்களின் அளிப்பில் கால தாமதம் ஏற்பட்டமையாலும் முன்னேற்றமான வேளாண்மைச் சாகுபடி முறைகள் குறைவான வேகத்திலேயே பரவின. சமுதாய, ஆரோக்கிய வசதிகளிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்ட தென்றாலும், குடிநீர் வசதிகள் போதுமான அளவில் செய்யப்பட வில்லை. பல்வந்தராய் மேத்தா தலைமையில் அமைக்கப்பட்ட குழு குடிநீர் வசதிக்கு முதல் முக்கியத்துவம் அளிக்க வேண்டுமெனப் பரிந்துரைத்தது. எனினும் குடிநீர் வசதிகள் எல்லா இடங்களிலும் போதுமான அளவில் பெறப்படவில்லை. வேளாண்மை உற்பத்தியின் அளவிலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படவில்லை. முன்னேற்றமடைந்த வேளாண்மைச் சாகுபடி முறைகளைப் பரப்பு வதும் சிறப்பான அளவிற்கு அமைந்திருக்கவில்லை.

டிசம்பர் 1959-ல் தெரிந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் சராசரி 5,000 பேர்களுக்கு ஒரு 'சமுதாய மையமும்' (Community centre), 7,500 பேர்களுக்கு பெண்களுக்கான ஒரு அமைப்பும், 3,300 பேர் களுக்கு ஒரு இளைஞர் சங்கமும் அமைந்திருந்தன. அப்போது அமைந்திருந்த சமுதாயக் கல்வி நிறுவனங்களில் 60 சதவீதம் செயல்படாமலும், திறமையாகச் செயல்படாமலும் இருந்தன. கிராம மக்கள் வயது வந்தவர்களின் கல்வித் திட்டத்தில் அக்கறை கொண்டவர்களாகவே இருந்தனர். ஆனால் இத்திட்டத்தை விரிவாக்குவதில் பல இடர்ப்பாடுகள் அமைந்திருந்தன. அவ்விடர்ப் பாடுகளில் முக்கியமானதாக இருந்தது நிதிப் பற்றுக்குறை ஆகும். திட்டத்தை நிறைவேற்றுவதில் மக்களிடையே கூட்டு முயற்சி யானது அமைந்திருக்கவில்லை.

இவ்வாறு சமுதாய வளர்ச்சித் திட்டத்தைப்பற்றித் திட்ட மதிப்பீட்டு நிறுவனம் தன்னுடைய ஏழாவது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது.

சமுதாய வளர்ச்சித் திட்டம் பற்றிய மதிப்பீடு

பிற நாடுகளில் மேற்கொள்ளப்படாத வகையில் இத்திட்டம் இந்தியாவில் செயல்படுத்தப்படுகின்றது. சமுதாய வளர்ச்சித் திட்டங்களினால் விளைந்த சாதனைகள் பலவாகும். தற்பொழுது விரைவாக வேளாண்மைத்துறை வளர்வதற்கான அடிப்படையை ஏற்படுத்தித் தந்தது வளர்ச்சித் திட்டமேயாகும்.

(1) சமுதாய வளர்ச்சித் திட்டங்களால் வேளாண்மையில் முன்னேற்றமடைந்த சாகுபடி முறைகள் பரவியுள்ளன. நல் விதைகள், பசுமை உரங்கள், இரசாயன உரங்கள், புதுமையான வேளாண்மைக் கருவிகள் ஆகியவை நிலச் சாகுபடியில் பயன் படுத்தப்பெறுகின்றன. சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களினுலும் வேளாண்மை உற்பத்திக் கூடியுள்ளது. புதிதாக நிலங்கள் சாகு படிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. சாகுபடியில் அமைந் துள்ள நிலங்களும் உயர்ந்த உற்பத்தியின் அளவைத் தரும் வகையில் பயன்படுத்தப்படுகின்றன. தற்பொழுது 'பசுமைப் புரட்சி' தோன்றியுள்ளமைக்கு வளர்ச்சித் திட்டம் முக்கியக் காரண மாகின்றது.

(2) விவசாயிகள் இன்று எளிதாகக் கடன் வசதிகளைப் பெற முடிகின்றது. பெறப்பட்டக் கடன்கள் நிலத்தின் நிரந்தர முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றது. வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கான எல்லா வசதிகளும் செய்து தரப் படுகின்றன. விவசாயிகளுக்கு உற்பத்தியை உயர்ந்த மனமிருந்தால், அதற்கான வசதிகளைப் பெறவும் வாய்ப்புகள் அமைந்துள்ளன.

(3) இத்திட்டங்களால் கிராமங்களில் ஒருவகை 'அமைதிப் புரட்சியே' (Silent Revolution) தோன்றியுள்ளதெனலாம். மக்க ளுடைய நோக்கங்கள், மனப்பான்மைகள், கண்ணோட்டங்கள் ஆகியவற்றில் மாற்றங்கள் தோன்றியுள்ளன. மக்களுடைய பழமை நோக்கங்கள் மாறியுள்ளன. முற்றிலும் சமுதாய அமைப்பு முறைகள் மாறவில்லையென்றாலும், குறைந்த அளவு மாற்றமாவது ஏற்பட் டுள்ளது எனலாம். வளர்ச்சிக் குன்றிய நாடுகளின் பொருளாதார முன்னேற்றம் சமுதாய அமைப்பு முறைகளின் மாற்றங்களையும் சார்ந்துள்ளது. அவ்வித மாற்றங்களை ஏற்படுத்த உதவுவதாக சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் அமைந்திருக்கின்றன.

(4) கிராம மக்களின் வருவாயைப் பெருக்கவும் இத் திட்டங்கள் உதவுகின்றன. வேளாண்மைத்துறையில் அமைந் துள்ளவர்கள் நல்லினக்கால்நடைகளைப் பராமரிக்கவும், உயர்ந்த இனக் கோழிகளை வளர்க்கவும் உதவிகள் செய்யப்படுகின்றன. கிராமத் தொழில்களும், சிறு தொழில்களும் வளர்க்கப்படுகின்றன. இவற்றால் வேளாண்மையில் அமைந்துள்ள வேலையின்மை, பருவ கால வேலையின்மை, மறைந்துள்ள வேலையின்மை ஆகியவற்றைக் குறைக்க முடியும். வேலை வாய்ப்புகள் பெருகுவதோடு, விவசாயிகள் புதிய வருவாயைப் பெறவும் வழி பிறக்கின்றது. அதிக வருவாய் பெற்றுத் தரமான வாழ்வைக்கொண்டவிவசாயிகள்

சேமித்து முதலீடு செய்யும் திறனைப் பெறுகின்றனர். இது மேலும் வேளாண்மை உற்பத்திப் பெருக வகை செய்கின்றது.

(5) சமுதாய வளர்ச்சித் திட்டங்களுக்கு அரசின் முதலீட்டில் பாதிக்குமேல் மக்கள் அளித்துள்ளனர். சமுதாய விழிப்புணர்ச்சி தோன்றி, மக்கள் திட்டத்தில் பெரும்பங்கு பெறுவதை இது உணர்த்துகின்றது. அரசிற்கும் நாட்டில் பெரும் பகுதியாக அமைந்துள்ள கிராம மக்களுக்கும் இடையே இத்திட்டங்கள் தொடர்பை ஏற்படுத்துகின்றன. சமுதாய வளர்ச்சியில் பங்கு கொள்கின்ற உணர்வும் கிராம மக்களுக்கு ஏற்பட்டுள்ளது எனலாம்.

குறைகள்

தன்னம்பிக்கையை வளர்ப்பதிலும், தன்னிறைவைப் பெறுவதிலும் கிராம மக்கள் இத்திட்டத்தினுல் நன்மையடைந்துள்ளனர். சமுதாய வளர்ச்சித் திட்டம் வேளாண்மை உற்பத்தியின் அளவை உயர்த்தியுள்ளது. வேலை வாய்ப்புகள் வளர்ந்துள்ளன. இவற்றின் விளைவாக மக்களின் வாழ்க்கைத்தரமும் உயர்ந்துள்ளது. ஆனுல் இத்திட்டம் செயல்படுத்தப்படுவதில் சில குறைகளும் அமைந்துள்ளன. அவற்றைப் பின்வருமாறு விளக்கலாம் :

(1) நிலமற்ற வேளாண்மை உழைப்பாளர்களுக்கு வேலை வாய்ப்புகள் அதிகமாகக் கிடைப்பதில்லை. இவர்களுக்கு ஒருசில காலங்களில் மட்டுமே வேலைவாய்ப்புகள் கிடைக்கின்றன. வேளாண்மை வேலையின்மையால் நிலமற்ற உழைப்பாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இந்தியாவில் நிலமற்றவர்கள் ஏராளமாக உள்ளனர். வேறு பல விவசாயிகளும் குறைந்த அளவு நிலவுடைமையை மட்டுமே கொண்டிருக்கின்றனர். நம் நாட்டில் குறைந்த நிலையான அளிப்பைக் கொண்டுள்ள நிலம் சிறப்பாகப் பயன்படுத்தப்படுவதில்லை. அதிக அளவு உபரி உழைப்பும் உற்பத்திப் பணிகளில் ஈடுபடுத்தப்படுவதில்லை.

(2) சமுதாய வளர்ச்சித் திட்டத்தின்கீழ், வேளாண்மை உழைப்பாளர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகளை அளிக்க கிராமத் தொழில்களை ஏற்படுத்தும் ஊக்கம் அமைந்திருப்பதில்லை. திட்ட மதிப்பீட்டு நிறுவனம், சமுதாயத் திட்டங்கள் வேளாண்மையல்லாத பிற துறைகளில் வேலைவாய்ப்புகளை அளிப்பது கடினமானது எனக் குறிப்பிடுகின்றது. கிராமக் கைத் தொழில்களின் முன்னேற்றத்தில் உறுதியற்ற தன்மையே அமைந்துள்ளது. தற்பொழுது அமைந்துள்ள வசதிகளை வைத்துக் கருதும்போது, வேளாண்மை தவிர பிற துறைகளில் உழைப்பை உற்பத்திப் பணிகளில் பயன்படுத்துவது எளிதானதல்ல.

(3) நிலங்கள் உட்பிரிவு படுத்தப்பட்டு துண்டாடப்பட்டிருக்கும் சிக்கலைத் தீர்க்க சமுதாய வளர்ச்சித் திட்டத்தால் எவ்வித முயற்சியும் எடுக்கப்படவில்லை. ஆனால் நிலவுடைமைகளை ஒருங்கிணைக்கும் பணியில் வேறு சில நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. அதில் ஓரளவு வெற்றியும் கிடைத்து வருகின்றது. இந்தியாவில் கூட்டுறவுப்பண்ணை முறைகள் வளராமையும் சிறிய நிலவுடைமைகள் அமைந்துள்ளமைக்குக் காரணமாகும். அரசு கட்டாய முறைகளில் தீவிரக் கொள்கைகளைப் பின்பற்றினாலன்றி, கூட்டுறவுப் பண்ணை முறைகள் தாமே வளர வாய்ப்பில்லை. சிதறிக் கிடக்கும் சிறிய நிலவுடைமைகள் சாகுபடியில் அமைந்துள்ள நில அளவைக் குறைப்பதோடு, அறிவியல் சாகுபடி முறைகளைப் பின்பற்றுவதிலும் தடையாக அமைகின்றன.

(4) சமுதாய வளர்ச்சித் திட்டம் வெற்றிபெற விரைவாகப் பெருகிவரும் மக்கட்தொகை கட்டுப்படுத்தப்பட வேண்டும். ஆனால் மக்கட் பெருக்கத்தை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் வளர்ச்சித் திட்டங்களால் மேற்கொள்ளப்படுவதில்லை. தரமான வாழ்க்கையை கிராம மக்களிடையே ஏற்படுத்த பிறப்பு வீதமானது குறைக்கப்படவேண்டும். குடும்பநலத் திட்டத்தை சமுதாய வளர்ச்சித் திட்டத்தோடு இணையுமாறு செய்யவேண்டும்.

(5) சமுதாயத் திட்டங்கள் எதற்காகத் தோற்றுவிக்கப் பட்டனவோ, அதன் நோக்கங்கள் முற்றிலும் நிறைவேறவில்லை. எதிர்பார்த்தபடி மக்கள் திட்டத்தில் ஈடுபாடு கொண்டவர்களாக மாறவில்லை. ஆக்கப்பணிகளில் அவர்கள் தீவிரமாக ஈடுபட்டு குறிப்பிடத்தக்க அளவில் உற்பத்தியை உயர்த்தவில்லை. மக்களுடைய நோக்கங்களிலும், மத நம்பிக்கைகளிலும், கண்ணோட்டங்களிலும் சிறப்பான மாற்றங்கள் தோன்றியிருக்கவில்லை.

(6) விவசாயிகள் கடன் பெறுவதிலும், விதைகள் உரங்கள் ஆகியவற்றைப் பெறுவதிலும் அக்கறை கொண்டிருந்தாலும், ஒரு ஏக்கருக்கான உற்பத்தியின் அளவைப் பெருக்கும் வகையில் நடவடிக்கைகளைச் சாகுபடியில் மேற்கொள்வதில்லை. கூட்டுறவு இயக்கமும் மக்களின் இயக்கமாக மாறவில்லை. விவசாயிகள் பல வசதிகளைப் பெறுவதற்கு வாய்ப்பிருந்தும், உற்பத்தியின் அளவு அதற்கேற்ப உயரவில்லை.

சமுதாய வளர்ச்சித் திட்டத்தில் அமைந்துள்ள இக்குறைபாடுகளைக் களைந்துவிட்டால் கிராமமக்களின் வாழ்வு தரமுள்ளதாக மாற்றமடையும்.

சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் முன்னேற்றத்திற்கானத் தீர்வுகள்

'திட்ட மதிப்பீட்டு நிறுவனத்தின்' மூன்றாவது மதிப்பீட்டு அறிக்கை இத்திட்டம் சிறப்பாகச் செயல்பட, பின்வரும் பரிந்துரைகளைக் குறிப்பிட்டிருந்தது :

(1) திட்டத்தை நிறைவேற்றும் பணியாளர்களின் திறமையும், நேர்மையும் பாதுகாக்கப்படவேண்டும். திட்டத்தினால் விளையும் நன்மைகளை இதன் மூலமே பெறமுடியும். கிராம, வட்டார, மாவட்ட நிலைகளில் அமைந்துள்ள ஊழியர்களின் எண்ணிக்கையும் பெருகவேண்டும். வளர்ச்சித்திட்ட நிறுவனங்கள் சிறப்பான முறைகளைப் பின்பற்றும் உறுதியான நிலையைக் கொண்டிருக்கவேண்டும்.

(2) வேளாண்மை வளர்ச்சிக்கான ஆராய்ச்சி வசதிகள் பெருக வேண்டும். சாகுபடி நிலங்களுக்கும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் இடையே நெருங்கியத் தொடர்பு அமைதல் அவசியமானதாகும். அறிவியல் முறை வேளாண்மை வளர இதுவே பெரிதும் உதவும் எனலாம்.

(3) பஞ்சாயத்து ஒன்றியம், வட்டார வளர்ச்சி அலுவலகம் போன்றவைகளும் சிறப்பான, உண்மையான முறையில் பணிகளை ஆற்றவில்லை. மாவட்ட நிலையிலும் வளர்ச்சித் திட்டம் நிறைவைத் தரும் வகையில் செயல்படவில்லை.

(4) சமுதாய வளர்ச்சித் திட்டங்களின் நிர்மாணப் பணிகளுக்கு கிராம உழைப்பாளர்களின் பணி பெறப்படுகின்றது. ஆனால் நிர்மாணப்பணிகளை நிறைவேற்ற நீண்டகாலம் பிடிக்கின்றது. கிராம உழைப்பாளர்கள் வேளாண்மையிலும், வேளாண்மை விரிவாக்கப் பணிகளிலும் மட்டுமே தேர்ச்சி பெற்றவர்களாவர். எனவே அவர்களின் உழைப்பு வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதிலேயே பெரிதும் பயன்படுத்தப்படவேண்டும்.

(5) கிராமப் பஞ்சாயத்துகள் ஆலோசனைகளையும், உதவிகளையும் அதிக அளவில் பெறுமாறு செய்தல் வேண்டும். ஏனெனில் வளர்ச்சித் திட்டத்தால் பஞ்சாயத்துகளின் பணிகள் பெருகி வருகின்றன. அவை சிறப்பாகத் தங்கள் கடமைகளை நிறைவேற்ற ஆலோசனைகளைப் பெறுவது அவசியமாகின்றது.

(6) தேசியத் திட்டங்களிலும், மாநிலத் திட்டங்களிலும் சமுதாய வளர்ச்சிக்காக அதிக மூலதனம் ஒதுக்கப்படுகிறது. ஆனால் தேசிய விரிவாக்கப் பணிகளைச் சிறப்பான முறைகளில் நிறைவேற்றத் தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. கிராம

முன்னேற்றத்திற்கான இத்திட்டம் வெற்றியைப் பெறும் வகையில் அமையவேண்டும். சமுதாயத் திட்டங்களுக்கு நிதியுதவியை அளிப்பதில் அரசு காட்டுகின்ற அக்கறை, அத்திட்டங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை அறிவதில் அமைந்திருக்கவில்லை. இந்நிலை மாற்றப்பட்டு மத்திய அரசும், மாநில அரசுகளும் சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் கிராம வளர்ச்சியைப் பெறும் வகையில் நிறைவேற்றப்படுகின்றனவா என்பதை அறியவேண்டும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சமுதாய வளர்ச்சித் திட்டம்

இத்திட்டக் காலத்தில் அரசின் ஊழியர்களுக்கும், கிராம மக்களுக்கும் இடையே நெருங்கியத் தொடர்பு ஏற்படுத்தப்படும். திட்டங்களை நிறைவேற்றும் அமைப்பு முறைகளிலும், திட்டங்களுக்கான வசதிகளைப் பெறுவதிலும் இணக்கத் தன்மை அமைந்திருக்கும். முக்கியத்துவம் வாய்ந்த வேளாண்மை வளர்ச்சிக்கும், மக்கட் பெருக்கக் கட்டுப்பாட்டிற்கும் அதிக மூலதனம் ஒதுக்கப்படும். மாநில அரசுகள் சமுதாய வளர்ச்சித் திட்டங்களுக்காக இத்திட்டக்காலத்தில் செலவிடப்போகும் மொத்தத் தொகை ரூ. 84 கோடியாகும். பஞ்சாயத்து ராஜ்ய அமைப்புகள் மேலும் தேவையான நிதியைத் திரட்ட முயற்சிகளை எடுக்கும்.

நிறைவுரை

சில குறைபாடுகளைக் கொண்டிருந்தாலும், சமுதாய வளர்ச்சித் திட்டங்களால் பல சாதனைகள் புரியப்பட்டுள்ளன. கிராமங்களில் மக்கள் தீவிரமாக ஈடுபடுகின்றமைக்கு இத்திட்டங்களே காரணமாகும். பஞ்சாயத்து ராஜ்யமானது மக்கள் தலைவர்களாலும், அரசின் ஊழியர்களாலும் நடத்தப்பெற்றால் கிராமப் பொருளாதாரத்தை எளிதில் முன்னேற்றமடையச் செய்யலாம். தன்னலமற்ற இவர்கள் செயல்படுவதிலேயே வளர்ச்சித் திட்டங்களின் வெற்றி அடங்கியுள்ளது எனலாம். பழைமைச் சமுதாயத்தை புதுமைச் சமுதாயமாக மாற்ற இத்திட்டங்கள் உதவவேண்டும். இத்திட்டங்களில் அரசின் அலுவலர்கள், பயிற்சிபெற்ற நிர்வாகிகள் ஆகியோரின் பணி திறமையானதாகவும், நேர்மையானதாகவும் அமையவேண்டும்.

1959-ல் பண்டித ஜவஹர்லால் நேரு சமுதாயத் திட்டங்கள் புரட்சிகரமான விளைவுகளைத் தோற்றுவிக்கும் எனக் கூறினார். இத்திட்டங்களில் அமைந்திருந்த குறைபாடுகளையும் அவர் உணர்ந்திருந்தார். பெறப்பட்ட முன்னேற்றங்களையும் பற்றி அவர் குறிப்பிட்டார். மக்களின் ஒத்துழைப்பால்தான் வளர்ச்சித் திட்டங்கள்

வெற்றியைப் பெறமுடியும்; விவசாயிகளின் வாழ்க்கை நிலை திருந்தும் போதுதான் இத்திட்டங்கள் உண்மையான நன்மைகளை மக்களுக்குத் தரமுடியும் எனவும் பண்டித நேரு கருதினர்.

வளர்ச்சி வீதத்தைக் கொண்டு நோக்கும்பொழுது, சமுதாய வளர்ச்சித் திட்டம் ஒரு புரட்சியையே தோற்றுவித்துள்ளது எனலாம். அதனுடைய விளைவுகள் பொருளாதார முன்னேற்றத்திற் கான சாதக நிலைகளை ஏற்படுத்தியுள்ளன. பல இடங்களில் இத் திட்டம் சிறப்பாக நிறைவேற்றப்படாமைக்குச் சில காரணங்கள் அமைந்துள்ளன. எனினும் சமுதாயத் திட்டங்களை நிறைவேற்று வதில் இந்தியா அனுபவத்தைப் பெற்றுவிட்டது. இத் திட்டங்களால் விரைவான வளர்ச்சியைத் தரத்தக்கப் புதியச் சக்திகள் தோன்றி யுள்ளன. அனுபவ அடிப்படையில் இத்திட்டங்களில் மாற்றங் களும், முன்னேற்றங்களும் செய்யப்பெறுதல் வேண்டும். திரு சி. சுப்ரமணியம் குறிப்பிடுவதாவது, "அதிக உற்பத்திக்கான முயற்சி சமுதாய வளர்ச்சியின் அடிப்படைக் கொள்கையாகின்றது; ஆரோக்கியமான, மகிழ்ச்சிகரமான சமுதாயத்தைத் தோன்றச் செய்வதும் சமுதாய வளர்ச்சியின் நோக்கமாகின்றது." மக்கட் பெருக்கத்தால் உணவு உற்பத்தியைப் பெருக்குவது தவிர்க்க இயலாதது. கிராம மக்களின் வாழ்க்கை வசதிகள், உற்பத்திக்கான வசதிகள் பெருகுவதிலேயே வேளாண்மை உற்பத்தியின் உயர்வு அடங்கியுள்ளது. இவ்வசதிகளை வளர்ச்சித் திட்டங்கள் அளிக் கின்றன. இந்தியாவில் தற்பொழுது பொருளாதார முன்னேற் றத்தைப் பெறுவதில் பல சிக்கல்களும் தோன்றியுள்ளன. அச் சிக்கல்களுக்குத் தீர்வுகாண மக்களின் ஒத்துழைப்பு இன்றியமையாத தாகும். சமுதாய வளர்ச்சித் திட்டங்களில் மக்களைப் பங்குபெறச் செய்வதின் மூலம் இச்சிக்கல்களுக்குத் தீர்வு காணமுடியும். தொழில் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக வேளாண்மையின் வளர்ச்சி அமையவேண்டும். பொருளாதார வளர்ச்சிவீதம் உயர் வடைய கிராமப் பொருளாதாரம் வளர்க்கப்படவேண்டும். கிராமப் பொருளாதாரம் முன்னேற்றமடைய சமுதாய வளர்ச்சித் திட்டம் பெரிதும் உதவுகின்றது. இந்தியாவில் சமுதாய வளர்ச்சித் திட்ட மின்றி விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப் பெற முடியாது.

42. இந்தியத் திட்டத்தின் பதினைந்து ஆண்டுக்காலம்

(Fifteen Years of Indian Planning)

திட்டமிட்டப் பொருளாதார வளர்ச்சியைப் பெற அரசு நோக்கம் கொண்டுள்ளது. இந்தியாவின் முதல் ஐந்தாண்டுத் திட்டம் 1951ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. மார்ச் 1966-ல் இந்தியா பதினைந்து ஆண்டுகாலத் திட்டத்தை முடித்திருந்தது. இக்காலத்தில் பொருளாதாரத்தின் வெவ்வேறு துறைகளிலும் முன்னேற்றம் ஏற்பட்டது. ஆனால் எதிர்பார்த்த அளவிற்கு விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப் பெறமுடியவில்லை. முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களும் 1951 முதல் 1966 வரை நிறைவேற்றப்பட்ட பிறகு மூன்றாண்டுகளுக்குத் திட்ட விடுமுறை விடப்பட்டது. 1966ஆம் ஆண்டிற்கும் 1968ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்டக் காலத்தில் உள்நாட்டில் சட்ட, ஒழுங்கு நிலைகள் சிறப்பாக அமைந்திருக்கவில்லை. வெள்ளம், பஞ்சம், பற்றுக்குறை, விலையுயர்வு, வேலையின்மை போன்ற பல சிக்கல்கள் தோன்றின. 1967–68-ல் 'தொழிற் பின்னிறக்கமும்' (Industrial Recession) ஏற்பட்டது. இவற்றின் காரணமாகப் பொருளாதார வளர்ச்சிப் பெரிதும் தடைப்பட்டது. திட்டக்குழுவும், இந்திய அரசும் கவனமாகத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டியதின் அவசியத்தை உணர்ந்தன. இதற்காக முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றியதின் மூலம் விளைந்த நன்மை தீமைகள் ஆராயப் பட்டன.

பதினைந்து ஆண்டுக்கால இந்தியத் திட்டங்களை மதிப்பீடு செய்வதின் மூலம், பின்தங்கிய நாடுகள் திட்டமிட்டுப் பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுவது இன்றியமையாதது என்பதை உணரலாம்.

முதல் மூன்றுத் திட்டங்கள் வெற்றிகள் பலவற்றையும், தோல்விகள் சிலவற்றையும் கண்டன. இத்திட்டங்களை ஆராய்வதின் மூலம் இந்தியப் பொருளாதார முன்னேற்றம் எந்த அளவிற்குத் திட்ட மிடுதலால் நன்மையைப் பெற்றிருக்கின்றது என்பதை அறியலாம்.

திட்டமிடுதலின் நோக்கங்கள்

முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களும் பின்வரும் பொதுவான நோக்கங்களைக் கொண்டவைகளாக இருந்தன:

1. தேசிய வருவாயிலும், தலா வருவாயிலும் விரைவான முன்னேற்றத்தைப் பெறுதல்;

2. வேளாண்மை வளர்ச்சியையும், தொழில் முன்னேற்றத்தை யும் அடைதல்;

3. மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்வடையச் செய்தல்;

4. வருவாயிலும், செல்வத்திலும் உள்ள வேறுபாடுகளை நீக்குதல்;

5. மக்களின் நலங்காக்கச் சமதர்ம முறையில் சமுதாயத்தை அமைத்தல்.

பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுவதற்காகத் திட்ட மிடுதலின் முக்கிய நோக்கம் சரிசம வளர்ச்சியைப் பெறுவதும், விரைவான வளர்ச்சியைப் பெறுவதும் ஆகும். இந்தியாவின் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை ஒரு மிதமான முயற்சி எனலாம். முக்கியத்துவத்திற்கேற்ப அரசு இத்திட்டத்தில் சில சிக்கல்களுக்குத் தீர்வு காண முனைந்தது. உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய, அவசரத் தன்மை கொண்ட சிக்கல் களுக்குத் தீர்வு காணப்பட்டது. முதல் திட்டம் குறைந்த அளவு மூலதன வசதியைக்கொண்டு நிறைவேற்றப்பட்டதே யாகும். திட்டத்தின் முதல் இரண்டு ஆண்டுகளிலும் பணவீக்க நிலையைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பெற்றன. பொருளாதாரத்தில் சரிசம நிலையைக் கொண்டிருப்பதும் நோக்கமாக இருந்தது. முதல் திட்டத்தின் மூன்ருவது ஆண்டி லிருந்து முதலீட்டின் அளவு அதிகரிக்கப்பட்டது. மத்திய அரசின் செலவினங்களும், மாநில அரசுகளின் செலவினங்களும் உயர்த்தப் பட்டன. 1951-52ஆம் ஆண்டில் செய்யப்பட்ட முதலீட்டைக் காட்டிலும் $2\frac{1}{2}$ மடங்கு அதிக முதலீடு திட்டத்தின் இறுதியாண்டில் செய்யப்பட்டது.

முதல் ஐந்தாண்டுத் திட்டம், இரண்டாவது உலகப் போரினால் இந்தியப் பொருளாதாரத்தில் ஏற்பட்டிருந்த குறைபாடுகளைக் களையக் கருதியது. பாகிஸ்தானின் பிரிவினைக்குப் பிறகு இந்தியாவில் பணவீக்க நிலைகள் தோன்றத் தொடங்கின. இத்திட்டம் பொருளாதார முன்னேற்றத்தைப் பெற வேளாண்மை வளர்ச்சி அவசியமானது என அறிந்திருந்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கம் நாட்டைத் தொழில் மயமாக்குவதாக இருந்தது. கல்வி வசதிகள், மருத்துவ வசதிகள் ஆகியவற்றைப் பெருக்கவும் அரசு நடவடிக்கைகளை எடுத்தது. வருவாயிலும், செல்வத்திலும் அமைந்திருந்த வேறுபாடுகளை நீக்க அரசு கருதியது. வேலை வாய்ப்புகளை அதிகரிக்க அரசு பல வழிமுறை களைப் பின்பற்றியது குறிப்பிடத்தக்கதாகும். இத்திட்டக்காலத்தில் விரைவான தொழில் முன்னேற்றத்தைப் பெற, அடிப்படைத் தொழில்களுக்கும், பெரிய தொழில்களுக்கும் முக்கியத்துவம் தரப் பட்டது. இரண்டாவது திட்டம் ஒரு தொழில் திட்டமாகவே அமைந்திருந்தது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் செறிவு முறையில் முன்னேற்றத்தை அடையக் கருதப்பட்டது. தானே முன்னேறக்கூடிய தன்னிறைவுப் பொருளாதாரத்தைப் பெறுவதும் மூன்றாவது திட்டத்தின் முக்கிய நோக்கங்களுள் ஒன்றாக அமைந்தது. இத்திட்டக்காலத்தில் வேளாண்மை வளர்ச்சிக்கு முதல் முக்கியத்துவம் தரப்பட்டது. பெரிய தொழில்கள், அடிப் படைத் தொழில்கள் ஆகியவற்றின் முன்னேற்றத்திலும் கவனம் செலுத்தப்பட்டது. நாட்டை விரைவாகத் தொழில் மயமாக்குவது, உணவுத் தானியங்களின் உற்பத்தியில் தன்னிறைவைப் பெறுவது, வேலை வாய்ப்புகளைப் பெருக்குவது, வருவாயிலும் செல்வப் பங்கீட் டிலும் உள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்குவது ஆகியவையே மூன்றாவது திட்டத்தின் நோக்கங்களாக இருந்தன.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் ஓரளவு வெற்றியைப் பெற்ற திட்டமேயாகும். முதல் திட்டத்தில் முன்னேற்றத்தைப் பெறு வதற்கான அடிப்படைகள் அமைக்கப்பெற்றன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப் பெற முனைந்தது. எனவே இத்திட்டத்தில் பொருளாதார அமைப்பு களிலேயே பல மாற்றங்கள் செய்யப்பட்டன. நீண்டகால நோக்குக் கொண்டு முதலீடுகள் செய்யப் பெற்றன. பொருளாதார முன்னேற்றத் தைப் பெற நீண்டகாலத்தில் மட்டுமே நன்மையளிக்கக்கூடிய சில திட்டங்களை நிறைவேற்றுவது அவசியமானதாகும். 1973–74ஆம் ஆண்டிற்குள் தலா வருவாயை இரட்டிப்பாக்க குறியிலக்கு நிர்ண யிக்கப்பட்டது. இரண்டாவது திட்டம் பின்வருவனவற்றை முக்கிய நோக்கங்களாகக் குறிப்பிட்டது.

(1) கணிசமான அளவிற்குத் தேசிய வருவாயை உயர்த்தி, நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தையும் உயர்த்துவது;

(2) அடிப்படைத் தொழில்களையும், பெரிய தொழில்களையும் வளர்த்து நாட்டை விரைவாகத் தொழில் மயமாக்குதல்;

(3) பெருமளவிற்கு வேலை வாய்ப்புகளைப் பெருக்குதல்;

(4) நாட்டின் பொருளாதாரச் சக்தி ஒரு சிலரிடம் குவிந்திருத்தலைத் தடுத்தல்; செல்வப் பங்கீட்டிலும், வருவாயிலும் உள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்குதல்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முதன் முறையாக சமதர்ம முறைச் சமுதாயத்தை அமைப்பது பற்றிக் குறிப்பிட்டது. சமதர்மத்தை அடைவதே திட்டத்தின் நோக்கமாகவும் இருந்தது. எனவே திட்ட நடவடிக்கைகள் சமுதாய நலன் கருதி எடுக்கப் பட்டன. தனியார் துறைக்கு முக்கியத்துவம் தரப்படவில்லை. திட்ட முறையைச் சிறப்பாகத் தெரிந்தெடுப்பதால் பல நன்மைகளும் பெறப் படுகின்றன. சிறப்பான திட்டமுறை பொருளாதார, சமுதாய அமைப்புகளில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். நல்லதொரு திட்டம் தேசிய வருவாயைப் பெருக்கி, வேலை வாய்ப்புகளை அதிகரித்தால் மட்டும் போதாது. அத்திட்டம் வருவாய்ப் பகிர்விலும் செல்வப் பங்கீட்டிலும் உள்ள அதிக அளவு வேறுபாடுகளை நீக்குவ தாகவும் இருக்கவேண்டும். முதலீடு, உற்பத்திப் பகிர்வு, நுகர்வு ஆகியவை பற்றிய சரியான முடிவுகள் திட்டத்தில் எடுக்கப்பட வேண்டும்; பொருளாதார, சமுதாயக் காரணிகளும் கருதப்பட வேண்டும். திட்டத்தினால் ஏற்படக்கூடிய நன்மைகளைச் சமுதாயத் தின் தாழ்ந்த நிலையில் உள்ள குறைந்த வருவாய் பெறுபவர்கள் அடையவேண்டியது அவசியமானதாகும். வருவாய், செல்வம், பொருளாதாரச் சக்தி ஆகியவை சிலரிடம் குவிந்திருப்பதைத் தடுக்கத் திட்டங்களின் மூலம் அரசு தீவிர நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் எல்லா மக்களுக்கும் நல்வாழ்வு அளிப்பதை முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தது. சமதர்மம் எல்லா மக்களின் நல்வாழ்வும் பெறப்பட வேண்டியது அவசியமானது என்பதையே அறிவுறுத்துகிறது. இத்திட்டம் வேலை யின்மையைக் குறைக்கவும் நோக்கம் கொண்டிருந்தது. பொரு ளாதார, சமுதாய வேறுபாடுகளை நீக்கவும் வழிமுறைகள் பின்பற்றப் பட்டன. தன்னிறைவுப் பொருளாதாரத்தைப் பெற வேண்டுமென்ற கருத்து முதன்முதலாக மூன்றாவது திட்டத்திலேயே எழுந்தது.

கீழ்க்கண்டவைகளே இத்திட்டத்தின் அடிப்படை நோக்கங்களாக அமைந்திருந்தன:

(1) ஆண்டொன்றிற்குத் தேசிய வருவாயை 5 சதவீதத்திற்கு மேலாக உயர்த்துவது; பொருளாதார முன்னேற்றம் பின்வரும் திட்டக் காலங்களிலும் தொடர்ந்து நீடிக்கும் வகையில் முதலீட்டு முறையைப் பின்பற்றுவது;

(2) உணவுப் பொருட்களின் உற்பத்தியில் தன்னிறைவைப் பெறுவது; தொழில் துறைக்கும் ஏற்றுமதிக்கும் தேவையான அளவு களில் வேளாண்மை உற்பத்தியை அதிகரிப்பது;

(3) இரும்பு-எஃகுத் தொழில், இரசாயனத் தொழில் போன்ற அடிப்படைத் தொழில்களை விரிவடையச் செய்வது; எரி பொருட்கள், மின்சாரம் ஆகியவற்றின் அளிப்பை அதிகரிப்பது; எதிர்காலத்தில் நாட்டைத் தொழில் மயமாக்குவதற்குத் தேவை யான இயந்திரங்களை உற்பத்திச் செய்வதற்கான திறனை உள் நாட்டிலேயே பத்து ஆண்டுகளுக்குள் ஏற்படுத்துவது;

(4) போதுமான அளவிற்கு வேலை வாய்ப்புகளைப் பெருக்கி நாட்டில் அமைந்திருக்கக்கூடிய மனித உழைப்புச் சக்தியை முற்றிலுமாகப் பயன்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்வது;

(5) மக்கள் எல்லோருக்கும் முன்னேறுவதற்கான வாய்ப்பைச் சமமாக அளிப்பது; வருவாய், செல்வம் ஆகியவற்றில் அமைந் திருக்கக்கூடிய வேறுபாடுகளை நீக்குவது; பொருளாதாரச் சக்தியைச் சரியாகப் பகிர்வு செய்வது.

ஆகவே மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம் வேளாண்மைப் பொருளாதாரத்தை வலுப்படுத்த விரும்பியது. தொழில் முன்னேற்றத் தைப் பெறவும் அது விருப்புக் கொண்டிருந்தது. மின்சார உற்பத்தி, போக்குவரத்து முன்னேற்றம் ஆகியவற்றிலும் கவனம் செலுத்தப் பெற்றது. படிப்படியாகத் தொழில் முன்னேற்றத்தையும், தொழில் உற்பத்தி முறைகளில் மாற்றத்தையும் பெற இத்திட்டம் கருதியது; உழைப்பாளர்கள் அனைவருக்கும் வேலை வாய்ப்பை அளிக்க வேண்டுமென்ற நோக்கமும் அமைந்திருந்தது. எல்லோருக்கும் சம வாய்ப்பைத் தரும் சமதர்மச் சமுதாயத்தை அமைப்பதற்கான நடவடிக்கைளும் மேற்கொள்ளப்பட்டன. ஒரு குறிப்பிட்ட அளவு குறைந்த வருவாயையாவது ஒவ்வொருவரும் பெறவேண்டுமென மூன்றுவது திட்டம் அறிவுறுத்தியது; சமதர்மச் சமுதாயத்தை அமைக்க வேண்டியதின் அவசியத்தையும் அது உணர்த்தியது.

இவ்வாறு இந்தியத் திட்டங்களின் பதினைந்து ஆண்டுக் காலத்தில் நோக்கங்கள் சிறப்பாகவே அமைந்திருந்தன. இந் நோக்கங்கள் சிறப்பாகச் செயல்படுத்தப்படாமையே திட்டங்களின் குறைந்த அளவு வெற்றிக்குக் காரணமாகும்.

முதல் மூன்று திட்டங்களின் முதலீட்டு முறை

முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் பொதுத்துறையில் முதலீட்டு முறை எவ்வாறு அமைந்திருந்தது என்பதை அடுத்தப் பக்கத்தில் உள்ள அட்டவணை உணர்த்தும்:

முதல் திட்டம்

(1) எதிர்காலத்தில் விரைவான பொருளாதார, தொழில் முன்னேற்றத்தைப்பெற முதல் ஐந்தாண்டுத் திட்டம் வேளாண்மை, நீர்ப்பாசனம், மின்சார உற்பத்தி, போக்குவரத்து ஆகியவற்றின் வளர்ச்சி அடிப்படையாக அமையும் என அறிந்திருந்தது. இத்திட்டம் சில அடிப்படைக் கொள்கைகளின் மூலம் சமுதாய மாற்றத்தையும், அமைப்பு முறைகளில் சீர்திருத்தங்களையும் பெறக் கருதியது.

(2) இரண்டாவது திட்டத்தைக் காட்டிலும் முதல் திட்டத்தில் நிலத்துறைகளில் முன்னேற்றத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. வேளாண்மை, நீர்ப்பாசனம் ஆகியவற்றிற்கான பொதுத்துறை முதலீடு முதல் திட்டத்திலும், இரண்டாவது திட்டத்திலும் முறையே 31 சதவீதமும் 20 சதவீதமும் இருந்தன.

இரண்டாவது திட்டத்தில் தொழில்துறை வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டது. ஆகவே முதல் திட்டத்தில் தொழில் வளர்ச்சிக்காக மொத்த முதலீட்டில் 4 சதவீதமே ஒதுக்கப்பட்ட போது இரண்டாவது திட்டத்தில் 20 சதவீதம் ஒதுக்கப்பட்டிருந்தது.

(3) இயக்குச் சக்தியின் உற்பத்திக்காக முதல் திட்டத்திலும், இரண்டாவது திட்டத்திலும் முறையே மொத்த முதலீட்டில் 13, 10 சதவீதங்கள் ஒதுக்கப்பெற்றன.

(4) போக்குவரத்து, செய்தித் தொடர்பு வசதிகளுக்காக முதலிரண்டு திட்டங்களிலும் அதிக மூலதனம் செலவழிக்கப்பட்டது. மொத்தச் செலவில் அவை முறையே 27 சதவீதமாகவும், 28 சதவீத மாகவும் இருந்தன.

	முதல் திட்டம்		இரண்டாவது திட்டம்		மூன்றாவது திட்டம்	
	முதலீடு (கோடி ரூபாயில்)	சதவீதம்	முதலீடு (கோடி ரூபாயில்)	சதவீதம்	முதலீடு (கோடி ரூபாயில்)	சதவீதம்
1. வேளாண்மை	291	15	530	11	1089·0	12 7
2. நீர்ப்பாசனம்	310	16	420	9	663·7	7·8
3. மின்சாரம்	260	13	445	10	1252·3	14 6
4. சிறு தொழில்கள்	43	2	175	4	240·8	2 8
5. தொழில்கள்	74	4	900	20	1726·3	20 1
6. போக்குவரத்து, செய்தித் தொடர்பு	523	27	1300	28	2111·7	24·6
7. சமூகப் பணியும் பிறவும்	459	23	830	18	1493·4	17·4
மொத்தம்	1960	100	4600	100	8577·2	100

(5) முதல் திட்டத்திலும், இரண்டாவது திட்டத்திலும் சமுதாயப் பணிகளுக்காகவும், பிறவற்றிற்காகவும் மொத்த முதலீடு களில் முறையே 23 சதவீதமும் 18 சதவீதமும் ஒதுக்கப்பட்டன.

(6) பொதுவாக, முதல் திட்டம் சிறப்பாக நிறைவேற்றப்பட்ட ஒன்று எனலாம். உற்பத்தியின் அளவுகள் பல துறைகளில் குறியீட்டு அளவுகளைக் காட்டிலும் அதிகமாக இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது திட்டம்

(1) முதல் திட்டத்தின் வெற்றி அதிகத் துணிச்சல் கொண்ட வகையில் இரண்டாவது திட்டத்தை நிறைவேற்றத் தூண்டியது. முதல் திட்டக்காலத்தில் ஓரளவு சிறப்பான பொருளாதார முன்னேற்றம் பெறப்பட்டது. மேலும் அம்முன்னேற்றத்தை விரைவு படுத்த இரண்டாவது திட்டம் விரும்பியது. இரண்டாவது திட்டத் தின் முதலீடு முதல் திட்டத்தின் முதலீட்டைவிட இருமடங்கிற்கு அதிகமானதாகும். மத்திய அரசும், மாநில அரசுகளும் இரண்டாவது திட்டக்காலத்தில் முன்னேற்றத்திற்காக ரூ. 4,800 கோடி செலவு செய்தன. முதல் திட்டக்காலத்தில் இதன் அளவு ரூ. 2,356 கோடி என்ற அளவில் மட்டுமே இருந்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் முதல் முக்கியத்துவம் தொழில் முன்னேற் றத்திற்கும், போக்குவரத்து வளர்ச்சிக்கும் அளிக்கப்பட்டது; முக்கியத்துவம் வேளாண்மையினின்றும் தொழில்துறைக்கு மாற்றப் பட்டது.

(2) வேளாண்மைத்துறையின் வளர்ச்சிக்கு முதல் முக்கியத் துவம் தரப்படாவிட்டாலும்கூட, வேளாண்மைக்கான இரண் டாவது திட்ட முதலீடு முதல் திட்ட முதலீட்டைவிட அதிகமாகவே இருந்தது. இரண்டாவது திட்டத்தில் வேளாண்மைக்கும், சமுதாய முன்னேற்றத்திற்கும் ரூ. 568 கோடி ஒதுக்கப்பட்டது; முதல் திட்டத்தில் ரூ. 357 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டது. இரண்டாவது திட்டத்தில் வேளாண்மைக்கும், சமுதாய முன்னேற்றத்திற்குமான செலவு மொத்த முதலீட்டில் 12 சதவீதமாகும்; முதல் திட்டத்தில் இதன் அளவு 15 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது.

(3) இரண்டாவது திட்டத்தில் பொதுத்துறையின் சுரங்கத் தொழிலுக்காகவும், பிற தொழில்களுக்காகவும் ரூ. 690 கோடி செலவிடப்பட்டது. கிராமத் தொழில்களையும், சிறு தொழில்களையும் வளர்க்க ரூ. 200 கோடி ஒதுக்கப்பட்டது.

(4) போக்குவரத்து, செய்தித்தொடர்பு வசதிகளைப் பெருக்க இரண்டாவது திட்டத்தில் ரூ. 1,385 கோடி அனுமதிக்கப்பட்டது.

(5) இரண்டாவது திட்டத்தில் சமுதாயப் பணிகளுக்கான முதலீடு ரூ. 945 கோடி என்ற அளவில் இருந்தது. இது முதல் திட்டத்தின் முதலீட்டைக் காட்டிலும் சுமார் இருமடங்கு அதிகமானதாகும். மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த இச்சமுதாயப் பணிகள் பெரிதும் உதவின. இந்தியாவில் திட்டமிடுதலின் அடிப்படை நோக்கமே தரமான வாழ்வை மக்களுக்கு அளிப்பதாகும்.

(6) இரண்டாவது திட்டம் மிக்கத் துணிவோடும், ஆர்வத்தோடும் தயாரிக்கப்பெற்றது. மிகத் தீவிர நோக்கோடு அத்திட்டம் தீட்டப்பட்டது எனலாம். இது தோல்வியைத் தழுவியதொரு திட்டமாகக் கருதப்படுகின்றது. திட்ட முதலீடுகளைத் தொடர்ந்து விலைகளின் உயர்வும் ஏற்பட்டது. பணவீக்கம் படிப்படியாகத் தீவிரமடைந்தது. திட்டத்தைத் தீட்டியவர்கள் விரைவான தொழில் முன்னேற்றத்தைப் பெறவேண்டுமென்ற அதிக ஆர்வத்தினால், வேளாண்மைத் துறையின் வளர்ச்சிக்கான முக்கியத்துவத்தைக் குறைத்து விட்டார்கள். இது ஒரு மாபெரும் தவறாக அமைந்து விட்டது. இந்தியா ஒரு வேளாண்மை நாடு. வேளாண்மையில் வளர்ச்சியடைந்த பிறகே, பிற துறைகளிலும் முன்னேற்றத்தைப் பெற இயலும். இன்னும் பல ஆண்டுகளுக்கு வேளாண்மைத்துறை வளர்ச்சியடைவதற்கான நடவடிக்கைகளை எடுப்பது அவசியமாகின்றது.

மூன்றாவது திட்டம்

(1) பொதுத்துறையில் மூன்றாவது திட்டத்திற்கான மொத்த முதலீடு ரூ. 8,577·2 கோடியாகும். திட்ட முதலீடுகளின் அளவு ஒவ்வொரு திட்டத்திலும் பெரிதும் அதிகரித்து வருகின்றது. இதன் மூலம் அரசு திட்டங்களின்மூலம் விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப் பெற முனைந்துள்ளது என்பதை அறியலாம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் மிகவும் கவனமாக வரையப்பட்டது. இரண்டாவது திட்டத்தோடு ஒப்பிடும்போது இதை துணிச்சலானதொரு திட்டம் எனக் கூறமுடியாது. இரண்டாவது திட்டத்தின்மூலம் பெறப்பட்ட படிப்பினைகளே கவனமாக மூன்றாவது திட்டம் நிறைவேற்றப்பட்டமைக்கான காரணமாகும்.

(2) வேளாண்மைப் பொருளாதாரத்தைக்கொண்ட இந்தியாவில், இரண்டாவது திட்டக்காலத்தில் தொழில் முன்னேற்றத்

திற்கு மிக அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இதனால் வேளாண்மை வளர்ச்சிக்கு அரசு ஆவன நடவடிக்கைகளை எடுக்கவில்லை எனக் கூறயியலாது. தொழில் முன்னேற்றத்திற்கு முதல் முக்கியத்துவம் தரப்பட்டபோது, வேளாண்மை வளர்ச்சி யிலும் அரசு கவனம் செலுத்தியது. இதற்கு எதிரிடையான நிலை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அமைந்திருந்தது. இத்திட்டத் தில் தொழில்துறைக்கான முக்கியத்துவம் குறைக்கப்படவில்லை. ஆனால் வேளாண்மை வளர்ச்சியில் மிக அதிகக் கவனம் செலுத்தப் பெற்றது. திட்டக்குழு வேளாண்மையின் அவசியத்தை உணர்ந் தமையால், வேளாண்மை முன்னேற்றத்திற்காக மூன்றாவது திட்டத்தில் ரூ. 1,752·70 கோடி அனுமதிக்கப்பட்டது; இரண்டாவது திட்டத்தில் ரூ. 950 கோடி மட்டுமே முதலீடாக்கப்பட்டது.

(3) இருப்புப்பாதைப் போக்குவரத்து, சாலைப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து ஆகியவற்றின் முன்னேற்றத்திற்கான முதலீடு போதுமானதாக இருக்கவில்லை. வளர்ச்சியடைந்துவரும் இந்தியப் பொருளாதாரத்தில் போக்குவரத்து வசதியின் முன்னேற்றம் தேவையான ஒன்றாகும். முன்னேற்றமடையாத போக்குவரத்து வசதியால் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படும். பொருளாதாரத் தில் சரிசம வளர்ச்சியைப்பெற இவ்வசதிகளைப் பெருக்குவது இன்றியமையாததாகும்.

(4) மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படை நோக்கம் 'தன்னைச் சார்ந்து தானே முன்னேறுகின்ற' பொருளாதா ரத்தைப் பெறுவதாக இருந்தது. செறிந்த முறையில் முன்னேற் றத்தைப்பெற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. நீண்டகாலத்தில் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவக்கூடிய துறைகளும் இத்திட்டக்காலத்தில் வளர்க்கப்பெற்றன.

ஒவ்வொரு திட்டத்திலும் மொத்தச் செலவில் சுமார் மூன்றில் ஒரு பகுதி மின்சார உற்பத்தி, போக்குவரத்து, செய்தித் தொடர்பு வசதிகள் ஆகியவற்றிற்காகச் செலவிடப்பட்டது. திட்டங்களை நிறைவேற்றுவதற்கான நிதி வரிவிதிப்பு, பொதுக்கடன், சிறு சேமிப்புகள், பொது நிறுவனங்களில் உபரி, வெளிநாட்டு உதவி, பற்றுக்குறை நிதியாக்கம் ஆகிய வழிகளில் பெறப்பட்டது.

தேசிய வருவாயின் வளர்ச்சி

முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் தேசிய வருவாயும் தலா வருவாயும் பின்வருமாறு அதிகரித்தன:

ஆண்டு		1660–61 விலைகளின்படி தேசிய வருவாய் (கோடி ரூபாயில்)		1960–61 விலைகளின்படி தலா வருவாய் (ரூபாயில்)
1950-51	...	9850	...	275
1951-52	...	10150	...	279
1952-53	...	10540	...	285
1953-54	...	11190	...	297
1954-55	...	11460	...	299
1955-56	...	**11670**	...	**299**
1956-57	...	12250	...	307
1957-58	...	12100	...	297
1958-59	...	12950	...	312
1959-60	...	13180	...	311
1960-61	...	**14140**	...	**326**
1961-62	...	14490	...	326
1962-63	...	14740	...	323
1963-64	...	15460	...	331
1964-65	...	16630	...	348
1965-66	...	**15930**	...	**325**

முதல் திட்டத்தில் தேசிய வருவாய் குறிப்பிடத்தக்கவகையில் உயர்ந்தது; தலா வருவாயிலும் உயர்வே ஏற்பட்டது. இரண்டாவது திட்டத்தில் சிறப்பான முன்னேற்றம் அமைந்திருக்கவில்லை. மூன்றுவது திட்டக்காலத்திலும் தேசிய வருவாயின் அதிகரிப்பு சிறப்பாக இல்லை; தலா வருவாயில் ஏற்ற இறக்கங்கள் அமைந்திருந்தன. 1960–61 விலைகளின்படி முதல் திட்டம் தொடங்கும் போது தேசிய வருவாய் ரூ. 9,850 கோடியாக இருந்தது. முதல் திட்ட இறுதியில் இது ரூ. 11,670 கோடியாகவும், இரண்டாவது திட்ட இறுதியில் ரூ. 14,140 கோடியாகவும், மூன்றுவது திட்ட இறுதியில் ரூ. 15,930 கோடியாகவும் உயர்ந்தது. முதல் இரண்டு திட்டக் காலங்களிலும் தேசிய வருவாய் 42 சதவீதம் அதிகரித்தது. இதே காலத்தில் மக்கட்தொகை 21 சதவீதம் உயர்ந்தமையால், தலா வருவாய் மிகவும் குறைந்த அளவிலேயே அதிகரித்தது. பிற நாடுகளின் வளர்ச்சிவீதங்களோடு ஒப்பிடும்போது, இந்தியாவில்

தேசிய வருவாயின் உயர்வு குறைவானதே என்பதை உணரலாம். கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் இந்தியாவைக் காட்டிலும் பிற நாடுகளில் வளர்ச்சி வீதங்கள் அதிகமாக உள்ளன என்பதை அறிவுறுத்துகின்றன,

ஆண்டொன்றிற்குத் தேசிய வருவாய், மக்கட்தொகை, தலா ஒருவருக்கான உற்பத்தி ஆகியவற்றின் வளர்ச்சி வீதங்கள் (1951–64)

ஆண்டொன்றிற்குச் சராசரி வளர்ச்சி வீதம்

	தேசிய வருவாய்	மக்கட் தொகை	தனிபொரு வருக்கான உற்பத்தி
இந்தியா	3·9%	2·1%	1·8%
இங்கிலாந்து	2·6%	0·5%	2·1%
அமெரிக்கா	3·1%	1·7%	1·4%
ஆஸ்திரேலியா	4·1%	2·2%	1·8%
இலங்கை	3·1%	2·5%	0·5%
ஜப்பான்	9·2%	1·1%	8·1%
பாகிஸ்தான்	3·5%	2·1%	1·3%
பிலிப்பைன்ஸ்	5·4%	3·1%	2·2%
பிரான்ஸ்	4·6%	1·1%	3·4%
பர்மா	4·8%	2·0%	2·6%

தலா வருவாய் முதல் மூன்று திட்டக்காலங்களிலும் குறைந்த அளவிற்கே அதிகரித்தமையால் சேமிப்பு, முதலீட்டு வீதங்களும் குறிப்பிடத்தகுந்த அளவிற்கு உயரவில்லை. முதல் திட்டத்தின் தொடக்கத்தில் சேமிப்பு தேசிய வருவாயில் 5 சதவீதமாக இருந்தது; இது முதல் திட்ட இறுதியில் 7 சதவீதமாகவும், இரண்டாவது திட்ட இறுதியில் 11 சதவீதமாகவும் அதிகரித்தது. மூன்றாவது திட்டத்தின் தொடக்கத்தில் (1960–61) சேமிப்பு தேசிய வருவாயில் 11 சதவீதமாக இருந்தது; திட்டத்தின் இறுதியில் (1965–66) இது 11·5 சதவீதமாக உயர்வடைந்தது. அரசின் முதலீடுகள் அதிக வெற்றியைப் பெருமையும், அரசு செல்வந்தர்களின் அதிகரித்த வருவாயைத் திரட்ட முடியாமையும் சேமிப்பின் அளவு குறைவாக இருந்தமைக்கான காரணங்களாகும்.

1950–51ஆம் ஆண்டிற்கும் 1964–65ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்டக் காலத்தில் 'நிகர தேசிய வருவாய்' ரூ. 9,850 கோடியிலிருந்து ரூ. 16,630 கோடியாக (1960–61ஆம் ஆண்டின் விலைகளின் அடிப்படையின்படி) சுமார் 69 சதவீதம் அதிகரித்தது. அதாவது, சராசரி ஆண்டொன்றிற்கு 3·8 சதவீதம் என்ற அளவிற்குத் தேசிய வருவாய் உயர்வடைந்தது. 1951ஆம் ஆண்டிற்கும் 1961ஆம் ஆண்டிற்கும் இடையே தேசிய வருவாய் 42 சதவீதம் அதிகரித்தபோது, தலா வருவாய் 16 சதவீதம் மட்டுமே அதிகரித்தது. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் நான்கு ஆண்டுகளில் தேசிய வருவாய் 20 சதவீதம் உயர்வடைந்தபோது, இறுதியாண்டில் தேசிய வருவாய் சுமார் 5·7 சதவீதம் என்ற அளவிற்குக் குறைவடைந்தது. இக்காலத்தில் மக்கட்தொகைப் பெருக்கம் ஆண்டொன்றிற்கு 2·5 சதவீதம் என்ற அளவிற்குப் பெருகியமையே, கணிசமான தலா வருவாய் அதிகரிப்பு ஏற்படாமைக்குக் காரணமாகும்.

மூலதன-உற்பத்தி வீதம் (Capital-output Ratio)

முதல் திட்டக்காலத்தில் மூலதன–உற்பத்தி வீதம் 1·8: 1 என்ற நிலையில் இருந்தது. வேளாண்மை வளர்ச்சிக்குச் சாதகமான பருவகாலச் சூழ்நிலைகள் அமைந்திருந்தமையே இவ்விதச் சிறப்பான மூலதன-உற்பத்திவீதம் பெறப்பட்டமைக்குக் காரணமாகும். வேளாண்மை உற்பத்தியின் பெருக்கம் தொழில் உற்பத்தியின் அளவையும் அதிகரிக்கச் செய்தது. தொழில் துறையில் அமைந்திருந்த பயன்படுத்தப்படாத உற்பத்தித்திறன் இதனுல் பயன்படுத்தப்பட்டது. ஆனுல் இரண்டாவது திட்டக் காலத்தில் மூலதன உற்பத்தி வீதம் 3·3:1 என்ற நிலைக்கு மாறிவிட்டது. திட்ட மதிப்பீட்டின்படி, மூலதன–உற்பத்திவீதம் 2·3:1 என்ற அளவிற்கு இருக்குமென எதிர்பார்க்கப்பட்டது. முதல் திட்டத்தோடு ஒப்பிடும்போது, இரண்டாவது திட்டத்தின் மொத்த முதலீடு இருமடங்காகி இருந்தது. இரண்டாவது திட்டக் காலத்தில் முதலீட்டு வீதம் தேசிய வருவாயில் சுமார் 7 சதவீதம் என்ற அளவிலிருந்து 11 சதவீதமாக அதிகரித்தது. ஆனுல் தேசிய வருவாய் குறைந்த அளவிற்கே உயர்வடைந்தது. முதல் திட்டத்தில் தேசிய வருவாய் 18 சதவீதம் அதிகரித்தபோது, இரண்டாவது திட்டத்தில் 20 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டது. மூன்ருவது திட்டக்காலத்தில் மூலதன-உற்பத்தி வீதம் 2·2:1 என்ற அளவில் அமைந்திருந்தது.

பொருளாதாரத்தின் வளர்ச்சி (Growth of the Economy)

பொருளாதார வளர்ச்சி வீதம் முதல் திட்டத்தில் 3·4 சதவீதமாகவும், இரண்டாவது திட்டத்தில் 4 சதவீதமாகவும் இருந்தது.

மூன்ருவது திட்டக்காலத்தில் வேளாண்மை வளர்ச்சி பாதிக்கப்பட்டது; அந்நிய நாடுகளின் தாக்குதல் அமைந்திருந்தது; அயல் நாட்டுச் செலாவணிச் சிக்கலும் ஏற்பட்டிருந்தது. எனினும் இத் திட்டக் காலத்தில் வளர்ச்சி வீதம் 3·8 சதவீதம் என்ற அளவில் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. மூன்ருவது திட்டத்தில் ஆண்டொன்றிற்கு 5 சதவீத வளர்ச்சியைப் பெறும் வகையில் குறியிலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இரண்டாவது திட்டத்தின் வளர்ச்சிவீதத்தைக் காட்டிலும் மூன்ருவது திட்டத்தின் வளர்ச்சி வீதம் குறைவாக இருந்தமைக்கு விரைவான மக்கட்பெருக்கமே காரணமாகும். மூன்ருவது திட்டக்காலத்தில், சராசரித் தலாவருவாய் ஆண்டொன்றிற்கு 1·5 சதவீதம் என்ற அளவில் அதிகரித்தது. முதல் திட்டக்காலத்தில் இதன் அளவு 1·6 சதவீதமாகவும், இரண்டாவது திட்டக்காலத்தில் 1·9 சதவீதமாகவும் இருந்தது.

வேளாண்மை

இந்திய மக்கட்தொகையில் சுமார் 40 சதவீதத்தினர் தங்கள் வாழ்க்கைக்கு வேளாண்மையையே நம்பியிருக்கின்றனர். ஏற்றுமதி வாணிபத்தில் சுமார் 50 சதவீதம் வேளாண்மைப் பொருட்களாகவே இருக்கின்றன. தேசிய வருவாயின் பெரும்பகுதியும் வேளாண்மையிலிருந்தே பெறப்படுகின்றது. வேளாண்மை இந்தியப் பொருளாதாரத்தில் முக்கிய நிலையைக்கொண்டு அமைந்துள்ளது. பெருகிவரும் மக்களுக்கு உணவளிக்கவும், தொழில் முன்னேற்றத்திற்குத் தேவையான கச்சாப்பொருட்களை உற்பத்திச் செய்யவும் வேளாண்மையின் வளர்ச்சி இன்றியமையாததாகின்றது. வேளாண்மைத் துறையின் வளர்ச்சி வீதத்தைச் சார்ந்தே பொருளாதார வளர்ச்சி வீதம் அமையும். இக்காரணங்களால் நமது திட்டங்களில் வேளாண்மை வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகின்றது.

முதல் திட்டத்தில் வேளாண்மைக்காகவும், சமுதாய முன்னேற்றத் திட்டங்களுக்காகவும் மொத்த முதலீட்டில் 15 சதவீதம் ஒதுக்கப்பட்டது. இக்காலத்தில் வேளாண்மைத் திட்டங்களுக்காக ரூ. 206 கோடி செலவிடப்பட்டது பருவகாலச் சூழ்நிலைகள் சாதகமாக இருந்தமையால் வேளாண்மை உற்பத்தி 17 சதவீதத்திற்கும் அதிகமாக உயர்வடைந்தது. திட்ட முயற்சிகள் வெற்றி பெற்றமைக்கு இதுவும் ஒரு காரணமாயிற்று. உணவுத் தானியங்களின் உற்பத்தியைவிட வாணிபப் பயிர்களின் உற்பத்தி சிறப்பாக அதிகரித்தது. உணவுப் பொருட்களின் உற்பத்தியிலும் பெருக்கம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. 1955–56-ல் உணவுத்

தானியங்களின் உற்பத்தி 66·8 மில்லியன் டன்களாக இருந்தது. இது திட்டக் குறியிலக்கைவிட 4·3 மில்லியன் டன்கள் அதிகமானதாகும்.

இரண்டாவது திட்டத்தில் வேளாண்மைக்கான முக்கியத்துவம் சற்றுக் குறைவாகவே இருந்தது. வேளாண்மைக்கும், சமுதாய முன்னேற்றத்திற்கும் ரூ. 530 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டது. இது மொத்த முதலீட்டில் 11 சதவீதமாகும். பலவகைப்பட்ட வேளாண்மை முறைகளைப் பின்பற்றவும் நடவடிக்கைகள் எடுக்கப் பெற்றன. கால்நடைப் பராமரிப்பு, மீன்துறை வளர்ச்சி போன்றவற்றிற்கான வழிமுறைகளும் பின்பற்றப்பட்டன. வேளாண்மைத் துறையைத் திருத்தியமைக்கவும், விவசாயிகளின் வருவாயை உயர்த்தவும் இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. வேளாண்மைத் திட்டங்களுக்காக மட்டும் ரூ. 280 கோடி செலவழிக்கப்பட்டது. ஆனால் திட்டமிட்டபடி, வேளாண்மையில் உற்பத்திக் குறியிலக்குகளை எட்ட முடியவில்லை. தட்ப வெப்ப நிலைகளும், பருவச் சூழ்நிலைகளும் உற்பத்திக்குச் சாதகமாக அமைந்திருக்கவில்லை. அதோடு வேளாண்மையில் குறைந்த அளவு முதலீடு செய்யப்பட்டமையும் உற்பத்திக் குறைவாக இருந்தமைக்கு மற்றொரு காரணமாகும். பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுவதற்கான சாதகச் சூழ்நிலைகளும் முதல் திட்டத்தின் இறுதியில் உருவாகி இருந்தன. இரண்டாவது திட்டக்காலத்தில் முன்னேற்ற நிலைகளில் இவ்விதத் தடைகள் தோன்றியிருந்தாலும், மொத்த வேளாண்மை உற்பத்தியின் அளவு சுமார் 20 சதவீதம் அதிகரித்திருந்தது. சில முக்கியமான வேளாண்மைப் பொருட்களின் உற்பத்தியில் குறைவு ஏற்பட்டது, 1960–61-ல் உணவுத் தானியங்களின் உற்பத்தி 82 மில்லியன் டன்களாக இருந்தது. இது திட்டக் குறியிலக்கைவிட 2 மில்லியன் டன்கள் குறைவானதாகும். ஆனால் இரண்டாவது திட்டக் காலத்தில் உற்பத்திக் குறியீட்டெண் உயர்வடைந்தது குறிப்பிடத்தக்கது. 1955-56-ல் உற்பத்திக் குறியீட்டெண் 101·6 ஆக இருந்தது (அடிப்படை ஆண்டு 1949-50); இது 1960–61-ல் 120 ஆக உயர்வடைந்தது. வேளாண்மையில் இவ்வளர்ச்சி வீதம் போதுமானதாக இருக்கவில்லை. பொருளாதாரத்தின் பல துறைகளிலும் உற்பத்திக் குறியிலக்குகளை எட்ட முடியாமைக்கு இதுவே முக்கியக் காரணமாக இருந்தது. நீர்ப்பாசன வசதிகளுக்கான முதலீடு அதிக அளவில் அமைந்திருக்கவில்லை. உற்பத்தி உயர்விற்கான நல்விதைகளும், உரங்களும் உயர்ந்த அளவில் சிறப்பாகப் பயன்படுத்தப் பெற்றன என்று கூறமுடியாது. வேளாண்மை உற்பத்திக் குறைந்த அளவிலேயே இருந்தமைக்கு இவையும் காரணமாக இருந்தன எனலாம்.

மூன்றாவது திட்டத்தில் வேளாண்மை வளர்ச்சியின் முக்கியத்துவம் உணரப்பட்டது. இதனால் மறுபடியும் வேளாண்மை வளர்ச்சிக்கே முதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இத்திட்டக் காலத்தில் மத்திய அரசும், மாநில அரசுகளும் வேளாண்மை வளர்ச்சிக்காக ரூ. 220·3 கோடி செலவிடத் திட்டமிட்டன. உணவுப் பொருட்களின் உற்பத்தியில் தன்னிறைவைப் பெறுவதும், இறக்குமதிகளைக் குறைப்பதும் மூன்றாவது திட்டத்தின் முக்கிய நோக்கங்களாக அமைந்திருந்தன. ஆனால் இந்நோக்கங்கள் திட்டக்காலத்தில் நிறைவேற்றப்படவில்லை. 1965–66-ல் திட்டத்தின் உணவு உற்பத்திக் குறியீடு 101·6 மில்லியன் டன்களாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால் திட்டத்தின் இறுதியாண்டில் உற்பத்தி 72·3 மில்லியன் டன்கள் என்ற அளவிற்கே பெறப்பட்டது. முதல் இரண்டு திட்டக்காலத்திலும் பொருளாதார வளர்ச்சி வீதம் 4 சதவீதமாக இருந்தது. மூன்றாவது திட்டக் காலத்தில் வளர்ச்சி வீதம் ஆண்டொன்றிற்கு 2·6 சதவீதமாக அமைந்திருந்தது. இக்காலத்தில் குறைந்த வளர்ச்சி வீதத்திற்கான காரணம் ஆண்டொன்றிற்கு மக்கட்பெருக்கம் 2·4 சதவீதம் என்ற அளவிற்கு இருந்தமையேயாகும். மேலும் உணவுத் தானியங்களுக்கான 'வருவாய்த் தேவை நெகிழ்ச்சியும்' (Income Elasticity of Demand) அதிக அளவில் அமைந்திருந்தது. மூன்றாவது திட்டக் காலத்தின் ஒவ்வொரு ஆண்டிலும் உற்பத்தி ஒரே அளவினதாக அமைந்திருக்கவில்லை. உற்பத்தியில் அதிக ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டன. மூன்றாவது திட்டத்தின் முதல் ஆண்டில் உணவுத் தானியங்களின் உற்பத்தி 82 மில்லியன் டன்களாக இருந்தது. அதற்கு அடுத்த ஆண்டில் உற்பத்தி 82·7 மில்லியன் டன்கள் என்ற அளவிற்கு மட்டுமே உயர்வடைந்தது. 1963–64-ல் உணவுத் தானியங்களின் உற்பத்தி 78·5 மில்லியன் டன்களாகக் குறைந்து விட்டது. ஆனால் 1964–65-ல் உற்பத்தி மிக உயர்ந்த அளவாகிய 88·4 மில்லியன் டன்களை எட்டியது. இது 1963–64ஆம் ஆண்டு உற்பத்தியைவிட 10·2 சதவீத அளவிற்கு அதிகமான உற்பத்தியாகும். இந்த அளவிற்கு உற்பத்திப் பெருகியமைக்கான காரணம் வேளாண்மையில் அமைந்திருக்கக்கூடிய உற்பத்தித்திறன் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டமையேயாகும். மூன்றாவது திட்டத்தின் இறுதியாண்டில் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டது. பருவச் சூழ்நிலைகள் வேளாண்மை வளர்ச்சிக்குச் சாதகமாக இல்லை. உற்பத்தி உயர்விற்கான முதலீடுகளும் சிறப்பாகச் செய்யப்படவில்லை. ஐந்தில் நான்கு பகுதி சாகுபடி நிலங்களில் மழையை நம்பியே உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மழைப்பொழிவு பொய்த்து விட்டமையால் இறுதியாண்டில் உற்பத்தியில் சிறப்பான உயர்வைப் பெற முடியவில்லை.

வேளாண்மைப் பொருட்களின் உற்பத்தியைத் தனித்தனியே ஆராயும்போது வேறு சில உண்மைகளும் புலப்படுகின்றன.

1964–65-ல் மொத்த உணவுத் தானியங்களின் உற்பத்தித் தேக்க நிலையில் இருந்தபோது, அரிசி உற்பத்தி 38·7 மில்லியன் டன்கள் என்ற சாதனை அளவை எட்டியது. 1962–63-ல் அரிசி உற்பத்தி 4 மில்லியன் டன்கள் என்ற அளவிற்குக் குறைவடைந்திருந்தது; 1963–64-ல் அரிசி உற்பத்தி உயர்வான அளவிலேயே இருந்தது. ஆயினும் மூன்றுவது திட்டத்தின் இறுதியாண்டில் உற்பத்தியில் 6·7 மில்லியன் டன்கள் என்ற அளவிற்குக் குறைவு ஏற்பட்டது. கோதுமை உற்பத்தி 1962–63, 1963–64 ஆகிய ஆண்டுகளில் குறைவடைந்தது. ஆனால் 1964–65-ல் மீட்சி

வேளாண்மை உற்பத்திக் குறியீட்டெண்

(அடிப்படை ஆண்டு 1949–50 = 100)

1950-51	...	95·6
1951-52	...	97·5
1952-53	...	102·0
1953-54	...	114·8
1954-55	...	117·0
1955-56	...	116·8
1956-57	...	124·3
1957-58	...	115·9
1958-59	...	133·5
1959-60	...	130·3
1960-61	...	142·2
6961-62	...	144·8
1962-63	...	137·5
1963-64	...	142·6
1964-65	...	158·0
1965-66	...	158·3

ஏற்பட்டுக் கோதுமை உற்பத்தி சாதனை அளவாகிய 12·1 மில்லியன் டன்களை எட்டியது. இது 1963–64ஆம் ஆண்டின் உற்பத்தியைக் காட்டிலும் 22 சதவீத அதிக உற்பத்தியாகும். 1964–65-ல் பிற தானிய வகைகள், பருப்பு வகைகள் ஆகியவற்றின் உற்பத்தியிலும் மீட்சி ஏற்பட்டது.

உணவுப் பற்றுக்குறை சிக்கல்

அட்டவணைகளின்மூலம் வேளாண்மை உற்பத்தியில் மாற்றங்கள் எவ்வாறு ஏற்பட்டன என அறியலாம். விரைவான மக்கட்பெருக்கம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதைக் கடினமாக்கிவிட்டது. உணவுப்பொருட்களைப் பிற நாடுகளினின்றும் இறக்குமதி செய்வது தவிர்க்க முடியாததாகி விட்டது.

உணவு உற்பத்திக் குறியீட்டெண்

(அடிப்படை ஆண்டு 1949—50 = 100)

1950-51	...	90·5
1951-52	...	91·1
1952-53	...	101·1
1953-54	...	119·1
1954-55	...	115·0
1955-56	...	115·3
1956-57	...	120·8
1957-58	...	109·2
1958-59	...	130·6
1959-60	...	127·9
1960-61	...	137·1
1961-62	...	140·3
1962-63	...	130·4
1963-64	...	135·9
1964-65	...	150·0
1965-66	...	151·8

உணவுத் தானியங்களின் இறக்குமதி—இறக்குமதி அளவும், மதிப்பும்

		இறக்குமதிகள் (மில்லியன் டன்களில்)		இறக்குமதிகளின் மொத்த மதிப்பு (கோடி ரூபாயில்)
1951	...	4·8	...	217
1956	...	1·4	...	56
1960	...	5·1	...	193
1961	...	3·4	...	130
1962	...	3·6	...	141
1963	...	4·5	...	184
1964	...	6·2	...	266
1965	...	7·4	...	290
1966	...	10·3	...	523

மக்கட்தொகைப் பெருக்கமும், மக்கட்தொகை வளர்ச்சி வீதமும்

		மக்கட் தொகை (கோடியில்)		1961 வரை பத்தாண்டுகளுக்கான வளர்ச்சி வீதமும், அதற்குப் பிறகு ஆண்டு வளர்ச்சி வீதமும்
1951	...	36·10	...	13·3%
1961	...	43·91	...	21·5%
1961	...	44·27	...	2·3%
1962	...	45·34	...	2·4%
1963	...	46·43	...	2·4%
1964	...	47·55	...	2·4%
1965	...	48·70	...	2·4%
1966	...	49·89	...	2·4%
1967	...	51·13	...	2·5%

இந்த அட்டவணைகளின் மூலம் சில ஆண்டுகளில் உணவுத் தானியங்களின் உற்பத்தி அதிகமாகவும், வேறு சில ஆண்டுகளில்

உற்பத்திக் குறைவாகவும் உள்ளதை அறிய முடிகிறது. ஆனல் மக்கட்தொகைப் பெருக்கத்தின் காரணமாகத் தேவை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. 1957ஆம் ஆண்டில் மக்கட்தொகை 36·10 கோடியாக மட்டுமே இருந்தது; 1967-ல் இது 51·13 கோடியாக மிகவும் அதிகரித்துவிட்டது. மக்கட்தொகைப் பெருக்கத்தோடு, 'உணவுத் தானியங்களின் தேவைக்கான வருவாய்த் தேவை நெகிழ்ச்சி' மக்களின் வருவாய் உயரும்போது அதிகமாக உள்ளமையும் தேவை அதிகரிக்கின்றமைக்கான காரணங்களாகின்றன. மக்களின் வருவாய் உயரும்போது தரம் மிக்கத் தானியங்களின் தேவையே மிகுதியாகப் பெருகுகின்றது. எனவே சந்தைக்கு கொண்டு செல்லப்படுகின்ற தரம் குறைவான தானியங்களின் தேவை பாதிக்கப்படுகின்றது. தேவை பெருகும்போது, உற்பத்தி போதுமானதாக இல்லையாதலால் பெருமளவிற்கு உணவுத் தானியங்களின் இறக்குமதி அவசியமாகின்றது. உணவுச் சிக்கலைக் குறுகிய காலத்தில் தவிர்க்க இறக்குமதி உதவுகின்றது.

வேளாண்மை வளர்ச்சிக்கான வசதிகள்

நாட்டின் நீர்ப்பாசனத் திட்டங்களைப் பெருக்க, திட்டக்காலத்தில் அதிக முதலீடு செய்யப்பட்டது. அதற்கான நடவடிக்கைகள் பல வகைகளிலும் எடுக்கப்பட்டன. முதல் திட்டக்காலத்தில், 8·5 மில்லியன் ஏக்கர் நிலத்திற்குப் புதிதாக நீர்ப்பாசன வசதிகள் அளிக்க ரூ. 256 கோடி ஒதுக்கப்பட்டது. இதன்மூலம் பெரிய, நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இரண்டாவது திட்டத்திலும், மூன்றுவது திட்டத்திலும் நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக முறையே ரூ. 420 கோடியும், ரூ. 650 கோடியும் செலவழிக்கப்பட்டன. இக்காலத்தில் புதிதாக 29·4 மில்லியன் ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதியளிக்கத் திட்டமிடப்பெற்றது. திட்டங்கள் நிறைவேற்றப்பட்டக் காலத்தில் நீர்ப்பாசன வசதிகளின் முன்னேற்றம் சிறப்பாகவே இருந்தது. முதல் திட்டக்காலத்தில் நீர்ப்பாசன வசதிகள் 6·5 மில்லியன் ஏக்கருக்கும், இரண்டாவது திட்டக் காலத்தில் 11·7 மில்லியன் ஏக்கருக்கும், மூன்றுவது திட்டக் காலத்தில் 19·6 மில்லியன் ஏக்கருக்கும் அளிக்கப்பட்டன.

நீர்ப்பாசன வசதிகளின் பெருக்கம் சிறப்பாக அமைந்திருந்தாலும், அவ்வசதிகள் வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்திற்கு நன்கு பயன்படுத்தப்படவில்லை. அதிக முதலீட்டைத் தேவையாகக் கொண்ட நீர்ப்பாசன வசதிகள் சிறப்பாகப் பயன்படுத்தப்படாமை வருந்தத் தக்கதாகும். 1965–66-ல் 19·6 மில்லியன் ஏக்கருக்கு நீர்ப்பாசன வசதிகள் இருந்தன. ஆனல் உண்மையில் 15·4 மில்லியன் ஏக்கருக்கான நீர்ப்பாசன வசதிகள் மட்டுமே பயன்படுத்தப்

பட்டன. பிறகு இந்நிலை திருந்தியது எனலாம். முதல் திட்டக் காலத்தின் இறுதியில், பெருக்கப்பட்டிருந்த நீர்ப்பாசன வசதிகளில் பாதியளவுகூட பயன்படுத்தப்படவில்லை. இத்திட்டத்தில் 6·5 மில்லியன் ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதிகள் அளிக்கப் பட்டன; ஆனால் அதில் 3·1 மில்லியன் ஏக்கர் நிலத்திற்கான வசதிகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டன. நீர்ப்பாசன வசதிகளைச் சிறப்பாகப் பயன்படுத்த சில வழிமுறைகள் பின்பற்றப்பட்டன. எனவே இரண்டாவது திட்டத்தின் இறுதியில் (1960-61) 11·7 மில்லியன் ஏக்கருக்கான நீர்ப்பாசன வசதிகளில் 71 சதவீதம் பயன் படுத்தப்பட்டது. மூன்றாவது திட்டத்தின் இறுதியில் (1965-66) 19·6 மில்லியன் ஏக்கருக்கான நீர்ப்பாசன வசதிகளில் 15·4 மில்லியன் ஏக்கருக்கான நீர்ப்பாசன வசதிகள் பயன்படுத்தப் பெற்றன. இது மொத்த நீர்ப்பாசன வசதிகளில் 79 சதவீதமாகும்.

முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் ரூ. 15 இலட்சத் திற்கும் குறைவான செலவைக் கொண்ட சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களும் நிறைவேற்றப்பட்டன. பெரிய, நடுத்தர நீர்ப்பாசனங் களைப் பெருக்குவதற்கானத் திட்டங்களைத் தவிர இவ்வகை சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களாலும் வேளாண்மைத்துறை பயனடைந் தது. முதல் இரண்டு திட்டங்களிலும் புதிதாக 9·7 மில்லியன் ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதியளிக்க ரூ. 225 கோடி சிறிய நீர்ப் பாசனத் திட்டங்களுக்காகச் செலவிடப்பட்டது. இம் மூலதனம் 8·8 மில்லியன் ஏக்கர் நிலத்தில் வெள்ளத்தடுப்பு முறைகளைப் பின்பற்றவும், பிற வசதிகளைப் பெருக்கவும் பயன்படுத்தப்பட்டது. மூன்றாவது திட்டத்தில் 12·8 மில்லியன் ஏக்கர் நிலத்திற்கு நன்மை யைத்தரும் வகையில் ரூ. 174 கோடி ஒதுக்கப்பட்டது. இத்திட்டக் காலத்தில் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் மூலம் 12·8 மில்லியன் ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதியளிக்கத் திட்டமிடப்பெற்றது; ஆனால் மதிப்பீட்டைவிட அதிகமான அளவில் 13 மில்லியன் ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி கிடைத்தது.

பின்வருமாறு திட்டக்காலங்களில் உரங்களின் உற்பத்தி அதிகரித்திருக்கின்றது :

இந்திய வேளாண்மையில் இரசாயன உரங்கள் படிப்படியாக அதிக அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பசுந்தாள் உரங்கள் மேலும் அதிக அளவிற்குப் பயன்படுத்தத்தக்க நிலையைக் கொண்டிருக்கின்றன. இந்தியாவில் ஒரு ஹெக்டேர் நிலத்தில் 2·4 கிலோ கிராம் என்ற மிகக் குறைந்த அளவிற்கு மட்டுமே உரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அமெரிக்காவில் ஒரு ஹெக்டேர் நிலத்தில் 39·6 கிலோ கிராம் உரங்களும், ஜப்பானில் 270·2 கிலோ

		உர உற்பத்தி	
		நைட்ரஜன் உரங்கள் (ஆயிரம் டன்களில்)	பாஸ்பேட் உரங்கள் (ஆயிரம் டன்களில்)
1951-52	...	9	9
1955-56	...	80	12
1960-61	...	99	54
1965-66	...	233	111
1970-71	(குறியீடுகள்)	2000	1000

கிராம் உரங்களும் உபயோகப்படுத்தப்படுகின்றன. இந்தியாவில் மிகவும் குறைந்த அளவிற்கு உரங்கள் பயன்படுத்துவதைப் பல முறைகளின் மூலம் நீக்கலாம். உர உற்பத்தியைப் பெருக்குவது அதில் முக்கியமான ஒன்றாகும். உரங்கள் உரிய காலங்களில் கிடைப்பதில்லை. உரங்களின் விலைகளும் உயர்வாக இருக்கின்றன. விவசாயிகள் புதிய உரங்களைப் பயன்படுத்தி இடர்களை ஏற்க முன்வருவதில்லை. போதுமான கடன் வசதிகள் விவசாயிகளுக்கு அளிக்கப்படுவதில்லை. உரங்களின் அளிப்பு போதுமான அளவிற்கு இல்லாமையே இக்குறைபாடுகளில் முக்கியமானதாக இருக்கின்றது. அயல்நாட்டுச் செலாவணிப் பற்றுக்குறையால் இறக்குமதிகள் குறைக்கப்பட்டுவிட்டன. ஆனால் உள்நாட்டு உர உற்பத்தி தேவையான அளவிற்குப் பெருகவில்லை.

நீர்ப்பாசனம், உரங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதின் மூலம் நன்மையான விளைவுகள் தோன்ற நல்விதைகளும் உபயோகப்படுத்தப்பட வேண்டும். எனவே வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களில் அரசு இதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. ஒவ்வொரு வட்டாரத்திலும் நல்விதைகளைப் பயன்படுத்துவதற்கான வழிமுறைகள் முதல் திட்டத்தில் பின்பற்றப்பட்டன. எனினும் முதல் திட்டக்காலத்திற்குப் பிறகே நல்விதைகளை உற்பத்திச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 25 ஏக்கர் அளவைக் கொண்ட நிலத்தில் அரசின் விதைப்பண்ணைகள் அதிக எண்ணிக்கையில் அமைக்கப்பட்டன. பலவகைப்பட்ட தரம் மிக்க விதைகளும் இப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டன. விதைகளின் அளிப்புப் போதுமான அளவில் இருக்கவும் அரசு நடவடிக்கைகளை எடுத்தது.

மூன்ருவது திட்டத்தில் வேளாண்மைத் திட்டங்களுக்காக ரூ. 717 கோடி முதலீடாக்கப்பட்டது. வேளாண்மைக்காக முதல் திட்டத்திலும், இரண்டாவது திட்டத்திலும் முறையே ரூ. 206 கோடியும், ரூ. 271 கோடியும் ஒதுக்கப்பட்டன. வேளாண்மை வளர்ச்சிக்கான செலவு படிப்படியாக அதிகரித்துக்கொண்டே வருகின்றது. 1960–61-ல் வேளாண்மைக்கான முதலீடு ரூ. 71 கோடியாக இருந்தது; 1965–66-ல் இதன் அளவு ரூ. 226 கோடியாக உயர்ந்தது. இம்முதலீட்டின் கணிசமான ஒரு பகுதி சிறிய நீர்ப்பாசனம், நிலவளம், வனவளம், மீன்வளம் ஆகியவற்றைப் பெருக்குவதற்காகச் செலவிடப்பட்டது. இவற்றின் முன்னேற்றம் வேளாண்மை உற்பத்தி உயர்விற்கும் உதவுவதாகும். இவ்விதமான பொதுத்துறை முதலீடுகளைத் தவிர, வேளாண்மை உற்பத்தி உயர்விற்காகத் தனியாரும் முதலீடு செய்தனர். 1950–51 முதல் 1965–66 வரை நிலவளத்தைக் காக்கவும், பிற வேளாண்மை முன்னேற்றப் பணிகளை மேற்கொள்ளவும் தனியார் சுமார் ரூ. 600 கோடி செலவழித்துள்ளனர் என்று ஒரு கணக்கெடுப்பு குறிப்பிடுகின்றது.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் 1951-ல் தொடங்கப்பட்டபோது நாட்டில் உணவுப் பற்ருக்குறை அமைந்திருந்தது. எனவே முதல் திட்டத்தில் வேளாண்மைக்கு முதல் முக்கியத்துவம் தரப்பட்டது. இரண்டாவது திட்டமும், மூன்ருவது திட்டமும் தொழில் முன்னேற்றத்தில் அதிகக் கவனத்தைச் செலுத்தின; எனினும் வேளாண்மை வளர்ச்சிக்கான முதலீடு சிறப்பான அளவிற்கு உயர்த்தப்பட்டது. 1950–51-ல் உணவுத் தானியங்களின் உற்பத்தி 50 மில்லியன் டன்னுக இருந்தது; 1955–56-ல் இது 65·8 மில்லியன் டன்னுக உயர்ந்தது. இரண்டாவது திட்டக் காலத்தில் உணவுப் பொருட்களின் உற்பத்தி 64·6 மில்லியன் டன்னிலிருந்து 79·6 மில்லியன் டன்னுக உயர்ந்தது. 1951ஆம் ஆண்டிற்கும் 1961ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்டக் காலத்தில் உணவுத் தானியங்களின் உற்பத்தி 60 சதவீதம் அதிகரித்தது. மூன்ருவது திட்டத்தின் நோக்கம் 100 மில்லியன் டன் என்ற குறியிலக்கை அடைவதாக இருந்தது. ஆனுல் மூன்ருவது திட்டக்காலத்தில் இக்குறியிலக்கை எட்ட முடியவில்லை. 1964–65-ல் உணவுத் தானியங்களின் உற்பத்தி 88·4 மில்லியன் டன்னுக உயர்வடைந்தது. அதற்குப் பிறகு உற்பத்தியில் குறைவே ஏற்பட்டது.

வேளாண்மை உற்பத்தியின் குறியீட்டெண் (அடிப்படை ஆண்டு 1949–50 = 100) 1950–51-ல் 96 என்ற அளவிலிருந்து 1964–65-ல் 158 ஆக உயர்ந்தது. இந்தப் பதினன்கு ஆண்டுக் காலத்தில் உற்பத்தி 65 சதவீதம் அதிகரித்தது.

முதல் மூன்று திட்டக்காலத்தில், 13·8 மில்லியன் ஏக்கர் நிலம் பெரிய, நடுத்தர நீர்ப்பாசனத் திட்டங்களின் மூலம் பயனடைந்தது; சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களினுல் 31·6 மில்லியன் ஏக்கர் நிலம் பயனடைந்தது.

தொழில் முன்னேற்றம்

பொருளாதார முன்னேற்றத்தைப் பெற நீண்டகாலத்தில் உதவுவது தொழில் துறையாகும். தொழில்களின் வளர்ச்சிப் பொருளாதார முன்னேற்றத்தில் முக்கியப் பங்கு வகிக்கின்றது. நம்முடைய நாட்டில் இரண்டாவது திட்டம் முதல் தொழில் முன்னேற்றத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகின்றது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், அடிப்படைத் தொழில் களுக்கும் பெரிய தொழில்களுக்கும் வளர்ச்சியில் அதிக முக்கியத் துவம் தரப்பட்டது. தொழில் முன்னேற்றத்தில் பொதுத் துறைக்கு முக்கிய இடமளிக்கப்பெற்றது. முதல் இரண்டுத் திட்டங்களிலும் தொழில் முன்னேற்றத் திட்டங்களுக்காக சுமார் ரூ. 2000 கோடி முதலீடாக்கப்பட்டது. தொழில் உற்பத்தியும் இக்காலத்தில் சுமார் 95 சதவீதம் உயர்ந்தது. இம்முயற்சிகள் மூன்ருவது திட்டத்திலும் தொடர்ந்து நீடிக்கப்பெற்றன. இத்திட்டத்தின் மொத்த முதலீட்டில் சுமார் 20 சதவீதம் தொழில் முன்னேற்றத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டது.

மூன்ருவது திட்டத்தில், பொதுத்துறையிலும் தனியார்துறை யிலும் தொழில் முன்னேற்றத்திற்காக ரூ. 2993 கோடி செலவழிக்கத் திட்டமிடப்பட்டது. இதைத்தவிர தனியார்துறைத் தொழில்களை நவீனப்படுத்த ரூ. 150 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. செலவுகள் அதிகரித்தக் காரணத்திஞல் தொழில் முன்னேற்றத்திற்கான முதலீடு ரூ. 2,292 கோடியாக மாற்றியமைக்கப்பட்டது.

நான்காவது திட்டக்காலத்தில் நிறைவேற்றிக்கொள்ளலாம் என்ற எண்ணத்தால் சில திட்டங்கள் தள்ளிவைக்கப்பட்டன. இத்திட்டக்காலத்தில் பொதுத்துறையில் தொழில் முன்னேற்றத் திட்டங்களுக்காக ரூ. 1,600 கோடி செலவிடப்பட்டது. தனியார் துறை முதலீட்டைப் பற்றிய புள்ளிவிவரங்கள் திட்டவட்டமாகக் கிடைக்கவில்லை. எனினும் தனியார்துறையில் தொழில் முன்னேற் றத்திற்காக ரூ. 1,100 கோடி செலவிடப்பட்டிருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மூன்ருவது திட்டத்தில், குறியீட்டைக் காட்டிலும் குறைந்த அளவிலேயே தொழில் உற்பத்தி பெறப்பட்டது. இக்காலத்தில்

தொழில் உற்பத்தி 75 சதவீதம் கூடுமென எதிர்பார்க்கப்பட்டது; ஆனால் உற்பத்தி 36 சதவீதம் மட்டுமே உயர்வடைந்தது.

திட்டத்தின் பதினைந்து ஆண்டுக் காலத்தில், தொழில் உற்பத்திக் குறியீட்டெண் கீழ்க்கண்டவாறு படிப்படியாக அதிகரித்து வந்தது.

தொழில் உற்பத்திக் குறியீட்டெண்
(அடிப்படை 1956 = 100)

1950-51	...	—
1951-52	...	73·5
1952-53	...	75·8
1953-54	...	77·8
1954-55	...	83·1
1955-56	...	91·9
1956-57	...	100·0
1957-58	...	104·2
1958-59	...	107·7
1959-60	...	116·9
1960-61	...	130·1
1961-62	...	138·3
1962-63	...	150·5
1963-64	...	162·5
1964-65	...	174·7
1965-66	...	181·6

இரண்டாவது திட்டத்தோடு ஒப்பிடும்போது, மூன்றாவது திட்டத்தில் தொழில் வளர்ச்சி வீதம் உயர்வாக அமையவில்லை என்றே கூறவேண்டும். மூன்றாவது திட்டத்தின் முதல் நான்கு ஆண்டுகளிலும், ஆண்டொன்றிற்குச் சராசரி 7·5 சதவீதத் தொழில் வளர்ச்சி அமைந்திருந்தது. இத்திட்டத்தின் இறுதியாண்டில் 6 சதவீத வளர்ச்சி மட்டுமே பெறப்பட்டது. இக்காலத்தில் தொழில் துறையில் கணிசமான உற்பத்தித்திறன் ஏற்படுத்தப்பட்டிருந்தது; பல புதிய தொழில்களும் தொடங்கப்பட்டிருந்தன. எனினும் திட்டக்

குறியீடுகளுக்கும், உண்மையில் பெறப்பட்ட உற்பத்தியின் அளவுகளுக்கும் இடையே அதிக இடைவெளி அமைந்திருந்தது. இவ்வாறு தொழில் வளர்ச்சி குறைந்த வேகத்தில் ஏற்பட்டமைக்குப் பல காரணங்களைக் குறிப்பிடலாம். பல தொழில் நிறுவனங்களில் உற்பத்தித்திறன் முற்றிலுமாகப் பயன்படுத்தப்படவில்லை. தொழில்களுக்குத் தேவையான கச்சாப் பொருட்களின் அளிப்பும் போதுமான அளவிற்கு அமைந்திருக்கவில்லை. இயந்திரங்களைப் பழுது பார்ப்பதற்கான பாகங்களும் கிடைக்கவில்லை. அந்நியச் செலாவணிப் பற்றுக்குறையால், தொழில் துறைக்குத் தேவையான சில பொருட்களின் இறக்குமதியும்கூடக் குறைக்கப்பட்டது. பல தொழில் நிறுவனங்களின் முன்னேற்றம் வேளாண்மைத் துறையில் உற்பத்திச் செய்யப்படுகின்ற கச்சாப்பொருட்களின் அளவைக் கொண்டு அமையும். வேளாண்மை வளர்ச்சி சிறப்பாக அமையாத நிலையும் தொழில் துறையின் முன்னேற்றத்தைப் பாதித்தது.

இக்குறைகள் எல்லாவற்றிலும், உற்பத்தித்திறன் முழுமையாக பயன்படுத்தப்படாமையே விரைவான தொழில் முன்னேற்றத்தைக் கட்டுப்படுத்திய முக்கியக் காரணியாகும். அந்நியச் செலாவணிப் பற்றுக்குறையால் தொழில்களின் உற்பத்தித்திறன் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை. அந்நியச் செலாவணிக் கட்டுப்பாட்டினுல் இயந்திரங்களைப் பழுதுபார்ப்பதற்கான பாகங்களையும், பிற கருவிகளையும் தேவையான அளவிற்கு இறக்குமதி செய்ய முடியவில்லை. தொழிற் பொருட்களுக்கான தேவை குறைவாக இருந்தமையும், திறமையான உழைப்பின் அளிப்பில் பற்றுக்குறை அமைந்திருந்தமையும் உற்பத்தித்திறன் முழுமையாகப் பயன்படுத்தப்படாமைக்கான பிற காரணங்களாகும். போக்குவரத்து, செய்தித் தொடர்பு வசதிகள் அதிக அளவிற்குப் பெருகாமையும் தொழில் முன்னேற்றத்தைப் பாதித்தது. 1966-ல் NCAER (National Council of Applied Economic Research) கணக்கெடுப்பின்படி, உலோகப் பொருட்களைத் தயாரிக்கும் 26 தொழில்களில் எல்லாவற்றிலும் உற்பத்தித்திறன் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை. 1961ஆம் ஆண்டிற்கும் 1964ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்டக் காலத்தில் இவற்றுள் 10 தொழில்களில் உற்பத்தித்திறன் 51 முதல் 75 சதவீதம் வரை பயன்படுத்தப்பெறவில்லை; மூன்று தொழில்களில் 79·89 சதவீத உற்பத்தித்திறன் பயன்படுத்தப்படாமல் இருந்தது. மின்சார இயந்திரங்களை உற்பத்திச் செய்த 16 தொழில்களில் 43 சதவீத உற்பத்தித்திறன் பயன்படுத்தப்படவில்லை. பிற மின்சாரப் பொருட்களை உற்பத்திச் செய்த 15 தொழில்களில் உற்பத்தித் திறனுனது 30 முதல் 70 சதவீதம் வரை பயன்படுத்தப் பெறவில்லை. 56 சதவீத உற்பத்தித்திறன் இரசாயனத் தொழில்

களில் பயன்படுத்தப்படவில்லை. இவ்வாறு பல தொழில்களிலும் உற்பத்தித்திறன் முழுமையாகப் பயன்படுத்தப்படாமைக்கு அதிக உற்பத்திச் செலவே முக்கியக் காரணமாகும். தொழிற் பொருட்களின் விலைகள் உயர்வாக இருந்தமையால், வெளிநாடுகளில் அவற்றை விற்பனை செய்வதும் கடினமாக இருந்தது.

தொழில்துறையில் இவ்விதச் சிக்கல்கள் அமைந்திருந்தாலும், இரும்பு-எஃகு, இரசாயனப் பொருட்கள், ஆகியவற்றை உற்பத்தி செய்த தொழில்களில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டது. வேளாண்மையை கச்சாப் பொருட்களுக்காகச் சார்ந்திருந்த தொழில்கள், பொறியியற் தொழில்கள், நுகர்ப் பொருட்களை உற்பத்திச் செய்யும் தொழில்கள் போன்றவற்றின் முன்னேற்றமும் சிறப்பாகவே இருந்தது.

வினைமுடிந்த பல பொருட்களை உற்பத்திச் செய்யக்கூடியத் தயாரிப்புத் தொழில்கள் இந்தியாவில் இன்று அதிக எண்ணிக்கையில் அமைந்துள்ளன. நுகர்ப்பொருட்களை உற்பத்திச் செய்யக் கூடிய தொழில்களும், பொறியியற் பொருட்களை உற்பத்திச் செய்யக் கூடிய தொழில்களும் சிறப்பாக வளர்ந்துள்ளன. ஆனால் இத் தொழில்கள் குறைந்த அளவில் உற்பத்தியைச் செய்வதால் உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கின்றது. சிக்கனங்களைப் பெறக்கூடிய வகையில் இத்தொழில்கள் அமைக்கப்பட்டிருக்க வில்லை. உற்பத்தி முறைகளில் சிறப்பான தொழில் நுணுக்க முன்னேற்றம் ஏற்படவில்லை. இத்தொழில்கள் நல்ல முறையில் நிர்வகிக்கப்படாமையும் அவற்றின் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளது. தொழில் அமைப்பாளர்களே இவ்விதக் குறைபாடுகள் தோன்றுகின்றமைக்குக் காரணமாக இருக்கின்றனர். உற்பத்திச் செலவைக் குறைத்து, தரம்மிக்கப் பொருட்களை உற்பத்திச் செய்ய வேண்டும் என்பதற்கான நடவடிக்கைகளை அவர்கள் அக்கறை யோடு எடுப்பதில்லை. அயல்நாட்டுப் பொருட்களின் போட்டியி னின்றும் உள்நாட்டுத் தொழில்களைக் காக்க அரசு காப்புக் கொள் கையைப் பின்பற்றுகின்றது. பல தொழில்களுக்கும் இடையே போட்டி அமைந்திருக்கும்போதுதான், பலவிதமான சிக்கனங் களையும் பெற முயற்சிகள் எடுக்கப்பட்டு உற்பத்திச் செலவு குறைக்கப்படும். உள்நாட்டில் பாதுகாப்பு அளிக்கப்பட்ட சந்தை அமைந்திருக்கும்போது, தொழில் உற்பத்தி நிறுவனங்கள் சிறப் பாகச் செயல்படுவதில்லை. நம் நாட்டின் தொழில்கள் ஏற்றுமதி செய்கின்ற திறனை இழந்துள்ளமைக்கு இதுவும் ஒரு காரணமாகும். ஏற்றுமதித் திறன் குறைவாக உள்ளமையால், பொருட்களை இறக்குமதிச் செய்வதற்கான திறனும் குறைந்த அளவிலேயே உள்ளது.

நாட்டின் சில இடங்களில் மட்டும் தொழில்கள் செறிந்துள்ளமை முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கின்றது. இந்நிலை மேலும் நீடிக்காமல் கட்டுப்படுத்தப்படவேண்டும். நாட்டின் எல்லா இடங்களிலும் சரிசமமான வளர்ச்சி ஏற்படவேண்டும். ஆனால் இந்நோக்கத்தை எல்லாத் தொழில்களிலும் நிறைவேற்ற முடியாது. சில அடிப்படைத் தொழில்களையும், பெரிய தொழில்களையும் நாட்டின் எல்லாப்பகுதிகளிலும் தொடங்குவது இயலாதது. பல தொழில்கள் ஒரு சிலரின் உடைமையாக இருத்தல் நல்லதல்ல. பொருளாதாரச் சக்தி ஒரு சிலரிடம் குவிந்திருத்தல் பொருளாதார முன்னேற்ற நிலைகளில் பல இடையூறுகளையும் தோற்றுவிக்கும். இது பற்றிய சில உண்மைகள் 1965ஆம் ஆண்டின் 'முற்றுரிமை நிலைகள் விசாரணைக்குழுவின் அறிக்கையால்' (The Monopolies Inquiry Commission Report) வெளிப்பட்டன. சந்தையைக் கட்டுப்படுத்தும் அளவிற்குக்கூட சில தொழில்கள் முற்றுரிமை நிலையைக் கொண்டுள்ளன என்று அக்குழு குறிப்பிட்டது. அரசு தொழில் துறையில் முற்றுரிமை நிலைகள் தோன்றாமல் பார்த்துக் கொள்ளுதல் அவசியமானது. அரசின் உரிமை 'அனுமதிக் கொள்கை' (Licensing Policy) பொருளாதாரச் சக்தி ஒரு சிலரிடம் குவியாமல் இருக்குமாறு செயல்படுத்தப்படவேண்டும். இதற்காக அரசு பல திருத்தச் சட்டங்களையும் நிறைவேற்றலாம்.

இரண்டாவது திட்டத்திலும், மூன்றாவது திட்டத்திலும் பலவகைப்பட்ட தொழில்களின் முன்னேற்றத்திற்காக பேரளவில் முதலீடுகள் செய்யப்பட்டன. பொதுத்துறையில் சுரங்கத் தொழில் முன்னேற்றமடைந்தது. இரும்பு—எஃகுத் தொழில், உர உற்பத்தித் தொழில், இயந்திர உற்பத்தித்தொழில் ஆகியவற்றின் வளர்ச்சியில் அரசு முக்கியப் பங்கேற்றது. தொழில் உற்பத்திக் குறியீட்டெண் 1951-ல் 74 என்ற அளவில் இருந்தது மாறி (அடிப்படை ஆண்டு 1956 = 100) 1965-ல் 182 ஆக உயர்வடைந்தது. 14 ஆண்டுகளில் தொழில் உற்பத்தி 146 சதவீதம் அதிகரித்திருந்தது. இரும்பு—எஃகு, அலுமினியம் போன்ற தொழில் சிறப்பாக வளர்ந்தன. இவற்றைப் போன்றே பொறியியற் தொழில், இரசாயனத் தொழில், உரத்தொழில் ஆகியவற்றின் முன்னேற்றமும் உயர்வாக அமைந்திருந்தது. பேரளவில் முதலீடு செய்யப்பட்ட தொழில்கள் இரசாயனப் பொருட்கள், இயந்திரப் பொருட்கள், பெரிய மின்சாரச் சாதனப் பொருட்கள் போன்றவற்றை உற்பத்திச் செய்த தொழில்களேயாகும். தொழில் உற்பத்தி அமைப்பானது சிறப்பான அடிப்படையைக் கொண்டதாக மாறியது. திட்டங்கள் நிறைவேற்றப்பட்ட போது பலவகைப்பட்ட தொழில்களும் வளர்க்கப்பட்டன. 1950–51ஆம் ஆண்டிற்கும் 1955–56ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்டக்

காலத்தில் அமைந்திருந்த தொழில் அமைப்பைவிட மூன்ருவது திட்ட இறுதியில் அமைந்திருந்த தொழில் அமைப்பு வளர்ச்சி யடைந்த நிலையில் இருந்தது.

போக்குவரத்து, செய்தித் தொடர்பு வசதிகள்

போக்குவரத்து முன்னேற்றம் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகின்றது. இதன் காரணமாகவே முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் போக்குவரத்து முன்னேற்றத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. முதல் இரண்டு திட்டங்களிலும் மொத்த முதலீட்டில் சுமார் ஐந்தில் ஒரு பகுதி போக்குவரத்து முன்னேற்றத்திற்காகச் செலவிடப்பெற்றது. மூன்ருவது திட்டத்தில் போக்குவரத்திற்காக ரூ. 1,406 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனல் உண்மையில் போக்குவரத்து முன்னேற்றத்திற்காக ரூ. 2000 கோடி செலவழிக்கப்பெற்றது. திட்டத்தின் பதினைந்து ஆண்டுக் காலத்திலும், பலவகைப்பட்ட போக்குவரத்து வசதிகள் பெருக்கப் பட்டன. உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்து மட்டுமே வளர்க்கப் படவில்லை. தொடக்கக் காலத்தில் இருப்புப்பாதைப் போக்கு வரத்தில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இப் போக்குவரத்தில் பல முன்னேற்றமான மாற்றங்களும் செய்யப் பெற்றன. சரக்குகளை ஏற்றிச் செல்கின்ற வண்டிகளும், பிரயாணி களை ஏற்றிச் செல்கின்ற வண்டிகளும் எண்ணிக்கையில் பெருகின. சில இடங்களில் நீராவி வண்டிகளுக்குப் பதிலாக டீசல் வண்டிகள் ஓடத் துவங்கின. முதல் மூன்று திட்டங்களின் காலத்திலும் இரயில் வேக்களின் மூலம் சரக்குகளின் போக்குவரத்து $2\frac{1}{2}$ மடங்கு அதிகரித்தது; பயணிகளின் போக்குவரத்து சுமார் 45 சதவீதம் உயர்வடைந்தது. இப்பதினைந்து ஆண்டுகளிலும் சாலைப் போக்கு வரத்தின் மூலம் சரக்குகள் 6 மடங்கு அதிகமாக எடுத்துச் செல்லப்பட்டன; பயணிகளின் போக்குவரத்து சுமார் $3\frac{1}{2}$ மடங்கு மட்டுமே கூடியது. 1950–51-ல் 4 இலட்சம் கிலோமீட்டர் நீளத் திற்கு இருந்த சாலைகள் 1965–66-ல் 9·58 இலட்சம் கிலோமீட்டர் நீளத்திற்கு வளர்க்கப்பட்டன. திட்டக்காலத்தில் கப்பல் போக்கு வரத்து, ஆகாய விமானப் போக்குவரத்து ஆகியவற்றிலும் சிறப்பான முன்னேற்றம் ஏற்பட்டது. சிறிய துறைமுகங்களும், பெரிய துறைமுகங்களும் நல்ல நிலையில் வளர்க்கப்பட்டன. போக்குவரத்து முன்னேற்றத்தைப் போன்றே செய்தித் தொடர்பு வசதிகளும் பெருக்கப்பட்டன.

அயல்நாட்டுச் செலுத்து இருப்பு நிலை (Balance of Payments)

முதல் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் இந்திய ரிசர்வ் வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி இருப்புகள் (Foreign

Exchange Reserves) (தங்கத்தைத் தவிர்த்து) ரூ. 138 கோடி என்ற அளவிற்குக் குறைந்தது. முதல் திட்டத்தின் இறுதியாண்டில் வெளி நாட்டுச் செலாவணி இருப்புகள் ரூ. 785 கோடி என்ற அளவில் இருந்தது. அயல்நாட்டுச் செலாவணிச் சிக்கலைத் தீர்க்க வெளி நாட்டு உதவியும் பெறப்பட்டது. இரண்டாவது, மூன்றுவது திட்டக் காலங்களில் பாதக அயல்நாட்டுச் செலுத்து இருப்பு நிலை தொடர்ந்து நீடித்தது. இரண்டாவது திட்டக் காலத்தில் இந்திய ரிசர்வ் வங்கியின் இருப்புகள் ரூ. 186 கோடி என்ற அளவிற்குக் குறைவடைந்தது. மூன்றுவது திட்டக்காலம் முழுவதுமே கடின நிலையைக் கொண்டதாக அயல்நாட்டுச் செலுத்து இருப்பு நிலை அமைந்திருந்தது. வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் பாதக அயல்நாட்டுச் செலுத்து இருப்பு நிலை தோன்றுவதைத் தடுப்பது முடியாததாகும்.

இந்தியாவில் பொருளாதார முன்னேற்றமும், திட்டமும்

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை விரைவுபடுத்துவதே திட்டமிடுதலின் அடிப்படை நோக்கங்களுள் ஒன்றுகும். இந்தியா விலும் ஐந்தாண்டுத் திட்டங்கள் விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப் பெறவே நிறைவேற்றப்படுகின்றன. அதிகத் தேசிய வருவாயையும், அதிக தலா வருவாயையும், அதிக உற்பத்தி யையும் பெறுவதற்காகத் திட்டங்கள் தீட்டப்பெறுகின்றன. மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும் திட்டமிடுதலின் ஒரு நோக்கமாகின்றது. மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டம் 'தன் னிறைவு பெற்றுத் தானே வளர்கின்ற' (Self-reliant and Self-generating) பொருளாதாரத்தைப் பெற விரும்பியது. பொருளாதார முன்னேற்றக் கொள்கையும் அதற்கேற்பப் பின்பற்றப்பட்டது. விரைவான முன்னேற்றத்தைப் பெறுவதும் மூன்றுவது திட்டத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது. திட்டங்களின்றி பின்தங்கிய இந்தியா போன்ற நாடுகள் பொருளாதார முன்னேற்றத்தைப் பெற முடியாது.

இந்தியாவில் பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுவதற்கான திட்டங்கள் பல நிறைவேற்றப்பட்டு விட்டன. எனவே, எந்த அளவிற்கு இத்திட்டங்கள் பொருளாதார முன்னேற்றத்தைப் பெற உதவியுள்ளன என்பதை ஆராய்வது அவசியமானது. பொருளாதார நடவடிக்கைகள் எந்த அளவிற்கு அதிகரித்துள்ளன என்பதையும் இதன் மூலம் அறியலாம்.

பொருளாதார முன்னேற்றத்திற்கானத் திட்ட முறைகளின் வெற்றி தோல்விகள் அமைப்பு முறைகளின் மாற்றங்களைக்

கொண்டு அறியப்படுகின்றன. பொருளாதார அமைப்புகளில் ஏற்படுகின்ற மாற்றங்கள், வருவாய் உற்பத்தி முறைகள், வருவாய்ப் பகிர்வு முறைகள் போன்றவற்றின் மூலம் திட்டங்களின் வெற்றி தோல்விகளை நிர்ணயிக்கலாம். இவற்றில் ஏற்படுகின்ற மாற்றங்கள் பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்துவதாக இருக்கவேண்டும். திட்டங்கள் வெற்றி பெறுவது பொருளாதார மாற்றங்களைப் பொருத்து அமையும். ரோஸ்டாவ் (Rostow) போன்றவர்களும் முன்னேற்றத்தைப் பெற பொருளாதார மாற்றங்கள் தேவை எனக் குறிப்பிட்டுள்ளனர். பொருளாதாரத்தின் முன்னணித் துறைகள் விரைவாக வளரவேண்டும்; சேமிப்பு, முதலீட்டு வீதங்களில் உயர்வு ஏற்படவேண்டும்; சமுதாய மாற்றங்கள் தோன்றி மக்களின் பழக்க வழக்கங்களிலும், நடவடிக்கைகளிலும் முன்னேற்றம் ஏற்படவேண்டும். முன்னேற்ற மடைந்த, உறுதியான, தன்னம்பிக்கைக் கொண்ட, தீவிரமான கண்ணோட்டத்தை மக்கள் பெறுவது விரைவான பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும்.

திட்டமிட்டப் பொருளாதார வளர்ச்சியினால் கிடைக்கக்கூடிய வெற்றியையோ அல்லது தோல்வியையோ பின்வருபவைகளின் மூலம் நன்குணரலாம் :

(1) தலா வருவாய் கணிசமான அளவிற்கு உயர்ந்து, சேமிப்பு முதலீட்டு வீதங்கள் அதிகரிக்கின்றனவா என்பதை அறிய வேண்டும்.

(2) பொருளாதார முன்னேற்றத்திற்குச் சாதகமான வகையில் சமுதாய நடவடிக்கைகளில் மாற்றங்கள் தோன்றியுள்ளனவா என்பதை ஆராயவேண்டும். முன்னேற்றத்தைப்பெற விருப்பங் கொண்ட மக்கள் நாட்டில் அமைந்திருக்கவேண்டும்.

(3) முன்னேற்றத்தைப் பெறுவதற்கான சிறப்பானப் பொருளாதார அடிப்படை ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும் அறிய வேண்டும். பொருளாதார முன்னேற்றத்தைப்பெற சில அடிப்படைத் தொழில்கள் அமைந்திருக்கவேண்டும். போக்குவரத்து வசதிகள், செய்தித் தொடர்பு வசதிகள், நீர்ப்பாசன வசதிகள், மின்சார வசதிகள், மருத்துவ வசதிகள் போன்றவற்றைப் பெருக்குவதின் மூலம் விரைவான முன்னேற்றத்தை எளிதில் பெறமுடியும்.

முதலீட்டு வீதம் 10 சதவீதத்தை அடையும்போதுதான் பொருளாதார முன்னேற்றம் உறுதியாகத் தொடர்ந்து நீடிக்கும் என ரோஸ்டாவ் கூறுகின்றார். ஆனால் மக்கட்தொகைப் பெருக்கம்

மிகையாக உள்ள நாடுகளில், நிகர முதலீட்டு வீதம் தேசிய வருவாயில் 15 முதல் 18 சதவீதம் இருக்கவேண்டும். தற்பொழுதுள்ள வளர்ச்சிக்குன்றிய நாடுகளில் பொருளாதார முன்னேற்றம் உறுதியாகத் தொடர்ந்து நீடிக்க முதலீட்டு வீதம் இந்த அளவிற்கு உயர்வாக இருப்பது அவசியமாகின்றது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ளவைகளை வைத்து நோக்கும்போது இந்தியாவில் திட்டங்களினால் சிறப்பான வெற்றியைப் பெற்றுள்ளோம் என்று கூற இயலாது. பிற வளர்ச்சியடைந்து வரும் நாடுகளை ஒப்பிடும்போதுகூட, இந்தியாவில் ஆண்டொன்றிற்கு அதிகரிக்கின்ற தேசிய வருவாய், தலாவருவாய் ஆகியவற்றின் அளவு குறைவானது என்பதை அறிய முடிகின்றது. 1950–51ஆம் ஆண்டிற்கும் 1960–61ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்டக் காலத்தில் தேசிய வருவாய் 3·6 சதவீதம் மட்டுமே அதிகரித்தது; தலா வருவாய் 1·6 சதவீதம் மட்டுமே அதிகரித்தமைக்கு விரைவான மக்கட்தொகைப் பெருக்கமே காரணமாகும். இதே காலத்தில் பர்மாவிலும், தாய்லாந்திலும் 4·7 சதவீதம் என்ற அளவிற்குத் தேசிய வருவாய் அதிகரித்திருந்தது.

இந்தியாவில் தலா வருவாய் குறைந்த அளவிற்கு மட்டுமே அதிகரித்தமையால் சேமிப்பு, முதலீடு ஆகியவற்றின் அளவுகளிலும் சிறப்பான முன்னேற்றம் ஏற்படவில்லை. முதல் திட்டக்காலத்தில் சேமிப்பு தேசிய வருவாயில் 5 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாக உயர்ந்தது. இரண்டாவது திட்டத்தின் இறுதியாண்டில் சேமிப்பு 8·5 சதவீதமாக அதிகரித்தது. இரண்டாவது திட்டத்தின் இறுதியில் முதலீட்டு வீதமானது தேசிய வருவாயில் 11 சதவீதமாக இருந்தது. வெளிநாட்டு உதவியைப் பெற்றமையே சேமிப்பு வீதத்தைக் காட்டிலும் முதலீட்டு வீதம் உயர்வாக இருந்தமைக்குக் காரணமாகும். இக்காலத்தில் தேசிய வருவாயில் 3 சதவீதம் வெளிநாட்டு உதவியாகப் பெறப்பட்டது.

சுருங்கக் கூறினால், இந்தியாவில் திட்டமிட்டப் பொருளாதார வளர்ச்சியின் முதல் பத்தாண்டுகளில் தேவையான அளவிற்கு சேமிப்பு, முதலீட்டு வீதங்கள் உயரவில்லை. சேமிப்பு, முதலீட்டு வீதங்களை உயர்த்துவதின் மூலமே விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெறமுடியும்.

திட்டங்களின் மூலம் கிடைத்தப் படிப்பினைகள்

இந்தியாவில் திட்டங்களை நிறைவேற்றியதின் மூலம் பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுவதில் சிறப்பான வெற்றி கிட்டவில்லை,

எனினும் இத்திட்டங்கள் கணிசமான அளவிற்குப் பொருளாதார முன்னேற்றத்தைத் தந்துள்ளன என்று கூறலாம். 1951 ஆம் ஆண்டிற்கும் 1966ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்டக் காலத்தில் விரைவான வளர்ச்சி வீதம் அமைந்திருக்கவில்லை. பல காரணங்களால் விரைவான வளர்ச்சி இந்தியப் பொருளாதாரத்தில் ஏற்படவில்லை. பொருளாதாரத்தின் பல துறைகளிலும் திட்டமிட்டபடி வளர்ச்சியைப்பெற முடியவில்லை. வேளாண்மை வளர்ச்சிக்கான திட்டங்கள் வெற்றியைப் பெறவில்லை. வேளாண்மையின் வளர்ச்சியின்மையே பிற துறைகளின் முன்னேற்றத்தையும் பாதித்தது. "இந்தியாவில் திட்டங்கள் சிறப்பாகத் தீட்டப்படுகின்றன; ஆனால் அத்திட்டங்கள் சிறப்பாக நிறைவேற்றப்படுவதில்லை," என்ற கருத்து நிலவி வருகின்றது. வேறு சிலருடைய கருத்துப்படி, "திட்டங்களைத் தீட்டுவதில் சில குறைபாடுகள் உள்ளன; அத்திட்டங்களை நிறைவேற்றுவதிலும் சில குறைபாடுகள் அமைந்துள்ளன." திட்டத்தைச் சிறப்பாகத் தீட்டினாலும், அது சிறப்பாக நிறைவேற்றப்படுவதிலேயே வெற்றி அடங்கியுள்ளது. சில குறைகளைக் கொண்ட திட்டமும் சிறப்பாக நிறைவேற்றப் பட்டால் வெற்றியைப் பெற முடியும். முழு வெற்றியைப் பெற திட்டம் சரியாக வரையப்படுவதோடு, சிறப்பாகவும் நிறைவேற்றப் படவேண்டும். நம்முடைய திட்டங்களின் மூலம் நாம் பலவிதமான படிப்பினைகளைப் பெற்றுள்ளோம். இப்படிப்பினைகளை நன்கு உணர்வதினால், இனி திட்டங்களைத் தீட்டுவதிலும், நிறைவேற்றுவதிலும் ஏற்படக்கூடிய தவறுகளைக் களையலாம். சிறப்பான கொள்கைகளைப் பின்பற்றவும், திறமையான நிர்வாகத்தைச் செய்யவும் திட்டங்களினால் பெறப்பட்ட படிப்பினைகள் பெரிதும் உதவுமெனலாம். பின்வருபவை திட்டங்களின் மூலம் பெறப்பட்ட சில முக்கியமான படிப்பினைகளாகும்.

(1) உணவில் தன்னிறைவு

முதல் பதினைந்து ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட திட்டங்களின்மூலம் உணவுத் தானியங்களின் உற்பத்தியில் தன்னிறைவைப்பெற முடியவில்லை. இன்றும் வேளாண்மை பருவகாலச் சூதாட்டமாகவே இருக்கின்றது. உணவுப் பொருட்களின் இறக்குமதியை நம்பி இன்று இந்தியா அமைந்திருக்கின்றது. எனவே நிறைவேற்றப்படும் திட்டங்களில் வேளாண்மைக்கு முதல் முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும். இந்தியாவின் சாகுபடி நிலத்தின் பெரும் பகுதி 'வானம் பார்த்த பூமியாகவே' இருக்கின்றது. மழையை நம்பியே பல இடங்களிலும் வேளாண்மை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. வேளாண்மை உற்பத்தியின் வளர்ச்சி வீதம் உறுதியற்ற நிலையில் உள்ளமைக்கு இதுவே காரணமாகும்.

ஆனால் மழைப் பொழிவு உறுதியாக உள்ள இடங்களிலும், நீர்ப் பாசன வசதிகள் சிறப்பாக அமைந்திருக்கக்கூடிய இடங்களிலும் ஒரு ஏக்கருக்கான உற்பத்தியின் அளவைக்கூட்டுவது இன்றியமை யாததாகும். இவ்விடங்களில் உற்பத்தியின் அளவைப் பெருக்கு வதும் எளிதானதேயாகும். செறிவு முறையில் தீவிர விஞ்ஞானச் சாகுபடி முறைகளைப் பின்பற்றுவதற்கு அரசு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். நீர்ப்பாசன வசதிகள் சிறப்பாக அமைந்திருக்கக் கூடிய இடங்களில் இச்சாகுபடி முறைகள் பின்பற்றப்படலாம். இந்த இடங்களில் வேளாண்மை வளர்ச்சிக்கானச் சாதகச் சூழ்நிலைகள் அமைந்திருக்க வேண்டும். விவசாயிகளுக்குத் தேவை யான நிதி, நல்விதைகள், உரங்கள் போன்றவைகளை அளிக்க அரசு முயற்சிகளை எடுக்கவேண்டும். இவ்வசதிகளைப் பெறும்போதுதான் உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஊக்கம் விவசாயிகளுக்குத் தோன்றுகின்றது. வேளாண்மை, சமுதாய முன்னேற்றம், கூட்டுறவு, நீர்ப்பாசனம் போன்றவைகளுக்கான பல திட்டங்களுக் கிடையே இணைப்பு அமைந்திருக்கவேண்டும்.

வேளாண்மையின் வளர்ச்சிக்கு உதவுகின்ற பிற துறைகளின் முன்னேற்றத்திற்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். வேளாண்மைத் துறையின் வளர்ச்சி தொழில்கள், போக்குவரத்து, மின்சார உற்பத்தி ஆகியவற்றின் முன்னேற்றத்தைச் சார்ந்தும் அமையும். மேலும், தொழில் துறையிலிருந்தே உரங்கள், பூச்சிக் கொல்லி மருந்துகள், வேளாண்மைக் கருவிகள், இயந்திரங்கள் ஆகிய யாவும் உற்பத்திச் செய்யப்படுகின்றன. எனவே இத்தொழில் களின் முன்னேற்றம் வேளாண்மைத்துறை வளர்ச்சிக்கு உதவும். இத்தொழில்களின் முன்னேற்றத்தில் அரசு போதுமான கவனத் தைச் செலுத்த வேண்டும்.

(2) விலைநிலைப் பேருக்கம் (Stabilisation of Price Level)

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலிருந்து விலைகள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. சமீப காலத்தில் விலைகளின் உயர்வு மிகவும் அதிக அளவில் அமைந்துள்ளது. விலைகளின் உயர்வால் குறைந்த வருவாய் பெறுபவர்கள் பெரிதும் பாதிக்கப்படு கின்றனர்கள். மற்றொரு புறத்தில், விலைகளின் உயர்வு வணிகர் களுக்குக் கொள்ளை இலாபத்தை அளிக்கின்றது. இதனால் வருவாய், செல்வப் பங்கீடுகளில் அதிக ஏற்றத்தாழ்வுகள் தோன்றுகின்றன. விலை அதிகரிப்பதால் திட்டச் செலவும் கூடுகின்றது. மூன்றாவது திட்டத்தில் செலவுகள் கூடின. ஆயினும் குறியிலக்குகளின்படி உற்பத்தியின் அளவைப் பல துறைகளிலும் பெற முடியவில்லை.

விலைகள் தொடர்ந்து உயர்ந்துகொண்டே இருந்தால் திட்டங்களின் மூலம் வெற்றியைப் பெறமுடியாது. நேரடியாக உற்பத்தியைத் தராத சில துறைகளில் அரசு செலவுகளைச் செய்கின்றது. இதனுல் விலைகள் அதிகரிக்கும்போது, (நேரடியாக உற்பத்தியைத் தருகின்ற) முன்னேற்றச் செலவுகளுக்கான நிதிப்பற்ருக்குறை ஏற்படுகின்றது. திட்டம் வெற்றியைப் பெறும் வகையில் நிறைவேற்றப்பட வேண்டுமென்ருல் விலைநிலைப் பேருக்கம் இன்றியமையாததாகின்றது. நம் நாட்டில் விலையுயர்வுக்கான முக்கியக் காரணம் உணவுத் தானியங்கள், வேளாண்மைப் பொருட்கள் ஆகியவற்றின் பற்ருக் குறையேயாகும். இப்பற்ருக்குறை நிலையைத் தவிர்க்க வேளாண் மைப் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்குவது மட்டும் போதாது. அரசு சில முக்கியமான வேளாண்மைப் பொருட்களைக் கொள் முதல் செய்து கையிருப்பாக வைத்திருக்க வேண்டும். விலைகள் உயர்வடையும்போது இச்சேமிப்புக் கையிருப்பைக் குறைந்த விலையில் விற்பனை செய்ய வேண்டும். இதன்மூலம் கள்ளச் சந்தை விற்பனையையும், பொருட்கள் பதுக்கப்படுவதையும் தடுக்கலாம். பற்ருக்குறை நிதியாக்கத்தின் அளவைக் குறைப்பதும் அவசிய மானதாகும். புதிய பணத்தைத் தோற்றுவிப்பதின் மூலம் நிலையான முன்னேற்றத்தை உறுதியாகப்பெற முடியாது. பொருளாதாரம் முன்னேற்றமடைந்துவரும் நிலைகளில் விலைநிலைப் பேருக்கத்தைப் பெறுவது அவசியமானது. ஆனுல் குறைந்த வேகத்தில் படிப்படி யாக விலையுயர்வு ஏற்படுவதை அனுமதிக்கலாம். விலைகளின் நிலை களில் அதிக ஏற்றத்தாழ்வுகள் ஏற்படக்கூடாது விலைகளைக் கட்டுப் படுத்த அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

(3) குடும்பநலத் திட்டங்களைப் பரப்புதல்

நம் நாட்டில் பொருளாதார முன்னேற்றத்தின் வேகமானது குறைவாக இருக்கின்றது. திட்டத்தினுல் ஏற்படக் கூடிய நன்மை களைச் சிறப்பாகப் பெற முடியாமைக்கு விரைந்து பெருகிவரும் மக்கட் தொகையே காரணமாகும். 1950–51ஆம் ஆண்டிற்கும் 1960–61ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்டக் காலத்தில் தேசிய வருவாய் 42 சதவீதம் அதிகரித்தது. ஆனுல் இக்காலத்தில் மக்கட் தொகைப் பெருக்கம் 21·5 சதவீதம் என்ற அளவிற்கு இருந்தமை யால், தலாவருவாய் 16 சதவீதம் மட்டுமே அதிகரித்தது. தலா வருவாய் குறைந்த அளவிற்கு இருந்தமையால் சேமிப்பு, முதலீடு ஆகியவற்றின் அளவுகளிலும் குறிப்பிடத்தக்க வகையில் முன் னேற்றம் ஏற்படவில்லை. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தின்முதல் நான்கு ஆண்டுகளில் தேசிய வருவாய் 20 சசவீதம் அதிகரித்தது; ஆனுல் இறுதியாண்டில் தேசிய வருவாய் உயர்வு 5·7 சதவீதமாகக்

குறைந்துவிட்டது. மக்கட்தொகைப் பெருக்கம் ஆண்டொன்றிற்கு 2·5 சதவீதமாக இருந்தது. ஓரளவு உயர்வடைந்த தேசிய வருவாயினுல் நன்மையைப் பெற முடியாமைக்கு இதுவே முக்கியக் காரணமாக இருந்தது. மூன்ருவது திட்டத்தின் முதல் ஆண்டிலும் இறுதியாண்டிலும் தலா வருவாய் ஒரே அளவில் இருந்தது குறிப்பிடத்தக்கதாகும். பொருளாதார முன்னேற்றத்தினுல் பெறப்படுகின்ற நன்மைகளை முழுமையாக அடைய முடியாமைக்கு அதிக மக்கட் பெருக்கமே காரணமாகும். இதன் காரணமாகவே மக்களின் வாழ்க்கைத்தரமும் தாழ்வாக இருக்கின்றது. எனவே மக்கட் பெருக்க வீதத்தைக் குறைப்பது அவசியமாகின்றது. இந்நோக்கத்தை நிறைவேற்ற குடும்பநலத் திட்டங்கள் நாடு முழுதும் பரப்பப்படுதல் வேண்டும். இத்திட்டங்களை வெற்றியைப் பெறும் வகையில் நிறைவேற்ற அரசு மேலும் அதிக மூலதனத்தைச் செலவிட வேண்டும். மருத்துவத்துறையைச் சார்ந்த அனைவரும் குடும்பநலத் திட்டங்கள் வெற்றிபெறப் பாடுபடவேண்டும். அரசின் நிறுவனங்களும், தனியார் அமைப்புகளும் இப் பணிகளில் ஈடுபடுத்தப்படுவது இன்றியமையாததாகும். சமூகத் தொண்டர்களும் குடும்பநலத் திட்டங்களைப் பரப்ப உதவலாம். இந்தியப் பொருளாதார முன்னேற்றம் குடும்பநலத் திட்டங்களின் வெற்றியைச் சார்ந்தே அமையும்.

(4) தன்னிறைவு பெற்றுத் தானே வளர்கின்ற பொருளாதாரத்தைப் பெறுதல்

இந்தியத் திட்டங்கள் பலவித நோக்கங்களைக் கொண்டவைகளாக இருக்கின்றன. அந்நோக்கங்களில் ஒன்ருக இருப்பது வெளிநாட்டு உதவியைச் சார்ந்திருக்கின்ற நிலையைக் குறைப்பதாகும். ஐந்தாவது திட்டத்தின் இறுதிக்குள் வலுவான பொருளாதாரத்தைப்பெற நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இதற்குப் பிறகு வெளிநாட்டு உதவியைப் பெறுவது முற்றிலுமாக நீக்கப்படும். அடுத்த 15 ஆண்டுகளில் தன்னிறைவுப் பொருளாதாரத்தைப் பெறுவதை முக்கிய நோக்கமாகக்கொண்டு மூன்ருவது ஐந்தாண்டு திட்டம் அமைந்திருந்தது. பொருளாதார முன்னேற்றத்தின் தொடக்கநிலைகளில் வெளிநாட்டு உதவியைப் பெறுவது விரும்பத்தக்கதேயாகும். வெளிநாட்டு உதவியின் மூலம் பொருளாதார முன்னேற்றத்தை விரைவடையச் செய்யலாம். ஆனுல் தொடர்ச்சியாக வெளிநாட்டு உதவியையே நம்பியிருத்தல் நன்மை தராது. வெளிநாட்டுக் கடன் பெருகும்போது பொருளாதார முன்னேற்றத்தில் பல தடைகள் தோன்றுகின்றன. பெற்ற கடனையும், அதற்கான வட்டியையும் திருப்பித்தருதல் பெரிய சுமையாக அமைகின்றது. இந்தியா வெளிநாட்டு உதவியைச் சார்ந்திருக்கின்ற நிலையைக்

குறைப்பது இன்றியமையாதது. எனவே இதற்கான வழிமுறைகளை அரசு பின்பற்ற வேண்டும். இறக்குமதிக் குறைப்பு நடவடிக்கைகளையும், ஏற்றுமதிப் பெருக்க நடவடிக்கைகளையும் அரசு எடுப்பது அவசியமாகின்றது. வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதின் மூலம் உணவுப்பொருட்களின் இறக்குமதியைக் குறைக்கலாம். முன்னேற்றத் திட்டங்களை நிறைவேற்ற சிலவகைப்பட்ட மூலதனப் பொருட்களை இறக்குமதிச் செய்வது தவிர்க்க முடியாதது. ஆனால் நாளடைவில் இப்பொருட்களை உள்நாட்டிலேயே உற்பத்திச் செய்ய முடியும். இதற்கான சிறப்பு முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டும். பாரம்பரியப் பொருட்களின் ஏற்றுமதியைப் பெருக்குவதோடு, புதுமையான தொழிற்பொருட்களையும் ஏற்றுமதிச் செய்வது அவசியமாகும். பலவகைப்பட்ட நுகர்ப்பொருட்களை ஏற்றுமதிச் செய்வது வெற்றியைப் பெற உதவும். உலகச் சந்தையில் தரமான பொருட்களைக் குறைந்த விலையில் விற்பனை செய்வது நன்மைதரும். இன்னும் சில ஆண்டுகள் வரை ஏற்றுமதியைப் பெருக்கி, இறக்குமதியைக் குறைப்பது கடினமானதேயாகும். வெளிநாட்டுக் கடனிற்கான வட்டியைக் கொடுப்பதே நமக்குப் பெரும் சுமையாக உள்ளது. ஆகவே, இறக்குமதியைக் குறைக்க உதவுகின்ற தொழில்களின் வளர்ச்சியை விரைவாக்க வேண்டும். இத்தொழில்களின் முன்னேற்றத்திற்கு அரசு முக்கியத்துவம் அளிக்கவேண்டும். ஏற்றுமதிப் பெருக்கத்திற்கு உதவக்கூடிய தொழில்கள் பலவும் அரசின் சலுகைகளினால் ஊக்குவிக்கப்படுதல் அவசியமானதாகும்.

(5) சமுதாய நோக்கங்களையும், அவற்றை அடையும் முறைகளையும் தெளிவாக வரையறை செய்தல்

நமது திட்டங்கள் பல சமுதாய நோக்கங்களைக் கொண்டவைகளாக இருக்கின்றன. அரசின் இப்பரந்த நோக்கங்கள் தெளிவாக விளக்கப்படவில்லை. அந்நோக்கங்களை அடைவதற்கான வழிமுறைகளும் திட்டங்களில் குறிப்பிடப்படவில்லை. நாட்டு மக்கள் அனைவருக்கும் சமமான வாய்ப்புக் கொடுக்கப்பட வேண்டுமென்பது நமது திட்டங்களின் முக்கிய நோக்காக இருக்கின்றது. வருவாயிலும், செல்வப்பங்கீட்டிலும் உள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதும் திட்டங்களின் நோக்கமாக உள்ளது. மக்களின் அவசியத் தேவைகளைப் பூர்த்திச் செய்வதும், வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதும் இன்றியமையாதவைகளாக இருக்கின்றன. பொருளாதாரச் சிக்கல்களையும், நோக்கங்களையும் மட்டும் திட்டங்கள் குறிப்பிடுவது போதுமானதாகாது. அச்சிக்கல்களுக்கான தீர்வுகளைப் பெறுவதற்கு சிறப்பான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதும் இன்றியமையாதது. எவ்விதமான வழிமுறைகளை அரசு பின்பற்றும் என்பதைத் தெளி

வாகத் திட்டங்களில் வரையறை செய்யவேண்டும். திட்டங்களில் வெற்றியைப் பெற இதுவே சிறந்த வழியாகும்.

(6) மூலதனப் பொருட்கள், நுகர் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்குதல்

இரண்டாவது திட்டம் வரையப்பட்டபோது, அடிப்படைத் தொழில்களிலும், பெரிய தொழில்களிலும் முதலீடுகள் செய்யப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. அப்போது அமைந்திருந்த, நுகர்ப் பொருட்களை உற்பத்திச் செய்யக்கூடிய நவீன தொழில் நிறுவனங்களின் மூலமும் உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதிகரிக்கின்ற நுகர்ப்பொருட்களின் தேவையைச் சமாளிக்க இவ்வாறு உற்பத்தியைப் பெருக்குவது அவசியமென உணரப்பட்டது. மேலும் இத்தொழில் நிறுவனங்கள் முற்றிலுமாகத் தங்கள் உற்பத்தித் திறனைப் பயன்படுத்த வேண்டுமெனவும் கருதப்பட்டது. பாரம்பரியத் தொழில்களின் முன்னேற்றத்திற்கு விரைவான தொழில் நுணுக்க மாற்றங்கள் அவசியமாயின. முன்னேற்றமடைந்தத் தொழில் நுணுக்க உற்பத்தி முறைகளைப் பின்பற்றுவதால் தோன்றக்கூடிய வேலையின்மையைத் தவிர்க்கச் சிறு தொழில்களை வளர்க்க அரசு திட்டமிட்டது. நாடு முழுவதும் சிறு தொழில்களை அமைத்து நுகர்ப் பொருட்களின் உற்பத்தியைக் கூட்டவும் கருதப்பட்டது. ஆனால் இதற்கான திட்டங்களைச் செயல் படுத்துவது கடினமானதாகும். இந்நிலைகளைப் பெறுவதற்கான நடவடிக்கைகளையும் அரசு இதுவரை சிறப்பாக எடுக்கவில்லை. இதன் விளைவாக நுகர்ப் பொருட்களின் உற்பத்தி பெருகவில்லை. சில அவசியமான நுகர்ப் பொருட்களின் பற்றுக்குறையும்கூட அமைந் திருக்கின்றது. இனி நிறைவேற்றப்படும் திட்டங்களில் நுகர்ப் பொருட்களை உற்பத்திச் செய்யக்கூடிய தொழில்களின் முன்னேற்றத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுதல் வேண்டும்.

(7) பல உற்பத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதில் காலதாமதம்

பல உற்பத்திக்கானத் திட்டங்கள் உரிய காலத்தில் திட்ட மிட்டபடி நிறைவேற்றப்படுவதில்லை. திட்டங்களைத் தீட்டுவதில் குறைபாடுகள் இருந்தாலும் அல்லது திட்டங்களை நிறைவேற்று வதில் குறைபாடுகள் இருந்தாலும் இந்நிலை தோன்றக்கூடும். திட்டங்களை நிறைவேற்றுவதில் ஏற்படுகின்ற காலதாமதத்தைக் களைய, அத்திட்டங்களுக்கான தேவைப் பொருட்களின் அளிப்பு உயர்ந்த அளவில் அமைந்திருக்கவேண்டும். ஆனால் சில பெரிய திட்டங்களை நீண்டகாலத்தில் மட்டுமே நிறைவேற்ற முடியும். முதலீடுகள் செய்யப்பட்டு நீண்டகாலத்திற்குப் பிறகு மட்டுமே இத்திட்டங்களில் உற்பத்தித் தொடங்குகின்றது. இந்த இடைக்

காலத்தில் வருவாய்ப் பெருக்கத்தின் காரணமாக விலைகள் அதிகரிக்கின்றன. உற்பத்திப் பொருட்களின் அளிப்பு கூடாதபோது வருவாய்ப் பெருக்கம் ஏற்படுகின்றமையே இதற்குக் காரணமாகும். அதிகரிக்கின்ற தேவைக்கேற்ப பொருட்களின் அளிப்பு அப்பொழுது அமைவதில்லை. எனவே பெரிய திட்டங்களை நிறைவேற்றுவதோடு, குறுகிய காலத்தில் சில பொருட்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்கான சிறிய திட்டங்களும் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன் மூலம் பொருளாதாரத்தில் அமைந்திருக்கக்கூடிய பணவீக்க நிலையைக் கட்டுப்படுத்தலாம். உற்பத்தியைக் குறுகிய காலத்தில் போக்குவதால் பல நன்மைகளும் பெறப்படுகின்றன.

(8) அடையக்கூடிய குறியீடுகளை நிர்ணயித்தல்

விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுவது அவசியமானதேயாகும். ஆனால் அதற்கான வசதிகள் அமைந்திருக்காவிட்டால் வளர்ச்சியை விரைவாகப் பெற முடியாது. நம்முடைய திட்டங்கள் பல நிலைகளிலும் குறியிலக்குகளை எட்டுவதேயில்லை. குறியிலக்குகளை நிர்ணயிக்கும்போது, அவை அடையக்கூடிய தன்மையைக் கொண்டு அமைந்திருக்கவேண்டும். அடையமுடியாத அளவிற்குக் குறியிலக்குகளை நிர்ணயிப்பது தவறானதாகும். திட்டங்களை நிறைவேற்றும்போது பலத் தடைகள் தோன்றக்கூடும். அத்தடைகளைப் பற்றியெல்லாம் ஆராய்ந்து குறியிலக்குகளைத் திட்டத்தைத் தீட்டுபவர்கள் நிர்ணயிக்கவேண்டும். நினைத்ததை நடத்தியே முடிப்பதென்பது முடியாததாகும். சாதகமான சூழ்நிலைகள் அமைந்திருக்கும்போதுதான் திட்டக் குறியீடுகளை அடைய முடியும். ஆனால் திட்டத்தைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கான சாதகச் சூழ்நிலைகளை ஏற்படுத்துவதும் அரசின் நடவடிக்கைகளினால் முடியக் கூடியதேயாகும். மக்களுக்கு அரசு உறுதிகளை அளிக்கும்போது, அவை நிறைவேற்றத்தக்க உறுதிகளாக இருக்கவேண்டும். திட்டங்களின் குறியீடுகள் பெறத்தக்க வகையில் அமைந்திருத்தல் அவசியம். குறியீடுகளை அடைவதற்கான யுக்திகளையும் அரசு பின்பற்றுதல் வேண்டும்.

(9) திட்டங்களின் முதலீட்டிற்கேற்ப பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுதல்

திட்டங்களின் செலவுகளுக்கேற்பப் பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்படுகின்றதா என்பதை அறிவது அவசியமானதாகும். இந்தியாவில் திட்டங்களை நிறைவேற்ற அரசு அதிகச் செலவுகளைச் செய்கின்றது; ஆனால் அதற்கேற்பப் பொருளாதாரம் வளர்ச்சியடைகின்றதா என்பது ஐயத்திற்குரியதேயாகும். முதலீடுகளைச் செய்வது என்பது திட்டத்தின் கொள்கையாகின்றது. எந்த

நோக்கத்திற்காக முதலீடு அங்கீகரிக்கப்பட்டதோ, அந்த நோக்கம் நிறைவேற்றப்படவேண்டும். நமது திட்டங்களின் மூலம் முதலீடுகள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. ஆனால் இம்முதலீடுகள் திட்டங்களின் நோக்கங்களை நிறைவேற்ற எந்த அளவிற்கு உதவின என்பது ஆராயப்படுவதில்லை. திட்டங்களின் செலவுகள் பற்றி விளக்கப்படுகின்றது. திட்டச் செலவுகளால் ஏற்பட்ட நன்மைகள் பெருமளவிற்கு விவாதிக்கப்படுவதில்லை. திட்டங்களின் செலவு களால் ஏற்பட்ட விளைவுகளை மதிப்பீடு செய்வது அவசியமான தாகும். திட்டங்களினால் விளைந்த நன்மைகள் ஆராயப்படும்போது, குறைபாடுகளும் வெளிப்படுகின்றன. திட்டங்களைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கு இதுவே சிறந்த வழியாகும்.

(10) மாநில அரசுகளின் நிர்வாகப் பலவீனங்கள் நீக்கப்படுதல்

முன்னேற்றத்திற்கான சில திட்டங்களை மாநில அரசுகள் நிறைவேற்றுகின்றன. இதற்கான நிதியை மத்திய அரசு மாநில அரசுகளுக்கு அளிக்கின்றது. மாநில அரசுகள் போதுமான அளவிற்கு நிதிவசதிகளைப் பெற்றிருப்பதில்லை. எனவே சில திட்டங்களை நிறைவேற்ற மத்திய அரசு அளிக்கின்ற நிதியை மாநில அரசுகள் வேறு சில பணிகளுக்காகப் பயன்படுத்துகின்றன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் இந்நிலையானது அமைந் திருந்தது. திட்டத்தின் முக்கியத்துவங்களை மாநில அரசுகள் உணர்ந்து அதற்கேற்பச் செயல்படவேண்டும். அப்பொழுதுதான் திட்டத்தை நிறைவேற்றுவதின் மூலம் முழு வெற்றியைப் பெற இயலும். மத்திய அரசிற்கும் மாநில அரசுகளுக்கும் சுமுகமான உறவு நிலவவேண்டும். திட்டங்கள் வெற்றிபெற மத்திய அரசிற்கு மாநில அரசுகளின் ஒத்துழைப்பு இன்றியமையாதது. திட்டங்கள் அங்கீ கரிக்கப்பட்ட வகையில் நிறைவேற்றப்பட்டால் பல நன்மைகளையும் பெறமுடியும். இதற்கு மாநில அரசுகளின் நிர்வாகப் பலவீனங்களை நீக்குதல்வேண்டும்.

(11) திட்டங்களை நிறைவேற்றுவதில் உள்ள குறைபாடுகளை நீக்குதல்

மதிப்பீட்டைவிடச் சிலத் திட்டங்களின் செலவு அதிகமாக அமைகின்றது. இவ்வாறு அதிக செலவைச் செய்தாலும், திட்டக் குறியிலக்குகள் அடையப்படுவதில்லை. இதன் மூலம் திட்டங்களின் தரத்தையும், திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்ற நிலையின் தரத் தையும் அறியலாம். பல உற்பத்தித் தொழில் நிறுவனங்களுக்குப் போதுமான அளவில் உற்பத்திச் சாதனப் பொருட்கள் கிடைப்ப தில்லை. தொழில் நுட்ப முன்னேற்றத்தைப் பெறுவதற்கான வசதி களும் அமைந்திருப்பதில்லை. சில நிலைகளில் அரசின் ஆதரவும்

அவற்றிற்குக் கிடைப்பதில்லை. தொழில் நிறுவனங்கள் உற்பத்தியைத் தொடங்கும் முன்பே இவ்வித இடர்ப்பாடுகள் தோன்றுகின்றன. திட்டமிடுதலில் உள்ள தவறுகளும், திட்டத்தை நிறைவேற்றுதலில் உள்ள குறைபாடுகளும் இவற்றிற்குக் காரணமாக இருக்கின்றன. இத்தவறுகளையும், குறைபாடுகளையும் நீக்குவது எளிதானதே யாகும். திட்டம் சரியாக நிறைவேற்றப்படுகின்றதா என்பது பற்றி அரசின் சிறப்பான கண்காணிப்பு அமைந்திருக்கவேண்டும். ஒவ்வொரு திட்டமும் நல்லமுறையில் தொடங்கப்பட்டு நன்கு நிர்வகிக்கப்படுகின்றதா என்பதையும் அரசு அடிக்கடி ஆராய வேண்டும். அக்கறைகொண்ட அரசு தீவிரமாகச் செயல்படுவதின் மூலம் திட்டத்தில் பெரு வெற்றியைப் பெறலாம்.

(12) வட்டாரங்களுக்கிடையே சரிசமனில்லாத வளர்ச்சியை நீக்குதல்

திட்டமிடுதலின் நோக்கம் தேசிய வருவாயைப் பெருக்குவது மட்டுமல்ல. திட்டத்தின் மூலம் விளையக்கூடிய நன்மைகளை நாட்டின் பல மாநிலங்களும் சரிசமமாகப் பெறவேண்டும். திட்டமிட்ட வளர்ச்சியின் நன்மைகள் எல்லா மக்களுக்கும் உதவக்கூடிய வகையில் பகிர்வு செய்யப்படவேண்டும். இதுவரைத் திட்டமிட்ட முன்னேற்றத்தின் மூலம் ஏற்பட்ட நன்மைகள் நாட்டின் பல மாநிலங்களுக்கிடையேயும் சரியாகப் பங்கீடு செய்யப்படவில்லை. நிதிவசதியைப் பெற்றிருக்கின்ற மாநிலங்களில் சில, பல நன்மைகளையும் அடைந்துள்ளன; நிதிவசதியைக் குறைவாகக் கொண்ட வேறு பல மாநிலங்கள் சில நன்மைகளைக்கூட அடைவதில்லை. இதன் காரணமாகவே மாநிலங்களுக்கிடையே தலா வருவாயில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன. பின்தங்கிய நிலையில் உள்ள சில மாநிலங்களின் முன்னேற்றத்திற்கு அரசு அதிக அளவில் உதவ வேண்டும். மேலும் குறைந்த வருவாய்ப் பெறுபவர்களின் வாழ்க்கைத்தரம் உயரும் வகையில் அரசு நடவடிக்கைகளை எடுப்பது அவசியமானது. முன்னேற்றத்தில் மாநிலங்களுக்கிடையே அமைந்திருக்கக்கூடிய வேறுபாடுகளை நீக்குவது அரசின் கடமை யாகும். போக்குவரத்து, செய்தித்தொடர்பு, நீர்ப்பாசனம், மின்சார உற்பத்தி, மருத்துவ வசதி போன்றவைகளின் முன்னேற்றம் எல்லா மாநிலங்களிலும் சரி சமமாகச் செய்யப்படவேண்டும். பின்தங்கிய தேக்க நிலையைக் கொண்டுள்ள மாநிலங்களில் வேளாண்மை வளர்ச்சிக்கும், தொழில் முன்னேற்றத்திற்கும் அரசு பல வழிகளிலும் உதவவேண்டும். அதற்காக அரசு சரியான திட்டங்களை மேற் கொள்வது அவசியமாகும். பின்தங்கிய மாநிலங்கள் பெரும்பாலும் நிதிப் பற்றுக்குறையால் பாதிக்கப்படுகின்றன. எனவே அரசு நிதி வசதிகளை அளித்துத் தொழில் முயல்வோரை இவ்விடங்களில்

தொழில்களைத் தோற்றுவிக்குமாறு செய்யவேண்டும். இந்த இடங்களில் சில பொதுத்துறைத் தொழில்களை ஏற்படுத்துவதும் இன்றியமையாததாகும். திட்டங்களினால் விளையக்கூடிய நன்மைகளை எல்லா மாநிலங்களும் சமமாகப் பெறுதல்வேண்டும்.

(13) வேலையின்மையைக் குறைத்தல்

போதுமான அளவிற்கு வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதில் இந்தியத் திட்டங்கள் தவறிவிட்டன. தொழில்துறையில் அதிக அளவிற்கு வேலையின்மை இருக்கின்றது. வேளாண்மைத்துறையில் மறைந்துள்ள வேலையின்மை அமைந்திருக்கின்றது. முதல் திட்ட இறுதியில் வேலையின்மை 5·3 மில்லியன் என்ற அளவிற்கு இருந்தது; இது இரண்டாவது திட்ட இறுதியில் 9 மில்லியனாகவும், மூன்றாவது திட்ட இறுதியில் 11·5 மில்லியனாகவும் அதிகரித்தது. வேலையின்மையைக் குறைப்பதற்காக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் போதுமானதாக இருக்கவில்லை. வேலையின்மை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. தீவிரமடைந்துவரும் பெரியதொரு சிக்கலாக இது இருக்கின்றது. வேளாண்மைத் துற்றையிலும், தொழில் துறையிலும் வேலைவாய்ப்புக்களைப் பெருக்குவதற்கான திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். விரைவான மக்கட்தொகைப் பெருக்கத்தைக் குறைத்து, முதலீட்டு வீதத்தை உயர்த்துவதின் மூலமே வேலையின்மைச் சிக்கலுக்குத் தீர்வு காணலாம். உற்பத்திக் காரணிகளில் முக்கியமானதாகிய உழைப்பு உற்பத்தி உயர்விற்குச் சிறப்பாகப் பயன்படுத்தப்பட வேண்டும்.

இந்தியத் திட்டங்களும் சமதர்மமும்

'*சமதர்ம முறைச் சமுதாயத்தை*' (Socialistic Pattern of Society) அமைக்க இந்திய அரசு திட்டங்களின் மூலம் முயன்றுவருகின்றது. கடந்த இருபது ஆண்டுகளிலும் நிறைவேற்றப்பட்ட திட்டங்களால் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்தே இருக்கின்றது. சமுதாயத்தின் தாழ்ந்த நிலையில் உள்ளவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசு நடவடிக்கைகளை எடுக்கின்றது. எந்த அளவிற்கு இந்தியப் பொருளாதாரத்தில் சமதர்மம் ஏற்பட்டுள்ளது என்பதை அறிவது அவசியமானது. முதல் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றியதின் மூலம் சமதர்மம் எந்த அளவிற்கு நிலைபெற்றுள்ளது என்பதைப் பின்வருபவைகளின் மூலம் அறியலாம்:

(1) சமதர்மத்தின் முக்கிய நோக்கம் தேசிய வருவாயையும், தலா வருவாயையும் பெருக்கி நாட்டிலுள்ள வறுமை நிலையைப் போக்குவதாகும். 1950–51ஆம் ஆண்டிற்கும் 1960–61ஆம்

ஆண்டிற்கும் இடைப்பட்டக் காலத்தில் தேசிய வருவாய் 42 சத வீதம் அதிகரித்தது; மூன்றுவது திட்டத்தின் முதல் மூன்று ஆண்டு களில் 10 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டது. எனவே, ஆண்டொன் றிற்குச் சராசரியாகத் தேசிய வருவாய் 4 சதவீதம் உயர்ந்தது. ஆனல் மக்கட்தொகைப் பெருக்கம் 22 சதவீதம் என்ற அளவிற்கு அமைந்திருந்தது. இதன் காரணமாக தேசிய வருவாய் உயர்வினுல் நன்மையைப் பெற முடியவில்லை. மேலும் தேசிய வருவாய் உயர்வின் நன்மைகள் சமுதாயத்தின் மேல் குடியினரால் பெறப்பட்டனவே யன்றி சாமானியர்களால் பெறப்படவில்லை. 'பலர் வாட, சிலர் வாழுகின்ற' நிலையே இன்றும் நீடிக்கின்றது. எனவே சமதர்மத்தின் முக்கிய நோக்காகிய 'வறியவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நிலையானது' நிறைவேருத பகற்கனவாகவே உள்ளது. ஆனல் அக்கனவை நனவாக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

(2) சமதர்மம் வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதையும் நோக்க மாகக் கொண்டிருக்கின்றது. நம் நாட்டின் திட்டங்களில் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பல திட்டங்களை நிறைவேற்றிய பிறகும் வேலையின்மையின் அளவு குறைக்கப்படவில்லை. ஒவ்வொரு திட்டக் காலத்தில் வேலையின்மை விரைவாக அதிகரித்துக் கொண்டே வந்தது. மூன்றுவது திட்டக்காலத்தில் வேலையின்மை 12 மில்லியன் என்ற அளவிற்கு அமைந்திருந்தது. சமதர்மம் வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதிலும் தோல்வியையே கண்டுள்ளது.

(3) வருவாயிலும், செல்வப் பங்கீட்டிலும் உள்ள ஏற்றத்தாழ்வு களைக் குறைப்பதும் சமதர்மத்தின் நோக்கமேயாகும். பொருளா தாரச் சக்தி ஒரு சிலரிடம் குவிந்திருப்பதைத் தடுக்கவும் அரசு திட்டங்களின் மூலம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. எனினும் திட்டக் காலத்தில் வருவாயும், செல்வமும் ஒரு சிலரிடம் குவிந்த நிலையே அமைந்திருந்தது. 1951 ஆம் ஆண்டிற்கும் 1961 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்டக் காலத்தில் வேளாண்மைத் துறையில் தலா வருவாய் சுமார் 14 சதவீத உயர்வு மட்டுமே அதிகரித்தது. ஆனல் தொழில்துறையில் தலா வருவாய் 68 சதவீதம் உயர் வடைந்தது. எனவே பதினைந்து ஆண்டுக்காலத் திட்டங்களுக்குப் பிறகும்கூட வறியவர்களுக்கும், செல்வந்தர்களுக்கும் இடையே உள்ள இடைவெளி குறைக்கப்படவில்லை.

(4) பொருளாதார நீதியை நிலைநாட்டவும் சமதர்மம் முயலு கின்றது. ஆனல் நம்முடைய திட்டமிட்டப் பொருளாதாரத்தில் உணவுப் பொருட்கள், அவசியமான வேறு சில நுகர்ப் பொருட்கள் ஆகியவற்றின் விலைகள் வசதிப்பொருட்கள், ஆடம்பரப் பொருட்கள் ஆகியவற்றின் விலைகளைக் காட்டிலும் மிகவும் உயர்ந்துள்ளன.

1950ஆம் ஆண்டிற்கும் 1961ஆம் ஆண்டிற்கும் இடையே பொது விலைக் குறியீட்டெண் (General Price Index) (அடிப்படை ஆண்டு 1952–53=100) 33 சதவீதம் உயர்வடைந்தது; உணவுத் தானியங்களின் விலைக்குறியீட்டெண் 52 சதவீதம் அதிகரித்தது. சமதர்மப் பொருளாதாரத்தில், உணவுப்பொருட்கள் பிற அவசிய நுகர்ப் பொருட்கள் ஆகியவற்றின் விலைகளைக் கட்டுப்படுத்தாமை விரும்பத்தக்கதல்ல. இதனால் எளிய மக்களுக்குப் பொருளாதார நீதி மறுக்கப்பட்டுள்ளது என்றே கொள்ளவேண்டும்.

(5) பணவீக்கமும், அரசின் கட்டுப்பாடுகளும், பொதுத் துறையின் வளர்ச்சியும் மக்களிடையே நேர்மையற்ற நிலையைத் தோற்றுவித்துள்ளன. இவற்றின் காரணமாக வரி ஏய்ப்பும், விரும்பத்தகாத ஊக வாணிபமும் பெருகியுள்ளன. எனவே பொருளாதார முன்னேற்றத்தின் நன்மைகள் தொழில் முதலாளிகள், வணிகர்கள், வியாபாரிகள் ஆகியோரின் கைகளுக்கும் பைகளுக்குமே செல்கின்றன. சில அரசியல்வாதிகளும், அரசின் ஊழியர்களும் நேர்மையற்ற முறையில் செயல்படுகின்றார்கள்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ளவைகளின் மூலம் உண்மையான சமதர்மம் இந்தியாவில் இதுவரை தோற்றுவிக்கப்படவில்லை என்பதை உணரலாம். ஆனால் சமதர்மத்தைப் பெறுவதின் மூலமே பலகோடி மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முடியும். பட்டினியில்லாத வாழ்க்கையைப் பலரும் பெற சமதர்மமே சிறந்த வழியாகும்.

நிறைவுரை

(1) நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்களைப்பற்றி மதிப்பீடு செய்யும்போது, அவை சிறப்பான முன்னேற்றத்தைத் தந்துள்ளன என்று கூறமுடியாது. இதை அரசின் அதிகாரிகளே ஒப்புக்கொண்டுள்ளார்கள். முதல் திட்டம் பரிசோதனை முறையில் அமைந்திருந்த காரணத்தினால் அதைக் குறைகூற இயலாது. மேலும் முதல் திட்டத்தை ஓரளவு வெற்றியைப்பெற்ற ஒரு திட்டமாகவே கருதலாம். இத்திட்டக் காலத்தில் சில துறைகளின் முன்னேற்றம் திருப்திகரமாகவே அமைந்திருந்தது. அதிகத் துணிச்சலுடன் செயல்படுத்தப்பட்ட இரண்டாவது திட்டமே பெரிதும் குறைகூறப் படுகின்றது. இத்திட்டக் காலத்தில் தேசிய வருவாயை 25 சதவீதம் உயர்த்தத் திட்டமிடப்பட்டது; ஆனால் உண்மையில் தேசிய வருவாய் 19·5 சதவீதம் மட்டுமே அதிகரித்தது. 1960–61ஆம் ஆண்டின் விலைகளின்படி தலா வருவாய் 8 சதவீதம் உயர்வடைந்தது. தேசிய வருவாய் ஓரளவு சிறப்பாக உயர்வடைந்தபோது, தலா வருவாய் மிகவும் குறைந்த அளவிற்கே

ஆண்டிற்கும் இடைப்பட்டக் காலத்தில் தேசிய வருவாய் 42 சதவீதம் அதிகரித்தது; மூன்ருவது திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் 10 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டது. எனவே, ஆண்டொன்றிற்குச் சராசரியாகத் தேசிய வருவாய் 4 சதவீதம் உயர்ந்தது. ஆனால் மக்கட்தொகைப் பெருக்கம் 22 சதவீதம் என்ற அளவிற்கு அமைந்திருந்தது. இதன் காரணமாக தேசிய வருவாய் உயர்வினால் நன்மையைப் பெற முடியவில்லை. மேலும் தேசிய வருவாய் உயர்வின் நன்மைகள் சமுதாயத்தின் மேல் குடியினரால் பெறப்பட்டனவேயன்றி சாமானியர்களால் பெறப்படவில்லை. 'பலர் வாட, சிலர் வாழுகின்ற' நிலையே இன்றும் நீடிக்கின்றது. எனவே சமதர்மத்தின் முக்கிய நோக்காகிய 'வறியவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நிலையானது' நிறைவேருத பகற்கனவாகவே உள்ளது. ஆனால் அக்கனவை நனவாக்கும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

(2) சமதர்மம் வேலைவாய்ப்புகளைப் பெருக்குவதையும் நோக்கமாகக் கொண்டிருக்கின்றது. நம் நாட்டின் திட்டங்களில் இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பல திட்டங்களை நிறைவேற்றிய பிறகும் வேலையின்மையின் அளவு குறைக்கப்படவில்லை. ஒவ்வொரு திட்டக் காலத்தில் வேலையின்மை விரைவாக அதிகரித்துக் கொண்டே வந்தது. மூன்ருவது திட்டக்காலத்தில் வேலையின்மை 12 மில்லியன் என்ற அளவிற்கு அமைந்திருந்தது. சமதர்மம் வேலை வாய்ப்புகளைப் பெருக்குவதிலும் தோல்வியையே கண்டுள்ளது.

(3) வருவாயிலும், செல்வப் பங்கீட்டிலும் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதும் சமதர்மத்தின் நோக்கமேயாகும். பொருளாதாரச் சக்தி ஒரு சிலரிடம் குவிந்திருப்பதைத் தடுக்கவும் அரசு திட்டங்களின் மூலம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. எனினும் திட்டக் காலத்தில் வருவாயும், செல்வமும் ஒரு சிலரிடம் குவிந்த நிலையே அமைந்திருந்தது. 1951 ஆம் ஆண்டிற்கும் 1961 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்டக் காலத்தில் வேளாண்மைத் துறையில் தலா வருவாய் சுமார் 14 சதவீத உயர்வு மட்டுமே அதிகரித்தது. ஆனால் தொழில்துறையில் தலா வருவாய் 68 சதவீதம் உயர்வடைந்தது. எனவே பதினைந்து ஆண்டுக்காலத் திட்டங்களுக்குப் பிறகும்கூட வறியவர்களுக்கும், செல்வந்தர்களுக்கும் இடையே உள்ள இடைவெளி குறைக்கப்படவில்லை.

(4) பொருளாதார நீதியை நிலைநாட்டவும் சமதர்மம் முயலுகின்றது. ஆனால் நம்முடைய திட்டமிட்டப் பொருளாதாரத்தில் உணவுப் பொருட்கள், அவசியமான வேறு சில நுகர்ப் பொருட்கள் ஆகியவற்றின் விலைகள் வசதிப்பொருட்கள், ஆடம்பரப் பொருட்கள் ஆகியவற்றின் விலைகளைக் காட்டிலும் மிகவும் உயர்ந்துள்ளன.

1950ஆம் ஆண்டிற்கும் 1961ஆம் ஆண்டிற்கும் இடையே பொது விலைக் குறியீட்டெண் (General Price Index) (அடிப்படை ஆண்டு 1952–53=100) 33 சதவீதம் உயர்வடைந்தது; உணவுத் தானியங்களின் விலைக்குறியீட்டெண் 52 சதவீதம் அதிகரித்தது. சமதர்மப் பொருளாதாரத்தில், உணவுப்பொருட்கள் பிற அவசிய நுகர்ப் பொருட்கள் ஆகியவற்றின் விலைகளைக் கட்டுப்படுத்தாமை விரும்பத்தக்கதல்ல. இதனால் எளிய மக்களுக்குப் பொருளாதார நீதி மறுக்கப்பட்டுள்ளது என்றே கொள்ளவேண்டும்.

(5) பணவீக்கமும், அரசின் கட்டுப்பாடுகளும், பொதுத் துறையின் வளர்ச்சியும் மக்களிடையே நேர்மையற்ற நிலையைத் தோற்றுவித்துள்ளன. இவற்றின் காரணமாக வரி ஏய்ப்பும், விரும்பத்தகாத ஊக வாணிபமும் பெருகியுள்ளன. எனவே பொருளாதார முன்னேற்றத்தின் நன்மைகள் தொழில் முதலாளிகள், வணிகர்கள், வியாபாரிகள் ஆகியோரின் கைகளுக்கும் பைகளுக்குமே செல்கின்றன. சில அரசியல்வாதிகளும், அரசின் ஊழியர்களும் நேர்மையற்ற முறையில் செயல்படுகின்றனர்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ளவைகளின் மூலம் உண்மையான சமதர்மம் இந்தியாவில் இதுவரை தோற்றுவிக்கப்படவில்லை என்பதை உணரலாம். ஆனால் சமதர்மத்தைப் பெறுவதின் மூலமே பலகோடி மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முடியும். பட்டினியில்லாத வாழ்க்கையைப் பலரும் பெற சமதர்மமே சிறந்த வழியாகும்.

நிறைவுரை

(1) நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்களைப்பற்றி மதிப்பீடு செய்யும்போது, அவை சிறப்பான முன்னேற்றத்தைத் தந்துள்ளன என்று கூறமுடியாது. இதை அரசின் அதிகாரிகளே ஒப்புக்கொண்டுள்ளார்கள். முதல் திட்டம் பரிசோதனை முறையில் அமைந்திருந்த காரணத்தினால் அதைக் குறைகூற இயலாது. மேலும் முதல் திட்டத்தை ஓரளவு வெற்றியைப்பெற்ற ஒரு திட்டமாகவே கருதலாம். இத்திட்டக் காலத்தில் சில துறைகளின் முன்னேற்றம் திருப்திகரமாகவே அமைந்திருந்தது. அதிகத் துணிச்சலுடன் செயல்படுத்தப்பட்ட இரண்டாவது திட்டமே பெரிதும் குறைகூறப் படுகின்றது. இத்திட்டக் காலத்தில் தேசிய வருவாயை 25 சதவீதம் உயர்த்தத் திட்டமிடப்பட்டது; ஆனால் உண்மையில் தேசிய வருவாய் 19·5 சதவீதம் மட்டுமே அதிகரித்தது. 1960–61ஆம் ஆண்டின் விலைகளின்படி தலா வருவாய் 8 சதவீதம் உயர்வடைந்தது. தேசிய வருவாய் ஓரளவு சிறப்பாக உயர்வடைந்தபோது, தலா வருவாய் மிகவும் குறைந்த அளவிற்கே

உயர்வடைந்தமைக்கு விரைவான மக்கட் பெருக்கமே காரணமாகும். இரண்டாவது திட்டக்காலத்தில் மக்கட் பெருக்கம் 10·3 சதவீதமாக இருந்தது.

முதலீட்டின் மூலம் மிக அதிக உற்பத்தியைப் பெறலாம் என்ற அரசின் தவருன எண்ணமும், திட்டமிட்டபடி தேசிய வருவாயை 25 சதவீதம் உயர்த்த முடியாமைக்குக் காரணமாகும்.

இரண்டாவது திட்டக்காலத்தில் பொருளாதாரத்தில் வேறு சில கடினநிலைகளும் தோன்றின. விலைகள் மிகவும் பல மடங்கு அதிகரித்தன. அந்நியச் செலாவணிச் சிக்கலும் அமைந்திருந்தது. பொருளாதார முன்னேற்றம் தடைப்பட்டமைக்கு தேக்கநிலையில் வேளாண்மைத்துறை அமைந்திருந்ததே முக்கியக் காரணமாகும். 1957 முதல் உணவுச் சிக்கல் தீவிரமடைந்தது. உணவுத் தானியங்களின் விலைகள் நாடு முழுதும் அதிகரித்தன. அதே சமயத்தில் உலகப் பொருளாதாரத்தில் பணவீக்கநிலை தோன்றியிருந்தது. இதனுல் முன்னேற்றத் திட்டங்களுக்குத் தேவையான இயந்திரங்கள், பிற மூலதனப் பொருட்கள் ஆகியவற்றின் இறக்குமதி மதிப்பும் அதிகரித்தது. சூயஸ் கால்வாய் மூடப்பட்டமையால் பன்னுட்டு வாணிபம் பாதிக்கப்பட்டது. குறுகிய காலத்தில் அளிப்பின் அளவை அதிகரிப்பது இதனுல் முடியாத ஒன்ருகி விட்டது. மேலும் விலைகள் உயர்வடைய இது ஒரு காரணமாக இருந்தது.

(2) மூன்ருவது ஐந்தாண்டுத் திட்ட நோக்கங்களும் சிறப்பான அளவிற்கு நிறைவேற்றப்படவில்லை. இத்திட்டக் காலத்தில் வளர்ச்சி பாதிக்கப்பட்டமைக்குச் சில புறச் சக்திகளும் காரணமாக இருந்தன. இத்திட்டம் வெற்றியைப் பெருமைக்குச் சீனத் தாக்குதலும், பாகிஸ்தானின் ஊடுருவலும் முக்கியக் காரணங்களாயின. பாதுகாப்பிற்கான செலவு பலமடங்கு கூட்டப்பட்டது. எந்த ஒரு நாடும் போர்ச் சூழ்நிலைகளில் விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப் பெற முடியாது.

(3) இந்தியாவின் திட்டங்கள் வெற்றியைப் பெறவில்லை என்றும் சொல்லப்படுகின்றது. தோல்விக்குக் காரணம் திட்டங்கள் சரியாகத் தீட்டப்படாமையும், நிறைவேற்றப்படாமையும் ஆகும். குறிப்பாக, இரண்டாவது திட்டத்தில் ரஷ்யாவின் ‘சரிசமனில்லா வளர்ச்சிக்கொள்கை’ பின்பற்றப்பட்டது. மூன்ருவது திட்டக் காலத்தில் இக்கொள்கை தவறுடையது என உணரப்பட்டது. எனவே வேளாண்மை வளர்ச்சியில் அரசு அதிகக் கவனத்தைச் செலுத்தியது. பொதுவாக, இந்தியத் திட்டங்கள் தீவிரத்தன்மை

யைக் கொண்டவைகளாக இருக்கின்றன. குறியிலக்குகளை அடைய முடியாதபடி மிகவும் உயர்ந்த அளவில் அவை நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இந்தியாவின் திட்ட முறையில் அளிப்பின் பகுதி மட்டுமே ஆராயப்படுகின்றது. கிடைக்கக்கூடிய வசதிகளுக்கு ஏற்ப குறியிலக்குகள் நிர்ணயிக்கப்படுகின்றன. முதலீட்டின் அளவுகள் மூலதன-உற்பத்தி வீதத்தின் அடிப்படையில் அமைகின்றன. ஆனல், சரியானதும் சிறப்பானதும் ஆகிய திட்டம் தேவையின் பகுதியையும் ஆராய்வதாக இருக்கவேண்டும். உற்பத்தியின் அளவோ, அல்லது பொருட்களின் அளிப்போ எந்த அளவிற்கு இருக்க வேண்டுமென்பது தேவையின் அடிப்படையில் அறியப்படவேண்டும். கிடைக்கக்கூடிய வசதிகளுக்கு ஏற்ப முதலீடுகளைச் செய்வது தவறுனது. பலவகைப்பட்ட பொருட்களின் தேவைக்கு ஏற்பவும் முதலீடுகள் செய்யப்படவேண்டும். பொருளாதாரத்தின் பல துறைகளிலும் அரசு முதலீடுகளைச் செய்யும்போது இக்காரணிகளைச் சிறப்பாக ஆராயவேண்டியது அவசியமானதாகும்.

(4) நம் நாட்டில் அமைந்துள்ள அயல்நாட்டுச் செலாவணிச் சிக்கல் இந்தியத் திட்டங்களில் உள்ள குறைபாட்டைக் குறைப்பதாக உள்ளது.

(5) திட்டமிட்டுப் பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுவதற்கான முயற்சிகள் வெற்றிபெற பொதுமக்களின் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும். திட்டங்களின் குறியிலக்குகளை அடைய மக்களின் ஒத்துழைப்பு அவசியமானது. முன்னேற்றத்திற்காகத் திட்டமிடும் முறையும் சிறப்பாக அமைந்திருக்கவேண்டும். திட்டங்களின் சாதனைகள் உயர்வாக அமைந்திருக்கவில்லை. எனவே திட்டங்களின் மீது மக்கள் குறைந்த அளவிற்கே நம்பிக்கைக் கொண்டுள்ளார்கள். திட்டங்களை நிறைவேற்ற அரசிற்கு மக்கள் தங்களின் ஒத்துழைப்பைச் சிறப்பாகத் தருவதில்லை. இந்தியாவின் திட்டமிட்டப் பொருளாதார முன்னேற்றம் வேலையின்மை சிக்கலுக்கும், உணவுச் சிக்கலுக்கும் தீர்வு காணவில்லை. முக்கியமான இவ்விரண்டு சிக்கல்களுக்கும் அரசு தீவிரமான கொள்கைகளைப் பின்பற்றித் தீர்வு காணவேண்டும். முதல் திட்டத்தின் இறுதியில் வேலையின்மை 4 மில்லியன் என்ற அளவிற்கு மட்டுமே இருந்தது; மூன்ருவது திட்டத்தின் இறுதியில் இது 12 மில்லியன் என்ற அளவிற்கு உயர்ந்து விட்டது. வேலையின்மையின் பெருக்க வீதமானது வேலைவாய்ப்பின் பெருக்க வீதத்தைக் காட்டிலும் உயர்வாக இருந்தது. வேலைவாய்ப்புகள் குறைந்த அளவிற்கே அதிகரித்தபோது, உழைப்பாளர்களின் பெருக்கமானது அதிக

அளவிற்கு அமைந்திருந்தது. அரசு திட்டங்களின் மூலம் பலவிதப் பொருளாதாரச் சிக்கல்களுக்கும் தீர்வுகாண நடவடிக்கைகளை எடுக்கின்றது. ஆனால் இந் நடவடிக்கைகள் குறைந்த அளவிற்கு மட்டுமே வெற்றியைப் பெறுகின்றன.

(6) திட்டங்களின் மூலம் சமுதாய மாற்றங்கள் சிறப்பான வகையில் ஏற்பட்டிருக்கவில்லை. அதிக மக்கட்தொகையைக் கொண்டுள்ள நம் நாட்டில் பிறப்பு வீதமும் உயர்வாகவே அமைந்துள்ளது. மக்களில் பெரும்பாலோர் கல்வியறிவு பெற்றவர்களாக இருக்கவில்லை. மருத்துவ வசதிகளிலும் நல்ல முன்னேற்றம் அமைந்திருக்கவில்லை. மக்களின் பழக்க வழக்கங்களும் முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளன. சாதி வேறுபாடுகள், இன வேறுபாடுகள், மத வேறுபாடுகள் ஆகியவை வளர்ச்சி நிலைகளில் பல இடர்ப்பாடுகளைத் தோற்றுவிக்கின்றன. "ஒன்று எங்கள் சாதியே; ஒன்று எங்கள் நீதியே; உழைக்கும் மக்கள் யாவரும் உரிமைப் பெற்ற மக்களே" என்பதை மக்கள் எல்லோரும் முழங்க வேண்டும். மக்களிடம் உள்ள அக்கறையின்மையும் முன்னேற்றத்திற்கு இடையூருக உள்ளது. மேலும் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்களில் சமுதாயப் பணிகளுக்கும், மக்கள் நலங்காக்கும் திட்டங்களுக்கும் செலவழிக்கப்பட்ட மூலதனம் போதுமானதாக இல்லை. முதல் திட்டத்தில் சமுதாயப் பணிகளுக்காக மொத்த முதலீட்டில் 23 சதவீதம் செலவிடப்பட்டது; இது இரண்டாவது திட்டத்தில் 18 சதவீதமாகவும், மூன்ருவது திட்டத்தில் 17 சதவீதமாகவும் குறைக்கப்பட்டது.

இவற்றைத் தவிர, சமுதாய வளர்ச்சித் திட்டங்களும் சிறப்பான வெற்றியைப் பெறவில்லை. திட்டக்காலத்தில் நிலச்சீர்திருத்தங்கள் பல மாநிலங்களிலும் உற்பத்தியை உயர்த்தும் வகையில் நிறைவேற்றப்படவில்லை. சமுதாயப் புனரமைப்புத் திட்டங்கள் குறைந்த அளவிற்கே வெற்றி பெற்றுள்ளன. நம் நாட்டில் சமுதாய விழிப்புணர்ச்சியே தோன்றவில்லை. திட்டங்களால் மக்களின் நிலைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படவில்லை.

(7) திட்டங்களின் மூலம் தன்னிறைவு பெற்றுத் தானே வளர்கின்ற பொருளாதாரத்தைப்பெற அரசு முயற்சிகளை மேற்கொள்கின்றது. சில அடிப்படைத் தொழில் பொதுத்துறையில் சிறப்பாக வளர்க்கப்பட்டுள்ளன. முதல் திட்டத்தில் தொழில் துறை, போக்குவரத்து, மின்சார உற்பத்தி ஆகியவற்றின் வளர்ச்சிக்காக மொத்த முதலீட்டில் 44 சதவீதம் ஒதுக்கப்பட்டது; இரண்டாவது திட்டத்தில் இம்முதலீடு 58 சதவீதத்திற்கும், மூன்ருவது திட்டத்தில் 53

சதவீதத்திற்கும் செய்யப்பட்டது. இரண்டாவது திட்டக்காலத்தில் சிறந்த தொழில் அடிப்படையைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மூலதனப் பொருட்களின் உற்பத்தியை உள் நாட்டிலேயே பெருக்கத் திட்டமிடப்பட்டது. பொறி செய்ப்பொருட் களின் உற்பத்தியை உயர்த்தவும் அரசு முயற்சிகளை மேற் கொண்டது. பலவகைப்பட்ட இயந்திரங்களும், கருவிகளும் இன்று இந்தியாவிலேயே உற்பத்திச் செய்யப்படுகின்றன. இரசாயனத் தொழில்களின் முன்னேற்றமும் குறிப்பிடத்தக்க அளவில் அமைந்துள்ளது.

ஆனால் பால் பாரன் (Paul Baran) கருதுவதுபடி, "இந்தியப் பொருளாதாரம் தன்னிறைவுப் பெற்றுத் தானே வளர்கின்ற தொழில் முன்னேற்றத்தை அடைய இன்னும் 20 அல்லது 30 ஆண்டுக் காலம் பிடிக்கும்."

(8) இந்தியத் திட்டங்கள் முக்கியமான சில நிலைகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சேமிப்பு வீதமும், முதலீட்டு வீதமும் உயரவில்லை. வளர்ச்சிக்குத் தேவையான சமுதாய மாற்றங்களும் சிறப்பான அளவிற்குத் தோன்றவில்லை. மக்களைப் புதுமையான சிறப்புக் கண்ணோட்டம் பெற்றவர்களாக மாற்ற வேண்டியது அவசியமானது. இவ்வாறு சில நிலைகளில் இந்தியத் திட்டங்கள் வெற்றியைப் பெறவில்லை யென்றாலும், பொருளாதாரத்தின் பல துறைகளிலும் குறிப்பிடத் தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மருத்துவ வசதிகள் பெருகி யுள்ளமையால் இந்தியர்களின் சராசரி வயது 52 ஆண்டுகளாக உயர்ந்துள்ளது. போக்குவரத்து, செய்தித் தொடர்பு வசதிகளும் பெருகி வருகின்றன. கல்வி வசதிகளால் எழுதப் படிக்கத் தெரிந்த வர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. நீர்ப்பாசன வசதிகள், மின்சார வசதிகள் ஆகியவையும் அதிகரித்துள்ளன. பெரிய தொழில்களின் வளர்ச்சியோடு, சிறுதொழில்கள், குடிசைத் தொழில்கள் ஆகியவற்றின் வளர்ச்சியிலும் அரசு ஆர்வம் கொண் டிருக்கின்றது. தேசிய வருவாயும், தலா வருவாயும் அதிகரித்து வருகின்றன. மக்களின் வாழ்க்கைத்தரமும் படிப்படியாக உயர்ந்து வருகின்றது. வருவாயிலும், செல்வப் பங்கீட்டிலும் உள்ள வேறுபாடுகளைக் களைந்து சமதர்மச் சமுதாயத்தை அமைக்க அரசு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இவ்விதமான பல நன்மை களைப் பெறுவதற்குத் திட்டங்களே காரணமாகும். இந்தியாவில் திட்டங்கள் மேற்கொள்ளப்படாவிட்டால் பொருளாதார முன்னேற் றத்தைப் பெற முடியாது.

BIBLIOGRAPHY

Abromovitz, M. (ed.)—Capital Formation and Economic Growth.

Adler, Johan H., E R. Schlesinger and E.C. Olson—Public Finance and Economic Development in Guatemala.

Agarwal, A.N.—Some Aspects of Economic Advancement of Underdeveloped Countries.

Agarwal, A.N., and S.P. Singh, (ed.)—The Economics of Under-development.

Aitken, Hugh F.J., (ed.)—The State and Economic Growth.

Atallah, M.K.—The Long-Term Movement of the Terms of Trade Between agricultural and Industrial Products.

Balogh, T.—Some Aspects of Economic Growth of Underdeveloped Areas.

Baran, Paul—The Political Economy of Growth;

Barlow, E.R., and I.T. Wender—Foreign Investment and Taxation.

Bauer, P.T.—Economic Analysis and Policy in Underdeveloped countries.

Bauer, P.T.—Indian Economic Policy and Development.

Bauer, P.T., and B.S. Yamey—Economics of Underdeveloped countries.

Baumol, William—Economic Dynamics.

Benham, F.—Economic Aid to Underdeveloped Countries.

Berliner, J.H.—Soviet Economic Aid: The New Aid and Trade Policy in Underdeveloped Countries.

Bettelheim, C.—Some Basic Planning Problems.

Bhattacharya, K.N.—Indian Plans.

Bhattacharya, K.N.—India's Fourth Plan.

Bhatt, V.V.—Employment and Capital Formation in Under-developed Economics.

Boer, W., and I. Kerstenetzy, (ed.)—Inflation and Economic Growth.

Bonne, A.—Studies in Economic Development.

Bruton, H.J.—A Survey of Recent Contributions to the Theory of Economic Growth.

Bruton, H.J.—Inflation in a Growing Economy.

Buchanan, N.S., and H.S. Ellis—Approaches to Economic Development.

Cairncross, Alec.—Factors in Economic Development.

Cameron, R.J.—Investment in Agriculture.

Chakravarty, S.—Logic of Investment Planning.

Chandler, L.V.—Central Banking and Economic Development.

Chandrasekhar, George—Population and Planned Parenthood in India.

Chelliah, R.J.—Fiscal Policy in Underdeveloped Countries.

Chenery, H.B., and Clark, P.G.—Interindustry Economies.

Clark, C.—The Conditions of Economic Progress.

Coale, A.J., and E.M. Hoover—Population Growth and Economic Development in Low-Income Countries.

Das Gupta, A.K.—Planning and Economic Growth.

Das Gupta, A.K. (ed.)—Trade Theory and Commercial Policy in Relation to Underdeveloped Countries.

Datta, A.—Paths of Economic Growth.

Datta, B.—The Economics of Industrialization.

Datta, B.—Essays in Plan Economics.

Dhar, P.N., and Lydall, H.F.—The Role of Small Enterprises in Indian Economic Development.

Dobb, Maurice—Some Aspects of Economic Development.

Dobb, Maurice—Political Economy and Capitalism.

Dobb, Maurice—On Economic Theory and Socialism.

Dobb, Maurice—An Essay on Economic Growth and Planning.

Domar, E.—Essays in the Theory of Economic Growth.

Dorfman, Samuelson and Solow—Linear Programming and Economic Analysis.

Dupries, L.H., (ed.)—Economic Progress.

Ellis, H.S., and H.C. Wallich—Economic Development of Latin America: Proceedings of International Economic Association.

Enke, S.—Economics For Development.

Fatouros, A.A.—Government Guarantees to Foreign Investors.

Friedman, M.—Inflation : Causes and Consequences.

Gadgil, D.R.—Planning and Economic Policy in India.

Gadgil, D.R.—Economic Policy and Development.

Galbraith, J.K.—Economic Development in Perspective.

Gaston, Frank J.—Obstacles to Direct Foreign Investment.

Ghosh, Alak,—New Horizons in Planning-A History of Planning Techniques With Special Reference to India's First and Second Five Year Plans.

Ghosh, O.K.—Problems of Economic Planning in India.

Ghosh, S.K.—Inflation in an Underdeveloped Economy.

Ghosh, S.K.—Deficit financing in an Underdeveloped Economy.

Ghosh, S.K.—Monatization of an Economy.

Gill, R.T.—Economic Development: Past and Present.

Golay, Frank H.—The Phillippines: Public Policy and National Economic Development.

Gyan Chand—Socialist Transformation of Indian Economy.

Haavelmo, T.—A Study in the Theory of Economic Evolution.

Habakkuk, J.H.—and others, Lectures on Economic Development.

Haberler, G.—International Trade and Economic Development.

Hagen, E.E.—On the Theory of Social Change.

Hanson, A.H.—Public Enterprise and Economic Development.

Hansen, Bent,—Inflation Problems in Small Countries.

Harrod, R.F.—Towards a Dynamic Economics.

Harrod, R.F.—Economic Essays.

Heilbroner, R.L.—The Growing World: Economic Development and the World Bank.

Hicks, J.R.—Essays in World Economics.

Hicks, Ursula K.—Development From Below.

Higgins, B.—Economic Development: Problems, Principles and Policies.

Higgins, Benjamin and Wilfred Malenbaum,—Financing Economic Development.

Hirschaman, A.O.—The Strategy of Economic Development.

Hoselitz, B.F.—Sociological Aspects of Economic Growth.

Hoselitz, B.F.—(ed.)—The Progress of Underdeveloped Areas.

Hozelitz, B.F.—and others,—Theories of Economic Growth.

Johnson, L.—A Multisectoral Model of Economic Growth.

Johanse, H.G.—International Trade and Economic Growth.

Johanse, H.G.—Money, Trade and Development.

Kaldor, N.—Essays on Economic Stability and Growth.

Keirstead, Burton,—The Theory of Economic Change.

Keynes, J.M.—The General Theory of Employment, Interest and Money.

Keynes, J.M.—Essay in Persuasion.

Khan, M.S.—India's Economic Development and International Economic Relations.

Khan, N.A.—Problems of Growth of an Underdeveloped Economy.

Kindleberger, C.P.—Economic Development.

Knowles, L.C.A.—Economic Development in the 19th Century.

Kurihara, K.K.—The Keynesian Theory of Economice Development.

Kuznets, S.—Six Lectures on Economic Growth.

Kuznets, S., W.E. Moore and J.J. Spengler,—Economic Growth: Brazil, India, Japan.

Lange, O.—Essay on Economic Planning.

Leibenstein, H.—Economic Backwardness and Economic Growth: Studies in the Theory of Economic Development.

Leontief, W.W. and others—Studies in the structure of American Economy.

Lewis, J.P.—Quiet Crisis in India.

Lewis, W.A.—The Principles of Economic Planning.

Lewis, W.A.—The Theory of Economic Growth.

Lewis, W.A.—Development Planning.

Lewis, W.A.—Aspects of Industrialization.

Lockwood, W.W.—Economic Development of Japan.

Madan, B.K.—Aspects of Economic Development and Policy.

Mahalanobis, P.C.—Talks on Planning.

Mahalanobis, P.C.—The Approach of Operational Research to Planning in India.

Mahalanobis, P.C.—Indian Statistical Institute series.

Malenbaum, W.—Prospects For Indian Development.

Malthus, T.R.—Essay on Population.

Man Mohan Singh, H.K.—Demand Theory and Economic Calculation in a Mixed Economy.

Marx, Karl.—Das Cabital.

Mason, E.S.—Economic Planning in Underdeveloped Areas: Government and Business.

Mason, E.S.—Promoting Economic Development.

Maynard, G.—Economic Development and the Price Level.

Mc Cleary G.F.—The Malthusian Population Theory.

Meade, J.E.—A Neo-Classical Theory of Economic Growth.

Meier, G.M.—International Trade and Development.

Meier, G.M.—Leading Issues in Development Economics.

Meier, G.M.—and Robert E. Baldwin, Economic Development.

Meier, R.L.—Development Planning.

Mikesell, R.F.—Intra-Regional Trade and Economic Development.

Millikan, Max F., (ed.)—Investment Criteria and Economic Growth.

Millikan, M.F., and D.I.M. Blackmer—The Engineering Nations: Their Growth and U.S. Policy.

Mountjoy A.B.—Industrialization and Underdeveloped Countries.

Myint, H.—The Economics of Developing Countries.

Myrdal, G.—An International Economy: Problems and Prospects

Myrdal, G.—Economic Theory and Underdeveloped Regions.

Myrdal, G.—Rich Lands and Poor.

Narayan, Shriman—Trends in Indian Planning.

National Bureau of Economic Research,—Capital Formation and Economic Growth.

N.C.A.E.R.—Price Policy and Economic Growth.

N.C.A.E.R.—Saving in India.

Nelson, E.—Economic Growth: Rationale, Problems, Cases.

Nevin, Edward,—Capital Funds in Underdeveloped Countries.

Nurkse, R.—Patterns of Trade and Development.

Nurkse, R.—Problems of Capital Formation in Underdeveloped countries.

Peacock, A.T.—Theory of Population and Modern Economic Analysis.

Philips, Paul A.M.—Public Finance and Less Developed Economy.

Prasad, K.N.—Technological Choice Under Development Planning.

Prest, A.R.—Public Finance in Underdeveloped Countries.

Radner, Roy,—Notes on the Theory of Economic Planning.

Raj, K.N.—Employment Aspects of Planning in Underdeveloped Economies.

Raj, K.N.—Economic Aspects of the Bhakra, Nangal Project.

Rangnekar, D.K.—Poverty and Capital Development in India.

Rao, V.K.R.V.—Essays in Economic Development.

Rao, V.K.R.V. and Narain, D.—Foreign Aid and India's Economic Development.

Reddaway, W.B.—The Development of Indian Economy.

Ricardo, David—Principles of Political Economy and Taxation.

Robinson, Joan,—The Accumulation of Capital.

Robinson, Joan,—Essays on Marxian Economics.

Rostow, W.W.—The Process of Economic Growth.

Rostow, W.W.—The Stages of Economic Growth.

Roy, H.N.—The Role of Monetary Policy in Economic Development.

Sachs Ignacy—Foreign Trade and Economic Development in Underdeveloped Countries.

Sandee, J.—A Demonstration Planning Model For India.

Schumpeter, J.A.—Business Cycles.

Schumpeter, J.A.—The Theory of Economic Development.

Schumpeter, J.A.—Capitalism, Socialism and Democracy.

Schumpeter, J.A.—History o. Economic Analysis.

Schumpeter, J.A.—Ten Great Economists.

Sen, A.K.—Choice of Techniques.

Sen, S.N.—Central Banking in Underdeveloped Money Markets.

Sethi, J.D.—Problems of Monetary Policy in an Underdeveloped Country.

Shannon, Lyle W.—Underdeveloped Areas.

Shenoy, B.R.—Indian Planning and Economic Development.

Singer, H.W.—Economic Progress in Underdeveloped Countries.

Singer, H.W.—Problems of Industrialization of Underdeveloped Countries.

Singh, H.K.M.—Demand Theory and Economic Calculation in a Mixed Economy.

Sinha, M.R. (ed.)—A Decade of Economic Development and Planning in India.

Smith, Adam—An Enquiry into the Nature and Causes of the Wealth of Nations.

Spengler, J. J. and O.D. Duncan.—Demographic Analysis and Population Theory and Policy.

Staley, Eugene—The Future of Underdeveloped Areas.

Sweezy, Paul—The Theory of Capitalist Development.

Tandon, B.C. (ed.)—The Third Five Year Plan and India's Economic Growth.

Thomas, Brindley—Migration and Economic Growth.

Thompson, W.S.—Population Problems.

Tinbergen, J.—Design For Development.

Tinbergen, J.—Development Planning.

Tinbergen, Jan and Hendricus C. Bos—Mathematical Models of Economic Growth.

Tripathy, R.N.—Public Finance in Underdeveloped Countries.

Vakil, C.N.—Poverty and Planning.

Vakil, C.N. and Brahmanand, P.R.—Planning For an Expanding Economy.

Vernon, Raymond—The Dilemma of Mexico's Development.

Villard, H.H.—Economic Development.

Viner, J.—International Trade and Economic Development.

Wallich, H.C.—Monetary Problems of an Export Economy.

Wallich, H.C., and Adler, J.H.—Public Finance in a Developing Country.

Ward, Barbara—The Rich Nations and the Poor Nations.

Ward, Barbara—The Plan Uuder Pressure.

White, L.D. (ed.)—The State of Social Sciences.

William, H.F. and Buttrick J.A. (ed.)—Economic Development: Principles and Patterns.

Wolf, Charles, Jr.—Foreign Aid: Theory and Practice in Southern Asia.

Wolf, Charles and S.C. Sufrim—Capital Formation and Foreign Investment in Underdeveloped Areas.

Woytinsky, W.S. and E.S. Woytinsky—World Population and Production: Trends and Outlook.

Yates, P.L.—Commodity Control: Study of Primary Products.

Youngson, A.J.—Possibilities of Economic Progress.

Zimmerman, E.W.—World Resources and Industries.

Zinkin, M.—Development for Free Asia.

Zwieg, F.—The Planning of Free Societies.

REPORTS AND JOURNALS

UNITED NATIONS

Domestic Financing of Economic Development.

Methods of Financing Economic Development in Under-developed Countries.

Measures for the Economic Development of Underdeveloped Countries.

Formulation and Economic Appraisal of Development Projects.

Formulating Industrial Development Programmes.

processes and problems of Industrialization in Underdevelopde Countries.

Taxes and Fiscal Policy in Underdeveloped Countries.

Demographic Year Book, 1960.

World Economic Survey, 1966.

GOVERNMENT OF INDIA

First Five Year Plan.

Second Five Year Plan.

Third Five Year Plan.

The Third Plan Mid-Term Appraisal, The Third Plan Progress Report.

The Annual Plans 1966-67, 1967-68, 1968-69.

India - 1965-1969.

Fourth Five Year Plan - A Draft (1969-74).

JOURNALS

Indian Economic Journal.

Indian Journal of Economics.

The Indian Economic Review.

The Economic Weekly.

The Commerce.

The Eastern Economist.

The Yojana.

AICC Economic Review.

The American Economic Review.

The Journal of Political Economy.

The Oxford Economic Papers.

The Quarterly Journal of Economics.

The Economic Journal.

Economic Bulletin for Asia and Far East.

The IMF Staff Papers.

கலைச்சொற்கள்

A

Ability to pay — அளிக்கும் திறன்
Absentee land lord — தலத்திலில்லா நிலக்கிழார்
Acceleration — முடுக்க வேகம், வேக வளர்ச்சி
Accelerator — முடுக்கி
Accumulate — திரட்டு
Accumulation of capital — மூலதனத் திரட்சி
Administrative requirements — நிர்வாகத் தேவைகள்
Advalorem — மதிப்பு விகித
Adverse effects — எதிரிடை விளைவுகள்
Age of high mass cousumption — அதிக அளவு நுகர்வுக் காலம்
Agents of production — உற்பத்திச் செயலிகள்
Aggregate — தொகை, தொகுவன
Agvarian revolution — வேளாண்மைப் புரட்சி
Agricultural credit corporations — வேளாண்மைக் கடன் கழகங்கள்
Agricultural credit department — வேளாண்மைக் கடன் துறை
Agricultural depression — வேளாண்மை மந்தம்
Agricultural extension officers — வேளாண்மை விரிவாக்க அலுவலர்கள்
Agricultural finance — வேளாண்மை நிதி
Agricultural finance corporation — வேளாண்மை நிதிக் கழகம்
Agricultural holdings — வேளாண்மை நில உடைமைகள்

Agricultural income-tax — வேளாண்மை வருமான வரி
Agricultural labourers — வேளாண்மைத் தொழிலாளர்கள்
Agricultural labour enquiry committee — வேளாண்மை உழைப்பு விசாரணைக் குழு
Agriculturists' loans act — விவசாயிகளின் கடன்கள் சட்டம்
Agricultural money-lenders — வேளாண்மைக் கடன் அளிப்போர்
Agricultural plan — வேளாண்மைத் திட்டம்
Agricutural produce வேளாண்மை விளையுள்
Agricultural refinance corporation — வேளாண்மை மறு நிதிக் கழகம்
Agricultural taxes — வேளாண்மை வரிகள்
Agro - based — வேளாண்மை சார்ந்த
Agro - industries corporation — வேளாண்மைத் தொழில்களின் கார்ப்பொரேஷன்
Aid india club — இந்திய உதவி இணைப்பு, இந்திய உதவிச் சங்கம்
Alienation — உரிமை மாற்றல்
Alienation act — உரிமை மாற்றுச் சட்டம்
All india rural credit survey committee — அகில இந்தியக் கடன் ஆய்வுக் குழு
Allocation of resources — சாதனப் பங்கீடு
Alternative uses — மாற்று உபயோகங்கள்,மாற்றுப் பயன்கள்,
Amalgamation — தொழிலைக்கியம்
Analogy — ஒப்புமை
Analysis — ஆய்வு, பகுத்தாய்வு
Annual plans — ஆண்டுத் திட்டங்கள்
Anti - dumping duties — குவிப்பு தடுப்புத் தீர்வைகள்
Apparent value — தோற்ற மதிப்பு
Arable land — சாகுபடி நிலம்
Artisans — கைவினைஞர்கள்
Asian development bank — ஆசிய அபிவிருத்தி வங்கி
Assess — மதிப்பிடு
Assets — சொத்துகள்

Assumption	—	எடுக்கோள்
Audit	—	தணிக்கை
Authorised capital	—	அனுமதித்த மூலதனம்
Automation	—	பொறியாட்சி
Average propensity to consume	—	சராசரி நுகரும் விருப்பம்
Average propensity to tax	—	சராசரி வரி விதிக்கும் விருப்பம்
Axion	—	அடிப்படை விதி
Ayacut development programme	—	ஆயகட் முன்னேற்றத் திட்டம்

B

Backward	—	பின்தங்கிய
Balance of payments	—	அயல்நாட்டுச் செலுத்து இருப்பு நிலை
Balance of trade	—	வாணிபக் கொடுப்பல் நிலை
Balance of trade, favourable	—	சாதக வாணிப இருப்பு நிலை
Balance of trade, unfavourable	—	பாதக வாணிப இருப்பு நிலை
Balance sheet	—	இருப்பு நிலைக் குறிப்பு
Balanced development	—	சரிசம முன்னேற்றம், சமநிலை முன்னேற்றம்
Balanced growth	—	சமநிலை வளர்ச்சி, சரிசம வளர்ச்சி
Bank	—	வங்கி
Bank credit	—	வங்கிப் பணம், வங்கிச் செலாவணி
Bank deposit	—	வங்கி வைப்பு, வங்கி வைப்பு நிதி
Bank discount	—	வங்கிக் கழிவு
Bank for reconstruction	—	புனரமைப்பு வங்கி
Bank of issue	—	நோட்டுரிமை வங்கி
Bank rate	—	வங்கி வீதம், மத்திய வங்கி வீதம்
Bank, reserve	—	ரிசர்வ் வங்கி, காப்பு நிதி வங்கி
Banking companies act	—	வங்கிக் கம்பெனிகளின் சட்டம்
Banks, indigenous	—	நாட்டவர் வங்கிகள்
Banks, commercial	—	வாணிப வங்கிகள், வணிக வங்கிகள்
Bargaining power	—	பேரம் பேசும் சக்தி (திறன்)
Barter	—	பண்ட மாற்று

Base year	—	அடிப்படை ஆண்டு
Betterment levy	—	மேம்பாட்டு வரி
Bilateral hard loans	—	இருமுக அரிமைக் கடன்கள்
Bilateral soft loans	—	இருமுக இலக்குக் கடன்கள்
Bilateral trade agreements	—	இருமுக வாணிப ஒப்பந்தங்கள்
Bilateral treaties	—	இருமுக உடன்படிக்கைகள்
Bill	—	உண்டியல்
Bill market	—	உண்டியல் சந்தை
Birth rate	—	பிறப்பு வீதம்
Black marketeers	—	கறுப்புச்சந்தை வியாபாரிகள்
Block development officers	—	வட்டார வளர்ச்சி அலுவலர்கள்
Blackade	—	மறியல்
Board of directors	—	இயக்குநர் வாரியம்
Board of trade	—	வாணிபக் குழு
Bombay plan	—	பம்பாய்த் திட்டம்
Bond	—	பத்திரம்
Bonus	—	வெகுமதி
Boom	—	பூரிப்பு நிலை, பொருளாதார வீக்கம்
Bounty	—	அரசின் கொடை
Boycott	—	புறக்கணிப்பு
Brand	—	அடையாளம், குறி
Budget	—	வரவு - செலவுத் திட்டம்
Budget, deficit	—	பற்றுக்குறை வரவு செலவுத் திட்டம்
Buffer stock operations	—	கையிருப்பு முறைகள்
Business	—	வியாபாரம், தொழில்
Business cycle	—	வாணிபச் சுழல், தொழில் (வியாபாரச்) சகடம்
Business firm	—	தொழில் நிறுவனம்
Buyers' market	—	வாங்குபவர்களின் சந்தை
By - laws	—	துணை விதிகள்
By - products	—	பக்க விளைவுகள்

C

Cambidgre conference	—	கேம்பிரிட்ஜ் மகாநாடு
Canon	—	விதி, புனித விதி
Canon of certainty	—	உறுதிநிலை விதி
Canon of convenience	—	வசதிநிலை விதி

Canon of economy — சிக்கன நிலை விதி
Canon of equity (Canon of equality) — நியாய நிலை விதி
Canon of productivity — ஆக்கத்திறன் நிலை விதி
Canons (principles) of taxation — வரி விதிப்புக் கொள்கைகள், வரிவிதிப்பு விதிகள்
Capacity to absorb capital — மூலதனத்தை ஏற்கும் திறன்
Capitalism — முதலாளித்துவம்
Capitalist sector — மூலதனத்துறை
Capital flight — மூலதன வெளியேற்றம்
Capital formation — மூலதனத் திரட்சி, மூலதன ஆக்கம்
Capital gains tax — மூலதன இலாப வரி
Capital goods — மூலதனக் கருவிப் பொருட்கள், மூலதனப் பொருட்கள்
Capital - intensive — மூலதனச் செறிவுள்ள
Capital - intensive technique — முலதனச் செறிவு முறை
Capital labour ratio — மூலதன உழைப்பு விகிதம்
Capital levy — மூலதன மதிப்பு வரி
Capital - output ratio — மூலதன - உற்பத்தி விகிதம்
Capital - projects — மூலதனத் திட்டங்கள்
Capital saving — மூலதனத்தைச் சேமிக்கும்
Ceiling on land holdings — நிலவுடைகளுக்கு உச்ச வரம்பு
Central Agricultural bank — மத்திய வேளாண்மை வங்கி
Central department of tourism — மத்திய உல்லாசப் பயணத் துறை
Central land mortgage bank — மத்திய நில அடமான வங்கி
Central state farms — மத்திய அரசின் பண்ணைகள்
Central statistical organisation — மத்திய புள்ளி விவர அமைப்பு (நிறுவனம்)
Central tractor organisation — மத்திய டிராக்டர் நிறுவனம் மத்திய இயந்திரக் கலப்பை நிறுவனம்
Characteristics — இயல்புகள்
Cheap money policy — மலிவுப் பணக் கொள்கை
Chit funds — சீட்டுத் கொகைகள்
Choice of techniques — முன்னேற்றமுறைகளைத்தெரிந் தெடுத்தல்
Circulating capital — சுழலும் மூலதனம்
Classical economists — தொன்மைப் பொருளியலாளர்கள்
Classical theory — தொன்மைக் கோட்பாடு

Collective farm — கூட்டுப்பண்ணை
Collective farming — கூட்டுப்பண்ணை முறை
Colombo plan — கொழும்புத் திட்டம்
Colonial development corporation — காலனி முன்னேற்றக் கழகம்
Commercial agriculture — வாணிப வேளாண்மை
Commercial banks — வணிக வங்கிகள், வாணிப வங்கிகள்
Commercial policy — வாணிபக் கொள்கை, வாணிபக் கைக்கோள்
Commission agents — தரகு வணிகர்கள்
Commodity tax — பண்ட வரி
Commonwealth development finance company — காமன்வெல்த் முன்னேற்ற நிதி நிறுவனம்
Communism — பொதுவுடைமை
Communist manifesto — பொதுவுடைமை அறிக்கை
Community centre — சமுதாய மையம்
Community development programme — சமுதாய வளர்ச்சித் திட்டம்
Community projects — சமுதாயத் திட்டங்கள்
Comparative cost of production — ஒப்பீட்டு உற்பத்திச் செலவு
Compensation principle — இழப்பீட்டுக் கொள்கை, ஈடு செய் கொள்கை
Complementary goods — நிறைவு செய் பொருட்கள்
Composition — கலவை
Concealed saving potential — மறைந்துள்ள சேமிக்கும் சக்தி
Concealed unemployment — மறைந்துள்ள வேலையின்மை
Consolidation of land-holdings — நிலவுடைமை ஒருங்கிணைப்பு
Conspicuous consumption — குறிப்பிடத்தக்க நுகர்வு, எடுப்பான நுகர்வு, பிரசித்தமான நுகர்வு
Construction — அமைப்பு, கட்டுமானம், நிர்மாணம்
Consumer goods — நுகர்ப் பொருட்கள்
Consumption demonstration effect — நுகர்வுப் பரிசோதனை விளைவு
Contact effect — தொடர்பு விளைவு
Controlled economy — கட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரம்

Co - operative credit societies — கூட்டுறவுக் கடன் சங்கங்கள்
Co - operative farming — கூட்டுறவுப் பண்ணை முறை
Co - operative organisations — கூட்டுறவு அமைப்புகள்
Co - operative village management — கூட்டுறவு கிராம நிர்வாகம்
Corporation — கழகம்
Corrupt — நேர்மையற்ற
Cost - benefit criterion — செலவு - நன்மைக் கொள்கை
Cost - benefit ratio — செலவு - நன்மை வீதம்
Cost - push inflation — செலவு - அழுத்தப் பணவீக்கம்
Created money — உருவாக்கப்பட்ட பணம்
Credit control — கடன் கட்டுப்பாடு
Credit creation — கடன் உற்பத்தி, வங்கிக் கடன் செலாவணிச் சிருஷ்டி
Credit curb — கடன் தடை
Credit - inflation — கடன் பணவீக்கம்
Credit regulation — கடன் ஒழுங்குபடுத்துதல்
Creeping inflation — தவழும் பணவீக்கம்
Criterion — கொள்கை
Curtailment of consumption — நுகர்வைக் கட்டுப்படுத்துதல்
Customs duties — சுங்கத் தீர்வைகள்
Cyclical unemployment — சுழற்சியுடைய வேலையின்மை

D

Dear money policy — கடினப் பணக் கொள்கை, அரும் பணக் கைக்கோள்
Death duty — மரண வரி
Debenture — கடன் பத்திரம்
Debt management — கடன் நிர்வாகம்
Debt settlement boards — கடன் தீர்வுக் கழகங்கள்
Deccan agriculturists' relief-act — டெக்கான் விவசாயிகளின் நிவாரணச் சட்டம்
Degree of equity — சமத்துவ நிலைத் தன்மை, நியாய நிலைத் தன்மை
Defence industries — பாதுகாப்புத் தொழில்கள்
Defence research and development council — பாதுகாப்பு ஆராய்ச்சி, முன்னேற்றக் கவுன்சில்

Deficit financing	—	பற்றுக்குறை நிதி யாக்கம்
Deflation	—	பண வாட்டம்
Demand - pull inflation	—	தேவை - இழுப்புப் பணவீக்கம்
Demerits	—	தீமைகள்
Democracy	—	குடியரசு
Democratic decentralisation	—	பரவலான ஜனநாயகம்
Department of banking development	—	வங்கி வளர்ச்சித் துறை
Department of international trade	—	பன்னாட்டு வாணிபத்துறை
Depreciation allowances	—	தேய்மானப் படிகள்
Depression	—	மந்தம்
Desire for distinction	—	தனிச் சிறப்பிற்கு விருப்பம்
Devalution	—	மதிப்புக் குறைப்பு
Developed	—	வளர்ச்சி முதிர்ந்த
Developing	—	வளரும், வளர்ச்சியடைந்து வரும்
Development assistance - committee	—	முன்னேற்ற உதவிக் குழு
Development commissioner	—	வளர்ச்சி ஆணையாளர்
Development expenditures	—	முன்னேற்றச் செலவினங்கள்
Dictatorship of the proletariat	—	பாட்டாளிகளின் சர்வாதிகாரம்
Differentials	—	வேறுபாடுகள்
Dimensions	—	பரிமாணங்கள்
Directed state capitalism	—	கட்டுப்படுத்தப்பட்ட அரசின் முதலாளித்துவக் கொள்கை
Direct controls	—	நேரடிக் கட்டுப்பாடுகள்
Direct tax	—	நேர்முக வரி
Directorate of exhibitions	—	கண்காட்சிகளின் இயக்குநரகம்
Directorate of export promotion	—	ஏற்றுமதி அபிவிருத்தி இயக்குநரகம்
Discovery	—	கண்டு பிடிப்பு
Discriminatory interest rates	—	பேதங் காட்டும் வட்டி வீதங்கள்
Disguised unemployment	—	மறைந்துள்ள வேலையின்மை
Distribution	—	பகிர்வு, பகுப்பு
District planning and development committe	—	மாவட்டத் திட்ட, வளர்ச்சிக் குழு

Dividends — இலாபப் பங்குத் தொகைகள், இலாப ஈவுகள், பகுபடு தொகைகள்

Division of labour — வேலைப் பகுப்பு முறை

Domestic savings — உள்நாட்டுச் சேமிப்பு

Domestic saving - income ratio — உள்நாட்டுச் சேமிப்பு வருமான வீதம்

Double taxation — இருமுறை வரி விதிப்பு

Drive to maturity — முதிர்ச்சியைநோக்கிச்செல்லும் நிலை

Dumping — குவிப்பு, திணறிக் கொட்டல்

Dynamic economy — இயக்கநிலைப் பொருளாதாரம்

E

East india company — கிழக்கிந்தியக் கம்பெனி

Economic commission for africa — ஆப்பிரிக்காவிற்கான பொருளாதாரக் குழு

Economic commission for latin america — இலத்தின் அமெரிக்காவிற்கான பொருளாதாரக் குழு

Economic commission for asia and far east — ஆசிய, தூரக்கிழக்கு நாடுகளுக்கான பொருளாதாரக் குழு

Economic development — பொருளாதார முன்னேற்றம்

Economic growth — பொருளாதார வளர்ச்சி

Economic programme committe — பொருளாதாரத் திட்டக் கமிட்டி

Economic systems — பொருளாதார முறைகள்

Economic welfare — பொருளாதார நலம்

Effective demand — ஆயத்த நிலைத் தேவை, பயனுள்ள தேவை

Elasticity of demand for income — வருமானத்திற்கான தேவை நெகிழ்ச்சி

Elasticity of production — உற்பத்தியின் நெகிழ்வுத் தன்மை

Elasticity of the direct tax receipt — நேர்முக வரி வருவாயின் தேவை நெகிழ்ச்சி
Electro-plating — மின்முலாம் பூசுதல்
Employees' provident funds — ஊழியர்களின் சேமிப்பு நிதிகள்
Employment — வேலை, வேலை வாய்ப்பு
Employment exchanges — வேலை தேடித்தரும் நிறுவனங்கள்
Employment multiplier — வேலை வாய்ப்புப் பெருக்கி
Entrepreneur — தொழில் முயல்வோர்
Essential commodities act — இன்றியமையாத பொருட்களின் சட்டம்
Estate duty — பண்ணை வரி
Etawak pilot project — எட்டாவா முன்னோடித் திட்டம்
European dovelopment fund — ஐரோப்பிய முன்னேற்ற நிதி
European economic community — ஐரோப்பிய பொருளாதாரச் சமுதாயம்
European investment bank — ஐரோப்பிய முதலீட்டு வங்கி
Evolution — பரிணாமம்
Exchange — மாற்று, மாற்றம்
Exchange control — நாணய மாற்றுக் கட்டுப்பாடு, செலாவணிக் கட்டுப்பாடு
Exchange depreciation — செலாவணி மதிப்புக் குறைப்பு
Exchange economy — மாற்றுப் பொருளாதாரம்
Experiment — பரிசோதனை
External economies — புறச் சிக்கனங்கள்
Excise duty — ஆயத் தீர்வை
Expenditure tax — செலவு வரி
Exportable surplus — ஏற்றுமதி உபரி
Export advisory council — ஏற்றுமதி ஆலோசனைக் குழு
Export bill — ஏற்றுமதி உண்டியல்
Export credit and guarantee corporation — ஏற்றுமதிக் கடன், காப்புக் கழகம்
Export duties — ஏற்றுமதித் தீர்வைகள்
Export - import bank (Excim bank) — ஏற்றுமதி இறக்குமதி வங்கி
Export promotion — ஏற்றுமதி முன்னேற்றம், ஏற்றுமதி அபிவிருத்தி
Export promotion committee — ஏற்றுமதி முன்னேற்றக் குழு

Export risks insurance corporation	—	ஏற்றுமதி இழப்பீட்டுக் கழகம்
Extension officers	—	விரிவாக்க அலுவலர்கள்

F

Factors	—	காரணிகள்
Factor proportions	—	காரணி விகிதங்கள்
Factor redistribution	—	காரணி மறுபகிர்வு
Family land holding	—	குடும்ப அளவு நிலவுடைமை, குடும்பப் பண்ணை
Family planning	—	குடும்பநலத் திட்டம்
Famine commissions	—	பஞ்சக் குழுக்கள்
Fascism	—	பாஸிசம்
Feasible	—	சாத்தியமான
Finance commission	—	நிதிக்குழு
Financial corporations	—	நிதிக் கழகங்கள்
Financial institutions	—	நிதி நிறுவனங்கள்
Financial Plan	—	நிதித் திட்டம்
Firka development scheme	—	பிர்க்கா அபிவிருத்தித் திட்டம்
Fiscal agent	—	நிதிப்பதிலாளி
Fiscal policy	—	நிதிக் கொள்கை
Fixed cost	—	மாறுச் செலவு
Fixed capital	—	நிரந்தர மூலதனம்
Fixed incomists	—	மாறுத வருமானம் பெறுபவர்கள், நிலையான வருமானம் பெறுபவர்கள்.
Fluctuations	—	ஏற்ற இறக்கங்கள், ஏற்றத் தாழ்வுகள் அலைவுகள்.
Food corporation of india	—	இந்திய உணவுக் கார்ப்பொரேஷன்
Food for peace	—	அமைதிக்கான உணவு
Force	—	சக்தி
Forced saving	—	கட்டாயச் சேமிப்பு
Ford foundation	—	போர்டு நிறுவனம்
Foreign capital	—	வெளிநாட்டு மூலதனம்
Foreign exchange	—	அயல்நாட்டுச் செலாவணி, அயலகச் செலாவணி, அந்நியச் செலாவணி.
Foreign exchange regulation act	—	அந்நியச் செலாவணி ஒழுங்குபடுத்தும் சட்டம்

Foreign investment — வெளிநாட்டு முதலீடு
Foreign trade board — வெளிநாட்டு வாணிபக் கழகம்
Forward thrust — முன்னோக்கித் தள்ளுதல்
Foundries — உலோக உருகுச் சாலைகள்
Freedom — சுதந்திரம்
Free trade — தடையிலா வாணிபம்
Full emloyment — நிறைவேலையுடைமை, வேலை நிறைவு
Functional distribution — பணிப்பகிர்வு

G

Galloping inflation — தாவும் பணவீக்கம்
Gandhian constructive programme — காந்திய நிர்மாணத் திட்டம்
Gandhian plan — காந்தியத் திட்டம்
Generalisations — பொதுமைகள்
General agreement on tarif and trade (GATT) — சுங்கவரி வாணிபப் பொது ஒப்பந்தம்
General equilibrium — பொதுச் சமநிலை
General index of wholesale prices — மொத்த விற்பனை விலைகளின் பொதுக் குறியீட்டெண்
General price index — பொது விலைக் குறியீட்டெண்
Geometric progression — மடிப்பெண் வீதம், மடிப்பெண் விருத்தி
Gift tax — அன்பளிப்பு வரி
Glut — தெவிட்டு நிலை
Gold control rules — தங்கக் கட்டுப்பாட்டு விதிகள்
Goods — பொருட்கள்
Good will — தொழில் நன்மதிப்பு
Gorwala export promotion committee — கோர்வாலா ஏற்றுமதி அபிவிருத்திக் குழு
Governmental agencies — அரசின் அமைப்புகள்
Government securities — அரசாங்கப் பத்திரங்கள்
Government undertaking — அரசாங்கத் தொழில்கள்
Grants — மானியங்கள்
Grants-in-aid — உதவி மானியங்கள்

Graded goods — தரம் செய்த பொருட்கள்
Grades of labour — உழைப்புத் தரங்கள்
Gram sevaks — கிராம சேவக்குகள்
Gross earnings — மொத்த ஈட்டம்
Gross intrest — மொத்த வட்டி
Gross national income — நாட்டின் மொத்த வருமானம்
Gross national product — நாட்டின் மொத்த ஆக்கம்
Grow more campaign — உணவு உற்பத்திப் பெருக்கத் திட்டம்
Grow more food enquiry committee — உணவு உற்பத்திப் பெருக்க விசாரணைக் குழு
Guaranteed credit organisations — உறுதியளிக்கப்பட்டுள்ள கடன் நிறுவனங்கள்

H

Handicrafts — கைவினைத் தொழில்கள்
Hard currency — அரிமைச் செலாவணி
Hedonism — தன்னல முனைவு
High income elasticity — அதிக வருமானத் தேவை நெகிழ்ச்சி
Hindustan teleprinters limited — ஹிந்துஸ்தான் தந்தி அச்சு நிறுவனம்
Hire purchase — தவணைக் கொள்முறை
Historical school — வரலாற்று முறைக் கருத்தோர்
Hoarding — பதுக்குதல், குவிப்பு
Homogeneity — ஓரினத் தன்மை
Homogenous — ஓரியலான, ஒரு படித்தான
Homogeneous function — ஓரினச் சார்பு
Hours of work — உழைப்பு நேரம்
Hypothesis — கருதுகோள்
Hypothetical — கற்பிதமான

I

Imitation — பின்பற்றுதல்
Import advisory council — இறக்குமதி ஆலோசனைக் குழு
Import competition — இறக்குமதிப் போட்டி
Import duties — இறக்குமதித் தீர்வைகள்

Import entitlement — இறக்குமதித் தனிச் சலுகை
Income elasticity of demand — வருமானத் தேவை நெகிழ்ச்சி
Income stabilisation — வருமான நிலைப்பேருக்கம்
Import license — இறக்குமதி அனுமதி
Import quotas — இறக்குமதி பங்களவுகள்
Import substitutes — இறக்குமதிப் பதிலிகள்
Import surplus — இறக்குமதி உபரி
Imports and exports control act — இறக்குமதிகள், ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுச் சட்டம்
Income redistribution — வருமான மறு பகிர்வு
Income tax — வருமான வரி
India-japan joint committee on trade and industrial development — தொழில், வாணிபமுன்னேற்றத் திற்கான இந்திய - ஜப்பான் கூட்டுக் குழு
Indian federation of labour — இந்திய உழைப்பாளர் பெடரேஷன்
Indian planning commission — இந்தியத் திட்டக் குழு
Indian telephone industries limited — இந்தியத் தொலைபேசித் தொழில்கள் நிறுவனம்
Indifference — அக்கறையின்மை
Indigenous bankers — நாட்டுப்புற வங்கியாளர்கள்
Indigenous base — உள்நாட்டு அடிப்படை
Indirect taxes — மறைமுக வரிகள்
Industrialisation — தொழில் மயமாக்குதல்
Industrial banks — தொழில் வங்கிகள்
Industrial credit investment corporation — தொழிற் - கடன், முதலீட்டுக் கழகம்
Industrial development bank of india — இந்தியத் தொழில் அபிவிருத்தி வங்கி
Industrial estate — தொழில் எஸ்டேட்
Industrial finance corporation — தொழில் நிதிக் கழகம்
Industrial plan — தொழில் திட்டம்
Industrial recession — தொழிற் பின்னிறக்கம்
Industrial unemployment — தொழில் வேலையின்மை

Industries (development and regulation) act — தொழில்களின் (வளர்ச்சி, ஒழுங்குபடுத்துதல்) சட்டம்
Ineqeuality of income — வருமான ஏற்றத்தாழ்வு
Infant-economy — இளமைப் பொருளாதாரம்
Infant-industry — இளந் தொழில்
Inheritance system — சொத்துப்பேறு அமைப்புமுறை
Inheritance taxes — சொத்துப்பேறு வரிகள்
Institution of private property — தனியார் சொத்தமைப்பு
Institute of public health — பொது ஆரோக்கிய நிறுவனம்
Intangible — தெளிவாகத் தெரியாத
Intensive agricultural district programme — செறிந்த வேளாண்மை மாவட்டத் திட்டங்கள்
Intensive cultivation — செறிந்த முறைச் சாகுபடி
Interest rate policy — வட்டி வீதக் கொள்கை
Intermediate products — நடுத்தரப் பொருட்கள்
Internal economies — அகச் சிக்கனங்கள்
Inter - american development bank (IDB) — அமெரிக்காவிற்கான முன்னேற்ற வங்கி
International bank for reconstruction and development (IBRD) — உலக வங்கி
International bank mission — உலக வங்கிக் குழு
International bank's mssion to Irag — ஈராக் நாட்டிற்கான உலக வங்கியின் குழு
International co - operation administration — பன்னாட்டுக் கூட்டுறவு நிர்வாகம்
International development association — பன்னாட்டு வளர்ச்சி சங்கம்
International finance corporation — பன்னாட்டு நிதிக் கார்ப்பொரேஷன்
International monetary fund (IMF) — பன்னாட்டுப் பண நிதி
Investment criterion — முதலீட்டுத் திட்ட அளவை

Investment demonstration effect — முதலீட்டுப் பரிசோதனைவிளைவு
Investment-employment ratio — முதலீட்டு - வேலைவாய்ப்பு வீதம்
Irrigation commission — நீர்ப்பாசனக் குழு

J

Joint costs — கூட்டுச் செலவுகள்
Joint enterprises — கூட்டு நிறுவனங்கள்
Joint family system — கூட்டக் குடும்பமுறை
Joint products — கூட்டுப் பொருட்கள், கூட்டு உற்பத்தி விளைவுகள்
Joint stock banks — கூட்டுப் பங்கு வங்கிகள்
Joint stock companies — கூட்டுப் பங்கு நிறுவனங்கள்
Joint supply — கூட்டு அளிப்பு
Joint ventures — கூட்டு முயற்சிகள்
Just price — நியாய விலை

K

Kennedy round pact — கென்னடி சுழல் உடன்பாடு
Key industries — முக்கியத் தொழில்கள்,ஆதாரத் தொழில்கள், மூலத் தொழில் கள்.
Key village scheme — கேந்திரக் கிராமத் திட்டம்
Kink — திருப்பம்
Kinked demand curve — திருப்பமுற்ற தேவைவளைகோடு
Korean war — கொரியப் போர்

L

Labour — உழைப்பு
Labour, employment division — உழைப்பு, வேலைவாய்ப்புப்பிரிவு
Labour force — பாட்டாளிப் படை
Labour - intensive — உழைப்புச் செறிந்த
Labour - intensive techniques — உழைப்புச் செறிவு முறைகள்
Labour legislation — தொழிலாளர் சட்டம்
Labour market — உழைப்புச் சந்தை
Labour movement — தொழிலாளர் இயக்கம்
Labour organisation — தொழிலாளர் நிறுவனம்

Labour-saving	—	உழைப்பைச் சேமிக்கும், உழைப்பைக் குறைக்கும்
Labourer	—	தொழிலாளி, பாட்டாளி
Labour - supply	—	உழைப்பின் அளிப்பு
Lag	—	பின்தங்கல், பின்னடைவு
Laissez faire policy	—	தலையிடாமைக் கொள்கை
Landlordism	—	நிலப் பிரபுத்துவம்
Land development banks	—	நிலவள வங்கிகள்
Land hunger	—	நிலப்பசி
Land improvement loans act	—	நில அபிவிருத்திக் கடன்கள் சட்டம்
Landlords	—	நிலக்கிழார்கள், நிலப்பிரபுக்கள்
Land mortgage banks	—	நில அடமான வங்கிகள்
Land revenue	—	நில வருவாய், நிலவரி வருவாய்
Land tenure	—	நில உடைமை முறை, நில உரிமை முறை
Large scale production	—	பேரளவு உற்பத்தி, பெருவாரி உற்பத்தி
Law of diminished returns	—	குறைந்து செல் விளைவு விதி
Leading sector	—	முன்னணித் துறை
Lease	—	குத்தகை
Lease holder	—	குத்தகைக்காரர்
Legal tender	—	சட்ட முறைப் பணம்
Legalized abortion	—	சட்டபூர்வமான கருச் சிதைவு
Leisure	—	ஓய்வு
Letter of credit	—	கடன் திருமுகம்
Levy	—	வரி விதிப்பு
Liability	—	பொறுப்பு, கடன், சுமை
License	—	உரிமை, அனுமதி
Life insurance corporation	—	ஆயுள் காப்புறுதி நிறுவனம்
Light industries	—	எளிய தொழில்கள்
Limited liability	—	வரையறுக்கப்பட்ட பொறுப்பு, வரையிட்ட பொறுப்பு
Liquidation	—	முடிவு நடவடிக்கை, முடிப்பு
Liquidity	—	ரொக்கநிலை, நீர்மை நிலை
Liquidity preference	—	ரொக்க விருப்பம், நீர்மை விருப்பம்
Liquid assets	—	ரொக்கமாகக்கூடியசொத்துகள்
Loanable funds	—	கடன்தரும் நிதிகள்
Local taxation	—	தலவரி விதிப்பு

Lock - out — கதவடைப்பு
Lop - sided pattern of industry — ஏற்றத்தாழ்வுள்ள தொழில்மைப்பு
Luxuries — ஆடம்பரப் பொருட்கள், போகப் பொருட்கள்

M

Macro — பேரியல்
Malthusian theory of population — மால்தஸின் மக்கட்தொகைக் கோட்பாடு
Manufactured goods — பொறிசெய்ப் பொருட்கள்
Manufacturing industries — தயாரிப்புத் தொழில்கள், பொறி செய்த் தொழில்கள்
Marginal efficiency of capital — மூலதன இறுதிநிலைத் திறன்
Marginal productivity — இறுதிநிலை உற்பத்தித் திறன்
Marginal productivity of capital — மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறன்
Marginal propensity to consume — இறுதிநிலை நுகரும் விருப்பம்
Marginal propensity to save — இறுதிநிலை சேமிக்கும் விருப்பம்
Market economy — சந்தைப் பொருளாதாரம்
Marketable surplus — அங்காடியில் விற்பனைக்கான உபரி, விற்பனைக்கான உபரி, விற்பனை உபரி
Market imperfections — சந்தைக் குறைபாடுகள்
Maximisation of benefit over cost criterion — செலவைவிட நன்மையை அதிகரிக்கும் கொள்கை
Maximum price — அதிகபட்ச விலை
Means of production — உற்பத்திச் சாதனங்கள்
Merits — நன்மைகள்
Micro — சிற்றியல்
Migration — குடிபெயர்ச்சி
Mild dose — மிதமான அளவு
Minimum price — குறைந்தபட்ச விலை
Minor irrigation projects — சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள்
Mirdha committee on co-operative movement — கூட்டுறவு இயக்கத்தின் மிர்தா குழு

Mixed economy — கலப்புப் பொருளாதாரம்
Mod erat — மிதமான
Modern capitalism — புதுமை முதலாளித்துவம்
Modern products — புதுமைப் பொருட்கள்
Monetary policy — பணக் கொள்கை, பணவாக்கக் கைக்கோள்
Monetary stream — பண ஓட்டம்
Monopolies inquiry commi-ssion — முற்றுரிமை நிலைகள் விசாரணைக் குழு
Monopoly legislatio n — முற்றுரிமைச் சட்டம்
Money lender — லேவாதேவிக்காரர், வட்டிக்குப் பணம் கடன் கொடுப்பவர்
Money market — பணச் சந்தை
Multilateral indirect investments — பலமுக மறைமுக முதலீடுகள்
Multilateral loans — பலமுகக் கடன்கள்
Multiplier — பெருக்கி
Multiplier principle — பெருக்கித் தத்துவம்
Multi-purpose river vally projects — பலநோக்கு நதிப் பள்ளத் தாக்குத் திட்டங்கள்

N

National agricultural credit (long term operations) fund — தேசிய வேளாண்மைக் கடன் (நீண்டகாலச் செயல்) நிதி
National agricultural (stabilisation) fund — தேசிய வேளாண்மை (நிலைப் படுத்தும்) நிதி
National co-operative- development fund — தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிதி
National development council — தேசிய முன்னேற்றக் குழு
National extension schemes — தேசிய விரிவாக்கத் திட்டங்கள்
National extension service — தேசிய விரிவாக்கப் பணி
National income committee — தேசிய வருவாய்க் குழு
National industrial development corporation — தேசிய தொழில் முன்னேற்றக் கழகம்

National institute of community development — சமுதாய வளர்ச்சியின் தேசிய நிறுவனம்
National planning committee — தேசியத் திட்டக் குழு
National sample survey — தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு
National small industries corporation — தேசிய சிறுதொழில்கள் கழகம்
National seeds corporation — தேசிய விதைகள் கழகம்
National warehousing development fund — தேசியக் கிட்டங்கி வளர்ச்சி நிதி
Neo-classical school — புதுச்சம்பிரதாயக் கருத்துடையோர்
Net bank credit to private-sector — தனியார்துறையின் நிகரவங்கிக் கடன்
Net bank credit to the Government sector — அரசுத் துறையின் நிகரவங்கிக் கடன்
Net income — நிகர வருவாய்
Net liquidity ratio — நிகர நீர்மை வீதம், நிகர ரொக்க வீதம்
Neutrality — நடு நிலைமை
Neutral money — நடுநிலைப் பணம்
New economic policy — புதுப்பொருளாதாரக்கொள்கை
Nidhi — நிதி
Nominal cost — பெயரளவுச் செலவு
Normal rate of interest — இயல்பு வட்டி வீதம்

O

Objectives — நோக்கங்கள், குறிக்கோள்கள்
Obstacles — இடையூறுகள், தடைகள்
Obsolete — வழக்கற்ற
Occupany right — அனுபோக உரிமை
Occupation — தொழில்
Officers' board — அதிகாரிகளின் குழு
Open market operations — வெளி அங்காடி நடவடிக்கைகள்
Operation — நடவடிக்கை

Opportunity — வாய்ப்பு
Optimum land holding — உத்தம அளவு நிலவுடைமை, உத்தம அளவுப் பண்ணைகள்
Optimum population — உத்தம மக்கட்தொகை
Organiser — அமைப்பாளர்
Organised markets — கட்டமைந்த சந்தைகள்
Organization for economic co-operation and development (OECD) — பொருளாதாரக் கூட்டுறவு, முன்னேற்ற அமைப்பு
Organization for european co-operation and development — ஐரோப்பியக் கூட்டுறவு, முன்னேற்ற அமைப்பு
Oscillation — அலைவு
Output — உற்பத்தி
Output determinatiou — உற்பத்தி நிர்ணயம்
Over draft அதிகப்பற்று
Over capitalization — அமித முதலாக்கம்
Over-heads — மேலமைப்புகள், பொதுச் செலவுகள்
Overhead cost — பொதுச் செலவு, மேலமைப்புச் செலவு
Over full employment — அமித வேலைப் பெருக்கம்
Over issue of notes — நோட்டு மிகை வெளியீடு
Over production — அமித உற்பத்தி
Over saving — அமித சேமிப்பு

P

Packing credit — கட்டுக் கடன்
Panchayat union commissioner— பஞ்சாயத்து ஒன்றிய ஆணையாளர்
Parternship firm — கூட்டாளித் தொழிலமைப்பு நிறுவனம்
Pattern of industrial development — தொழில் வளர்ச்சியின் அமைப்பு
Peace corps — அமைதி அணிகள்
Pecuniary — பணச் சம்பந்தமான

Peoples' plan	—	மக்கள் திட்டம்
Personal freedom	—	தனியார் சுதந்திரம்
Perspective plan	—	தோற்றத் திட்டம்
Phases of trade circle	—	வாணிபச் சுழலின் முகங்கள்
Physical plan	—	வெளிப்படைத் திட்டம்
Pilot projects	—	முன்னோடித் திட்டங்கள்
Plan holiday	—	திட்ட விடுமுறை
Planned economy	—	திட்டமிட்டப் பொருளாதாரம்
Planning	—	திட்டமிடுதல்
Planning advisory board	—	திட்ட ஆலோசனைக் குழு
Planning by direction	—	இயக்கத் திட்டம்
Planning by inducement	—	ஊக்கத் திட்டம்
Population policy	—	மக்கட் தொகைக் கொள்கை
Power to save	—	சேமிக்கும் திறன்
Pre-conditions to take-off	—	மேலெழு நிலைக்கு முன்னுள்ள நிலைகள்
Price consciousness	—	விலை உணர்வு
Price control	—	விலைக் கட்டுப்பாடு
Price mechanism	—	விலை இயக்கம்
Price policy	—	விலைக் கொள்கை
Price regulation	—	விலையை ஒழுங்குபடுத்துதல்
Price stabilisation	—	விலைநிலைப் பேருக்கம்
Price support	—	விலை உதவி
Primary costs	—	முதன்மைச் செலவுகள்
Primary credit societies	—	முதல்நிலைக் கடன் சங்கங்கள்
Priority	—	முக்கியத்துவம்
Private capital	—	தனியார் மூலதனம்
Private foreign investment	—	வெளிநாட்டுத்தனியார் முதலீடு
Private sector	—	தனியார் துறை
Problems	—	சிக்கல்கள், பிரச்சினைகள்
Procurement	—	கொள்முதல்
Producer'e goods industries	—	உற்பத்திப் பொருட்களின் தொழில்கள்.
Progress and poverty	—	வளர்ச்சியும், வறுமையும்
Professional money-lenders	—	லேவாதேவிக்காரர்கள்
Progressive income taxes	—	வளர்வீத வருமான வரிகள்
Progressive taxation	—	வளர்வீத வரி விதிப்பு
Progressivity	—	வளர்வீதத் தன்மை
Project evaluation	—	திட்ட மதிப்பீடு
Promissory note	—	வாக்குறுதிப் பத்திரம்

Propensity to consume — நுகரும் விருப்பம்
Propensity to save — சேமிக்கும் விருப்பம்
Proportional property tax — வீதாச்சார சொத்து வரி
Prosperity — செழுமை நிலை
Provident fund — எதிர்கால வைப்பு நிதி
Public capital — பொது மூலதனம்
Public dept — பொதுக் கடன்
Public enterprises — பொது நிறுவனங்கள்
Public expenditure — பொதுச் செலவு, அரசாங்கச் செலவு
Public foreign capital — பொது வெளிநாட்டு மூலதனம்
Public foreign investment — வெளிநாட்டுப் பொது முதலீடு
Public health — பொது ஆரோக்கியம்
Punjab land alienation act — பஞ்சாப் நில வெளியேற்றச் சட்டம்
Public law 480 — பொதுச் சட்டம் 480
Public sector — பொதுத் துறை
Public utliity services — பொதுப்பயன் பணிகள்
Public works-programmes — பொதுப்பணித் திட்டங்கள்
Purchasing power — வாங்கும் திறன்

Q

Qualitative credit control — தரக் கடன் கட்டுப்பாடு
Quality — தரம்
Quantitative credit control — அளவுக்கடன் கட்டுப்பாடு
Quick investment — விரைவான முதலீடு
Quick yieldlng projects — விரைவில் பயனளிக்கும் திட்டங்கள்.

R

Railway funds — இரயில்வே நிதிகள்
Rajastan canal area — ராஜஸ்தான் கால்வாய்ப் பகுதி
Rate of growth of population — மக்கட் தொகையின் வளர்ச்சி வீதம்
Rate of return criterion — இலாப வீதக் கொள்கை
Rationalisation — தொழிற் சீரமைப்பு
Rationing — பங்களவு முறை
Real cost — உண்மைச் செலவு
Recession — பின்னிறக்கம்

Recommendations — பரிந்துரைகள்
Redemption — கடன் மீட்சி
Redistribution — மறு பகிர்வு
Refinance corporation — மறுநிதிக் கழகம்
Regional bodies — பிரதேச நிறுவனங்கள்
Regulated market — ஒழுங்குபடுத்தப் பெற்ற சந்தை
Religious faith — மத நம்பிக்கை
Remedial measures — தீர்வு முறைகள், பரிகார நடவடிக்கைகள், திருத்தும் வழி முறைகள்.
Remedies — தீர்வுகள், பரிகாரங்கள்
Repercussion — விளைவு
Repercussion of international forces — பன்னாட்டுச் சக்திகளின் விளைவுகள்
Report — அறிக்கை
Repudiation — கடன் மறுப்பு
Reserve bank of india — இந்திய ரிசர்வ் வங்கி
Restriction of inheritance — சொத்துப் பேறைக் கட்டுப் படுத்துதல்
Revival — மீட்சி
Role — பங்கு, பாகம், பகுதி
Royal commission on agriculture — வேளாண்மைக்கான ராயல் கமிஷன்
Royalty — உரிமைப் பங்கு, உண்மைச் செலுத்தி
Running inflation — ஓடும் பணவீக்கம்
Rural credit survey committee — கிராமக் கடன் புள்ளி விவரச் சேகரிப்புக் குழு
Rural debentures — கிராமக் கடன் பத்திரங்கள்
Rural underemployment — கிராமப்புற மறைந்துள்ள வேலை யின்மை

S

Safe limit — பாதுகாப்பான அளவு
Sarvodaya schemes — சர்வோதயத் திட்டங்கள்
Saving potential — சேமிப்புத் திறன்
Savings drives — சேமிப்பு இயக்கங்கள்

Savings ratio	— சேமிப்பு வீதம்
Scarcity	— கிடைப்பருமை
Seasonal unemployment	— பருவகால வேலையின்மை
Secondary costs	— துணைச் செலவுகள்
Sector analysis	— துறை ஆய்வு
Selective credit control	— தேர்வுக் கடனளிப்புக் கட்டுப் பாடு
Self-sufficiency	— தன்னிறைவு
Self-sufficient economy	— தன்னிறைவுப் பொருளாதாரம்
Self-veliant and self-generating	— தன்னிறைவு பெற்றுத் தானே முன்னேற்ற மடைகின்ற
Seller's market	— விற்பனையாளர்களின் சந்தை
Service co-operatives	— சேவைக் கூட்டுறவுகள்
Shadow costs	— சாயல் செலவுகள்
Shadow prices	— சாயல் விலைகள்
Silent revolution	— அமைதிப் புரட்சி
Sinking fund	— கடன் கழிவு நிதி
Size	— அளவு
Skill formation	— திறமைத் திரட்சி
Small Former's development agency	— சிறு விவசாயிகளின் முன் னேற்ற நிறுவனம்
Social and economic overheads	— சமுதாய, பொருளாதார மேலமைப்புக்கள்.
Social control	— சமூகக் கட்டுப்பாடு
Socialism	— சமதர்மம்
Socialistic pattern of society	— சமதர்ம முறைச் சமுதாயம்
Social Marginal productivity	— சமுதாய இறுதிநிலை உற்பத்தி, சமூக இறுதி நிலை உற்பத்தி
Social overhead capital	— சமுதாய மேலமைப்பு மூல தனம்
Social overheads	— சமுதாய மேலமைப்புக்கள்
Social revolution	— சமுதாயப் புரட்சி
Social welfare	— சமுதாய நலம்
Socio-cultural factors	— சமுதாய பண்பாட்டுக் காரணி கள்
Socio-cultural obstacles	— சமுதாய பண்பாட்டுத்தடைகள்
Sole proprietorship	— தனியுரிமைத் தொழிலமைப்பு, தனி மனிதன் தொழில் முறை

Sources of savings — சேமிக்கும் வழி முறைகள்
Sovereignty of consumers — துய்ப்போர் இறைமை
Special development loan programme — சிறப்பு முன்னேற்றக் கடன் திட்டம்
Special united nations fund for economic development (SUNFED) — பொருளாதார வளர்ச்சிக்கான ஐக்கிய நாடுகளின் சிறப்புநிதி
Speculation — ஊக வணிகம்
Speculators — ஊக வணிகர்கள்
Spiral inflation — சுழலும் பணவீக்கம்
Sriniketan institute of rural reconstruction — கிராமப் புனரமைப்பிற்கான ஸ்ரீநிகேதன் நிறுவனம்
Stability of exchange rates — மாற்று வீதங்களின் நிலைப் பேருக்கம்
Stabilization of price — விலைநிலைப் பேருக்கம்
Stages of economic growth — பொருளாதார வளர்ச்சியின் நிலைகள்
Standard — நிலை, தரம்
Standard committee on agricultural credit and the land mortgage banks — வேளாண்மைக் கடன், நில அடமான வங்கிகளின் நிலை பெற்ற ஆலோசனைக் குழு
Stage bank of india — இந்திய ஸ்டேட் வங்கி, இந்திய அரசின் வங்கி
State co-operative banks — மாநிலக் கூட்டுறவு வங்கிகள்
State development committee — மாநில வளர்ச்சிக் குழு
State electricity boards — மாநில மின்சார வாரியங்கள்
State enterprices — அரசின் நிறுவனங்கள்
State farming — அரசின் பண்ணை முறை
State finance corporations — மாநில நிதிக் கழகங்கள்
State trading — அரசின் வாணிபம்
State trading corporation — அரசின் வாணிபக் கழகம்
Stimulation — தூண்டுதல், ஊக்குதல்
Stocks — கூட்டுரிமைப் பங்குகள், இருப்புகள்
Strike — வேலை நிறுத்தம்

Structure — அமைப்பு
Sub-division and fragmentation of holidays — நிலங்கள் உட்பிரிவு படுத்தப் படுதலும், துண்டாடுதலும்
Subsidiary occupations — துணைத் தொழில்கள்
Subsidy — கொடை, உதவிக் கொடை
Subsistence — பராமரிப்பு, பிழைப்பு
Subsistence level — பராமரிப்பு மட்டம்
Superior — மேம்பட்ட
Super-power medium-wave transmitters — அதிகச் சக்தியுள்ள மத்திய அலை ஒலி பரப்பும் இயந்திரங்கள்
Supply and prices of goods act — பொருட்களின் அளிப்பு, விலைகள் சட்டம்
Surplus budget — எச்ச வரவு - செலவுத் திட்டம்
Survey team — ஆய்வுக்குழு

T

Taccavi acts — தக்கவிச் சட்டங்கள்
Taccavi loans — தக்கவிக் கடன்கள்
Take-off — மேலெழு நிலை
Tangible — தெளிவாகத் தெரிகின்ற, தெளிவான
Targets — குறியிலக்குகள், இலக்குகள்
Tariff policy — சுங்க வரிக் கொள்கை
Tarriffs — சுங்க வரிகள்
Taxable capacity — வரி செலுத்தும் திறன், வரி தாங்கும் வல்லமை, வரி தாங்கும் திறன்
Taxable income — வரிக்குரிய வருமானம், வரி விதிப்பிற்குரிய வருமானம்
Taxation — வரி விதிப்பு
Taxation Enquiry commission — வரிவிதிப்பு விசாரணைக் குழு

Tax burden — வரிப் பளு
Tax credit system — வரிக்கடன் திட்டம்
Tax evasion — வரி ஏய்ப்பு
Tax holiday — வரி விடுமுறை
Tax income — வரி வருமானம்
Tax incentives — வரி ஊக்கங்கள்
Tax induced inflation — வரிவிதிப்பால் தூண்டப்படுகின்ற பணவீக்கம்
Tax receipts — வரி வரவுகள்
Tax reform வரிச் சீர்திருத்தம்
Tax structure — வரியமைப்பு
Technical — தொழில் நுட்பமான
Technical skill — நுட்பத் திறமை
Technique — நுட்ப வினைமுறை
Technological development — நுட்பத் தொழில் வளர்ச்சி
Technological unemployment — தொழில் நுட்ப வளர்ச்சியால் ஏற்படும் வேலையின்மை
Technology — தொழில் நுட்பம், தொழில் நுணுக்கம், தொழில் நுண்ணியல்
Tenancy — குடிவாரம்
Tenant — வாரக்குடி, குத்தகைக் குடி
Ten point programme — பத்து அம்சத் திட்டம்
Tenure (land) — (நில) உரிமை முறை
Terms of trade — வாணிபநிலை, வாணிப மாற்று வீதம்
The india tourism development corporation — இந்திய உல்லாசப்பயண வளர்ச்சிக் கார்ப்பொரேஷன்
Theories — கோட்பாடுகள்
Theory of functional distribution — பணிப் பகிர்வுக் கோட்பாடு
Theory of personal distribution — தனியார் பகிர்வுக் கோட்பாடு
Thesis — கொள்கை, கோட்பாடு

Time-deposit — தவணை வைப்பு
Time-element — கால அம்சம், காலக்கூறு
Toll — வழிச் சுங்கம்
Ton — டன்
Tons — டன்கள்
Tonne — டன்னி
Tonnes — டன்னிகள்
Traders — வணிகர்கள்
Trade risks — வியாபார ஆபத்துகள், வாணிப இடர்கள்
Trade unions — தொழிலாளர் சங்கங்கள்
Tractors — எந்திரக் கலப்பைகள்
Traditional products — பாரம்பரியப் பொருட்கள்
Traditional society — தொண்மைச் சமுதாய அமைப்பு
Transactions — பேரங்கள்
Transitional plan — மாற்றத் திட்டம்
Treasury bill — கருவூல உண்டியல்
Tube-wells — குழாய்க் கிணறுகள்

U

Unaccounted money — கணக்கில் வராத பணம்
Unbalance — சரிசமனில்லாத, சமநிலையற்ற
Unbalanced growth — சரிசமனில்லாத வளர்ச்சி; சம நிலையில்லாத வளர்ச்சி
Uncertain — உறுதியற்ற, நிலையற்ற
Uncertainty — உறுதியின்மை, நிலையின்மை
Under-consumption — துய்ப்புக் குறைவு
Under-developed — வளர்ச்சி முற்றாத, வளர்ச்சி யடையாத, வளர்ச்சி குறைந்த
Under-developed economy — வளர்ச்சியடையாத பொருளா தாரம்
Uuder-employment — வேலைக்குறைவு, மறைந்துள்ள வேலையின்மை

Under-employment equilibrium — நிறைவிலா வேலைச் சமநிலை
Under-population — மக்கள் குறைவு
Under-taking — பொறுப்பு, தொழிலீடுபாடு
Under valuation — தாழ் மதிப்பீடு
Undeveloped — வளர்ச்சியடைய முடியாத, வளர்ச்சியில்லாத
Unemployment — வேலையின்மை
Unearned income — உழைப்பிலா வருமானம்
Uniform — ஒருபடித்தான
Unit — அலகு, பகுதி
United nations administrative committee — ஐக்கிய நாடுகளின் நிர்வாகக் குழு
United nations enlarged programme of technical assistance (UNEPTA) — ஐக்கிய நாடுகளின் தொழில் நுணுக்க உதவிக்கான விரிவாக்கத் திட்டம்
United nations evaluation team — ஐக்கிய நாடுகளின் மதிப்பீட்டுக் குழு
United nations expanded programme of technical assistance — ஐக்கிய நாடுகளின் தொழில் நுட்ப உதவியின் விரிவான திட்டம்
United nations organisation — சர்வதேச சங்கம்
United nations report — ஐக்கிய நாடுகளின் அறிக்கை
Unit trust of india — இந்திய யூனிட் டிரஸ்ட்
Unity — ஒருமை
Universal — உலகப் பொதுவான
Unproductive — உற்பத்திக்கு உதவாத
Unproductive labour — பயனில்லாப்பாடு
Unskilled labourers — திறம் பெறாத் தொழிலாளர்கள்
Unstable equilibrium — நிலையற்ற சமநிலை

Unused factors — பயன்படுத்தாக் காரணிகள்
Upper class sector (u-sector) — உயர்வகுப்புத்துறை
U.S. agency for international development (USAID) — ஐக்கிய நாடுகளின் பன்னாட்டு முன்னேற்ற நிறுவனம்
Usefulness — பயனுடைமை
Use value — பயன் மதிப்பு
Utilitarianism — பயன்பாட்டுக் கொள்கை
Utility — பயன்பாடு

V

Value — மதிப்பு
Value in exchange — பரிவர்த்தனை மதிப்பு, விற்பனை மதிப்பு
Value in use — உபயோக மதிப்பு
Variable — மாறி
Variable, dependent — சார்ந்த மாறி
Variable, independent — சாரா மாறி
Velocity — வேகம்
Velocity of circulation — புழக்க (சுற்று) வேகம்
Verification — சரி பார்த்தல்
Version — மொழிவு
Vested interests — ஊன்றிய நலமிகள்
Veto — மறுப்பாணை
Vicious circle of poverty — வறுமை வட்டம்
View — கருத்து
Village agricultural and Indus-Vitrial development programme — கிராம வேளாண்மை, தொழில் வளர்ச்சித் திட்டம்
Virtual saving — உண்மையான சேமிப்பு
Vital statistics — பிறப் பிறப்புப் புள்ளிகள்
Vocabion — செய்தொழில், தொழில்

Vocational education — தொழில் முறைக் கல்வி
Vocational guidance — தொழில்முறை வழி காட்டல்
Volume — பருமம்
Volume of output — உற்பத்தி அளவு, உற்பத்திப் பருமம்
Volume of sales — விற்பனை அளவு, விற்பனை பருமம்

W

Wage — கூலி
Wages fund — கூலி நிதி
Wages of management — நிர்வாகக் கூலி
Wage spiral — கூலி சுழற்சி
Wants — விருப்பங்கள், தேவைகள்
Waiting — காத்திருத்தல்
Ware house — கிட்டங்கி, கிடங்கு
War loan — போர்க்கடன்
War risk — போர் ஆபத்து
Wasteful social ceremoniee — பயனற்ற சமுதாயச் சடங்குகள்
Waste land — தரிசு நிலம்
Water frame — நீர்ச் சட்டம்
Water-logged — நீர் தேங்கிய
Water rate — தண்ணீர் வரி
Water resources — நீர் வளம்
Waves in business cycle — வாணிபச் சுழலின் அலைகள்
Ways and means advances — வழிமுறைக் கடன்கள்
Wealth of nations — நாடுகளின் செல்வம்
Wealth tax — செல்வ வரி
Wear and tear — தேய்மானம்
Weather — வானிலை
Weighed index number — நிறையிட்ட குறியீட்டெண்கள்
Welfare — நலம்
Welfare economics — நலப் பொருளாதாரம்
Welfare state — நலங்காக்கும் அரசு

Wholesale prices — மொத்த விற்பனை விலைகள்
Wholesalers — மொத்த விற்பனையாளர்கள்
Will to save — சேமிக்கும் விருப்பம்
Window dressing — வெளிப்பகட்டு, புறச்சோடனை
Worker — பாட்டாளி, உழைப்பாளி
Work house — தொழிலகம்
Working capital — நடைமுறை மூலதனம்
Working class — பாட்டாளி வகுப்பினர்
Working partner — உழைப்புக் கூட்டாளி, உழைப்புப் பங்காளி
Work load — வேலைப் பளு
Workman's compensation — வேலையாள் நட்ட ஈடு
Workshop — பட்டறை
World bank (IBRD) — உலக வங்கி
World depression — உலக மந்தம்

Y

Yeoman — சுயேச்சைக் குடியானவன்
Yield on securities — பத்திரங்களின் விளைவு
Yield per aere — ஒரு ஏக்கருக்கான உற்பத்தி
Yield per person — தனி ஒருவருக்கான உற்பத்தி

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

சென்னை

1971 ஜூலை வரை வெளியிட்டுள்ள நூல்கள்

பொருளாதாரம்

No.	நூல்	ஆசிரியர்	ரூ.	காசு
*1.	பொருளாதாரம்—I	சி. வேலாயுதம்	6	50
*1-A	,, II	,,	9	00
*2.	சோவியத் பொருளாதார வளர்ச்சி	டாக்டர் எம். ஜே. கே. தவராஜ்	4	25
*3.	அமெரிக்கப் பொருளாதாரம்	,,	4	50
4.	பொருளாதாரச் சிந்தனை வரலாறு	சோணாசலம்	7	00
*5.	பன்னாட்டு வாணிபம்	மு. ஆரோக்கியசாமி	6	00
6.	புதுமைப் பொருளாதாரக் கூறுகள்	திருமதி ஆர். தாமரஜாட்சி	12	00
7.	பொருளாதாரம் ஓர் அறிமுகம்—I	தி. சி. மோகன்	12	00
8.	,, II	எம். ஏ. அபூர்வசாமி, பி. வி. ஸ்ரீநிவாசன்	10	75
9.	பொருளாதாரக் கோட்பாடு வளர்ந்த வரலாறு	க. முத்தையன்	7	00
*10.	பணவியலும் பாங்கியலும்—I	சி. வேலாயுதம்	6	75
*11.	,, II	,,	11	50
12.	நவீன பாங்கு இயல்	க. வெற்றிவேல்	5	00
*13.	இந்தியச் செலாவணியும் பாங்கு முறையும்	பி. வி. ஸ்ரீநிவாசன்	5	50
*14.	அரசாங்க நிதி இயல்	அர. சேஷாசலம்	4	75

*மூல நூல் (Original Book)

பொருளாதாரம்-(தொடர்ச்சி)

				ரூ.	காசு
15.	இந்தியப் பொருளியல்—I	...	எம். பாலசுப்பிரமணியன்	... 10	00
16.	,, II	...	எம். லூர்துநாதன்	... 4	25
17.	நமது பொருளாதாரப் பிரச்சினை—I	...	சி. சுந்தரராஜன்	... 10	75
18.	,, II	...	எஸ். குழந்தைநாதன்	... 10	50
19.	இங்கிலாந்தின் பொருளாதார வரலாறு—I	...	கீ. சீ. இராமசாமி	... 6	00
20.	,, II	...	,,	... 6	00
21.	அமெரிக்காவின் நவீன பொருளாதார வளர்ச்சி	...	தி. சி. மோகன்	... 5	00
22.	அமெரிக்கப் பொருளாதார வரலாறு—I	...	மு. க. சுப்பிரமணியம்	... 11	00
23.	,, II	...	பி. வி. ஸ்ரீநிவாசன்	... 6	00
24.	,, III	...	,,	... 6	50
25.	அரசாங்க நிதியியலின் பொருளாதாரம்—I	...	மா. குமாரசாமி	... 10	00
26.	,, II	...	அர. சேஷாசலம்	... 9	50
27.	இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி—I	...	தே. வேலப்பன்	... 10	00
28.	,, II	...	ஜி. சிதம்பரம்	... 8	00
29.	பணம்—சிறு விளக்கம்	...	கோ. இராதாகிருஷ்ணன்	... 10	00
*30.	வணிக இயலின் தத்துவங்கள்	...	கு. ஆளுடைய பிள்ளை	... 9	50
31.	பத்தொன்பதாம் நூற்றுண்டில் கிரேட் பிரிட்டனில் தொழில் - வாணிகப் புரட்சி	...	சு. ரா. கருப்பண்ணன்	... 11	00
32.	பென்ஹாம் பொருளாதாரம்—I	...	ஏ. குழந்தை	... 11	00
33.	,, II	...	எஸ். குழந்தைநாதன்	... 7	00
*34.	வரவு செலவுத் திட்டம்	...	ஆர். ரங்காச்சாரி	... 6	00
35.	பன்னுட்டுப் பொருளாதாரம்—I	...	ஏ. குழந்தை	... 7	50

36.	பன்னாட்டுப் பொருளாதாரம்—II	...	கே. எஸ். இராமசாமி	...	9 00
37.	பொருளாதார் ஆய்வு நூல்—I	...	கோ. இராதாகிருஷ்ணன்	...	7 75
38.	,, II	...	,,	...	7 00
39.	வளர்ச்சியுருத நாடுகளின் அரசாங்க நிதியியல்	...	க. வெற்றிவேல்	...	4 25
40.	வளர்ச்சி குறைந்த நாடுகளின் முதலாக்கம் பற்றிய சிக்கல்கள்	...	மா. குமாரசாமி	...	5 50
41.	1939 முதல் இந்தியாவில் பணவீக்க விலைப் போக்குகள்	...	சி. சுந்தரராஜன்	...	7 50
42.	பொருளாதார வளர்ச்சிபற்றிய கட்டுரைகள்	...	எம். கே. சுப்பிரமணியம்	...	7 75
43.	இந்தியப் பொருளாதார வரலாறு (1857—1956)—I	...	ம. திருநாவுக்கரசு	...	7 00
44.	பொருளாதாரம் – ஓர் அறிமுகம்	...	பு. வி. சீனிவாசன்	...	6 25

வரலாறு

*45.	பிரிட்டன் வரலாறு—I	...	கி. ர. அனுமந்தன்	...	4 50
*46.	,, II	...	,,	...	3 50
*47.	,, III	...	,,	...	7 25
*48.	ஐரோப்பிய வரலாறு—I	...	டி. வி. சொக்கப்பா	...	3 75
*49.	ஐரோப்பிய வரலாறு—II	...	என். ஜே. இராஜகோபால்	...	5 50
50.	ஐரோப்பா-கடந்த ஐந்து நூற்றாண்டுகாலச் சரித்திரம்	...	வை. விருத்தகிரீசன்	...	15 00
51.	இங்கிலாந்து வரலாறு—I	...	இரா. அண்ணாமலை	...	13 00
52.	,, II	...	பா. மாணிக்கவேலு	...	13 00
53.	,, III	...	என். ஜே. இராஜகோபால்	...	8 00

*மூல நூல் (Original Book)

வரலாறு—(தொடர்ச்சி)

			ரூ.	காசு
54.	இங்கிலாந்து வரலாறு—IV	என். ஜே. ராஜகோபால்	8	00
55.	இங்கிலாந்தின் வரலாறு—I	க. த. திருநாவுக்கரசு	15	00
56.	,, II	எம். எக்ஸ். மிரண்டா	8	00
57.	,, III	,,	5	00
58.	இந்தியாவின் சிறப்பு வரலாறு—I	தி. வெ. குப்புசாமி	5	00
59.	,, II	ஏ. உஸ்மான் ஷெரீப்	6	00
60.	,, III	அ. பாண்டுரங்கன்	7	25
61.	கிரேக்க நாட்டு வரலாறு—I	சைமன் ஐ. எஸ். பாக்கியநாதன்	7	50
62.	,, II	,,	7	00
63.	,, III	பி. இராமாநுஜம் தேவதாஸ்	7	75
64.	ஆக்ஸ்ஃபோர்டின் இந்திய வரலாறு—I	தி. வெ. குப்புசாமி	8	25
65.	,, II	ஏ. உஸ்மான் ஷெரீப்	7	50
66.	,, III	க. த. திருநாவுக்கரசு	10	50
67.	முகலாயப் பேரரசு—I	ஏ. உஸ்மான் ஷெரீப், எம். எக்ஸ். மிராண்டா	7	50
68.	,, II	எம். எக்ஸ். மிராண்டா, பா. மாணிக்கவேலு	7	75
69.	ஆங்கில அரசியலமைப்பின் வரலாறு—I	வை. விருத்தகிரீசன்	7	50
70	,, II	வை. விருத்தகிரீசன், இரா. அண்ணாமலை	6	75
71.	,, III	இரா. அண்ணாமலை, பா. மாணிக்கவேலு	6	50
72.	,, IV	பா. மாணிக்கவேலு	7	00

73.	ஆங்கிலேயரின் சமுதாய வரலாறு—I	சி. ஈ. இராமச்சந்திரன்	6	50
74.	,, II	சி. ஈ. இராமச்சந்திரன், இரா. ஆலாலசுந்தரம்	6	75
75.	,, III	ஆர். ஆலாலசுந்தரம்	6	50
76.	இந்தியாவில் முகலாயரின் ஆட்சி—I	பா. மாணிக்கவேலு	5	00
77.	,, II	ஏ. உஸ்மான் ஷெரீப்	6	00

அரசியல்

*78.	அரசியல் அமைப்புகள்	ஜே. இராமச்சந்திரன்	4	62
*79.	அரசாங்கத்தின் வரலாறு	மோ. கிளாரன்சு, டி. டி. பெலிக்ஸ்	7	50
*80.	இந்திய அரசியலமைப்பு	வீ. கண்ணையா	4	75
81.	அரசியலுக்கு ஓர் அறிமுகம்	டி. செல்லப்பா	8	50
82.	தற்கால அரசியல் அமைப்புகள்	மோ. வள்ளுவன் கிளாரன்சு	8	50
83.	பன்னாட்டு அரசியல்—I	திருமதி நூர்ஜஹான் பாவா	16	00
84.	,, II	,,	13	25
85.	பொதுத்துறை ஆட்சி இயல்—I	வீ. கண்ணையா	9	00
86.	,, II	இ. ஜெகதீசன்	7	25
87.	பொதுத்துறை ஆட்சியியலுக்கு ஓர் அறிமுகம்—I	வீ. கண்ணையா	7	50
88.	,, II	டி. செல்லப்பா	7	50
89.	இந்திய அரசியலமைப்புத் திட்டம்	தி. வெ. குப்புசாமி, எஸ். சுப்பிரமணியன்	9	25
90.	இந்திய ஆட்சி அமைப்புமுறை வளர்ச்சி—I	வீ. கண்ணையா	6	25
91.	,, II	வீ. கண்ணையா, கி. ர. அனுமந்தன்	5	75

*மூல நூல் (Original Book)

			ரூ.	காசு
92.	இந்திய ஆட்சி அமைப்புமுறை வளர்ச்சி—III	கி. ர. அனுமந்தன்	7	25
*93.	மக்கள் ஆட்சி	க. சந்தானம்	4	25
94.	1919 முதல் சர்வதேச உறவுகளும் உலக அரசியலும்—I	என். ஜே. ராஜகோபால்	7	75
95.	சமூக, அரசியல் கொள்கையின் அடிப்படைகள்	மோ. வள்ளுவன் கிளாரன்சு	7	00
96.	அரசியலமைப்புச் சட்ட ஆய்வுக்கு ஓர் அறிமுகம்—I	பா. சூரியநாராயணன்	5	75
97.	,, II	பா. சூரியநாராயணன், கி. ர. அனுமந்தன்	6	00
98.	,, III	கி. ர. அனுமந்தன்	5	75

உளவியல்

99.	குழந்தை உளவியல்—I	கி. ர. அப்புள்ளாச்சாரி	8	00
100.	,, II	,,	7	00
101.	உட்கவர் மனம்	சி. ந. வைத்தீஸ்வரன்	7	00
102.	இளையோர் உளவியல்—I	தி. இரா. அரங்கராசன்	12	00
103.	,, II	,,	9	00
104.	சமூக உளவியல்	என். வேதமணி மானுவேல்	9	25
105.	பிறழ்நிலை உளவியல்	அ. பெசன்ட் கிரீப்பர்ராஜ்	11	00
106.	பித்தரின் உள்ளம்	,,	3	00
*107.	குமர உள்ளம்	டாக்டர் மு. அறம்	6	25
*108.	உளநலவியல்	டாக்டர் தா. ஏ. சண்முகம்	6	00

தத்துவம்

109.	இந்து சமயத் தத்துவம்	... ஞா. ராஜாபகதூர்	... 5	50
110.	அறிவு ஆராய்ச்சி இயல்	... ஆர். இராமானுஜாச்சாரி	... 3	50
*111.	மேலைநாட்டுத் தத்துவம்	... ஆர். எஸ். தேசிகன்	... 3	50
112.	அத்துவித தத்துவம்	... கோ. மோ. காந்தி	... 6	50
113.	ஆங்கிலேயப் பயன்வழிக் கொள்கையினர்	... மோ. வள்ளுவன் கிளாரன்சு	... 5	50
114.	இந்தியத் தத்துவம்—I	... வ. அ. தேவசேனபதி, ப. நா. சண்முகசுந்தரம்	... 3	50
115.	,, II	... ,,	... 6	00
116.	மெய்ப்பொருளியல்-ஓர் அறிமுகம்—I	... சி. இராமலிங்கம்	... 6	00

அறவியல்

117.	அறவியல்-ஓர் அறிமுகம்	... கோ. மோ. காந்தி	... 8	50

அளவையியல்

118.	அளவையியல் தொடக்க நூல்	... கி. ர. அப்புள்ளாச்சாரி	... 2	50

மானிடவியல்

*119.	மானிடவியல்	... ம. சு. கோபாலகிருஷ்ணன்	... 4	75
120.	பண்பாட்டுக் கோலங்கள்	... கி. பூ. சுப்பிரமணியம்	... 5	50
121.	இந்தியாவில் குடியானவர் வாழ்க்கை	... எஸ். இலட்சுமி	... 3	50

சமூகவியல்

122.	சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள்	... ஜெ. நாராயணன்	... 10	50

*மூல நூல் (Original Book)

புவியியல்

எண்	நூல்	ஆசிரியர்	ரூ.	காசு
*123.	ஆசியா—I	கொ. சேஷ. நரசிம்மன்	9	50
*124.	,, II	,,	8	75
*125.	ஐரோப்பாக் கண்டத்தின் புவியியல்	ஏ. எஸ். நாராயணன்	8	50
*126.	தென்கிழக்கு ஆசியா	ஜி. கிருஷ்ணமூர்த்தி	8	50
*127.	வட அமெரிக்கா	குமாரி இரா. அலமேலு	6	50
*128.	தென் அமெரிக்கா	எம். என். பத்மநாபன்	9	00
*129.	தென் கண்டங்கள்—ஆஸ்திரேலியா	திருமதி எச். நியூமன்	3	00
*130.	,, —ஆஃப்ரிக்கா	எஸ். முத்துக்கிருஷ்ணக் கரையாளர்	3	25
*131.	புவிப்புறவியல்—II	நா. அனந்தபத்மநாபன்	6	00
*132.	செய்முறைப் புவியியல்	சு. ஜெயச்சந்திரன்	5	50
*133.	மக்கட் பரப்பியல்	வி. எஸ். அனந்தபத்மநாபன்	4	75
*134.	சமுத்திரவியல்	கோ. இராமசாமி	6	50
135.	காலநிலை இயல்—I	கொ. சேஷ. நரசிம்மன்	10	00
136.	,, II	,,	5	00
*137.	காலநிலை இயல்—I	திருமதி இராதா	9	50
*138.	,, II	,,	8	00
139.	வளியியலுக்கு ஓர் அறிமுகம்	கோ. இராமசாமி	5	50
*140.	புவி அமைப்பு இயல்	சி. விஸ்வநாதன்	4	75
141.	பௌதிகப் புவியியலும் புவியமைப்பியலும்	கோ. இராமசுவாமி	6	00
142.	சிஷோமின் வாணிகப் புவியியல்—I	எஸ். மாணிக்கம்	9	50
143.	,, II	ம. கார்த்திகேயன்	12	00
144.	,, III	கொ. சேஷ. நரசிம்மன்	5	75

புள்ளியியல்				
*145.	புள்ளியியல்—அறிமுகம்	சு. வைத்தியநாதன்	10	75
146.	புள்ளியியல்—முறைகள்—I	கோ. சண்முகசுந்தரம்	10	00
147.	,, II	கே. ஆர். இராஜகோபாலன்	14	00
148.	நம்மைச் சுற்றியுள்ள பேரண்டம்	தி. வி. லட்சுமிநரசிம்மன்	6	50
உயர்கணிதம்				
*149.	ஆபத்தொலை வடிவகணிதம்	டி. கே. மாணிக்கவாசகம்பிள்ளை	4	25
*150.	வகை நுண்கணிதம்	,,	3	00
*151.	தொகை நுண்கணிதம்	தி. கோவிந்தராசன்	3	25
விலங்கியல்				
*152.	விலங்கியல்	பெ. மா. அண்ணாமலை, இரா. முருகேசன்	12	00
பௌதிகவியல்				
153.	ஒளி நூல்	ச. சம்பத்து	10	00
விஞ்ஞானம்				
*154.	வானவெளி வெற்றி	டாக்டர் எம். ஏ. தங்கராஜ்	6	00
*155.	ரேடியோ	டாக்டர் பி. திருஞானசம்பந்தம்	4	75
*156.	எக்ஸ்-கதிர்கள்	பெ. நா. அப்புசாமி, ஜே. பி. மாணிக்கம்	4	50
*157.	பாம்புகள்	பெ. மா. அண்ணாமலை	3	50
*158.	தாவரம்—வாழ்வும் வரலாறும்	டாக்டர் கு. சீனிவாசன்	8	00
*159.	கரும்பு	டாக்டர் கு. பெரியசாமி	4	00
*160	தாவரங்களின் வாழ்வியல்	எஸ். சுந்தரம்	6	50

*மூல நூல் (Original Book)

			ரூ.	காசு
மருத்துவம்				
*161.	நீரிழிவு-க்ஷயரோகம்	டாக்டர் ஜி. வேங்கடசாமி, டாக்டர் ஏ. கதிரேசன்	2	50
162.	மகப்பேறும் மாதர் நோயும்	டாக்டர் (குமாரி) ந. மணிமேகலை	8	25
*163.	பாக்டீரியா	சு. சுந்தரம்	2	50
164.	புற்றுநோய்	அ. கதிரேசன்	3	50
165.	உடலியங்கியல்—I	டாக்டர்கள் ஜி. வேங்கடசாமி, டி. சரோஜினி, எஸ். கே. துரைராஜ், ஆ. சேது	6	75
166.	,, II	,,	5	50
167.	என்புருக்கி நோய்	டாக்டர் அ. கதிரேசன்	7	25
பொறியியல்				
168.	நீங்களே உங்கள் வீட்டைக் கட்டலாம்.	கே. வி. கிருஷ்ணராஜ், சி. ஆர். சுப்பிரமணியம் கே. வேணுகோபால், ஆர். இராமசாமி	8	50
கூட்டுறவு				
169.	உலகக் கூட்டுறவு இயக்கம்	அ. வேல்மணி	5	50
சட்டம்				
*170.	குற்றவியல் சட்டம்	மா. சண்முகசுப்பிரமணியம்	10	00
பொது நூல்கள்				
171.	மகாத்மா காந்தி	சரஸ்வதி தங்கையன்	3	25
172.	விவசாயப் புரட்சி	வி. கார்த்திகேயன்	8	00
173.	சேமக் கை-நூல்	ஆ. சுப்பிரமணியன்	2	50
*174.	முற்காலச் சோழர் கலையும் சிற்பமும்	எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்	9	00

*175.	உணவும் ஊட்டமும்	திி. வேங்கடகிருஷ்ணய்யங்கார்	4	50
*176.	பள்ளி நிருவாக அமைப்பு-அடிப்படைக் கருத்துகள்	எஸ். சந்தானம், எஸ். ஏ. துரைசிங்	6	25

புகுமுக (P.U.C.) வகுப்புகளுக்குரியவை

*177.	உலக வரலாறு	டி. ஆர். இராமச்சந்திரன்	4	00
*178.	பொருளாதாரம்	ஜி. சிதம்பரம்	2	75
*179.	வணிகவியலுக்கு ஓர் அறிமுகம்—I	கு. ஆளுடைய பிள்ளை	2	50
*180.	,, II	,,	2	25
*181.	பௌதிகம்	டாக்டர் பி. திருஞானசம்பந்தம், ஆர். நாகராஜன்	6	00
*182.	புகுமுக பௌதிகம்	டாக்டர் எம். ஏ. தங்கராஜ்	5	75
*183.	பௌதிகம்-ஓர் அறிமுகம்	எஸ். சம்பத்	7	00
*184.	புகுமுக வகுப்புக் கணிதம்—I	கே. இராஜகோபாலன்	7	00
*185.	,, II	,,	3	00
*186.	புகுமுக வகுப்புக் கணித நூல்—I	டி. கோவிந்தராஜன், முத்துசாமி	7	00
*187.	,, II	,,	4	50
*188.	கணிதம்-ஓர் அறிமுகம்—I	ஆர். மகாதேவன்	4	75
*189.	,, II	,,	3	25
*190.	வேதியியல்	பி. டி. முனியப்பா, ஆர். முத்துலட்சுமி	7	00
*191.	புகுமுக வேதியல்	சி. ஏ. பத்மநாபன்	5	50
*192.	விலங்கியல்	எஸ். ஆப்ரகாம்	4	00
*193.	புகுமுக விலங்கியல்	பெ. மா. அண்ணாமலை	7	25
*194.	புகுமுக வகுப்புத் தாவரவியல்	எஸ். சுந்தரம்	4	00

*மூல நூல் (Original Book)

பட்டப்படிப்பிற்குரிய (பி. எஸ்ஸி.) நூல்கள்
(அடக்கவிலைப் பதிப்புகள்—கழிவு இல்லை)

	பௌதிகம்			ரூ.	காசு
*195.	எந்திரவியல்—சிறப்புப்பாடம்—I	...	ஆர். நாகராசன்	6	25
*196.	,, II	...	,,	5	50
*197.	வெப்பவியல்—சிறப்புப் பாடம்	...	கே. நாச்சிமுத்து	5	25
*198.	செய்முறை பௌதிகம்—சிறப்புப் பாடம்—I	...	டி. கமலக்கண்ணன், ஆர். கிருட்டிணசாமி	4	50
*199.	,, II	...	,,	3	25
*200.	பௌதிகம்—துணைப்பாடம்—I	...	பி. தங்கராஜன்	4	00
*201.	,, II	...	,,	3	00
*202.	செய்முறை பௌதிகம்—துணைப்படாம்	...	கே. பாசுகரன், இரா. செயராம்	4	50
*203.	மின்னியல்—காந்தவியல் சிறப்புப் பாடம்—I	...	டி. ஏ. கருப்பண்ணன்	4	75
*204.	,, II	...	,,	4	50
*205.	,, III	...	,,	4	25
*206.	ஒளியியல்—சிறப்புப் பாடம்	...	டாக்டர் வி. சண்முகசுந்தரம், டாக்டர் ஆர். சபேசன்	7	75
*207.	பௌதிகம்—துணைப்பாடம் (பகுதி 2) முதல் புத்தகம்	...	கா. வே. சுப்பிரமணியன்	6	00
*208.	பௌதிகம்—துணைப்பாடம் (பகுதி 2) 2-ம் புத்தகம்	...	,,	4	50
*209.	பொது பௌதிகம்—சிறப்புப் பாடம்	...	கே. பி. கந்தசாமி, எம். தியாகசுந்தரம்	4	50
*210.	இன்றைய பௌதிகம்—சிறப்பு பாடம்	...	எம். ஏ. தங்கராஜ்	6	75

*211.	ஒலி நூல்-சிறப்புப் பாடம்	டி. முருகையன்	5	00

வேதியியல்

*212.	செய்முறைக் கனிம வேதியியல் —துணைப்பாடம்	டாக்டர் முத்துக்குமாரசுவாமி	2	00
*213.	செய்முறைக் கனிம வேதியியல் —சிறப்புப் பாடம்	டி. இராமலிங்கம்	2	25
*214.	பௌதிக வேதியியல்—சிறப்புப் பாடம்—I	டி. சக்திவேலு	4	00
*215.	,, II	,,	3	50
*216.	கனிம வேதியியல்—துணைப்பாடம்	சி. ஏ. பத்மநாபன்	6	50
*217.	கனிம வேதியியல்—சிறப்புப் பாடம்—I	பி. டி. முனியப்பா	4	00
*218.	,, II	,,	4	25
*219.	பொது பௌதிக வேதியியல்—துணைப்பாடம்	ஆர். துளசிதாஸ்	4	75
*220.	அறிமுறை வேதியியல்—சிறப்புப் பாடம்—I	ஓ. ஆர். சூரியநாராயணன்	4	50
*221.	,, II	,,	3	75
*222.	செய்முறைக் கரிம வேதியியல்—சிறப்புப் பாடம்	என். ஆறுமுகம்	3	50
*223.	அங்கக வேதியியல்—துணைப்பாடம்	பிஎல். இராமசாமி	5	00
*224.	அங்கக வேதியியல்—I	எம். ஆட்கொண்டான்	3	00
*225.	கரிம வேதியியல்—பகுதி—1 (2-ம் புத்தகம்)	கி. கண்ணபிரான்	4	75
*226.	,, (3-ம் புத்தகம்)	,,	3	25
*227.	கரிம வேதியியல்—பகுதி—2 (1-ம் புத்தகம்)	,,	5	75
*228.	,, (2-ம் புத்தகம்)	,,	6	00

*மூல நூல் (Original Book)

			ரூ.	காசு
கணிதம்				
*229.	இயற் கணிதம்—சிறப்புப் பாடம்—I	டி. கோவிந்தராஜன், கே. முத்துசாமி	4	25
*230.	,, II	,,	3	25
*231.	தொகுமுறை வரை கணிதம்—சிறப்புப் பாடம்	ஆர். மகாதேவன்	2	00
*232.	எண்சார் கணிதம்—சிறப்புப் பாடம்	எம். எம். இராமசாமி	5	50
*233.	திரிகோண கணிதம்—சிறப்புப் பாடம்	வி. அரங்கநாதன்	3	25
*234.	கணிதம்—துணைப்பாடம்	ஆர். அனுமந்தராவ்	6	00
*235.	நிலையியல்—சிறப்புப் பாடம்	கே. இராஜகோபாலன்	5	00
*236.	முப்பரிமாணப் பகுமுறை வடிவ கணிதம்—சிறப்புப் பாடம்	கே. சிவசுப்பிரமணியன்	2	75
*237.	வெக்டர் கணிதமும் அதன் பயன்பாடுகளும்—சிறப்புப் பாடம்	ஆர். மகாதேவன்	2	00
*238.	கணிதம்—துணைப்பாடம்—பகுதி-2	ஆர். அய்யாசாமி	5	75
*239.	வானியல்—சிறப்புப் பாடம் முதல் புத்தகம்	தி. கோவிந்தராசன், கொ. முத்துசாமி	5	50
*240.	வானியல்— ,, இரண்டாம் புத்தகம்	,,	3	75
*241.	இயக்கவியல்—சிறப்புப் பாடம்	ஆர். மகாதேவன், கே. சிவசுப்பிரமணியம், பி. ஆர். சுப்பிரமணியம்	7	00
புள்ளியியல்				
*242.	புள்ளியியல்—துணைப்பாடம்	எஸ். கருப்பையா	3	50
விலங்கியல்				
*243.	முதுகெலும்பற்றவை—1 சிறப்புப் பாடம்	ஆர். முருகேசன்	6	00
*244.	,, —2 ,,	திருமதி எஸ். கே. வள்ளி	6	00
*245.	முதுகு நாணுள்ளவை—1 சிறப்புப் பாடம்	திருமதி ராணி கந்தசாமி	5	00

*246.	முதுகு நாணுள்ளவை—2 சிறப்புப் பாடம்	திருமதி ராணி கந்தசாமி	9	75
*247.	முதுகு தண்டுள்ளவை—2 சிறப்புப் பாடம்	திருமதி கிருஷ்ணவேணி நாராயணன்	11	75
*248.	முதுகெலும்பிகளதுகருவியல்—சிறப்புப் பாடம்	எஸ். ஆப்ரகாம்	9	00
*249.	முதுகெலும்பற்றவை—துணைப்பாடம்	என். இராமலிங்கம்	9	00
*250.	முதுகு நாணுள்ளவை—துணைப்பாடம்	வி. சேது	6	00
*251.	செல்லியல்—சிறப்புப் பாடம்	என். இராமலிங்கம்	5	50
*252.	மரபியல்—சிறப்புப் பாடம்	பெ. மா. அண்ணாமலை	5	25
*253.	சூழ்நிலையியல்—உடற் செயலியல்—சிறப்புப் பாடம் I	டி. ஆர். கிருஷ்ணன்	4	75
*254.	சூழ்நிலையில்—உடற் செயலியல் ,, II	,,	6	50
*255.	பரிணாமம்	எஸ். ஆப்ரகாம்	6	25

தாவரவியல்

*256.	தாவர வெளி உள்ளமைப்பியல்களும் வகைப்பாட்டியலும்—சிறப்புப் பாடம்	கே. இராஜசேகரன்	11	00
*257.	தாவரப்புற அமைப்பியல்—சிறப்புப் பாடம்	கே. பாலச்சந்திரகணேசன்	9	25
*258.	தாவர உள்ளமைப்பியல்—சிறப்புப் பாடம்	டாக்டர் ஏ. கோவிந்தராஜலு	7	25
*259.	தாவரங்களின் வாழ்க்கை—சிறப்புப் பாடம்	எஸ். சுந்தரம்	9	50
*260.	தாவரவியல்—துணைப்பாடம்	பா. இராசாராம்	4	50
*261.	தாவரச் சூழ்நிலையியல், மரபியல்—உயிர்மருஉ இயல், இயங்கியல்—துணைப்பாடம்	கே. பெரியசாமி	4	00
*262.	சூழ்நிலையியல், பரிணாமம், மரபியல்—சிறப்புப் பாடம்	கே. ஆர். பாலசந்திரகணேசன்	8	25

*மூல நூல் (Original Book)

தாவரவியல்—(தொடர்ச்சி)

			ரூ.	காசு
*263.	டெரிடோஃபைட்டா, ஜிம்னோஸ்பெர்மே —சிறப்புப் பாடம்	கே. இராஜசேகரன்	10	25
*264.	தாலோபைட்டா (பாசிகளும் பூஞ்சைகளும்) —சிறப்புப் பாடம்	டாக்டர் வே. சோ. சுந்தரலிங்கம்	9	00
*265.	தாவர வகைப்பாட்டியல்—சிறப்புப் பாடம்	ஆ. சம்பத்குமார்	10	50
*266.	பிரையோஃபைட்டா—சிறப்புப் பாடம்	கே. இராஜசேகரன்	6	00

* மூல நூல் (Original Book)

விரைவில் வெளிவருபவை

1.	புதுமை பௌதிகம்—1	எஸ். சம்பத்		
2.	,, —2	கா. வே. சுப்பிரமணியன்		
3.	,, —3	ஆர். நாகராசன்		
4.	இயக்கவிசை இயல்	கே. இராஜகோபால்		
5.	நிலத்தின் செல்வங்கள்-கனிப்பொருள்கள்	ம. ச. ஆனந்த்		
6.	மெய்ப்பொருளியல்—ஓர் அறிமுகம்—II	தி. இராமலிங்கம்		
7.	உளவியல்—1	சு. வரதராசன்		
8.	,, —2	தி. இரா. அரங்கநாதன்		
9.	1919 முதல் சர்வதேச உறவுகளும் உலக அரசியலும்—II	ஏ. பாண்டுரங்கன்		
10.	நவ இயற்கணிதம்	க. சிவசுப்பிரமணியம்	3	50